# தமிழரசு

1-10-1990 ரூ.1


காப்பகம் மற்றும்
1990
காப்பகம்
600 008








கன்னியாகுமரியில் முக்கடல் கூடும் இடத்தில், விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள பாறையில், அமைய இருக்கும் திருவள்ளுவர் சிலையின் அமைப்புப் பணியை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 6.9.90 அன்று தொடங்கி வைத்தார்.



# மக்கள் சக்தியைத் திரட்டிய அண்ணல்



—பேரறிஞர் அண்ணா

நாம் அரசுரிமை இழந்திருந்தபோது காந்தியடிகள் பிறந்தார். அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்.

அவர் பிறந்தபோது நமது நாடு, உலகிலே இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. அவர் மறைந்திடுவதற்கு முன்னம், மாஸ்கோவிலிருந்து நியூயார்க் வரையிலே உள்ள சகல நாடுகளிலும் நமது விடுதலையை விளக்கும் விருது பெற்று, தூதுவர்களும், பிரதிநிதிகளும் வீற்றிருக்கும் நிலை உண்டாகி விட்டது.

அவர் பிறந்தபோது உலக மன்றத்திலே, நமக்கு இடம் கிடையாது. இன்று நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அவர் பிறந்தபோது, கோயில்கள் மூடிக்கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப் பட்டுவந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண் மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள் எல்லாம் திறந்துவிட்டன.

அவர் பிறந்த காலத்திலே, சூரியனே அஸ்த மிக்க அஞ்சும்படியான அளவுள்ளதாக இருந்தது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்; அந்தச் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கப் போக்கு அழிந்ததைக் கண்டான பிறகே அவர் கண்ணை மூடினார்.

அவர் பிறந்த நாட்களிலே, பிரிட்டனிலிருந்து, கவர்னர்களும் மற்ற அதிகாரிகளும் இங்கு வந்த வண்ணம் இருந்தனர் ஆள்வதற்கு- அடிமை இந்தியாவை விட்டு வெளியே அவர்கள் போகும் காட்சியைப் பார்த்துவிட்ட பிறகே, உத்தமர் உயிர் நீத்தார்.

இவ்வளவையும், அவர் மந்திரக் கோல் கொண்டோ, யாக குண்டத்தருகே நின்றோ சாதிக்க வில்லை - மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார். புதிய வாழ்வு தந்தார். புதிய அந்தஸ்து தந்தார்.

அவர் சாதித்தவைகள் மகத்தானவை, ஆனால் அவர் சாதிக்க எண்ணியிருந்தவை, வேறு பல, அவை மேலும் மகத்தானவை.

(1948-இல் அண்ணல் மறைந்தபோது வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)

தமிழரசு

## இந்த இதழில்...


தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக்கூட்டம் ... 2

ஊரக வளர்ச்சித் துறையின் அரிய பணிகள்
—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி ... 9

குவலயம் போற்றக் குறள் தந்த கோமானுக்குக் குமரி முனையில் நினைவுச்சின்னம்
—திரு. மாமூலன் ... 13

மாபெரும் மனிதாபிமான பிரச்சினை
திரு. செ. ராம்தாஸ் இ.ஆ.ப. ... 17

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு ... 21

நுகர்வோர் குறை நீங்க மக்களும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் ... 23

சிறுநீரக நோய் இயல் பிரிவின் சிறப்பான சேவை ... 24

மின்சக்தி - தேவை - திருவாசகம் - சில கருத்துரைகள்
—திரு. கு.சிவஞானம் இ.ஆ.ப.(ஓய்வு) ... 33

அண்ணா அருங்காட்சியகம் ... 41


அண்ணல் காந்தியடிகளின் 122-வது பிறந்த நாளை யொட்டி (அக்டோபர் 2) அவரது திருவுருவப்படம் முகப்பை அணி செய்கிறது.


திருவள்ளுவர் ஆண்டு 2021
புரட்டாசித் திங்கள் - 15

மலர்:21 இதழ்:7
1-10-1990



# இந்தியாவின் ஒற்றுமையைக் கட்டிக் காப்போம்!

## மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு வி.பி.சிங்

"காஷ்மீரத்தில் இடர்ப்பாடான நிலையிலும் அம்மாநில அரசு நிர்வாகம் உண்மையான பிரச்சினைகளைக்கவனித்து வருகிறது.

இருப்பினும் அங்குள்ள பயங்கரவாதிகளுக்கும், பிரிவினைவாதிகளுக்கும் எல்லைக்கப்பால் இருந்து உதவி வந்து கொண்டிருப்பதால் பிரச்சினைகள் உருவாகின்றன.

காஷ்மீர் தனியாகப்பிரிந்து விடும் என்ற ஒரு உணர்வு சில மாதத்திற்கு முன்பு இருந்தது. அந்த உணர்வு இப்போது இல்லை. காஷ்மீர் பிரச்சினையை ஒரு சர்வ தேசப் பிரச்சினையாக ஆக்கி விடலாமென்று சொல்லப்பட்டது. அதுவும் இப்போது நடைபெறவில்லை. பஞ்சாப்பில் பயங்கரவாதிகள் தொடர்ந்து விறுவிறுப்பாகச்செயல்பட்டு வருகிறார்கள். எனினும் காவல் துறையினர் சில குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

பஞ்சாப் மக்களின் குறைகளை அகற்ற மாநில அரசு பல்வேறு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அம்மாநில முழுவதும் கலவரப்பகுதியாக அறிவித்த வகை செய்யும் 59-வது அரசியல் சட்டத் திருத்தம் திரும்பப் பெறப்பட்டது. இராணுவத்தை தொடர்ந்து வெளியேறிய சீக்கியர்களுக்கு மறு வாழ்வு கிடைக்க வழி செய்யப்பட்டது. இப்போது பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல் நடத்துவதற்கான தகுந்த சூழ்நிலை இல்லை என்ற கருத்து நிலவுகிறது. தேர்தலை நடத்துவதற்கு முன்பாக சில அரசியல் நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டியுள்ளது. அதன் பின்னர் தேர்தல்களை நடத்தலாம்.

ஆயினும் ஜனநாயக வழிமுறை ஒன்றே வழி. அதற்கு மாற்றுவழி எதுவும் இல்லை.

இராமஜென்மபூமி, பாபர் மசூதி விவகாரம் பற்றி சுமூகமான தீர்வு ஒன்று காண்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசு எல்லாத் தரப்புத் தலைவர்களோடும், எல்லா சமயத் தலைவர்களோடும் தொடர்பு கொண்டுள்ளது. இதில் கருத்து வேறுபாடு இருக்குமானால் நீதிமன்றத்தீர்ப்பையே நாம் நாட வேண்டும். அரசைப் பொறுத்த மட்டில் நீதிமன்றத் தீர்ப்பையொட்டி நடந்து கொள்ளும். இளைஞர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

நாட்டில் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் வகையில் கூட்டாட்சித்தன்மையை உருவாக்குவது என்பதில் தேசிய முன்னணி அரசிற்கு உறுதிப்பாடு உள்ளது.

படித்த இளைஞர்களின் வேலையில்லாத்திண்டாட்டத்தைப்போக்கிட முன்னுரிமை தரப்படும்."

**(தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)**



# தேசிய ஒருமைப்பாடு குழு கூட்டம் 22



# தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்போம்!

## மாண்புமிகு முதல்வர் கலைஞர்

தமிழக மக்கள் மற்றும் அரசின் சார்பில் உங்கள் ஒவ்வொருவரையும் மனமார வரவேற்கிறேன். பல ஆண்டுகளுக்குப்பிறகு, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டம் டில்லிக்கு வெளியே நடப்பது இதுதான் முதல் தடவையாகும். இந்தக் கூட்டம் சென்னையில் நடப்பது குறித்து நாங்கள் பெரிதும் பெருமையடைகிறோம். இந்தக் கூட்டத்தைச் சென்னையில் நடத்துமாறு நாங்கள் விடுத்த அழைப்பைப் பிரதமர் சிறிதும் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டதற்காக, அவருக்கு நன்றி செலுத்துகிறோம். இந்தக் கூட்டம் ஒரு தென்மாநிலத்தின் தலைநகரில் கூடுகிறது என்பதே, தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஒரு பயனுள்ள எடுத்துக் காட்டாகும்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு பல ஆண்டுகளாகச் செயலொடுங்கிக் கிடந்தது. அதைப் புதுப்பித்து அமைத்து, அதன் துவக்கக் கூட்டத்தை நடத்திய ஆறு மாத காலத்துக்குள் இரண்டாவது கூட்டத்தையும் நடத்த முன்வந்ததற்காக மத்திய அரசுக்கும், பிரதமருக்கும் எமது பாராட்டுக்கள். இந்தக் குழுவானது இந்தியாவின் ஒட்டுமொத்தமான கூட்டுத் தலைமையை மட்டுமின்றி, அதன் ஒட்டுமொத்தமான விவேகத்தையும் பிரதிபலிப்பதாகும். இத்தகைய ஒரு அமைப்பினிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நாம் பூர்த்தி செய்ய முடியும் என நம்புகிறேன்.

நமது நாட்டின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் கட்சி அரசியல்களுக்கு அப்பாற்பட்டது என்று நாங்கள் எப்போதுமே கருதி வந்துள்ளோம். இந்தக் குழுவில் நாம் நடத்தும் விவாதங்கள் இந்தப் பிரச்சினைகளுக்கு எந்த வகையிலாவது தீர்வு கண்டாக வேண்டும் என்ற நமது ஒருமித்த உறுதியை வெளிப்படுத்தும் என்பதில் எனக்கு யாதொரு ஐயமுமில்லை. பஞ்சாபிலும், காஷ்மீரிலும் காணப்படும் வன்முறைகள், வெளிச்சக்திகளால் தூண்டிவிடப்பட்டு, நீட்டிக்கப்பட்டு வருபவையாகும். நாட்டின் பாதுகாப்புக்கு இந்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலைமையில், நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசு மேற்கொள்ளும் நிர்வாக ரீதியிலான முயற்சிகளிலும், அரசியல் ரீதியான முயற்சிகளிலும் அதன் கரங்களைப் பலப்படுத்த வேண்டியது எல்லா அரசியல் கட்சிகளின் கடமையுமாகும்.

நமது அரசு மதச்சார்பின்மைக் கொள்கையில் உறுதியான பற்றுக் கொண்டுள்ளதாகும். பல சமயத்தினரும், பல இனத்தவரும், பல மொழியினரும் கொண்டது நம்முடைய நாடு. இத்தகைய ஜனநாயக நாட்டில், சிறுபான்மையினரின் உணர்வுகளையும், நலன்களையும் பெரும்பான்மையினர் மதித்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருவர் என்ற உறுதியை - நம்பிக்கையை சிறுபான்மையினருக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். சிறுபான்மையினருக்கு அச்ச உணர்வு ஏற்படாதபடி பார்த்துக்கொள்வதில், பெரும்பான்மையினர் தீவிர கவனம் செலுத்தி வரவேண்டும். அவர்களது உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைத் தவிர்த்துவர வேண்டும். தமிழகத்தில், இங்குள்ள எல்லா சமயத்தினரின் பிரதிநிதிகளையும், மொழியினரின் பிரதிநிதிகளையும் கொண்ட சிறுபான்மையினர் கமிஷன் ஒன்றை அமைத்திருக்கிறோம். இது தேசிய ஒருமைப்பாட்டுக் கமிஷனுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு இப்போது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைப்பற்றிக் கவனம்

செலுத்தும் அதே சமயத்தில், வருங்காலத்தில் நமது நாட்டைப் பிளவுபடுத்தி, நாடு சீர்குலையும்படி செய்துவிடக் கூடிய அம்சங்கள் குறித்தும் எச்சரிக்கையாக இருந்து அவற்றைத் தவிர்த்தாக வேண்டும். ஒற்றுமை என்பது ஒரே மாதிரியாக இருப்பது அல்ல என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். வேறுபாடுகளுக்கிடையில் நல்லிணக்கம் காண்பதன் மூலமே ஒருமைப்பாடு சாத்தியமாகும்.

அடுத்தபடியாக, மொழிப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கல்வி முறையிலும், மாநில நிர்வாகத்திலும் பிரதேச மொழிகளுக்கு உரிய பங்கு அளிக்க வேண்டும் என்று விரும்புபவர்களுடன் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இருப்பினும், இணைப்பு மொழி என்ற வகையிலும், நமது மக்களுக்கு - குறிப்பாக விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள், தொழிலதிபர்கள் ஆகியோருக்கு - வெளி உலகம் பற்றித் தெரிந்து கொள்வதற்கான சாளரம் போல் பயன்படும் சாதனம் என்ற வகையிலும் ஆங்கிலத்தின் இடத்தை நாம் புறக்கணித்துவிட முடியாது. இந்தப் பின்னணியில்தான், தமிழகத்தில் நாங்கள் இருமொழித் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளோம். இந்தத் திட்டத்தின்கீழ் தாய்மொழியும், ஆங்கிலமும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள எல்லா தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக்க வேண்டும், அதுவரை ஆங்கிலம் நீடித்து வரவேண்டும் என்பதே மத்திய அரசுக்கு நாங்கள் கூறும் யோசனையாகும்.

மாநிலங்களுக்கிடையிலான கவுன்சிலை ஏற்படுத்தும் விஷயத்தில், தேசிய முன்னணி அளித்துள்ள தேர்தல் வாக்குறுதியைப் பிரதமர் தீவிரமாகச் செயல்படுத்தி வருவது குறித்துப் பாராட்டுகிறோம். இந்தக் கவுன்சிலின் முதல் கூட்டம் விரைவிலேயே நடத்தப்படும் என்று நம்புகிறோம். மாநிலங்கள் சம்பந்தப்பட்ட, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எல்லா விவகாரங்களையும் பரிசீலிப்பதற்கும், விவாதிப்பதற்கும் வேண்டிய - போதிய அதிகாரம் இந்தக் கவுன்சிலுக்கு வழங்கப்படும் என்றும் நம்புகிறோம். மத்திய-மாநில உறவுமுறை குறித்துத் திட்டமிட்ட ரீதியில் ஒழுங்காகப் பரிசீலனை நடத்திவந்து, இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி முறையும், மாநிலங்களுக்கு இன்னும் அதிக அதிகாரமும் உருவாவதற்கு ஏற்ற யோசனைகளைக் கூறுமாறும் இந்தக் கவுன்சில் பணிக்கப்படும் என்றும் நம்புகிறோம். தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு மிகவும் முக்கியமான விஷயமாகும் இது.

பிரதமர், சென்ற வாரம் சென்னை வந்திருந்த போது, மண்டல் கமிஷன் அறிக்கையை அமல் செய்வது என்ற முடிவுக்காக, நமது மக்கள் அவருக்கு அளித்த மகத்தான வரவேற்பு, இந்த நாடு முழுவதுமே நன்கறிந்த ஒன்றாகும். நமது சமூகத்தில் நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த பாகுபாடுகளைத் திருத்திக் கொள்ள நாம் தயாராயில்லை என்றால், வருங்காலத்தில் கடுமையான உட்பூசல்களை நாம் நிச்சயம் சந்திக்கவே நேரிடும். பல தரப்பட்ட நலன்களுக்கிடையில் விட்டுக் கொடுத்து நல்லிணக்கம் காண்பதன் மூலமே தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்; இத்தகைய பலதரப்பட்ட நலன்கள் இருந்து வருகின்றன என்ற யதார்த்தத்தைக் காண மறுப்பதன் மூலம் அல்ல!

தமிழ்நாட்டின் மாபெரும் கவிஞரும், தேசபக்தருமான பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு கொண்டாடி வருகிறோம். அவருடைய எழுச்சிமிகு கவிதைகளிலிருந்து சில வரிகளைக் கூறி, எனது வரவேற்புரையை முடித்துக் கொள்கிறேன்.

'மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள்!
அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை!
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்; உடைமை மக்களுக்குப் பொது,
புவியை நடத்து! பொதுவில் நடத்து!'

—நாம் இங்கு நடத்தும் விவாதங்கள் வெற்றிகரமாய் அமையவேண்டுமென்று விழைகிறேன்.

**(தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய வரவேற்புரையிலிருந்து)**

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்.



# தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம்

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் 22.9.90 அன்று, சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டம், புதுடில்லிக்கு வெளியே நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

'தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தைச் சென்னையில் நடத்தலாம்' என, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்த யோசனையின் பேரிலேயே இந்தக் கூட்டம், சென்னையில், அரசு தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள 'நாமக்கல் கவிஞர்' மாளிகையில் நடத்தப்பெற்றது.

மொழிபெயர்க்கும் கருவிகள் அமைக்கப்பட்டி ருந்தன; உடனுக்குடன் செய்திகளை அனுப்புவதா காக ஹாட் லைன், ஃபேக்ஸ், டெலக்ஸ் போன்ற வசதிகள் செய்யப்பட்டிருந்தன. பத்தாவது மாடி யிலிருந்தே வங்கக் கடலின் வனப்பை ரசிக்கத்தக் வகையில், சிறப்புக் கண்ணாடிகள் பொருத்தப் பட்டிருந்தன.

இந்தியப் பிரதமர் அவர்கள், உறுப்பினர் யாரு னாவது தனித்துச் சந்தித்துப் பேசச் சிறப்பு அ ஒன்றும் உருவாக்கப்பட்டிருந்தது.



மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டபோது...

ஆண்டுக்கு மூன்றுமுறை தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தைக் கூட்ட மத்திய அரசு முடிவெடுத்தது. இதற்கு முந்திய கூட்டம் இந்த ஆண்டு ஏப்ரல் 11-ஆம் நாளன்று டில்லியில் நடைபெற்றது.

இது - முதன்முதல் டில்லிக்கு வெளியே நடைபெறும் கூட்டம் என்பதால், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி, தேசிய ஒருமைப்பாடு மாநாடு நடைபெற ஒதுக்கப்பட்ட கட்டடத்தின் பத்தாவது மாடி சர்வதேசத் தரத்திற்கு நிகரான பல்வேறு நவீன வசதிகள் உடையதாக்கப்பட்டது. குளிர்சாதன வசதி செய்யப்பட்டது. மிகப் பெரிய உணவருந்தும் அரங்கம் அமைக்கப்பட்டது. விலை உயர்ந்த தரைவிரிப்புகளோடு காட்சியளித்த இந்த அரங்கில் மாநாட்டுப் பிரதிநிதிகள் அமர்வதற்காக 160 நவீன சொகுசு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

இத்தகைய பணிகள் குறிப்பாக - பொது பணித்துறை, டான்சி, எல்காட் போன்ற அரச அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்கள் லிருந்தும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்ட திற்குப் பிரதிநிதிகள் வருவார்களல்லவா? அவர்கள் தங்க வைக்கப்படச் சென்னை மாநகரில் உள்ள மிகப் பெரிய மூன்று ஓட்டல்களிலும், மாநி அரசு மற்றும் துறைமுகம் விருந்தினர் மாளிகை யிலும் வசதி செய்து தரப்பட்டிருந்தது.

மாநாட்டு அரங்கிலும், ஏனைய இடங்களிலு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன

மாநாட்டுப் பிரதிநிதிகளின் பயன்பாட்டு கென 250 கார்கள் தயார் நிலையில் வைக்க பட்டிருந்தன.



தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்.

சென்னையில் நடைபெற்ற தேசிய ஒருமைப் பாட்டுக் குழுக் கூட்டத்திற்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வருகை தருமாறு, தமிழ்நாடு அரசு மூலம் 129 பேருக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்தன. அவர்களில்- குழு உறுப்பினர்களான மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் அறுவர்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு உறுப்பினர் களில் ஒருவரான மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. பி.உபேந்திரா அவர்கள், வேறொரு மாநாடு காரணமாக வெளி நாடு சென்றிருந்ததால் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது.

இவர்களைத் தவிர- தேசிய அளவில் அங்கீ கரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மாநில அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள், மாண்புமிகு மாநில முதலமைச்சர்கள், ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்தால்- அம்மாநிலத் தின் மேதகு ஆளுநர், யூனியன் பிரதேச ஆளுநர்கள் அல்லது முதலமைச்சர்கள், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்கள், முக்கியப் பிர முகர்கள் ஆகிய குழு உறுப்பினர்கள் அனை வருக்கும் அன்பான அழைப்புகள் முறைப்படி அனுப்பப்பட்டிருந்தன.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக, 22.9.90 அன்று காலை 9.40 மணியளவில் தனி விமானத்தின் மூலம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் சென்னைக்கு வந்து சேர்ந்தார்; மேதகு தமிழக ஆளுநர் திரு. எஸ். பர்னாலா அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம் பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும் மாண்புமிகு தமிழக அமைச்சர்களும் மாலை கள் அணிவித்து மகிழ்வுடன் வரவேற்றார்கள்.

அரசு தலைமைச் செயலக வளாகத்தில் மட்டு மன்றி- போர் நினைவுச் சின்னத்திலிருந்தே வழி நெடுகிலும் பலவண்ணக் கொடிகள், வரவேற்புப் பதாதைகள் அழகு செய்தன. 'நாமக்கல் கவிஞர் மாளிகை'யின் பத்தாவது மாடியில், காலை 10.40 மணியளவில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் தொடங்கியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய இக்கூட்டத்திற்கு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் தலைமை தாங்கினார்.

## தமிழக முதல்வருக்கு
## இந்தியப் பிரதமர் நன்றி!

**22.9.90 அன்று காலை10.40க்குத் தொடங்கிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் முடிய, இரவு 8 மணிக்கு மேல் ஆகிவிட்டது. அதன்பின், ஆளுநர் மாளிகையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள், செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:**

**''நான் தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கும், அவருடைய அரசாங்கத்திற்கும் - தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தை மிகச்சிறந்த முறையிலே நடத்தியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா வகையிலும் மிகச் சிறப்பான முறையிலே வரலாற்றுச் சிறப்புடன் தென்னகத்தில் இந்தக் கூட்டம் நடப்பதற்கான ஏற்பாடுகளை அவர் செய்திருந்தார்!''**

# தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தின் தீர்மானம்

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது.

அதன் விவரம் வருமாறு:-

வகுப்பு ஒற்றுமை குறித்து அமைக்கப்பட்ட துணைக்குழு கடந்த 18-ந் தேதி டெல்லியில் கூடி, செய்த பரிந்துரைகளை இந்தக் கூட்டம் பாராட்டி வரவேற்கிறது.

அதன்படி அயோத்தியில் ராமர் கோவில் அமைக்கும் இடம் பற்றியும் அதையொட்டி ஏற் பட்டு உள்ள பிரச்சினைகள் குறித்தும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி எல்லோரும் திருப்தி அடையும் வகையில் சுமூகமான தீர்வு காணப்பட வேண்டும்.

இது சம்பந்தமான வழக்கை கோர்ட்டு விரைவு படுத்த வேண்டும். கோர்ட்டு முடிவை அனைவரும் மதிக்க வேண்டும்.

ராமர்கோவில் - பாபர்மசூதி விவகாரத்தைச் சுமூகமாகத் தீர்க்க இரு மதங்களைச் சேர்ந்த தலைவர்களும் முயற்சிக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் காஞ்சி மடாதிபதி, லக்னோ முஸ்லீம் மதத்தலைவர் அலிமியான் நட்வா ஆகியோர் எடுத்துள்ள முயற்சியை இக்கூட்டம் வர வேற்கிறது.

மத்திய உள்துறை அமைச்சர் இந்தத்தலைவர் களுடனும் மற்றும் இரு மதங்களைச் சேர்ந்த மதிப்பு மிக்க தலைவர்களுடனும் பேச்சு நடத்துவார்.

அதற்கிடையில் பதற்றத்தை உருவாக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது. அமைதியும், வகுப்பு ஒற்றுமையும் ஏற்பட மதத்தலைவர்களும் அரசியல் கட்சிகளும் நல்லெண்ணம் கொண் டோரும் ஒத்துழைக்குமாறு தேசிய ஒருமைப் பாட்டுக் குழுக்கூட்டம் வேண்டுகோள் விடுக்கிறது.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்.



**TNPSC**

*விளம்பர எண்:33/90*

தமிழ்நாடு தொழிற்சாலை பணியில் மூன்று உதவி தொழிற்சாலை ஆய்வாளர் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 15.10.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,640-60-2,600-75-2,900.

| | | |
|---|---|---|
| (ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் | : | 1 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | : | 1 |
| பகிரங்கப் போட்டி | : | 1) |

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.)

**தகுதி:** A degree in Mechanical, Electrical or Chemical Engineering or Textile Technology.

**NOTE:** Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

**EXPLANATION:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர்; உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.9.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கிலமொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2273/எம்எஸ்/90/அக்காரட்

# ஊரக வளர்ச்சித் துறையின் அரிய பணிகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சர்

**திரு. கோ.சி.மணி**

**ஊ**ரக வளர்ச்சித் துறையில் மத்திய-மாநில அரசுகளின் கூட்டு வேலை வாய்ப்புத் திட்டமாகிய ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் 1989-90-இல் முதல் இடத்தை வகித்து, மத்திய அரசின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. அதே போன்று நடப்பு ஆண்டிற்கான திட்ட வேலைகளையும் உரிய காலத்தில் முடித்திட செயலாக்கத்திற்கான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1990-91-ஆம் ஆண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக மத்திய-மாநில அரசுகளின் பங்குகளாக ரூ.172.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக கான்கிரீட் கூரையுடன் கூடிய தொகுப்பு வீடுகள் ஒவ்வொன்றும் ரூ.14,200/- மதிப்பீட்டில் 47,000 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. இத்தொகையில் ஒரு வீட்டிற்கு ரூ.4,000 வீதம் 47,000 வீடுகளுக்கு ரூ.18.80 கோடி, மாநில அரசால் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் 6,135 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், 560 பேரூராட்சிகளுக்கும் மட்டுமே அலுவலகக் கட்டிடம் இருக்கிறது. கட்டிடம் இல்லாத எஞ்சிய 6,481, பஞ்சாயத்துக்களுக்கும், 88 பேரூராட்சிகளுக்கும், 31.3.93-க்குள் முழுமையாகக் கட்டிடங்கள் கட்டி முடித்திடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் இவ்வாண்டு சொந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத 88 பேரூராட்சிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டிடங்கள், 1,912 பஞ்சாயத்துகளுக்கு தலா ரூ.65,000 மதிப்பீட்டில் அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளது.



### பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள்

ஒரு சொந்தக் கட்டிடம்கூட இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு தலா ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 779 பள்ளிகளுக்குப் புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்ட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், கடந்த மாதம் இறுதி வரை 582 பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. இந்த பள்ளிகள் கட்ட மொத்தம் ரூ.8,67,77,000 ஒதுக்கப்பட்டு உள்ளது. சொந்தக் கட்டிடம் இல்லாத அனைத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

**ஊரக வளர்ச்சித் துறையில் மத்திய-மாநில அரசுகளின் கூட்டு வேலை வாய்ப்புத் திட்டமாகிய ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் 1989-90-இல் முதல் இடத்தை வகித்து மத்திய அரசின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.**

### கிராமங்களை இணைக்கும் சாலைகள்:

500 முதல் 1,000 மக்கள் தொகையுள்ள கிராமக் குடியிருப்பு பகுதிகளை இணைக்கும் சாலைகளில் 1,569 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கற்சாலைகளைத்தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும், 2,10[illegible] கிலோ மீட்டர் நீளத்திற்கு [illegible] சாலைகளைக் கற்சாலைகளாகத் தரம் உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு தமிழகம் முழுவதுமாக 1,228 தார்ச்சாலை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 1,033 பணிகள் துவக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிந்து விடும். இதற்காக ரூ.23,25,00,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போன்று கற்சாலை போடும் திட்டத்திற்கு 2,090 [illegible] சாலை போடும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



**மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள், சென்னைக் கொத்தவால்சாவடிப் பகுதியில் துப்புரவுப் பணியைப் பார்வையிடுகிறார்.**

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1990-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் நாள் ஆற்றிய நிதி நிலை அறிக்கை உரையில் கிராமப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் சிறப்புத் திட்டங்களை அறிவித்து, அதற்கான ஒதுக்கீடுகளையும் செய்துள்ளார்கள். அதன் அடிப்படையில் இவ்வரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்காக ரூ.27 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு 'முதலமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் புதிய பள்ளிக்கூடங்கள் கட்ட, 3 கோடி ரூபாயும், சாலைகள் மேம்பாட்டிற்கு 10 கோடி ரூபாயும், குடிநீர் வசதி செய்து கொடுக்க தனியாக 6 கோடி ரூபாயும், 50 முதல் 100 ஏக்கர் ஆயக்கட்டு உள்ள சிறு பாசனக் குளங்களை மேம்படுத்த 1 கோடி ரூபாயும், ஊராட்சி/பேரூராட்சிகளுக்கு டெலிவிஷன் பெட்டிகள் வழங்க 1 கோடி ரூபாயும், சுகாதார-துணை நிலைய கட்டிடங்கள் கட்ட 1 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**குடிநீர் வழங்கல்:**

குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை 8-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் பகுதியாக நிறைவு பெற்றுள்ள அனைத்துக் குடியிருப்புகளிலும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவர்க்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல், குழாய் நீட்டிப்பு செய்தல், புதிய கிணறுகள் அமைத்தல், தற்போதுள்ள மேல்நிலை/தரை மட்டத் தொட்டிகளுக்குப் போதிய நீர் ஆதாரங்கள் உருவாக்குதல் போன்ற பணிகளைச் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத் துணை நிலையங்களைப் பொறுத்தவரை, மொத்தமுள்ள 8,681 சுகாதாரத் துணை நிலையங்களில் 5,223 துணை நிலையங்களுக்கு மட்டுமே கட்டிடங்கள் உள்ளன. எஞ்சிய 3,458 துணை நிலையங்களுக்கும் 8-ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு உள்ளது.

**பஞ்சாயத்துக்களின் தற்போதைய நிதி நிலைமை எப்படி இருக்கிறது, என்னென்ன வசதிகள் செய்ய வேண்டும்,இந்நிதி நிலைமையைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் என்னென்ன என்பதற்குரிய ஆலோசனைகளை அரசுக்கு அளித்திட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரை இவ்வாண்டு அக்டோபர் இறுதிக்குள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.**

சிறு பாசனக் குளங்களைப் பொறுத்தவரை, 6,016 சிறு பாசனக் குளங்கள் 50 முதல் 100 ஏக்கர் வரை ஆயக்கட்டுப் பகுதி கொண்டவை; இவைகள் அனைத்தையும் 3 ஆண்டுக் காலத்திற்குள் மேம்படுத்திச் சீர் செய்யத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கப்படுகிறது.

தமிழகத்தில் தொலைக் காட்சி தெளிவாகப் பார்க்கக் கூடிய எல்லைக்குள் 4,417 தொலைக் காட்சிப் பெட்டிகள் ஏற்கனவே வழங்கப்பட்டு உள்ளன. இன்னும் எஞ்சியுள்ள 5,195 ஊராட்சிகளுக்கும் 3 ஆண்டுக் காலத்திற்குள் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 1,57,041 பயனாளிகள் பயன் அடையும் வகையில் செயல் திறன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக இவ்வாண்டு ரூ.5,284.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 67,410 கடன் மனுக்கள்வங்கிகளுக்குப்பரிந்துரைக்கப்பட்டு, இவற்றில் 33,108 கடன் மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவரையில், ரூ.969.31 இலட்சம் செலவிடப்பட்டு 21,437 சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பஞ்சாயத்துக்களின் தற்போதைய நிதி நிலைமை எப்படி இருக்கிறது, என்னென்ன வசதிகள் செய்ய வேண்டும், இந்நிதி நிலைமையைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் என்னென்ன என்பது தொடர்பான ஆலோசனைகளை அரசுக்கு அளித்திட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரை அக்டோபர் இறுதிக்குள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பரிந்துரைகளின் அடிப்படையில் நிதி நிலையை அதிகப்படுத்திடத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.



### நகர்ப்புறங்கள் மேம்பாடு அடைய

நகராட்சி நிர்வாகத் துறையைப் பொறுத்தவரை, விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்ட பகுதி அபிவிருத்தித் திட்டங்களில் 1990-91-ஆம் ஆண்டில் நகராட்சிகளிலுள்ள புதிய கழிப்பிடங்களை நீர் ஊற்றும் கழிப்பிடங்களாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 75 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக 38 நகராட்சிகளில் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் குடிசைப் பகுதிகளில் 148 கழிப்பிடங்களும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் 102 கழிப்பிடங்களும் அபிவிருத்தி செய்யப்படும்.

### சாலைப் பரிமரிப்பு

சாலைப் பராமரிப்பிற்காக பாதி கடன், பாதி மானியம் திட்டத்தில் நகராட்சியில் தூசி இல்லா தார்ச் சாலை அமைக்க 1990-91-ஆம் ஆண்டில் அரசு ரூ.55 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத்தொகை 20 நகராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. முழுமையாகக் கடன் தொகையில் சாலைப் பராமரிப்பு செய்யும் திட்டத்தில் இவ்வாண்டு 8 நகராட்சிகளுக்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நகராட்சியிலுள்ள அனைத்துச் சாலைகளையும் குறைந்தபட்சம் 10 ஆண்டுக் காலத்திற்குள் தார்ச் சாலையாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

குப்பைகளை அள்ளிச் செல்ல ஒரு லாரி கூட இல்லாத நிலையில் தமிழ்நாட்டில் 15 நகராட்சிகள் உள்ளன. இந்த 15 நகராட்சிகளுக்கும் ஒரு நகராட்சிக்கு ரூ.3.60 இலட்சம் வீதம் ரூ.55.14 இலட்சம் செலவில் லாரிகள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தவிர 25 நகராட்சிகளில் குப்பை அள்ள டிராக்டர் அல்லது மினி லாரி வாங்க பாதி மானியம், பாதி கடன் என்ற அடிப்படையில் ஒரு நகராட்சிக்கு ரூ.1.66 இலட்சம் என்ற அளவில் சுமார் 40 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

**கிராமப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த 'முதலமைச்சர் சிறப்புத் திட்டம்' என்ற திட்டம் வகுக்கப்பட்டு அதற்காக ரூ.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் புதிய பள்ளிகள் கட்ட ரூ.3 கோடியும், சாலைகள் மேம்பாட்டிற்கு ரூ.10 கோடியும் குடிநீர் வசதிக்கு ரூ.6 கோடியும், 50 முதல் 100 ஏக்கர் ஆயக்கட்டு உள்ள சிறுபாசனக் குளங்களை மேம்படுத்த ரூ.1 கோடியும், ஊராட்சி, பேரூராட்சிகளுக்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்க ரூ.1 கோடியும், சுகாதாரத் துணை நிலையக்கட்டிடங்கள் கட்ட ரூ.1 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.**

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் நகர்ப்புறங்களிலுள்ள நலிவுற்ற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்களை மேம்படுத்துவதற்கும் புதிதாகப் பேருந்து நிலையங்களை அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த சிறிய, நடுத்தர நகரங்கள் மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், கடன் உதவி அளிக்கப்படுகிறது. இவைகள் அல்லாமல் மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் மேற்படி பணிகளுக்கு, கடன் உதவி அளிக்கப்படுகிறது.

நகராட்சிகள்/நகரியங்களிலுள்ள தெரு விளக்கு பராமரித்தல் பணிகளை நகராட்சி/நகரியங்களே பராமரிக்க அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது இம்முறை நன்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 106 நகராட்சிகள்/மற்றும் நகரியங்களில் ஏற்கனவே 11 நகராட்சிகளில் மட்டுமே தெரு விளக்குகளை நகராட்சிகள் பராமரித்து வந்தன. நகராட்சிகளில் நடைபெறும் திட்டப் பணிகளைக் கண்காணித்து முறைகேடுகள் ஏற்படாத வகையில் தவிர்க்கவும், பணிகளின் தரத்தினை மேம்படுத்த ஆலோசனைகள் கூறவும், இவ்வியக்ககத்தின் உயர் அதிகாரிகள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் இத்துறையைச் சார்ந்த தொழில் நுட்ப அலுவலர்கள் கொண்ட குழு ஒன்றினை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மாநகரை அழகு நகராக்க

சென்னை மாநகராட்சியின் வரலாற்றிலேயே முதன் முறையாக மாநகராட்சிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குச் செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் செயலாக்கப்படும்போது மக்களின் பெரும்பாலான அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படும். சாலைகள் மேம்பாடு, கழிப்பிட வசதிகள் மேம்பாடு, தெருவிளக்குகள் பராமரிப்பு போன்ற அடிப்படைப் பணிகளுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாநகராட்சியினைப் பெரும் செலவில் அழகுபடுத்துவதைவிட அசுத்தத்தைத் தூய்மைப்படுத்தி அதன் மூலம் அழகுறச் செய்தல் என்ற அடிப்படையில் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மாநகராட்சிப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அந்த இடங்கள் அழகிய பூங்காக்களாக மாற்றப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில், ரூ.11·8064 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**சென்னை நகரில் மட்டும் 717 பொதுக் கழிப்பிடங்கள் உள்ளன. இவற்றில் உபயோகிக்கும் நிலையில் உள்ளவை 529. எல்லா கழிப்பிடங்களுக்கும் தண்ணீர் வசதி மற்றும் விளக்குகள் வசதி செய்யப்பட உள்ளது. இப்பணிக்கு இதுவரையில் 45 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. இதுதவிர, சிறப்புத் திட்டமாக 160 புதிய பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு**

முதன்முறையாக மாநக ராட்சிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குச் செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தார்ச்சாலை அமைக்க 1990-91-ஆம் ஆண்டில் அரசு ரூ.55 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

மொத்தம் ரூ.3.75 கோடி செலவாகும்.

**துப்புரவுப் பணிக்குப் புதிய லாரிகள்:**

சென்னை மாநகராட்சியில் துப்புரவுப் பணிக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள லாரிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் ரூ.4 கோடி செலவில் 100 புதிய லாரிகள்/சிறு லாரிகள் வாங்கப்படுகின்றன.

சென்னை நகரில் பேருந்து செல்லாத தெருக்கள் சுமார் 9,060 உள்ளன. இதில் 5 மீட்டர் அகலத் திற்குட்பட்ட சிறிய தெருக்கள், சந்துகள் முதலியன 3,690 ஆகும். இந்த 9,060 தெருக்களில் சுமார் 900 தெருக்களில் செப்பனிடப்படும் பணி, மாநகராட்சியின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகையின் கீழ் நடைபெற்று வருகிறது.

அரசின் சிறப்புத் திட்டத்தின்கீழ் சிறிய தெருக்கள், சந்துகள் ஆகியவை அரசின் 3 கோடி ரூபாய் நிதி உதவியின்கீழ், சீரமைக்கப்பட உள்ளன. சென்னை நகரிலுள்ள சிறிய தெருக்கள், சந்துகள் எண்ணிக்கை 3,690 ஆகும். இதன் நீளம் 570 கி.மீ. ஆகும். இவற்றில் சுமார் 1,340 சிறிய தெருக்கள், சந்துகள் ஆகியவற்றில் சீரமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதன் நீளம் 200 கி.மீ. ஆகும்.

ரூ.2 கோடி செலவில் 3,160 தெரு விளக்குகள் போடப்பட இருக்கின்றன. 150 கி.மீ. தூரத்திற்கு பழைய புதை மின்கம்பிகளுக்குப் பதிலாக, புதிய புதை மின்கம்பிகள் போடப்படவிருக்கின்றன.

**மதுரை மாநகரில்**

மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் சாலைகளை மேம்படுத்த ரூ.15 இலட்சமும், திறந்தவெளிச் சாக்கடைகள் அமைப்பதற்கு ரூபாய் 10 இலட்சமும், கடனாக தமிழக அரசு மதுரை மாநகராட்சிக்கு வழங்கி உள்ளது.

மதுரை மாநகர மக்களின் பொது வசதிகளை மேம்பாடு செய்வதற்கு மாநகராட்சி நிதி வசதி பற்றாக்குறையாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, அரசு, நடப்பு நிதி ஆண்டில் மதுரை மாநகராட்சிக்குச் சிறப்புவளர்ச்சித்திட்டங்களுக்காக 4 கோடி ரூபாய் நிதி உதவி செய்துள்ளது.

**கோவை மாநகரில்**

கோவை மாநகராட்சி 1981-இல் முறைப்படி துவக்கப்பட்டாலும் மாநகராட்சியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குச் செயல் திட்டங்கள் எதுவும் வகுக்கப்படவில்லை. முதல் கட்டப் பணியாக 'பொது சுகாதாரம் காக்க போர்க்கால நடவடிக்கை' என்ற சிறப்புத் திட்டம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான 3.6.89 முதல் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி மாநகராட்சியின் தனி அலுவலர் மற்றும் மாநகராட்சியின் அலுவலர்கள் மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று, பொது மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இந்தச் சிறப்புப் பணிக்கு 500 துப்புரவுப் பணியாளர்களையும், கூடுதல் வாகனங்களையும் பயன்படுத்தி பல ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த 2 இலட்சம் டன் குப்பை, கூளங்கள் மற்றும் சாக்கடைக் கழிவுகள் அகற்றப்பட்டன. இத்திட்டத்திற்கு, தமிழக அரசு ரூ.10 இலட்சம் அனுமதித்துள்ளது. இது தவிர நீண்ட காலப் பயன் அளிக்கும் 1,188 பணிகள் ரூ.11.42 கோடி மதிப்பீட்டில் 1988-89-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பொது வசதிகள் மேம்பாட்டிற்கும், சுகாதார வசதிக்கும் என ரூ.1 கோடியை தமிழக அரசு மாநகராட்சியின் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு கடனாக அளித்துள்ளது.

மேற்கூறப்பட்ட திட்டங்கள் யாவும் செயலாக்கப்படும்போது தமிழக மக்களின் அடிப்படைத் தேவைகள் யாவும் 3 ஆண்டுக்குள் முடிக்கப்படும் என்பது உறுதி. சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 3 மாநகராட்சிகளுக்கும் மொத்தம் ரூ.15.75 கோடி நிதி உதவியை உவந்து அளித்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இதன்மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சித் துறையின் பணி, தமிழக மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் நீங்காத இடம் பெறும் என்பது திண்மை. ●



நம்மைவிடச் சிலர் தாழ்ந்தவர்களென்று நாம் கருதுவது நம்மிடையேதீமை மிகுதியாக இருக்கிறதென்பதைக் காட்டுகிறது. இந்தத் தீமையை நாம் ஒழிக்காவிட்டால் அது நம்மை ஒழித்து விடும்.

பிறர் நம்மை எவ்வண்ணம் நடத்த வேண்டும் என்று விரும்புகிறோமோ அவ்வண்ணமே பிறரை நாமும் நடத்த வேண்டும்.



# துவலயம் போற்றக் குறள் தந்த கோமானுக்குக் குமரி முனையில் நினைவுச் சின்னம்

**- மாமூலன்**

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கு அருகில், கடலில் இருக்கும் மற்றொரு பாறையில் (Minor rock) திருவள்ளுவர் சிலையை அமைக்கிறது தமிழக அரசு. இதற்கான சிலையமைப்புப் பணி தொடக்க விழா கடந்த 6.9.90 அன்று குமரி முனையில் நடைபெற்றது.

இந்தத் திருவள்ளுவர் சிலை 38 அடி உயரம் கொண்ட கற்பீடத்தின் மீது 95 அடி உயரம் கொண்ட சிலையாக அமையும். மொத்தம் 133 அடி உயரமுடையதாக இஃது அமையும்.

திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டு விளங்குவதாலும் சிலையெழுந்து நிற்கும் உயரம் 133 அடி எனக் கொள்வதாலும், சிற்பக் கலை மரபின் கொள்கைப்படி வள்ளுவமே வடிவம் கொள்வதாக இவ் எடுப்புக்குச் சிறப்புச் சொல்லலாம்.

திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டதோடல்லாமல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டும் விளங்குகிறது இதில் 38 அதிகாரங்கள் அறம் பற்றியும், 95 அதிகாரங்கள் பொருள், இன்பம் பற்றியதுமாகும். எனவே அறத்தை ஆதாரமாக - பீடமாகக் கொண்டு அதன்மீது பொருளும் இன்பமும் அமைவதாகக் கருத்துக் கொண்டு இச்சிலையின் பகுதிகளின் உயரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 38 - 95 என்ற கணக்கு இச்சிலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட லய கணக்கும் (rhythm) அளவுகோலுமாகும்.



'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடிய பாட்டிற்கு சிற்பக்கலையால் சித்திரித்திடத் தக்கதொரு காட்சி கிடைக்கிறது. வள்ளுவருடைய குறள்கள் எட்டு திசைகளிலும் வாழும் மக்களால் ஏற்கத் தக்கன என்றதொரு கருத்து அதில் தொனிக்கிறது.

கலை மரபிலே திசைகளை யானைகளைக் கொண்டு உருவகித்த...

**திருவள்ளுவர் சிலையைக் கல்லால் செய்வதே சிறந்தது**

★ கல்லால் செய்வதற்குத் திறமையுள்ள சிற்பிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். ஏற்கனவே இவர்கள் வள்ளுவர் கோட்டத்தில் பணி செய்துள்ளார்கள்.

★ கல்லால் செய்வதையே ஏற்கனவே அரசு அதிகாரம் பெற்ற வல்லுநர் குழு (Expert Committee) பரிந்துரை செய்தது.

★ கல்லால் செய்வதே தமிழ்நாட்டுக்கும் தமிழகச் சிற்பிகளுக்கும் பெருமையாகும்.

★ கல்லால் செய்தால் கடல் அரிப்பினால் ஏற்படும் சேதாரம் மிகக் குறைவு. 1,000 ஆண்டுகளுக்கு மேல் நல்ல வண்ணம் இச்சிலை இருந்திடும்.

★ பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பது இதற்குத் தேவையில்லை. மழைத் தண்ணீரே இதனைச் சுத்தம் செய்து புதிய மெருகுடன் எப்போதும் வைத்திருக்கும்.

வழக்கு, அஷ்டதிக்கஜங்கள் என்ற சொற்றொடர் இதனை உணர்த்தும். திசைகளைப் பத்தாகவும் சொல்வதுண்டு. அதாவது மேலுலகையும் கீழுலகையும் இரண்டு திசைகளாகப் பாவித்து, தெச திக்குகள் என்று சொல்வதுண்டு. எனவே வள்ளுவன் குறள் 10 திசைகளிலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதொரு ஏற்றமுடையது என்ற கருத்தை உணர்த்திட 10 யானைச் சிற்பங்கள் பீடத்தைச் சுற்றி அமைக்கப்படும்.

**சிலையின் நோக்கு:**

திருவள்ளுவர் சிலையானது நிலப் பகுதியை நோக்கி-மக்களை நோக்கி-அமைவதாக நிறுவப்படும். மக்கள் தம் உயர் நலம் நோக்கி இக்குறளை யாத்தார் என்பது இஃது உணர்த்தும் பொருளாகும்.

**கட்டுமான விவரங்கள்:**

95 அடி உயரமுள்ள இந்தச் சிலையானது ஒரே கல்லால் செய்யத் தகுந்த சிலை அல்ல. பல துண்டுக் கற்களைக் கொண்டு கட்டுமானச் சிலையாக அமைப்பதே பொருந்தும். கடலில் நிறுவப்படுவதாலும் இது மேலும் பொருந்தும். எனவே இச் சிலையின் உட்பகுதி கனமின்றி உள்ளீடற்றதாகவும் (Hollow) இரட்டைச் சுவர் கொண்டதாகவும் அமையும். இந்த நிலையில், பீட மட்டத்தில், சிலையின் அடிவாரம் 31 அடி அகலமும், தொடர்ந்து அவ்வளவினதாகத் தோள் மட்டம் வரை சென்று படிப்படியாகக் கழுத்தளவில் தோள் பட்டை நெருக்கமுற்று, கழுத்தும் தலையும் நிற்பதற்கேற்ற பீடம் கொண்டதாகவும் உள்ளீடற்றதாகவும் (Hollow) அமையும். தோள் அகலமும், 31 அடி அகலமுடையதாகவே அமையும். இதனால் சிலையானது சாய்ந்திடாமல் உறுதியுடன் நிற்பதற்கேதுவாகும். சிலையின் உட்கூடு சராசரி 8 அடி அகலமும் 12 அடி நீளமும் கொண்டதாய் அமையும்.

| | |
|---|---|
| முக மண்டலத்தின் உயரம் | 10 அடி |
| கொண்டையுடன் தலையின் உயரம் | 20 அடி |
| காதின் நீளம் | 6 அடி |
| மூக்கின் நீளம் | 3 அடி 3 அங்குலம் |
| கைத் தலத்தின் நீள, அகலம் | 10 அடி, 5 அடி |
| கண் நீள அகலம் | 3 அடி, 1 அடி 6 அங்குலம் |
| கை நடுவிரல் நீளம் | 5 அடி |
| திருக்குறள் ஏடு நீளம் | 10 அடி |

(ஒவ்வொரு அதிகாரமும் 10 பாக்களைக் கொண்டது என்பதை இஃது உருவகிக்கும்)

தலையின் உடற் பகுதியானது இரண்டு சுவர்களைக் கொண்டதாகக் கட்டப்படும் என்று சொல்லும்பொழுது, அவ்வுடற் சுவரின் உள்வாய், புறவாய்க் கல்வரிகள் உறுதியாகவும், நிலையாகவும் நிற்பதற்கேற்றவாறு கட்டாயங்கள் என்று சொல்லப்படும் (Bond Stones) வைத்துக் கட்டப்படும். மேலும், உள்வாய் வரிக்கும், புறவாய் வரிக்கும் இடையில் அமையும் இடைவெளியை நயமான செங்கல்லால் சிமெண்டுச் சாந்து கொண்டு கட்டி, சுவர்ப் பகுதி மேலும் உறுதி செய்யப்படும். இங்ஙனம் செய்வதால் சிலையின் உடற் சுவரானது பாறை மீது தாக்கிடும் பளுவைக் குறைத்திட முடிகிறது. 500, 600 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ளிருக்கும் செங்கல் கெட்டுப் போனாலும் சிலைக்கு யாதொரு நெகிழ்வோ, அசைவோ ஏற்படாது. Araldite என்ற கற்பசையானது கற்களை இணைப்பதற்கு வெளிப்புறத்தில் உபயோகிக்கப்படும். உட்புறத்தில் சிமெண்டுச் சாந்தே உபயோகிக்கப்படும். இதனால் சிலைக்குள் நீர் செல்ல வாய்ப்பில்லை. நீர்க் கசிவுகள் ஏற்படின், அதற்குரிய துளைகள் (Vent) வைத்துக் கட்டப் பெறும்.

**பீடத்திற்கான கற்கள்:**

38 அடி உயரம் கொண்ட பீடத்தைத் திருநெல்வேலி சமீபம் அம்பாசமுத்திரம் என்ற ஊரில் கிடைத்திடும் கருங்கல்லால் செய்தமைக்கலாம். மேலும் கன்னியாகுமரியிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ள வண்ணாரப்பொத்தை என்ற இடத்திலுள்ள கருங்கல்லையும் உபயோகிக்கலாம். இதற்குக் கையாளப்படும் கற்கள் மேலிருக்கும் சிலையைத் தாங்குவதற்கு ஏற்ற கனபரிமாணமுள்ளதாக அளவிட்டுச் செலுத்திக் கட்டப்படும்.

**அறப் பீடம்:**

இப்பீடம் ஒரு கட்டிட வடிவத்தைக் கொண்டு அமையுமாதலால் நுழைவு வாயிலைக் கொண்டதாகவும் கல்லாலேயே கதவுகள் கொண்டதாகவும் அமையும். மேலும், சிலையின் தாள் மட்டத்திற்கு ஏறிச் சென்றடைய பீடத்துக்குள் படிகள் அமைக்கப்படும். சிலையை வலம் வருவதற்கேற்பப் பீடத்தின் மேல் மட்டத்தில் இட வசதியும் இருக்கும். பீடக் கட்டிடத்தில் அமைக்கப்படும் வாயிலானது, முகப்போடு கூடியதாக அமைக்கப்படும். சிலையின் முன்புறம் மக்கள் கூடுவதற்கும் இது வசதியாக இருக்கும். பீடத்தின் சுவர் மீது பாதுகாப்புக் கருதி, கல்லால் கைப்பிடிச் சுவரும் அமையும்.

**சிலைக்கேற்ற கல்:**

இந்தச் சிலையைப் பொறுத்த வரையில், இதனை மிக நயமான கருங்கல் கொண்டே அமைத்தல் வேண்டும். இதற்கேற்ற நயமான கருங்கல், செங்கை அண்ணா மாவட்டத்தில் 'பழைய சீவரம்' என்ற ஊரைச் சுற்றி சங்கராபுரம், பட்டுமலைக்குப்பம், திருமுக்கூடல் ஆகிய கிராமங்களில் கிடைக்கின்றது. தமிழ்நாடு அரசு கல்லியல் மற்றும் கனிமத் துறையானது (Tamilnadu State Geology) இந்தப் பாறைகளை வள்ளுவர் சிலைக்கு ஏற்றதெனச் சோதனை செய்து பரிந்துரையும் செய்துள்ளது.

இதே பாறைகளைச் சிற்பக்கலை மரபினர் பல நூற்றாண்டுகளாக, சிறந்த சிற்பங்களைச் செய்வதற்கு



**பாவேந்தர் நூற்றாண்டு:**

விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைத்துக்கொள்! உன்னைச் சங்கம மாக்கு!
மானிடச் சமுத்திரம் நானென்று கூவு!



ஏற்றதெனக் கண்டு தேர்ந்து, பயன்படுத்தியும் வந்திருக்கின்றனர். வள்ளுவர் கோட்டத் திருப்பணிக்கும் ஒரு சில பகுதிகளுக்கும் வள்ளுவர் சிலைக்கும் இக்கற்களே எடுத்தாளப்பட்டன. இக்கற்களுக்கு உறுதியும், சீரான அணுச் சேர்க்கையும், சீரான நிறமும் உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக அவை உளி கொண்டு செதுக்குவதற்கேற்ற பதமுடைய கற்களுமாகும். இத்தகைய கற்களைக் கொண்டு இச்சிலை செய்யப்படுமானால் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து நிற்கும் வாய்ப்பைப் பெற்றுவிடும். உப்பங் காற்றைத் தாங்கிக் கொள்ளும் உறுதியும் இக்கல்லுக்கு உண்டென்பது மிகையன்று. கோவிற் கட்டிடங்கள் சாதாரணப் பாறைகளைக் கொண்டு கட்டப்பட்டிருப்பினும் வழிபடு படிமங்களை இந்தக் கல்லாலேயே பண்டைச் சிற்பிகள் தஞ்சை மாவட்டத்தில் செய்திருப்பதை இன்றும் காணலாம். அத்தகைய உறுதியும், பார்வைக்குக் குளிர்ச்சியும் தரும் கல் இஃதாகும். எனவே செங்கை அண்ணா மாவட்டத்துக் கற்களை, சென்னைக்கு அருகிலுள்ள இடத்திற்குக் கொண்டு வந்து, அங்கு சிலைப் பகுதியைச் செதுக்கி, தக்க வண்ணம் கனத்தையும் குறைத்து, அதன் பிறகு கன்னியாகுமரி எடுத்துச் சென்று, சேர்மானம் செய்தல் தொழில் வகைக்கும், செலவைக் குறைக்கும் வகைக்கும் ஏற்றதெனக் கருதப்படுகிறது.

**சிலைக்கு மெருகேற்றல்:**

இந்தச் சிலையின், புறப்பகுதி வழவழப்பாக இருந்திட, தக்க ஆயுதம் கொண்டு சிலையைத் தேய்த்து மெருகேற்றப்படும். உடற் பகுதி அதிக மெருகு கொண்டதாயும் ஆடைப் பகுதிகள் குறைந்த மெருகு கொண்டதாயும் அமைத்து, தூரப் பார்வைக்கு உருவமும் ஆடைகளும் தெளிவாகவும், சுவையாகவும் தெரியுமாறு செய்யப்படும். சிலைக்கு மெருகேற்றல் ஆனது, சிலை மீது படியும் உப்பை எளிதில் கழுவிடவும் உதவிடும். மழை நீரால் உப்பு அவ்வப்போது தானாகவும் கழுவிட இது வசதியாக இருக்கும்.

**சிலைக்குள் ஏறிச் செல்ல:**

பீடத்தின் மேல் மட்டத்தை அடைந்த பின், சிலையின் உட்பகுதியைத் தூய்மைப்படுத்திடும் பணியாளர் சிலைக்குள்ளே ஏறிச் செல்வதற்குச் சிலையின் உட்பகுதியில் படிகளும் அமையும்.

**வெளிச்சமும் காற்றும்:**

சிலையின் உட்பகுதியில் ஏறிச் செல்லுவோர் தங்கித் தங்கிச் செல்வதற்கு ஏற்றவாறு, சிலைக்குள்ளே பல தளங்களும் அமையும். சிலைக்கு உட்பகுதியில் காற்றும் வெளிச்சமும் உட்புகுவதற்கு ஏற்ப, கல்லால் ஜன்னல்களும் அமைக்கப்படும். சிலையினுடைய கால் பகுதியில் (பீட மட்டத்தில்) பின்புறத்தில் பெரிய வாயில் ஒன்றும் அமையும். இதன் கதவுகள் முற்றிலும் கல்லாலேயே அமையும்.

**வள்ளுவனுக்குள்ளே வள்ளுவன்:**

பாறை மட்டத்தில் இருந்து படியேறிச் செல்லுவோர் தலையுச்சிக்கு வந்து சேர்ந்த நேரத்தில், வெற்றிடத்தைப் பார்த்துத் திரும்பாது உள்ளேயும் வள்ளுவனைத் தரிசித்துத் திரும்பும் வண்ணம் 6 அடி உயரமுள்ள வள்ளுவர் சிலை ஒன்று, உட்பக்கச் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைப்பதாகவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. பாதுகாப்புக் கருதி, மக்கள் சிலைக்குள் ஏறிச் சென்று வருவதைத் தவிர்க்கலாம். ஆனால் வள்ளுவனுக்குள் வெற்றிடத்தை வைக்காமல் வள்ளுவனுக்குள்ளும் வள்ளுவனே என்ற ஒரு கருத்தையுணர்த்திட இதனைச் செய்யலாம்.

**பணிமனைகள்:**

பீடப் பணிகளுக்குக் கன்னியாகுமரியில் ஒரு தொழிற் கூடமும் சிலைப் பணிக்குச்சென்னைக்கு அருகிலே ஒரு தொழிற் கூடமும் அமைத்து இப்பணிகளைச் செய்தல் வேண்டும். ஒரே இடத்தில் கைவினைஞர்களின் கூட்டத்தைத் தவிர்த்தல் நிர்வாகத்துக்கு ஏற்புடையதாகும். தலைமைச் சிற்பியின் கவனம் எல்லாம் சிலையமைப்பிலும், சிலை கட்டுமானத்திலுமே இருத்தல் வேண்டும். அரசின் நேரடிப் பார்வையும் இப்பணிக்கு உணர்ச்சியூட்டும் கலைப்பணிக்கு உணர்ச்சி பூர்வமான ஆதரவும் அணைப்பும் இன்றியமையாதனவாகும். எனவே சென்னைக்கு அருகாமையில் சிலைப் பணிக்கூடம் நிறுவிடப் பணிந்துரை செய்யப்படுகிறது.

**சிற்பிகள்:**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிற்பிகளும் கைவினைஞர்களும் 1,000 பேர் வள்ளுவர் கோட்டத் திருப்பணியில், திருவண்ணாமலையிலும், பட்டு மலைக்குப்பத்திலும், மாமல்லபுரத்திலும் சென்னையிலும் பணியாற்றினார்கள். அதுபோல இப்பணிக்கும் அவர்களையே அழைத்து வந்து, இப்பணியினைச் செய்வதே பொருந்தும். கன்னியாகுமரியில் 5 ஏக்கர் இடமும், சென்னைக்கு அருகே 10 ஏக்கர் இடமும் இப்பணிக்குத் தேவைப்படும். ஆங்காங்கே தகுந்த உளிப் பட்டறைகளையும், தொழிற் கூடங்களையும், சிற்பியர் தங்கும் இடங்களையும் அமைத்துக் கொண்டு, இப்பணியினை ஆற்றுதல் வேண்டும். கிட்டத்தட்ட 500 கைவினைஞர் இப்பணிக்குத் தேவைப்படுவார்கள். நிமிந்தம், பட்டறை - பிற உதவியாளர்கள் மொத்தத்தில் 100 பேர் தேவைப்படுவர். தகுந்த எண்ணிக்கையில் மேற்பார்வைச் சிற்பியர்களும் அலுவலக உதவியாளர்களும் இருப்பர். கிட்டத்தட்ட 750 பேர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு வேலை வாய்ப்பும் இப்பணி நல்கும் எனலாம்.

**அம்பேத்கர் நூற்றாண்டு**

• சமூகத்தில் அங்கம் பெற்றிருக்கும் உறுப்பினர், பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்ளுவதற்குச் சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும்; அதுதான் உண்மையான சகோதரத்துவம் ஆகும்.

— டாக்டர் அம்பேத்கர்

# மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம்




இறப்பு மற்றும் விபத்து ஆகிய பாதிப்புக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்க மீனவ உறுப்பினர்களுக்குக் காப்புறுதி வழங்க இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான தவணைத்தொகை ஆண்டிற்கு ஒரு மீனவருக்கு ரூ.9 ஆகும். மீனவ சங்க உறுப்பினர்கள் இதற்காகப் பணம் கட்டத் தேவையில்லை. இத்தொகையை மத்திய-மாநில அரசுகள் சமமாக ஏற்றுக் கொள்கின்றன.

மீனவர் விபத்தினால் இறந்தால் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றால் ரூ.15,000 காப்புறுதித் தொகையாக வழங்கப்படுகிறது. மீனவர்கள் ஒரு கை அல்லது கால் ஊனமுற்றாலோ அல்லது கண் பார்வை இழந்தாலோ ரூ.7,500 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1,49,539 மீனவர்கள் சேர்ந்துள்ளனர். 735 மீனவர் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்து இதுவரை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நிவாரணம் வழங்கப் பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் 157 குடும்பங்களுக்கு ரூ.21.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்தியதற்காக தேசிய மீனவர் கூட்டுறவு இணையம் தமிழ்நாட்டினைத் தேர்ந்தெடுத்து ஜே.சி. பார்வே விருது அளித்துள்ளது. இவ்விருதினை மீன்துறை இயக்குநர்/ மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. எஸ்.மச்சேந்திர-நாதன், இ.ஆ.ப., 31.8.90 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மூன்றாவது மீனவக் கூட்டுறவுக் காங்கிரஸ் விழாவில் பெற்றுக் கொண்டார்.

**கற்சிலைக்குச் செங்கல்லால் மாடல்: (மாதிரி வடிவம்)**

**இச்சிலையைப் புரிந்து செய்திடவும், துரிதமாகச் செய்திடவும், இத்தகைய மாதிரி வடிவம் (மாடல்) ஒன்று பணிமனையில் செய்து கொண்டு, அதனை மூலமாக வைத்தே கல்லால் சிலை செதுக்கிடும் பணி நிகழும்.**

**சாரக்கட்டைச் சுவர்:**

சிலைக்குரிய அடிப்பீடத்தை சாதாரண மரச் சாரங்கள் கொண்டு ஓரளவு கட்டிவிடலாம். ஆனால் சிலையை அங்ஙனம் கட்டுவது கடினமாகும்; இயலாது. எனவே தக்க சாரக் கட்டைச் சுவர்களை (Retaining Wall) செங்கல்லாலோ கட்டுக் கற்களாலோ (Coursed Rubble) அமைத்துக் கொண்டு, செதுக்கி முடித்த சிலைப் பகுதிகளைச் சேர்மானம் செய்தல் வேண்டும். இத்தகைய சாரக்கட்டைச் சுவரைக் கொண்டு தஞ்சை பெருவுடையார் திருக்கோயில் விமானத்தைக் கட்டியதாக வரலாற்று ஆசிரியர்களும் அறிவர். இந்தச் சாரக் கட்டைச் சுவரில்லாமல் இப்பணியினை வெற்றிகரமாக முடிக்க இயலாது.

**பாறைக்குப் படகு மூலம் கற்களைக் கொண்டு சேர்த்தல்:**

செதுக்கி முடிந்த கற்களைக் கடற்கரையிலிருந்து பாறைக்குப் படகுகள் மூலம் எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால், படகு,சுமந்து செல்லத் தக்க பளுவுடையதாக, சிலைக்குரிய கற்கள் அளவிட்டுச் செய்யப்படும். கற்களைப் படகில் ஏற்றுதலையும், படகிலிருந்து இறக்குதலையும் கைவினைஞர்களே கவனிப்பர்.

**1975-ஆம் ஆண்டில் உருவான திட்டம்**

குமரிமுனையில் திருவள்ளுவருக்குச் சிலை எடுப்பது 1975-இல் உருவான திட்டம் என்றும் இதனை வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவின் போது அறிவிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது என்றும் விழாவுக்குத் தலைமையேற்றிருந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

முப்பால் தந்த வள்ளுவருக்கு முக்கடல் சங்கமத்தில் சிலையமைப்புப் பணியைத் தொடங்கிவைத்த முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், ''உலகம் முழுவதுமுள்ள தமிழ்ப்பெருங்குடி மக்கள் சிலை திறப்பு விழாவில் பங்கேற்க வேண்டும். அந்த அளவுக்கு விழா சிறப்புடன் நடைபெற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.



# மாபெரும் மனிதாபிமான பிரச்சினை



## இலங்கை அகதிகளுக்கு உதவி


செ. ராமதாஸ், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர்
இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மாநில ஒருங்கிணைப்பாளர்


தனி மனித வாழ்க்கையிலும் சரி, ஒரு சமுதாயம் அல்லது ஒரு நாட்டினுடைய வாழ்க்கையிலும் சரி, சில சமயங்களில் சோதனை வரும். அந்தச் சோதனையே சாதனை நிகழ்த்த வாய்ப்பாகவும் அமையும். எதிர்பாராத இக்கட்டு வரும்போது நமது வலுவனைத்தையும் ஒன்று சேர்த்துச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுகின்றோம்.

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை, பல ஆண்டுகளாக இருந்து வந்த போதிலும், 1990 ஜூலை முதல் தேதிக்குப் பிறகு அது பெரிய அளவில் **அச்சுறுத்தலாயிற்று**. நாள்தோறும் அகதிகள் **ஆயிரக்கணக்கில்** அலை அலையாகத் தமிழகம் வந்து கொண்டு இருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினையின் பரிமாணத்தை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 6.7.90 அன்று தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், காவல்துறைத் தலைவர், மறுவாழ்வு ஆணையர் ஆகியோருடன் ஆய்வு செய்து, மாவட்டங்களிலும் அகதிகளைக் குடியமர்த்த உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து இந்தத் திட்டம் புது உத்வேகம் பெற்றது.

மேலும், மாவட்டங்களில் அகதிகள் தங்கும் இடவசதி, பணக்கொடை மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்குதல் போன்ற ஏற்பாடுகள் ஒரு மூத்த அலுவலரால் மேற்பார்வையிட்டு, ஒருமுகப்படுத்தப்பட வேண்டுமெனவும், 11.7.90 அன்று அரசு ஆணையிட்டது. சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்த்திருத்த ஆணையர் அவர்கள், மிகுந்த முக்கியத்துவத்துடன் இப்பணியினைக் கவனித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

மனமிடிந்தும், உள்ளம் உடைந்தும் உயிரைக் காத்துக் கொள்ள இந்தியாவுக்கு ஓடிவரும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு, ஒரு தாயின் பரிவோடும், பாசத்தோடும் தமிழக அரசு எல்லா உதவிகளும் தங்கு தடையின்றிச் செய்து வருகிறது. ஒரு மாவட்டத்திற்கு 5,000 பேர் என்ற அளவில் சென்னை, நீலகிரி ஆகிய இரு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களில் இதுவரை சுமார் 250 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

9.9.90 - முடிய, தமிழகம் வந்த அகதிக் குடும்பங்கள் 31,328; நபர்கள் 1,07,861

''நிலத்தில் இடமில்லை; என்றாலும் எங்கள் நெஞ்சத்தில் இடமுண்டு! வாழ வைக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுத் துயர் துடைப்போம். இலங்கைத் தமிழ் அகதிகளை என்றைக்கும் கைவிட மாட்டோம்'' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிஞ்சிப்பாடியில் கூறியதுபோன்று, ஏற்கனவே உள்ள கட்டடங்கள், இராணுவத்திடமிருந்து பெறப்பட்ட கூடாரங்கள் போன்ற முகாம்களில் அகதிகள் உடனடியாகத் தங்க வைக்கப்பட்டு, தேவையான உதவிகள் அனைத்தும் அளிக்கப்படுகிறார்கள்.

அரசின் உதவிகள் அனைத்தும் வழங்கப்படுவதோடு, ஆங்காங்கே உள்ள தொண்டு நிறுவனங்களின் உதவியும் பெறப்பட்டு, மளிகைச் சாமான்கள், சமையல் பாத்திரங்கள், பாய், விரிப்புகள், துணிமணிகள், வாளிகள், ஸ்டவ், மருந்து வகைகள், நாளேடுகள், வார-மாத இதழ்கள், விளையாட்டுப்



**மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், மண்டபம் முகாமில், இலங்கை அகதிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார் (22.7.90).**

பொருட்கள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, திருவண்ணாமலை அகதிகள் முகாமில் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும், சேலம் மாவட்டத்திலுள்ள முகாம்களில் 5 தொலைக்காட்சிப் பெட்டிகளும் இயங்குகின்றன. கோவை மாவட்டத்திலுள்ள 28 முகாம்களிலும் செய்திப் பத்திரிகைகளும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

அகதி முகாம்கள் அமைந்துள்ள அந்தந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக, வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள முகாமில் உள்ளவர்களுக்கு, அருகிலுள்ள அரிசி ஆலைகளில் வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாமில் தண்ணீர், சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான முகாம்களில் மின் வசதியும் உள்ளது. மருத்துவச் சிகிச்சை கிடைக்கவும், காசம், நீரிழிவு போன்றவை கண்டறியப்பட்டால் அருகிலுள்ள மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சைக்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் சோதனை செய்யப்பட்டு, காவல் துறை விசாரணைக்குப் பிறகு, ஒவ்வொரு குடும்பமும் கணக்கெடுக்கப்பட்டு, அதன் அங்கத்தினர்களுடன் புகைப்படம் எடுக்கப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

தமிழகம் வந்து இறங்கியவுடன் அகதிகள், தேநீர், சிற்றுண்டி கொடுத்து உபசரிக்கப்படுகின்றனர். முகாமில் அனுமதிக்கப்படும்வரை உணவு இலவசம்; குழந்தைகளுக்குப் பாலும் வழங்கப்படுகிறது.

முகாமில் அனுமதிக்கப்பட்டதும், அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் கொள்ளக் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டையைக் காட்டி, கிலோ 57 காசு மலிவு விலையில் அவர்கள் அரிசி வாங்கிக் கொள்கின்றார்கள். நாளொன்றுக்குப் பெரியவர்களுக்கு 400 கிராமும், சிறியவர்களுக்கு 200 கிராமும் வழங்கப்படுகிறது.

அகதிக் குடும்பங்கள் முகாமில் சேர்க்கப்பட்டவுடன், அவர்களுக்குத் துணிமணிகள், சமையல் பாத்திரங்கள், கைச்செலவுக்குப் பணம் ஆகியவை வழங்கப்படுகின்றன. முகாம் இடங்களுக்கு இரயில் அல்லது பேருந்தில் செல்ல இலவச ஏற்பாடு செய்யப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்குத் தொழில் கல்லூரிகளில் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| மருத்துவம் | ... | 20 இடங்கள் |
| பொறியியல் | ... | 40 இடங்கள் |
| பாலிடெக்னிக் | ... | 40 இடங்கள் |
| விவசாயம் | ... | 20 இடங்கள் |

இவ்வாறு தொழிற் கல்லூரிகளில் 120 இடங்கள் ஒதுக்கியுள்ளதை இலங்கைத் தமிழர் மிகவும் பாராட்டியுள்ளனர். தென்னார்க்காடு மாவட்டம், தாழங்குடா கிராமத்தில் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் அகதிகளைப் பார்த்து, "உங்களுக்கு இங்கே வசதிகள் எப்படி?" என்று விசாரித்தபோது, "ஒரு கிலோ அரிசி எங்களுக்கு 57 பைசாவுக்கு கிடைக்கிறது. இலங்கையில் அரிசி கிலோ 15 ரூபாய், மண்ணெண்ணெய் லிட்டர் 50 ரூபாய்க்குக் கூட கிடைக்காது" என்று மன நெகிழ்ச்சியுடன் கூறினார்கள்.



அகதிகளின் குழந்தைகளை பிளஸ் 2 வகுப்பு வரை மாற்றுச் சான்றிதழ் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கவும், ஆரம்பப் பள்ளிகளில் முட்டையுடன் கூடிய சத்துணவு வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

அகதி முகாம்களுக்குக் குடிநீர் வழங்கும் பொறுப்பையும், கழிப்பறை அமைக்கும் பொறுப்பையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ளன.

மண்டபம் முகாமில் தென்னிந்தியத் திருச்சபையின் தொழில் நுட்பப் பயிற்சிக் கழகம் என்ற தொண்டு நிறுவனம் வீட்டு ஒயரிங், மோட்டார் ரீவைண்டிங், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வானொலி பழுது பார்த்தல், தையல், தச்சு வேலை ஆகியவற்றில் அகதிகளுக்குப் பயிற்சி அளிக்கிறது.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், 250 மாணவர்களுக்குக் கோடைக்கால வகுப்பு நடத்துகிறது.

ஒய்.எம்.சி.ஏ. நிறுவனம் 93 குழந்தைகளுக்குக் காப்பகம் நடத்துகிறது.

மேலும் இந்த முகாமில் நூலகம், கேரம், செஸ், வாலிபால், பாட்மிட்டன், கால்பந்து போன்ற வசதிகளும் உள்ளன.



**செங்கை-அண்ணா மாவட்டம், புழல் இலங்கை அகதிகள் முகாமில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், வேட்டி, சேலைகள், சீருடைகள் வழங்கினார். மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. க. சுந்தரம், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு ஆகியோர் உடன் உள்ளனர்.**

நகைக்கடன்கள் பெறவும், இலங்கைச் செலாவணியை மாற்றிக் கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய இரு இடங்களிலும் 20.8.90 வரை 99 பேர் ரூ.90,000 அளவுக்கு நகைக்கடன் பெற்றுள்ளனர்

கருவுற்ற மகளிர், தமிழகக் கருவுற்ற மகளிரைப் போலவே ரூ.200 மகப்பேறு உதவித் தொகையாகப் பெற, உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்திய விடுதலை நாள் விழாவில் (15.8.90) இலங்கைத் தமிழ் அகதிகள் 70,000 (எழுபதாயிரம்) பேருக்கு இலவச வேட்டி, சேலைகளும், சிறுவர் சிறுமியருக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டன. இதற்கான செலவு ரூ.34 இலட்சம்.

கொட்டப்பட்டு முகாமில் காஜாமலை மகளிர் சங்கம் 30 அகதிப் பெண்களுக்குத் தையல் பயிற்சி நடத்துகிறது.

இத்தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளை மேற்கொள்ளத் தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து ரூ.5/- இலட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.8 கோடி செலவில் தீப்பிடிக்காத கூரை வேய்ந்த 20 ஆயிரம் வீடுகள் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.



கோவை மாவட்டம் புலியகுளம் தாமு நகரில் அமைந்துள்ள இலங்கை அகதிகள் முகாமில், ஒரு அகதிப் பெண்ணுக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் பிளாஸ்டிக் வாளி, தட்டு, சேலை, அரிசி ஆகியவற்றை வழங்கினார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்களும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.இராமன் இ.ஆ.ப. அவர்களும், திரு. மு.ராமநாதன் எம்.எல்.ஏ., அவர்களும் உடன் உள்ளனர் (24.7.90)

இலங்கைத் தீவிலிருந்து கண்ணீரும் கம்பலையு ாகத் தினந்தோறும் தமிழகம் வந்து கொண்டி ந்க்கும் அகதிகளைக் குடியமர்த்தத் தமிழ்நாடு ரசு,போர்க்கால அடிப்படையில் உதவி நடவடிக் கைகளை முழு அளவில் நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே முகாம்களுக்குச் சென்று, தமிழ் அகதி களின் குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்வ தோடு, அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், மற்றும் மூத்த அலுவலர்கள் அவ்வாறு செய்யவும் ஆணையிட்டுள்ளார்.

தீவிரமான பிரச்சினை, மிகுந்த தீரத்துடன் சமாளிக்கப்பட்டு வருகின்றது. முகாம்களைப் பார்வையிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும், ஏற்பாடுகளைப் பாராட்டியுள்ளனர். குறைகண்ட இடத்தில் அதனை நிறை செய்ய உடனடி நடி வடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் அளிக்கும் பணியைத் தமிழ்நாடு அரசும் மக்களும் பாராட்டத்தக்க அளவில் நிறைவேற்றி வருவதாக, மாண்புமிகு பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் 27.8.90 அன்று நாடாளுமன்றத்தில் கூறியது குறிப்பிடத்தக்கது.

1990 செப்டம்பர் 9 வாக்கில் அகதிகள் எண்ணிக்கை ஒரு லட்சத்து ஏழு ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

அகதிகள் உதவி ஏற்பாடுகளுக்காகத் தமிழக அரசு மத்திய அரசிடம் ரூ.10 கோடி நிதி கோரி யுள்ளது. இதுவரை 6.64 கோடி செலவாகியுள் ளது. இதில் மத்திய அரசு ரூ.4 கோடி ஈடு செய்துள்ளது.

மத்திய, மாநில அரசுகள் தோளோடு தோள் நின்று இந்த மகத்தான பிரச்சினையை மனிதாபி மானத்துடன் சமாளிக்க உறுதி பூண்டுள்ளன.

புழல் அகதிகள் முகாம்.





## புதுக்கோட்டை மாவட்டத்தில்...

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்தது. அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள திரு. பெ.சு. திருவேங்கடம், திரு. சித்திக், திரு.சிவலோகம், திரு. பாலையா, திரு.வல்லரசு ஆகியோர் குழுவினருடன், குரும்பூர் எனும் கிராமத்தில் 1,825 ஏக்கரில் பயி ரிடப்பட்டுள்ள தீவிர முந்திரிச் சாகுபடிப் பண்ணையைப் பார்வை யிட்டனர். மாவட்ட ஆட்சியர் அலு வலகத்தில் போக்குவரத்துத்துறை, மருத்துவத்துறை, வனத்துறை, உள் ளாட்சித்துறை ஆகிய துறை அலு வலர்களிடம் திட்டப் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தினர். இக்குழுவினருடன் புதுக்கோட்டைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

அப்போது, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம.குற்றாலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "இந்த மாதிரியான இரட்டை வீடுகள் இந்த மாவட்டத்தில்தான் கட்டப்பட் டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத் தில் நடப்பாண்டில் (1990-91-இல்) ஆதி-திராவிடர்களுக்கு 58 கிராமங் களில் 1,150 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அக்டோபர் 2-ஆம் தேதிக்குள் 600 வீடுகள் கட்டி முடிக்கப்படும். மேலும் இங்கே ரூ.2.84 இலட்சம் செலவில் கட்டப் படும் 20 வீடுகளும் சிறப்பாக அமைக்கப்படவுள்ளன.

"வீட்டின் முன்பகுதியில் காங் கிரீட் தளமும், பின்புறம் இணைப் புப் பகுதியுடன் கட்டப்பட்டு வருகிறது. இரண்டு வீடுகளை ஒன் றாக இணைத்து ஒரே சுவருடன் கட்டப்பட்டுள்ளதால், வீட்டின் உட் பகுதியில் இடவசதி கூடுதலாக இருக்கிறது. ஒவ்வொரு வீட்டின் முன்புறம் சிமெண்ட் தளம் போடப் பட்டிருப்பதுடன், பின்புறம் இணைப் புப் பகுதியும் போடப்படுகிறது. ஒவ் வொரு வீட்டின் மதிப்பும் ரூ.14,200 ஆகும்".

—கோ. பன்னீர் செல்வம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை மாவட்டம்



# ஆதி-திராவிட சமுதாயத்தினருக்கு அனைத்துச் சலுகைகளும் வழங்குகிறார் முதல்வர் கலைஞர்!

## திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ பாராட்டு

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசின் செயல்பாடுகள் குறித்துக் கண்டறிவதற்காக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு, திரு. ந. கணபதி அவர்கள் தலைமையில் புதுக்கோட்டைக்கு வருகை தந்தது.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த சிலட்டூர் கிராமத்தில், ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.2.84 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 20 தொகுப்பு வீடுகளை இக்குழு பார்வையிட்டது.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக, புதிய வடிவமைப்புடன் கட்டப்பட்ட இரட்டை வீடுகளாகும் இவை.

இந்த வீட்டைப் பார்வையிட்டவர்களில், மேற்கண்ட குழுவின் உறுப்பினரும், இ. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினருமான திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும் ஒருவர்.

நவீன முறையில் கட்டப்பட்டுள்ள இந்தத் தொகுப்பு வீடுகளைப் பார்த்துவிட்டு அவர் கூறியதாவது:

"நான் கலைஞர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். அடித்தளத்து மக்களாகிய ஆதி திராவிட சமுதாயத்தினருக்கு வேண்டிய அனைத்துச் சலுகைகளையும் வழங்குவதில் மிகவும் தீவிரம் காட்டி வருகிறார்கள்.

"நானே சட்டசபையில் பேசும்போது, 'தற்போது ஆதி திராவிடர்களுக்குக் கட்டப்பட்டுவரும் வீடுகள் மிகச் சிறியதாக உள்ளன' என்று கூறினேன்.

"ஆனால் இன்று, அந்த வீடுகளைப் பார்க்கும்போது நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். மிகச் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு, அழகாகக் கட்டப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, நான் பெருமை அடைகிறேன்.

"நான், சட்டசபையில் தெரிவித்த வேண்டுகோளை ஏற்று, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை நான் பாராட்டுகிறேன். இதற்காக நான், முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதுடன், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்".

-இவ்வாறு அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

# வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட். வேலூர் சர்க்கரை ஆலை அஞ்சல்-632 519இ வ.ஆ.அம்பேத்கர் மாவட்டம்

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்று, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தன் முதல் அரைவையை 3.4.77 முதல் துவங்கி, கடந்த பல ஆண்டுகளாகத் தொழில் நுட்ப ரீதியாகத் தேசிய அளவில் பல அரிய சாதனைகள் புரிந்து, கூட்டுறவுத் துறையில் மாதிரி சர்க்கரை ஆலையாகத் திகழ்ந்து வருகிறது. தற்போது அரைவைத் திறன் நாளொன்றுக்கு 1,250 டன்னிலிருந்து 2,500 டன்களுக்கு விரிவாக்கப் பணி முடியும் தறுவாயில் உள்ளது.

இறுதி கட்ட கருப்பஞ்சாற்றில் (Final Molasses Purity) சர்க்கரை விகிதத்தை 28%லிருந்து 23.5 சதமாகக் குறைத்து உலக அளவில் சாதனை படைத்துள்ளது.

தூய வெண்மையான சர்க்கரையை உற்பத்தி செய்து, பொதுமக்களின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

அரசின் உத்தரவுப்படி, இவ்வாலை பல கரும்புப் பெருக்கத் திட்டங்களை வேளாண் அங்கத்தினர்கள் மேம்பாட்டிற்காகச் செய்து வருடம்தோறும் ரூ.50 இலட்சம் வரை மானியங்கள் வழங்கி வருகிறது.

1989-90-ஆம் ஆண்டுப் பருவத்தில் தமிழக மாநிலத்திலேயே உயர்ந்த பட்ச சர்க்கரைக் கட்டுமானம் பெற்று கரும்பு டன் 1-க்கு மாநில அளவில் அதிகப் பட்ச விலையாக ரூ.341.20 கொடுத்து வருகிறோம்.

ஆலைத் தொழிலாளர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ வசதி, குடியிருப்புகள், இலவசச் சீருடைகள், காலணிகள் குறைந்த விலையில் மதிய உணவு, சிற்றுண்டி, இலவசத் தேநீர் வழங்கப்படுகிறது. ஆலை அங்கத்தினர்கள் மற்றும் ஆலைத் தொழிலாளர்களுடன் ஆலை நிர்வாகம் நல்லுறவை வளர்த்து வருகிறது.

மாநிலம் மற்றும் தேசிய அளவில் இவ்வாலை பல விருதுகளையும், பரிசுகளையும் தொடர்ந்து பெற்று சிறந்த கூட்டுறவு நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.

இரா.சு.செல்லசாமி,
தனி அலுவலர்.



சில நுகர்பொருள் அங்காடிகளுக்கு நான் நேரில் சென்று பரிசோதித்தபோது நடந்த சில சம்பவங்களில் ஒன்றைக் குறிப்பிட நினைக்கிறேன்.

ஒரு நாள்- மூன்று கிலோ அரிசி வாங்கிக்கொண்டு திரும்பிய ஓர் அம்மையாரை நிறுத்தி, அந்த அரிசியை மறுபடியும் கொண்டு போய் எடைபோடச் சொல்லிப் பார்த்தால்- அதில் 500 கிராம் குறைந்தது. "எப்போதும் இந்தக் கடையில் இப்படித்தான் போடுகிறார்களா? என்று கேட்டேன்.

நான் யார் என்பதைப் புரிந்து கொண்ட அந்த அம்மாள், என்னை ஒரு தடவை பார்த்தார்; எடைபோடுபவரை ஒரு முறை பார்த்தார். 'நம்மால் ஏன் அவருக்கு வீண் சங்கடம்?' என்று நினைத்தாரோ- அல்லது 'இந்த ஆள் மாற்றப்பட்டால், அடுத்து வருபவர் எப்படியிருப்பாரோ' என்று அஞ்சினாரோ என்னவோ! 500 கிராம் அரிசி குறைவதையும் பொருட்படுத்தாமல்- "எடைபோட்டுப் பையில் போடுகிறபோது ஒரு வேளை அரிசி கீழே சிந்தியிருக்கலாம்" என்று அந்த அம்மையார் துணிந்து ஒரு பொய்யைச் சொன்னார்.



# "நுகர்வோர் குறைநீங்க மக்களும் அரசுடன் ஒத்துழைக்க வேண்

**பொது மக்களிடையே இப்படிப்பட்ட தேவையில்லாத அச்சம் நீங்கி, விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும்; அப்போதுதான்- தவறான எடைபோடுதல், உணவுப்பொருளில் கலப்படம் போன்றவைகளைத் தவிர்க்க முடியும். வெறும் சட்டத்தால் மட்டுமே தவறுகளையெல்லாம் சரி செய்து விடமுடியாது; பொது மக்களும் அரசோடு ஒத்துழைக்க வேண்டும்.**

சட்டத்தின் மூலம், தவறு செய்தால் தண்டனைகள் வழங்கப்படலாம்- அதற்கும் சாட்சியங்கள் சரியாக இருந்தாக வேண்டும்.

கலப்படக்காரர்களையும், சமூக விரோதிகளையும் தண்டித்தே ஆக வேண்டும்; அப்போது தான் அந்த நினைவுள்ள மற்றவர்களும் அச்சப்படுவார்கள். ஆகவே, நாடு தழுவிய விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டியது மிகவும் முக்கியம்.

**நுகர்வோர் யாரானாலும் சரி; அவர்களுக்கு இந்த வகையில் ஏற்படும் குறைகளை, 'நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில்' எழுதிக் கொடுத்தால் போதும்; நிச்சயம் அவர்களுக்கு நீதி கிடைக்கும்; குற்றவாளிகளும் தண்டிக்கப்படுவார்கள். சாதாரண மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடுதான், நீதிபதி காதர் அவர்கள் தலைமையில், நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றங்கள் தமிழ் நாடெங்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன.**

**சட்டத்தில் உள்ள ஓட்டைகளைச் சாதகமாக்கிக் கொண்டு, குற்றவாளிகள் தப்பிவிட முடியாது; மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம், நீதிபதி அவர்கள் தெரிவித்த கருத்துகளை எடுத்துச் சொல்லி, மிகச் சாதாரண மக்களு(க்)கும் இந்தக் குறைதீர்க்கும் மன்ற(ங்)களில் தொண்டு அமையச் செய்வ(து) எனது கடமை.**

இம் மன்றங்களில் அங்க(ம்) வகித்துச் செயல்படுவோரும் தங்க(ள்) பொறுப்புணர்ந்து நடந்து கொள்(ள) வேண்டும்."

- மாண்புமிகு உணவு மற்று(ம்)
கூட்டுறவுத்துறை அமைச்ச(ர்)
திரு பொன். முத்துராமலிங்க(ம்)

(23.8.90 அன்று
சென்னையிலுள்ள தமிழ்நா(டு)
கூட்டுறவு வங்கிக் கட்டடத்தி(ல்)
நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்(கை)
நிறைவு செய்து வைத்து ஆற்றி(ய)
உரையிலிருந்து

சென்னை பொது மருத்துவ மனையில்

# சிறுநீரக நோய் இயல் பிரிவின் சிறப்பான சேவை

*யூராலஜி (UROLOGY), நெப்ராலஜி (NEPHROLOGY) இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?*

யூராலஜி என்பது சிறுநீரக அறுவைச் சிகிச்சை மருத்துவம். நெப்ராலஜி என்பது சிறுநீரக நோயியல் மருத்துவம் ஆகும். சிறுநீரகம் தொடர்பான நோய்களை மருந்துகள் மூலம் குணப்படுத்துவது நெப்ராலஜியின் பணி. அறுவைச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்துவது யூராலஜியின் பணி. செயற்கைச் சிறுநீரகம் மூலம் சிகிச்சை அளிப்பதும் நெப்ராலஜியின் பணிதான்.

*எந்தவிதமான அறிகுறிகளை வைத்து, தனக்குச் சிறுநீரக நோய் ஏற்பட்டுள்ளது என்பதை சாதாரண மனிதன் உணர்ந்து கொள்ள முடியும்?*

ஒரு சிலருக்கு பாதம், கணுக்கால் ஆகியவற்றில் வீக்கம் ஏற்படலாம். சிலருக்கு முகம் வீங்குவதும் உண்டு. இவற்றை அசட்டை செய்யக் கூடாது- சிறுநீரகங்களில் ஏற்படும் பாதிப்பு இது போன்ற வீக்கத்திற்குக் காரணமாக இருக்க முடியும். சிலருக்கு சிறுநீர் சிவப்பு வண்ணத்தில் வெளியேறும். சிலருக்கு, சிறுநீர் பிரியும்போது எரிச்சல், குத்தல் போன்ற சிரமங்கள் இருக்கும். உடம்பு சூடாகிவிட்டது, எண்ணெய் தேய்த்துக் குளித்தால் போதுமானது என்று எண்ணி, அசட்டையாக இருக்கக்கூடாது.

சிலரது சிறுநீரில் சிறுசிறு கற்கள் போல் ஒருபொருள் வெளியேறும். இப்படி ஏற்பட்டால் உடனே சிறுநீரக நோய்க்குரிய மருத்துவரை அணுக வேண்டும். இரத்தக் கொதிப்பு நோய் உள்ளவர்களுக்கும் சிறுநீரக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவர்கள் அடிக்கடி மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும்நிலை இருக்கிறது. அவர்களும் அடிக்கடி மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

சிலருக்கு செருப்புக் கடியின் காரணமாக காலிலே புண் ஏற்பட்டு, சில நாட்களில் சீழ் வரும். இந்தப் புண்ணும் ஒருவருக்கு சிறுநீரக நோய் வருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தலாம். அதனால் அசட்டை செய்யாமல் உடனடியாக மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

சிலருக்கு, கைகால்களில் சொறிசிரங்கு வரும். சிரங்குதானே என்று மெத்தனமாக இருக்கக் கூடாது. சில தினங்களில் சாதாரண சொறி சிரங்கே சிலருக்குச் சிறுநீரக நோயை ஏற்படுத்த



வாய்ப்புள்ளது. எனவே மருத்துவரை உடனடியாக அணுக வேண்டும்.

சிலருக்குத் தொண்டையில் நோய்த் தொற்று ஏற்படும். சில நேரங்களில் தொண்டைப் புண்ணும் சிறுநீரக நோயை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. சிலருக்குக் கல்லீரலில் நோய் வரும். அதுவும் சிலருக்கு, சிறுநீரக நோயை ஏற்படுத்தக்கூடும். அதனால் இதுபோன்ற நோய்கள் வரும்போது முன்னெச்சரிக்கையாக மருத்துவர்களிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

கிராமங்களில் சிறுவர்களுக்கு உடல்முழுவதும் வீக்கம் ஏற்படும். இதைச் சுரைப் பனை என்று சொல்வார்கள். இது சிறுநீரக நோயின் அறிகுறியாகும்.

சிறுகுழந்தைகள் சரியான எலும்பு வளர்ச்சி இல்லாமல் இருந்தாலோ, கை கால்கள் வளைந்து போயிருந்தாலோ அதற்கும் சிறுநீரக பாதிப்பு காரணமாக இருக்கலாம்.

*சிலவகைக் கிருமிகளாலும் சிறுநீரக நோய் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறதே!*

---

**சிறுநீரக நோய் குறித்தும், சென்னை பொது மருத்துவமனையில் சிறுநீரக நோய் இயல் பிரிவு (NEPHROLOGY) ஆற்றிவரும் மருத்துவ சேவை குறித்தும், சிறுநீரக நோய் இயல் சிகிச்சைப் பிரிவின் தலைவர் டாக்டர் எம்.ஏ. முத்துசேதுபதி அவர்கள் அளித்த பேட்டிக் கட்டுரை.**

---

சென்னை போன்ற சில பெரிய நகரங்களில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் கடுமையான மழை பெய்வதுண்டு. மழைநீர், பற்பல இடங்களில் தேங்கிக் கிடக்கும். அந்நீரில் எலி, பெருச்சாளி போன்றவற்றின் சிறுநீர் கலந்துவிடுவதுண்டு. அவற்றின் சிறுநீரில் லெப்டோஸ்பிரோசிஸ் (LEPTOSPIROSIS) என்னும் ஒருவகைப் பூச்சி இருக்கும். தேங்கிக் கிடக்கும் நீரில் அந்தப் பூச்சி கலந்து, நடந்து செல்வோரின் கால்களின் வழியாக உடலுக்குள் நுழைந்து, கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றை ஆக்ரமித்துக் கொள்வதால் அந்த உறுப்புகள் பாதிப்படைகின்றன. இந்த வகையில் ஆண்டுக்கு 40 பேர் அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

*சிறுநீரக நோய்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பொதுமக்களிடம் அதிகம் காணப்படவில்லை. தற்காலத்தில் அதிகம் காணப்படுகிறதே காரணம் என்ன?*

திடீரென்று சிறுநீரக நோய் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடவில்லை. இது காலரா போன்ற தொத்துநோய் அல்ல, பரவுவதற்கு! ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நோய் பற்றிச் சரியாக அறிந்திருக்கவில்லை. ஒருவருக்குச் சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை, தற்போது மருத்துவர்கள் எளிதில் கண்டுபிடித்து விடுகிறார்கள் அதற்குரிய கருவிகள் எல்லாம் மிகுந்த அளவில் உருவாக்கப்பட்டுள்ளன.

*சிறுநீரக வியாதிகள் குழந்தைப் பருவத்தினருக்கு அதிக அளவில் ஏற்படுகிறதா, வயது வந்தவர்களுக்கு அதிகம் ஏற்படுகிறதா?*

குழந்தைகளுக்கு அதிகம் ஏற்படுகிறது, பெரியவர்களுக்கு அதிகம் ஏற்படுகிறது என்றெல்லாம் கிடையாது. புதிதாகப் பிறந்த குழந்தைக்குக்கூட சிறுநீரக நோய் வருகிறது. பிறக்காத ஒரு குழந்தைக்குக் கூட அதாவது கருவில் உள்ள குழந்தைக்குக்கூட சிறுநீரக பாதிப்பு இருந்ததைக் கண்டுபிடித்தோம். கருவுற்ற தாயின் வயிற்றை ஸ்கேன் செய்து பார்த்த போது, உள்ளே குழந்தையின் சிறுநீர்ப் பாதையில் அடைப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது உடனே உரிய சிகிச்சை அளித்தோம். அந்தக் குழந்தை நல்ல முறையிலே பிறந்து இன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

*சோற்றில் கிடக்கின்ற சிறுசிறு கற்களை விழுங்க நேர்வதால் அவை சிறுநீரகத்திற்குள் சென்று சிக்கலை உருவாக்குகின்றன என்ற கருத்து மக்களிடையே நிலவி வருகிறதே, அது சரியானதுதானா?*

அது தவறான கொள்கையாகும். இன்னும் சொல்லப்போனால் அது பொய்யான தகவல் என்றே சொல்ல வேண்டும்.

*ஒருவரின் சிறுநீரகத்தில் கல் இருக்கிறது என்று டாக்டர்கள் கண்டுபிடித்துக் கூறுகிறார்களே, அதன் பொருள் என்ன?*

சிறுநீரில் கால்சியம் ஆக்சிலேட், யூரிக் ஆசிட் என்ற இரு அமிலங்கள் உள்ளன. ஆக்சிலேட் தண்ணீரில் கரைவதில்லை. அந்த ஆக்சிலேட்டின் அளவு அதிகமாகிவிடும்போது அது அப்படியே வீழ்படிவாகத் தங்கி விடுகிறது. இது நாளடைவில் சேர்ந்து, கல்போல் ஆகிவிடுகிறது. சிறுநீரகத்தின் செயலுக்கு இடையூறாக அமைந்து, இறுதியில் உயிருக்கே உலை வைத்துவிடுகிறது. இந்த நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு, ஒருவர் தண்ணீர் நிறைய அருந்த வேண்டும். நாள் ஒன்றிற்குக் குறைந்தது 2 லிட்டர் தண்ணீராவது உட்கொள்ள வேண்டும்.

*சிறுநீரகத்தில் உருவாகும் கல்லை அகற்றுவதற்குரிய வழிமுறை யாது?*

சிறுநீரகத்தில் கல் இருக்கிறது என்று தெரிந்தவுடன் அதனைக் கரைப்பதற்குரிய மாத்திரை. மருந்து ஆகியவற்றை உட்கொள்ள வேண்டும். மருந்து வகைகளினால் பயன்கிட்டவில்லை என்னும் நிலை ஏற்படுமானால், அறுவைச் சிகிச்சை செய்து கல்லை அகற்றலாம். முன்பெல்லாம் அறுவைச் சிகிச்சை ஒன்றினால்தான் முடியும் என்ற நிலை இருந்தது. நவீன யுகத்தில் இதற்கும் எளிய வழி கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. அந்தச் சிகிச்சை முறை ESWL முறை என்று சொல்லப்படுகிறது.



**சிறுநீரக நோயியல் மருத்துவர் டாக்டர் முத்து சேதுபதி பேட்டி**

*ESWL முறை என்றால் என்ன?*

ஜெர்மனியில் நெட்பிளே என்னும் மருத்துவ அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்ட சிகிச்சை முறை இது. சிறுநீரகத்தில் கல் இருக்கும் இடத்தைச் சரியானபடி தெரிந்துகொண்டு இரு முனைகளிலும் இருந்து அதிர்வு அலைகளை (Shock Wave) உருவாக்கி, இரண்டையும் ஒரு கோணத்தில் இணையச் செய்து, ஒரு குறிப்பிட்ட ஆற்றலுடன் கல்லின் மீது செலுத்தினால் அந்தக் கல் தூளாகி விடும். பின்னர் அந்தத் தூள் சிறுநீரின் வழியே வெளிவந்து விடும். இந்தச் சிகிச்சை முறையின் மூலம் அறுவைச் சிகிச்சை தவிர்க்கப்படுகிறது. உடலுக்கு வெளியில் இருந்தபடியே இந்த அதிர்வு அலைகள் பாய்ச்சப்படுகின்றன. இதய நோயாளிகள், முதியவர்கள் போன்றோருக்கு இந்தச் சிகிச்சை முறை மிகவும் அனுகூலமானது. இவர்களைப் பொறுத்தவரையில் இந்தச் சிகிச்சை முறை ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம்.

Ultra Sound முறை என்ற ஒருவகைச் சிகிச்சை முறையும் உள்ளது. காதுக்குக் கேட்காத ஒருவகை ஒலிக்கதிரைப் பயன்படுத்தும் முறை இது. இதில் செலவு குறைவு. அதைப்போலவே இதனால் விளையும் பலனும் குறைவு.

*வாழைத்தண்டு சாப்பிட்டு வந்தால் சிறுநீரகத்தில் கல் உருவாகாது என்றும், பார்லி நீர் அருந்தினால் சிறுநீர் எளிதில் பிரியும் என்றும் பொதுமக்களிடம் ஒரு கருத்து உலவி வருகிறதே அது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானா?*

இது ஒரு வகையான நம்பிக்கைதானே தவிர, உண்மையல்ல. வாழைத்தண்டில் நீர்ச்சத்து அதிகம் இருக்கிறது. அதுபோலவே பார்லியைக் கஞ்சியாக்கி அருந்தும்போது அதிலும் நீர்ச் சத்து அதிகம் கிடைக்கிறது. தண்ணீர் அதிகம் அருந்தினால் சிறுநீரகத்தில் கல் உருவாகாது என்பது மருத்துவ உண்மை. வெறும் தண்ணீரையே அதிகம் அருந்துவதற்கு அலுப்புத் தட்டலாம். அலுப்பை மாற்று

வதற்கு பார்லி நீர் சாப்பிடு, வாழைத்தண்டு சாப்பிடு என்று சொல்லியிருக்கலாம். பார்லி கஞ்சிக்கு எனத் தனியான சக்தி இல்லை. அதில் சேர்ந்துள்ள தண்ணீருக்குத்தான் சக்தி உண்டு.

*பொதுவாக, நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் சித்தா, யுனானி, ஆயுர்வேதம் என நமது நாட்டில் பலவகை மருத்துவ முறைகள் உள்ளன. அலோபதி மருத்துவ முறையும் நடைமுறையில் உள்ளது. காமாலை போன்ற நோய்களுக்குச் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் கீழ்வாநெல்லி மூலிகையை அலோபதியில் மாத்திரையாகவும், பாகாகவும் (SYRUP) பயன்படுத்துகிறார்கள். அதுபோல சித்தமருத்துவத்தில் பயன்படுத்தப்படும் எந்த மூலிகையாவது அலோபதி முறையில் சிறுநீரக நோய்ச் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறதா?*

அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக தங்க பஸ்பம் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என்று எண்ணிச் சிலர் சாப்பிடுகிறார்கள். இது தவறான ஒரு கொள்கையாகும். தங்க பஸ்பமே சிறுநீரக நோயை ஏற்படுத்தக்கூடும். பொதுவாக தங்கம், பாதரசம் போன்ற கடினமான மூலகங்களைப் பயன்படுத்தி மருந்து தயாரிக்கும் சித்த மருத்துவர்களே சிறுநீரக நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, சித்த, யுனானி, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் சிறுநீரக நோய்க்கு மருந்து ஏதும் இருப்பதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

*சிறுநீரக நோய் ஒருவருக்கு உள்ளது என்பதைச் சோதனை முறையில் எவ்வாறு அறிந்து கொள்ள இயலும்?*

இரத்தத்திலிருந்து கழிவுப் பொருள்களை அகற்றுவது சிறுநீரகங்களின் வேலை. வெளியேறும் பொருள்களில் புரதப்பொருளும் ஒன்று. இதனை Albumin என்றும் சொல்வார்கள். சாதாரணமாக சிறுநீரகத்திலிருந்து 150 மில்லி கிராம் புரதம்தான் வெளியேறும். இதன் அளவு அதிகரித்தால், அதாவது சிறுநீரகம் அதிக அளவு புரதப் பொருளை வெளியேற்றத் தொடங்கினால், கால்



பெரிடோனியல் டயாலசிஸ்

கைகள் வீங்க ஆரம்பிக்கும். இது சிறுநீரக நோயின் அடையாளம் ஆகும்.

மனிதனின் இரத்தத்தில் அதிகபட்சம் 40 மில்லிகிராம் யூரியா இருக்க வேண்டும். அதன் அளவு அதிகமானால், அவர் சிறுநீரக நோய் உள்ளவர் எனத் தெரிந்து கொள்ளலாம்.

*செயற்கைச் சிறுநீரகம் என்று சொல்லப்படுகிறதே அது என்ன? அதன் பணிகள் யாவை?*

ஹேமோ டயலைசெர்(Haemo Dialyser) எனப்படும் சவ்வு வழி இரத்தப் பிரிவுக் கருவியைச் செயற்கைச் சிறுநீரகம் என்று சுருக்கமாகச் சொல்கிறோம். ஒரு மனிதருக்கு 2 சிறுநீரகங்கள் உள்ளன. அவை, நாளொன்றிற்கு 24 மணிநேரமும் கடுமையாக உழைக்கின்றன. இரத்தத்திலிருந்து கழிவுப் பொருள்களை அகற்றுகின்றன. உடலின் உட்புற இரசாயன அமைப்பை நன்கு கவனிக்கின்றன. உடலின் நீர் அளவைச் சரிசெய்து இரத்த அழுத்தத்தைச் சீராக்குகின்றன. சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு உதவி புரிகின்றன.

ஒரு மனிதரின் 2 சிறுநீரகங்களும் பழுதுபட்டு, அவை செயலிழந்து விட்டால் உயிர்வாழ முடியாது. அவரை வாழ வைப்பதற்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்த வேண்டும். மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படும்வரை, சிறுநீரகத்தின் பணியை இந்தச் செயற்கைச் சிறுநீரகம் செய்து வருகிறது. இந்தச் செயலை டயாலசிஸ் என்கிறோம்.

*டயாலசிஸ் முறை குறித்து விளக்குங்கள்*

சிறுநீரகம், இரத்தத்திலிருந்து பல்வேறு கழிவுப் பொருள்களைப் பிரித்து அனுப்புகிறது. அவை செயலிழந்துவிடுமானால், கழிவுப்பொருள்களை சரிவரப் பிரிக்க முடியாது போய்விடுகிறது. அவை நஞ்சுப் பொருளாகி, உடலுக்குக் கேடு விளைவித்து உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது. அதனால் டயலைசர் கருவியின் உதவியால், ஒரு மனிதரின் இரத்தம் ஒரு ரப்பர்க் குழாயின் மூலம் கருவியில் உள்ள ஒரு குழாய் போன்ற கொள்கலனுக்குள் செலுத்தப்படுகிறது. ஒருவிதக் கரைசலின் உதவியால் இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு, கழிவுப் பொருள்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒரு ரப்பர்க் குழாயின் மூலம் வெளியே அனுப்பப் படுகின்றன. சுத்தம் செய்யப்பட்ட இரத்தம் மற்றொரு சிறு ரப்பர்க்குழாயின் மூலம் உடலுக்குள் திருப்பிச் செலுத்தப்படுகிறது.

*இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டவர்கள் இந்த டயலைசர் கருவி மூலமே காலம் தள்ள முடியாதா? மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படுவது அவசியம்தானா?*

டயாலசிஸ் முறை மூலம் சிலர் பத்தாண்டுக் காலம் கூட, காலம் தள்ளி வருகிறார்கள். உடல் வலுவைப் பொறுத்து, இது பல்லாண்டுக் காலம் நடைபெற முடிகிறது. தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டியுள்ளது. அதனால் மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக் கொள்வதுதான் நல்லது. என்றாலும் திடீரென்று மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முடியாது. அதனை மேற்கொள்வதற்கு முன்னர், நோயாளி உயிர் வாழ்வதற்கு, தாற்காலிகமாக டயாலசிஸ் செய்துதான் ஆக வேண்டும். டயாலசிஸ் முறையின் மூலம் அவர் பக்குவப்படுத்தப்பட வேண்டும். ஒரு வாரத்திற்கு 3 முறை டயாலசிஸ் செய்ய வேண்டும். ஒரு தடவைக்கு 4 மணிநேரம் ஆகும்.

*டயாலசிஸ் முறையில் இரண்டு வகை உள்ளதாகச் சொல்கிறார்களே!*

நமது நாட்டில் ஹேமோ டயாலசிஸ் (Hameo Dialysis), பெரிடோனியல் டயாலசிஸ் (Peritoneal Dialysis) என இருவகை உள்ளன.

பெரிடோனியல் டயாலசிஸ் மிகவும் எளிய முறையில் இயக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, இதில் சிக்கலான தொழில் நுணுக்கம் ஏதும் கிடையாது. மிக அதிக அளவு எண்ணிக்கையில் இதன் மூலம் சிகிச்சை தர இயலும்.

ஹேமோ டயாலசிஸ் முறையில் தொழில் நுணுக்கம் அதிகம். இதனை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் பயிற்சிபெற்ற மருத்துவ ஊழியர்கள் தேவை. இந்த இயந்திரத்தில் பயன்படுத்தத் தண்ணீரும் மின்சக்தியும் இடைவிடாது கிடைக்க வேண்டும். தண்ணீர் பயன்படுத்தும் கருவி தேவை. கண்காணிப்பதற்கு இரத்தக் குழாய் தொடர்பான கல்வி பயின்றுள்ள, அனுபவமுள்ள, அறுவைச் சிகிச்சை மருத்துவரும் தேவை. ஒருமுறை இதன் மூலம் சிகிச்சை பெற ரூ.300 ஆகிறது. ஒரு மாதத்திற்கு, குறைந்தது ரூ.4000 செலவாகும்.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவது என்றால் என்ன?*

மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதென்பது, ஒருவரின் இரு சிறுநீரகங்களும் பழுதுபட்டுப் போனால், அடுத்தவரிடமிருந்து ஒரு சிறுநீரகத்தை அறுவைச் சிகிச்சையின் மூலம் பெற்று, நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அறுவைச் சிகிச்சையின் மூலம் பொருத்துவதாகும்.

பொதுவாக ஒரு மனிதர் ஒரே ஒரு சிறுநீரகத்துடனேயே உயிர்வாழ முடியும் என்பதை மருத்துவ உலகம் உணர்ந்திருக்கிறது. ஒரு சிலர் பிறவியிலேயே ஒரே ஒரு சிறுநீரகத்துடன் பிறந்துள்ளார்கள். பத்து இலட்சம் பேருக்கு ஒருவர் இந்த விதத்தில் பிறக்கிறார்கள் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சை முறை எப்போது அறிமுகம் செய்யப்பட்டது?*

1954-இல் பாரிசில் உயர்ந்த மாடிக் கட்டடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் தவறிக் கீழே விழுந்து விட்டார். விழுந்த வேகத்தில் அவரது சிறுநீரகம் பலமாக அடிபட்டுப் பழுதடைந்து விட்டது. அந்தச் சிறுநீரகத்தை அகற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அந்த முயற்சியில் ஈடுபட்டபோதுதான் அவர் ஒரே ஒரு சிறுநீரகத்துடன்- பிறந்தவர் என்னும் உண்மை தெரிய



ஹேமோ டயாலசிஸ்

வந்தது. அதுமட்டுமல்ல ஒருவர் ஒரே ஒரு சிறுநீரகத்துடன் உயிர்வாழ முடியும் என்ற உண்மையும் புலப்பட்டது.

அந்த நபரின் தாயாரே, தனது சிறுநீரகங்களில் ஒன்றைத் தன் மகனுக்குத் தானமாக வழங்கினார். மாற்றுச் சிறுநீரகம் வெற்றிகரமாகப் பொருத்தப் பட்டது. 1954-இல் இந்த அதிசயம் நடைபெற்றது. அதே காலகட்டத்தில் அமெரிக்காவிலும் மாற்றுச் சிறுநீரகம் வெற்றிகரமாகப் பொருத்தப் பட்டது. இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே ரஷ்ய நாட்டில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் முயற்சி நடைபெற்றுள்ளது. எனினும் அது வெற்றி பெறவில்லை. பிரான்சிலும், அமெரிக்காவிலும் நடைபெற்ற மாற்றுச் சிறுநீரகப் பொருத்துதல்தான் முதன்முதலாக வெற்றிகரமாக அமைந்தவை என்று குறிப்பிடலாம்.

இந்தியாவைப் பொறுத்த அளவில் 1968, 1970 ஆண்டுகளில் பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகத்தில் முதன்முறையாக வெற்றிகரமான முறையில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனையில் 1971-இல், முதன்முதலாக வெற்றிகரமான முறையில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்துதல் நடைபெற்றுள்ளது. நமது அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் 1987 ஜூலையில் இருந்துதான் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் முயற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதில் கையாளப் பட்டுவரும் விதிமுறைகள் யாவை?*

உயிரோடிருப்பவரிடமிருந்துதான் சிறுநீரகம் தானம் பெறப்படுகிறது.

சிறுநீரகம், தானம் அளிப்பவரின் இரத்த வகை- சிறுநீரகம் பொருத்தப்படுபவரின் இரத்த வகை இரண்டும் ஒரே பிரிவைச் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

சிறுநீரகம் வழங்குகின்றவருக்கு அதன் காரணமாக உடல் நலத்திற்கு பாதிப்போ, தொல்லையோ

வராது என்பது மருத்துவ ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

கூடியவரை உறவு முறையைச் சேர்ந்தவர்களிடமிருந்து அதாவது தந்தை, தாய், அண்ணன், தம்பி ஆகியோரிடமிருந்து சிறுநீரக தானம் பெறுவது தான் நல்லது. இத்தகைய உறவினர்களின்மூலம் சிறுநீரகம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் பெரியப்பா, பெரியம்மா என்ற வகையில் இரண்டாம் நிலை உறவினர்களிடமிருந்து பெறலாம்.

18-லிருந்து 55-வயதுள்ளவர்களிடமிருந்து சிறுநீரகம் தானம் பெறவேண்டும்.

*மரணம் எய்தியவர்களின் சிறுநீரகத்தை எடுத்து, பயன்படுத்தலாமா?*

வெளிநாடுகளில் பயன்படுத்துகிறார்கள். மரணம் அடைபவர்களின் உடலிலிருந்து - அவர்கள் மரணம் அடைந்து ஒருமணி நேரத்திற்



குள் சிறுநீரகம் எடுக்கப்பட்டு, அடுத்தவருக்குப் பொருத்தப்படுகிறது.

மரணம் எய்தியவர்களிடமிருந்து கண்கள் எடுக்கப்பட்டு, பார்வை இழந்தவர்களுக்குப்பொருத்தப் படுவது போலத்தான் இதுவும்!

ஆனால், நமது நாட்டில் மரணம் எய்தியவரின் சிறுநீரகத்தை எடுத்துப் பயன்படுத்துவது வழக்கத்திற்கு வரவில்லை. எதிர்காலத்தில் இந்த வழக்கம் உலக முழுதும் பரவினால் சமுதாயத்துக்கு அது நல்ல பலனை அளிக்கும்.

உயிரோடு இருப்பவர்கள் தனது சிறுநீரகத்தில் ஒன்றினை மற்றொருவருக்கு வழங்க எளிதில் முன்வருவதில்லை. அத்துடன் உறவினர்களில் ஒரே வகை ரத்தம் அமைவதும் அரிது. மேலும் நாம் குடும்ப நலத்திட்டத்தை மேற்கொள்வதன் காரணமாக - குடும்பங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அளவாகி விடுகிறது.

ஆகவே இதுபோன்ற நிலைமைகளில் எதிர் காலத்தில் - மரணம் எய்தியவர்களின் சிறுநீரகங்களை, அடுத்தவர்களுக்குப் பயன்படுத்தும் சூழ்நிலை உருவாக வேண்டும். சமுதாயம் இந்த ஒப்பற்ற பணிக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். பிறருக்கு உதவுவதே பெருந்தொண்டு என்பதை நமது மக்கள் உணர வேண்டும்.

*நடுத்தர வயதுள்ள (30) இளைஞருக்கு, அவரை விட வயது அதிகமானவரின் (50) சிறுநீரகத்தைப் பொருத்துவது சரியாக இருக்குமா? அதிக வளர்ச்சியுள்ளதாக இருக்காதா?*

சிறுநீரகத்தைப் பொறுத்தவரையில் நடுத்தர வயதுடையவருக்கு என்ன வளர்ச்சி உள்ளதோ அதே வளர்ச்சிதான் வயதுவந்தவர்களுக்கும் இருக்கும். அப்படி ஒன்றும் வித்தியாசம் இருப்பதில்லை. அப்படியே ஓரிரு இரத்தக்குழாய்கள் பெரியதாக இருக்கலாம். அவற்றை அறுவைச் சிகிச்சையின் மூலம் நீக்கிச் சரிசெய்து விடுவோம்.

*மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட பின்னர் கவனிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் யாவை?*

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட பின்னர் சரியான பராமரிப்பு தேவைப்படுகிறது. அந்த நபர் 2 அல்லது 3 வாரங்கள் வரை குளிர்சாதன வசதி கொண்ட அறையிலே வைக்கப்படுகிறார்.

பொதுவாக எந்த ஒரு புதிய கொள்கையையும் சமூகமோ, சமுதாயமோ உடனடியாக ஏற்றுக் கொள்வதில்லை அல்லவா? முதலில் எதிர்ப்பதும், பின்னர் இணங்குவதும் வழக்கமாக இருந்து வருகிறது. அது போலவே மாற்றுச் சிறுநீரகத்தை உடல் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். அதனைக் கண்டறிந்து அதற்குரிய மருந்துகளை நோயாளிக்குத் தரவேண்டும். வேறு ஏதேனும் சிக்கல் உள்ளதா, கிருமிகளின் தொத்து ஏற்பட்டுள்ளதா என்பனவற்றையும் சோதித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மர்ற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டவர் எந்த விதமான சிக்கலுக்கும் ஆளாகவில்லை என்று தெரிந்த பின்னர் 3 வாரங்கள் கழித்து, புற நோயாளர் பிரிவுக்கு அனுப்பப்படுகிறார்.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டவர் தொடர்ந்து, உரிய மருந்துகள் சாப்பிட்டு வர வேண்டும். மருந்துச்செலவு மாதத்திற்குக் குறைந்தது ரூ.300 ஆகும். இந்த மருந்துகள் நமது நாட்டில் தயாரிக்கப்படுவதில்லை. ஸ்விட்ஜர்லாந்தில்தான் தயாரிக்கப்படுகின்றது. நாம் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து இறக்குமதி செய்கிறோம்.

*சிறுநீரக நோய்கள் வராமல் பாதுகாத்துக் கொள்வதற்கு வழிமுறைகள் உண்டா?*

அதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றை ஒவ்வொருவரும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதரு ஒருநாளைக்கு - அதிலும் குறிப்பாக வெயில்காலத்தில் 2 லிட்டர் தண்ணீராவது உட்கொள்ள வேண்டும்.

நாட்டு மருந்துகள் சாப்பிடுவோர், தங்கம், வெள்ளி, மெர்க்குரி போன்ற கடினமான உலோகப் பொருள்கள் கலந்திருக்கும் மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

ஏதாவது நோய் கண்டால் நமக்கே எல்லாம் தெரிந்ததாக எண்ணிக்கொண்டு, தனக்குத்தானே டாக்டர் ஆக மாறி, மருந்துகளைத் தாங்களே தேர்ந்தெடுத்து உட்கொள்ளுதல் கூடாது. (மருத்துவரின் அறிவுரைப்படிதான் நடந்து கொள்ள வேண்டும்).

சாதாரணமாக சளி போன்றவை இருந்து, தொண்டை அடைப்பு ஏற்பட்டால் அதை மெத்தனமாக எண்ணக்கூடாது. உடனே மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

இரத்தக் கொதிப்பு நோய் ஏற்பட்டால் அதனை அசட்டை செய்யக்கூடாது. சிறுநீர், இரத்தம் ஆகியவற்றை உடனடியாகச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

கை, கால்களில் புண் ஏற்பட்டால் அதை எளிதாக எண்ணி ஏனோ தானோ என்று இருந்து விடக் கூடாது. உடனே டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்.

கணுக்கால், பாதம் ஆகியவற்றில் வீக்கம் ஏற்பட்டால் அதனை அசட்டை செய்யாமல் டாக்டர்களிடம் காண்பித்துச் சிகிச்சை பெறவேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்குச் சிறுநீரகம் பாதிப்பதற்கு வாய்ப்பு உள்ளதால் அவர்களும் அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இரத்தத்திலிருந்து வெளியேறும் புரதப் பொருளின் (Albumin) அளவு அதிகம் ஆகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

*நமது பொது மருத்துவமனையில், சிறுநீரக இயல் பிரிவில் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை குறித்துச் சொல்லுங்கள்*

நமது பொது மருத்துவமனையில் சிறுநீரக இயல் பிரிவில் வாரத்திற்கு 4 நாட்கள் (திங்கள், புதன், வியாழன், வெள்ளி) புறநோயாளிகளைப் பரிசோதித்து வருகிறோம். புதன்கிழமை ஒருநாள் மட்டும் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டவர்கள் உடல் நலனைப் பரிசோதனை செய்கிறோம்.

நமது பொது மருத்துவமனையில் ஹேமோ டயாலசிஸ் எந்திரங்கள் 8 உள்ளன. ஒரு இயந்திரத்திற்கு 4 பேர் வீதம் ஒருநாளைக்கு 18-24 பேருக்கு டயாலசிஸ் சிகிச்சை செய்ய முடியும். ஒரு வாரத்திற்கு 5புதிய நோயாளிகள் வீதம் சிகிச்சைக்கு வருகிறார்கள். மொத்தத்தில் ஓர் ஆண்டிற்கு 300 பேர் டயாலசிஸ் சிகிச்சைக்காகப் பொது மருத்துவமனையை நாடி வருகிறார்கள்.

சென்ற 1989-ஆம் ஆண்டில் புறநோயாளர் பிரிவில் 9157 பேர்களும், தங்கிச் சிகிச்சை பெறும்பிரிவில் 2407 பேர்களும் சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரிடோனியல் டயாலசிஸ் மூலம் 818 பேர்களும், ஹேமோ டயாலசிஸ்



**மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. அதியமான்.**

*சென்னை பொது மருத்துவ மனையில் சேர்ந்து, மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. அதியமான் தனது அனுபவத்தைக் கூறுகிறார்:*

*"திடீரென மிகவும் மோசமான உடல் நிலையில் நான் சென்னை பொது மருத்துவ மனையில் சேர்ந்தேன். எனது சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்து விட்டன என்று டாக்டர்கள் தெரிவித்தபோது நான் பெரும் அதிர்ச்சிக்கு ஆளானேன்.*

*சிறுநீரக நோய்ப் பிரிவு தலைமை டாக்டர் முத்து சேதுபதி அவர்கள் அளித்த தைரியத்தினாலும், சிகிச்சையினாலும் நான் மறுவாழ்வு பெற்றேன். மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டது. நல்ல முறையில் இந்த மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டேன்.*

*நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், எனக்குத் தேவையான உதவிகளை எல்லாம் செய்தார்கள், செய்து வருகிறார்கள். அவர்களது தாய் உள்ளம், எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.*

*சிறுநீரகத்தில் ஏற்படும் கல், கட்டி போன்றவற்றை நீக்குவதற்காக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் நபர்களுக்கு ரூ.5,000 வரை நிதி உதவி அளித்து வருகிறார்கள். இதுவரை 27 பேருக்கு இந்த நிதி உதவி கிடைத்திருக்கிறது. இது போன்ற அறச் செயலில் வேறு எந்த மாநிலத்து முதல்வரும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.*

*இந்த நிதி உதவி குறித்து ஒரு கருத்து எனக்குத் தோன்றுகிறது. நிதி உதவித் தொகை நோயாளிகளுக்கு நேரடியாகக் கொடுக்கப்படுவதால், அந்தத் தொகையை கையில் வைத்துக் கொண்டு, அவர்கள் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதில் ஈடுபடுகிறார்கள். அரசு அளிக்கும் 5 ஆயிரம் ரூபாயை அங்கு செலவு செய்து விட்டு, மேற்கொண்டு சிகிச்சைக்குப் பணமில்லாமல், பின்னர் அரசு மருத்துவ மனையையே நாடி வருகிறார்கள்.*

*அதனால் அரசு, நிதி உதவித் தொகையை அரசாங்க மருத்துவ மனைக்கு வழங்கி, அங்கே சென்று சிகிச்சை பெறும்படி நோயாளிக்குத் தகவல் தரலாம். இப்படிச் செய்தால் அரசு வழங்கும் நிதி அரசு மருத்துவமனைக்கே போய்ச் சேர்வதுடன், நோயாளிகள் முதலிலிருந்தே அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் வாய்ப்பும் ஏற்படும்."*

மூலம் 3502 பேர்களும் டயாலசிஸ் செய்யப் பட்டுள்ளனர். 41 பேர்களுக்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டுள்ளது. 1987-90 முதல் 125 பேர்களுக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

நமது அரசு மருத்துவமனையைப் பொறுத்த அளவில் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு நோய்க் கண்டுபிடிப்பு, டயாலசிஸ் சிகிச்சை, மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சை - அதன் பின்னர் வழங்கப்படும் மருந்து அனைத்தும் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவ மனைகளில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சைக்காக ரூ.80,000-லிருந்து 1 இலட்சம் வரை வசூல் செய்கிறார்கள். அவ்வளவு விலை உயர்ந்த சிகிச்சையும் நமது பொது மருத்துவமனை யில் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. இந்தியா விலேயே மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை நமது தமிழக அரசு மருத்துவமனைகளில் தான் இலவசமாகச் செய்யப்படுகிறது.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சையில், உறவுமுறை அல்லாத தனிப்பட்டவர்களிடமிருந்து சிறுநீரக தானம் பெறுவதை நமது பொது மருத்துவ மனையில் ஆதரிப்பதில்லை. தனியார் மருத்துவ மனைகள் அதை ஏற்றுக் கொள்கின்றன. அதில் வியாபார நோக்கங்கள் சில சமயத்தில் தலை காட்டுகின்றன.

பொது மருத்துவமனையில் சிறுநீரக அறுவைச் சிகிச்சையை நல்லமுறையில் மேற்கொள்வதற்காக உரிய கருவிகள் வாங்குவதற்கு நமது தமிழக முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு (1989) தமது பிறந்த நாளையொட்டி ரூ.1 கோடி நிதி அளித் தார்.

அத்துடன், சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக நபர் ஒருவருக்கு ரூ.5,000 நிதியுதவி செய்து வருகிறார். இதனால் ஏழை-எளிய மக்கள் பலன் பெறுகிறார்கள்.

நமது பொது மருத்துவமனையில் இரத்தம் முதலியவற்றைச் சோதித்துப் பார்ப்பதற்கு ஆய்வுக் கூடங்கள் உள்ளன. என்றாலும், சிறுநீரக நோய் இயல் பகுதியில் அடிக்கடி நோயாளிகளின்இரத்தத் தைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டிய அவ சியம் ஏற்படுவதால், சிறுநீரக நோயியல் பகுதிக் கென்றே தனியாக ஆய்வுக்கூடம் செயல்பட்டு வருகிறது.

நமது அரசினர் பொது மருத்துவமனையில் சிறுநீரக இயல் பிரிவில் உள்ள மருத்துவர்களும், செவிலியர்களும் மிகுந்த கடமையுணர்வுடனும் ஈடுபாட்டுடனும் பணியாற்றி வருகிறார்கள். என்றாலும் வேலைப்பளு அதிகரிப்பதால், அதற்கு ஏற்றவகையிலே ஊழியர்களும் அதிக எண்ணிக்கை யில் தேவைப்படுகிறார்கள். தற்போது இந்த வகை யில், சிறுநீரக இயல் பிரிவில் பற்றாக்குறை உள் ளது. இந்தக் குறையை நீக்குவதற்கு அரசு ஆவன செய்தால் பேருதவியாக இருக்கும் என்பதை இந்தச் சமயத்தில் குறிப்பிடுவது பொருத்தும் என எண்ணுகிறேன்.

—பேட்டி: தமிழ்ப்பித்தன்





## எழுத்தறிவு

எழுத்தறிவு இல்லாமலே, எல்லாச் செயல் களையும் சாதிப்பது என்பது முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். கல்வி ஒருவனு டைய அறிவைப் பெருக்கும். கூர்மையாக்கும், நற் செயல்களைச் செய்ய அவனைத் தூண்டும்.

கல்வியறிவு இல்லாவிடில் கோடிக்கணக்கான மக்களுக்குத் தம்மை அறியும் சக்தியே இல்லாது போய்விடும். தீங்கிழைக்காது இன்பம் பயக்கும் நூல்கள் பல உள்ளன. கல்வியறிவில்லாதவனுக் கும் விலங்கிற்கும் அதிக வேறுபாடு இல்லை எனக் கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதல்ல; உண்மையே.

## எழுத்தாளர்களுக்கு...

நமது இலக்கியங்களில் பெண்களை அளவுக்கு மீறி மேன்மைப்படுத்திப் பேசுகின்ற பகுதிகளும் உண்டென்று நான் கேள்விப்படுகிறேன். இப்படிப் போலி மேன்மை அளிப்பது தவறான போக்கா கும். எளிய கேள்வியொன்றை உங்களைக் கேட் கிறேன். பெண்களைப் பற்றி எழுத முயலும்போது எந்த நோக்கத்துடன் நீங்கள் அவர்களை எண்ணிப் பார்க்கிறீர்கள்? காகிதத்தில் பேனாவைக் கொண்டு எழுதத் தொடங்கும் முன் பெண்ணை உங்களு டைய பெற்ற தாயைப் போல எண்ணிக் கொள் ளுங்கள். அப்படி எண்ணினால், தாகத்தினால் தவிக்கும் பூமிக்கு எங்ஙனம் வானத்திலிருந்து மழை கிடைக்கின்றதோ, அதைப்போல உங்கள் எழுது கோலிலிருந்தும் மிகத் தூய இலக்கியம் பிறக்கும்.

## சத்தியம்

''சத்தியம்'' (உண்மை) என்னும் வார்த்தை ''சத்'' என்பதிலிருந்து வந்தது. 'சத்' என்னும் பதத்திற்கு 'இருத்தல்' என்பது பொருள். எனவே, சத்தியத்தைத் தவிர உண்மையில் வேறொன்றும் இல்லை என்பதும் புலப்படும்.

சத்தியமிருக்கும் இடத்தில் களங்கமற்ற அறிவும் இருக்கிறது. சத்தியமில்லாவிடத்து சுத்த ஞானம் கிடையாது.




### ஒரு குயிலின் கதை

**ஆசிரியர்:**
பின்னலூர் மு. விவேகானந்தன்

**வெளியீடு:**
பத்மா பதிப்பகம்
39, கே.ஆர். கோயில் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை 600 033

பக்கம்:108 விலை:ரூ.14

பாவேந்தர் பாரதிதாசன் அவர் களின் வாழ்க்கை வரலாறு பிஞ்சுக் குழந் தைகளும் புரிந்து கொள்ளும் வகையில் இந்நூலில் எழுதப்பட்டுள்ளது.

கட்டுரை வடிவிலோ, திறனாய்வு முறை யிலே இந்நூலைத் தீட்டாமல் தந்தை-மகன் உரையாடலின் வாயிலாக வடித்துத் தந்திருப்பது பாராட்டுக்குரியது. அரிய செய்திகள், பெரிய செய்திகள் அனைத்தும் மிக எளிய முறையில் இந்நூலில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நூலின் நடை நம்மைக் கவர்கிறது. இடையிடையே பாவேந்தரின் புகைப்படங்களும் இடம் பெற்று நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

— தமிழ்ப்பித்தன்

### மனக் குயிலின் மௌன கீதங்கள்

**ஆசிரியர்:** தென்னம்பட்டு ஏகாம்பரம்
**வெளியீடு:**
செல்வன் பதிப்பகம்,
19, முண்டகக் கண்ணியம்மன் கோயில்
4-வது தெரு, மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை:ரூ.14 பக்கம்:136

இனிக்கும் தேனடையில் 136 அறைகள் மட்டுமே இருந்தால் எப்படியிருக்கும்? அப்படியிருக்கிறது ஐந்து தொகுப்புகளின் கீழே 136 கவிதைகளைக் கொண்டதாகத் தொகுக்கப்பட்டுள்ள இந்த நூல். அழகு, அட்டையிலே மட்டுமல்ல- அச்சில் கவி தைகள் அமைக்கப்பட்டிருக்கும் பக்கங் களிலும் தலைப்புகளிலும்கூடப் பளிச்சிடு கிறது.

இனிய- இயல்பான நடையில் மரபுக் கவிதைகள்... அங்கொன்று இங்கொன் றாய்ப் புதுக்கவிதைகள்... இடையிடையே சந்தப் பாடல்கள் எல்லாம் உடைய இந் நூலுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள அணிந்துரையில், நூலாசிரியரைப் பற்றிக் குறிப்பிடுகையில்- 'தன் பாட்டுத் திறத்தால் நாட்டுக்குத் தன்னை அடையாளப்படுத்தி வருகிறார்' என்று குறிப்பிட்டிருக்கிறார். புலவர் கா.கோவிந்தன் அவர்கள் தனது அணிந் துரையில்- 'இவை தெவிட்டாத தேன் பா' என்கிறார்.

இந்த நூலின் நயம் தெரிவிக்க அவை போதாதோ! —'முடிகொண்டான்'

### பல்துறை அறிவியல் (4)

**ஆசிரியர்:** ஆனைவாரி ஆனந்தன்
**வெளியீடு:**
மணியம் பதிப்பகம்,
39, இரத்தின முதலித் தெரு,
குறிஞ்சிப்பாடி-607 302 (தெ.ஆ.மா.)

பக்கம்: 319 விலை ரூ.38

அறிவு வளர்ச்சிக்கு அறிவியலும் ஒரு பெரும் துணையாக விளங்குகின்றது. அறிவியல் பல அற்புதங்களைச் செய்து வரும் கால கட்டத்தில் நாம் இருக் கிறோம். அந்த அற்புதங்களைத் தெரிந்து கொள்ள இந்த நூல் வரிசை உதவுகிறது.

பல வண்ண விளக்கப் படங்களுடன், விலங்கியலைப் பற்றிக் கூறுகிறது இந் நூல். விலங்கினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் முதல், வன விலங்குகள் பாதுகாப்பு முடிய பலப்பல அறிவியல் செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

'பூமியில் உயிரினத் தோற்றமும் வளர்ச்சியும்' — விளக்க வண்ணப் படங்கள், இந்நூலுக்குச் சிறப்பைத் தருகின்றன. மாண்வர்க்கும் பயன்படும் மிகச் சிறந்த நூல்.

— பி.வி. கிரி

### அறிஞர்கள் கண்ட கற்பனை உலகம்

**ஆசிரியர்:** மனோஸ்
**வெளியீடு:**
சந்துரு பதிப்பகம்,
4, டாக்டர் நியமதுல்லா சாகிப்பு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

விலை:ரூ.10.00 பக்கம்:95

இது ஒரு அற்புதமான நூல், அமர இலக்கியங்கள் படைத்த அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாடு அல்லது உலகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தத்தமது காலநிலை, சூழ்நிலை களுக்கு ஏற்ப தமது இலக்கியங்களில் கற்பனை உலகங்களைப் படைத்து அதில் சஞ்சரித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

அந்தக் கற்பனை உலகங்களை இச் சிறு நூல் மிக அழகாக விவரித்து இருக் கிறது.

— என். குமாரசாமி

### சங்கே முழங்கு

**ஆசிரியர்:** கடலூர் மணிமாறன்
**வெளியீடு:**
விடியல் வெளியீட்டகம்
109, மேலைத் தெரு,
கிருட்டிணராயபுரம்-639 102.

விலை:ரூ.10 பக்கம்:104

நெஞ்சைத் தொடும் கவிதைத் தொகுப்பு.

தமிழ், தமிழ்நாடு, ஆசிரியர் மாணாக்கர், புலவர், எழுத்தாளர் பொழிவாளர், இதழாளர் என்று பல வேறு தலைப்புகளில் கவிதைகள் இதயத் தைத் தொடுகின்றன.

### ஒரு வாத்தியாரின் டைரி

**ஆசிரியர்:** ஆர்.எஸ். ஜேக்கப்
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
த.பெ.எண்: 501, பூங்கா நகர்,
சென்னை-600 003.

விலை:ரூ.9.00 பக்கம்:48

ஆசிரியர் தனது வகுப்பில் மாணவர் களுக்குப் பாடம் போதிக்கும்போது நிகழும் அனுபவங்களை எளிமையாய் நகைச்சுவை யோடு எழுதி இருக்கிறார். சம்பவங் களுக்கு ஏற்ப, வேதாகமத்திலும், திருக்குறள், பாரதியின் கவிதைகளிலிருந்தும் தக்க மேற்கோள்கள் சொல்லப்பட்டிருப்பது மேலும் சுவை கூட்டுகிறது.

### நீரிழிவுக்குத் தமிழ் மருந்துகள்

**ஆசிரியர்:** டாக்டர் திருமலை நடராசன்
**வெளியீடு:**
தமிழ்ச் செல்வி நிலையம்,
43, சித்திரைக்குளம் வடக்குத் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை:ரூ.9.00 பக்கம்:96

மிகக் கொடிய நோயான நீரிழிவு எப்படி உண்டாகிறது? யார்யாருக்கு உண்டாகிறது? அதன் தன்மை என்ன? பாதிப்பு என்ன? இதன் கொடுமையி லிருந்து நோயாளிகள் எப்படி, என்னென்ன மருந்துகள் உண்டு தங்களைக் காத்துக் கொள்ளலாம், தங்கள் குழந்தைகளுக்கு இந்நோய் வராமல் இருக்க என்ன செய்ய லாம் என்பன போன்றவற்றைச் சிறப் பாக இந்நூல் விவரிக்கிறது.




பொருளைத் திரட்டுவதே மனைக்குரிய தலைவன் செயலாகும். வருவாய் குறைந்தால் செலவைக் குறைக்க வேண்டும். தனக்கு வரும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கை வயதான காலத்தில் நுகர்வதற்குரிய சேமநிதியாக வைத்திருக்க வேண்டும். மேலும் அப்பொருள் உடற்பிணி போக்குவதற்கும் மக்கட்கு மணம் செய்வதற்கும் பயன்படும்.

இன்றே சிறுசேமிப்பில் முதலீடு செய்து உங்கள் வருங்கால வாழ்க்கையை ஒளிமயமாக்குங்கள். உங்கள் வாழ்வில் வளம் பெறப் பல நல்ல திட்டங்கள் சிறுசேமிப்பில் உள்ளன.

★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
★ பொது சேமநலநிதி
★ மாதாந்திர வருமானத் திட்டம்
★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம்
இந்திரா சேமிப்புப் பத்திரம்
★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு
அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/
வளரும் மாத சேமிப்புத் திட்டம்

மாவட்ட சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் — 90

— ரூ. 500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன்.
— 1.6.90 முதல் 31.12.90 வரை தனிநபர்கள் முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள். (தமிழகத்தில் முதலீடு செய்பவர்களுக்கு மட்டுமே).
— ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.
— சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

● தேசிய சேமிப்புத்திட்டக் கணக்கு-87 ல் (N.S.S-87) முதலீடு செய்து 100% வருமான வரிவிலக்கு ரூ. 40,000/- வரை பெற்றிடுங்கள்.
● தேசிய சேமிப்புப்பத்திரம் 8ஆம் வெளியீடு/15 ஆண்டு பொதுசேமநல நிதியில் முதலீடு செய்து வருமானவரிச்சட்டம் 88 பிரிவின்படி ரூ. 50.000/வரை 20% வரிச்சலுகை பெறுங்கள்.
● மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கததொகை.
● ரூ. 1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்.

பரிசுக்கூப்பன்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும்.

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை,
143, அண்ணா சாலை, சென்னை-600002.
தொலைபேசி: 840223/846209



# மின்சக்தி-தேவை-நிருவாகம்

## சில கருத்துரைகள்

எம். சிவஞானம், இ.ஆ.ப. (ஓய்வு),
உறுப்பினர்,
மாநிலத்திட்டக்குழு,
தமிழ்நாடு அரசு,
சென்னை-600 005.

பொதுமக்களால் பெரிதும் பயன்படும் மின்சக்தித் துறை மின் உற்பத்தி - அதன் பகிர்வு (வழங்கல்) ஆகிய இருபெரும் தனித்த சில இயல்புகளைக் கொண்டுள்ளது. குடிநீர் வழங்கல், தொலைபேசி, போக்குவரத்து போன்ற ஏனைய பொதுமக்கள் பயன்பாட்டுப் பணிகளைப் போலன்றி மின் உற்பத்தி நிறுவனம் ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் (தடையின்றி) தொடர்ந்து நுகர்வோருக்கு மின்சக்தி கிடைக்கச் செய்கின்றது. ஆனால் நுகர்வோரின் மின் தேவை முன் கூட்டியே கணித்துக் கூற முடியாதபடி மின் தேவையின் அளவு '0'-லிருந்து ஒப்பந்த உயரளவு வரை வேறுபடக்கூடும்; சில சமயங்களில் ஒப்பந்த உயர் அளவைக் காட்டிலும் அதிகமாகக் கூட இருக்கலாம். இந்தத் தேவையளவு நேரத்திற்கு நேரம் வேறுபடும்; பகல் நேரத் தேவைக்கும், இரவு நேரத் தேவைக்கும் இடையேயும் கணிசமான அளவு வேறுபடும். பருவ நிலைக்கேற்பவும் அதன் தேவை வேறுபடுகிறது. இலட்சக் கணக்கான நுகர்வோர் தனித்தனியாகப் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவுக்கேற்ப நொடிக்குநொடி மின் தேவையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

உற்பத்தியாகும் மின்சக்தியை மிகக் குறைந்த அளவிலன்றிச் சேமித்து வைக்க முடியாது. அதற்கும் செலவு மிக அதிகமாகும். மின்சக்தி உற்பத்தியாகின்ற காலத்திலேயே பயன்படுத்தப்பட்டு விடவேண்டும். உற்பத்திக்கும் பயன்பாட்டிற்கும் இடையே காலவேறுபாடு இருக்க முடியாது. அவ்வாறு இருப்பினும் அது மிக மிகக் குறைந்த அளவிற்கே மாறுபடும். நுகர்வோரின் சாதனம் நன்கு செயற்படவும் அவற்றுக்குச் சேதம் ஏற்படாமல் தடுக்கவும் வேண்டுமாயின், வழங்கப்படும் மின்சக்தியின் அழுத்த அளவும் சீராக வைத்துக்கொள்ள வேண்டும்.

நிலக்கரியால் இயங்கும் மின் நிலையம் (அனல் மின் நிலையம்) மின் உற்பத்தியைத் தொடங்கவும், நிறுத்தவும் பல மணி நேரங்கள் எடுத்துக்கொள்ளும். அணு மின் நிலையங்களில் ஒரு பிரிவில் மீண்டும் உற்பத்தியைத் தொடங்க பல நாட்கள் ஆகும். புனல் மின் நிலையங்களிலும், வாயு மின் நிலையங்களிலும் மட்டுமே சில நிமிடங்களுக்குள் உற்பத்தியை நிறுத்தவோ மீண்டும் தொடங்கவோ முடியும்.

புனல் மின்சக்தி வாயிலாக மின் உற்பத்தி நிறுவனங்கள் பெற்றிருக்கிற மின் வழங்குதலை எளிதில் கையாளும் ஆற்றல் குறைந்து வருகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டில் பெரிய அளவிலான புனல் மின் ஆதாரங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு விட்டன. ஒவ்வோர் ஆண்டும் பெய்யும் மழையின் அளவு வேறுபடுவதால் அதற்கேற்ப மின் உற்பத்தித் திறனும் வேறுபடுகிறது. இது மற்றுமொரு தடையாகும். ஒவ்வொரு ஆண்டிலும் தொடக்கத்தின் புனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தித்திறன் உச்ச அளவிலிருந்து நாளாவட்டத்தில் குறைந்து '0' நிலையை அடைந்து விடுகிறது. மின் உற்பத்தித் தேவை அளவும், பாசன நீர்த் தேவை அளவும் ஒத்திருப்பதில்லை. இதனால் மின் பயனீட்டாளர் நலனும், பாசன நீர் பயனீட்டாளர் நலனும் முரண்படுகின்றன. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மின்சக்தி அளவில் புனல் மின் நிலையங்களின் உற்பத்தி 17.8 சதவீதம் மட்டுமேயாகும். இது மொத்த நிறுவு திறனில் 35.75 சதவீதமாகும். 35.75 சதவீத நிறுவு திறனைக் கொண்டு, 17.8 சதவீதம் மட்டுமே மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. காலங்கள் மாறிச் செல்லச் செல்ல உற்பத்தித் திறன் குறைந்து கொண்டே வருகிறது என்பதையே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டில் வார வேலை நாட்களில் ஒரு நாளில் பகல்நேர மின் தேவையின் உச்ச அளவுக்கும் இரவு நேர குறைந்த அளவு மின் தேவைக்கும் இடையேயான வேறு

## எது பேச்சு?

பேச்சு, காதுக்கும் கண்ணுக்கும் விருந்தளிக்கலாம்; ஆனால், அது மட்டும் போதாது என்று உங்களிடம் துணிந்து சொல்லுகிறேன். பேசுகிற பேச்சு நம் இதயத்தைத் தொடவேண்டும்; நமது கைகளும் கால்களும் தொழிற்படச் செய்ய வேண்டும். அப்போதுதான் அது பேச்சாகும்.

-அண்ணல் காந்தியடிகள்

பாடு 800 மெ.வா. ஆகும். ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் இந்த வேறுபாடு சுமார் 600 மெ.வா. ஆக உள்ளது. வார வேலை நாட்களில் தேவைப்படும் மின்சக்தியின் உச்ச அளவிற்கும், ஞாயிற்றுக்கிழமைகளில் தேவைப்படும் மின்சக்தியின் உச்ச அளவுக்கும் இடையேயான வேறுபாடு 500 மெ.வா. வரையில் கூட இருக்கலாம். வேறு வகையில் சொல்லப்போனால், புனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஒரு சில மணிநேர உச்ச அளவு மின்சக்தித் தேவையை சமாளிக்க மட்டுமே போதுமானதாக உள்ளது. எனவே, உச்ச அளவு மின்சக்தித் தேவையை மட்டுமே சமாளிக்க, பெரிய அளவிலான அனல் மின் நிலையங்களை ஏற்படுத்தி, உச்ச அளவு தேவை குறையும்போது அதற்கேற்ப அவற்றில் உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளலாம். உச்ச அளவு மின்சக்தி தேவையில்லாத காலங்களில் பிற மாநிலங்களுக்கு மின்சக்தியை விற்பனை செய்வது எளிதான செயல் அன்று. ஏனெனில் தமிழ்நாட்டிற்கு அதிக அளவு மின்சக்தி தேவை ஏற்படும் அதே காலங்களில்தான் மற்ற மாநிலங்களுக்கும் மின் தேவை அதிகமாக வேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் தமிழ்நாட்டில் எரிவாயுவை ஆதாரமாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையம் எதுவும் குறிப்பிடத்தக்க நிலையில் இல்லை. அடுத்த ஐந்தாண்டுகளில் காவிரி வடிநிலப் பகுதியிலிருந்து கிடைக்கக்கூடிய எரிவாயுவின் அளவு நாளொன்றுக்கு 1.5 மில்லியன் கன மீட்டராக அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னக எரிவாயு மையம் உருப்பெற்றால் இவ்வாறு கிடைக்கின்ற எரிவாயுவின் அளவு மேலும் அதிகரிக்கக்கூடும். ஆனால் மொத்த மின்சக்தி தேவை - நிருவாகத்தில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் இருக்காது.

மின் உற்பத்திக்கான மூலதனச் செலவும், எரிபொருள் செலவும் மிகவும் அதிகரித்து வருகின்றன. 1979-80-ஆம் ஆண்டில் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு வரப்பெற்ற நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு 163 ரூபாயாக இருந்தது. அது தற்போது டன் ஒன்றுக்கு சுமார் 850 ரூபாயாக அதிகரித்துள்ளது. (10 ஆண்டுகளில் 500 சதவீதம் அதிகரித்துள்ளது). தூத்துக்குடிக்கு வரும் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ.900-ம், மேட்டூருக்கு வரும் நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ.910/-ம் ஆகின்றன. நிலக்கரியின் சுரங்க வாயில் விலை டன் ஒன்றுக்கு 250 ரூபாயாக மட்டுமே இருக்க, நிலக்கரியை ஏற்றி இறக்குதல் மற்றும் எடுத்து வருதல் ஆகியவற்றுக்காக டன் ஒன்றுக்குக் கூடுதலாக 650 ரூபாய் செலவாகிறது. எனவே, தமிழ்நாடு மின்வாரியத்தின் தற்போதைய எரிபொருள் செலவு மட்டுமே கி.வா./ம ஒன்றுக்கு ரூ.67.87 ஆகிறது.

அனல் மின்நிலையங்களில் இன்றைய நிலவரப்படி மூலதனச் செலவு மெ.வா. ஒன்றுக்கு சுமார் 1.25 கோடி ரூபாயாகும். மின் அனுப்புகை மற்றும் விநியோகம் ஆகியவற்றுக்காகக் கூடுதலாகச் சுமார் 75 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்படுகிறது. எனவே, கூடுதலாக ஒரு மெ.வா. மின்சக்தி உற்பத்தி செய்ய ஏறக்குறைய 2 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது. ஆண்டொன்றில் குறைந்தது 6,000 மணி நேரம் கூட இந்த அனல் மின்நிலையத்தை இயக்க முடியவில்லையானால், இந்த அனல் மின் நிலையத்தால் எந்தவிதமான பயனும் இராது.

ஆண்டொன்றுக்கு 6,000 மணி நேரமாவது மின் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை ஒருசில அனல் மின் நிலையங்களே எய்திட முடிகிறது. பிற அனல் மின் நிலையங்கள் இவ்வாறு இயங்க இயலாமல் போனதற்குக் காரணம் யாதெனில், ஆண்டுக்கொருமுறை இந்த அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டதும், திடீரென மின் உற்பத்தி நிறுத்தப்பட்டதும் இதற்கு ஓரளவு காரணமாகும். இத்துடன் நாள்தோறும் பருவகாலங்கள்தோறும் தேவைப்படும் மின் தேவையின் அளவில் ஏற்பட்ட வேறுபாடுகளை சரிகட்டும் பொருட்டு மின் உற்பத்தி அளவைக் குறைத்துக்கொண்டதும் இதற்கு முக்கிய காரணமாகும். எனவே அதிகரிக்கும் மின்சக்தி தேவை அளவை நிறைவு செய்திடும் பொருட்டு பெரிய அனல் மின் நிலையங்களை அடிப்படை மின் வழங்கல் நிலையங்களாக இயங்கச் செய்வதிலும், எரிவாயு சுழல்தட்டு மின் உற்பத்தி நிலையங்களையும் புனல் மின் நிலையங்களையும் தேவையளவில் ஏற்படும் வேறுபாடுகளைச் சரிகட்டுவதற்கு பயன்படுத்திக் கொள்வதிலும், மின்சக்தி நிருவாகம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

மின்வெட்டு இல்லாமல் தமிழ்நாடு மின்மையத்தின் உயரளவு மின் தேவை தோராயமாக 3,954 மெ.வா. ஆகும். (மின்வெட்டின் காரணமாக குறைவுபட்ட நிலையில் தமிழ்நாட்டின் உயரளவு மின் தேவை 2,939 மெ.வா. ஆகும்). தமிழ்நாட்டின் நிறுவ நிலை மின் உற்பத்தி திறன் 5,473 மெ.வா. ஆகும். இதில் 1,957 மெ.வா. புனல் மின் நிலைய உற்பத்தியாகும். மின்சாரம் அதிகம் தேவைப்படுகிற நேரங்களில் தமிழ்நாடு மின்வாரியம் உயரளவு 3,320 மெ.வா. மட்டுமே வழங்க இயலுகிறது. மழைக்காலத்தில் மின் உற்பத்தியில் ஏற்றத்தாழ்வு பெரிய அளவில் ஏற்பட்டாலோ, அனல் மின் உற்பத்தி நிலையங்களில் திடீரென மின் உற்பத்தி நிறுத்தப்பட்டாலோ மின் நிருவாகத்தில் இடர்ப்பாடு ஏற்படுகிறது. அதன் காரணமாக மின் வெட்டைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, அன்றாடம் தேவைப்படும் மின்சாரத்தின் அளவில் காணப்படும் வேறுபாடுகள், வாராந்திர விடுமுறை நாட்களில் தேவைப்படும் மின்சாரத்தின் அளவில் காணப்படும் வேறுபாடுகள், பருவகாலங்களில் மின்சாரத் தேவையில் ஏற்படும் வேறுபாடுகள் ஆகியவற்றைச் சரிகட்டவும், மின் உற்பத்தி நிலையங்களில் திடீரென மின் உற்பத்தியை நிறுத்துவதினாலும், புனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தினாலும் உண்டாகும் மின் உற்பத்திக்குறைவைச் சரிகட்டவும் மின் தேவை நிருவாகம் தொடர்பாக விரிவாக திட்டங்களை நாம் வகுத்துக்கொள்வது முக்கியமானதாகும்.

மின் தேவை அளவுப்பாங்கு பற்றிய விரிவான பகுப்பாய்வு, மின்சாரத்தைப் பயன்படுத்தும் பல்வேறு வகைப் பயனீட்டாளர்களின் நோக்கில் மின்தேவை அளவுப்பாங்கின் சிறப்பியல்புகள் ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். உயரழுத்த, குறைவழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் அனைத்துத் தொழில்களுக்கும் மின்வெட்டுக் கொண்டு வருவது மற்றும்/அல்லது கிராமப்புறங்களில் ஒரு குறிப்பிட்ட மணி நேரம் மின் வழங்கலை நிறுத்துவது ஆகியவை வழக்கமாக மின்வாரியங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும். நகரங்களில் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு மணி நேரங்களில் மின்வாரியம் மின் வெட்டைக் கொண்டு வருகிறது. இவை உகந்த நடவடிக்கைகள் அல்ல. இவற்றால், குறிப்பாக தொழிற்சாலைகளில் உற்பத்தி இழப்பும், ஊதிய இழப்பும் ஏற்படுகிறது.

வேளாண்மைக்கான மின்தேவை தனித்தன்மை வாய்ந்ததாகும். நல்ல மழை பெய்தால் வேளாண்மைக்கான மின்தேவை பெரிதும் குறையும். மழைக்காலத்தில், மழை பெய்வது ஒரு வாரம் அல்லது அதற்கு அதிகமாகத் தாமதப்படுமானால், விவசாயிகள் தங்களுடைய பயிர்களைக் காப்பாற்ற வேண்டும், என்கிற அக்கறையில் தடையின்றி மின்சாரம் வழங்குமாறு வேண்டுவார்கள். ஒரு நாளில் ஒரு சில மணி நேரமே கிராமப் புறங்களில் மின்சக்தி வழங்குவது என்று கட்டுப்படுத்தும்போது, கிராமப்புற மின் வழங்கு ஏற்பாட்டின் கீழ் வருகின்ற ஏனைய மின் பயனீட்டாளர்களுக்கு, அதாவது தொடக்கச் சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், குடிநீர் வழங்கு பணிகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கு மிகுந்த இடர்ப்பாட்டை ஏற்படுத்துகிறது. இவற்றுக்கு ஒரு முறை மாற்றுப் பணிநேரத்திற்குக் கூட தொடர்ந்து மின்சாரம் பெற இயலாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

எனவே, ஒவ்வொரு வகைப் பயனீட்டாளர்கள் தொடர்பாகவும், மின்தேவை பற்றிய விரிவான பகுப்பாய்வை மேற்கொள்வது, மின்தேவை நிருவாகத்தில் முதல் கட்ட நடவடிக்கையாகும். தொழிற்துறை போன்ற ஒரு குறிப்பிட்ட துறைக்குள்ளேயே கூட மின்தேவை என்பது ஒரே சீராக இருப்பதில்லை. ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் மின் தேவையின் அளவுப்பாங்கு வேறுவிதமாக அமைந்துள்ளது. குறிப்பாக, உயரழுத்த மின்சாரப் பயனீட்டாளர்களுக்குத் தேவைப்படும் மின்சாரத்தின் அளவு வேறுவிதமாக உள்ளது. எடுத்துக்காட்டாக, சிமிட்டி தயாரிப்புத் தொழிற்சாலையில் உலைக்கு 24 மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால், அத்தொழிற்சாலையின் மொத்த மின்சக்தி தேவையில் கணிசமான பகுதியைப் பயன்படுத்துகிற சிமிட்டி அரைவை ஏற்றுகைப் பணி ஆகியவை தொடர்ந்து நடைபெறும் பணிகளல்ல. வழக்கமாக இப்பணிக்கு 12 மணி நேரம் மட்டுமே மின்சாரம் தேவைப்படுகிறது. விரிவான பேச்சு வார்த்தை நடத்தி இதுகுறித்து ஒரு முடிவுக்கு வந்த பின்னர் இத்தொழிற்சாலையில் மேற்குறிப்பிட்ட தொடர்ந்து நடைபெறாவகைப் பணிகளுக்குத் தேவைப்படும் மின்சாரத்தை, மின்சாரத்தின் உயரளவுத்தேவை குறைவாக உள்ள இரவு நேரத்தில் வழங்கலாம்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், இரசாயன உரத் தொழிற்சாலைகள், பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் தயாரிப்பு ஆலைகள் ஆகியவற்றிற்குத் தங்குதடை ஏதுமின்றி தொடர்ந்து மின்சக்தி வழங்குவது அவசியமாகும். உரிய திட்டமிடலின்றி மின் வழங்கல் நிறுத்தப்பட்டால், அதனால் தொழிலக உற்பத்திச் செயல் முறையில் உள்ள மூலப் பொருள்கள் முழுவதையும் இழக்க நேரிடலாம். மேலும், செயல் முறையில் பயன்படுத்தப்படும் கிரியா ஊக்கிகளுக்குக் (Catalysts) கடும் சேதம் விளையும். இத்தகைய தருணங்களிலும்கூட இன்றியமையாத முதன்மை உற்பத்திப் பணிகளைப் பாதிக்காமலேயே, மின் சக்தி அதிகம் பயன்படுத்தப்படும் உயரளவுத் தேவை நேரங்களில் ஏற்படும் பிரச்சினையைத் தவிர்க்கும் வகையில் பயன்படுத்தும் மொத்த மின்சுமையில் 20 சதவீதம் வரையில் திறமையாகக் கையாளுவதன் வழி சமாளிக்கலாம்.

சில சமயங்களில் இத்தகைய ஆலைகள் ஆண்டுப் பராமரிப்புக்காக மூடப்படும் காலமும், மின் உற்பத்தி நிலைமை சாதகமாக இருக்கும் காலமும் ஒன்றாக அமைந்து விடுகிறது. அல்லது இதற்கு மாறாக, மின் உற்பத்தி குறைவாக இருக்கும்

## உண்மையான வளர்ச்சி

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்லமுறையில் தொழிற்படச் செய்வதே அறிவுக்கு உண்மையான வளர்ச்சி என்பது என் கருத்து. அறிவும், உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும்போது, இதயத் தத்துவமும் விழிப்படைய வேண்டுவது அவசியமாகும். அவ்விதமின்றி, உள்ளமும் உடலும் வளர்ச்சி பெற்று, உணர்ச்சித் தத்துவம் விழிப்பு அடையாவிட்டால், அது கிரமமான வளர்ச்சியாகாது; வெறுங்கோணலாகவே போய்விடும்.

-அண்ணல் காந்தியடிகள்

சமயத்தில் இந்த ஆலைகள் அங்காடித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு உற்பத்தியை அதிகரிக்க விரும்புகின்றன. மின்சக்தித் தேவை-வழங்கல் குறித்த குறுகிய கால ஏற்ற இறக்கங்கள் இடம் பெறும் அவசர காலத் திட்டங்களுடன் மின்தேவை வழங்கல் குறித்து ஆண்டு அடிப்படையில் அமைந்த விரிவான செயல் திட்டம் ஒன்று, இத்தொழிற்சாலைகளுக்காக உருவாக்கப்படலாம்; இது, மின்சக்தித் தேவை மின் உற்பத்தி ஆகியவற்றில் விரிவான அளவில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைக்கும்.

அத்தகைய உதாரணங்கள் பலவற்றைக் குறிப்பிட இயலும். எடுத்துக்காட்டாக, மின்பொறி உலைகள் (Arc furnaces) மின்வாரியம் மின்வெட்டைக் கொண்டுவரும் நேரங்களில் அதனை எதிர்கொள்ளும் வகையில் தங்களது உயரளவு மின்தேவையை உடனடியாகக் குறைத்துக் கொள்ள இயலாது.

மின்பொறி உலைகளைப் பயன்படுத்துவோருடன் (முக்கியமாக எஃகு தொழிற்துறையினருடன்) பேச்சு வார்த்தை நடத்துவது பயனுள்ளதாக இருக்கும். பயன்படுத்துவோரின் ஒரு தொகுதியினர், இரண்டு வாரங்களுக்கு அல்லது மூன்று வாரங்களுக்கு ஒருமுறை 3-4- நாட்களுக்காகிலும், சுழற்சி முறையில் பணியை நிறுத்தி வைப்பது (தொழிலகத்தை மூடி வைப்பது) பயனீட்டாளர்களின் மின் தேவை அளவைக் குறைக்கும். அதுமட்டுமின்றி டீசல் மின் உற்பத்தியைப் பயன்படுத்துவதை அல்லது உலையின் உள்வரிப் பூச்சுக்கள் சேதமுறும் ஆபத்துக்குட்படுவதைக் குறைக்கும்; தமிழ்நாட்டில் உயரழுத்த மின் தேவை பற்றிய பகுப்பாய்வு, மின்பொறி உலைத் தொழில், உயரழுத்த மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்துகிறது என்பதைக் காட்டுகிறது.

மின்பொறி உலையானது, மின்விசை அனுப்புகை ஏற்பாட்டில் கடுமையான சுமையை ஏற்றி விடுகிறது. இத்தகைய கடும் சுமையால் ஏற்படும் பாதிப்புகள் இயன்ற அளவிற்குக் குறைக்கப்பட வேண்டுமானால், மின்பொறி உலைகள் அமைந்துள்ள இடங்களைச் சேர்ந்த மின் கம்பி வழிகளில் ஏற்படும் பாதிப்பு அளவைக் கருத்திற்கொண்டு, அவற்றின் (மின்பொறி உலைகள்) அமைவிடத்தைக் குறித்துப் பரிசீலனை செய்வது மிக முக்கியமானதாகும்.

அடுத்து, பெருமளவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில். காஸ்டிக் சோடா - குளோரின் தயாரிப்புத் தொழிற்சாலைகள் குறிப்பிடத்தக்கனவாகும். உண்மையில், உலகம் முழுவதிலும் பாதரச மின்கலத்தைப் பயன்படுத்தும் முறை குறைந்து வருகிறது. இதற்குப் பதிலாக, மென்தோல் உறை மின்கலங்களைப் (Membarance cell) பயன்படுத்தும் முறை பெருகி வருகிறது. மென்தோல் உறை மின்கலத்தில் பயன்படுத்தும் காஸ்டிக் சோடாவுக்கு டன் ஒன்றுக்குப் பயன்படுத்தப்படும் மின்சக்தியின் அளவு, பாதரச மின்கலத்தில் பயன்படுத்தப்படும் காஸ்டிக் சோடாவிற்கு டன் ஒன்றிற்குப் பயன்படுத்தப்படும் மின்சக்தியை விட கணிசமான அளவு குறைவாகும். தமிழ்நாடு மின்வாரியமும், தமிழக அரசும் இங்குள்ள ஆலைகள் பாதரச மின்கலத்திற்குப் பயன்படுத்தும் காஸ்டிக் சோடா கொள்ளளவை இனிமேல் உயர்த்துவதற்கு அனுமதிப்பதில்லை என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும். அன்றியும், இன்னும் நான்கிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்குள், தற்போதுள்ள மின்கலத் தொழில் பிரிவுகள் மென்தோல் உறை மின்கலத் தயாரிப்பிற்கு மாறுவதற்குத் தூண்டுகோலாக இருக்கும் வகையில், சலுகையும் கண்டிப்பும் காட்டுகின்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## உழைப்பு

உழைப்பதற்கு யாருமே தயங்கலாகாது. தனது சொந்த சமாசாரங்களில் மட்டும் மிக்க சிரத்தை காட்ட வேண்டுமென்றும் மக்கள் தொண்டை எப்போது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்யலாமென்றும் நினைப்பவன், 'தியாகம்' என்ற படிப்பில் முதற் பாடத்தைக் கூட அறியாதவனென்ற அர்த்தம்.

-அண்ணல் காந்தியடிகள்

மின்சக்தியை முனைப்பாக பயன்படுத்தும் அலுமினிய உறைகள் (Aluminium Shelters), கால்சியம் கார்பைட், கிராபைட் ஆகியன போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில்களுக்கு மின்சக்தி விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துவது விரும்பத்தக்கதாகும். மின்சக்தியை முனைப்பாகப் பயன்படுத்தும் தொழில் என்பது, பெருமளவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழில் அன்று. ஆனால், அது மின்சக்தியையே மிக முக்கிய மூலப்பொருளாகக் கொண்டுள்ள தொழில் பிரிவாகும். பொதுவாக, 2500 KVA-ம் அதற்கும் மேற்பட்டும் மின்சுமை பெறும் மின் இரசாயனம், மின் வெப்ப ஆற்றல், மின் உலோகத் தொழில், மின்னாற்பகுப்பு ஆகிய செயல்முறைகள் நடைபெறும் தொழில்கள் இந்த வகையின் கீழ் வருகின்றன. இத்தகைய தொழில் பிரிவுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதையும் விற்கப்படுவதையும் முறைப் படுத்த சட்டப்படிக்கான வரையறைகளை விதிக்க இயலும். மின்பொறி உலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மென்னிரும்பு அல்லது கார்பன் உருக்கு ஆகியவற்றைவிட, கலப்பின உருக்கை மட்டும் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பது பயனுடையதாக இருக்கும்.

மொத்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கையில் உயரழுத்த மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை குறைவானதாகும். அவர்களின் மின்தேவை அளவுப்பாங்கு குறித்து விரிவான பகுப்பாய்வு செய்ய இயலும். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் அவர்கள் குறித்த ஆண்டு திட்டங்களை வகுத்துக் கொள்ள இயலும். எதிர்பாரா மாற்றங்களைச் சமாளிப்பதற்கேற்ப, இத்திட்டத்தில் தக்க மாறுதல்களைச் செய்துகொள்ள வகை செய்யலாம். மாற்றியமைத்தற்குரிய குறைவழுத்த மின்சக்தித் தொழில்பிரிவுகள் எங்கு தொடங்கப்பட்டிருந்தாலும், காலையில் சுமார் 7.30 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரையில் சாதாரணமாக ஒரு நேரம் மட்டும் (One Shift) இயங்கி வருகின்றன. உணவு இடைவேளை மதியம் 12.00 மணிக்கும், பிற்பகல் 1.00 மணிக்கும் இடைப்பட்ட நேரமாகும். நாள் முழுவதும் உயரழுத்த மின்சக்தி தொடர்ந்து தேவைப்படாத மின்பயனீட்டாளர்களுக்கும் மேற்குறிப்பிட்டதைப் போன்றே மின்தேவை உள்ளது. இது குறித்து பொறியியல் தொழில் கூட்டமைப்புடனும், ஏனைய வணிக-தொழில் கழகங்களுடனும் கலந்தாலோசித்து மின் தேவையில் நெருக்கடி ஏற்படும் இத்தகைய தொழிற்சாலைகளின் பணி நேரங்களை மாற்றி அமைத்துக் கொள்ளவும் உற்றுழி திட்டங்களை வகுத்துக் கொள்ளவும் முடியும், உதாரணமாக ஒரு நேரப்பணியாக மட்டும் இயங்கும், தொழில் பிரிவுகள், காலையில் 5.30 மணி அல்லது 7.00 மணிக்கு முன்னதாக பணியைத் தொடங்கி பிற்பகல் 2.30 மணிக்கு அல்லது 3.00 மணிக்கு முடித்துக்கொள்ளலாம். ஏனைய குறைவழுத்த மின்சக்தியைப் பயன்படுத்துகிற தொழில் பிரிவைச் சேர்ந்த மின்பயனீட்டாளர்களும், நாள் முழுவதும் உயரழுத்த மின்சக்தி தொடர்ந்து தேவைப்படாத மின் பயனீட்டாளர்களும் பிற்பகல் 2.30 மணிக்கு பணியைத் தொடங்கி இரவு 10.30 மணிக்கு முடித்துக்கொள்ளலாம். இத்தகைய நடைமுறையில் மொத்த மின்தேவையில் சுமார் 50 சதவீத மின்தேவையை இரு கூறுகளாக நிறைவு செய்ய இயலும். பெரிய சிறிய வகைகளைச் சேர்ந்த அனைத்து பொறியியல் தொழில்களும் பெருமளவில் அவற்றின் பணி நேரத்தை மாற்றிக் கொள்ளக் கூடியவையாக இருக்கின்றன. இதனை எளிது படுத்தும் வகையில், ஒரு நேரத் தொழிற்பிரிவின் பணி நேரத்தை 7 மணி நேரமாகக் குறைக்க இயலும் என்று தெரியவந்துள்ளது. வாரத்திற்கு 5½ நாட்கள் வேலை செய்வதற்குப் பதிலாக, 6 நாட்கள் வேலை செய்வதன் மூலம், நடைமுறையில் வாரத்தின் மொத்த வேலை நேரம் மாறுவதில்லை.

மின் வெட்டிற்கு ஆட்படுகின்ற தொழிற்சாலைகளுக்கும் அல்லது எட்டு மணி நேர முறைமாற்றுப் பணியில் மின்தடைகளை எதிர்கொள்ளும் தொழிற்சாலைகளுக்கும் அல்லது இரண்டிற்கும் ஆட்படும் தொழிற்சாலைகளுக்கும் இது ஒரு சிறந்த ஏற்பாடாகும். இத்தகைய ஏற்பாட்டிற்கு தொழிலாளர் சங்கங்களுடன் உடன்பாடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## ஒரே நெருப்பின் சுடர்கள்

உலகத்தில் 'தீண்டத்தகாதவர்' என்று எவருமே இல்லை. ஏனெனில், ஒரே நெருப்பின் சுடர்கள் தான் ஒவ்வொருவரும். ஆகவே, மனிதப் பிறவி எடுத்தோர் எவரையும் தீண்டாதவர் என்று ஒதுக்கி வைப்பது தவறு. -அண்ணல் காந்தியடிகள்

இம்முறையானது விடுமுறை நாட்களை மாற்றியமைப்பதற்கு வழி வகுக்கிறது. இவ்வாறு செய்வது தொழிலாளர்களுக்கு வசதியாக அமையும். அதாவது, வாரத்திற்கு ஒரு நாள், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாகும்.

தொழில் சங்கங்கள், தொழிற்சாலையின் ஒத்துழைப்புடன் விடுமுறை நாட்களை மாற்றுவது சாத்தியமானதும் விரும்பத்தக்கதும் ஆகும். இதனால் தொழிற்சாலைகளின் மின்தேவை 1/6 பங்கு குறையும். பகல் வேலை நேரத்தையும் மாலை ஓய்வு நேரத்தையும் மாற்றியமைப்பதனால், மின் நெருக்கடி மிகுந்த நேரத்தில் தேவைப்படும் மின்சாரம் குறைந்தபட்சம் இருபது சதவீதம் குறையும். பண்டிகை நாட்களிலும் இயந்திரத்தைச் செயல்படுத்த முடியும். மாநகரங்களிலுள்ள பெரிய கடைத் தெருக்களுக்கு வாரவிடுமுறை நாட்களையும் மாற்றலாம். ஆனால் இவையனைத்தையும் திட்டமிட்டு செயல்படுத்த இவை குறித்து தொழிலதிபர்களுடனும், தொழிலாளர்களுடனும், மின்சார வாரியத்துடனும் கலந்து ஆலோசிப்பதும் அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அவசியமானதாகும்.

• தொழிற்சாலைகளின் மின்னோட்ட அளவை இரவு நேரங்களுக்கு மாற்றுவதற்கு சலுகை அளிப்பதற்கு இது வழிவகுக்கிறது. இரவு நேரங்களில் உற்பத்தித்திறன் குறைவாகவும், மேற்பார்வையிடுவதில் கவனக் குறைவும் இருக்கும் என்று வழக்கமாக எதிர்கருத்து எழுதுவதுண்டு. பொதுவான நடவடிக்கையாக இதனைப் பின்பற்றாமல் இருந்தால் கூட மின்பற்றாக்குறைக் காலங்களில் பல தொழிற்பிரிவுத் தொகுதிகள் சுழற்சி அடிப்படையில் இரவு நேரத்தில் இயங்குமாறு மாற்றிக் கொள்ளத் தூண்டப்படலாம். தொழிற்சாலைகள் பகல் நேரத்தில் செயற்படும்போது, மின் வெட்டுக்கு ஆட்படுவதைக் காட்டிலும், இரவு நேரங்களில் செயல்படுவதை ஒப்புக் கொள்ளும். மின் வெட்டு காரணமாக கூடுதல் விடுமுறை நாட்கள் அளிக்கப்படுவதால் ஏற்படும் இழப்பை, இரவு நேர முறைமாற்றப் பணியை மேற்கொள்ளுவதன் மூலம் ஈடுசெய்யலாம். தமிழ்நாட்டிலுள்ள முக்கிய தொழிலான துணித் தொழில் இச்செயல்திட்ட நடவடிக்கையைப் பின்பற்ற முடியும்.

வேளாண்மை விளைபொருளைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், மற்றொரு வகையான கட்டுப்பாட்டைச் சுமத்துகின்றன. ஆண்டில் சுமார் 180 நாட்களிலிருந்து 210 நாட்கள் வரையிலான வேளாண்மை விளைபொருள் காலத்தில் அவ்விளைபொருளைப் பதப்படுத்த வேண்டியுள்ளது; எஞ்சிய காலத்தில் இத்தேவை இருப்பதில்லை; இந்த குறிப்பிட்ட விளைபொருள் காலத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற மின்சார வாரியம் கூடுதல் மின் உற்பத்தித் திறனைக் கொண்டிருக்க வேண்டும். அவற்றில் சில தொழிற் பிரிவுகள் தாங்களே மின் சக்தி உற்பத்தியைச் செய்து கொள்ளலாம். மின் இணைப்பில் மின் சுமையைக் குறைப்பதற்கு, தாங்களே மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பது விரும்பத்தக்கதாகும். சர்க்கரை ஆலைத்தொழில் இவ்வகையில் ஊக்கப்படுத்துவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

வேளாண்மைத் துறையில் ஒவ்வொரு பயிருக்கும் நாள்தோறும் பாசனம் தேவைப்படுவதில்லை; பெரும்பாலான பயிர்களுக்குப் பொதுவாக வாரத்தில் இரண்டி

லிருந்து மூன்று முறை தண்ணீர் பாய்ச்சுவதே அதிகமானதாகும். வெவ்வேறு பகுதிகளை/கிராமங்களை ஒன்றாகத் தொகுத்து மாற்றி மாற்றி மின்சாரம் வழங்க இது வாய்ப்பளிக்கிறது. இவ்வாறு திட்டமிடுவதில், ஒரு பயிரின் வளர்ச்சி நிலையில் சில இன்றியமையாத காலங்களிலும் இக்கட்டான கட்டங்களிலும் அதிகமான தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கும் என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். எனவே வேளாண்மைத் துறையுடன் கலந்து ஆலோசித்து, ஒவ்வொரு கிராமப் பகுதியிலுள்ள கிளை மின் இணைப்பிலிருந்து வேளாண்மைத் தேவையின் அளவுப்பாங்கை கணக்கிட்டு பருவகால வேறுபாடுகளுக்கான திட்டத்தை வகுத்து, அவற்றை வார அடிப்படையில் மாற்றியமைத்து முன்னதாகவே தெரிவிக்க முடியும்.

குறிப்பாக, வேளாண்மைக்கு எங்கு மின் தேவை அதிகமாக இருக்கிறதோ, அங்கு ஒவ்வொரு கிளை மின் இணைப்பு வாரியாக விரிவாக ஆய்வு செய்ய வேண்டியதும் அவசியமாகும்; இத்தகைய ஏற்பாட்டினால், வழக்கமாக வாரத்தில், குறைந்தது மூன்று நாட்களாவது பகல் நேரத்தில் தொடர்ந்து எட்டு மணி நேரம் மின்சாரம் வழங்க முடியும்.

இந்தக் கட்டுரையில், இதுவரை மின் தேவை நிருவாகத்திற்குரிய விரிவான திட்டமொன்றை வகுப்பதற்கான சில அணுகுமுறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தயாரிக்க பல மாதங்கள் ஆகலாம்; அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டத்தில், உண்மையான அனுபவத்தின் அடிப்படையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம். இத்திட்டத்தை ஆண்டுக்காண்டு மாற்றியமைத்து மேம்படுத்தலாம்.

நாம் கருத்திற்கொள்ளவேண்டிய மற்றொரு முக்கியமான அம்சம், மின் இணைப்பு பயனீட்டாளரின் ஏற்படும் ஏற்ற இறக்கத்தை சரி செய்வதாகும்: (power factor correction) குறிப்பாக நாள் முழுவதும் தொடர்ந்து உயரழுத்த மின்சக்தி தேவைப்படாத தொழிற்சாலைகளில் மின் இணைப்பு பயனீட்டு அளவில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தைச்சரிசெய்வதாகும். அது, மின்சார வாரியத்தின் பணி மட்டுமல்லாது, ஒவ்வொரு தனிப்பட்ட பயனீட்டாளர்களின் கடமையுமாகும். இந்த வகையில் மின் இணைப்பு பயனீட்டு அளவில் ஏற்றத் தாழ்வுகளை அதிகம் ஏற்படுத்துபவர்கள் தொழில் துறை, மற்றும் வேளாண்மைத் துறைப் பயனீட்டாளர்களாவார்கள். தனிப்பட்ட மின் பயனீட்டாளரால் பின்பற்றக்கூடிய மின் இணைப்பு பயனீட்டளவு குறைவரம்பு 0.8 ஆகும் என்று சட்டவிதித்துறை விதிக்கிறது. நடைமுறையில் இது ஒருபோதும் பின்பற்றப்படுவதில்லை. இரண்டாவதாக, மின்னியல் உறைகலன்களை (capositors) வாங்கி பயன்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட மின் பயனீட்டாளர் வழி ஏற்படும். ஏற்றதாழ்வுகளைச் சரிசெய்யும் தூண்டுகோல் எதுவுமில்லை.

விரிவான ஆய்விற்குப் பின்னர், மின் இணைப்பு பயனீட்டளவை 0.9 என்ற குறைந்த அளவு மின் பயனீட்டு அளவைக்குக் குறிப்பிட்ட மின் கட்டணமும் 0.9-க்கும் குறைவான அளவில் பயன்படுத்தும் போது கூடுதல் கட்டணமும் (சர்சார்ஜ்) விதிக்கப்படும் என்ற நிபந்தனையை விதிப்பதும் சாத்தியமாகவே இருக்கும், 0.8 என்ற சட்டப்படிக்கான குறைந்த அளவு மின் அளவை முறைக்கு இது எந்த வகையிலும் முரண்பட்டதாக இராது.

இந்நாட்டிலுள்ள வேளாண் விசைப் பம்புகளின் திறன் மிகவும் குறைவானதே என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். மோட்டார்களின் விலையும் அதிகமாகும். பரித்திறன் அடிப்படையில் மின் கட்டண வீதத்தை அறிமுகப்படுத்தியிருந்தும் உழவர்கள் தங்களுடைய மோட்டார்கள், விசைப் பம்புகள் ஆகியவற்றின் திறனைப் பெருக்குவதில் அக்கறை கொள்ளவில்லை. இந்த மேம்பாடுகளைச் செய்பவர்களுக்கு மேலும் ஊக்கமளிக்கக்கூடிய மின் கட்டண வீதத்தை உருவாக்கிட வேண்டியுள்ளது. இந்த மேம்பாடுகளைச் செய்ய விரும்பும் உழவர்களுக்குத்தொழில் நுட்ப ஆலோசனை தேவைப்படுகிறது. இந்நோக்கத்திற்காக மின் கட்டண வீதத்தில் சில சலுகைகளுடன், இதுபோன்ற தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதற்கு மின் வாரியம் பணிக்குழு ஒன்றை அமைக்கலாம்.

1974-ஆம் ஆண்டிலிருந்து பெட்ரோலிய எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து மேற்கத்திய நாடுகள் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு யூனிட் மின்சக்தியின் பயன்பாட்டுத்திறனையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றன. பெரும்பாலான தயாரிப்பு நிறுவனங்களில் மின் சக்தி தணிக்கை மிக முக்கிய துறையாக இருந்து வருகிறது. ஏனோ, இந்த முறை இந்தியாவில் இன்னும் பரவவில்லை. இந்நாட்டில் தொடர்ந்து உயரழுத்த மின் சக்தி தேவைப்படும் பெருந்தொழிற்சாலைகளை ஐரோப்பா, அமெரிக்கா அல்லது ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள இத்தகைய தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது அவை அதிக அளவில் மின் சக்தியைப்பயன்படுத்துகின்றன. இதற்கு இந்த நாட்டில் மின் சக்திக்குக் குறைவான கட்டணம் இருப்பது ஒரு காரணமாகும்; விற்போர் கை ஓங்கிநிற்கும் அங்காடி நிலவரமும் போட்டிக்கு இடமில்லாததும் மற்ற காரணங்களாகும்.

அயல் நாடுகளின் விற்பனைப் போட்டியிலிருந்து பாதிக்கப்படாவண்ணம் இந்திய விற்பனைக் களத்திற்குப்பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவையாவும் மின் விசைப் பயனீட்டுப் பிரச்சினையைக் காட்டிலும் பெரிய பிரச்சினைகளாகும். மின் பயனீட்டாளர்களில் இத்தகைய தொழிற்துறை பயனீட்டாளர்களும்

## பெண்கள்

அகிம்சைத் துறையில் துணிந்து ஈடுபடவும், ஆராய்ச்சிகள் செய்யவும், ஆண்களைக் காட்டிலும் பெண்களே மிகவும் தகுதியுடையவர்கள். முரட்டுத்தனமான காரியங்களைச் செய்வதில் ஆண்களுக்கு அதிகத் துணிவு உண்டு என்று நான் நம்புகிறேன். அதைப் போலவே 'தியாகம்' செய்வதற்கான துணிவு பெண்களிடம் எப்போதும் ஆடவர்களைக் காட்டிலும் அதிகமுண்டு.

-அண்ணல் காந்தியடிகள்





# பொம்மை தந்த பாடம்

காந்தியடிகளின் மேசைமேல் மூன்று குரங்குப் பொம்மைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒருநாள் ஒருவர், இப்பொம்மைகள் ஏன் இங்கு வைக்கப்பட்டுள்ளன? என்று கேட்டார்.

'இவை மூன்றும் என் குரு' என்று பதிலளித்தார் காந்தியடிகள். பின் சொன்னார், ''எனக்குச் சரியாக நினைவில்லை. பல ஆண்டுகளுக்குமுன் சீன நண்பர் ஒருவர் இதை மகாதேவ் தேசாயிடம் கொடுத்திருந்தார். பின் இது அவரிடமிருந்து என்னிடம் வந்தது. மேலான, உயர்ந்த, நீதிகள் சீனப் பண்பாட்டில் இன்றும் அழியாது இருக்கின்றன. உயர்ந்த தத்துவத்தைக் கூறுகின்றன இந்தப் பொம்மைகள்.

'ஒரு பொழுதும் பொய் பேசாதே, எவரையும் பழிக்காதே என்ற நீதியைச் சொல்லும் வகையில் முதல் குரங்கு வாயை மூடிக் கொண்டுள்ளது.

இரண்டாவது குரங்கு தன் கண்ணைப் பொத்திக் கொண்டுள்ளது. இது கண்களால் 'தீயதைப் பாராதே' என்று அறிவுறுத்துகிறது''.

''நான் உலாவச் செல்கையில் பிறர் தோளில் கை வைத்துக் கொண்டு செல்கையில் கண்களை மூடிக் கொள்வதும் உண்டு. என்னைக் கவனமாக அழைத்துச் செல்கிறார்கள். இதனால் எனக்கு அமைதியும் ஆற்றலும் கிட்டுகிறது'' என்று காந்தியடிகள் கூறினார்.

''மூன்றாவது குரங்கு என்ன சொல்லுகிறது தெரியுமா?' என்று மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தார்.

'தீய செயலையும் தீய சொற்களையும் கேளாதே' என்கிறது அக் குரங்கு. எத்துணை உயர்ந்த கோட்பாடு இது! செவியைத் தீயவழிக்குத் திருப்புவது மனிதனின் அமைதியைக் குலைக்கிறது. மேலும், உள்ளத்தை மன்னிக்க இயலாத குற்றத்திற்கு இழுத்துச் செல்கிறது. நம் எல்லோருக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது.

காந்தியடிகள் அப்பொழுது உணவருந்திக் கொண்டிருந்தார். பின், கைகளைக் கழுவியபின் மீண்டும் தொடர்ந்தார்:

''நான் இவ்விளையாட்டுப் பொம்மையைக்கலையோடு கூடியது என்று கருதுகிறேன். இதன் புற வடிவம் மட்டும் அழகானதல்ல; மறைந்திருக்கும் தத்துவமும் மனித இனத்திற்குப் பயனளிக்கும் மனித சமூகத்தை முன்னேற்றாத கலையையும், மனிதனுக்கு நன்மை தராத கலையையும், கலையென்று சொல்ல முடியாது. கலை மனத்தைத் தூய்மைப்படுத்தி, ஆன்மாவையும் தூய்மையாக்குகிறது. நான் இந்தக் குரங்குகளை அறிவுப் பூர்வமாகவே குரு என்று கருதுகிறேன். அவைகளை நான் செல்லும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லுகிறேன். அடிக்கடி இவை எனக்குப் பாடம் கற்பிக்கின்றன''.

—ஆதாரம்:'காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்'.

உள்ளனர். ஆனால் மின் வெட்டு விதிக்கையில், குறைந்த அளவில் மின் சக்திப் பயன்பாட்டுக் கோட்பாடுகளைப் பின்பற்றும் தொழிற்சாலைகளுக்கு சலுகை காட்டலாம். இந்நாளில், வாரியம் பின் பற்றும் மின் வெட்டு வரையறையின்படி சம்பந்தப்பட்ட தொழில் பிரிவிற்கு இனி ஒதுக்கப்படும் மின் உற்பத்தி அளவானது, அத்தொழிற்பிரிவு இதற்கு முன்னர் பயன்படுத்திய குறைவான பயனீட்டு அடிப்படையில் இருக்குமென்பதால், அவ்வாறு குறைந்த அளவு மின் பயனீட்டுக் கணக்குக் காட்டுவது ஒரு தொழிற்சாலை நலனுக்கு உகந்ததாக இராது. இதன் காரணமாக 1-MUA-க்கும் அதிகமாக உயரழுத்த மின் சக்தியை பெருமளவில் பயன்படுத்துவோர் களுக்கேனும் விரிவாகத் திட்டமிடுவது அவசியமாகிறது.

மின்வாரியம் மின்பற்றாக் குறையை சமாளிக்க வகுத்துக்கொள்ள விழையும் மின்தேவை நிருவாகம் பற்றிய திட்டங்களில் இவை சில வாகும். மேற்கத்திய நாடுகளில் தொழில்துறை மின் பயனீட்டாளர்கள் ஏற்கத்தக்க வகையில் மின் கட்டண விகிதங்கள் நடைமுறையில் உள்ளன. இவை மின்தடைகள், மின் வெட்டுகள் ஆகியவற்றின் அளவு வேறுபாடுகளுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளும் அட்டவணைகளை உடையன. தொழிற்பயன்பாட்டிற்கான உயர் மின்னழுத்தம், குறைந்த அளவு மின்னழுத்தம் ஆகியவற்றிற்கு ஒரே சீரான அளவில் மின் கட்டணம் விதிப்பதற்குப் பதிலாக, புதிய கட்டண முறையை வகுக்கும் போது இக்கட்டண முறைகளில் சில வற்றை ஆராய்ந்து பார்க்கலாம்.

(இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை இதை எழுதியவரின் சொந்தக் கருத்துக்களாகும். இவை திட்டக் குழுவின் கருத்துக்கள் அல்ல.)

# தமிழ்நாடு மின்சார வாரியம்
## மேட்டூர் அனல்மின்திட்டம், மேட்டூர் அணை-1.

1.0) கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வேலையின் பெயர் | ஒப்பந்த எண் | ஒப்பந்த பிரதியின் விலை. | வைப்புத்தொகை | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை | ஒப்பந்த புள்ளிகள் பெறுவதற்கு கடைசி தேதியும் நேரமும். |
|---|---|---|---|---|---|---|
| . மேட்டூர் அனல் மின் திட்ட கட்டுமானப் பிரிவின் மத்திய கிடங்கு வளாகத்தில் மேலும் புதியதாக இரண்டு கிடங்கு சாலை 32 × 12 m அளவுள்ளது கட்டுவது. | SEC.2/MTPP/2259/90-91 | தமிழ்நாட்டிற்குள் மட்டும் நூறு மட்டும். வெளிமாநிலங்களுக்கு வரி ரூ.10/- மொத்தம் ரூ.110/- | ரூபாய் எட்டாயிரத்து முன்னூறு மட்டும். ரூ.8,300/- | 10.10.90 பிற்பகல் 3.30 மணி. | ரூ.8,30,000/- | 10.10.90 புதன்கிழமை நண்பகல் 12.00 மணி. |

2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணை குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer) மேட்டூர் அனல்மின் திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்கு செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை அல்லது பண அஞ்சல் இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக்கொள்வதின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். தாமதமாக பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத்தொகையின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும், ஒப்பந்தங்கள் நுண்கலை உதவியாளர் (Executive Assistant to Superintending Engineer/C.II/M.T.P.P. அவர்களால் பெறப்படும், ஒப்பந்தங்கள் Russian Erectors' Qrs.-ல் திறக்கப்படும்.

3.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்த பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது கால தாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

4.0) ஒப்பந்த பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.

5.0) ஒப்பந்தப்பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

6.0) ஒப்பந்த பிரதிகள் 20.9.90 முதல் விற்பனைக்குக் கிடைக்கும்.

7.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்வதற்கு மின்வாரியம் தன்னைக்கட்டுப்படுத்திக்கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு, விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை எனக்கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உரிமை தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தகுதி பெற்ற மின்சார வாரிய அலுவலருக்கு உண்டு.

8.0) ஒப்பந்த புள்ளிகள் விற்பனை, ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் நாளின் முதல் நாள் மாலை 5.00 மணிக்கு நிறுத்தப்படும்.

DIPR/252/MS/90/MCS

மேற்பார்வை பொறியாளர்/சிவில்-2
மேட்டூர் அனல்மின் திட்டம்





# அண்ணா அருங்காட்சியகம்

பேரறிஞர் அண்ணா அவர்களின் 82-வது பிறந்தநாள் விழாவும் (15.9.1990), தந்தை பெரியார் அவர்களின் 112-வது பிறந்தநாள் விழாவும் (17.9.1990) சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலைகள் வண்ண விளக்குகளாலும், பூச்சரங்களாலும் அழகு படுத்தப் பட்டிருந்தன.

15.9.90, 17.9.90 ஆகிய நாட்களில் காலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் திருவுருவச் சிலைகளுக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

### அண்ணா அருங்காட்சியகம்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.9.90 அன்று காலையில் அவர்கள் அனைவரும் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாலையணிவித்தார்கள். அங்கு சென்ற அவர்களைப் பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களும், டாக்டர் சி.என்.ஏ. பரிமளம் அவர்களும் வரவேற்றனர். அதன்பின்-மெரீனா கடற்கரையில் காமராசர் சாலையில் உள்ள அண்ணா சதுக்கத்தையொட்டிப் பிறை வடிவில் அமைக்கப்பட்டிருந்த 'அண்ணா அருங்காட்சியகம்' மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழா, மாண்புமிகு மத்திய நகர்ப்புறவளர்ச்சி மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய இந்த விழாவில் - 'அண்ணா அருங்காட்சியகம்' இருபத்தேழு நாட்களில் சுமார் ரூ.25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட அற்புதம் குறித்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணி அம்மையாருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். விழா முடிவில், செய்தித்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார். விழா நிகழ்ச்சிகளைச் செய்தித்துறை இயக்குநர் திரு.க.முத்துசாமி அவர்கள் தொகுத்து வழங்கினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தோற்றம் முதல் மறைவு வரை நிகழ்ந்த பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை விளக்கும் எண்ணற்ற புகைப் படங்களும், அவர் பயன்படுத்தி வந்த டயரி, எழுதுகோல் போன்ற பொருட்களும், அவர் தம் கைப்பட எழுதிய தமிழ்-ஆங்கில எழுத்தேடுகளும், அவர்தம் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும், அவர் பெற்ற பட்டச் சான்றிதழ் போன்றவைகளும் இந்த அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய சொற்பொழிவுகள் ஒலிபரப்பப்படுகின்றன.

அங்குள்ள தொலைக்காட்சி மூலம், பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் படுகின்றன.

அண்ணா நினைவிடத்தையொட்டி, அழகுபட அமைக்கப்பட்டுள்ள அண்ணா அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:

"அண்ணா சதுக்கத்தில் அண்ணா துயிலும் இடத்தில் அண்ணா அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டுமென்று 1973-74-ஆம் ஆண்டிலேயே நினைத்து, அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்ட நேரத்தில் அது இயலாமல் போனது ஏன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். 13,14 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அன்றைக்கு எண்ணியதை

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற குறளுக்கேற்ப இன்றைக்கு இயன்ற அளவு செயலாக்கிக் காட்டியிருக்கிறோம்.

இயன்ற அளவு என்று நான் சொல்லக் காரணம் இங்கு உரையாற்றிய பொதுப்பணித் துறை அமைச்சரும், தம்பி முரசொலி மாறனும், பேராசிரியரும் சுட்டிக்காட்டியதைப் போல் இந்த அருங்காட்சியகத்தில் இடம்பெற வேண்டிய இன்னும் பல புகைப்படங்கள், அண்ணா அவர்களின் வாழ்க்கையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள், அவர் கலந்து கொண்ட போராட்டங்கள், அவர் புகுந்த சிறைச் சாலைகள் ஆகியவைகளைப் பற்றிய விவரங்கள் எல்லாம் ஆதார பூர்வ



தந்தை பெரியார் அவர்களின் 112-வது பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும், மர்ண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் தந்தை பெரியார் சிலைக்கு மாலையணிவித்தனர் (17.9.90)

மான நிழற்படங்களாக, ஒளிப்படங்களாகக் கிடைக்காத காரணத்தால்- அவைகள் விரைவில் ஆங்காங்குள்ள நண்பர்கள் வாயிலாக அனுப்பி வைக்கப்படுமென்ற நம்பிக்கையோடு- இந்த நாளில் இந்த அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்துவிட வேண்டும் என்ற முனைப்போடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

இந்தக் காட்சியகத்திலே உள்ள படங்களையெல்லாம் பார்த்துக் கொண்டே வரும்போது அரசியலில், இலக்கியத்தில், பொதுமேடையில், நாடகத்தில், அவருடைய வீட்டில் எப்படியெல்லாம் அண்ணா அவர்கள் பழகினார்கள், எப்படியெல்லாம் மற்றவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தார்கள் என்பன போன்ற உணர்வுகளை அந்தப் படங்களின் வாயிலாக நாம் காண முடிகின்றது. அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் இங்கே ஏராளமானவர்கள் இருக்கின்றோம். ஒவ்வொரு வகையில், ஒவ்வொரு கோணத்தில் அவரோடு பழகியவர்கள்- மிக நெருங்கிப் பழகியவர்கள்- அருகாமையிலே இருந்தவர்கள்- அவருடைய ஆணைகேட்டு அவைகளை நிறைவேற்றுவதற்காக அல்லும் பகலும் ஓயாது உழைத்தவர்கள் என்றெல்லாம் அண்ணாவின் இதயத்திலே இடம்பெற்ற பலர் இங்கேயிருக்கின்றோம்.

இந்த அருங்காட்சியகத்தைக் காணும்போது அவரோடு காரிலே பயணம் செய்த நாட்கள்- அவரோடு வீட்டிலே அளவளாவிய நாட்கள்- அவரோடு உணவருந்திய காலங்கள்- காஞ்சிபுரத்திலே அவருடைய இல்லத்திற்கு எதிரேயுள்ள சிறு பெட்டிக் கடை போன்ற, கீழே சாக்கடை ஓடிக்கொண்டிருக்கின்ற ஒரு பகுதியில் அவர் அமர்ந்து, எங்களையெல்லாம் உட்கார வைத்துக்கொண்டு இரவு ஒருமணி, இரண்டு மணி வரையிலே, ஏன் விடியற்காலை நான்கு மணி வரையிலே கூட அறிவு உபதேசம் செய்வாரே அந்தக் காலங்கள்- இவைகளையெல்லாம் எண்ணியெண்ணிப் பார்க்கிறேன். அந்த அண்ணா இன்றைக்கு இல்லை என்றாலும்கூட, அவருக்கு ஒரு வரலாறு உண்டு.

அந்த வரலாறு திராவிட இயக்கத்தின் வரலாறாக- தமிழ் இலக்கியத்தின் வரலாறாக - தமிழ்நாடகத் துறையின் வரலாறாக- தமிழ்க் கலைத்துறையின் வரலாறாக- ஏன் தமிழனின் வரலாறாக விளங்கிக் கொண்டிருக்கின்ற வரலாறாகும். அப்படிப்பட்ட வரலாற்று நாயகனுக்கு இங்கு உருவாக்கியுள்ள இந்த அருங்காட்சியகம்- அவருக்காக அல்ல. அவர் எப்படி வாழ்ந்தார்; எப்படி அரசியல் நடத்தினார்; எத்தகைய துன்பங்களைத் தாங்கிக் கொண்டார்; எப்படி இந்த இயக்கத்தைக் குடும்பப் பாச உணர்வோடு நடத்தினார் என்பவைகளையெல்லாம் புரிந்துகொள்ள இந்த அருங்காட்சியகம் பயன்படும் என்று நம்புகிறேன். இது மேலும் மக்களுக்குப் பயன்படும் வகையில் ஆங்காங்கு நண்பர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற ஆதாரபூர்வமான செய்திகளை- படங்களை- சின்னங்களை இந்த அருங்காட்சியகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மிகக்குறுகிய காலத்திலே இந்த அரிய காட்சியகத்தை உருவாக்கித் தந்த பொதுப்பணித் துறைக்கும், அதை உருவாக்க நான் கருத்து தெரிவித்தவுடன் செயற்படுத்த முன்வந்த செய்தித்துறைக்கும் - அந்தத் துறைகளின் அமைச்சர்களுக்கும் அந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள், பொறியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அருங்காட்சியகத்தின் திறப்பு விழாவிற்கு வந்து மேலும் இந்த நிகழ்ச்சிக்கு ஒரு சிறப்பைத் தந்த அண்ணியார் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து இந்த அளவிலே என் உரையை நிறைவு செய்கிறேன்.''

-நமது செய்தியாளர்.



TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## சிறப்புத் தேர்வு - மே - 1990

ாய்த்துறைத்தேர்வு - பாகம்-1- இரண்டாம் தாள் தேர்ச்சி பெற்றவர்களின பதிவெண்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 34 | 122 | 268 | 469 | 1353 | 1445 | 1552 | 1764 | 2227 | 2410 |
| 3117 | 3366 | 3412 | 3672 | 3695 | 3776 | 4070 | 4126 | 4247 | 4552 |
| 4742 | 4745 | 4828 | 4850 | 4983 | 5068 | 5073 | 5094 | 5125 | 5196 |
| 5530 | 5668 | 6168 | 6195 | 6196 | 6198 | 6208 | 6234 | 6257 | 6329 |
| 6454 | 6738 | 6971 | 7243 | 8075 | 8079 | 8400 | 8549 | 8626 | 8906 |
| 8960 | 8996 | 9185 | 9472 | 9576 | 9586 | 10659 | 10806 | 11070 | 11365 |
| 11682 | 11984 | 12327 | 12474 | 12522 | 12710 | 12725 | 12731 | 12739 | 12764 |
| 12863 | 12944 | 13044 | 13112 | 13151 | 13209 | 13564 | 13862 | 14099 | 14160 |
| 14380 | 14470 | 14501 | 14510 | 14538 | 14542 | 14600 | 14751 | 14786 | 14830 |
| 14911 | 14941 | 14954 | 15212 | 15254 | 15269 | 15423 | 15445 | 15529 | 15863 |
| 15954 | 16091 | 16587 | 16971 | 16977 | 16997 | 17044 | 17092 | 17101 | 17153 |
| 17206 | 17450 | 17474 | 17495 | 17551 | 17554 | 17811 | 17903 | 17926 | 17950 |
| 18052 | 18129 | 18151 | 18170 | 18220 | 18234 | 18253 | 18340 | 18459 | 18556 |
| 18788 | 18809 | 18827 | 18993 | 19048 | 19084 | 19438 | 19768 | 19785 | 19860 |
| 19955 | 20038 | 20088 | 20091 | 20131 | 20155 | 20160 | 20274 | 20275 | 20285 |

இமே குறிப்பிடப்பட்டுள்ள பதிவு எண் கொண்ட விண்ணப்பதாரரின் தேர்வு முடிவு நிறுத்திட்டுள்ளது. தேர்வின் முடிவு பின்னர் தெரிவிக்கப்படும்.

512

## சிறப்புத் தேர்வுகள் - மே - 1990

மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 17 | 23 | 31 | 45 | 46 | 55 | 64 | 82 | 90 |
| 96 | 111 | 113 | 129 | 132 | 136 | 142 | 145 | 147 | 151 |
| 167 | 172 | 173 | 178 | 193 | 199 | 213 | 216 | 227 | 238 |
| 245 | 248 | 249 | 250 | 262 | 263 | 276 | 278 | 281 | 282 |
| 296 | 310 | 311 | 338 | 355 | 356 | 365 | 366 | 370 | 378 |
| 386 | 387 | 397 | 404 | 413 | 414 | 420 | 423 | 438 | 439 |
| 449 | 453 | 461 | 465 | 466 | 473 | 484 | 486 | | 505 |
| 515 | 522 | 532 | 540 | 546 | 553 | 558 | 567 | 579 | 602 |
| 628 | 633 | 639 | 658 | 661 | 672 | 694 | 714 | 717 | 718 |
| 723 | 731 | 745 | 746 | 748 | 755 | 756 | 758 | 760 | 773 |
| 780 | 785 | 792 | 796 | 799 | 802 | 807 | 810 | 823 | 846 |
| 854 | 868 | 878 | 888 | 889 | 895 | 899 | 913 | 918 | 920 |
| 941 | 945 | 946 | 964 | 967 | 972 | 974 | 977 | 978 | 994 |
| 1006 | 1014 | 1016 | 1017 | 1025 | 1034 | 1044 | 1053 | 1056 | 1062 |
| 1071 | 1073 | 1082 | 1110 | 1113 | 1125 | 1134 | 1141 | 1142 | 1155 |
| 1163-ஏ | 1171 | 1176 | 1180 | 1183 | 1199 | 1200 | 1205 | 1211 | |
| 1229 | 1235 | 1237 | 1241 | 1249 | 1264 | 1268 | 1270 | 1271 | 1272 |
| 1285 | 1290 | 1295 | 1300 | 1302 | 1306 | 1307 | 1310 | 1317 | 1318 |
| 1322 | 1327 | 1329 | 1334 | 1337 | 1339 | 1340 | 1346 | 1354 | 1362 |
| 1376 | 1382 | 1383 | 1384 | 1395 | 1396 | 1399 | 1413 | 1420 | 1421 |
| 1436 | 1450 | 1458 | 1461 | 1466 | 1477 | 1487 | 1495 | 1497 | 1500 |
| 1511 | 1513 | 1520 | 1529 | 1532 | 1547 | 1549 | 1554 | 1557 | 1559 |
| 1568 | 1571 | 1573 | 1574 | 1576 | 1584 | 1591 | 1595 | 1598 | 1599 |
| 1604 | 1605 | 1606 | 1607 | 1611 | 1631 | 1641 | 1644 | 1647 | 1671 |
| 1684 | 1688 | 1689 | 1690 | 1693 | 1698 | 1699 | 1700 | 1706 | 1711 |
| 1721 | 1723 | 1726 | 1732 | 1749 | 1751 | 1755 | 1757 | 1781 | 1782 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1785 | 1786 | 1787 | 1792 | 1794 | 1797 | 1798 | 1804 | 1812 | 1814 | 1816 |
| 1830 | 1835 | 1836 | 1853 | 1854 | 1859 | 1861 | 1862 | 1865 | 1876 | 1881 |
| 1882 | 1893 | 1897 | 1899 | 1900 | 1911 | 1915 | 1920 | 1923 | 1927 | 1930 |
| 1937 | 1943 | 1946 | 1947 | 1955 | 1956 | 1959 | 1963 | 1965 | 1970 | 1973 |
| 1976 | 1983 | 1988 | 1989 | 1991 | 1994 | 1997 | 1998 | 2002 | 2006 | 2008 |
| 2012 | 2017 | 2024 | 2028 | 2031 | 2032 | 2043 | 2045 | 2056 | 2057 | 2064 |
| 2069 | 2074 | 2077 | 2081 | 2082 | 2084 | 2088 | 2098 | 2099 | 2102 | 2103 |
| 2106 | 2107 | 2108 | 2116 | 2120 | 2123 | 2127 | 2133 | 2138 | 2139 | 2145 |
| 2151 | 2154 | 2156 | 2158 | 2162 | 2170 | 2177 | 2182 | 2183 | 2190 | 2191 |
| 2197 | 2204 | 2214 | 2215 | 2225 | 2234 | 2252 | 2253 | 2255 | 2260 | 2265 |
| 2266 | 2270 | 2274 | 2275 | 2286 | 2287 | 2289 | 2293 | 2296 | 2298 | 2307 |
| 2316 | 2327 | 2328 | 2331 | 2338 | 2341 | 2344 | 2351 | 2358 | 2360 | 2369 |
| 2371 | 2374 | 2381 | 2386 | 2388 | 2417 | 2423 | 2424 | 2427 | 2438 | 2442 |
| 2446 | 2448 | 2450 | 2463 | 2465 | 2466 | 2470 | 2471 | 2474 | 2475 | 2483 |
| 2486 | 2491 | 2492 | 2498 | 2499 | 2501 | 2502 | 2511 | 2521 | 2523 | |
| 2545 | 2546 | 2550 | 2555 | 2556 | 2560 | 2564 | 2568 | 2569 | 2570 | 2573 |
| 2577 | 2584 | 2587 | 2588 | 2591 | 2592 | 2599 | 2603 | 2605 | 2611 | 2616 |
| 2617 | 2621 | 2625 | 2634 | 2636 | 2638 | 2639 | 2655 | 2661 | 2663 | 2670 |
| 2677 | 2678 | 2683 | 2686 | 2689 | 2693 | 2694 | 2702 | 2706 | 2723 | 2726 |
| 2728 | 2734 | 2735 | 2739 | 2741 | 2745 | 2777 | 2778 | 2779 | 2785 | 2790 |
| 2792 | 2795 | 2796 | 2807 | 2811 | 2813 | 2818 | 2819 | 2822 | 2825 | 2827 |
| 2830 | 2833 | 2840 | 2843 | 2851 | 2863 | 2866 | 2882 | 2885 | 2892 | 2893 |
| 2899 | 2901 | 2908 | 2909 | 2915 | 2933 | 2941 | 2948 | 2952 | 2953 | 2967 |
| 2972 | 2975 | 2976 | 2979 | 2981 | 2986 | 2991 | 2995 | 2996 | 3007 | 3010 |
| 3011 | 3017 | 3030 | 3033 | 3036 | 3038 | 3039 | 3041 | 3043 | 3045 | 3047 |
| 3048 | 3051 | 3055 | 3057 | 3059 | 3064 | 3071 | 3077 | 3086 | 3089 | 3095 |
| 3096 | 3098 | 3099 | 3100 | 3104 | 3110 | 3119 | 3122 | 3126 | 3139 | 3145 |
| 3146 | 3148 | 3149 | 3152 | 3155 | 3158 | 3172 | 3173 | 3174 | 3181 | 3184 |
| 3186 | 3190 | 3192 | 3194 | 3199 | 3200 | 3202 | 3203 | 3207 | 3209 | 3211 |
| 3215 | 3219 | 3220 | 3225 | 3247 | 3248 | 3251 | 3252 | 3257 | 3258 | 3262 |
| 3264 | 3268 | 3269 | 3270 | 3272 | 3274 | 3281 | 3283 | 3284 | 3286 | 3288 |
| 3289 | 3290 | 3293 | 3296 | 3299 | 3300 | 3302 | 3305 | 3306 | 3307 | 3308 |
| 3311 | 3313 | 3318 | 3321 | 3323 | 3324 | 3327 | 3330 | 3338 | 3343 | |
| 3351 | 3354 | 3359 | 3367 | 3372 | 3380 | 3382 | 3384 | 3385 | 3387 | 3388 |
| 3390 | 3392 | 3396 | 3410 | 3414 | 3418 | 3419 | 3421 | 3427 | 3434 | 3439 |
| 3442 | 3443 | 3445 | 3453 | 3456 | 3461 | 3463 | 3469 | 3470 | 3472 | 3480 |
| 3481 | 3482 | 3483 | 3487 | 3490 | 3496 | 3498 | 3503 | 3504 | 3510 | 3511 |
| 3515 | 3516 | 3519 | 3524 | 3532 | 3533 | 3538 | 3544 | 3546 | 3548 | 3549 |
| 3552 | 3558 | 3566 | 3570 | 3571 | 3572 | 3578 | 3583 | 3585 | 3586 | 3588 |
| 3589 | 3596 | 3608 | 3610 | 3624 | 3632 | 3633 | 3639 | 3643 | 3651 | 3656 |
| 3657 | 3659 | 3684 | 3687 | 3688 | 3693 | 3694 | 3739 | 3745 | 3746 | 3748 |
| 3763 | 3766 | 3775 | 3785 | 3786 | 3787 | 3789 | 3802 | 3806 | 3818 | 3833 |
| 3840 | 3841 | 3843 | 3853 | 3857 | 3858 | 3864 | 3866 | 3870 | 3872 | 3890 |
| 3893 | 3894 | 3911 | 3912 | 3918 | 3921 | 3936 | 3947 | 3948 | 3953 | 3954 |
| 3959 | 3962 | 3968 | 3974 | 3986 | 3987 | 3999 | 4015 | 4027 | 4035 | 4038 |
| 4039 | 4042 | 4046 | 4050 | 4051 | 4077 | 4080 | 4082 | 4083 | 4106 | 4110 |
| 4113 | 4120 | 4121 | 4127 | 4128 | 4145 | 4146 | 4147 | 4156 | 4159 | 4160 |
| 4162 | 4164 | 4169 | 4170 | 4171 | 4172 | 4178 | 4191 | 4207 | 4209 | 4223 |
| 4235 | 4240 | 4244 | 4245 | 4246 | 4267 | 4270 | 4271 | 4280 | 4294 | 4303 |
| 4313 | 4324 | 4328 | 4333 | 4338 | 4343 | 4351 | 4357 | 4364 | 4369 | 4370 |
| 4371 | 4375 | 4378 | 4386 | 4391 | 4403 | 4406 | 4411 | 4412 | 4424 | 4426 |
| 4439 | 4444 | 4447 | 4454 | 4460 | 4471 | 4472 | 4489 | 4492 | 4502 | 4512 |
| 4513 | 4515 | 4519 | 4520 | 4521 | 4532 | 4541 | 4543 | 4544 | 4547 | 4561 |
| 4565 | 4568 | 4571 | 4573 | 4577 | 4578 | 4591 | 4594 | 4597 | 4617 | 4625 |
| 4630 | 4633 | 4638 | 4639-ஏ | 4647 | 4650 | 4652 | 4670 | 4676 | 4679 | 4680 |
| 4691 | 4697 | 4699 | 4707 | 4723 | 4734 | 4741 | 4752 | 4753 | 4756 | 4761 |
| 4762 | 4764 | 4768 | 4769 | 4774 | 4781 | 4786 | 4792 | 4808 | 4814 | 4820 |
| 4832 | 4834 | 4844 | 4852 | 4853 | 4864 | 4865 | 4866 | 4875 | 4883 | 4888 |
| 4889 | 4891 | 4902 | 4909 | 4911 | 4912 | 4919 | 4920 | 4922 | 4923 | 4925 |
| 4927 | 4931 | 4932 | 4934 | 4936 | 4946 | 4966 | 4967 | 4970 | 4971 | 4984 |
| 4994 | 5001 | 5005 | 5007 | 5014 | 5020 | 5029 | 5034 | 5039 | 5040 | 5042 |
| 5048 | 5049 | 5064 | 5067 | 5069 | 5072 | 5079 | 5080 | 5081 | 5090 | 5095 |
| 5101 | 5102 | 5103 | 5115 | 5119 | 5133 | 5142 | 5154 | 5158 | 5160 | 5161 |
| 5167 | 5172 | 5182 | 5184 | 5188 | 5206 | 5209 | 5213 | 5220 | 5225 | 5227 |
| 5239 | 5272 | 5276 | 5278 | 5288 | 5289 | 5300 | 5317 | 5321 | 5330 | 5349 |
| 5350 | 5352 | 5355 | 5357 | 5360 | 5368 | 5371 | 5373 | 5374 | 5375 | 5380 |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5382 | 5387 | 5393 | 5399 | 5402 | 5406 | 5408 | 5409 | 5410 | 5412 | 5413 |
| 5418 | 5421 | 5429 | 5431 | 5432 | 5440 | 5444 | 5446 | 5450 | 5451 | 5456 |
| 5463 | 5466 | 5470 | 5476 | 5496 | 5497 | 5500 | 5503 | 5508 | 5526 | 5529 |
| 5533 | 5536 | 5539 | 5542 | 5547 | 5556 | 5566 | 5569 | 5576 | 5577 | 5586 |
| 5600 | 5603 | 5618 | 5617 | 5626 | 5633 | 5634 | 5636 | 5644 | 5645 | 5648 |
| 5649 | 5650 | 5658 | 5659 | 5671 | 5674 | 5690 | 5693 | 5701 | 5721 | 5727 |
| 5734 | 5739 | 5741 | 5742 | 5750 | 5758 | 5764 | 5770 | 5775 | 5784 | 5785 |
| 5788 | 5789 | 5794 | 5809 | 5818 | 5821 | 5827 | 5841 | 5849 | 5854 | 5860 |
| 5865 | 5866 | 5872 | 5879 | 5882 | 5886 | | | | | |
| 5890 | 5893 | 5898 | 5903 | 5904 | 5911 | 5913 | 5919 | 5920 | 5921 | 5924 |
| 5925 | 5926 | 5936 | 5943 | 5949 | 5950 | 5951 | 5952 | 5956 | 5958 | 5959 |
| 5962 | 5967 | 5968 | 5972 | 5974 | 5976 | 5977 | 5978 | 5982 | 5991 | 5992 |
| 6001 | 6002 | 6006 | 6027 | 6031 | 6036 | 6043 | 6045 | 6049 | 6068 | 6077 |
| 6087 | 6088 | 6096 | 6099 | 6107 | 6112 | 6117 | 6118 | 6122 | 6133 | 6152 |
| 6154 | 6163 | 6169 | 6173 | 6174 | 6176 | 6179 | 6180 | 6182 | 6184 | 6189 |
| 6191 | 6207 | 6209 | 6210 | 6216 | 6217 | 6223 | 6227 | 6228 | 6229 | 6233 |
| 6235 | 6236 | 6237 | 6240 | 6241 | 6246 | 6253 | 6258 | 6260 | 6264 | 6266 |
| 6276 | 6282 | 6291 | 6294 | 6296 | 6300 | 6303 | 6304 | 6305 | 6309 | |
| 6318 | 6322 | 6323 | 6325 | 6336 | 6341 | 6342 | 6348 | 6351 | 6352 | 6353 |
| 6361 | 6364 | 6365 | 6366 | 6370 | 6371 | 6372 | 6381 | 6391 | 6397 | 6410 |
| 6411 | 6413 | 6417 | 6418 | 6423 | 6428 | 6430 | 6432 | 6437 | 6439 | 6443 |
| 6453 | 6456 | 6460 | 6464 | 6466 | 6470 | 6478 | 6493 | 6495 | 6497 | 6499 |
| 6503 | 6515 | 6527 | 6536 | 6545 | 6547 | 6560 | 6589 | 6593 | 6600 | 6611 |
| 6619 | 6634 | 6646 | 6648 | 6650 | 6652 | 6658 | 6679 | 6682 | 6708 | 6731 |
| 6744 | 6748 | 6761 | 6768 | 6788 | 6803 | 6809 | 6819 | 6820 | 6830 | 6832 |
| 6834 | 6836 | 6847 | 6848 | 6852 | 6853 | 6862 | 6875 | 6887 | 6889 | 6890 |
| 6896 | 6904 | 6910 | 6927 | 6949 | 6958 | 6977 | 6978 | 6983 | 6986 | 6987 |
| 6989 | 6991 | 7016 | 7023 | 7032 | 7042 | 7051 | 7062 | 7068 | 7079 | 7080 |
| 7093 | 7104 | 7108 | 7110 | 7111 | 7125 | 7136 | 7150 | 7158 | 7159 | 7161 |
| 7166 | 7169 | 7173 | 7176 | 7187 | 7192 | 7199 | 7215 | 7219 | 7269 | 7270 |
| 7271 | 7272 | 7277 | 7285 | 7292 | 7296 | 7298 | 7305 | 7311 | 7312 | 7313 |
| 7314 | 7321 | 7327 | 7331 | 7337 | 7340 | 7348 | 7349 | 7370 | 7379 | 7385 |
| 7393 | 7394 | 7398 | 7405 | 7408 | 7416 | 7418 | 7433 | 7436 | 7442 | 7451 |
| 7457 | 7471 | 7503 | 7514 | 7515 | 7529 | 7533 | 7534 | 7558 | 7569 | 7571 |
| 7572 | 7573 | 7574 | 7590 | 7591 | 7592 | 7620 | 7623 | 7627 | 7642 | 7649 |
| 7683 | 7684 | 7688 | 7692 | 7693 | 7701 | 7705 | 7711 | 7714 | 7726 | 7733 |
| 7757 | 7759 | 7780 | 7781 | 7782 | 7806 | 7811 | 7822 | 7823 | 7832 | 7846 |
| 7847 | 7859 | 7877 | 7907 | 7920 | 7927 | 7935 | 7963 | 7979 | 7980 | 8007 |
| 8008 | 8028 | 8032 | 8037 | 8050 | 8056 | 8059 | 8070 | 8073 | 8085 | 8095 |
| 8102 | 8118 | 8167 | 8176 | 8187 | 8196 | 8203 | 8209 | 8210 | 8227 | 8229 |
| 8244 | 8247 | 8261 | 8273 | 8274 | 8284 | 8287 | 8294 | 8301 | 8304 | 8327 |
| 8343 | 8345 | 8347 | 8355 | 8356 | 8363 | 8367 | 8373 | 8378 | 8385 | 8413 |
| 8414 | 8417 | 8434 | 8453 | 8457 | 8469 | 8471 | 8475 | 8486 | 8496 | 8499 |
| 8506 | 8516 | 8519 | 8527 | 8538 | 8559 | 8563 | 8586 | 8587 | 8618 | 8623 |
| 8625 | 8627 | 8629 | 8648 | 8649 | 8653 | 8659 | 8663 | 8679 | 8685 | 8700 |
| 8717 | 8720 | 8722 | 8727 | 8728 | 8735 | 8753 | 8754 | 8756 | 8771 | 8778 |
| 8781 | 8792 | 8794 | 8798 | 8799 | 8805 | 8811 | 8813 | 8815 | 8816 | 8820 |
| 8828 | 8847 | 8867 | 8874 | 8883 | 8902 | 8912 | 8920 | 8923 | 8938 | 8939 |
| 8943 | 8973 | 8985 | 8987 | 8989 | 8997 | 9006 | 9010 | 9025 | 9050 | 9051 |
| 9072 | 9092 | 9099 | 9116 | 9141 | 9157 | 9162 | 9171 | 9173 | 9176 | 9177 |
| 9183 | 9184 | 9188 | 9190 | 9202 | 9207 | 9208 | 9216 | 9218 | 9221 | 9225 |
| 9230 | 9231 | 9234 | 9238 | 9239 | 9271 | 9299 | 9310 | 9348 | 9357 | 9368 |
| 9371 | 9374 | 9375 | 9378 | 9393 | 9408 | 9420 | 9428 | 9431 | 9432 | 9444 |
| 9449 | 9460 | 9462 | 9465 | 9468 | 9469 | 9471 | 9478 | 9481 | 9495 | 9500 |
| 9504 | 9506 | 9524 | 9554 | 9555 | 9556 | 9565 | 9567 | 9568 | 9588 | 9589 |
| 9597 | 9629 | 9634 | 9643 | 9668 | 9670 | 9683 | 9689 | 9706 | 9726 | 9727 |
| 9748 | 9759 | 9765 | 9771 | 9774 | 9776 | 9778 | 9779 | 9787 | 9789 | 9794 |
| 9795 | 9803 | 9814 | 9819 | 9823 | 9825 | 9830 | 9840 | 9850 | 9855 | 9858 |
| 9869 | 9903 | 9951 | 9953 | 9963 | 9969 | 9972 | 9974 | 9978 | 9980 | 9987 |
| 9995 | 9996 | 9999 | 10022 | 10026 | 10034 | 10065 | 10079 | 10091 | 10093 | 10095 |
| 10098 | 10114 | 10119 | 10131 | 10137 | 10142 | 10160 | 10165 | 10166 | 10177 | 10183 |
| 10190 | 10198 | 10211 | 10230 | 10245 | 10250 | 10263 | 10267 | 10284 | 10303 | 10308 |
| 10312 | 10324 | 10342 | 10348 | 10378 | 10386 | 10394 | 10399 | 10402 | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 406 | 10435 | 10456 | 10470 | 10484 | 10489 | 10490 | 10494 | 10510 | 10512 | 1052 |
| 0545 | 10552 | 10560 | 10561 | 10573 | 10574 | 10578 | 10580 | 10588 | 10592 | 1060 |
| 0612 | 10619 | 10639 | 10668 | 10669 | 10675 | 10692 | 10695 | 10716 | 10723 | 1072 |
| 0737 | 10739 | 10756 | 10781 | 10792 | 10794 | 10828 | 10838 | 10844 | 10846 | 1084 |
| 0848 | 10862 | 10864 | 10878 | 10879 | 10881 | 10886 | 10887 | 10896 | 10928 | 1095 |
| 0954 | 10955 | 10958 | 10965 | 10967 | 10971 | 10972 | 10989 | 10991 | 10992 | 1099 |
| 1019 | 11022 | 11026 | 11028 | 11035 | 11048 | 11056 | 11057 | 11086 | 11101 | 1110 |
| 1112 | 11115 | 11120 | 11129 | 11135 | 11138 | 11146 | 11168 | 11179 | 11197 | 1119 |
| 1212 | 11230 | 11241 | 11281 | 11284 | 11292 | 11301 | 11311 | 11322 | 11326 | 1133 |
| 347 | 11359 | 11360 | 11362 | 11363 | 11366 | 11376 | 11391 | 11419 | 11423 | 1142 |
| 431 | 11434 | 11441 | 11442 | 11474 | 11476 | 11482 | 11493 | 11522 | 11539 | 1154 |
| 1541 | 11543 | 11555 | 11566 | 11574 | 11582 | 11593 | 11595 | 11598 | 11602 | 1160 |
| 622 | 11630 | 11636 | 11645 | 11647 | 11658 | 11662 | 11667 | 11670 | 11671 | 1167 |
| 675 | 11692 | 11699 | 11713 | 11714 | 11717 | 11724 | 11740 | 11751 | 11754 | 1175 |
| 758 | 11771 | 11778 | 11784 | 11798 | 11817 | 11845 | 11875 | 11876 | 11880 | 1189 |
| 897 | 11899 | 11900 | 11903 | 11909 | 11918 | 11920 | 11929 | 11932 | 11943 | 1194 |
| 956 | 11964 | 11966 | 11973 | 11984 | 11992 | 11995 | 11996 | 12005 | 12014 | 1201 |
| 2019 | 12024 | 12028 | 12029 | 12030 | 12039 | 12086 | 12098 | 12151 | 12173 | 1218 |
| 219 | 12220 | 12222 | 12224 | 12225 | 12231 | 12234 | 12238 | 12242 | 12244 | 1224 |
| 254 | 12258 | 12262 | 12265 | 12266 | 12270 | 12273 | 12275 | 12280 | 12288 | 1230 |
| 2304 | 12305 | 12306 | 12313 | 12317 | 12320 | 12334 | 12335 | 12344 | 12345 | 1234 |
| 2348 | 12350 | 12351 | 12352 | 12354 | 12367 | 12372 | 12378 | 12382 | 12383 | 1238 |
| 2388 | 12397 | 12402 | 12406 | 12408 | 12413 | 12414 | 12415 | 12416 | 12418 | 1242 |
| 2423 | 12431 | 12432 | 12435 | 12441 | 12443 | 12446 | 12450 | 12453 | 12459 | 1246 |
| 2463 | 12466 | 12469 | 12470 | 12475 | 12476 | 12489 | 12491 | 12492 | 12503 | 1250 |
| 2509 | 12515 | 12523 | 12530 | 12531 | 12540 | 12542 | 12543 | 12549 | 12552 | 1255 |
| 2562 | 12565 | 12566 | 12571 | 12575 | 12582 | 12591 | 12592 | 12608 | 12614 | 1261 |
| 619 | 12620 | 12622 | 12627 | 12639 | 12642 | 12644 | 12647 | 12650 | 12654 | 1265 |
| 2660 | 12661 | 12666 | 12668 | 12670 | 12679 | 12683 | 12685 | 12688 | 12691 | 1269 |
| 2694 | 12696 | 12699 | 12701 | 12703 | 12717 | 12732 | 12733 | 12734 | 12736 | 1274 |
| 747 | 12760 | 12763 | 12767 | 12773 | 12774 | 12782 | 12784 | 12790 | 12792 | 1280 |
| 801 | 12802 | 12824 | 12828 | 12832 | 12835 | 12839 | 12847 | 12853 | 12856 | 1286 |
| 861 | 12868 | 12871 | 12876 | 12878 | 12881 | 12902 | 12907 | 12921 | 12928 | 129 |
| 936 | 12940 | 12941 | 12950 | 12951 | 12954 | 12957 | 12958 | 12965 | 12969 | 1297 |
| 981 | 12992 | 13003 | 13016 | 13023 | 13025 | 13027 | 13033 | 13036 | 13037 | 1304 |
| 3050 | 13053 | 13063 | 13089 | 13090 | 13096 | 13097 | 13103 | 13111 | 13114 | 1311 |
| 128 | 13133 | 13145 | 13146 | 13150 | 13163 | 13170 | 13173 | 13190 | 13191 | 1319 |
| 198 | 13203 | 13208 | 13210 | 13220 | 13224 | 13225 | 13227 | 13234 | 13243 | 1324 |
| 258 | 13264 | 13265 | 13268 | 13269 | 13272 | 13273 | 13277 | 13279 | 13286 | 1329 |
| 302 | 13304 | 13306 | 13318 | 13328 | 13331 | 13339 | 13355 | 13358 | 13362 | 1336 |
| 372 | 13374 | 13375 | 13386 | 13408 | 13428 | 13435 | 13442 | 13446 | 13447 | 1344 |
| 457 | 13461 | 13463 | 13480 | 13481 | 13483 | 13488 | 13492 | 13500 | 13505 | 1350 |
| 509 | 13512 | 13520 | 13533 | 13534 | 13536 | 13541 | 13542 | 13544 | 13552 | |
| 524 | 13556 | 13558 | 13562 | 13571 | 13573 | 13574 | 13575 | 13588 | 13596 | 1360 |
| 620 | 13627 | 13634 | 13638 | 13642 | 13655 | 13658 | 13661 | 13662 | 13672 | 1367 |
| 3689 | 13690 | 13691 | 13695 | 13717 | 13724 | 13727 | 13730 | 13733 | 13735 | 1373 |
| 740 | 13741 | 13744 | 13752 | 13753 | 13772 | 13782 | 13784 | 13785 | 13792 | 1379 |
| 798 | 13800 | 13810 | 13812 | 13825 | 13826 | 13833 | 13840 | 13860 | 13861 | 1387 |
| 888 | 13888 | 13890 | 13894 | 13899 | 13912 | 13915 | 13917 | 13926 | 13939 | 1394 |
| 949 | 13957 | 13959 | 13961 | 13963 | 13967 | 13970 | 13974 | 13991 | 13992 | 1399 |
| 4000 | 14008 | 14017 | 14025 | 14032 | 14034 | 14038 | 14043 | 14045 | 14047 | 1405 |
| 055 | 14058 | 14069 | 14072 | 14085 | 14105 | 14107 | 14114 | 14115 | 14117 | 1412 |
| 141 | 14142 | 14147 | 14157 | 14158 | 14161 | 14168 | 14170 | 14172 | 14178 | 1418 |
| 195 | 14198 | 14210 | 14214 | 14222 | 14223 | 14225 | 14227 | 14231 | 14235 | 1423 |
| 242 | 14254 | 14255 | 14257 | 14264 | 14265 | 14269 | 14277 | 14278 | 14282 | 1428 |
| 286 | 14287 | 14297 | 14299 | 14301 | 14304 | 14310 | 14315 | 14318 | 14322 | 1432 |
| 335 | 14357 | 14362 | 14367 | 14371 | 14373 | 14390 | 14402 | 14429 | 14441 | 1444 |
| 455 | 14461 | 14469 | 14473 | 14483 | 14494 | 14508 | 14513 | 14539 | 14554 | 1455 |
| 4572 | 14605 | 14609 | 14620 | 14637 | 14640 | 14643 | 14664 | 14678 | 14780 | 1459 |
| 4694 | 14708 | 14725 | 14732 | 14735 | 14737 | 14744 | 14761 | 14771 | 14787 | 1480 |
| 4827 | 14828 | 14831 | 14835 | 14836 | 14860 | 14861 | 14865 | 14869 | 14871 | 1487 |
| 4888 | 14903 | 14904 | 14914 | 14916 | 14918 | 14926 | 14928 | 14929 | 14945 | 1494 |
| 4952 | 14958 | 14969 | 14971 | 14980 | 14983 | 14996 | 15004 | 15012 | 15033 | 1504 |
| 5070 | 15088 | 15126 | 15128 | 15130 | 15137 | 15139 | 15150 | 15152 | 15160 | 1517 |
| 5218 | 15219 | 15222 | 15242 | 15247 | 15253 | 15265 | 15272 | 15277 | 15283 | 152 |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15292 | 15305 | 15306 | 15310 | 15313 | 15314 | 15315 | 15321 | 15322 | 15326 | 15330 |
| 15336 | 15340 | 15343 | 14366 | 15370 | 15382 | 15394 | 15398 | 15408 | 15413 | 15416 |
| 15421 | 15424 | 15431 | 15434 | 15441 | 15443 | 15448 | 15453 | 15461 | 15465 | 15472 |
| 15474 | 15475 | 15481 | 15483 | 15493 | 15498 | 15501 | 15507 | 15511 | 15513 | 15517 |
| 15523 | 15525 | 15533 | 15534 | 15536 | 15543 | 15546 | 15585 | 15594 | 15606 | 15632 |
| 15635 | 15636 | 15640 | 15644 | 15648 | 15660 | 15667 | 15679 | 15683 | 15684 | 15688 |
| 15690 | 15705 | 15723 | 15725 | 15727 | 15729 | 15732 | 15734 | 15735 | 15740 | 15747 |
| 15749 | 15752 | 15753 | 15758 | 15762 | 15769 | 15774 | 15775 | 15778 | 15781 | 15782 |
| 15789 | 15792 | 15799 | 15800 | 15808 | 15809 | 15810 | 15812 | 15816 | 15822 | 15825 |
| 15832 | 15835 | 15846 | 15847 | 15849 | 15857 | 15859 | 15871 | 15876 | 15877 | 15878 |
| 15880 | 15886 | 15887 | 15890 | 15891 | 15892 | 15893 | 15902 | 15904 | 15906 | 15910 |
| 15913 | 15915 | 15922 | 15924 | 15930 | 15933 | 15937 | 15939 | 15947 | 15951 | 15960 |
| 15964 | 15968 | 15971 | 15975 | 15979 | 15982 | 15995 | 16001 | 16002 | 16012 | 16013 |
| 16018 | 16033 | 16037 | 16040 | 16074 | 16075 | 16087 | 16096 | 16102 | 16105 | 16107 |
| 16109 | 16112 | 16113 | 16115 | 16118 | 16120 | 16133 | 16135 | 16138 | 16148 | 16149 |
| 16150 | 16151 | 16157 | 16170 | 17173 | 16174 | 16190 | 16192 | 16195 | 16197 | 16200 |
| 16205 | 16208 | 16222 | 16226 | 16229 | 16232 | 16243 | 16246 | 16251 | 16253 | 16258 |
| 16264 | 16267 | 16268 | 16269 | 16272 | 16276 | 16279 | 16282 | 16284 | 16285 | 16286 |
| 16298 | 16300 | 16307 | 16308 | 16317 | 16318 | 16330 | 16331 | 16342 | 16344 | 16346 |
| 16349 | 16364 | 16367 | 16369 | 16373 | 16375 | 16377 | 16378 | 16381 | 16388 | 16392 |
| 16394 | 16406 | 16410 | 16411 | 16418 | 16437 | 16441 | 16451 | 16457 | 16465 | 16473 |
| 16475 | 16477 | 16478 | 16482 | 16488 | 16490 | 16497 | 16499 | 16505 | 16516 | 16519 |
| 16520 | 16525 | 16528 | 16533 | 16534 | 16537 | 16538 | 16550 | 16553 | 16555 | 16561 |
| 16563 | 16578 | 16579 | 16581 | 16586 | 16596 | 16597 | 16598 | 16604 | 16615 | 16616 |
| 16626 | 16627 | 16640 | 16644 | 16646 | 16648 | 16650 | 16651 | 16657 | 16658 | 16659 |
| 16660 | 16666 | 16668 | 16670 | 16673 | 16674 | 16678 | 16697 | 16701 | 16709 | 16710 |
| 16718 | 16724 | 16726 | 16728 | 16735 | 16740 | 16741 | 16751 | 16754 | 16756 | 16757 |
| 16758 | 16761 | 16762 | 16763 | 16767 | 16774 | 16775 | 16777 | 16779 | 16780 | 16783 |
| 16786 | 16787 | 16788 | 16789 | 16801 | 16802 | 16808 | 16812 | 16813 | 16814 | 16824 |
| 16835 | 16838 | 16853 | 16869 | 16871 | 16877 | 16878 | 16906 | 16909 | 16922 | 16931 |
| 16933 | 16935 | 16936 | 16940 | 16960 | 16967 | 16969 | 16976 | 16978 | 16979 | 16980 |
| 16995 | 17011 | 17021 | 17024 | 17029 | 17037 | 17042 | 17043 | 17049 | 17055 | 17057 |
| 17059 | 17062 | 17068 | 17069 | 17070 | 17073 | 17080 | 17081 | 17090 | 17104 | 17108 |
| 17109 | 17125 | 17132 | 17155 | 17156 | 17166 | 17170 | 17172 | 17176 | 17182 | 17192 |
| 17204 | 17208 | 17213 | 17220 | 17226 | 17228 | 17230 | 17232 | 17234 | 17236 | 17257 |
| 17260 | 17269 | 17281 | 17284 | 17286 | 17292 | 17294 | 17301 | 17311 | 17317 | 17326 |
| 17327 | 17344 | 17349 | 17369 | 17372 | 17383 | 17396 | 17418 | 17420 | 17431 | 17439 |
| 17447 | 17472 | 17479 | 17482 | 17494 | 17504 | 17596 | 17511 | 17515 | 17519 | 17521 |
| 17522 | 17524 | 17530 | 17532 | 17539 | 17540 | 17553 | 17560 | 17575 | 17579 | 17582 |
| 17584 | 17597 | 17603 | 17612 | 17617 | 17643 | 17644 | 17647 | 17649 | 17656 | 17657 |
| 17665 | 17666 | 17691 | 17693 | 17700 | 17702 | 17703 | 17708 | 17716 | 17719 | 17728 |
| 17738 | 17756 | 17760 | 17761 | 17762 | 17768 | 17769 | 17774 | 17776 | 17778 | 17784 |
| 17786 | 17805 | 17813 | 17818 | 17820 | 17827 | 17828 | 17829 | 17830 | 17833 | 17839 |
| 17844 | 17847 | 17851 | 17855 | 17860 | 17864 | 17866 | 17869 | 17873 | 17876 | 17879 |
| 17884 | 17885 | 17888 | 17893 | 17896 | 17898 | 17915 | 17916 | 17923 | 17924 | 17932 |
| 17934 | 17942 | 17944 | 17950 | 17964 | 17965 | 17966 | 17967 | 17981 | 17984 | 17987 |
| 17988 | 17997 | 18007 | 18008 | 18011 | 18024 | 18028 | 18032 | 18033 | 18050 | 18055 |
| 18057 | 18058 | 18066 | 18075 | 18078 | 18099 | 18100 | 18107 | 18109 | 18142 | 18150 |
| 18158 | 18173 | 18174 | 18181 | 18184 | 18211 | 18216 | 18226 | 18230 | 18239 | 18248 |
| 18260 | 18303 | 18306 | 18307 | 18308 | 18310 | 18313 | 18315 | 18322 | 18345 | 18346 |
| 18362 | 18373 | 18377 | 18388 | 18393 | 18395 | 18404 | 18409 | 18410 | 18416 | 18418 |
| 18419 | 18424 | 18426 | 18428 | 18430 | 18435 | 18438 | 18439 | 18452 | 18458 | 18462 |
| 18467 | 18470 | 18475 | 18484 | 18491 | 18512 | 18513 | 18522 | 18532 | 18542 | 18549 |
| 18553 | 18555 | 18561 | 18562 | 18576 | 18582 | 18584 | 18587 | 18604 | 18608 | 18613 |
| 18616 | 18621 | 18623 | 18625 | 18631 | 18644 | 18645 | 18651 | 18659 | 18660 | 18664 |
| 18666 | 18668 | 18675 | 18676 | 18686 | 18689 | 18691 | 18693 | 18700 | 18705 | 18712 |
| 18720 | 18722 | 18726 | 18743 | 18746 | 18758 | 18760 | 18761 | 18769 | 18770 | 18771 |
| 18775 | 18776 | 18777 | 18794 | 18812 | 18813 | 18815 | 18817 | 18824 | 18830 | 18833 |
| 18836 | 18848 | 18849 | 18850 | 18851 | 18852 | 18856 | 18863 | 18866 | 18869 | 18873 |
| 18875 | 18876 | 18883 | 19898 | 18899 | 18905 | 18907 | 18911 | 18919 | 18926 | 18932 |
| 18950 | 18955 | 18966 | 18967 | 18968 | 18977 | 18978 | 18987 | 18996 | 19006 | 19013 |
| 19020 | 19024 | 19025 | 19030 | 19033 | 19035 | 19038 | 19043 | 19049 | 19053 | 19068 |
| 19074 | 19083 | 19087 | 19091 | 19099 | 91100 | 19103 | 19112 | 19113 | 19117 | 19127 |
| 19130 | 19131 | 19134 | 19142 | 19146 | 19147 | 19149 | 19151 | 19157 | 19158 | 19161 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9170 | 19177 | 19178 | 19179 | 19182 | 19185 | 19192 | 19219 | 19223 | 19227 | 19229 |
| 9230 | 19232 | 19233 | 19234 | 19236 | 19238 | 19243 | 19244 | 19246 | 19254 | 19266 |
| 9276 | 19286 | 19292 | 19295 | 19297 | 19298 | 19311 | 19316 | 19320 | 19331 | 19332 |
| 9334 | 19338 | 19341 | 19356 | 19357 | 19358 | 19370 | 19373 | 19380 | 19382 | 19394 |
| 9398 | 19400 | 19405 | 19406 | 19407 | 19410 | 19414 | 19417 | 19421 | 19425 | 19433 |
| 9439 | 19446 | 19447 | 19453 | 19455 | 19458 | 19464 | 19477 | 19480 | 19495 | 19498 |
| 9506 | 19507 | 19511 | 19537 | 19540 | 19551 | 19557 | 19560 | 19561 | 19568 | 19574 |
| 9578 | 19583 | 19602 | 19609 | 19613 | 19616 | 19621 | 19634 | 19639 | 19641 | 19644 |
| 9645 | 19658 | 19660 | 19662 | 19668 | 19670 | 19672 | 19675 | 19678 | 19680 | 19682 |
| 9688 | 19699 | 19705 | 19707 | 19711 | 19717 | 19719 | 19721 | 19724 | 19725 | 19728 |
| 9730 | 19733 | 19736 | 19737 | 19742 | 19748 | 19767 | 19772 | 19773 | 19780 | 19782 |
| 9785 | 19787 | 19788 | 19793 | 19797 | 19801 | 19811 | 19817 | 19820 | 19827 | 19829 |
| 9839 | 19842 | 19843 | 19844 | 19855 | 19858 | 19859 | 19873 | 19874 | 19881 | 19889 |
| 9892 | 19898 | 19909 | 19919 | 19924 | 19934 | 19949 | 19952 | 19969 | 19982 | 19991 |
| 9997 | 20000 | 20016 | 20020 | 20040 | 20045 | 20049 | 20059 | 20063 | 20071 | 20072 |
| 0086 | 20096 | 20097 | 20102 | 20104 | 20106 | 20128 | 20156 | 20162 | 20165 | 20170 |
| 0175 | 20177 | 20186 | 20197 | 20200 | 20201 | 20204 | 20208 | 20211 | 20225 | 20226 |
| 0232 | 20244 | 20246 | 20247 | 20253 | 20255 | 20256 | 20267 | 20268 | 20269 | 20273 |
| 0281 | 20286 | 20298 | 20304 | 20311 | 20312 | 20317 | 20321 | 20322 | 20328 | 20331 |
| 0336 | 20341 | | | | | | | | | |

The result of the Candidate with Register No. 4505 is withheld.

**M. Jayaram, B.A., B.L.,**
Joint Secretary i/c

என்.வி. நடராசன் பெயர் சூட்டப்பட்ட கூட்டுறவு பவள விழா மாளிகையை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 14.8.90 அன்று சென்னையில் திறந்து வைத்தார்.








பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி, தருமபுரியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், காவல்துறையினரின் சிறப்பு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்களை காவல், தீயணைப்பு, சிறை மற்றும் ஊர்க்காவல் படையினருக்கு வழங்கினார். (25.9.90)

# இந்த இதழில்...


அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா ... 2

சுற்றுலா வளர்ச்சியில் புதிய வேகம்! —மாண்புமிகு அமைச்சர் திரு கே.பி. கந்தசாமி ... 3

வன உயிரின வார விழா ... 6

தொழில் வளத்தில் முதன்மை பெற முனைந்து நிற்கும் தமிழகம் ... 9

மீனவ சமுதாயத்தார்க்கு மேலான வாழ்வு — மாண்புமிகு அமைச்சர் திரு.சந்திரசேகரன் ... 13

இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில் வாரியம் ... 16

தமிழ் உணர்வை ஊட்டிய பெருமை வாய்ந்த பெருமகனார் சுந்தரனார் ... 17

மதுரை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் அரிய பணிகள் ... 20

தந்தை பெரியார் - ஒரு தீர்க்கதரிசி —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 23

வாழவைக்கும் வைரத் தொழில் ... 24

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 26

பட்டு உற்பத்தியில் பெரும் சாதனை! —மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு ... 33

தமிழகச் சுற்றுலாத் தலங்கள் ... 35

ஒருங்கிணைந்த மானாவாரிப் பயிர் மேம்பாடு ... 39

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய விளம்பரங்கள் ... 41



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

புரட்டாசித் திங்கள் - 30

மலர்:21 இதழ்:8

16-10-1990




மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை - பீஜிங்கில் நடைபெற்ற ஆசியப் போட்டியில், தங்கப் பதக்கம் பெற்ற இந்திய அணியின் கபடி விளையாட்டுக் குழுத் தலைவரான தமிழ்நாடு வீரர் திரு. எஸ். இராஜரத்தினம் 7.10.90 அன்று சந்தித்து மாலையணிவித்தார்; அவருக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டுத் தெரிவித்தார்.

★ முதலாவது அட்டையில் 'பூம்புகார் எழுநிலை மாடத்'தின் எழில்மிகு தோற்றம்!

★ நான்காவது அட்டையில் மதுரை முதூர்க் கோயிலின் கவின்மிகு தோற்றம்!

★ சுற்றுலா வளர்ச்சி தொடர்பான' சிறப்புக் கட்டுரைகள் உள்ளே!



# அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா

2-10-90 முதல் 7.10.90 வரை.

**அண்ணல்** காந்தியடிகள் 122-வது பிறந்த நாள் விழா, அக்டோபர் 2 முதல் 7 வரை கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

அக்டோபர்-2 அன்று காலை சென்னை மெரினா கடற்கரையிலுள்ள அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு, மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா, மாண்புமிகு முதல்வர் கலைஞர், சட்டப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து நூற்பு வேள்வியும், இசை நிகழ்ச்சியும் நடந்தன. தக்கர்பாபா வித்தியாலாவில் மாணவர்கள் பங்கேற்கும் சமபந்தி விருந்தும் நடைபெற்றது.

**தொடக்க விழா:**

பிற்பகல் கல்லூரி-பள்ளி மாணவ மாணவியர் மற்றும் மகளிர் பங்கேற்ற ஊர்வலம் ஒன்று காந்தியடிகள் சிலையிலிருந்து புறப்பட்டு சாந்தோம், திரு.வி.க.பாலம், அடையாறு வழியாக, காந்தி மண்டபத்தை வந்தடைந்தது.

அன்று மாலை காந்தி மண்டபத்தில் நடந்த விழாவுக்கு, மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தலைமை வகித்து, மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்:

''காந்தியடிகள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றிட நாம் சபதம் மேற்கொள்ள வேண்டும். காந்தியடிகள், தாய்மொழி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினார். தமது சுயசரிதையை முதலில் அவர் தாய்மொழியான குஜராத்தி மொழியில்தான் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. தீண்டாமையைக் கடுமையாக எதிர்த்தவர் காந்தியடிகள். அவர் எழுதிய 'ஹரிஜன்' என்னும் நூலில் 'தீண்டத்தகாதவர் என்று பிரிப்பதே பாவம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.''

திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில் அண்ணல் காந்தியடிகளின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார்.

திரு. டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் பேசுகையில், விடுதலைப் போராட்டத்தில் அண்ணல் காந்தியடிகள் பங்கு பற்றியும், தந்தை பெரியார் அதில் ஈடுபட்டது குறித்தும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் பேசுகையில், காந்தியடிகள் எளிமையாக வாழ்ந்து காட்டினார் என்று கூறி, சுதந்தரப் போராட்ட வீரர்களுக்குத் தமிழக அரசு செய்துவரும் உதவிகள் குறித்து விளக்கினார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் பேசுகையில், காந்தியடிகளின் கருத்துக்கள் இளம் உள்ளங்களில் பதிய வேண்டும் என்றும், அவரது இலட்சியங்கள்-தத்துவங்கள் நிறைவேற்றிட நாம் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க. முத்துசாமி அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று இரவு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. திரைப்படமும் காண்பிக்கப்பட்டது. விழாவினையொட்டி, அரசின் பல்வேறு துறைகள் பங்கேற்ற கண்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**நிறைவு விழா**

நிறைவு விழா 7.10.90 அன்று நடந்தது.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க. முத்துசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

திருவாளர்கள் ஸோபாகாந்த்தாஸ், சி.ஆர். பட்டாபிராமன், ஆகியோர் பேசினர்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, விழாப் பேருரை நிகழ்த்தினார்.

— **நமது செய்தியாளர்**

# சுற்றுலா வளர்ச்சியில் புதிய வேகம்



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

## திரு கே.பி. கந்தசாமி

**ச**முதாய மறுமலர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலா பெரிதும் பயன்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதியிலும் உள்ள மக்களை ஒன்றாக இணைக்கவும் பன்னாட்டு மக்களை ஒன்று சேர்க்கவும் ஒரு பாலமாக அமைகிறது சுற்றுலா. எனவே, சுற்றுலா வளர்ச்சியில் தமிழகம் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

சுற்றுலா வளர்ச்சிக்காக மாநிலத் திட்டத்தின் கீழும் மத்திய அரசின் நிதி உதவியுடனும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனினும், பல்வேறு மையங்களில் சுற்றுலாப் பயணிகளின் தேவையை நிறைவேற்ற நாம் இன்னும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு இடத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கான தேவைகளை ஆராய்ந்து அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் இந்த அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது சுற்றுலாப் பயணிகளுக்குச் சாலை வழி வசதி செய்து தரும் திட்டங்களுக்கும் சுற்றுலா மையங்களை மேம்பாடு செய்யும் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. சாலைவழி செல்லும் பயணிகளுக்கும், மேல்மருவத்தூர் கோவிலுக்கு வருகை தருபவர்களுக்கும் சாலைவழி வசதி செய்யத்திட்டமிட்டு அங்கே மோட்டல் கட்டுவதற்காக ரூ.19.00 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. சென்ற 16.3.90 அன்று இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமான கடலூரில் அழகான கடற்கரையும் நீர்விளையாட்டுக்கேற்ற பரந்த நீர்ப்பரப்புடைய உப்பங்கழிகளும் உள்ளன. கடலூர் கடற்கரையில் சுற்றுலா வளாகம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டு 1990-91-ஆம் ஆண்டு இதற்காக ரூ.25.21 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு 1990 மே திங்கள் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

கன்னியாகுமரியில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களும் தனியார் ஓட்டல்



களும் சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்கு இல்லை. அங்கே மைய அரசு அளித்த ரூ.13.36 இலட்சத்தைக் கொண்டு எட்டு கடற்கரைக் குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இதைப் போலவே மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ.34.00 இலட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் 'யாத்ரீ நிவாஸ்' கட்டப்பட்டுள்ளது.

திருச்சி மலைக்கோட்டையை அழகுபடுத்தும் நோக்கத்தோடு ரூ.5.25 இலட்சம் செலவில் ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த பிப்ரவரி திங்களில் துவக்கப்பட்டு, அருள்மிகு தாயுமானவர் சுவாமி கோவில் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

முதுமலை வனவிலங்குச் சரணாலயம் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதியைப் பெருக்கித்தர கடலூரில் விடுதி ஒன்று கட்ட மத்திய அரசு ரூ.21.32 இலட்சம் 1989-90-ல் அனுமதி அளித்துள்ளது.

நீலகிரி மலைத்தொடரில் உதகை செல்லும் மலைப்பாதை மேட்டுப்பாளையத்திலிருந்து தொடங்குகிறது. பெரும்பாலான பயணிகள் உதகைக்குச் சாலை வழியாகத்தான் செல்கின்றனர். சாலை வழியாக உதகைக்குச் செல்லும் பயணிகள் வசதிக்காகச் சாலையோர வசதிகள் எதுவும் அங்கே செய்யப்படவில்லை. இந்தக் குறையைப் போக்க மேட்டுப்பாளையத்தில் சாலையோர வசதிகள் செய்வதற்காக ரூ.12.24 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. திருப்பெரும்புதூரிலும் இதைப் போலவே சாலையோர வசதிகள் செய்துதரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கூனூருக்கும் அதைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்ப்பதற்கும் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகக் கூனூரில் இளைஞர் விடுதி ஒன்று கட்ட மாநிலத் திட்டத்தின்கீழ் 1989-90-ஆம் ஆண்டு ரூ.12.24 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குற்றாலத்தில் ரூ.5.44 இலட்சத்தில் உணவகம் ஒன்று கட்டப்பட்டு அதனைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திவருகிறது.

திருவரங்கம், பாபநாசம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள குளியல் துறைகளில் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்துதரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் பாறையில் ஒளி விளக்குகள் அமைக்கவும், கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் பாறைக்குச் சென்றுவர விசைப் படகுகள் வாங்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மதுரையில் வண்டியூர் கண்மாய் என்ற இடத்தில் உணவகம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

பூம்புகார் சுற்றுலா வளாகத்தைக் கடலரிப்பிலிருந்து பாதுகாக்க, கடற்கரையில் தடுப்புகள் அமைக்கவும், வளாகத்தை அழகு படுத்தவும், பயணிகள் தங்கும் மண்டபத்தைச் சீர்படுத்தவும் இன்னும் இதுபோன்ற பணிகளுக்கு ரூ.50.00



சென்னையில் 26.9.90 அன்று நடைபெற்ற உலகச் சுற்றுலா நாள் விழாவில்....

இலட்சம் அனுமதிக்கப்பட்டுப் பணிகள் மே கொள்ளப்பட்டுள்ளன. தரங்கம்பாடியிலுள்ள டச்சுக்காரர்கள் காலத்திய பழமை வாய்ந்த ஆளுநர் மாளிகையைப் புதுப்பித்து அழகுபடுத்தி சீரமைத்துப் பாதுகாக்க ரூ.3.00 இலட்சம் செலவி திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட உலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் உள்ள திருமூர்த்த மலையின் மேம்பாட்டிற்காக ஏற்கெனவே அனும அளித்த ரூ.2 இலட்சத்திற்கும் மேல் ரூ.1.5 இலட்சம் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதுரை, கொடைக்கானல், உதகமண்டலம் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நா சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 'ஓட்டல் தமிழ்நாடு ஓட்டல்களின் மேம்பாட்டிற்காக ரூ.5.00 இலட்ச 1989-90-ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியச் சுற்றுலா ஆண்டு 1991-க்காக தெரிந்தெடுக்கப்பட்ட பயண வட்டங்களில் தமிழ கத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் ஓட்டல்களின் மேம்பாட்டிற்கா 1991-ஆம் ஆண்டு ரூ.12.50 இலட்சம் அனும வழங்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களி அனுமதி பெற்ற - தகுதிவாய்ந்த சுற்றுலா வழி காட்டிகள் இல்லை. இந்தக் குறையை நிவர்த்த செய்ய - தகுந்த நபர்களைத் தேர்தெடுத்து 1990-91-ஆம் ஆண்டில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



எழும்பூர் இரயில் நிலையத்தின் வழியாகச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கும், வந்திறங்கும் பயணிகளுக்கும் தேவையான தகவல் அளிக்கச் சுற்றுலா தகவல் மையம் ஒன்று அங்கே திறக்கப் பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல்களைக் கொடுக்கச் சுவரொட்டிகள், மடிப் பேடுகள், கையேடுகள் ஆகியவை ரூ.18.00 இலட்சம் செலவில் கொண்டுவரப்பட்டு, அவை வெளிநாட்டில் உள்ள மத்திய அரசு சுற்றுலா அலுவலகங்களுக்கும், மாநிலத்தில் உள்ள சுற்றுலா அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அத்தோடு, மாநிலங்களில் இருந்து வெளி வரும் முக்கிய சஞ்சிகைகளிலும் பலவண்ண விளம்பரங்கள் அவ்வப்போது கொடுக்கப்பட்டு வருகின்றன.

விருந்தோம்பல் திட்டத்தின் கீழ்- பயண முகவர்கள், எழுத்தாளர்கள் போன்ற சுற்றுலா சம்பந்தப்பட்ட வல்லுநர்களை அழைத்து, தமிழகத்தைச் சுற்றிப்பார்க்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

சுற்றுலா மேம்பாட்டு நோக்கத்துடன் பொங்கல் விழா, கோடை விழா, உலகச் சுற்றுலா நாள், வசந்த விழா போன்ற விழாக்களும் நடத்தப்படுகின்றன. சுற்றுலாத் துறை, பொருட்காட்சிகளிலும் பங்கு கொள்கிறது. இந்த விழாக்களுக்கும் பொருட் காட்சிகளுக்கும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அழைக்கப்படுகின்றனர்.

விடுமுறைச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா போன்ற புதுவகைச்சுற்றுலா மேம்பாட்டிலும் கவனம் செலுத் தப்பட்டு வருகிறது. நீலகிரி மலைத்தொடர், பழனி மலைத்தொடர் ஆகிய இடங்களில் மலையேறும் திட்டம் ஆண்டுதோறும் வெற்றிகரமாக நடத்தப் படுகிறது. இத்தகைய திட்டங்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

சுற்றுலா, வேகமாக வளர்ந்து வரும் ஒரு தொழில். சுற்றுலாவில் பலவகை உண்டு. இவை மாறிக்கொண்டே வரும். இந்த மாறுதல்களுக்கு ஏற்ப சுற்றுலாத் தொழில் சிறந்த முறையில் வளர்ச்சியடையத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும். எனவே சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரத்திற்குத் தேவையான அறி வுரைகள் வழங்கவும், பல்வேறு சுற்றுலா மையங் களின் தேவைக்கேற்பத் திட்டங்கள் தீட்டவும், தமிழக அரசு சுற்றுலாத் துறை அமைச்சரான எனது தலைமையில் தமிழ்நாடு சுற்றுலா அறிவுரைக் குழுவை மாற்றியமைத்துள்ளது.

பயணிகள் பார்வையில்...

# பூம்புகார்



கூட்டிடக் கலையின் அழியாச் சின்னமாக விளங்கும் இக்கலைக் கூடத்தின் கவர்ச்சி, இந்தப் பக்கம் வருகிற எந்தப் பயணியையும் ஈர்த்திழுக்கிறது. இதயத்தைக் கவர்கிறது. தற்கால கட்டிடக் கலை, பழங்கால கட்டிடக்கலை ஆகிய இரண்டினையும் இணைத்து ஒரு புதுமையினை உருவாக்கும் பெருந்திறன்மிக்க கட்டிடக்கலை வித்தகர்கள் இந்தியாவில் இருப்பது கண்டு வெளிநாட்டார் ஒருவர் பெரிதும் மகிழமுடிகிறது.

கலைக்கூடத்தினுள் நுழைந்தவுடன், இந்திய மண்ணின் புகழ்மிக்க கலைச் செல்வத்தினை அழியாது காத்திட, ஆற்றல்மிக்க கலைவல்லாரை உருவாக்கி ஊக்குவித்து இருப்பதைக் காணவும் முடிகிறது! கலை காக்கப்படுகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி பிறக்கிறது; நம்பிக்கையும் பிறக்கிறது.

எழிற் சிற்பங்கள் கூறும் கதை, மனித மாண்புகளாம், நேர்மை, கற்பு ஆகிய உயர் பண்புகளின் பெருமையைக் காட்டுகிறது. இத்தகைய பண்புகளைப் போற்றிக் காக்கும் இந்நாட்டு மக்களின் மனவளம் எதிர்காலத்திற்கும் நம்பிக்கை ஒளி ஊட்டுவதாக அமைந்துள்ளது.

**—திரு. மியூட்டின், (ஆராய்ச்சியாளர்)**
**9, பாரடே தெரு,**
**பாரிஸ், பிரான்ஸ்.**

கலைக்கூடத்தைப் பார்க்கும்போது, சிலப்ப காரக் கதை கண்முன்னே வந்து நிற்கிறது. சி பிகள் மிகவும் சிறப்பாக அவற்றை எடுத்துக்காட் யுள்ளனர். இது, இவ்விடம் வரும் வெளிநா டாரைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

**— திரு. சி. சுந்தரேசன்**
**யாழ்ப்பாண**
**இலங்கை**
**22-8-73**

கண்ணகியின் எழில்மிக்க் கலைக்கூடமும் மாதவியின் எழில் கொழிக்கும் சிலையும் கரு தைக் கவர்கின்றன.

**— திரு. பிரான்ஸ் ஆண்ட்ரோ**
**பிரான்**
**20-8-7**

# வன உயிரின வார விழா



**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், வண்டலூர் 'அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா' வில் நடைபெற்ற வன உயிரின வார விழாவில் பங்கேற்று, உயிரியல் பூங்கா நுழை வாயிலைத் திறந்து வைத்தார். 5.10.90 அன்று நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.பி. கந்தசாமி, திரு. எஸ். துரைமுருகன், திரு. கே. சுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:**

''இன்று வன உயிரின வாரத் தொடக்க விழா, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா நுழை வாயில் திறப்பு விழா, தமிழ்நாடு வன ஆராய்ச்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா ஆகிய இந்த மூன்று நிகழ்ச்சிகளும் இணைந்துள்ள இனிய விழாவில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்வாய்ப்பினை நான் பெற்றுள்ளமைக்காகப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''ஒரே ஆண்டில் இந்த அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நான் இரு முறை வந்துள்ளேன். இதற்குக் காரணம் என்னவென்றால், சில நேரங்களில் மனிதர்களைவிட மிருகங்களையே அதிகமாகப் பிடிக்கின்றது. ஏனென்றால், அவை எப்போதும் நன்றியுள்ளவையாக இருக்கின்றன என்பதுதான்.

''இன்றைக்கு இந்த உயிரியல் பூங்காவிலே இருக்கின்ற விலங்குகள், பறவைகள் அனைத்தும் நல்ல முறையிலே பேணிக்காக்கப்பட வேண்டும் என்பதிலே மட்டற்ற அக்கறை கொண்ட தமிழக அரசு, 1973-ஆம் ஆண்டிலேயே இந்தப் பகுதியில் ஓர் உயிரியல் பூங்காவைப் பெரிய அளவில் அமைத்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடித்து, இந்தப் பூங்கா இங்கே அமைந்து, இன்று மேலும் வளர்ச்சி பெற்ற நிலையிலுள்ளதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த உயிரியல் பூங்காவிலே நீங்கள் சுற்றிப் பார்த்தால் அந்த மிருகங்கள் மூலமாக சில பாடங்கள் கிடைப்பது மாத்திரமல்ல, சில கொள்கைகளுக்கான விளக்கங்கள் கூடக் கிடைக்கும். இங்கே போய் நீங்கள் பார்ப்பீர்களேயானால் குறைவாக இருக்கின்ற 'சிங்கங்களுக்காக ஓர் இடம், கொஞ்சம் பலமாக இருக்கின்ற யானைகளுக்காக ஓர் இடம் - கூட்டமாக நிறைய இருக்கின்ற மான்களுக்காக ஓர் இடம் - பறவைகளுக்காக ஓர் இடம் என்று எந்தெந்த மிருகங்களுக்குக், எந்த அளவிற்கு இடம் தேவையோ அந்த அளவிற்கு இங்கே இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மிருகங்களுக்கு கூட இட ஒதுக்கீடு செய்வதை நாம் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் மனிதர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதைத்தான் ஒத்துக் கொள்ள மறுக்கிறோம். இந்தப்பூங்காவை ஒருமுறை சுற்றிப் பார்த்த பிறகாவது, உயர்ந்தவர்கள், தங்களை மேலோர் என்று கொண்டிருப்பவர்கள், தாங்கள் ஏழை எளியவர்களிடமிருந்து அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து பறித்துக்கொண்ட உரிமைகளை நாமே வைத்துக் கொண்டிருப்பது முறையல்ல என்ற ஒரு புதிய கொள்கைப் பாடத்தை இந்த உயிரியல் பூங்காவைச் சுற்றிப் பார்க்கின்ற நேரத்தில் அவர்கள் அறிந்து கொள்வார்கள்; அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

''ஒரு நாட்டிலே 33 விழுக்காடு காட்டுப்பகுதி இருக்க வேண்டுமென்று விஞ்ஞானிகள் கணக்கிடுகின்றார்கள். ஆனால், நம் மாநிலத்தில் 17.5 விழுக்காடு தான் காடு இருக்கின்றது. கடந்த காலத்தில் 15 விழுக்காடு காட்டுப் பகுதி இருந்தது. அதன் பின்னர் சில ஜமீன் காடுகள் எல்லாம் இணைக்கப்பட்டு இன்று நம் மாநிலத்தில் 17.5 விழுக்காடு காட்டுப் பகுதி இருக்கின்றது. இதை மேலும் பெருக்கி 33 விழுக்காடு அளவிற்கு நாம் கொண்டு வந்தால் தான் பருவ மழை பெய்திடவும் வளம் பெருகிடவும் இயலும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

''வனத்துறையைப்' பொறுத்த வரையில் அமைச்சர் அவர்களுடைய அயராத முயற்சியாலும் ஆர்வத்தாலும் இந்தத் துறை அதிகாரிகளுடைய நல்லெண்ண ஒத்துழைப்போடும் இதனுடைய வருவாய் இன்றைக்குக் கூடியிருக்கின்றது. முன்பு 33 கோடி ரூபாய் ஆண்டு வருமானம் என்றிருந்த நிலைக்கு மாறாக 89-90-ஆம் ஆண்டிலே 48.5 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கின்றது. முன்பு வனத்துறைக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.43 கோடி என்றிருந்ததற்கு மாறாக 90-91-ஆம் ஆண்டில் 54 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 7-வது திட்டக் காலத்தில் வனத்துறைக்காகவும் இதனை வளர்ப்பதற்காகவும் இதில் பல்வேறு நவீன முறைகளைக் கடைப்பிடிப்பதற்காகவும் 140 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது. 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வனத்துறை வளர்ச்சிக்காகவும் வனத் துறையின் பல்வேறு திட்டங்களுக்காகவும் ரூ.191 கோடி ரூபாய் தமிழக அரசால் செலவிடப்பட இருக்கின்றது. .



# TNPSC

விளம்பர எண்: 34/90

கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 29.10.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

1. **தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் பணியில் எட்டு கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர்** (Assistant Director of Handlooms and Textiles)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000

| | | | |
|---|---|---|---|
| (ஆதிதிராவிடர் வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | - | 1 | (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | - | 2 | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | - | 2 | (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| பகிரங்கப் போட்டி (ப.போ.) | - | 3 | (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** A degree in Textile Technology

or

A degree of M.Com., or M.A., with Economics as the main subject or M.Sc. with Mathematics as the main subject. Provided that other things being equal preference shall be given to the holders of the Textile Technology degree.

2. **தமிழ்நாடு தொழிற்சாலைப் பணியில் பத்து தொழிற்சாலை ஆய்வாளர்** (Inspector of Factories)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000.

(ஆ.தி.வ./ப.வ. - 2, மி.பி.வ./சீ.ம. - 1 (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

பி.வ. - 3, ப.போ. - 4 (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன)

**தகுதி:** A degree in Mechanical, Electrical or Chemical Engineering or Textile Technology.

3. **தமிழ்நாடு மருத்துவப் பணியில், சென்னையிலுள்ள ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையத்தில் ஒரு பேச்சு மற்றும் கேட்புரை சிறப்பறிஞர்** (Speech and Hearing Specialist, Institute for Rehabilitation of Speech and Hearing handicapped, Madras)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000
(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்வுக்குப் பொருந்தாது)

**வயது:** *1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக. (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).*

**தகுதி:** (i) A first class M.Sc., degree or M.Sc., degree with 'O' or 'A' grade in Speech and Hearing with Electronics and Acoustics as Elective Subjects from the All India Institute of Speech and Hearing, Mysore or from any other University or Institution; and recognised by the University Grants Commission for the purpose of its grant.

and

(ii) Must have experience for a period of not less than two years, after acquiring M.Sc. degree in Speech and Hearing, as Research Fellow or Research Assistant or Research Associate or Speech Therapist or Audiologist in the Ear, Nose and Throat Department of any teaching Medical Institution affiliated to any University recognised by the University Grants Commission or in any research Scheme conducted in the Ear, Nose and Throat Department of the aforesaid Institutions.

**NOTE:** Provided that other things being equal, preference shall be given to released Emergency Commissioned Officers, released Short Service Commissioned Officers and other Ex-Servicemen.

**4. தமிழ்நாடு பொதுப்பணியில், சமூக நலத்துறையில் 12 சிறார் மேம்பாடு திட்ட அலுவலர்/வட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலர்** (Child Development Project Officer/Taluk Project Nutrition Officer)
(பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன).

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,820-60-2,300-75-3,200
(ஆ.தி.வ./ப.வ - 2, மி.பி.வ./சீ.ம. - 2, பி.வ. - 3, ப.போ. - 5)

**வயது:** 1.7.1990 அன்று 30க்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).
**தகுதி:** A degree in Social Work or Sociology

**குறிப்பு: அனைத்துப் பதவிகளுக்கும் பொருந்தும்.**

'Destitute Widows who possess the prescribed qualifications and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**EXPLANATION:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependant to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., மற்றும் பி.வ. ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை''களில் தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ள லாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், **விளம்பர எண் மற்றும் இனத்தின் எண்** ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக் கூடிய 1.9.90 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.9.90 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**குறிப்பு:** ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாகக் கோரிக்கைகள் அனுப்ப வேண்டும். பத்து ரூபாய்க்கான அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலை ஒவ்வொரு கோரிக்கையுடனும் அனுப்ப வேண்டும்.

டிஐபிஆர்/2411/எம்எல்/90/அக்காரிட்






# தொழில் வளத்தில் முதன்மைபெற முனைந்து நிற்கும் தமிழகம்

**தொழில்வளத்தில் முதன்மைபெறத் தமிழ்நாடு முனைந்து நிற்கிறது: மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அதற்கான அடிப்படை நடவடிக்கைகளாக 15.9.90 முதல் 1.10.90 வரையில் தமிழ்நாட்டின் பல பாகங்களில் பல்வேறு தொழிற்சாலைகளைத் துவக்கி வைத்தார்; சில தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டினார். அவைபற்றிய நிகழ்ச்சி விவரங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.**

## கப்பல் பழுது பார்க்கும் நிறுவனம்

சென்னையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 15.9.90 அன்று, ஏறத்தாழ 80 கோடி ரூபாய் செலவில் சொக்கானி குழுவினர் உருவாக்கியுள்ள கப்பல் பழுதுபார்க்கும் நிறுவனக்கைக் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. உன்னிகிருஷ்ணன் திரு. உபேந்திரா, திரு. முரசொலி மாறன் மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் திரு. துரைமுருகன் ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அந்நிறுவனத்தைத் துவக்கிவைத்துப் பேசுகை



● நமக்கு ஓர் அறிவு அதிகமிருந்தும் பயன் என்ன? மிருகங்களுக்கு ஓர் அறிவு குறைவு என்றாலும் சாதி இல்லையே! மிருகங்களுக்கு அறிவில்லாததன் பயன் சாதி இல்லை. நமக்குள்ள இழிவு சாதியால் தானே! இதைச் சிந்திக்க வேண்டாமா?

— தந்தை பெரியார்

யில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''800 கப்பல்கள் பழுதுபார்க்கப்பட வேண்டிய வசதிகள் இருக்க வேண்டிய இந்தியாவில், 80 கப்பல்களைப் பழுதுபார்க்கிற வசதிகள் மட்டுமே இருக்கின்றன. இருப்பினும் தொடர்ந்து அதைப் பெருக்குகின்ற வகையிலேதான் இந்த முயற்சி இங்கே தொடங்கப்படுகிறது.

''இதன்மூலம் நேரடியாக 500 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டுகிறது, மறைமுக வேலை வாய்ப்பு 500 பேருக்குக் கிட்டுகிறது என்கிற போது, வேலைவாய்ப்புத் தேவையையும் ஓரளவு நிறைவு செய்கிறது இந்த நிறுவனம் என்கிற வகையில் என்னுடைய வாழ்த்துகளைச் சொக்கானி நிறுவனத்தாருக்குத் தெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.''

## சிப்காட் தொழிற்பேட்டையின் இரண்டாம் பிரிவு தொடக்க விழா

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், 25.9.90 அன்று தருமபுரி மாவட்டம் ஓசூரில், சிப்காட் தொழிற்பேட்டையின் இரண்டாம் பிரிவைத் தொடங்கி வைக்கும் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

அவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்- திரு. மு.கண்ணப்பன், திரு. எஸ். துரை முருகன், திரு. கே.என்.நேரு, திரு. க.பொன்முடி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொழில்துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அலாவுதீன் இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:

''சிப்காட் எனப்படும் தமிழகத் தொழில் வளர்ச்சி நிறுவனம் 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஓசூரைப் பொறுத்தவரையில் இந்த நிறுவனத்தின் வளர்ச்சியினால்- இந்த வளாகத்தில் அமைந்துள்ள பல்வேறு தொழில்களால் இந்த வட்டாரத்திலே ஏறத்தாழ இருபதாயிரம்பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

''சிப்காட் என்கிற இந்த நிறுவனத்தின் மூலமாக மட்டும் 720 நடுத்தர, பெரிய தொழில் பிரிவுகளைத் தொடங்க நிதியுதவியை இது வரையிலே வழங்கியிருக்கிறது. 31.8.90 வரையிலே தொழில் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டிருக்கிற குறித்த காலக் கடன்கள் 330 கோடி ரூபாயாகும். அதில், தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 76 தொழில் திட்டப் பணிகளுக்காக ஏறத்தாழ 33 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

''இந்த வளாகத்தை 1975-ஆம் ஆண்டு தொடங்கினோம் என்றாலும், இதற்காக இந்த வட்டத்திலே 1,235 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டது. அதில், அடிப்படை வசதிகளுக்காக நிலம் ஒதுக்கிய பிறகு, தொழிற்சாலைகளுக்காக ஏறத்தாழ 980 ஏக்கர் கொடுக்கப்பட்டது. அதிலே 131 தொழிற் பிரிவுகளுக்கு இதுவரையிலே 976 ஏக்கரா நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால்தான், தமிழகத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொழில்வளர்ச்சிக்காக நாம் மேற்கொண்ட முயற்சியால் இராணிப்பேட்டையைப்போல்- ஏன், அதைவிடச் சிறப்பாகக்கூட ஓசூர் இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை மெத்தப் பூரிப்போடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''ஓசூர் ஒரு டவுன் பஞ்சாயத்தாக இருக்கிறது. ஏறத்தாழ 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட ஓசூர் மிகவிரைவிலே ஒரு நகராட்சி மன்றமாக ஆக்கப்படும் என்கிற நல்ல செய்தியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

## சிப்காட் மின்னணு தொழில்வளாகம் அடிக்கல் நாட்டுவிழா!

**25.9.90** அன்று தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ஓசூரில் ரூ.400 கோடி முதலீட்டில் துவக்கப்படவிருக்கும் 'சிப்காட் மின்னணு தொழில் வளாகத்'திற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.துரைமுருகன் அவர்கள் தலைமையில்- தொழில் துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் இ.ஆ.ப., வரவேற்புரையுடன் துவக்கி வைக்கப்பட்ட இந்த மின்னணு தொழில் வளாகம் 976 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாகிறது. இதனைச் சார்ந்து 168 தொழிற்சாலைகள் இயங்கும்.

இதன்மூலம் 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

இவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் ஒன்று டி.வி.எஸ். நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டது. அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள், தருமபுரியில் உள்ள காதுகேளாதோர் பள்ளிக்கு இலவசமாக வழங்கினார்.

## கணிப்பொறியால் இயங்கும் உற்பத்தித் தொழிற்கூடத் தொடக்க விழா

**செ**ங்கை அண்ணா மாவட்டத்தில் உள்ள துரைப்பாக்கத்தில்-மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 26.9.90 அன்று கணிப்பொறியால் இயங்கும் உற்பத்தித் தொழிற்கூடத்தைத் தொடங்கி வைத்தார்; தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தொலைத் தொடர்பு பிரிவுக்கான யு.எச்.எஃப்., தொழிற்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு அமைச்சர்கள், டாக்டர் க. பொன்முடி, திரு. க.சுந்தரம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மீ.அ. வைத்தியலிங்கம், திரு. இரா.பழனிச்சாமி, திரு. டி.ஆர்.பாலு எம்.பி., ஆகியோரும் - 'எலக்ட்ரோ ஸ்கேன் இந்தியா லிமிடெட்' நிர்வாக இயக்குநர் திரு. என்.எஸ். குமார்; தமிழ்நாடு மின்னணு நிறுவனத்(எல்காட்) தலைவர் திரு. எஸ்.அரவிந்த் இ.ஆ.ப., உள்ளிட்டவர்களும் கலந்துகொண்ட இவ்விழாவில் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததாவது:

''இந்த மின்னணுத் துறையிலே தனியாகச் சில சிறப்புச் சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. மற்ற துறையிலே தொடங்கப்படும் தொழில்களுக்கான முதலீட்டு மானியம் பின்தங்கிய பகுதிகளிலேதான் அறிவிக்கப்படுகிறது. ஆனால், மின்னணுத் துறையிலே ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கான முதலீட்டு மானியம் தமிழகத்தில் எந்த இடத்தில் அந்தத் தொழிலைத் தொடங்கினாலும் அளிக்கப்படும் என்கிற சலுகை வழங்கப்பட்டுள்ளது.

''மேலும், மின்னணுத் துறைக்காகக் கூடுதல் மானியம் அளிக்கப்படுகிறது. மற்ற தொழில்களுக்கு அளிக்கப்படும் மானியத்தினுடைய உச்சவரம்பு 20 இலட்சம் ரூபாய் என்று இருக்கும் பொழுது, அதற்கு மாறாக, மின்னணுத் துறை மூலம் தொடங்கப்படும் தொழிலுக்கு 35 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இது மாத்திரமல்ல; இந்தத் தொழில்களுக்கு நீண்டகால வட்டி விகிதத்திலேகூட இரண்டு சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

''இதுபோன்ற தொழில்கள் எதிர் காலத்திலே அந்நியச் செலாவணியைப் பெருக்கும்; இறக்குமதி செய்துதான் சில உபகரணங்களை நாம் அடைய வேண்டும் என்ற நிலையைத் தவிர்க்கும். அந்த வகையிலே துவக்கப்படும் இந்தத் தொழிற்சாலைக்கு என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''



## இந்தியச் சுற்றுலா: ஒரு கணக்கீடு!

**தொ**ன்மையான கலாச்சாரமும் கலைச்சின்னங்களும் நிறைந்த பூமியாம் இந்தியாவுக்கு 1989-ஆம் ஆண்டில் வந்துசென்ற வெளிநாட்டுப் பயணிகள் எண்ணிக்கை 13,35,392. அதற்கு முந்திய ஆண்டைவிட இது 7.7 சதவீதம் அதிகம்!

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மூலம் 1987-88-இல் ரூ.1,890 கோடியும், 1988-89-இல் ரூ.2,100 கோடியும் சுற்றுலா மூலம் அந்நியச் செலாவணியாகக் கிடைத்தது. 1989-90-இல் இது ரூ.2,400 கோடியாக அதிகரிக்கும் வாய்ப்பிருக்கிறது.

சென்ற ஆண்டின் இறுதியில் சுற்றுலாத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட 647 ஓட்டல்களில் 42,415 அறைகள் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்பட்டன. முன்பே அங்கீகரிக்கப்பட்ட 288 புதிய ஓட்டல்கள் செயல்படத் துவங்கும்போது கூடுதலாக 10,605 அறைகள் பயணிகளுக்குக் கிடைக்கும்!

— ராஜு

## டால்மியா சிமெண்ட் நிறுவனப் பொன்விழா

**டா**ல்மியா சிமெண்ட் நிறுவனத்தின் (பாரதி) பொன்விழா, திருச்சியை அடுத்துள்ள டால்மியா புரத்தில் 30.9.90 அன்று நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். பொன்விழாச் சின்னம் ஒன்றைத் திறந்து வைத்தார். டால்மியா நிறுவனம் ரூ.45 இலட்சம் செலவில் துவக்கவிருக்கும் இராமகிருஷ்ண டால்மியா தொழில்பயிற்சி நிலையத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

இப்பொன்விழா நிகழ்ச்சியில்- மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. கோ.சி.மணி, திரு. எஸ்.துரைமுருகன், திரு. கே.என். நேரு, திரு. டாக்டர். க.பொன்முடி ஆகியோரும், திரு. பழனியாண்டி எம்.பி., டால்மியா நிறுவனத் தலைவர் திரு. ஜயஹரி டால்மியா ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்விழாச் சிறப்புரையாற்றுகையில்- ஆண்டுக்கு ஏழு இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் அந்த ஆலையின் பணியைப் பாராட்டினார். வருமானவரி, எக்சைஸ் தீர்வை மூலம் மத்திய அரசுக்கு ஆண்டுதோறும் இந்த ஆலை 16 கோடி ரூபாய் அளிப்பதையும், விற்பனை வரி, ராயல்டி மூலம் தமிழக அரசுக்கு 7 கோடி ரூபாய் தருவதையும் குறிப்பிட்டார். ''இதையெல்லாம் விட எனக்கு மகிழ்ச்சி தருவது, அந்த ஆலை 1,500 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்திருப்பது தான்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## டாமின் தொழிற்சாலை விரிவாக்க அடிக்கல் நாட்டு விழா

**த**மிழ்நாடு கனிம நிறுவனத்தின் 'டாமின் கிரானைட்ஸ் ஒடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் டாமின் கிரானைட்ஸ் விரிவாக்கப் பணி'க்கு, செங்கை அண்ணா மாவட்டம் எர்ணாவூரில் 1.10.90 அன்று அடிக்கல் நாட்டி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பித்தார்.

டாமின் கனிம நிறுவனத்தின் தலைவர் திரு. கே.ஏ.சுந்தரம் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய இந்த விழாவிற்கு மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்கள். தலைமை தாங்கினார்.

திருவொற்றியூர் நகர்மன்றத் தலைவர் திரு. டி.கே.பழனிச்சாமி எம்.எல்.ஏ., மதுராந்தகம் திரு. சி.ஆறுமுகம், தொழில் துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் இ.ஆ.ப., இத்தொழிற்சாலையின் இயக்குநர் திரு. சசிசேகர் இ.ஆ.ப., ஆகியோர் இவ்விழாவில் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், திரு. டி.ஆர்.பாலு எம்.பி., முதலான பலரும் இந்த விழாவில் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 4 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள இந்தப் புதிய தொழிற்சாலையின் ரூ.4.65 கோடி செலவிலான விரிவாக்கப் பணிக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றினார். அப்போது அவர்- ''தொழில் வளர்ச்சியில் மூன்றாம் இடத்திலிருந்த தமிழ்நாடு பதினைந்தாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது; அதை மீண்டும் மூன்றாம் இடத்திற்கு அல்ல; முதலிடத்திற்கே உயர்த்த ஓயாமல் ஒழியாமல் இந்த அரசு பாடுபடும்'' என்று குறிப்பிட்டார். ''இந்த கிரானைட் நிறுவனத்தில் 1979-80-ஆம் ஆண்டில் ரூ.24 இலட்சத்திற்கு விற்பனை நடந்திருக்கிறது. இதே தொகை ஆளுநர் ஆட்சிக் காலத்தில் 10.72 கோடியாக உயர்ந்தது. அது 89-90-ஆம் ஆண்டில் 14 கோடியாக உயர்ந்து, நடப்பு ஆண்டில் 19 கோடியை எட்டியிருப்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றும் அவர் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் உள்ள வீடிழந்த, 195 மீனவர்களுக்கு மாற்றிடம் தருவதற்காக அரசால் கையகப்படுத்தப்பட்ட ரூ.23 இலட்சம் மதிப்புள்ள 3 ஏக்கர் நிலத்தை விலையில்லாமலே தருவதென அரசு முடிவெடுத்திருந்தது. அந்த ஒதுக்கீட்டுக்கான பட்டாவையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்விழாவில் வழங்கினார்.

— நிகழ்ச்சிகள் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்



## அம்பேத்கர் நூற்றாண்டு

★ சுயமரியாதையற்ற நிலையில் வாழ நினைப்பது மிகப் பெரிய அவமானமாகும். ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் மிக அவசியமான ஓர் அம்சம் சுயமரியாதை. சுயமரியாதையோடு நாம் ஒவ்வொருவரும் நெஞ்சை நிமிர்த்தி வாழவேண்டும். பிறந்தவர் இறப்பது உறுதி. யாரும் அடிமையாகப் பிறக்கவில்லை. நாம் ஒரு வீர பரம்பரையைச் சார்ந்தவர்கள். இதை ஒரு போதும் மறவாமல் இருக்க வேண்டும்.





# மீனவ சமுதாயத்தார்க்கு மேலான வாழ்வு!

மாண்புமிகு கால்நடைப்பராமரிப்புத்துறை அமைச்சர்
டாக்டர் க. சந்திரசேகரன்

**கோ**டையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர் தருவாக... தருநிழலாக... நிழல் கனிந்த கனியாக... ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராக... உகந்த தண்ணீரிலே மலர்ந்த மணமலராக... மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக... மென்காற்றில் விளை சுகமாக... சுகத்திலுறும் பயனாகத் தமிழகத்து மக்களுக்குக் கிடைத்திருப்பது தலைவர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழகத்தின் பொற்கால அரசாகும்.

சமூகத்தில் நலிவுற்ற பலதரப்பு மக்களும் பயனடையும் வகையிலே திட்டங்கள் பலவற்றை இந்த அரசு நிறைவேற்றி வருவது உள்ளங்கை நெல்லிக் கனி.

குறிப்பாக மீனவ சமுதாய மக்களின் மேம்பாடு கருதி, தமிழக அரசு செயல்படுத்தி வருகின்ற மேலான திட்டங்கள்- உப்புக் காற்றையே சுவாசித்து உயிர் வாழும் அவர்கள் இதயத்திலே உவகை தேக்கி வருகின்றன.மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மீனவ மக்கள் நலத் திட்டம் பற்றி- ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல என்று கேட்டு நிறுத்தி விடாமல் விளக்கமாக விவரிப்பது- மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அமைச்சர் அவையிலே அங்கம் வகிக்கும் அத்துறை அமைச்சரான எனது கடமையாகும்.

### மீனவருக்கு இலவச வீடுகள்:

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நாளொரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே. அதன் அடிப்படையில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரவேண்டியதன் அவசியம் அறிந்து, மீன்துறையின் மூலம் 3,000 வீடுகள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் செங்கை-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சினாங்குப்பம் மீனவர்களுக்கு ரூ.1.16 கோடியில் 492 அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தரும் திட்டமும் அடங்கும்.

இம்மாதிரி மீன்துறையில் மீனவர்களுக்காக அடுக்கு மாடிக்கட்டிடம் கட்டுவது தமிழகத்தில் இதுவே முதல் தடவை. 1989-90-ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டத்திற்காக மட்டும் மொத்தம் ரூ.488.52 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

அரசின் மேற்கண்ட முயற்சியின் தொடர்ச்சியாகக் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்துறையானது, 5.6.90-இல் மேலும் 3,000 வீடுகள் ரூ.4.35 கோடியில் கட்ட ஆணைகள் வழங்கியுள்ளது.

### விபத்தினால் இறந்த மீனவர்களுக்கு நிவாரணம் உயர்வு:

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர் இல்லாத மீனவர்கள் விபத்தினால் இறந்தால், அவர்களுக்கு வழங்கும் நிவாரணத் தொகையை ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்தி மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

தரிசாகக் கிடக்கும் அரசு உவர்நீர் நிலங்களில் இறால் வளர்ப்புச் செய்ய வேண்டி தனி நபர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் நிலம் வழங்கக் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்துறை அரசாணையில் வழிவகைகள் அறிவிக்கப்பட்டன. உவர்நீர் நிலங்கள் ஒதுக்கீடு செய்ய விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு கால்நடைப்பராமரிப்பு மற்றும் மீன்துறை அமைச்சரான எனது தலைமையில், ஓர் உயர்மட்டக்குழு தமிழக அரசால் நியமிக்கப்பட்டது.

1990-91 நிதி ஆண்டில் 5,000 ஏக்கர் உவர்நீர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற இலக்கின் முதல் கட்டமாக 2,000 ஏக்கர் உவர்நீர் நிலப்பரப்பு பல்வேறு விண்ணப்ப






தாரர்களுக்குத் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீதமுள்ள நில ஒதுக்கீடு செய்ய விண்ணப்பங்கள் வரப்பெற்றுப் பரிசீலனையில் உள்ளன.

முன்னுரிமை விண்ணப்பதாரர்களாகவும் (Priority Sector) குறைந்த வருவாயில் இருப்பவர்களுமான ஆதிதிராவிடர், பழங்குடியினர், மீனவர்கள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்கள் ஆகியோரின் வருமானத்தைப் பெருக்குவதும் நாட்டில் இறால் உற்பத்தியைப் பெருக்குவதும்ம இந்த உவர்நீர் இறால் வளர்ப்புத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

## தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

தலைவர் கலைஞர் அவர்கள், முன்பு தமிழக முதல்வராக இருந்தபோதுதான், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1974-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதில் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 இலட்சமும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.293 இலட்சமும் ஆகும்.



இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் 8 நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவைகளில் மீன் உற்பத்தி ஆண்டொன்றுக்குச் சுமார் 500 முதல் 600 டன்களாகும். இதன்மூலம் கிடைக்கும் வருவாய், ஆண்டொன்றுக்கு ரூ.40 முதல் 50 இலட்சமாகும். இந்நீர்த்தேக்கங்களில் அமைந்துள்ள மீன் குஞ்சுப் பண்ணையிலிருந்து ஆண்டொன்றுக்குச் சுமார் 700.00 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, இக்கழக நீர்த்தேக்கங்கள், அரசு நீர்நிலைகள் மற்றும் தனியார் மீன்பண்ணைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

சென்னை இராயபுரத்தில் ஆண்டொன்றுக்கு 54 டன் எடையுள்ள மீன்வலை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று செயல்பட்டு வருகின்றது. இத்தொழிற்சாலையில் தரமான மீன்வலைகள் தயாரிக்கப்பட்டு நாட்டுப்படகு, இயந்திரப் படகு மற்றும் ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களின் உரிமையாளர்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

இறால் வளர்ப்போரின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆண்டொன்றுக்கு 16 மில்லியன் அளவில் தரமான இறால் மீன்குஞ்சு உற்பத்தி செய்யும் பொருட்டு, சென்னை அருகில் உள்ள நீலாங்கரையில் இறால் மீன்குஞ்சுப் பொறிப்பகம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது.

மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களின் நன்மைக்காகச் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய மீன்பிடித்துறைமுகங்களில் டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அண்மையில், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் ஒரு டீசல் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, அப்பகுதி விசைப்படகு மீனவர்களின் தேவையை நிறைவு செய்து வருகிறது.

இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் 90 மீன் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில், இக்கழக நீர்த்தேக்கங்களில் பிடிபடும் மீன்கள் மற்றும் கடற்கரை மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் சுகாதாரமான முறையில் பொது மக்களுக்கு நியாயமான விலையில் விற்கப்படுகின்றன.

இக்கழகம் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு, இரு ஆழ்கடல் (23 மீட்டர்) மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகின்றன. அண்மையில் தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனையின் பேரில், மேற்கு வங்க மீன் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து மேலும் இரு நாவாய்கள் வாங்கப்பட்டு விரைவில் செயல்படவுள்ளன.

## முத்து வளர்ப்புத் திட்டம்

''ஸ்பிக்'' உர நிறுவனமும் இக்கழகமும் கூட்டாக இணைந்து தமிழ்நாடு பேர்ள்ஸ் (பிரைவேட்) லிமிடெட் 1983-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, மூன்றாண்டுகள் செயல்பட்டது. தற்போது இக்கழகமே இம் முத்து வளர்ப்புத் திட்டத்தை 1.8.90 முதல் மண்டபத்தைத் தலைமையிடமாகக் கொண்டு நடத்தி வருகிறது. இதற்குத் தேவைப்படும் முத்துச் சிப்பிகள் தூத்துக்குடி கடல்பகுதிகளில் 'பார்' என்று சொல்லப்படும் முத்துச்சிப்பி நிலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, பின் அவைகள் மண்டபத்துக் கடல்பகுதியில் அமைந்துள்ள முத்து வளர்ப்புப் பண்ணைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு ''வளர்ப்பு முத்துகள்'' உற்பத்தி செய்யப்பட உள்ளது. வரும் ஆண்டுகளில் முத்துச்சிப்பி நிலங்களில் கிடைக்கும் சிப்பிகளை மட்டும் நம்பிக் கொண்டிராமல் பொறிப்பகம் அமைத்து, அதிலிருந்து முத்துச் சிப்பிகள் உற்பத்தி செய்து, அவைகளின் மூலம் தேவையான முத்துக்கள் உற்பத்தி செய்யத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவைகள் மட்டும்தான் என்பதல்ல; மீனவ சமுதாய மேம்பாடு கருதி, தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் இன்னும் பல இணையற்ற திட்டங்கள் மென்மேலும் செயல்படுத்தப்பட உள்ளன என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

பவானி கூடுதுறை






பிச்சாவரம்

# இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில் வாரியம்

கதர் கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்று வதில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முன் னோடியாக விளங்கி வருகிறது.

கிராமப் பொருட்கள் உற்பத்தியில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முதலிடம் வகிக்கிறது. கதர் உற்பத்தியில் உத்திரப்பிர தேசத்திற்கு அடுத்து, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

கதர் கிராமத் தொழில் திட்டங்களை வாரியம் 3 நிலைகளில் அமல்படுத்துகிறது.

அ) 1,230 வாரியத்தின் அலகுகள், ஆ) 1,604 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இ) 66,293 கைவினைஞர் களுக்கு நிதியுதவி அளித்தல் ஆகியவையே அவை.

நடப்பு 1990-91-ஆம் ஆண்டில் 75,000 பேர் களுக்கு வேலை வாய்ப்பு அளித்திட வாரியம் நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது.

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளான 2.10.90 அன்று இவ்வாரியம் கோபுரம் டிடர்ஜெண்ட் புதிய சோப்பினை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

பட்டு-பாலியஸ்டர் என்ற புதிய வகைத் துணியையும் வாரியம் அறிமுகப்படுத்தியது.

தமிழ்நாட்டில் பல்வேறு கதர் கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இவ்வாரியம் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து ரூ.19.37 கோடி நிதி பெற்றுள்ளது. எலக்டிரானிக்ஸ் தொழில், ஆபரணக் கற்களுக்குப் பட்டை தீட்டுதல், அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தி செய்தல், சிலேட் உற்பத்தி, கற்பூரம், மெழுகுவர்த்தி உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இப்பொழுது ஈடுபடுகிறது. இவ்வாண்டில் 2,000 தொழிற்கூடங்களை (Bunks) காலணி தொழிலாளர் களுக்கு வாரியம் இலவசமாக வழங்க உள்ளது.

நடப்பு ஆண்டில் 25 கதர் அங்காடிகளையும், காஞ்சிபுரத்தில் ஒரு பட்டு எம்போரியத்தையும் புதிதாக விரைவில் கதர் கிராமத் தொழில் வாரியம் திறக்க உள்ளது.

இந்த ஆண்டு நவராத்திரி கொலு பண்டிகை காலத் தில் 20.8.90-இல் ஆரம்பிக்கப்பட்ட பொம்மை விற் பனையில் 18.10 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளிப் பண்டிகைக் காலங்களில் தமிழ்நாடு அரசு கதர்த் துணிகளுக்கு 10% சிறப்புத் தள்ளுபடி அளிக் கிறது.

இந்தத் தீபாவளிப்பண்டிகைக்காலங்களில் ரூ.22.16 கோடி ரூபாய்க்குக்கதர்த் துணிகள் விற்பனை செய்திட வாரியம் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.

அண்ணல் காந்தியடிகளின் 122-வது பிறந்தநாளையொட்டி சென்னை குறளகத்தில் (காதி கிராப்ட்). மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் பட்டு விற்பனையைத் தொடங்கி வைத்தார்.முதல் விற்பனையினைத் திரைப்பட நடிகைகள் செல்வி அர்ச்சனா, செல்வி பல்லவி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (2.10.90)







# தமிழ் உணர்வை ஊட்டு

## பெருமை வாய்ந்த

# பெருமகனார் சுந்தரனா

## முதல்வர் கலைஞர்

"நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே இந்த மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் வருவதற்கு நீண்ட நெடிய நாள் முயற்சி நடை பெற்றது.

நம்முடைய நெல்லைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எல்.சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அது வைதீக வாசகமாக இருந்தாலும்கூட, எதுவும் நடைபெற நேரம் நன் றாக வேண்டும்என்பார்களே அதைப்போல வாய்த்துள்ள நேரம் நல்ல நேரமா? அல்லவா என்பதை அறிய, நல்லவை நடைபெற்றால் அதற்குப் பெயர் நல்ல நேரம் என்றும், அல்லாதவை நடை பெற்றால் அது நல்லநேரம் அல்ல என்றும், நாம் தீர்மானித்துக் கொள்கிறோம்.

இன்று இந்த நேரம் நல்ல நேரமா அல்லவா என்று கேட்டால், பஞ்சாங்கம் பார்ப்பவர்கள்கூட அதிலே வேறு ஏதாவது குறிப்பு இருந்தால், அதை மறந்து விட்டு, நல்ல நேரம் தான் என்பார்கள். காரணம் தமிழுக்குத் தொண்டு செய்து, தமிழை உலகத்தின் உச்சியிலே அமரவைத்து, 'உலக மொழி களுக்கு ஈடாக மாத்திரமல்ல, அதனினும் மேலான ஒரு மொழி எமக்குண்டு, அந்த மொழியினுடைய மணம்-திலக வாசனை எல்லாப் பகுதியிலும் புகழ் மணக்க வீசுகின்ற வாசனையாகும், அந்த மொழிக் குப் பெயர் தான் தமிழ்மொழி. அந்த மொழி திரா விடத்திற்கு உரிய மொழி. திராவிடம் தெக்கணம் என்கின்ற பிறை நுதலில் அமைந்துள்ள திலகம் போன்றது. அந்த தெக்கணம் பரத கண்டம் என்ற வதனத்திலே ஒளிவிடக்கூடியது' என்று இப்படி அழகுபடுத்தி 'நீராருங்கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும் சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்' என்று தொடங்கிய வாழ்த்துப் பாடலைப் பாடியவர் மனோன்மணீயம் சுந்தரனார்.

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை!
கோலமுழுதும் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?"

—என்று பாவேந்தர் பாரதிதாசன் நீல வானத்தை ஆடையாக்கி அதை உடுத்திக் கொண் டிருக்கின்ற நிலாப் பெண்ணை உருவகப்படுத் தினார். ஆனால் 135 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து 42 ஆண்டுக் காலமே வாழ்ந்து மறைந்த, ஆனால் என்றும் மறையாத - தமிழினத்திற்குச்



பேராசிரியர் சுந்தரனாரின் திருவுருவச்சிலை

சொந்தக்காரரான மனோன்மணீயம் சுந்தரனார், 'நீராரும் கடலை உடையாக மாற்றி அதை நிலமடந்தையை உடுத்திக் கொண்டிருக்கிறாள் என்று குறிப்பிட்டு அந்த நிலமடந்தையினுடைய முகம்தான் பரத கண்டம் என்று குறிப்பிட்டு, அந்தப் பரத கண்டத்தினுடைய முகத்திலே இருக்கின்ற பிறை நுதல்தான் தெக்கணம் என்று சுட்டிக்காட்டி அந்தத் தெக்கணத்திலே இரு புருவங்களிடையிலே இருக்கின்ற திலகம்தான் திராவிடம் எனக்கோடிட்டு, அந்தத் திராவிடத்தினுடைய மொழிகளிலே முக்கியமான மொழி, மற்ற மொழிகளையெல்லாம் உருவாக்கிய தமிழ்மொழி என்று சிறப்பித்து, அதனுடைய மணம் உலகெங்கும் கமழ்கிறது' என்று புகழ்ந்தார்.

அந்த சுந்தரனாரைப் பற்றிக் கவிமணி தேசிக வினாயகம்பிள்ளை அவர்கள், ஒரு பாடலைப் பாடும்பொழுது, அவரைச் சித்திரமாக வரையலாம், ஓவியமாகத் தீட்டலாம், அவருக்கு நாமெல்லாம் ஆற்ற வேண்டிய கடமை அவருக்கோர் நினைவுச் சின்னம் அமைப்பதேயாகும் என்ற கருத்துப்படக் கவிதை எழுதினார்கள்.

தேசிக வினாயகம் பிள்ளை இன்றைக்கு இல்லை என்றாலும்கூட அவருடைய கருத்தை நிலை நாட்டுகின்ற வகையில்- நிறைவேற்றுகின்ற வகையில் தேசிக வினாயகம் பிள்ளையைத் தங்களுடைய கவிஞர்களாக இந்நாட்டினுடைய விடுதலை இயக்கத்திலே உள்ளவர்கள் கொண்டிருந்தாலும், அவர் எல்லோருக்கும் சொந்தமான கவிஞர் என்ற அளவிலே அவரைச் சிறப்பிக்கின்ற நாங்கள் அவர் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை இன்றைக்குச் செயல் வடிவம்தந்து இந்த இடத்திலே நிறைவேற்றிக் காட்டி இருக்கின்றோம். அதுதான் ''மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்'' ஆகும். இதனை இன்றைக்கு ஒரு அரும்பும் பருவம் என்று குறிப்பிடுகின்ற சூழ்நிலை, வெகு விரைவில் இன்னும் இரண்டொரு ஆண்டுகளில், மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் இங்கே தோன்றி மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களின் புகழைப் பாடத் தவறாது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய காலத்திலே கல்விக் கண் திறக்கப்பட்டது. ஆரம்பப் பள்ளிகள், சிற்றூர் தோறும் அமைந்திட வேண்டும் என்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்படி தொடங்கப்பட்ட அந்தப் பெரும் முயற்சி ஆரம்பப் பள்ளியோடு நின்று விடக்கூடாது என்பதுதான், பெருந்தலைவர் காமராஜரின் ஆட்சிக்குப் பிறகு வந்த அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சி, அண்ணாவைத் தொடர்ந்து நாங்கள் நடத்திய ஆட்சி ஆகியவற்றின் கருத்தாகும். 76-ஆம் ஆண்டு வரையில் கிராமப் பகுதிகளிலே படித்த மாணவர்களுக்கெல்லாம் அந்தப் பகுதிகளிலேயே அவர்கள் சென்று பயிலக்கூடிய கல்லூரிகள் அமைய வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு பல கல்லூரிகளைக் கடந்த கால ஆட்சியிலே நாங்கள் கண்டோம். அந்தக்கல்லூரிகளெல்லாம் இணைக்கப்பட்டுப் பல்கலைக் கழகங்கள் தோன்றின.

12-வது பல்கலைக் கழகமாக மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தோன்றுகின்றது. இந்த விழா நிகழ்ச்சியிலே அரசு விழா நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டு நலிந்த பிரிவினருக்கு நலத் திட்டங்கள் வழங்குகிற செயல்கள் நடைபெறுகின்றன.

எந்தவொரு தொகுதியும் இது ஆளும் கட்சித் தொகுதி, எதிர்க்கட்சித்தொகுதி என்று பேதம் பார்த்து இந்த அரசு செயல்படவில்லை என்பதையும் நாங்கள் நடத்துகின்ற அரசு நிகழ்ச்சிகளில் எல்லாவற்றிலேயும், எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும், ஜனநாயகக் கடமையை அவரவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் அனைவரையும் அழைக்கிறோம்.

திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களை மற்ற இயக்கத்தார் பாராட்டினாலும் பாராட்டாவிட்டாலும் மற்ற இயக்கங்களிலே இல்லாத ஒரு மாபு, ஒரு அரசியல் பண்பாடு திராவிட இயக்கத்திற்கு உண்டு. அது ''மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணம் உண்டு'' என்று எண்ணுவதுதான். அப்படி நம்புவதுதான், அப்படி மதிக்கின்ற வகையில் இன்றைக்கு இந்த அரசு யார் சொன்னார்கள்? என்பதை முக்கியமாகக் கருதாமல், என்ன சொன்னார்கள்? என்பதை முக்கியமாகக் கருதி அந்தப் பணிகளை நிறைவேற்ற தயங்காமல் செயல்பட்டு வருகின்ற அரசாகும்.

அப்படிப்பட்ட அரசின் பல்வேறு நற்செயல்களிலே ஒன்றாகத்தான் மனோன்மணீயம் சுந்தரனாரினுடைய பெயரால் இந்தப் பல்கலைக் கழகம் இங்கே தொடங்கப்படுகிறது.



மனோன்மணீயம்-சுந்தரனார் அவர்கள் படைத்த நாடகக்காவியம், சிலப்பதிகாரத்திற்குப் பிறகு ஏற்பட்ட ஒரு பெரிய இடைவெளியை நிறைவு செய்த ஒரு காவியமாகும்.

அந்த நாடகக் காவியத்திலே வருகின்ற கதா பாத்திரங்கள் மிகமிக புதுமையான பாத்திரங்கள்; அதிலே வருகின்ற சீவகன் என்கின்ற பாண்டிய மன்னனானாலும், புருசோத்தமன் என்று சொல்லப்படுகின்ற சேர வேந்தனானாலும், பாண்டியனுடைய மகள் மனோன்மணியானாலும், அவளுடைய தோழி வாணியானாலும், அந்த மனோன்மணியைக் காதலிக்கின்றசேர மன்னன் புருசோத்தமன், அந்த நாட்டிலே சூழ்ச்சி வலை பின்னி ஆட்சியை அபகரித்துக் கொள்ள எண்ணுகின்ற குடிலன் ஆனாலும், அந்த குடிலனுடைய மகன் பலதேவனானாலும் - இவர்களெல்லாம் மனோன்மணீயம் சுந்தரனாரால் உருவாக்கப்பட்ட அற்புதமான கதா பாத்திரங்கள்.

எவ்வளவு நன்றிப் பெருக்குடையவர் அதனுடைய ஆசிரியர் சுந்தரனார் என்பதற்கு, அவர் பயின்ற சாலையில் பல்வேறு அறிவுரைகளை, கருத்துரைகளை அவருக்குப் போதித்தவர் சுந்தர சாமியார் என்று ஒருவர் உண்மையிலே வாழ்ந்தவர். அவருடைய நினைவாகத்தான் மனோன்மணீயம் காவியத்தில் பாண்டிய மன்னருக்கு அறிவுரை கூறுகின்ற ஒரு முனிவராக சுந்தர முனிவர் என்கின்ற கதாபாத்திரத்தை மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள் படைக்கிறார்கள். இப்படி ஒரு அற்புதமான நாடகத்தை உருவாக்கிய பெருமகன், அவர்.

பேராசிரியர் எடுத்துக் காட்டியது போல் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு முதன் முதலாகப் பல்கலைக் கழக மாணவர்களிடையே பேச அழைக்கப்பட்டார். அழைக்கப்பட்டபோது மாணவர்கள் மத்தியிலே அமர்ந்தபோதுதான் என்ன தலைப்பிலே பேச வேண்டுமென்று அண்ணா கேட்டார். அங்கேதான் தலைப்பு தரப்பட்டது அவருக்கு. அதன்படி அண்ணா அவர்கள் 'ஆற்றோரம்' என்கின்ற தலைப்பிலே பேசினார்கள்.

அந்தத் தலைப்பு என்னென்ன செய்திகளை எல்லாம் நாட்டிற்குச்சொல்லிற்று, என்பதையெல்லாம் இன்னும் நான் மறந்திடவில்லை. ஆற்றோரம்- காவிரிக்கரை ஆற்றோரம், கங்கை ஆற்றோரம் என்ற இரண்டு ஆற்றோரங்களை ஒப்பிட்டு இந்த நாட்டினுடைய வரலாறு கங்கை ஆற்றங்கரையிலிருந்து தொடங்குகிறது தவறு; காவிரி ஆற்றிலிருந்து தொடங்கியிருக்க வேண்டும் என்று அண்ணா அவர்கள் பேசினார்கள். அதற்குச்சான்றாக அன்றைக்கு அவர் அழைத்துக் காட்டியவர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை.

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைதான் இந்தக் கருத்தைப்பல ஆண்டுகளுக்கு முன்பு சொன்னவர். இந்திய நாட்டினுடைய வரலாறு உண்மையிலே தொடங்கப்பட வேண்டும் என்றால் அது தொடங்கப்பட வேண்டிய இடம் தமிழகத்திலே உள்ள தென்னகத்திலே உள்ள காவிரி ஆற்றுஓரமே தவிர கங்கை ஆற்றுஓரம் அல்ல என்று சுந்தரனார் குறிப்பிட்டார்.

இப்படிப் பெரும் புரட்சியைச் செய்து, தமிழுக்கு ஈடான மொழி வடமொழியல்ல என்பதை எடுத்துக்காட்டி, இது வீழாத மொழி-அழியாத மொழி - என்றைக்கும் இளமை உள்ள மொழி என்கின்ற அதன் சீரைப்பாடி, சிறப்பைச் சொல்லி, நமக்கெல்லாம் தமிழ்உணர்வை அன்றுமுதல் இன்றுவரை ஊட்டிய பெருமை வாய்ந்த அந்தப் பெருமகனாருக்கு இந்தப் பல்கலைக் கழகத்தை நாம் உருவாக்கியிருப்பது ஒரு சாதாரண நன்றிக் கடனே தவிர பெரும்பணி என்று நான் சொல்லமாட்டேன். அவர் ஆற்றிய பணிக்கு நம்மால் இயன்ற ஒரு சாதாரண நன்றியைத்தான் இன்றைக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றோம். இது தமிழர்களுடைய இன உணர்வை மேலும்மேலும் பெருக்கட்டும்; தமிழ் மொழிக்கு வளத்தைச் சேர்க்கட்டும். தமிழர்கள் உலகத்திலே சிறந்த குடிமக்கள் என்பதை விளக்கட்டும். அதற்கு இந்தப் பல்கலைக் கழகம் பணியாற்றட்டும். இந்தப்பல்கலைக்கழகத்தினுடைய பணிகள், அதற்கு ஏற்றவாறு வெற்றியினைத் தரட்டும்,, என்று வாழ்த்துகிறேன்! விடை பெறுகின்றேன்.''

**—7.9.90 அன்று, திருநெல்வேலியில் உள்ள அபிஷேகப் பட்டியில், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தைத் துவக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து.**

அம்பேத்கர் நூற்றாண்டு:

## தீண்டாமை



★ தீண்டாமை என்பது சாதிக் கொடுமையிலிருந்து வளருகிற ஒன்று. எனவே, சாதியை ஒழிக்காமல் தீண்டாமையை ஒழிப்பதென்பது நடக்கக் கூடியதல்ல.

★ சாதிக்கொடுமை காரணமாகவே நம்மில் ஒரு சில திறமையுள்ளவர்களும் புறக்கணிக்கப்படுகின்றனர். நம் வீரதீரச் செயல்களும் சிந்தனைப் படைப்புக்களும் கூடப் புறக்கணிக்கப்படுகின்றன. இராணுவம், காவல் முதலிய துறைகளில் நாம் புகமுடியாமல் இருப்பதும் இக்கொடுமையால்தான். நம்முடைய மானம் மரியாதைகளையெல்லாம் பறித்து, வாழ்வதற்கே லாயக்கற்ற ஜீவன்களாக நம்மை மாறிவிட்டது சாதி வேறுபாடுகள் என்கிற கொடுமை.



### மதுரை மாவட்டத்தில்...

# ஆதிதிராவிடர் நலத்துறையின் அரிய பணிகள்

மதுரை மாவட்டத்தில் 20 பள்ளிகள் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

உயர்நிலைப்பள்ளிகள்-2, நடுநிலைப்பள்ளிகள்-6, மற்றும் ஆரம்பப் பள்ளிகள்-12, இப்பள்ளிகளில் 4,615 மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். அனைத்துப் பள்ளிகளும் அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.20.84 இலட்சம் அரசினால் வழங்கப்பட்டு, பொதுப்பணித் துறையின் மூலம் குன்னூர், பொம்மிநாயக்கன்பட்டி ஆகிய பள்ளிகளுக்குத் துணைக் கட்டடங்கள் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. மற்றும் இத்திட்டத்தின் மூலம் பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் கழிப்பறை, சுற்றுப்புறச் சுவர்கள் கட்டவும், ஜெயமங்கலத்தில் அரசு மாணவர் விடுதிக் கட்டடம் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 'தாட்கோ' மூலம் நான்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்குச் செயற்பொறியாளர் மூலமாக மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளன. அவை: 1. நாச்சிகுளம் உயர்நிலைப்பள்ளி, 2. பொம்மிநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளி, 3. அம்மச்சியாபுரம் நடுநிலைப்பள்ளி, 4. எலமனூர் நடுநிலைப்பள்ளி.

இம்மாவட்டத்தில் உள்ள மொத்த ஆதிதிராவிடர்களுக்கான மாணவ, மாணவியர் விடுதிகள் 52, வாடகைக் கட்டடத்தில் உள்ளவை 37; அரசு கட்டடத்தில் உள்ளவை 15 நடப்பு 1990-91-ஆம் ஆண்டில் மூன்று விடுதிகளுக்குக் கட்டடங்கள் மொத்தம் ரூ.57.77 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

தேனி மாணவியர் விடுதி ரூ.25.25 இலட்சத்திலும், கம்பம் புதுப்பட்டி விடுதி ரூ.19.00இலட்சத்திலும், ஜெயமங்கலம் விடுதி ரூ.13.52 இலட்சத்திலும், இந்த மூன்று விடுதிகளின் கட்டுமானப் பணிகளை நடப்பு ஆண்டிலேயே முடிக்க, தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குப் பல்வேறு துறைகளில் ஆர்வமும், ஈடுபாடும் மற்றும் வேலைவாய்ப்பும் ஏற்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ரூ.2.46 இலட்சம் ஒதுக்கீட்டில் கனிப்பொறி பயிற்சி 100 மாணவர்களுக்கும், 0.18 இலட்சம் ஒதுக்கீட்டில் சட்ட நிர்வாகப் பயிற்சி 2 மாணவர்களுக்கும், ரூ.3.75 இலட்சம் ஒதுக்கீட்டில் மருத்துவமனை நிர்வாகப் பட்ட மேற்படிப்பு 15 மாணவர்களுக்கும், ரூ.0.77 இலட்சம் ஒதுக்கீட்டில் இரு சக்கர வாகனம் பழுதுபார்க்கும் பயிற்சி 25 மாணவர்களுக்கும், ரூ.0.93 இலட்சம் ஒதுக்கீட்டில் குளிர் சாதனப்பெட்டி பழுதுபார்க்கும் பயிற்சி 18 மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகளின் மூலம் பயன்பெறும் மாணவர்கள் தாமாகவோ அல்லது நிறுவனங்களிலோ தொழில்புரிந்து முன்னே[illegible] வாய்ப்புள்ளது.

தீண்டாமையினால் ஏற்பட[illegible] கூடிய சமூகக் கேடுகளைப் பொது[illegible] மக்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி[illegible] திங்களில் தீண்டாமை ஒழிப்பு வார[illegible] கொண்டாடப்படுகிறது. மது[illegible] மாவட்டத்தில் 1987-ஆம் ஆண்டி[illegible] 46 கிராமங்களும், 1988-ஆ[illegible] ஆண்டில் 28 கிராமங்களும் 1989-ஆம் ஆண்டில் 77 கிராம[illegible]களும் தீண்டாமை பரவியுள்ள கிராமங்களாக ஆக மொத்தம் 15[illegible] தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிதாக அமைக்கப்படும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு விரைவில் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும் என்னும் அடிப்படையில், இதற்காகப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 1989-90-ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டங்களின் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனிகளுக்கு ரூ.52 இலட்சம் செலவில் 17 விசைப்பம்புகளும், 75 கைப்பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டில் ரூ.10.61 இலட்சம் செலவில் 5 விசைப்பம்புகளும், ரூ.2.15 இலட்சம் செலவில் 11 கைப்பம்புகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1989-90-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் காலனிகளில் 358 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் (1990-91) இதுவரை 24 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.





★ ஜனநாயகத்தில் ஒவ்வொரு குடிமகனும் சிந்திக்கும் திறன் உள்ளவராகவும் கல்வியறிவு உடையவராகவும் திகழ்தல் வேண்டும்.

**— டாக்டர் அம்பேத்கர்**

கடந்த 1989-90-ஆம் ஆண்டில் 1,480 குடிசைகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1990-91-இல் ஜூலைத் திங்கள் வரை 125 குடிசைகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றன.

இம்மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு மயானம்/மயானப் பாதை வசதி செய்து கொடுக்கும் பொருட்டு தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் இத்திட்டத்தின் கீழ் 7 காலனிகளுக்கு மயானம்/மயானப்பாதை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் (1990-91) 5 காலனிகளுக்கு மயானம்/மயானப் பாதை வசதி செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் 224 துணைச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இச்சுகாதார நிலையங்களில் அந்தந்தப் பகுதி வாழ்மக்களுக்கு வேறுபாடின்றி மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதில் 55 சுகாதார நிலையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக் வசிக்கும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்புத் திட்டம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஒரு ஆடு அலகு என்பது 20 பெட்டை ஆடுகள், 1 கிடா அடங்கியது ஆகும். இதற்கு ஆகும் செலவு ரூ.6,500/- என்று அரசினரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இச்செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. பயனாளிகள் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி கார்ப்பரேசன் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். பயனாளிகளில் 50 சதவிகிதம் பெண் பயனாளிகள் ஆவர். 1988-89-இல் 200 அலகுகள் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு 173 அலகுகள் வாங்கி வழங்கப்பட்டு விட்டன. இதற்கென அங்கீகரிக்கப்பட்ட மானியத் தொகையான ரூ.7,83,400/-இல் இதுவரை 6,21,270/- விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அலகுகளை வாங்கி வழங்கிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பட்டு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த கைலாசபட்டி, வாய்க்கால்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களில் தலா ஒரு இலட்ச ரூபாய் செலவில் இரண்டு சமுதாயக் கிணறுகள் அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 25 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடையும் வாய்ப்பு உள்ளது.

கறவை மாடுகள் வழங்கும் திட்டம், பால்வளத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாங்கும் கறவை மாடுகளின் கிரையத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.1067 இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக அளிக்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியத் தொகையின் மூலம் 1989-90-இல் 3,301 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன் அடைந்துள்ளனர்.

தொழிற்கூடங்கள் வழங்கும் திட்டம், காதி மற்றும் கிராமத் தொழில் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி செருப்பு தைக்கும் தொழிலுக்கும், தச்சுத் தொழிலுக்கும் கூடங்கள் அமைத்துத் தரப்படுகின்றன. இதன்மூலம் 1988-89-இல் 50 ஆதிதிராவிடர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.4.50 இலட்சம் அரசினரால் செலவிடப்பட்டுள்ளது. இதுதவிர கைக்குத்தல் அரிசி தயார் செய்தல், பாப்கார்ன் தயார் செய்தல் போன்ற சிறுதொழில்களுக்கும், நாவிதர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடன் தொகை இத்துறையினரால் வழங்கப்படுகிறது.

மக்கள் நலக்காடுகள் திட்டம், வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதில் மத்திய அரசின் உதவியுடன் 5,000 கன்றுகள் உற்பத்தி செய்யக்கூடிய சிறுசிறு நர்சரிகள் அமைக்கப்படுகின்றன. பழவகைகள், தீவனச் செடிகள், எரிபொருளாகப் பயன்படும் மரங்கள் முதலியவை இம்மாவட்டத்தின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்புடையவை என்று தெரிவு செய்யப்பட்டு, மதுரை, சோழவந்தான், உசிலம்பட்டி, கண்டமனூர் பகுதிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 20 ஆதிதிராவிடர் குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

1989-90-ஆம் ஆண்டில் 10-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் 60 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற 282 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய மாணவ/மாணவியர்க்கு ரூ.300/- வீதம் ரூ.84,600/-க்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ மாணவ/மாணவியர் சுமார் 4,500 பேருக்கு மேல் நிலைக்கல்வியில் சிறப்புக் கட்டணத்தொகை மற்றும் தேர்வுக் கட்டணத் தொகை இவற்றைத் திரும்பப் பெறுவதற்கு ரூ.3,79,171/- நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மாணவர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட, பழங்குடி மாணவ/மாணவியர்க்குச் சிறப்பு மேற்பார்வைக் கல்வித் திட்டத்தில் ரூ.49,000 பெறப்பட்டு, 16 மேல்நிலைப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் தீவிர நடவடிக்கை காரணமாக, மாவட்ட நிர்வாகம் செய்து வரும் பணிகள், இம்மாவட்டத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழ்வில் ஒளியேற்றும் என்பதில் ஐயமில்லை!

**-ரெ.இராவணன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை மாவட்டம்.**

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 50 ஆயிரம் அடுக்குமாடி வீடுகள் குடியிருப்போர்க்குச் சொந்தமாகும் என்று அரசு அறிவித்ததையொட்டி சென்னை 5-ஆவது வட்டத்தைச் சேர்ந்த மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் 40 ஆண்டாகக் குடியிருந்துவரும் 100 குடும்பங்கள் கொடுத்த விண்ணபத்தின்பேரில் அந்த இடத்தை அவர்களுக்கே சொந்தமாக்கித் தருமாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார் (14.8.90).

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏழைப் பெண்களின் திருமண உதவிக்காக ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

★ தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் 50 இடங்களில் காற்றாடி மின் ஆலைகள் அமைக்கப் படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார் (20.8.90)

★ கொல்லிமலை சுற்றுலா மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகத் தங்கும் விடுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது என்றும், அம்மாவட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ.7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் சட்டப்பேரவையில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கே.பி. கந்தசாமி அவர்கள் அறிவித்தார் (20.8.90).

★ சென்னையில் பத்திரிகையாளர்க்கு வீடுகட்டும் திட்டத்திற்கு ரூ.20 இலட்சம் மானியம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு.கண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார் (20.8.90).

★ பாளையங்கோட்டை நகராட்சியில் நவீனக் கட்டணக் கழிப்பிடம் கட்டத் தமிழக அரசு ரூ.97 இலட்சம் அனுமதித்துள்ளது என்றும், குடிநீர் விரிவுத் திட்டத்தை அரசு விரைவில் நிறைவேற்றும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் பாளையங்கோட்டையில் தெரிவித்தார் (18.8.90).

★ நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்க்குக் கடந்த மே மாதம் எற்பட்ட ஒப்பந்தப்படி 1.1.90 முதல் திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (21.8.90).

★ செங்கை அண்ணா மாவட்டம் பனப்பாக்கத்தில் சித்த மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட தேசிய சித்தா நிலையம் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (21.8.90).

★ உணவு விடுதியில் பண்டங்களின் விலை குறைப்புக்காகத் தமிழக அரசு குழு ஒன்றை அமைத்துள்ளது. அந்தக் குழு தனது இறுதி முடிவில் தற்போது உள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் உணவுப் பண்டங்களின் விலை நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்படும் என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அறிவித்தார் (22.8.90)

★ கால்நடையால் தாக்கப்பட்டு இறக்கும் விவசாயி குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் தெரிவித்தார் (22.8.90)

★ புதிய ரேஷன் கார்டுகள் வழங்கத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. உண்மையில் தேவைப் படுகிறவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். தெரிவித்தார் (23.8.90)

★ ஐரோப்பிய பொருளாதாரக் குழு நிதியுதவியுடன் ரூ.10 கோடி செலவில் மீன் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு.சந்திரசேகரன் அவர்கள் தஞ்சையில் தெரிவித்தார் (24.8.90).

★ எந்தக் குடும்பமாக இருந்தாலும் எந்தக் கட்சியினருடைய குடும்பமாக இருந்தாலும் தனது குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பிலுள்ள ஒரு வாலிபர் திடீரென்று கொல்லப்பட்டால், மனித நேய அடிப்படையில் அந்தக் குடும்பத்துக்குப் பாதுகாப்பு நிதியாக ரூ.10,000 வழங்கப்படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார் (23.8.90)

★ ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கான லைசென்சு இதுவரை காகிதத்தில் வழங்கப்பட்டு வந்தது. அதைச் சேதமுறாமல் பாதுகாப்பது ஒரு பெரிய வேலையாக இருந்தது. எனவே, இனி அந்த முறை மாற்றப்பட்டு, தொழிற்சாலைகளுக்கான லைசென்சு புத்தக வடிவில் வழங்கப்படும் என்று மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் இராணிப்பேட்டையில் தெரிவித்தார் (25.8.90).





# தந்தை பெரியார் ஒரு தீர்க்கதரிசி!

— மாண்புமிகு முதல்வர் கலைஞர்

பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த அருமையான மையத்தை நாட்டிற்கு காணிக்கையாக்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன். தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளில் இந்த விழா நடைபெறுவது எல்லா வகையிலும் பொருத்தமான ஒன்று. மூட நம்பிக்கையில் ஆழ்ந்து கிடந்த சமுதாயத்தைத் தட்டியெழுப்ப வேண்டுமென்ற பேரார்வத்தோடு பெரும் புயலாகக் கிளம்பியவர் தந்தை பெரியார் அவர்கள். அவர்கள் சமுதாயத்திலே எல்லா பிரிவு மக்களுக்கும் சுயசிந்தனை, சுயமரியாதை - அவர்களுக்கு உரிய உரிமைகள் வேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் போராடியது மாத்திரமல்ல, வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகத்தில், உலகத்திலே பல்வேறு நாடுகளுடைய வளர்ச்சிக்கு ஈடாக நம்முடைய நாடும் இருந்திட வேண்டும், அமைந்திட வேண்டும் என்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்டவராக திகழ்ந்தார்கள். எனவேதான் அவருடைய பெயரால் இந்த அறிவியல் தொழில் நுட்ப மையம் அமைந்திருப்பது மிக மிகப் பொருத்தமுடையது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

1929-ஆம் ஆண்டில் செங்கற்பட்டில் தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்திய சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆடவரைப்போல பெண்களுக்கும் சொத்தில் சமஉரிமை தரப்பட வேண்டும் என்பதாகும். அதை அறுபதாண்டு காலத்திற்குப் பிறகு - கடந்த ஆண்டு தமிழக சட்டமன்றத்திலே சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்து அனைவருடைய ஏகோபித்த ஆதரவையும் பெற்று இந்த அரசு நிறைவேற்றியிருக்கின்றது என்றால் பெரியார் அவர்களின் எண்ணங்களை நிறைவேற்ற அறுபதாண்டு காலம் நமக்கு தேவைப்பட்டிருக்கின்றது.

எவ்வளவோ விஞ்ஞான அறிவு பெருகியிருந்தாலுங்கூட ஆரம்பப் பள்ளிக் கூடத்திலேயே உலகம் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது என்கின்ற பாடம் கற்பிக்கப் பட்டாலும்கூட, அந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள்-அந்தத் தெருவிலே இருப்போர் அதை நம்பத் தயாராக இல்லை என்பதை கிராமங்களிலே நம்மால் காண முடிகின்றது என்கிற போது, குழந்தைகளை, மாணவர்களை இது போன்ற அறிவு மையங்களிலே இந்தக் காட்சிகளைக் காண வைத்து மேலும் விளக்கங்களை அவர்களுக்கு அளிக்க நாம் இத்தகைய நிலையங்களைப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

65 ஆண்டுகளுக்கு முன்பு தந்தை பெரியார் அவர்களுடைய சொற்பொழிவு ஒன்று "இனி வரும் உலகம்" என்ற தலைப்பில் மிகச் சிறிய புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கின்றது. 60 ஆண்டுகளுக்கு முன்பே இந்த ஆண்டு எப்படியிருக்கும் என்பதை தந்தை பெரியார் அவர்கள் அன்றைக்கே ஒரு தீர்க்கதரிசியாக - அவர் பெரிய ஞானி என்ற அடிப்படையிலே அல்ல - முற்றும் சிந்தனையாளர் என்ற அடிப்படையில் — நடந்தவைகள், நடந்துகொண்டிருப்பவைகள், இனி நடக்கப் போகிறவைகள், நடந்தவைகளைக் கொண்டும், நடந்து கொண்டிருப்பவைகளைக் கொண்டும் இனி நடக்கப்போவது எப்படியிருக்கும் என்று அனுமானிக்கக் கூடிய பெரும் சிந்தனையாளராக - பேரறிவாளராக - பகுத்தறிவு சீயமாக - அவர்கள் விளங்கிய காரணத்தினால் 60 ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத்திருக்கிறார்கள்.

எனவே தான் தந்தை பெரியாரை நாம் தீர்க்கதரிசி என்கிறோம். எனவே தான் இந்த அறிவியல் மையத்திற்கு வேறு யாருடைய பெயரையும் சூட்டுவதற்கு பொருத்தமான பெயரல்ல, தந்தை பெரியாரின் பெயரைத்தான். ஆகவேதான் அந்தப் பெயர் இன்று சூட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த அறிவியல் மையத்தைப் பயன்படுத்திக் கொண்டு பயிற்சி பெறுகின்ற மாணவர்கள், இளைஞர்கள் அனைவரும் தாங்கள் அந்த பயனைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கெல்லாம் அவர்கள் நடமாடும் பயிற்சி மையங்களாக மாற வேண்டும். பெரியவர்கள், கிராமப்புறத்திலே இருக்கின்ற பாமர மக்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும்."

**—பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத் துவக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து (17.9.90)**



# வாழ வைக்கும் வைரத் தொழில்

**த**மிழகம் மீண்டும் தொழில் வளர்ச்சியில் உயர் நிலையை அடைய, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாதம் ஒரு தொழிற்சாலையை உருவாக்கி வருகிறார்கள். அந்த வகையில், திருச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு (1989) செப்டம்பர் திங்களில், சமயபுரம் அருகே உள்ள இருங்கலூரில் செயற்கை வைரத் தொழிற்பேட்டைப் பயிற்சி மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

பம்பாயைச் சேர்ந்த வைரக்கற்கள் வளர்ச்சிக்கழகம், தென் இந்தியாவில் தமிழகத்தில் இந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தை அமைக்க விரும்பியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருச்சிப் பகுதியில் சுமார் 50 ஆண்டுக் காலமாகச் செயற்கை வைரத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 25,000 குடும்பங்கள் பயன் பெறும் வண்ணம், இத்தொழிற் சாலையைச் சமயபுரம் அருகிலுள்ள இருங்கலூரில் 10 ஏக்கர் நிலத்தில் அமைக்க அடிக்கல் நாட்டினார்.

தற்போது வெளிநாடுகளில் 'அமெரிக்கன் டைமண்ட்' என்று அழைக்கப்படும் செயற்கை வைரக்கற்களுக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது. இவை ஒரே அளவு உள்ள தரமான கற்களாக இருக்கும். திருச்சிப் பகுதியில் இவ்விதச் செயற்கைக் கற்களை, கைத்தொழிலில் ரகப்படுத்துவதால் சரியான ஒரே அளவில் அதிகக் கற்கள் உருவாக்க முடியவில்லை. இதனால் இவற்றுக்குச் சரியான அளவில் வரவேற்பில்லை. வேலைக்கேற்ற வருவாயும் இல்லை.



தற்போது வைரக்கற்கள் வளர்ச்சி நிறுவனம் விலை உயர்ந்த இயந்திரங்களை வைத்து, கற்களை உடைத்து மெருகு ஏற்றுவதால், ஒரே அளவில் தரமான ''அமெரிக்கன் டைமண்ட்ஸ்'' என்று அழைக்கப்படும் செயற்கை வைரக்கற்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

முன்பு நாள் ஒன்றுக்கு 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை வருவாய் ஈட்டிக்கொண்டிருந்த கைவினைஞர்கள், தற்போது இந்தத் தொழிலில் பயிற்சி பெற்று வங்கிக் கடன் மூலம் இயந்திரங்கள் வாங்கி நாளொன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

செயற்கை வைரக்கற்கள் தொழிற்சாலையின் திருச்சி மண்டல நிர்வாகி திரு.மோதி அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது:

''தற்போது உலக அளவில் இந்தியாவின் செயற்கை வைரக்கற்கள் ஏற்றுமதி ஆண்டொன்றுக்கு ரூ.50 இலட்சம் என்ற அளவில் உள்ளது. நாம் இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைத்து கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் ஏற்றுமதித்திறன் இன்னும் 5 ஆண்டுகளில் ரூ.400 கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது''.

''இதற்கு முறையான திட்டமும், பயிற்சியும் அவசியம். இதற்காக நாங்கள் திருச்சி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, இங்குள்ள சுமார் 25,000 குடும்பங்களுக்கு இன்னும் 5 ஆண்டு காலத்திற்குள் இப்பயிற்சியை அளிப்பதென முடிவு செய்தோம். அரசு இதற்காக எங்களுக்குச் சலுகை விலையில் நிலம் தந்து வரி விலக்கு அளித்து ஊக்கப்படுத்தியுள்ளது.''



இருங்கலூரில் தொழிற்சாலைக் கட்டடம் கட்டும் வரையில் காத்திராமல், செயற்கை வைரத் தொழில் கைவினைஞர் உடன் பயிற்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அரசு திருச்சி தியாகராஜ பாகவதர் மன்றம் பின்புறம் உள்ள கட்டடத்தை இலவசமாகப் பயிற்சி மையம் அமைய கொடுத்துள்ளது. நாளொன்றுக்குக் காலையில் 100 பேர், மாலையில் 100 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். கூடிய விரைவில் உலகச் செயற்கை வைரத் தொழிலில் தமிழகம் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடிக்கும் என நம்பலாம்.

**-எஸ். சுதாகர்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி**

## பயன் அடைந்தோர் பகர்வன:

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்

**ப**சும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ், 1989-90-ஆம் ஆண்டில் நிதியுதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 360 ஆகும். இவர்களுக்கு 18 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1990 ஏப்ரலிலிருந்து இது வரை 240 மகளிர்க்கு 12 இலட்ச ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டிற்கு இத்திட்டத்தின்கீழ், அரசு இம்மாவட்டத்திற்கு ரூ.20 இலட்சம் வழங்கியுள்ளது. 6.8.90 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ், 11 பேருக்குத் தலா ரூ.5,000 வீதம் ரூ.55,000 நிதியுதவி வழங்கப்பட்டது.

திருமதி இலட்சுமி
தன் கணவருடன்



திருமண நிதியுதவி பெற்ற கல்லல் ஊராட்சி ஒன்றியம் வெற்றியூரைச் சார்ந்த திருமதி இலட்சுமி என்பவர் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர், களை எடுத்தல், நடவுநடல் போன்ற விவசாயக்கூலி வேலைகளைச் செய்து வருகின்றனர். திருமதி இலட்சுமியுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரர் மற்றும் 4 சகோதரிகள்.

போதிய வருமானம் இல்லாமையால், திருமதி இலட்சுமியின் திருமணம் நடைபெறாமல் தள்ளிக் கொண்டே போயிற்று. எட்டாம் வகுப்பு வரை படித்திருந்த இவர், தையல் தொழில் தெரிந்தமையால் ஆண்டிற்கு ஒருமுறை பள்ளிச் சீருடைகளைத் தைத்துக் கொடுப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு குடும்பத்தைக் கவனித்து வந்தார். அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தைக் கேள்வியுற்ற இவர், அதற்கான முயற்சியில் இறங்கினார், அரசின் உதவியும் கிடைத்தது. திருமணமும் நல்லபடியாக நடந்தது.

''அரசின் இந்தச் சிறப்பான திட்டத்தினால், எங்கள் பெண்ணிற்கு வாழ்வு கிடைத்தது'' என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தனர் இவரது பெற்றோர்கள்.

**ந. பாலையா**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன் தேவர் திருமகன்**
**மாவட்டம்,**

# பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்



வெள்ளோட்டில் மகளிர் தையல் பயிற்சிக்கூடம்

**பெரியார் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளையும், செயல் திட்டங்களையும் நேரில் கண்டறிய, செப்டம்பர் 7,8 தேதிகளில் செய்தியாளர்கள் பயணம் மேற்கொண்டனர். இதற்கு, ஊரக வளர்ச்சித்துறை ஏற்பாடு செய்திருந்தது.**

**இம்மாவட்டத்தில் நடைபெற்றுவரும் நலத்திட்டங்களை விளக்குகிறது இக் கட்டுரை.**

பெரியார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை-எளிய மக்கள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் உயர தீவிர சுகாதாரத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், சாண எரிவாயுத் திட்டம், சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டம் முதலிய திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

### தீவிர சுகாதாரத் திட்டம்

தீவிர சுகாதாரத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அனைத்து வீடுகளிலும் குறைந்த செலவில் நவீனக் கழிப்பிடம் கட்டித் தருவதாகும். இத்திட்டத்தின் விளைவாகக் கிராமப் புறப் பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல் நல்ல முறையில் அமைவதால், காலரா, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் வராமல் தடுக்கப்படுகின்றன. மனிதனின் கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலை ஒழிக்கப்படுகின்றது. மேலும், பெண்கள் அநாகரிக முறையில், திறந்த வெளியில் பாதுகாப்பின்றிக் கழிக்கும் நிலையும் தவிர்க்கப்படுகிறது.

இந்த முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மத்திய-மாநில அரசுகள் மற்றும் 'யூனிசெப்' நிறுவனம் ஆகியவற்றின் உதவிகளுடன் பெரியார் மாவட்டத்தில் இத்திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் கட்டப்படும் கழிப்பிடங்கள் குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தினாலே போதும் என்ற வகையில், வடிவமைக்கப்படுவது ஒரு சிறப்பாகும். இதனால், தண்ணீர் வசதி அதிகம் இல்லாத இடங்களிலும் இவ்வகைக் கழிப்பிடங்களைக் கட்டிக் கொள்ள முடிகின்றது.

ஒவ்வொரு கழிப்பிடமும் 1,600 ரூபாய் செலவிலேயே கட்டப்படுகின்றது. இதில் 1,280 ரூபாய் அரசு மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 320 ரூபாய் மட்டுமே கழிப்பிடம் கட்டிக் கொள்பவரின் பங்காகப் பெறப்படுகிறது.

1989-90-ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் 10,000 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டில், 15,000 கழிப்பிடங்கள் கட்டப்பட உள்ளன. இவ்வகைக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கென, பெரியார் மாவட்டத்தில் அலுவலர்களுக்கும் ஊராட்சி மற்றும் பேரூராட்சி உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் கொத்தனார்களுக்கும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

புதுப்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் 88 வீடுகள் உள்ளன. இவற்றில் சென்ற ஆண்டு முடிய தொகுப்பு வீடுகள் மூலம் 45 கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. நடப்பாண்டில் 40 கழிப்பிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 கழிப்பிடங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துடன் இக்குடியிருப்பில் 100 விழுக்காடு வீடுகளிலும் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் சொந்தமாகத் தொழில்கள் தொடங்கவும், ஊதிய அடிப்படையில் வேலை வாய்ப்பினைப் பெறவும் வழிவகை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 35 நபர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மின்விளக்குகளைப் பழுதுபார்த்தல், தையல், இருப்புக் கடைசல் வேலை செய்தல், மோட்டார் ரிவைண்டிங் செய்தல், வானொலிப் பெட்டி பழுதுபார்த்தல், பற்ற-வைப்பு போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.250/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின்னர் அவர்களுக்கு ரூ.500 மதிப்புள்ள கருவிகள் வழங்கப்படுகின்றன.

1979-80-ஆம் ஆண்டுமுதல் 1989-90-ஆம் ஆண்டுவரை கிராமப் புறங்களில் படித்த இளைஞர்களுக்கென இத்திட்டத்தின் கீழ் ரூ.2,258.19 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில், 13,961 இளைஞர்கள் பயிற்சி பெற்று அவர்களில் 2,406 பேர்கள் சுயமாகவும் 4,752 பேர்கள் ஊதிய அடிப்படையிலும் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள்.

பவானி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தொழில் அலகில், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வேலை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப் படுகின்றனர். இங்கு அரசு, அரசுடைமையாக்கப்பட்ட பொது நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து வேலை உத்தரவுகள் பெறப்பட்டு, கட்டிடங்களுக்குத் தேவையான இரும்புத் தூண்கள், சன்னல்கள், கதவுகள், சாண எரிவாயு டிரம் போன்ற பொருட்கள் தயாரித்துக் கொடுக்கப்படுகின்றன.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், ஏழைப் பெண்களுக்கும், விதவைகளுக்கும் கணவனால் கைவிடப்பட்டவர்க்கும் தொழில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப் படுகிறது. இவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு வட்டாரத்திலும் 15 முதல் 20 பெண்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் சுழல் நிதியாக ரூ.15,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மகளிர் மேம்பாட்டிற்குத் தேவைப்படும் பால் உற்பத்தி, பாய் நெசவு, நூல் நூற்பு, சாம்பார் பொடி தயாரித்தல், தையல் வேலை போன்ற தொழில்கள் செய்யப் படுகின்றன.

### ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் நோக்கம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பற்ற மற்றும் பகுதி நேர வேலையிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கித் தருவதும், அதன் மூலம் நிலையான சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதுமாகும். இத்திட்டப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 80 விழுக்காட்டினை மத்திய அரசும் 20 விழுக்காட்டினை மாநில அரசும் ஏற்கின்றன.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர்க்கும் பழங்குடியினர்க்கும் தொகுப்பு வீடுகள் கட்டுதல், ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்ற அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டித்தருதல், சாலைகள் அமைத்தல், குடிநீர்த் தொட்டிகள் கட்டுதல், பாலங்கள் அமைத்தல், சாக்கடைகள் அமைத்தல், வெள்ளத் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெரியார் மாவட்டத்தில் நடப்பாண்டில் ரூ.269.802 மதிப்பீட்டில் 1,900 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கான்கிரீட் கூரையுடன் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.14,200 ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் இலவச மின்வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. இலவசக் காப்பீட்டு வசதியுடன் அமைக்கப்படும் இத்தொகுப்பு வீடுகளுக்குத் தேவையான குடிநீர், தெரு விளக்கு, தெருக்கள், சாக்கடைகள் போன்ற அடிப்படை வசதிகள் ஊராட்சி ஒன்றியத்தால் செய்து கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் புகையில்லா அடுப்பும் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



பவானி ஊராட்சி ஒன்றியத் தொழிலகம்



குறைந்த செலவிலான நவீன கழிப்பிடம்

தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் இதுவரை 11,451 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றில் 6,787 வீடுகளுக்கு இலவச மின்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து வீடுகளுக்கும் இலவச குடிசை விளக்குத் திட்டத்தின்கீழ், வரும் ஆண்டுகளில் மின் இணைப்பு வழங்கப்படும்.

நஞ்சப்ப செட்டி புதூரில் 25 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு 25 தொகுப்பு வீடுகள் ரூ.2,495 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 25 வீடுகளிலும் புகையில்லா அடுப்புகள் அமைக்கப் பட்டுள்ளன. ஒரு அடுப்பின் விலை ரூ.57. அதில் அரசு மானியமாக வழங்குவது 52 ரூபாய்.

இம்மாவட்டத்தில் 342 ஊராட்சிகளும் 64 பேரூராட்சிகளும் உள்



நஞ்சப்பசெட்டி புதூரில் ஆதிதிராவிடர்க்குக் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ள தொகுப்பு வீடுகள்.

ளன. இவற்றில் 179 ஊராட்சி களும் 53 பேரூராட்சிகளும் சொந் தக் கட்டிட வசதி கொண்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 72 ஊராட்சிக் கட்டிடங்கள் ரூ.57.85 இலட்சம் மதிப்பீட்டிலும், 8 பேரூராட்சிக் கட்டிடங்கள் ரூ.8 இலட்சம் மதிப் பீட்டிலும் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 91 ஊராட்சிகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு, ஊராட்சி அலுவலகக் கட்டிட வேலையானது தன்னிறைவு பெறும்.

பெரியார் மாவட்டத்தில் 21 பள்ளிகள் ஒரு கட்டிடம் கூட இல் லாமல் உள்ளன. இப்பள்ளிகள் அனைத்திற்கும் நடப்பாண்டில் ரூ.27.815 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதனால் இம்மாவட் டத்தில் முதன்மைக் கட்டிட வசதி இல்லாத் பள்ளி ஏதுமில்லை என்ற நிலை ஏற்படவுள்ளது.

பவானி ஒன்றியத்திலுள்ள 152 பள்ளிக் கட்டிடங்களில், முதல் கட்டமாக 47 பள்ளிக் கட்டிடங் களைப் பழுது பார்க்க ரூ.3.10 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, அவற் றில் 42 பள்ளிக் கட்டிடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 பள்ளிக் கட்டிடங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜம்பை என்னும் கிராமத்திலுள்ள 4 பள்ளிக் கட்டிடங்களில் 3 கட்டிடங்கள் ரூ.29,500 மதிப்பீட்டில் பழுது பார்க்க எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 2 கட்டிடங்கள் ரூ.15,000 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 1 பள்ளிக் கட்டிடத்தில் பழுது பார்க்கும் வேலை ரூ.14,500 செல வில் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது.

இம்மாவட்டத்தில் பேருந்து கள் செல்லும் சாலைகள் அனைத் தும் தார் சாலைகளாகவும், கப்பி சாலைகளாகவும் போடப்பட்டு வரு கின்றன. இவற்றில் முதல் கட்டமாக 155.8 கி.மீ. நீளமுள்ள 119 சாலைகள் ரூ.99.89 இலட்சம் செலவில் கப்பி சாலைகளாகவும் 144.3 கி.மீ. நீளமுள்ள 122 சாலைகள் ரூ.184.215 இலட்சம் செலவில் தார் சாலைகளாகவும் போடப்பட்டு வருகின்றன. மீதமுள்ள சாலைகள் வரும் ஆண்டில் முடிக்கப் படும்.

ஜீவன்தாரா கிணறு குறைந்தது ஒரு எக்டேர் நிலம் உள்ள ஆதி திராவிடர் மற்றும் ஆதிதிராவிடப் பழங்குடியினர்க்கு வெட்டிக் கொடுக் கப்படுகிறது. இக்கிணறு வெட்ட ரூ.28,000-க்கு மிகைப்படாமல் அரசு மானியம் வழங்குகிறது. மேலும், இக்கிணற்றில் ஆயில் என்ஜின் அல்லது மின் மோட்டார் அமைத் துக் கொள்ளவும் வங்கிக் கடனுடன் அரசு மானியமும் வழங்கப்படுகிறது.

1988-89-ஆம் ஆண்டில் 170 கிணறுகளும், 1989-90-ஆம் ஆண் டில் 100 கிணறுகளும் பெரியார் மாவட்டத்தில் வெட்டப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினரின் விவசாயத்திற்கு இக் கிணற்று நீர் பெரிதும் பயன்படு கிறது.

### சாண எரிவாயுத் திட்டம்

பெரியார் மாவட்டத்தில் விவ சாயிகள் பெரும்பாலோர் கால் நடைகள் வைத்துள்ளனர். இக்கால் நடைகளின் மூலம் கிடைக்கக் கூடிய சாணத்தைக் கொண்டு எரிவாயுக் கலன்கள் உதவியால் எரிவாயு உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயத் தில் ஆயில் என்ஜின்களுக்குத் தேவையான எரிசக்தியாகப் பயன் படுத்தப்படுகிறது. இதனால், 50 விழுக்காடு டீசல் எரிபொருள் மீத மாகிறது. இதுதவிர, வீட்டில் விளக்கு எரிய வைக்கவும் சமையல் அடுப்பு, தண்ணீர் சூடாக்கும் கருவி ஆகிய வற்றிற்கும் இச்சாண எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. மேலும், இதில் பயன்படுத்தப்பட்ட சாணம் நல்ல உரத்தன்மை உள்ளதாகவும் களைகள் வளர்வதைத் தடுக்கும் திறன் கொண்டதாகவும் காணப்படு கிறது. பவானி ஊராட்சி ஒன்றியத் தில் 1981-82 ஆண்டு முதல் நாளது வரை 1,240 சாண எரி வாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள் ளன. ஜம்பை பேரூராட்சிப் பகுதி யில் மட்டும் 98 கலன்கள் இருக் கின்றன.

ஜம்பை பேரூராட்சிப் பகுதியிலுள்ள சாண எரிவாயுக் கலன்.







தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற விழாவில, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், நாடகத் தலைமை ஆசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் இசைப்பாட்டுப் புலவர் பாபநாசம் சிவன் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் கவிஞர் கு.மா.பாலசுப்பிரமணியம், துணைத் தலைவர் திரு. கே.ஏ.தங்கவேலு ஆகியோர் உடன் உள்ளனர் (3.10.90).

### சமூகக்காடு வளர்ப்புத் திட்டம்

சமூகக்காடு வளர்ப்புத் திட்டத் தின்கீழ் இம்மாவட்டத்தில், நாற்றங் கால் வளர்ப்பு, வட்டார அளவில் மரம் நடுதல், சாலையோரம் மற்றும் கால்வாய் அருகில் மரம் நடுதல், ஆதிதிராவிடர் குடியிருப்பில் மரம் நடுதல் போன்ற பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நடப்படும் செடிகளைப் பாதுகாக்கக் கூடிய நிலையில் உள்ள நிறுவனங் களிலும் சமூகக்காடுகள் வளர்க்கப் படுகின்றன.

### வறட்சி நிவாரணத் திட்டம்

பெரியார் மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 248 ஆழ் குழாய்க் கிணறுகள் ரூ.62.00 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப் பட்டு, அவற்றில் 166 ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ.41.50 இலட்சட செலவில் அமைக்கப்பட்டுள்ளன மீதமுள்ள 82 ஆழ்குழாய்க் கிணறுகள் இன்னும் சில நாட்களில் முடிக்கட பட உள்ளன.

மேலும், ஏற்கனவே உள்ள குடி நீர்த் திட்டங்களைப் பழுதுபார்க்குப நோக்கத்தில் காங்கேயம் மற்றும் அர தியூர் பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பழுது பார்க்க ரூ.23.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படும் நிலையில் உள்ளன.

—தே. மணி.



வெள்ளோடு பகுதியில் மகளிர் சாம்பார் பொடி தயாரித்தல்









# நூல் நயம்

## கலைஞரின் கனிவுரைகள்

**ஆசிரியர்:பி.எல்.ராஜேந்திரன்**
**வெளியீடு:**
கற்பகம் புத்தகாலயம்,
59, ஆடம் தெரு, சென்னை-600 004.
விலை:ரூ.9 பக்கம்:94

**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ஆற்றிய சொற்பொழிவுகளின் கருத்து மணிகளே இந்நூல்.

இளைஞர்களுக்கு, பெண்களுக்கு, அரசியல்வாதிகளுக்கு, மணமக்களுக்கு, மருத்துவர்களுக்கு, எழுத்தாளர்களுக்கு ஆகிய தலைப்புகள் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துரைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

—பி.வி.ஜி.

## சிரிப்பும் சிந்தனையும்

**ஆசிரியர்: தங்கமணி**
**வெளியீடு:**
சந்துரு பதிப்பகம்
4, டாக்டர் நியமதுல்லா சாகிப்பு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
விலை:ரூ.8 பக்கம்:84

**கு**ழந்தைகளுக்காக எழுதப்பட்ட நூல்களில் இது சற்று வித்தியாசமான கருத்துக்களை, புதுமையான நடையில் எழுதப்பட்ட நூல்.

நகைச்சுவையுடன் குழந்தைகள் ரசிக்கும் படியாக உள்ளது.

-என். குமாரசாமி

## உயிர் காக்கும் வைட்டமின்கள்

**ஆசிரியர்: வி.என்.சாமி**
**வெளியீடு:**
தமிழ்க்கடல் பதிப்பகம்,
ஜ-19, டர்ன்புல்ஸ் சாலை,
முதல் குறுக்குத் தெரு,
நந்தனம், சென்னை-600 035.
விலை:ரூ.25 பக்கம்:215

**ஆ**ரோக்கியமான வாழ்வுக்கு வெறும் உணவு மட்டுமே போதுமானது அல்ல; திட்டமிட்ட உணவு மூலமே நாம் நல வாழ்வு பெற முடியும் என்பதை மருத்துவர்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

பற்றாக்குறை நோய்கள், தொற்று நோய்கள் ஆகியவை வைட்டமின்கள் குறைவினாலேயே ஏற்படுகின்றன. எனவே, இந்த வைட்டமின்கள் பற்றியும், அவற்றின் குறைவினால் ஏற்படும் நோய்கள் பற்றியும், அவற்றைப் போக்கும் முறைகள் பற்றியும் இந்நூல் விளக்கமாகக் கூறுகிறது.

எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய வகையிலே, எளிய நடையில், எழுதப்பட்டுள்ளது. தக்க படங்களும் உள்ளன.

## ஊராட்சிகள்-பேரூராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் சட்டமும் நடைமுறையும்

**ஆசிரியர்: சு. புகழேந்தி**
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.
விலை:ரூ.150 பக்கம்:1514

ஒரு நாட்டின் வளர்ச்சியை அளவிடுவதற்குக் கிராமங்களின் வளர்ச்சியே அடித்தளமாக அமைகிறது. இந்த வளர்ச்சிப் பணிகளுக்கு, ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை உறுதுணையாக இருக்கின்றன. இவற்றின் மக்கள் பிரதிநிதிகளாகப் பொறுப்பேற்கும் பெரியோர்களுக்கும், இளைய சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில், இந்நூல் விரிவாக-விளக்கமாக- தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

1958-ஆம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பல பிரிவுகள் திருத்தப்பட்டு, புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டன. இவற்றில் முக்கியமானவை 1.ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவைகளின் தலைவர்களுக்கான நேரடித் தேர்தல்கள் 2.பதினெட்டு வயதை அடைந்தவர்களுக்கு வாக்குரிமையை அளித்தல் 3.தேர்தல் குற்றங்களுக்கான தண்டனைகளை நிர்ணயம் செய்தல் 4.தல வரியின் மேல் வரியை இரண்டரை ரூபாய் வரை விதித்தல் ஆகியவற்றை முக்கியமானதாகக் கொள்ளலாம். இத்தகைய திருத்தங்களும், புதிய விதிமுறைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

மேற்குறிப்பிட்ட மன்றங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றில் பொறுப்பேற்பவர்கள் மட்டும் அல்ல, பொது மக்களும் கூட தெரிந்து கொள்ள வேண்டிய சட்ட திட்டங்களும், நடைமுறைகளும் இந்நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## வாசன் உயர்தர-தமிழ்க் கையகராதி

**தொகுப்பாசிரியர்கள்:**
**பேராசிரியர் வி. கணபதி**
**புலவர் இளஞ்செழியன்**
**தமிழாசிரியை க. சந்திரிகா**
**பதிப்பகச் செம்மல் க. கணபதி**
**வெளியீடு:**
சாந்தா பப்ளிஷர்ஸ்
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு
சென்னை-600 014.
விலை:ரூ.15 பக்கம்:284

**மா**ணவ மணிகள் எளிதில் பொருள் விளங்கிக் கொள்ளும் வகையிலே இந்தக் கையகராதி தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆவுரிஞ்சி என்பதற்கு மந்தைக் கல், ஆதீண்டுகுற்றி என்பது பொருள். இது யாருக்கு விளங்கும்? ஆகவே யாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், 'பசுக்களின் தினவு தீர்க்க உராய்வதற்காக அமைந்த கல்தூண்' என்று பொருள் தரப்பட்டிருக்கிறது.

கைக்கு அடக்கமான இந்த அகராதியின் இறுதியில் தொகையகராதியும் இடம் பெற்றுள்ளது. அத்துடன் தேர்ந்தெடுத்த சில பழமொழிகளும் கொடுக்கப்பட்டுள்ளன

தரமான பதிப்பு; மாணவர்க்குத் தகுந்த அகராதி.

— பி.வி. கிரி

## அறிவியல் வேளாண்மைத் தொழில் நுட்பங்கள்

**ஆசிரியர்: தி. புருசோத்தமன்**
**வெளியிட்டோர்:**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
41-பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல்
எஸ்டேட், சென்னை-600 098.
பக்கம்: 170 விலை ரூ.20/-

**வி**ளைச்சலைப் பெருக்கிடவும், உழவர்களின் வருவாயை உயர்த்தி அவர்கள் வளவாழ்வு காணவும் - வேளாண்மையில் அறிவியல் தொழில் நுட்பங்கள் புகுத்தப்படுவது முக்கியம். அத்துறையில் நூலாசிரியரின் நேர்த்தி மிக்க அனுபவத்தைக் காட்டுவதாக இந்த நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

— 'ராஜு'




"குறைந்த வருவாயாக இருந்தாலும் நாள்தோறும் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்தால் செல்வம் வளர்ந்து பெருகும். விண்மீன்கள் ஒன்று கூடிநின்றால் இருள்நீங்கி உலகம் ஒளிபெறும். மழைத்துளிகளும் இடைவிடாது ஒன்று சேர்ந்தால் கடலைப் போல் மிகுந்த நீரைத்தரும். அதுபோல ஒருவனுக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் நாள்தோறும் சோர்வில்லாமல் சிறிதளவு சேர்த்தால் செல்வம் பெருகும்."

★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
★ பொது சேமநலநிதி
★ மாதாந்திர வருமானத் திட்டம்
★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம் • இந்திரா சேமிப்புப் பத்திரம்
★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/ வளரும் மாத சேமிப்புத் திட்டம்

**மாவட்டச் சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் - 90**

ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன் (அரசு ஆணை எண்: 683, நிதித்துறை நாள் 19.6.90)
- 1.6.90 முதல் 31.12.90 வரை முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள்.
- ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்
- சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்குச் சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

**சம்பளப்பட்டியல் திட்டத்தில் ரூ. 100/- சேமிப்பீர். 5 மாதம் சேமித்தபின் ஒரு பரிசுக்கூப்பன் பெற்றிடலாம். ரூ. 200/- சேமிப்பு. இரண்டு பரிசுக்கூப்பன்கள்! - வருமான வரிவிலக்குடன்!**

- மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை
- ரூ. 1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத் தொகை

DIPR/MS/90/ARIES

| | | |
|---|---|---|
| சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும். | பரிசுக்கூப்பன்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும். | இயக்குநர் **சிறுசேமிப்புத்துறை,** 143, அண்ணா சாலை, சென்னை-600 002. தொலைபேசி: 840223/846209 |




# பட்டு விற்பனையில் பெரும் சாதனை!


மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
**திரு. எஸ். தங்கவேலு**


**கோ**-ஆப்டெக்ஸ் தமிழ்நாட்டிலுள்ள 1,600 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் பருத்தி, பாலியஸ்டர், பட்டு மற்றும் கலவை இழைகளில் தயாரிக்கப்படும் கைத்தறித் துணிகளை இந்தியா முழுவதும் 471 விற்பனை நிலையங்கள் மூலம் பெரும் அளவில் விற்பனை செய்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் 1989-90-ஆம் ஆண்டு ரூ.171.03 கோடிக்கு விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. இதில் ரூ.54.86 கோடி தீபாவளி '89-ன் போது விற்பனையாகி உள்ளது. கோ-ஆப்டெக்ஸ் 1990-91-ஆம் ஆண்டிற்கு ரூ.135 கோடி அளவிற்கு விற்பனைக் குறியீடு நிர்ணயித்துள்ளது. இதில் ரூ.80 கோடி அளவிற்கு இவ்வாண்டு தீபாவளிக்கு விற்பனைக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## சிறப்புத் தள்ளுபடி

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 17.10.1990 வரை அனைத்து கைத்தறி இரகங்களுக்கும், அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது. இந்த 20 சதவீத சிறப்புத் தள்ளுபடியோடு, சில குறிப்பிட்ட இரகங்களுக்கு



மேலும் கூடுதலாக 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது.

அரசு ஊழியர்களுக்கும், அரசு பொதுத் துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கும், தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் மற்றும் இதர நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ் பண்டிகைக் காலங்களில் கைத்தறித் துணிகளைக் கடனில் விற்பனை செய்து வருகிறது.

**பிரத்தியேகப் பட்டு விற்பனை நிலையங்கள்**

கோ-ஆப்டெக்ஸ், சென்னை, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, பெங்களூர், ஐதராபாத் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் பிரத்தியேகப் பட்டு விற்பனை நிலையங்களைத் திறந்து, வாடிக்கையாளர்களுக்கு வகை வகையான பட்டுத் துணிகளை வழங்கி விற்பனைத் துறையில் சாதனை புரிந்துள்ளது.

திருநெல்வேலியில் மிகப்பெரும் அளவில் ஒரு பகுதி பட்டு விற்பனை நிலையம் திறக்கப்பட்டு, சிறப்பாக விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும் நடப்பு ஆண்டில் தஞ்சாவூர், நாகர் கோவில், விருதுநகர், சிவகாசி ஆகிய இடங்களில் பிரத்தியேகப் பட்டு விற்பனை நிலையம் திறக்கப் படவுள்ளது.

**தீபாவளிக்கு வரும் புதிய இரகங்கள்**

100 சதம் பாலியஸ்டர் இழைகளால் நெய்யப்பட்ட பாலியஸ்டர் சேலைகள் இந்தத் தீபாவளிக்கு மாதிரி விற்பனைக்கு வந்துள்ளன. இதனுடைய விலை ரூ.300 முதல் ரூ.380 வரை உள்ளது. இந்த வகையான சேலைகளை ஆலைகள் கூட தயாரித்தில்லை என்பதே, இந்தச் சேலைகளுக்கு உரிய பெருமையாகும்.

100 வகையான வடிவமைப்புகளில் இந்தத் தீபாவளிக்குப் பாலியஸ்டர் சேலைகள் விற்பனைக்கு வந்துள்ளன.

அத்துடன் 50 வகையான வடிவமைப்பில் பாலியஸ்டர் சட்டைத் துணிகள் மற்றும் பாலியஸ்டர் சூட்டிங் துணிகளும் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மதிப்பிற்குரிய திருமதி ருக்மணி தேவி அருண்டேல் அவர்களால் பாதுகாக்கப்பட்ட கலாஷேத்ரா சேலைகள் புதிய வடிவத்தோடு, உருவாக்கப்பெற்று, டெல்லியில் ஒரு சிறப்புக் கண்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் கோடைக்காலத்தை முன்னிட்டு பருத்திப் புடவைகளின் கண்காட்சி ஒன்றும், வரும் ஆண்டு மார்ச்சுத் திங்களில் புதுதில்லியில் நடை பெறவிருக்கிறது. இக்கண்காட்சியில் 50 விதமான புதுவித இரகங்கள் வடிவங்களில் உருவான சேலைகள் இடம் பெறுகின்றன.

**பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்குதல்**

எட்டாம் வகுப்புவரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசு 'கோ-ஆப்டெக்ஸ்க்கு' ஓர் உத்தரவு அளித்துள்ளது. பாவாடைக்கு நீலநிற 'கேஸ்மேண்ட்' துணி, கால் சட்டைக்கு காக்கி டிரில், வண்ணத் தாவணி துணிகள் மற்றும் சட்டைக்கும், ரவிக்கைக்கும் வெள்ளைத் துணி ஆகியவை இத்திட்டத்தில் வழங்கப்படும் கைத்தறித் துணி வகைகளாகும்.

**(சென்னையில் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் 26.9.90 அன்று நடைபெற்ற பத்திரிகை நிருபர் கூட்டத்தில் அளிக்கப்பட்ட செய்திகளிலிருந்து)**

உள்ளம் கவர் நூல்கள்

இயற்கை நுட்பங்களைக் கண்டறிந்து - மனித சமுதாயத்துக்கு உள்ள இன்னலைத் துடைத்து இதம் தந்து, உலகை, புதியதாய், வசதியதாய் ஆக்கித் தரும் விஞ்ஞான வித்தகர்களின் வாழ்க்கை வரலாறுகளும், ஆராய்ச்சிகளும் இன்றைய நிலையில் சுவையும் பயனும் தந்து மக்கள் உள்ளத்தைக் கவரவல்ல அருமையான நூல்களாக அமைகின்றன.



**வாழும் நூல்கள்**

உலகம் அந்தந்தக் காலத்திற்கேற்ற நூல்களைத்தான் ஏற்றுக் கொள்கிறது. காலத்திற்கேற்ற முறையில் நூல்கள் மாறினாலும், இறந்த கால ஏடுகள் அனைத்தும் இறந்து விடுவதில்லை.

**—பேரறிஞர் அண்ணா**



# தமிழகச் சுற்றுலாத் தலங்கள்

**— சுற்றுலாப் பயணிகளை மட்டிலா மகிழ்வடையச் செய்திடும் இடங்கள் பல, தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள் தோறும் ஏராளமாக மலிந்து கிடக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இந்தக் கட்டுரையிலே அழகுபட அணிவகுத்துள்ளன!**

சுற்றுலாப் பயணிகளின் மனதைச் சுண்டியிழுக்கத் தக்க கவர்ச்சிமிக்க சுற்றுலாத் தலங்கள் பல நம் தமிழகத்திலே உண்டு. இதனாலேயே இந்தியச் சுற்றுலா மண்டலங்களில் தமிழ்நாடு முக்கிய அங்கம் வகிக்கிறது.

எந்த ஒரு நாட்டிற்கு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தருகிறார்களோ, அந்த ஒரு நாடு அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும்; பொருளாதாரத் தன்னிறைவை இந்த வகையிலே எட்ட முடியும். அப்படியொரு பெருமையை மிக விரைவிலேயே அடையவிருக்கிறது நம் நாடுஎன்றால் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

அயல்நாட்டுப் பயணிகள் கண்டு அகமகிழத் தக்க-கோயில்கள், கட்டடக் கலைகள், சிறப்புச் சிறப்புகள், நினைவுச் சின்னங்கள், மலை நகரங்கள், வனவிலங்குச் சரணாலயங்கள், கவின் மிகு கடற்கரைப் பகுதிகள் நம் தமிழகத்தில் இருப்பதுபோல் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

தனிப்பெருமை உண்டாக்கும் வகையில், தமிழ் நாட்டில், அங்கிங்கெனாதபடி எங்கும் பரவிக் கிடக்கும் இயற்கைத் தாயின் எழிலை, ஆற்றலாளர்களால் படைக்கப்பட்ட அழகின் சிரிப்பை- காலத்தால் அழியாத கண்கவர் இடங்களின் வனப்பை மாவட்ட வாரியாகத்தான் கொஞ்சம் நாம் பார்ப்போமே!

தமிழகத்தின் தலைநகரமாம் சென்னை- உலகி லேயே மிக நீளமானதெனும் சிறப்புமிக்க அழகிய கடற்கரை நகரமாக அமையப் பெற்றதாகும். கந்த கோட்டம், கபாலீச்சுரம், பார்த்தசாரதி திருக் கோயில் போன்ற ஆலயங்கள் மட்டுமல்ல; வள்ளுவர் கோட்டம், வண்டலூர் உயிரியல் பூங்கா, பெருந் தலைவர் காமராசர், மூதறிஞர் ராஜாஜி, அண்ணல் காந்தியடிகள், அறிஞர் அண்ணா போன்றோரின் நினைவிடங்கள், பிர்லா கோளரங்கம், கன்னிமரா நூலகம், மியூசியம், அண்ணா அருங்காட்சியகம் எனக் காணத்தக்க இடங்கள் கணக்கிலடங்காது சென்னையிலே!

அடுத்து செங்கை-அண்ணா மாவட்டத்திற்குச் செல்வோமானால் - திருக்கழுக்குன்றத்தைத் தாண்டி தென்னகச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மாமல்லபுரம் மறக்க முடியாத ஒன்று



'மனோரா' உப்பரிகை



வீரபாண்டியக் கட்டபொம்மன் கோட்டை

பல்லவ மன்னன் நரசிம்மவர்மனால் (கி.பி. 600-630) உருவாக்கப்பட்ட சிற்பச் சிறப்பை-குறிப்பாக, உலகில் வேறெங்கும் இல்லாதபடி 80 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட ஒரே பாறையில் அமைக்கப்பட்ட செதுக்கோவியத்தை, ஒப்பற்ற குகைக்கோயில்கள் ஒன்பதை, கண்வழி புகுந்து கருத்தினில் கலக்கும் கடற்கரைக் கோயிலை அங்கே நாம் கண்டு ஆனந்திக்கலாம். கோவளம் கடற்கரையும் குறிப்பிடத்தக்கது. காஞ்சிபுரத்திற்குச் சென்றோமானால், காஞ்சி காமாட்சியம்மன் கோயில் மட்டுமல்ல; நமது தமிழகத்தில்- இந்த இருபதாம் நூற்றாண்டில் இனிய தமிழ் வளர முழுமுதல் காரணமாக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் நினைவில்லத்தையும் காணவேண்டியது முக்கியம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்றாலே நமக்கு நினைவு வருவது 83 மீட்டர் உயரமுள்ள மலைக்கோட்டை, புதுமெருகேற்றப்பட்டுப் பொலிவுறக் காட்சிதரும் 600 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் திருக்கோயில் ஆகியவைகள் மட்டுமாக இருக்கலாம். ஆனால், கண்டு களித்திடத் தக்க இடங்கள் ஏராளம் உடைய மாவட்டம் இது. தந்தை எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலின் மறுபதிப்பாக, மகன் இராசேந்திரசோழன் உருவாக்கிய கங்கைகொண்ட சோழபுரம் திருக்கோயில் ஆகியவை அவற்றுள் ஒன்று. காவிரித்தாயின் கருணையால் பூவிரித்துள்ள கவின்மிகு சுற்றுலாத் தலமாம் 'முக்கொம்பு' திருச்சி மாவட்டத்திலே குறிப்பிடத்தக்க ஒன்று.

நஞ்சையால் புகழ்பெற்றது தஞ்சை மாவட்டம். தஞ்சாவூர் என்றதுமே ராஜராஜ சோழனால் வான்தொட வகைபட அமைக்கப்பட்ட பெரிய கோயில் என்னும் பிருகதீசுவரர் கோயில், சரபோஜி மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்ட சரசுவதி மகால், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் சமாதி உள்ள திருவையாறு- கி.பி. முதலாம் நூற்றாண்டில், கரிகாற் சோழனால் கட்டப்பட்ட கல்லணை, திருவாரூர் தேர், நாகூர் தர்கா, அன்னை வேளாங்கண்ணி ஆலயம், முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமி மலை, சீர்காழி, குடந்தைக் கோயில்கள் யாவுமே நம் நெஞ்சில் நிழலாடுவது இயற்கை. புடைப்புச் சிற்பங்களோடும், எழுநிலை மாடங்களோடும் எழிலுறக் காட்சிதரும் பூம்புகார் கலைக்கூடம், அண்ணல் காந்தியடிகளாலேயே போற்றப்பட்ட தியாகப் பெண்மணி வள்ளியம்மை பிறந்த தில்லையாடியில் தமிழக அரசு உருவாக்கிய நினைவுச் சின்னம், பரங்கியர் கோட்டை விளங்கும் தரங்கம்பாடி ஆகியவைகளும் சுற்றுலாப் பயணிகளைச் சுகம்பெறச் செய்திடும். பட்டுக்கோட்டையை அடுத்துப் பத்தாவது கல்லில், 1814-இல், சரபோஜி மன்னனால் கட்டப்பட்ட ஒப்பரிய உப்பரிகையாம் 'மனோரா' முக்கியமாகக் காணவேண்டிய ஒன்றாகும். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 'புதையல்' என்கிற திரைக் கதையைப் படைப்பதற்கு மூலக் கருவான இடம் இதுதான்!

அடுத்தது புதுக்கோட்டை. அந்தக் காலத்து அரண்மனையில் இந்தக் காலத்து அலுவலகங்கள்; உயிர் பெற்றவை போல உருவாக்கப்பட்டுள்ள ஆவிடையார்கோயில் சிற்பங்கள், நார்த்தாமலை ஆகியவை மட்டுமல்ல; சுற்றுலாப் பயணிகள், குடுமியான் மலைக்கருகே அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட வியத்தகு விவசாயப் பண்ணையாம் 'அண்ணா பண்ணை'யையும் காணலாம்; மகிழ்ச்சி பூணலாம்.

மதுரை என்றாலே நம் நினைவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் கோபுரம் உயர்ந்து நிற்கக் கூடும். முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டு - திருப்பரங்குன்றம், பழமுதிர் சோலை ஆகியவை பெரியாறு அணை, வனவிலங்குச் சரணாலயமாம் தேக்கடி, மாரியம்மன் கோயில்- தெப்பக் குளம், சுருளி அருவி இந்த மாவட்டத்திலே எழிலுற விளங்கும் வைகை அணை, மன்னன் திருமலை நாயக்கர் மகால்- அங்கே நடைபெறும் ஒலி-ஒளிக்காட்சி ஆகியவை மதுரை மாவட்டத்திற்கு வரும் பயணிகளை ஆனந்திக்கச் செய்பவைகளாகும்.



காளையார் கோயில்



ஏர்க்காடு ஏரியில் படகுச் சவாரி

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்குச் செல்லுகின்ற சுற்றுலாப் பயணிகள் அழகன் முருகனை அவன் படை வீடுகளில் ஒன்றான பழனியிலே தரிசிக்கலாம். பச்சைமா மலைமேனி, பில்லர் ராக், பிரயண்ட் பூங்கா, பெருமாள் சிகரம், குறிஞ்சியாண்டவர் கோயில், துள்ளி விழும் வெள்ளியருவி, படகுச் சவாரிக்கென்றே படர்ந்திருக்கும் ஏரி, குளிர்- அதே நேரத்தில் பன்னிரண்டு மணிநேரச் சூரியஒளி ஆகியவற்றையெல்லாம் உணர்ந்தும் கண்டும் உள்ளம் மகிழத் தக்க கொடைக்கானல் உள்ள மாவட்டம் இது!

அடுத்திருப்பது இராமநாதபுரம் மாவட்டம்; அங்கே உள்ள இராமநாதசுவாமி திருக்கோயிலிலே தான் 1220 மீட்டர்- அதாவது 4,000 அடி நீளமுள்ள இந்தியாவிலேயே மிகப்பெரிய பிரகாரம் வகைபட அமைக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் தீவுக்கு நீண்டகாலமாக ரயில்மார்க்கமே இருந்து வந்தது; 1973-இல், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பிரம்மாண்டமான விதத்தில் உருவாக்கப்பட்ட தரைவழிப்பாலம் இப்போது சுற்றுலாப் பயணிகளை அங்கே சுகப் பயணம் அழைத்துச் செல்ல உதவுகிறது. அந்தப்பகுதியில் உள்ள கடலில் பவழப் பாறைகள் உண்டு; மகிழலாம் கண்டு.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திற்குப் பயணம் செல்வோர், கட்டாயம் காளையார் கோயிலுக்குச் சென்று வரவேண்டும். 'சரித்திரப் பிரசித்தி பெற்ற மருதிருவருக்குத் திருவுருவச் சிலை வைக்கப்படும்' என்று அண்மையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தாரே- அந்தத் திருப்பத்தூரையும் அவசியம் கண்டு வரவேண்டும்.

காமராசர் மாவட்டத்திற்குச் செல்லுவோர், இந்திய வரலாற்றில் சிறந்த இடம் பிடித்த பெருந்தலைவர் காமராசர் பிறந்த இல்லத்தை மறவாமல் போய்ப் பார்த்து வரவேண்டும்.

சிதம்பரனார் மாவட்டத்திற்குப் போனால், தேசிய கவி பாரதி பாடிய- 'முத்துக் குளிப்பதொரு தென்கடலை'க் காணலாம். வெள்ளை அரசு வெடவெடக்கத் தூத்துக்குடியில் கப்பல் விட்ட தமிழன் வ.உ.சி. இல்லத்தைப் பார்க்கலாம். படைவீடுகண்ட முருகனைத் திருச்செந்தூரில் பாடிப் பரவலாம். பாஞ்சாலங் குறிச்சியில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுப்பியுள்ள கட்டபொம்மன் கோட்டையைக் கண்டு மகிழலாம்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் என்றதுமே 'பச்சை மலை பவழமலை எங்கள் மலையே' என்று குறவர்களைப் பாடவைத்த குற்றால நீர்வீழ்ச்சி நம் எண்ணத்தைக் குளிர்விக்கும். இந்திய விடுதலைக்காக எழுச்சிக் குரல் எழுப்பிய புலித்தேவன், வீரபாண்டியக் கட்டபொம்மன் உலாவிய மண்ணில் உலவிக் களித்திடலாம்.

நம் இந்தியத் திருநாட்டின் நிலப்பகுதி முடியுமிடம் கன்னியாகுமரி. முக்கடலும் சங்கமிக்கும் அங்கே- குமரிமுனைக்குச் சென்றால்- காலைச் சூரியன் எழுவதையும், மாலைச் சூரியன் மறைவதையும் ஒரே இடத்திலிருந்து நாம் கண்டுவக்கலாம். கடலோரக் காந்தி மண்டபம், கடலுக்குள்ளிருந்து தலை நீட்டும் பாறைமீது 1970-இல் கட்டப்பட்ட விவேகானந்தர் நினைவாலயம், விரைவில் தமிழக அரசால் 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட இருக்கும் கடல் பாறை, குமரிக் கோயில், டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட வட்டக் கோட்டை ஆகியவை மட்டுமல்ல கன்னியாகுமரி மாவட்டத்தில்; சுசீந்திரம் கோயில், பத்மநாபபுரம் அரண்மனை, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நமக்குத் தமிழ்த்தாய் வாழ்த்துத்தந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோர் வாழ்ந்த இல்லங்களும் அங்குண்டு.

அடுத்தது, தருமபுரி மாவட்டம். கர்நாடகத்திலிருந்து களிப்போடு ஓடிவரும் காவிரிப் பெண்ணைத் தமிழகம் பாசக் கரம் நீட்டி வரவேற்கும் ஒகேனக்கல் உள்ள மாவட்டம் இது. அயல் நாட்டுப் பயணிகளை அகம் மகிழச் செய்திடும் 'லிட்டில் இங்கிலாண்ட்' எனப்படும் தளி, அரூர்



நாகூர் தர்கா



வேலூர் கோட்டையும் அகழியும்

தீர்த்தமலை, அதியமான் கோட்டை ஆகியவையும் இங்கே பார்த்து மகிழ வேண்டிய இடங்களாகும். "அதியமான்-ஔவைக்குக் கோட்டம் எழுப்பப் படும்'' என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அண்மையில் (25.9.90) இம்மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது அறிவித்ததும் சுற்றுலாப் பயணிகள் நினைவுகூர வேண்டிய ஒன்றாகும்.

தொழிலால் மட்டுமல்ல; ஏர்க்காடு தரும் எழிலாலும் ஏற்றம் பெற்ற மாவட்டம் சேலம். சேர்வராயன் மலைத் தொடரில், கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 5,000 அடி உயரத்திலே அமைந்திருக்கும் அழகுமலை ஏர்க்காடு. இப்போதுதான் சீசன் என்பதில்லை; எப்போதும் போய்வரலாம். ஏனென்றால், என்றுமே அங்குள்ள வெப்பம் குறைந்தது 13 டிகிரி; அதிகப்படி 29 டிகிரி சென்டிகிரேடு. இனிய படகுப் பயணத்திற்கேற்ற ஏரி, அண்ணா பூங்கா, லேடீஸ் சீட், சேர்வராயன் கோயில், கரடிக்குகை, பகோடா பாயின்ட் போன்றவை சுற்றுலாப்பயணிகளைச் சொக்க வைக்கும் இடங்களாகும். இந்த மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையும்- அங்கு நடக்கின்ற ஓரி விழாவும் உவகை தருவன; உள்ளம் கவர்வன.

பெரியார் மாவட்டத்திற்குச் சென்றால், பகுத்தறிவுப் பகலவனாம் தந்தை பெரியார் நினைவில்லத்தை அவசியம் பார்த்தாக வேண்டும்; பவானி கூடுதுறை, தாளவாடி மலைப் பகுதி யாவும்- காண்போர் தம் நெஞ்சில் நிம்மதியைத் தூவும்!

கோவை மாவட்டத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள், ஆனைமலை வனவிலங்குச் சரணாலயத்தைக் காணாமல்- பெரியாறு அருவி, திருமூர்த்தி நீர்வீழ்ச்சி, வேளாண்மைப் பல்கலைக் கழகம், மருதமலை ஆகியவைகளைப் பார்த்துப் பரவசப்படாமல் திரும்பமுடியாது.

அதன்பிறகு, நேரு பெருமகனால் 'மலைகளின் ராணி' என்று கூறப்பட்ட உதகமண்டலமாம் ஊட்டி. கிழக்கு-மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சந்திப்பில் 35 மைல் அகலமும், 6,500 அடி உயரமும் கொண்டதாக அமைந்திருப்பதே ஊட்டி. அங்குள்ள 2,633 மீட்டர் உயரத் தொட்டபெட்டா சிகரம், தாவரவியல் பூங்கா, படகுச் சவாரிக்குப் பாங்கான ஏரி, அதன் கரையில் மாவண்டை ஊர்வதுபோலக் காட்சிதரும் குழந்தைகளின் ரயிலோட்டம், கோத்தகிரி, கூனூர் எல்லாம் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தை ஆனந்தக் குளிரால் ஆட வைப்பவைகளாகும்.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு வந்தால், கனகம்பீரமாக நிற்கும் செஞ்சிக் கோட்டை நம்மைத் திகைக்க வைக்கும். நம் எண்ணத்திரையில் தேசிங்குராஜன் எழுச்சி முழக்கமிடுவான்! 'அம்பலத்தில் ஆடுகின்ற ஆனந்தத் தெய்வமான' தில்லை நடராசர் திருக்கோயில் விளங்கும் சிதம்பரம், புதுவை மாநில எல்லையிலே அமைந்துள்ள ஆரோவில், இயற்கையாகவே அமைந்துள்ள கல்மரப் பூங்காவான திருவக்கரை, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், பிச்சாவரம் சுற்றுலா மையம், வடலூர் ஆகியவைகளும் நம் நினைவில் நிலைத்துவிடும். 'முதலாவது நவீன இந்தியப் பல்கலைக் கழகம்' என்ற சிறப்புக்குரிய அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கல்விச் சுற்றுலா வருவோர் காணவேண்டிய ஒன்றாகும்.

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு வருகிறவர்கள்- இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் விக்கிரமராஜ சிங்கனின் நினைவாக வேலூரில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அண்மையில் அழகுற அமைக்கப்பட்ட முத்து மண்டபத்தைக் கண்டானந்திக்கலாம். வேலூர்ப் புரட்சி மூளக் காரணமாயிருந்த கோட்டை கொத்தளங்களும் அங்குண்டு!

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்குச் சென்றால்- தென்னிந்தியாவின் மிகப் பெரிய கோயில்களில் ஒன்றாக- 200 அடி உயரத்தில் எழுந்து நிற்கும் அருணாசலேஸ்வரர் கோயிலைப் பார்க்கலாம்; இங்கு ஏற்றப்படும் கார்த்திகைத் தீபம் குறிப்பிடத்தக்கதாகும். இவை மட்டுமா? சாத்தனூர் அணை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, அமிர்திக்காடு ஆகியவைகளும் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

—இப்படித் தமிழகமெங்கும், கண்டு மகிழத்தக்க சுற்றுலாத் தலங்கள் கணக்கற்றவை உண்டு. ஆங்காங்கே, வருவோர் இளைப்பாற வகையான தங்குமிடங்களும் அரசு சுற்றுலாத்துறை மூலமே அமைக்கப்பட்டுள்ளன!

— பி.எல்.ஆர்.



கங்கைகொண்ட சோழபுரம்



# ஒருங்கிணைந்த மானாவாரிப் பயிர் மேம்பாடு

**"வேளாண்மையில் நவீன முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், விவசாயிகள் தொழில்நுட்ப அறிவு பெறுகிறார்கள்; மானாவாரி நிலத்தின் விளைச்சலும் அதிகமாகிறது; வருமானம் பெருகும் வாய்ப்பும் உண்டாகிறது'' என்கிறார், கட்டுரையாசிரியர்.**

**—திருமதி எஸ்.மாலதி இ.ஆ.ப.**
**வேளாண்மை இயக்குநர்**
**சென்னை-**

தமிழ்நாட்டில் சுமார் 32 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மானாவாரி பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி பயிர் சாகுபடியில் உற்பத்தியைப் பெருக்கவும், அதனைச் சார்ந்துள்ள உழவர்களின் வருவாயைப் பெருக்கவும், அதன் மூலம் அவர்கள் வாழ்வு மேம்பாடு அடையவும், ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மூன்று ஆண்டுகளில் தமிழக அரசு, வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்திட உள்ளது. இத்திட்டம் 1990-91-இல் துவக்கப்பட்டுள்ளது. இதற்கென இந்த ஆண்டில் ரூ.150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மானாவாரி பயிர் செய்யப்படும் 32 இலட்சம் எக்டேர் பரப்பு, நீர்ப்பிடிப்புத் தன்மைக்கேற்றவாறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அப்பிரிவில் 100 எக்டேர் பரப்பளவிற்குச் சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு, மானாவாரி பயிர் சாகுபடிக்கு ஏற்ற தொழில் நுட்பங்களை, அதனைச் சார்ந்த விவசாயிகள் கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழகத்தில் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர்த்து இதர மாவட்டங்களில் 300 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 30,000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 100 எக்டேர் பரப்பு ஒரு நிரூபணமாகச் செயல்பட்டு மற்ற விவசாயிகளும் இதன் மூலம் கிடைக்கும் பயனை அறிந்து தாங்களும் அடுத்து வரும் பயிர் பருவத்தில் கடைப்பிடிக்க ஒரு வழி முறையாக அமையும்

நிரூபணமாக அமைக்கப்படும் இந்த 100 எக்டேர் பரப்பில், டிராக்டர் கொண்டு கோடை உழவு, ஊட்டமேற்றிய தொழுவுரம், ஆழச்சால் அகலப்பாத்தி அமைத்தல், இருபோகச் சாகுபடி, தீவனப் பயிர் வளர்த்தல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, மேலுரமாகத் தழைச் சத்து இடுதல், சரிவில் மரம் வளர்த்தல், மழைக்கு முன்னதாக விதைத்தல், மரங்கள் நடுதல் மற்றும் ஊடுபயிர் சாகுபடி செய்தல் போன்ற தொழில் நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படும்.

இத்தகைய தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதற்கு ஏற்ற வகையில், பயிர் செய்வதற்கு முன்னதாக, நிரூபணத்தில் பங்குகொள்ளவிருக்கும் உழவர்களுக்கு, இந்தத் தொழில் நுட்பங்களின் அடிப்படை, அதனை எவ்வாறு செயல்படுத்துவது, மற்றும் அதன் பலன்கள் பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

பயிற்சியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக நபர் ஒன்றுக்கு ரூ.15/- வழங்கப்பட்டது. பயிற்சியின் பலனால், பல தொழில் நுட்பங்களை அறிந்து செயல்படுத்துவதற்குத் தயாராக விவசாயிகள் இருந்தாலும் போதிய நிதி வசதியின்மையால் பல விவசாயிகள் தொழில்நுட்பங்களைக் கையாளாமல் விட்டுவிடுகின்றனர். இதனைப் போக்கவும், மானாவாரி பகுதி விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவும், தொழில்நுட்பங்களைக் கையாள மான்ய வசதிகளுக்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.



நிலத்தினை ஆழமாக உழுவதால் களைகள் நீக்கப்பட்டு மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கப்படுகிறது. மாடுகளைக் கொண்டு உழுவதால் ஆழமாக உழ இயலாது என்பதால் டிராக்டர் மூலம் கோடை உழவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு அதற்காகும் செலவில் 50 சதம் அதிகபட்சம் எக்டேருக்கு ரூ.180/- மான்யம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மானாவாரி நிலங்களுக்கு உரமிடும் பழக்கம் மெதுவாகப் பரவி வருகிறது. அடியுரமாகத் தொழுவுரம் இடுவதற்குப் போதுமான தொழு உரமோ, கம்போஸ்டோ கிடைப்பது இல்லை. எனவே குறைந்த அளவு தொழு உரத்தைக் கொண்டு ஊட்டமேற்றிய தொழுவுரம் தயார் செய்து அளிக்கும்போது இயற்கை உரம் மற்றும் செயற்கை உரமும் முழுமையாக அளிக்கும் பயன் கிடைக்கிறது. ஊட்டமேற்றிய தொழுவுரம் தயாரிக்க, செயற்கை உரங்களுக்கு எக்டேருக்கு ரூ.95/- வரை மான்யம் அளிக்கப்படுகிறது.

இருபருவங்களிலும் பெய்யும் மழை நீரைக் கொண்டு ஒரு போகத்திற்குப் பதில் இருபோகம் பயிரிட வாய்ப்பு உள்ளது. இதனால் கூடுதல் வருமானம் பெற இயலும். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு இரண்டாவது போகமாகப் பயிரிடும் பரப்பிற்கு விதைகள் மற்றும் உயிர் உரங்களுக்கென மான்யமாக எக்டேருக்கு ரூ.50/- வரை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.



## அம்பேத்கர் நூற்றாண்டு

**இந்தியாவில் பல்லாயிரக் கணக்கான சாதிகளும் மூடத்தனங்களும் இருந்து கொண்டிருக்கும் காலம்வரை, நாம் மற்ற நாடுகளின் முன்பாகத் தலைகுனிந்து வாழும் படியான நிலைதான் இருக்கும்.**

கிராமங்களில் பசுந்தீவனப் பயிர்ப் பற்றாக்குறையை ஓரளவிற்கேனும் போக்குவதற்கு, இந்த 100 எக்டேர் பகுதியில் ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய நிலத்தில் ஒரு சிறு பகுதியில் தீவனப் பயிர் பயிரிட ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஊடு பயிராகவோ, வரப்பு ஓரங்களிலோ பயிரிடத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு பசுந்தீவனப் பயிர் பயிரிடும் விவசாயிகளுக்கு, எக்டேருக்கு இடுபொருட்களாக ரூ.25/- வரை மான்யம் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிப்பதன் மூலம், மருந்தடிப்பதைக் குறைத்தும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்குக் கேடு வராமல் பார்த்தும், நன்மை செய்யும் பூச்சிகளை அழிக்காமலும் பாதுகாக்கலாம். இம்முறைகளை விவசாயிகள் தீவிரமாகக் கடைப்பிடிக்க அதற்குத் தேவையான விளக்குப்பொறி மற்றும் இனக் கவர்ச்சிப் பொறி ஆகிய உபகரணங்களுக்கு 50 சதம் மான்யம் அதிகபட்சமாக எக்டேருக்கு ரூ.50/- வரையில் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற திட்டத்தினால், விவசாயிகள் தொழில் நுட்ப அறிவு பெறுவதுடன், அவற்றைக் கடைப்பிடிப்பதால் மானாவாரி நிலத்தில் உற்பத்தியும் உயரும், வருமானம் பெருகும். மேலும், தொடர்ந்து வரும் ஆண்டுகளில், இதனால் பயன்பெறும் விவசாயிகளைத் தெரிந்து மற்ற சகோதர விவசாயிகளும் பயன்பெறுவார்கள்.

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள திடீர் நகர், அஞ்சுகம் நகர்ப் பகுதிகளில் நேரிட்ட தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அரசின் நிவாரண உதவிகளை வழங்கினார். சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷீலாராணி சுங்கத் இ.ஆ.ப. உடன் உள்ளார் (19.9.90).




# TNPSC

விளம்பர எண் : 36/90

தொகுதி பத்தில் அடங்கிய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் ஐந்து பண்டகக் காப்பாளர் மற்றும் தொழில் வணிக இயல் துறையில் இரண்டு பண்டகக் காப்பாளர் பதவிகளுக்குப் போட்டித் தேர்வு மூலம் நேரடி நியமனத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விரண்டு பதவிகட்கும் ஒரு விண்ணப்பமே போதுமானது. கோரப்படும் பதவிகளை முன்னுரிமை வரிசை முறையில் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

சம்பள ஏற்ற முறை: மாதம் ஒன்றுக்கு ரூ. 1200—30—1560—40—2040.

1-7-90 அன்று வயது: தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.
மற்றவர்களுக்கு 30 வயதைப் பூர்த்தி செய்யாதிருத்தல் வேண்டும்.

கல்வித் தகுதி : ஏதாவதொரு பல்கலைக் கழக மானியக் குழுவில் அனுமதிக்கப்பட்ட இண்டர்மீடியட் அல்லது புதுமுக வகுப்பு அல்லது மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

நியமன ஒதுக்கீடு : தகுதியான விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்டவாறு இனச் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

| பதவியின் பெயர் | நியமன எண்ணிக்கைகள் தா.வ. தா.ப. | மி.பி.வ. ம.சீ.ம. | பிற்பட்ட வகுப்பினர் | மற்ற வர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பண்டகக் காப்பாளர் பதவி | 1 | 1 (மகளிர்) | 1 | 2 | 5 |
| தொழில் வணிக இயல் முறையில் பண்டகக் காப்பாளர் பதவி | 1 | ... | ... | 1 | 2 |
| | | | | | 7 |

குறிப்பு: (1) காலியிட மதிப்பீடு தோராயமானவையே, தெரிவு செய்யப்படும்போது மாறுதல் இருக்கலாம்.

(2) இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ரூ. 500 முதல் ரூ. 1000 வரை பிணையத் தொகை (செக்யூரிடி) செலுத்த வேண்டும்.

(3) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்கும் ஆதரவற்ற விதவைகள், குறைந்த அளவு மதிப்பெண்களையே பெற்றிருந்தாலும், தெரிவிக்குத் தகுதியானவராகக் கருதப்பட்டு, அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருக்கும் மற்றவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

விளக்கம் : ஆதரவற்ற விதவை என்பது தான் வாழ்வதற்கு எந்தவொரு ஆதரவோ அல்லது பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு யாதொரு துணையோ இல்லாத நிலை என்ற பொருளாகும்.

3. தேர்வு மையங்கள்

| குறியீட்டெண் | பெயர் |
|---|---|
| 01 | கோயம்புத்தூர் |
| 02 | சென்னை |
| 03 | மதுரை |
| 04 | பாளையங்கோட்டை |
| 05 | சேலம் |
| 06 | திருச்சிராப்பள்ளி. |

4. தேர்வின் விவரங்கள்: இப்போட்டித் தேர்வு அடுத்தடுத்து இரண்டு நிலைகளை யுடையவை. அவை :—

(1) முதனிலைத் தேர்வு மூலம் முதன்மைத் தேர்வுக்குத் தெரிவு செய்தல்.

(2) முதன்மைத் தேர்வு மூலம் பதவிகளுக்கு விண்ணப்பதாரரைத் தெரிவு செய்தல்.

**முதனிலைத் தேர்வு : (மேல்நிலைக் கல்விநிலை)**

முதனிலைத் தேர்வு ஒற்றைத் தாளுடன் கூடிய பொது அறிவுத் தாள் ( General Knowledge). அவற்றில் கொள் குறி ( Objective ) வகைக்கு 50 மதிப்பெண்கள் மற்றும் விவரிப்பு ( Descriptive ) வகைக்கு 50 மதிப்பெண்களுமாக இரண்டு மணி நேரம் கால அளவில் மொத்தம் 100 மதிப்பெண்களுக்கென நடைபெறும். முதன்மைத் தேர்வுக்குப் போட்டியாளர்களைக் குறைப்பதே இத்தேர்வின் நோக்கம். கேள்வித்தாள் இரண்டு பாகங்களைக் கொண்ட ஒரே தாளாக இருக்கும். இரண்டு பாகங்களையும் ஒரு சேர விடையளிக்க வேண்டும். கேள்வித்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டதாக இருக்கும்; தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடையளிக்க வேண்டும். தமிழிலும் ஆங்கிலத்திலுமாகக் கலந்து விடையளிக்கப்பட்ட விடைத்தாள் செல்லாததாக்கப்படும். முதனிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், தெரிவு செய்வதற்கான மதிப்பெண்களுடன் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு பதவிக்கும் பதவியின் எண்ணிக்கையில் பத்து மடங்கு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்களே இத்தேர்வின் மூலம் முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். முதனிலைத் தேர்வுக்கு அனுமதிக்கவே இவ்விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தின் மூலம் மறுபடியும் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இத்தொகுதித் தேர்வுக்கு 1000 விண்ணப்பங்களுக்கு மேலாகவோ அல்லது பதவிகளில் மொத்த எண்ணிக்கையில் பத்து மடங்கிற்கு மேலாகவோ விண்ணப்பங்கள் பெறப்படின் முதனிலைத் தேர்வு நடத்தப்படும்.

**முதன்மைத் தேர்வு:**

முதன்மைத் தேர்வு எழுத்துத் தேர்வை உள்ளடக்கியதாகும். முதன்மைத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்களைக் கொண்டு முடிவான படி நிலை ( Ranking ) நிர்ணயிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் படி நிலையின் அடிப்படையில் அவர்களுடைய விண்ணப்பத்தில் கோரப்பட்ட பதவிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவர்.

முதன்மைத் தேர்வின் திட்டம்.
மேல்நிலை கல்வி நிலை

| பொருள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவு செய்வதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அ) கட்டாய பாடங்கள் | | |
| ஆங்கிலக் கட்டுரை ... | 100 | 180 |
| பொது அறிவு (சிறு குறிப்பு மற்றும் வினா விவரிப்பு வரைதல்) ... | 100 | |
| மொழி பெயர்ப்பு மற்றும் கட்டுரை (தமிழ், தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம் அல்லது இந்தி மொழியில் விடை யளித்தல்). ... | 100 | |
| மூன்று விருப்பப் பாடங்கள் ( Optional subjects ) (100 மதிப்பெண்கள் தனித்தனியாக). ... | 300 | |

குறிப்பு :(1) பொது அறிவு தவிர மற்ற பாடங்களின் தேர்வு நேரம் மூன்று மணியாகும். பொது அறிவுப் பாடத் தேர்வுக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே.

(2) பொது அறிவு மற்றும் விருப்பப்பாடங்களுக்கான வினாத்தாட்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டிருக்கும். அவைகளை ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ ஏதாவதொரு மொழியில் விடையளிக்க வேண்டும்; இரண்டு மொழியிலும் கலந்து எழுதுதல் கூடாது.

List of Optional Subjects (only one subject from each of the division should be taken).

**Division I**

1. Mathematics
2. Physics
3. Political Science
4. Elements of Economics
5. Geography
6. Botany
7. Home Science
8. General Science (S.S.L.C. Standard)

**Division II**

1. Psychology
2. Zoology
3. Elements of Commerce
4. Statistics
5. Chemistry
6. History
7. Social Studies (S.S.L.C. Standard)
8. Fine Arts.

**Division III**

1. Sociology
2. Tamil Language and Literature
3. Philosophy
4. Ethics and Indian Culture
5. Biology
6. Logic Scientific Methods
7. Accountancy
8. Environmental Studies.

5. தேர்வுக் கட்டணம் : ரூ. 30.

மேற்படி தேர்வுக் கட்டணம் ஏதேனும் ஒரு மாநில பாரத வங்கியின் கிளையில் (any branch of State Bank of India)) பெறப்பட்ட கோடிட்ட வரைவு (Demand Draft) மூலமாக செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களுக்கு மாநில பாரத வங்கி ( State Bank of India) ) ஆயிரம் விளக்கு, சென்னை என்கின்ற விலாசத்தில் மாற்றக் கூடியதாகவோ அல்லது இந்திய அஞ்சல் ஆணை மூலமாக, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களுக்கு, சென்னை அண்ணா சாலையில் உள்ள அஞ்சல் நிலையத்தில் மாற்றக் கூடியதாகவோ இருக்குமாறு பெற்று விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். மற்ற வகைகளில் அனுப்பப்படும் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இந்திய அஞ்சல் ஆணை/கோடிட்ட வங்கி வரைவு 1-9-90-க்குப் பிறகு பெற்றிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பிக்கும் முறை:—

முதனிலைத் தேர்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், சென்னை 600 002 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மாதிரிப் படிவத்தில் உள்ளவாறு (30 cm. x 21cm.). அளவுள்ள முழு நீள வெள்ளைத் தாளில் சீராக இடைவெளி விட்டு விண்ணப்பத்தையும், ஆளறிச் சான்றிதழையும் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். வெளியிடங்களில் தனியார் மூலம், விற்கப்படும் விண்ணப்பங்களை உபயோகிக்கத் தடையில்லை. ஆனால் அவ்விண்ணப்பங்களில் தேர்வாணைய அறிக்கையில் கோரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் இருத்தல் வேண்டும்.

"தொகுதி பத்தில் அடங்கிய பண்டகக் காப்பாளர் பதவிக்கான 1990-ஆம் ஆண்டுக்கான முதனிலைத் தேர்வு விண்ணப்பம்" என மேலுறையில் எழுதியனுப்ப வேண்டும்.

7. (அ) விண்ணப்பதாரர், விண்ணப்பத்துடன் கீழே கண்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை அனுப்புதல் வேண்டும் :

1. தேர்வுக் கட்டணத்தை கோடிட்ட பாரத வங்கி வரைவு/இந்திய அஞ்சல் ஆணை மூலம் அப்புதல் வேண்டும்.
(கட்டணச் சலுகைகள் உள்ளவர்கள் தவிர)

2. ஆளறிச் சான்றிதழ் (மாதிரிப் படிவத்தில் உள்ளவாறு)

3. விண்ணப்பதாரர் அண்மையில் எடுக்கப்பட்ட அவருடைய நிழற்படத்தின் ஒரேமாதிரியான 3 நகல்களைக் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு நகலை ஒட்ட வேண்டும். மற்றொன்றை வருகைத் தாளில் ஒட்ட வேண்டும். அடுத்ததை ஒரு உறையில் வைத்து மற்ற ஆவணங்களுடன் விண்ணப்பத்தில் தைத்து அனுப்ப வேண்டும்.

4. போதிய அஞ்சல் வில்லையுடன் கூடிய சுயவிலாசமிட்ட அஞ்சல் அட்டை ஒன்று.

5. வயது மற்றும் கல்வித் தகுதிக்கான சான்றிதழ்களின் நகல்கள்.

(ஆ) அரசுப் பணி மற்றும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட துறைகளில் பணி செய்யும் விண்ணப்பதாரர்கள் நேரடியாகத் தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதே சமயத்தில் விண்ணப்பதாரர்கள் தேர்வில் கலந்து கொள்ளும் விவரத்தை துறைத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருத்தல் வேண்டும்.

(இ) தகுந்த தேர்வுக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் குறைபாடுஉள்ள விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி செய்யப்பட்ட பின் பெறப்படும் கடிதங்களை எக்காரணத்தைக் கொண்டும் மறு பரிசீலனை செய்யப்படமாட்டா.

விண்ணப்பத்துடன் கல்வி, வயது மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைக்கான அனுப்பப்படும் சாதிச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நிழற்படி நகல்களை (Xerox) மட்டும் அனுப்பினால் அவைகளே முதனிலை மற்றும் முதன்மைத் தேர்வுக்கு போதுமானதாகும். மூலச் சான்றிதழ்களை அனுப்ப வேண்டியதில்லை.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தேர்வாணைய அலுவலகத்தில் பெறுவதற்கான கடைசி நாள் :

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கேட்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்கள் மற்றும் இந்திய அஞ்சல் ஆணை/வங்கி வரைவுகளுடன் தேர்வாணைய அலுவலகத்திற்கு 5-11-1990 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடைசித் தேதிக்குப் பிறகு பெறப்படும் விணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

9. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர், தாயகம் திரும்பியோர், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் ராணுவத்தினர் முதலியோருக்கு வயது மற்றும் கல்வித் தகுதி, கட்டணச் சலுகை சம்மந்தமாக அனுமதிக்கப்பட்ட சலுகைகளைக் கூறும் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் மற்றும், தேர்வாணையத்தின் அறிவிக்கை 16-8-89 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் (Bulletin - எஸ். 18) வெளியிடப்பட்டுள்ளது. செய்தி அறிவிப்பு வெளியீடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறையில் அரசு வெளியீட்டு விற்பனை மையங்களின் மூலம் விலைக்குக் கிடைக்கப் பெறும். மேற்படி பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் 1-9-89 நாளிட்ட 'தமிழரசு' ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பதிப்புக்களிலும் வெளியிடப்பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும் பி.வ. / சீர் மரபினர்களுக்கும் பொருந்தும்.

சுருக்கக் குறியீடு.

தா.வ. — தாழ்த்தப்பட்ட வகுப்பினர்
தா.ப. — தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்
மி.பி.வ. — மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
ம.சீ.ம. — மற்றும் சீர் மரபினர்.
பி.வ. — பின் தங்கிய வகுப்பினர்.



**FORMAT**

*Quote Advertisement No.*————

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**APPLICATION FORM FOR PRELIMINARY EXAMINATION**

(Candidate should send only one application for admission to this examination with the prescribed application fee)

*NAME OF POST AND SERVICE : STORE KEEPER GROUP X SERVICE*

1. Examination Centre : with Code Number ............

2. Register Number :......................

*(To be assigned by Office)*

3. Details of Fee Paid : ____________

| *Name of Post Office/ Bank* | *Number and Date of IPO/ Draft* | *Value Rs. P.* |
| --- | --- | --- |
| | | |

*Paste here a signed copy of your recent passport size photograph. (5 cm. x 7 cm.*

4. Do you claim fee exemption ? : Yes No

5. Name of the Applicant : (IN CAPITALS)

..........................................................................................

..........................................................................................

6. Father's Name :

7. Address for communication :

8. Date of Birth : ____________

(Write 1 to 9 as 01 and 09)

8(*a*) Age as on 1-7-90 ______ years

9. Sex : ______

10. Community Code: ____________

(SC/ST-1, BC-2 : MBC/DC-3: Others-4)

10 (*a*) Religion Code : ____________

Hindu-1 : Muslim-2 : Xian-3 : Others-4)

11. Do you possess the Prescribed educational qualification : Yes/No.

| *Examination* | *Subjects of study* | *Year of pass* | *Marks/Grade* | *School/College/ University* |
|---|---|---|---|---|
| | | | | |

12. Do you possess the additional or preferential qualifications prescribed for the posts ? Yes No.

| *Examination Passed* | *Subject of study* | *Year of pass* | *Marks/Grade* | *Institute/College University* |
|---|---|---|---|---|
| | | | | |

13. Whether employed, if so the details :

| *Employer's Address* | *Posts Held* | *Period From* | *To* |
|---|---|---|---|
| | | | |

14. Do you claim any relaxation/concession in age, qualifications prescribed or in payment of fees ? Yes No

Subtantiate your claim :

15. **DECLARATION**

I hereby declare that all the statement made in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In and event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, action can be taken against me by the Commission.

I have read the advertisement, notification and 'Instructions to Candidates' carefully and I hereby undertake to abide by the Instructions therein.

I further declare that I fulfil all the eligibility conditions prescribed for admission to the examination.

*I have informed my Employer in writing that I am applying for this examination.

(*Strike off this if not applicable)

DATE :
STATION :

*Signature of the Candidate.*

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

PRELIMINARY EXAMINATION FOR THE POST OF STORE KEEPER INCLUDED IN GROUP X SERVICES 1990.

**IDENTIFICATION CERTIFICATE**

*Paste here a signed copy of your recent passport size photograph (5 cm. x 7 cm.)*

1. Particulars to be filled in by the applicant :

(i) Name of Applicant :

(ii) Date of Birth :

(iii) Postal Address : (For Communication)

*Signature of Candidate.*

2. Centre of Examination :

3. Register Number :

(To be filled by TNPSC Office)

*Controller of Examination.*

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION,
MADRAS-600 002.

DATE : 1990.

DIPR/2437/90/MS/MCS

# TNPSC

விளம்பர எண். 35/90

தமிழ்நாடு தொழிலாளர் பணியில் தொழிலாளர் அலுவலர் பதவியில் 10 காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 5.11.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000.

| | | | |
|---|---|---|---|
| ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | - | 2 | |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | - | 1 | (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | - | 3 | |
| பகிரங்கப் போட்டி (ப.போ) | - | 4 | (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது. |

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடம் ஆண் விண்ணப்பதாரரைக் கொண்டு நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (i) A degree and

(ii) A degree or Diploma in Social Work or Social Science or Labour Relations or Social Welfare or a Diploma in Labour Laws awarded by the Indian Law Institute, New Delhi or a Diploma in Labour Laws and Administrative Laws or a degree in Law or a Post Graduate diploma in Labour Administration awarded by the Tamil Nadu Institute of Labour Studies or a Post Graduate Diploma in Personnel Management, Industrial Relations and Labour Welfare awarded by the Madras Productivity Council; or a Post Graduate Diploma in Personnel Management and Industrial Relations awarded by the Madurai Institute of Social Work, Madurai or M.A., degree in Work Education awarded by the University of Madras.

**NOTE:** Destitute widows who possess the prescribed qualification and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**EXPLANATION:** 'Destitute Widow' means, a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்" தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.10.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.10.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/2441/எம்எஸ்/90/அக்கார்ட்

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன / பருத்தி / வகைகள்



உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். அதனால்தான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னதத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.




தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23







மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், வேலூரில் தளபதி அழகிரி போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். (19.10.90)

# இந்த இதழில்...


மொழிப் பிரச்சினையில் நேரு உறுதிமொழிக்கு சட்ட அந்தஸ்து தர வேண்டும் —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முதல்வர் உரை ... 6

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் - முதல் பட்டமளிப்பு விழா ... 9

'சிடா' சமூகக்காடு திட்டப் பணிகள் - ஒரு திருப்பு முனை ... 15

நலம் பயக்கும் சமூக நலத் திட்டங்கள் —மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ...

குற்றாலத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ... 22

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல! (கருத்துப் படங்கள்) ... 24

நூல் நயம் ... 26

கைத்தறித் தொழிலில் சணல் உற்பத்தி ... 27

சிப்காட்டின் சீரிய பணிகள் ... 29

சேலம் - ஒரு பார்வை ... 31

மருத்துவ விந்தை ... 35

உயர்நீதி மன்றக் கட்டடம் உருவான வரலாறு ... 37

உலகு போற்றும் தமிழகச் சிற்பக் கலை ... 41

நெல்சன் மண்டேலாவுக்குப் 'பாரத ரத்னா' பட்டம் ... 45

பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டப் பணிகள் ... 47

தங்கப் பதக்கம் வென்ற சிறுநீரக நோயியல் துறை ... 48



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஐப்பசித் திங்கள் - 15

மலர்: 21 இதழ்: 9

1-11-1990



மொழிப் பிரச்சினை:

# நேரு உறுதிமொழிக்குச் சட்ட அந்தஸ்து தரவேண்டும்!

## முதல்வர் கலைஞர்

"பன்மாநிலக் குழுவை அமைக்க வேண்டுமென முடிவெடுத்துள்ள மத்திய அரசுக்கு - குறிப்பாக பிரதமருக்கு நமது பாராட்டுதலை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிய போதிலும், தற்போது தான், தேசிய முன்னணி அரசு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், பன்மாநிலக் குழு அமைப்பதற்கு வகை செய்யும் 263-ஆம் பிரிவு, செயல்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

மத்திய-மாநில உறவு சம்பந்தப்பட்ட அனைத்து முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கும், முடிவு எடுப்பதற்குமான உயர் நிலை அமைப்பாக இக்குழுவைக்கருத வேண்டும். எனவே, நமது இந்த முதல்கூட்டத்திலேயே, மத்திய-மாநில உறவுகளைச் சீரமைப்பதற்கான நமது கருத்துக்களை நாம் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

1969-ஆம் ஆண்டில், எங்கள் கட்சி தமிழ் நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, முன்னாள் மாநிலத்தலைமைநீதிபதி பி.வி. இராஜமன்னார் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் ஏ.இலட்சுமணசாமி முதலியார், திரு. பி.சந்திர ரெட்டி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட, மத்திய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு ஒன்றை, நாங்கள் அமைத்திருந்தோம். அப்போது தான் நமது நாட்டிலேயே முதன்முறையாக, மத்திய-மாநில உறவுகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. அந்தக் குழு, 1971-இல் அதன் அறிக்கையை அளித்தது. 16.4.1974 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட ''மாநில சுயாட்சி'' குறித்த தீர்மானத்தில், ராஜமன்னார் குழுவின் முக்கிய பரிந்துரைகள் இணைக்கப்பட்டன.

இத்தீர்மானத்தின் அடிப்படையில், மத்திய-மாநில உறவுகள் குறித்த அனைத்துக் கூறுகள் தொடர்பான கருத்துக்கோவைகளை மத்திய மாநில உறவுகள் குறித்த ஆணைக்குழுவிடம் எங்கள் அரசு அளித்தது. அதன்பின்னர், ஆணைக்குழு அறிக்கை தொடர்பான எங்கள் உணர்வுகளையும் விளக்கமாகத் தெரிவித்துள்ளோம். இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள், மத்திய-மாநில உறவுகள் குறித்த ஆணைக் குழுவின் அறிக்கையின் மீது நாங்கள் அளித்த விரிவான கருத்துக்கள் ஆகியவற்றை முழுமையாகப் பரிசீலிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக மத்திய-மாநில உறவுகளைச் சீரமைப்பது தொடர்பாக, மத்திய-மாநில உறவுகள் குறித்த ஆணையம், அதன் பரிந்துரைகளில் எவற்றைக் குறிப்பிட வேண்டும் என்று நாங்கள் விரும்பி எதிர்பார்த்தோமோ, அவற்றை அக்குழு குறிப்பிடவில்லை என்று நாங்கள் கருதுகிறோம். எனினும் இந்தக் குழு பயனுள்ள பரிந்துரைகள் பலவற்றை அளித்துள்ளது. இவை மத்திய-மாநில உறவுகள் குறித்த விரிவான ஆய்வினை மேற்கொள்ள ஒரு தொடக்க நிலையாக அமையலாம். அவ்வாறே, இக்குழுவின் பரிந்துரைகள் மிதமானவையாக அமைந்துள்ளதால், அதனையும் குறைப்பதற்கு அவசியமில்லை. நாம் இவை குறித்து கலந்து பேசி மாநிலங்களுக்கு, அதிக சுயாட்சி கிடைப்பதற்கான வழி வகைகளைக் கண்டறிய வேண்டும்.

மத்திய-மாநில அரசுகள் சட்டம் இயற்றுவது தொடர்பான எங்களுடைய கருத்துக்களை தற்போது நான் தெரிவிக்க விரும்புகிறேன். ''தொழில் நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக் கழகங்கள் ஆகியவை உள்ளிட்ட கல்வி'', ''வனங்கள்'' ஆகியன முன்னர் மாநில அரசின் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. நெருக்கடி நிலை காலத்திலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 42-ஆம் திருத்தத்தின் காரணமாக இவை பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டன. இவை மீண்டும் மாநில அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இரண்டாவதாக, சட்டமியற்றுவதற்குரிய எஞ்சியுள்ள அதிகாரங்கள் மாநிலங்களிடம் அளிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். வரிவிதிப்பு தொடர்பானவை தவிர ஏனைய அதிகாரங்கள், பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று மத்திய-மாநில உறவுகள் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது. குறைந்தபட்சம் இந்தப் பரிந்துரையையாவது உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். மூன்றாவதாக, இக்குழு பரிந்துரைத்துள்ளபடி, பொதுப்பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் பற்றி மத்திய அரசு சட்டமியற்றக் கருதும் போதெல்லாம் மாநில அரசுகளையும், பன்மாநிலக் குழுவையும் கலந்தாலோசித்த பின்னர் தான் அவ்வாறு சட்டமியற்ற வேண்டும்.

மத்திய-மாநிலங்களுக்கிடையே பொதுவான பொருள்கள் குறித்த சட்டம் இயற்றும் போதெல்லாம், மத்திய-மாநில அரசுகளின் கொள்கை மற்றும் அமுலாக்கம் பற்றி இணக்கமான நிலையில் கலந்து பேசி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். நான்காவதாக ஆளுநர் அளவிலும், இந்தியக்குடியரசுத் தலைவர் அளவிலும் மாநிலச் சட்ட முன் வடிவுகளுக்கு இசைவளிக்க வேண்டிய கால அளவு உறுதியாக வரையறுக்கப்படுதல் வேண்டும். மாநிலப்பட்டியலில் இடம் பெறும் பொருட்கள் குறித்து இயற்றப்படும் சட்டங்களை இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பவோ அல்லது சட்டமன்றத்திற்குத்திருப்பி அனுப்பவோ ஆளுநருக்கு எவ்வித விருப்புரிமையும் அளிக்கப்படக் கூடாது.

நிர்வாக உறவுகளைப் பொறுத்தவரை, மாநிலங்களுக்குக் கட்டளையிடவும், அரசியலமைப்புச் சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசர நிலை பிரகடனத்தைச் செய்யவும், மத்திய அரசுக்கு அபரிமிதமான அதிகாரத்தை அளிக்கக் கூடிய 256, 257, 365-ஆம் பிரிவுகள் தேவையில்லை என்பது எங்களது உறுதியான கருத்தாகும். இப்பிரிவுகள் ரத்து செய்யப்பட வேண்டும்.

மாநிலங்களில் குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வருவதற்கு வகை செய்யும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 356-ஆம் பிரிவு மாநிலங்களில் ஏராளமான சந்தர்ப்பங்களில் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை மத்திய-மாநில உறவுகள் குறித்த குழு சுட்டிக் காட்டியுள்ளது. இதுபற்றி இராஜமன்னார் குழு, தன் அறிக்கையில் பரிந்துரைத்துள்ள கருத்தே எங்களுடைய கருத்தும் ஆகும்.

ராஜமன்னார் குழு தனது அறிக்கையில்,

''அரசியலமைப்புச் சட்டத்தின் 356, 357-ஆம் பிரிவுகள் ஒட்டு மொத்தமாக நீக்கப்பட வேண்டும்.

மத்திய அரசிலுள்ள ஆளுங்கட்சியின் தன்னிச்சையான, ஒருதலைப்பட்சமான போக்கிற்கு எதிராக, மாநிலங்களின் நலனில் அக்கறை கொண்டு, அவற்றைப்பாதுகாக்கும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்திலேயே போதிய அளவு பாதுகாப்பு வழிமுறைகள் செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் இது குறித்த விதிமுறைகள் இருந்திட வேண்டுமாயின்... அப்படியே இருக்க வேண்டுமாயின்...

1) ஒரு மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு நிலை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே குடியரசுத் தலைவர் ஆட்சியை 356-ஆம் பிரிவின் கீழ் கொண்டு வரலாம். அம்மாநிலத்தில் மக்களையும், சொத்துக்களையும் பத்திரமாகவும், பாது

★ மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக்கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

—தந்தை பெரியார்

## படமும் செய்தியும்



மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னை அமைந்தகரை, மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு, பாடி, செனாய் நகர் அரிமா சங்கத்தினர் கட்டித் தந்த வகுப்பறைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். (22.10.90)

காப்புடனும் வைத்திருக்க மாநில அரசால் இயலவில்லை அல்லது அதற்கு விருப்பமில்லை என்னும் நிலை ஏற்படும்போது மட்டுமே குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்படலாம்.

2) அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியில் இடம் பெற்றுள்ள ''அல்லது வேறுவகையில்'' என்று தொடர்நீக்கப்பட வேண்டும்.

3) குடியரசுத் தலைவர் அவசர நிலையைப் பிரகடனம் செய்யும் முன்னர், வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் ஆளுநரின் அறிக்கை மீது மாநில அரசின் சட்டப் பேரவை தனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக, அதனைக் குடியரசுத் தலைவர் அனுப்பி வைக்க வேண்டுமென 356 (1) பிரிவுக்கு வரம்பு நிபந்தனை ஒன்று சேர்க்கப்பட வேண்டும்''.

356-ஆம் பிரிவை மத்திய அரசு எந்தெந்த காரணங்களுக்காகப் பயன்படுத்த உத்தேசித்துள்ளதோ, அக்காரணங்கள் தொடர்பாக, அதிகார முறையில் அறிவிப்பு வெளியிடும் முன்னர், அது பற்றி நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

ஆளுநர்களின் பணி ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக ஆகிவிட்டது. ஏனெனில், ஆளுநரின் அதிகாரங்கள் கடந்த காலத்தில் பரவலாக தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆளுநர் பதவி தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கு எவ்வித அடிப்படையும் இருப்பதாகஎங்களுக்குத் தெரியவில்லை. எனினும், அப்பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமானால், மத்தியிலுள்ள ஆளுங் கட்சியினர் தங்கள் அரசியல் நலன்களைக் காக்க ஆளுநர்களைக்கருவிகளாகப்பயன்படுத்த முடியாத வகையில், ஆளுநர்களின் அதிகாரங்கள் தக்கவாறு ஒழுங்கு முறைப்படுத்தப்பட வேண்டும். ஆளுநரை நியமனம் செய்யும் முன்னர் முதலமைச்சரைச் சட்டரீதியாகக் கலந்தாலோசிக்க வேண்டுமென்கிற வகையில் 155-ஆம் பிரிவைத் திருத்த வேண்டும் என்று மத்திய-மாநில உறவு குறித்த ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆளுநரை நியமனம் செய்யும் முன்னர் முதலமைச்சரின் இசைவு பெறப்பட வேண்டும் என்று நாங்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கிறோம். முதலமைச்சர்களைத் தெரிந்தெடுத்தல், சட்டமன்றத்தைக் கூட்டுதல், மன்றத்தைக் கலைக்காமல் நிறுத்தி வைத்தல் அல்லது கலைத்தல், சட்டமுன் வடிவுகளுக்கு இசைவு அளித்தல், குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கான பரிந்துரைகள் ஆகியன போன்ற ஆளுநரின் விருப்ப உரிமை சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு பொருள் குறித்த பன்மாநிலக் குழுவைக் கலந்தாலோசித்து வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றில் எல்லாம் பதவி ஏற்க அழைக்கப்படும் கட்சியின் பெரும்பான்மையைச் சட்டமன்றத்தில்தான் நிச்சயிக்க வேண்டுமேயன்றி ஆளுநர் மாளிகையில் அல்ல.

மொழிப் பிரச்சினைக்கு நாங்கள் மிக உயரிய முக்கியத்துவம் கொடுக்கிறோம். தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக்கூட்டத்தில் நான் அண்மையில் சுட்டிக்காட்டியதுபோல், அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலை வாய்ப்புருவாக்குதல், கிராம வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், சத்துணவு, குடிநீர் வழங்கல், துப்புரவு போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் ஆகிய பணிகள் மாநிலங்களுக்குப் பெரும் பொறுப்பை அளித்துள்ளன. மாநிலங்களுக்குப் போதுமான நிதி ஆதாரங்களுக்கு வகை செய்தாலன்றி, அப்பொறுப்புகளைச் சரிவர ஆற்ற இயலாது. இது தொடர்பாக, மத்திய ஆயத் தீர்வையில் அனைத்து மாநிலங்களுக்கும் கிடைத்து வந்த பங்குத் தொகையை ஒன்பதாம் நிதிக்குழு 40 சதவீதத்திலிருந்து 37.5 சதவீதமாகக் குறைத்துள்ளது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. உண்மையில் 40 சதவீதப் பங்கே போதுமானதல்ல. மேலும் 1979-80 முதல் 1989-90 வரையிலான 11 ஆண்டுகளாக இப்பங்குத் தொகையை மேலும் குறைத்திருப்பது கவலை தருவதாக அமைந்துவிட்டது. எனவே, மத்திய ஆயத் தீர்வையில் மாநிலங்களுக்கான ஒட்டு மொத்தப் பங்குத் தொகையை 1990-95-ஆம் ஆண்டுக் கால அளவில் குறைந்தது 50 சதவீதம் என்ற அளவுக்காவது உயர்த்தப்படலாம் என்றும், அந்த 50 சதவீதப் பங்குத் தொகையில் 42.5 சதவீதம் மாநிலங்களுக்கு அளிக்கப்படலாம் என்றும் எஞ்சிய 7.5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநில்ங்களுக்கு ஒதுக்கப்படலாம் என்றும், பன்மாநிலக்குழு பரிந்துரைக்க வேண்டும் என்று நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். அடுத்து, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு பிரச்சினை, மாநிலங்களுக்கிடையேயான சரக்கு அனுப்புகை வரி (Consignment tax)பற்றியதாகும். இது குறித்து ஏற்கனவே முதல் அமைச்சர்கள்ிடையே ஒத்த கருத்து நிலவுகிறது. மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கத்தக்க தொகுப்பில் கூட்டு நிறுவன வரியும் சேர்க்கப்பட வேண்டுமென நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். மத்திய-மாநில உறவுகள் குறித்த குழுவும் இதனையே பரிந்துரைத்துள்ளது. விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய அரசின் கருத்தாகும். ஆங்கில மொழியும் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருக்க வேண்டும்.

பண்டித நேரு அவர்கள் மக்களவையில் 1959 ஆகஸ்ட் திங்கள் 7-ஆம் நாளன்று அளித்த பின்வரும் உறுதிமொழிக்குச் சட்ட அந்தஸ்து தர வகை செய்யப்பட வேண்டும்.

''நான் இரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி மொழி திணிக்கப்படக் கூடாது. அடுத்து ஆங்கில மொழி அலுவலகக் காரியங்களுக்குப் பயன்படும் வண்ணம் இணைப்பு மொழியாக இருந்திட வேண்டும். அப்படி எவ்வளவு காலத்திற்கு என்று என்னால் வரையறுக்க இயலாது. தற்போதுள்ள வசதிகளுக்காக மட்டும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஏனெனில், இந்திய மொழியில் தொடர்பு கொள்வதைக் கட்டாயப்படுத்துவதன் மூலம், இந்திமொழி பேசப்படாத பகுதிகளில் உள்ள மக்கள், சில அனுகூலங்கள் தங்களுக்கு மறுக்கப்படுகின்றன என்று கருதுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளலாம். மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கில மொழி மாற்று மொழியாக இருக்கலாம். ஆங்கிலம் இணைப்பு மொழியாக எவ்வளவு காலம் நீடிக்க வேண்டும் என்பதை இந்தி மொழி தெரிந்த மக்களின் முடிவுக்கல்லாமல் இந்தி தெரியாத மக்களின் முடிவுக்கே நான் விடுகிறேன்.''

10. மத்திய-மாநில நிதி நிலைத் தொடர்பு குறித்து அடுத்தடுத்து அமைக்கப் பெற்ற நிதிக் குழுக்கள் முன்னர் நாங்கள் எங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம். தேசிய வளர்ச்சிக் குழுவினால் அண்மையில் ஏற்பளிக்கப்பட்ட எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகு முறை அறிக்கையில் அடுத்து, பன்மாநிலக் குழுவின் செயல்பாடுகள் குறித்து கருத்து அறிவிக்க விரும்புகிறேன். இந்தக் குழுவை அவ்வப்போது எழுகின்ற பிரச்சினைகள் குறித்து மாநில முதலமைச்சர்களுடன் கலந்தாலோசிப்பதற்கான ஒரு மன்றமாக மட்டுமே கருதக்கூடாது. மத்திய-மாநில அரசுகளுக்கிடையே தொடர்ச்சியான, பயனுள்ள ஒருங்கிணைப்பு நிலவச் செய்யவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உதவும் ஓர் உயரிய மன்றமாக இது கருதப்பட வேண்டும். பன்மாநிலக் குழுவை அமைத்து, மத்திய அரசு வெளியிட்ட 28.5.1990-ஆம் நாளிட்ட அறிவிக்கையின் 5(A)பத்தி, ''இக்குழு, அதன் பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட வேண்டிய பிரச்சினைகளை இனங்கண்டு தெரிந்தெடுப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தளிக்க வேண்டும்'' என்று தெரிவிக்கிறது. இது தொடர்பாக இக்குழுவின் தகவலுக்காக, விவாதத்திற்காக, ஆய்வுக்காக மற்றும் கலந்தாலோசிக்கப்படுவதற்காகக் கொண்டு வரப்பட வேண்டிய பிரச்சினைகளைப் பட்டியலிட்டு விரிவான கருத்துக் கோவைகளை இயற்றித் தெரிவித்துள்ளோம். நான் இந்தக் கருத்துக்க்ளை ஏற்கனவே மாண்புமிகு பிரதமருக்கு அனுப்பியுள்ளேன். அவை, எனது உரையுடன் இணைப்பாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. எங்களின் கருத்துக்களை இக்குழு கவனமாகவும், விரிவாகவும் பரிசீலித்திட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் தனது உரையில் கூறினார்.

**—10.10.90 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான குழுவின் முதல் கூட்டத்தில், ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.**

★ கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

**—தந்தை பெரியார்**

# தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முதல்வர் உரை

**தே**சிய வளர்ச்சி மன்றக் கூட்டம், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் தலைமையில், 11.10.90 அன்று புதுடில்லியில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், மாண்புமிகு மாநில முதலமைச்சர்கள், குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் மாநிலங்களின் மேதகு ஆளுநர்கள், தேசிய வளர்ச்சி மன்றக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்- தேசிய வளர்ச்சி மன்றக்* கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மாநிலங்களின் எட்டாவது திட்டச் செலவு மொத்தத் திட்டச் செலவில் 45 விழுக்காட்டுக்குள் அடங்கிட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறத்தாழ ஏழாவது திட்ட அளவிலேயே உள்ளது. நிதியாதாரங்களும், அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிக்கப்படாமல் அவை பரவலாக்கப்பட வேண்டும் என்பது திட்ட அணுகுமுறை விரைவில் வலியுறுத்தப்பட்டுள்ள மையக் கருத்தாகும். இது வெறும் ஒலி முழக்கமாக இருந்துவிடக் கூடாது.

மாநிலத்தினுடைய திட்டச் செலவுகள் மொத்தத் திட்டச் செலவில் குறைந்தது 50 விழுக்காடாகவாவது உயர்த்தப்பட வேண்டும்.

எட்டாவது திட்ட நிதி ஒதுக்கீடு முறைகளில் சில இடையூறான போக்குகள் காணப்படுவதாக எனக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது.

வெளிச்சந்தையில் கடன் எழுப்புவதில் மாநிலங்களின் பங்கு ஏழாவது திட்ட அளவிலேயே கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. வெளிச்சந்தையில் எழுப்பப்படும் மொத்தக் கடன்களில் குறைந்தபட்சம் 40 விழுக்காடாகவாவது மாநிலங்களின் பங்கு உயர்த்தப்பட வேண்டுமென்று நான் என்னுடைய ஆலோசனையை முன்வைக்கிறேன்.

ஏழாவது திட்டத்தில் உடன்பாடு ஒப்பந்த அடிப்படையிலான கடன்களில் மாநிலங்களுக்குப் பெரும் பங்கு தரப்பட்டது. எட்டாவது திட்டக் காலத்திலும் இதே நிலை நீடிக்கும் என உறுதி செய்யப்பட வேண்டும்.

மத்திய உதவி என்ற வகையில் ஐம்பத்தேழு ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. இதை கணிசமான அளவு உயர்த்துவது அவசியமாகும்."

"கட்கில் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துகிற போது தென் மாநிலங்கள் மீண்டும் ஒருமுறை பாதிக்கப் படப் போவதில்லை. அவை ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

நமக்கு முன்னால் ஐந்து மாற்று வழிமுறைகள் உள்ளன. அந்தத் திட்டங்களில் ஓர் எச்சரிக்கைக் குறிப்பை நான் கண்டேன். 7 விழுக்காடு அளவுக்குள் அம்மாறுபாடுகள் இருக்க வேண்டும் என்ற வரையறை உள்ளது.

ஒன்பதாவது நிதிக்குழு திட்டமிட்டுள்ள உபரி நிதி எதுவும் கண்ணுக்குத் தென்படவில்லை. பல மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலையிலேயே விடப்பட்டுள்ளன. இப்போது முன்மொழியப்பட்டுள்ள பல மாற்று ஏற்பாடுகளெல்லாம் ஏதோ ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே பயனளிப்பதாகக் காணப்படுகிறது. ஒருசில மாநிலங்கள் பயனடைவதற்காகச் சில அடிப்படையான கொள்கைகளை மாற்ற வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

நிலப்பரப்பு அடிப்படையில் 5 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யலாம் என மாற்றுத் திட்டங்களில் ஒன்று பரிந்துரை செய்கிறது. அதிகமான மக்கள் தொகை உள்ள மாநிலங்களில் நிலப்பரப்பு குறைவாக உள்ளது. மக்கள் தொகை நெருக்கத்தின் காரணமாக சராசரி தனி மனிதனுக்கான நிலப்பரப்பின் அளவு குறைவாக உள்ளது. இதன் காரணமாக வளர்ச்சிக்கு அவசியமான வருவாய்க்கான அடிப்படை ஆதாரங்களை அந்த மாநிலம் இழக்க நேர்கிறது. நிலப்பரப்பு அடிப்படையில் தனியான ஒதுக்கீடுகள் எதுவும் கூடாது என்று நான் உறுதியாகக்கருதுகிறேன்.

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையில் 60 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு வந்தது. அம்முறை அப்படியே தொடர்ந்து நீடிக்க வேண்டும். குறைந்த நிலப்பரப்பில் அதிகமான அளவு மக்கள் வாழ்வார்களேயானால் அந்த அடிப்படையில் 5 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்கிற கோரிக்கை உண்மையிலேயே வலிமை வாய்ந்த ஒன்றாகும்.

முன்வைக்கப்பட்டுள்ள பல மாற்று வழிமுறைத் திட்டங்களில் வரி மூலமான வருவாய் அடிப்படையில் 10 விழுக்காடு ஒதுக்கீடு என்பதைப் புதிய வருவாய் நிர்வாக வழிகாட்டுதல்களின் அடிப்படைக்கு மாற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் மேம்போக்காகக் கூறப்பட்டுள்ளது. புதிய நிதி வருவாய் நிர்வாக வழிமுறைகளைக் கணக்கிடுவதற்கான விபரங்கள் எதுவும் தரப்படவில்லை. வரி வசூல் அடிப்படை என்பதற்குப் பதிலாக இதைக் கொண்டு வரும் பட்சத்தில் இது மிக பலவீனமான மாற்றாக உள்ளது.

ஆய்ந்தறியாத திட்டச் செலவின் அடிப்படையில் நிதி வருவாய் நிர்வாக வழிகாட்டுதல்கள் என்ற இம்முயற்சியை அரசு கைவிட்டுவிட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இம்முயற்சிக்குப் பதிலாக வரி வசூல் அடிப்படையிலும், மக்கள்தொகை அடிப்படையிலும் ஆன ஒதுக்கீடுகள் என்ற முறை தொடர்ந்து பயன்படுத்தப் பட வேண்டும்.

வரி வசூல் அடிப்படையிலான ஒதுக்கீட்டை 5 விழுக்காடாகக் குறைத்து மற்றொரு 5 விழுக்காட்டை சமூக ரீதியான அடிப்படையில் மாற்றுவது குறித்து எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. சமூக ரீதியான அடிப்படை என்று கூறும்போது அதற்குரிய முக்கியத்துவம் தரப்பட வேண்டும். குழந்தைகள் மரண விகிதக் குறைப்புக் குறியீட்டை ஏற்கனவே எட்டிவிட்ட சாதனைகளைச் செய்துள்ள மாநில அரசுகளுக்குக் குறைந்தபட்சம் 50 விழுக்காடு தரப்பட வேண்டும். அப்போதுதான் அந்த மாநிலங்கள் குழந்தைகள் மரண விகிதத்தைத் குறைக்கிற முயற்சியில் சாதனையளவை எட்ட முடியும். அந்த மாநிலங்களுக்கு இச்சலுகைகளைத் தராமல் அவற்றின் சாதனைகளுக்காக அவைகள் தண்டிக்கப்படக் கூடாது.

தேசிய சராசரிக்குக் குறைவாகத் தனிநபர் வருமானம் இருப்பின் 20 விழுக்காடு ஒதுக்கீடு என்று இருப்பதை தனிநபர் வருமானத்தின் வேறுபாடுகள் அடிப்படையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு என்று மாற்ற வேண்டும்.

தேசிய சராசரிக்குக் குறைவான தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் திட்ட வருவாய் மானியங்கள் 20 விழுக்காட்டிற்கு மேலாக ஒதுக்கப்பட்டு வருகிறது. கட்கில் நெறிமுறைகளின்கீழ் தனிநபர் வருவாய் வேறுபாட்டின் அடிப்படையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்வதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. ஒன்பதாவது நிதிக் குழு பரிந்துரைகள் உட்பட திட்டங்களுக்கான மத்திய நிதியுதவிகள் மற்றும் அனைத்து நிதி ஒதுக்கீடு திட்டங்கள் குறித்து ஓர் ஒருமித்த கண்ணோட்டத்தின் கருத்தையும் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கூறுகிறேன்.

தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் 20விழுக்காடு ஒதுக்கீடு என்ற விஷயத்தில் தமிழ்நாட்டின் தனித்த ஒரு நிலையை விரிவாகக் கூற விரும்புகிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்ட போது தமிழ்நாடு தேசிய சராசரிக்கும் சற்றுக் குறைவாக இருந்தது. எது எப்படியிருப்பினும் தமிழ்நாட்டுக்குரிய 20 விழுக்காட்டு ஒதுக்கீடு மறுக்கப்பட்டது. மீண்டும் அதே நிலைதான்.

மத்திய புள்ளிவிவர அமைப்பு 1986-87-க்கான புள்ளிவிவரங்களைத் தந்தது. அப்புள்ளிவிவரங்கள் முழுமையானவை அல்ல. அரைகுறையானது என்று அவ்வமைப்பே ஏற்றுக்கொண்டுள்ளது. அந்தப் புள்ளி விவரங்களின்படி தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் தேசிய சராசரிக்கு சிறு அளவே கூடுதலாக இருந்தது. எங்கள் மாநில அதிகாரிகள், மத்திய புள்ளிவிவர அமைப்பின் இப்புள்ளிவிவரங்கள் குறித்து பல்வேறு மறுப்புகளையும், பிரச்சினைகளையும் எழுப்பினார்கள்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கான விவரங்கள் எதுவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை நான் இங்கே மீண்டும் நினைவுபடுத்துகிறேன். எனவே இதுகுறித்த பிரச்சினை தீரும் வரையில் ஒன்பதாவது நிதிக்குழு 1982-85 ஆண்டுகளுக்காக எடுத்துக்கொண்ட புள்ளிவிவரங்கள் அடிப்படையே பின்பற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக்கான உரிய பங்குகள் இதுபோன்ற புரியாத. பொருந்தாத கணக்குகளைச் சார்ந்திருக்கக் கூடாது.

இந்த நேரத்தில் நான் ஒரு தனித்தன்மை வாய்ந்த உறுதிமொழியைப் பெற விரும்புகிறேன். நடைமுறை சாத்தியமற்ற கோட்பாடுகளின் அடிப்படையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்வது என்ற கணக்கீடு கூடாது.

தமிழ்நாடும் மற்றும் சில மாநிலங்களும் தேசிய சராசரிக்கு ஒரு சில ரூபாய்கள் கூடுதலான தனிநபர் வருவாய் பெறும் நிலையில் உள்ளன. இந்த மாநிலங்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

சிறப்பான மேம்பாட்டிற்கு உரிய 10 விழுக்காடு ஒதுக்கீடு என்பது கீழ்க்கண்ட வரிசையிலான பிரச்சினைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

அ. நகர்ப்புறக் குடிசைப் பகுதிகள்
ஆ. மலைப்பகுதி மேம்பாடு போன்ற சிறப்பான மேம்பாட்டுத் திட்டங்கள்
இ. கடற்கரையோரப் பகுதிகளின் பிரச்சினைகள்.
ஈ. மற்றும் தனித்தன்மை வாய்ந்த ஏனைய பிரச்சினைகள்.

அணைக்கட்டுகள், தொழிற்சாலைகள், மின்நிலையங்கள் போன்ற எல்லா திட்டங்களுக்காகவும் பெறப்படுகிற 100 விழுக்காடு உதவித் தொகையும் மாநிலங்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று ஒன்பதாவது நிதிக் குழு பரிந்துரை செய்கிறது. மேலும் தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளை எளிதாக்க வேண்டும். இவைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

சிறப்பு அந்தஸ்து பெறாத மாநிலங்களுக்கான மூல ஒதுக்கீடு 30 விழுக்காடாகவே நீடிக்கின்றது என்ற கருத்து இன்றைய விவாதத்திற்குரிய விஷயங்களின் பட்டியலில் காணப்படுகிறது. இது மூன்று முக்கிய விஷயங்களைக் கருத்தில் கொள்ளாமல் கூறப்பட்டுள்ளது.

முதலாவதாக ஒன்பதாவது நிதிக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட திட்ட வருவாய் மானியங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அனைத்து மானியங்களையும் சேர்த்து 50 விழுக்காட்டிற்கு மேல் பெறும் நிலை சில மாநிலங்களைப் பொறுத்தவரை உள்ளது. இரண்டாவதாக மாநிலங்களின் கடன் சுமைகள் வேகமாக உயர்ந்துகொண்டே போகின்றன. மூன்றாவதாக ஒரே இடத்தில் அனைத்தையும் குவிக்காமல் பரவலாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை வலியுறுத்தப்படுவதன் விளைவாக எல்லா மாநிலங்களுக்கும் திருத்திய கூடுதலான வருவாய்த் திட்டங்கள் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சிறப்பு அந்தஸ்து பெறாத மாநிலங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள எல்லா மாநிலங்களுக்கும் உரிய மானியங்கள் குறைந்தபட்சம் 40 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும். திட்ட வருவாய் மானியங்களுக்கான கணிப்புக்களும், இதற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கிறேன். இங்கு வைக்கப்பட்டுள்ள பட்டியலில் துரதிர்ஷ்டவசமாக மத்திய அரசு சார்பான திட்டங்களுக்கான நிதியாதாரங்கள் மாநிலங்களுக்கு எந்த வழிமுறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்கு எந்தவிதமான தெளிவான குறிப்பும் காணப்படவில்லை. மிகச் சில திட்டங்கள், நான்கு அல்லது ஐந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மட்டுமே மத்திய அரசு சார்பான திட்டங்களாக தொடர்ந்து நீடிக்க வேண்டும். மற்ற எல்லா திட்டங்களுக்கும் உரிய வருவாய் ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க அடிப்படையான வழிமுறையாக இறுதியாகப் பின்பற்றப் பட்ட கட்கில் நெறிமுறைகளே பின்பற்றப்பட வேண்டும். இதுவும் நூறு சதவிகித மானியம் என்ற அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

## சிறு சேமிப்புத் துறை

''எய்ப்பில்வைப் பாக வருவாய் ஐந்தொன்றை
மெய்ப்பிணி சேய்வரைவிற் கூட்டிடுக - கைப்பொருள்வாய்
இட்டிலுய் வாயிடுக்க வீங்க விழையற்க
வட்டன் மனைக்கிழவன் மாண்பு.

- இன்னிலை

''பொய்கையார்''

பொருளைத் திரட்டுவதே மனைக்குரிய தலைவன் செயலாகும். வருவாய் குறைந்தால் செலவைக் குறைக்க வேண்டும். தனக்கு வரும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கை வயதான காலத்தில் நுகர்வதற்குரிய சேமநிதியாக வைத்திருக்க வேண்டும். மேலும் அப்பொருள் உடற்பிணி போக்குவதற்கும் மக்கட்கு மணம் செய்வதற்கும் பயன்படும்.

- ★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
- ★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
- ★ பொது சேமநலநிதி
- ★ மாதாந்திர வருமானத் திட்டம்
- ★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம் இந்திரா சேமிப்புப் பத்திரம்
- ★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/ வளரும் மாத சேமிப்புத் திட்டம்

மாவட்ட சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் - 90

- ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன்
- 1.6.90 முதல் 31.12.90 வரை தனிநபர்கள் மட்டுமே முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள். (தமிழகத்தில் முதலீடு செய்பவர்களுக்கு மட்டுமே)
- ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.
- சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்.

- ● தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு - 87 ல் (NSS-87) முதலீடு செய்து 100% வருமான வரிவிலக்கு ரூ.40,000/- வரை பெற்றிடுங்கள்.
- ● தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆம் வெளியீடு/15 ஆண்டு பொது சேமநலநிதியில் முதலீடு செய்து வருமான வரிச்சட்டம் 88 பிரிவின்படி ரூ.50,000/- வரை 20% வரிச்சலுகை பெறுங்கள்.
- ● மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத்தொகை
- ● ரூ.1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு

★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும்

பரிசுக்கூப்பன்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209


### டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

# முதல் பட்டமளிப்பு விழா

முதல் ஆட்டை சொல்லும் செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர்-முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் 14.10.90 அன்று கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

இந்தப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா இது. இதற்காகப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு, தீர்மானம் நிறைவேற்றியது.

இப்பல்கலைக்கழகத்தின் வேந்தரும், மேதகு தமிழக ஆளுநருமான திரு பர்னாலா அவர்கள் தலைமையில், சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற இவ்விழாவில்- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், இப்பல்கலைக்கழகத்தின் இணைவேந்தருமான டாக்டர் பொன்முடி வரவேற்புரையாற்றினார். கல்வித்துறைச் செயலாளர் திரு. சங்கர சுப்பையன் இ.ஆ.ப., அவர்களும் கலந்துகொண்டார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் தகுதியுரை ஆற்றினார். அதன்பின், பல்கலைக்கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் பர்னாலா அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் டாக்டர் பட்டம் அளித்துப் பாராட்டினார்.

எம்.டி., எம்.எஸ்., எம்.டி.எஸ்., உட்படப் பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 326 பேருக்கு இவ்விழாவில் பட்டமளிக்கப் பட்டது. இதில் 138 பேர் நேரடியாக விழாவில் பங்கேற்றுப் பட்டம் பெற்றனர். மேதகு தமிழக ஆளுநர் திரு. பர்னாலா அவர்கள் இப்பட்டங்களை வழங்கி உறுதி மொழியும் எடுக்கச் செய்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அச்சொற்பொழிவு விவரம் வருமாறு:

தமிழக ஆளுநர் - இப்பல்கலைக்கழக வேந்தர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் - இப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் மாண்புமிகு பொன்முடி அவர்களே!

இப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்களே!

ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களே!

ஆசிரியப் பெருமக்களே!

மருத்துவத் துறை நண்பர்களே!

மாணவ மணிகளாம் என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

என் நாற்பதாண்டுக் கால நண்பரின் பெயரால் அமைந்துள்ள இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தைக் கடந்த ஆண்டு இந்தியக் குடியரசுத் தலைவரை அழைத்துத் தொடங்கி வைத்ததிலும் - இந்த ஆண்டு இந்தப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவதிலும் மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் நமது வேந்தராம் ஆளுநர் அவர்களும், துணைவேந்தரும், ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்களும் எனக்குமோர் பட்டம் வழங்குவது, என்னை அழைத்தபோது எனக்குத் தெரியாது. முடிவு எடுத்த பிறகு அவர்தம் உணர்வுகளை மறுத்திட வழியின்றி, நண்பர் பெயரால் அமைந்த பல்கலைக் கழகமன்றோ; அதனை எண்ணிப் பூரிப்பு கொண்டு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருந்து என ஒரு தனி அதிகாரமே எழுதிய திருவள்ளுவப் பெருமான்;

**''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்''**

என்றும்,

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்''

என்றும், கூறியதோடு அல்லாமல்-

''உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து''

நோயுற்றவன், நோய்தீர்க்கும் மருத்துவன், நோய்க்கேற்ற மருந்து, அருகிருந்து மருந்தளிக்கும் செவிலியர் என நான்கு வகைப்பாடு உடையது மருத்துவத் துறை என்பதை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வரையறுத்துள்ளார்.

அகத்தியர், திருமூலர், தேரையர், புலிப்பாணி போகர் எனப் பழம்பெரும் ஆன்றோர்கள், பல்லாண்டுகளுக்கு முன்பே- இன்று நாட்டு வைத்தியம் என அலட்சியப்படுத்தப் படும் பச்சிலை மூலிகை மற்றும் பல்வேறு மருந்துகளைப் பற்றி விளக்கிச் சொல்லி புகழ்நாட்டும் வைத்தியத்தை வையத்திற்கு வழங்கிச் சென்றுள்ளார்கள்.

விஞ்ஞான வளர்ச்சியினூடே புதிய புதிய கண்டு பிடிப்புகள், ஆய்வுகள், நாளும் பெருகி வரும் இக்காலத் திலும்கூட நாட்டு வைத்தியத்திற்கும் நவீன மருத்துவத்திற்கும் இணைப்புப் பாலம் ஒன்று இல்லாமற் போகவில்லை. எடுத்துக்காட்டாக, காமாலை நோய்க்குக் கீழாநெல்லி வேரை முன்பு அப்படியே அரைத்துக் கொடுத்தோம்! இன்று அதனைப் பக்குவப்படுத்தி, அளவிற் சிறிதாக்கி - ஆனால் அதன் சக்தி குறையாமல், நவீனக் குப்பிகளில் அடைத்துப் பயன்படுத்து கிறோம்!

இப்படிப் பழைய வைத்தியம்; இன்றைய பல நவீன முறைகள் எனும் மாடமாளிகை கூட கோபுரங்கள் எழுந்திட- அடித்தளமாய் விளங்குவதை நாம் மறந்திடலாகாது!

தமிழகத்தில் முறையான மருத்துவக் கல்வி தொடங்கி, இன்றைக்கு 155 ஆண்டுகள் ஆகின்றன. முதன் முதலாகச் சென்னை மருத்துவக் கல்லூரி, 1835-ஆம் ஆண்டு உதயமாயிற்று. இரண்டாவதாக ஸ்டான்லி மருத்துவப் பள்ளி 1938-ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது. மேலை நாடுகளின்

## ஈடிணையற்ற உன்னத முயற்சி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும்' கண்புரை நோயற்றோர், ஒளியமைந்த கண்ணாளர் உலவும் மாவட்டங்களாக மாற்றும் அரிய நோக்கோடு பெரிய முயற்சியுடன் மருத்துவத்துறை செயல்படுகிறது. சென்னைக்கு வருகை தந்த மேற்கு செருமானிய நாட்டுக் கண்நோய்ச் சிகிச்சை வல்லுநர் டாக்டர் சிடாட்சுவெர்க் ஏழை, எளிய மக்களின் கண்ணொளியைக் காப்பதில் தமிழ்நாடு மேற்கொண்ட நடவடிக்கைகள் உலகிலேயே ஈடிணையற்ற உன்னத முயற்சி என்று உளமாரப் பாராட்டியுள்ளார். —டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் ஆற்றிய தகுதியுரையிலிருந்து. (14.10.90)

மருத்துவக் கல்வி வளர்ச்சி, புதிய புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞானப் பொறி இயல் வளர்ச்சி போன்றவை இடைவிடாது நமது மருத்துவக் கல்வியை விரிவுபடுத்தப் பெருந் துணையாக அமைந்துள்ளன. ஒரு நாட்டின் செழிப்பும் அமைதியும் நிலைபெற, அந்த நாட்டின் ஆரோக்கியமான மக்களும் பெருங்காரணமென்பேன்.

தமிழக அரசு இன்று பத்து மருத்துவக் கல்லூரிகளையும், ஒரு பல் மருத்துவக் கல்லூரியையும், இரண்டு செயற்கை அவயவம் பொருத்தி மறுவாழ்வு தரும் கல்லூரிகளையும் நடத்தி வருகிறது.

திறமைசாலிகளான மருத்துவர்கள்; தேவைக்கேற்ற மருத்துவமனைகள் மட்டுமிருப்பின் போதாது! அந்தத் திறமைசாலிகள் மனிதநேயமுடையவர்களாகவும், மருத்துவமனைகள் மக்களின் உயிர் காக்கும் கடமையுணர்வு மிக்கோர் இருந்திடும் புனித நிலையங்களாகவும் திகழ்ந்திடல் வேண்டும்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் முடிவுகாண இயலாத பல பெருங்கோரிக்கைகளைச் சமாளிப்பதற்காக நாம் போராட வேண்டியிருந்தது. சாதாரண மனிதனுக்குரிய பாதிப்புகளும், உடல் நலக் குறைவுகளும் என்னையும் பாதித்தது உண்டு என்பதால், தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு ஏழைக்கும் போதிய மருத்துவ வசதி இன்மையால், சிகிச்சை

### அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ தஞ்சை மாவட்டத்திலுள்ள கிராமப்புற வளர்ச்சிக்கு மட்டும் ரூ.1.65 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தஞ்சையில் அறிவித்தார் (25.8.90).

★ வேளாண்மைக் கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ரூ.478 கோடி நிவாரணம் அளிக்கப்பட்டு, 17 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது (4.9.90).

பெற இயலவில்லை என்ற நிலை ஏற்படக் கூடாதென்பதில் நான் மிகவும் கவனமாயிருந்து வருகிறேன்.

இம்மாநிலத்தில், நவீன மருத்துவ வசதி கிடைக்கவில்லையென்று எந்த ஒரு நோயாளியும் வேதனைப்படக் கூடாது என்பதும், எல்லா மருத்துவ வசதிகளும் இம்மாநிலத்தில் கிடைப்பதற்கான வழி செய்வதும், தொழில் நுட்பப் பணியாளர்கள், மருத்துவர்கள், மருத்துவ துணைப் பணியாளர்கள் ஆகிய அனைவரும் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டியதும் மிகவும் இன்றியமையாதவையாகும்.

கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக, மக்கள் நல்வாழ்வுப் பணிக்கென பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதால் ஏற்படக் கூடிய நன்மை தீமை குறித்து, மருத்துவத் துறையினர் கூடி விவாதம் நடத்தி வந்துள்ளனர். இந்த விவாதம், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் காலத்திலேயே தொடங்கி வைக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களில், துறை நிலையில் இருந்த வேளாண்மைக் கல்வி, தனித்தனி துறைகளில் சிறப்பு நிலை பெறுவது என்ற கோட்பாடு உருவாகியதன் விளைவாக இந்நாட்டில் பல வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் மலர்ந்தன. இந்த வளர்ச்சியானது பசுமைப் புரட்சிக்கும் பால் வளப் பெருக்கத்திற்கும் வித்திட்டது. கல்வியானது, இன்றைய நிலையில் விரிந்து, பரந்து, பல துறைகளாகப் பல்கியுள்ளது. அத்துறைகளின் தரமும் மேம்பாடும் குறையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது கொள்கை வகுப்போரின் பொறுப்பாகும். இம்மாநிலம் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்துவது குறித்து, அடுத்து கவனம் செலுத்தியது. இதனால், தொழில் நுட்பத் துறை வளர்ச்சி பெற்று, ஆராய்ச்சிக்கான வளவாயில்கள் பெருகி, தொழில் நுட்பக் கல்வியாளர்கள் தொழில் துறையில் அதிக நாட்டம் செலுத்தத் தக்க சூழ்நிலை உருவாகி, மக்களின் கனவு நனவாகி வருகிறது. மருத்துவப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதால் மருத்துவக் கல்வியின் தரமும் மருத்துவ முறையும் பொதுச் சுகாதார நிலையும் மேம்பாடடைய வழி வகுக்கும்.

மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கும் ஏனைய பல்கலைக் கழகத்திற்குமிடையே கொள்கை அளவிலும், கல்வி அளவிலும் பல வேறுபாடுகள் இருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால், நிர்வாக நடைமுறைகளில் இவற்றுக்கிடையே வேறுபாடுகள் இருப்பது பற்றி ஒருசிலர் மட்டுமே அறிவர். இதில் எத்தகைய இடர்ப்பாடு இருந்தாலும் இம்மாநிலத்தில் மருத்துவப் பட்டதாரிகளுக்கு அளிக்கும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்திற்கு எதிரான மாற்றுக் கருத்து ஏதுமில்லை. இக்காலம் எல்லா நிலைகளிலும் சிறப்பு நிலைப் பயிற்சி தேவைப்படுகின்ற காலமாகும். அறிவியல் துறையில் ஏற்படும் முன்னேற்றங்கள் உலகம் முழுவதும் மிக விரைந்து பரவி வருகின்றன. இம்முன்னேற்றத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில், ஒவ்வொரு துறையிலும் மென்மேலும் சிறப்பு நிலைப் பயிற்சி மிகவும் இன்றியமையாததாக உள்ளது. உலக மருத்துவ அறிஞர்களோடு ஒப்பிட்டு நோக்கும் அளவிற்கும், ஒருங்கு வைத்து எண்ணத்தக்க அளவிற்கும், தமிழக மருத்துவப் பட்டதாரிகளும் முதுநிலைப் பட்டதாரிகளும் தகுதியும், சிறப்பான பயிற்சியும் பெற்றுள்ளனர் என்பது அனைவரும் நன்கறிந்த ஒன்றாகும்.

பல்லாண்டுக் காலமாகவே தமிழக அரசு, பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்ட பிரிவினர்களுக்கும், குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு செய்யும் கொள்கையைப் பின்

பற்றி வருகிறது. இதனால், மருத்துவப் பணிகளின் தரத்தில் எந்தவிதச் சீர்குலைவும் ஏற்படவில்லை. அன்றியும், நம் மருத்துவர்கள் திறமை குறைந்தவர்கள் என்ற புகார்களும் இதுவரையில் எழுந்ததில்லை. வளர்ச்சியடைந்த நாடுகள், செல்வம் கொழிக்கும் வளைகுடா நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் உட்பட, உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடு களிலும் நம் நாட்டு மருத்துவப் பட்டதாரிகளை விரும்பி அழைக்கும் நிலையுள்ளது. எனினும் நாம் வளர்ச்சியடைந்த நாடுகளைப் போல அறிவியல் ஆராய்ச்சி சாதனைகளில் மன நிறைவளிக்கத் தக்க முன்னேற்றத்தை அடையவில்லை என்ற கருத்து பரவலாக உள்ளது. ஆராய்ச்சி நெறிமுறை களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளா நிலை, பயிற்சியில்லாமை, அடிப்படை வசதியில்லாமை, நிதி நெருக்கடி ஆகிய காரணங்களால் நாம் இச்சாதனை களை எய்த முடிய வில்லை. நூலகங்களை அமைத்தல், ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துதல், ஆகியவை தொடர் பாக நம்முடைய மருத்துவப் பல்கலைக் கழகம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் நம்முடைய அரசு இந்நிலையைப் போக்க பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ''தாமரை'' என்ற பெயரில் கடந்த ஆண்டு அமைந்துள்ள முதுநிலை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் கணிசமான நிதி உதவி அளிக்கத் தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது.

தொழில் நுட்பவியல், சட்டம், அறிவியல், கலைகள், மொழிகள் ஆகிய கல்வித் துறைகள், மத்திய, மாநில அரசு களின் கல்வி அமைச்சகங்களின் கீழ் வருகின்றன. இவை, மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் தன்னாட்சி அமைப்பாகச் செயல்படும் பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலம் மத்திய நிதி உதவியை ஓரளவிற்குப் பெறுகின்றன. ஆனால், மருத்துவக் கல்வித் துறை, நல்வாழ்வுத்துறை அமைச்சகத் தின் கீழ் வருகிறது. அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் போன்ற மத்திய அரசு நிறுவனங்களுக்கு மத்திய அரசு முழு அளவில் நிதியுதவி அளிக்கிறது. அது, இந் நாட்டின் ஒரு சிறு பகுதியின் தேவைகளை மட்டுமே நிறைவு

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ எழும்பூர் துணை மின்நிலையத்தின் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், எழும்பூர், சேத்துப்பட்டு, கீழ்ப்பாக்கம், தூளை உட்பட பல பகுதிகளில் உள்ள 1.5 இலட்சம் வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் தடங்கல் இன்றி மின்சாரம் கிடைக்கும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது (2.9.90).

★ சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 108 நகரங்களுக்கு ரூ.6.5 கோடி மானியம் வழங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தஞ்சையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் (3.9.90).

செய்கின்றது. இந்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் பெரும்பாலானவை, அந்தந்த மாநில அரசுகளால் நடத்தப் படுகின்றன. இவற்றிற்கு மாநில அரசுகளே முழு அளவில் நிதி உதவி அளிக்கின்றன. தற்போது, பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு இணையாகக் கருதக் கூடிய அளவில் நல்வாழ்வுத் துறை அமைச்சகத்தின் கீழ் எந்த அமைப்பும் இல்லை.

மருத்துவப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட வேண்டு மென்ற எண்ணம் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்த போதே உருவான போதிலும், மத்திய அரசின் மானியங்கள் இல்லாத காரணமாக, இது செயல்வடிவம் பெறவில்லை. டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்கள், சேப்பாக்கத்திலுள்ள கலை - அறிவியல் வளாகம், கிண்டியிலுள்ள தொழில் நுட்பவியல்-அறிவியல் வளாகம், தரமணியிலுள்ள மருத்துவ அறிவியல் வளாகம் ஆகிய மூன்று அமைப்புகளை உருவாக் கினார். இந்தத் தொழில் நுட்பவியல் வளாகம் பின்னர் தொழில் - நுட்பப் பல்கலைக் கழக வளாகமாக உருவா கியது. இதற்கு மாநில அரசிடமிருந்தும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்தும் ஒருசேர நிதி உதவி பெற்று விரைவாக வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புள்ளது.

இப்போது தனியே மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்று

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ போக்குவரத்துத் தொழிலாளர்களின் வார விடுமுறை நாட்கள் தேசிய விடுமுறை நாட்களில் வந்தால், அந்த விடுமுறை நாட்களுக்குப் பதிலாக வேறு நாட்களில் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்ற புதிய சலுகையை தமிழ்நாடு அரசு அறிவித் துள்ளது (28.8.90).

★ மதுரையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க 3 அடுக்கு மேம்பாலம் ஒன்று கட்டபொம்மன் சிலையிலிருந்து எல்லிஸ் நகரம் வரை வளை வில்லாமல் கட்டப்பட உள்ளதாக மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு அவர்கள் அறிவித்தார் (2.9.90).

உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தையும், இதன் வளாகத்தையும் மேம்பாடடையச் செய்ய மாநில அரசு நிதி திரட்ட வேண்டியுள்ளது. இப்பல்கலைக் கழகம், மருத்துவச் சிகிச்சை ஆய்வில் ஈடுபட்டு நோய் தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டறிவதில் பெருநாட்டம் கொண் டுள்ளது என்பதை நான் நன்கறிவேன். மக்கள் நல்வாழ்வுக் காக ஆய்வு செய்ய வேண்டிய துறைகள் இன்னும் பல உள்ளன. தமிழ்நாட்டில் மருந்து தயாரிக்கும் தொழிலை மேம்படுத்த வேண்டும் என்ற நமது விருப்பத்திற்கு, மருந் தாக்கியல் ஆராய்ச்சிப் பிரிவு உறுதுணையாக இருக்க வேண்டியது அவசியமாகும். பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களின் தேவை அதிகமாகவும், ஆனால் அவர் களின் எண்ணிக்கை குறைவாகவும் இருப்பதாலும், இதற் கிடையேயுள்ள இடைவெளியை நிரப்பும் பொருட்டு மருத் துவத் துணைப் பணியாளர்களுக்குப் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பயிற்சிக்குரிய வசதிகளை மேம்படுத்த வேண்டி யது அவசியமாகும்.

நமது மக்களின் உடல்நலத்தை மேம்படுத்துவதற்குப் பொது மருத்துவத் துறையிலும், கொள்ளை நோயியலிலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். தொன்றுதொட்டு வரும் பண்டைய மருத்துவ முறைகள் குறித்துக் குறிப்பாக இம்மாநிலத்தில் வழிவழியாக வரும் சித்த மருத்துவ முறை குறித்து ஆய்வு மேற்கொண்டு அம்மருத்துவ முறையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; இப்பணிகளைச் செய்து முடிக்க அதிக அளவு நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. இந்நோக்கங்களை எய்துவதற்காகவென்றே இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் தற்போது அரசு பயன்படுத்த எண்ணியுள்ளது. இப்பல்கலைக் கழக வாயிலாகக் கிடைக்கப் பெறும் வசதிகளைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட மருத்துவ ஆய்வுகள் குறித்த கொள்கைகளை நடைமுறைப்படுத்த அரசு தன்னாலியன்ற அனைத்து உதவிகளையும் செய்யும்.

நமது நாட்டில் நவீன மருத்துவக் கல்வி குறித்து, வளர்ச் சியடைந்த நாடுகளில் பின்பற்றப்படும் நோய் தீர்க்கும் முறைகளைப் பின்பற்றுகிறதேயன்றி, இந்தியக் கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டியங்கவில்லை என்ற குற்றச்சாட்டு அடிக்கடி தெரி விக்கப்படுகிறது. இந்தியக் கிராம மக்களிடையே மருத்துவத் துறையினர் நெருங்கிய தொடர்பு கொள்ள, மருத்துவப் பணியின் நேரடி நடவடிக்கைகளுக்கும் பல்வேறு மருத்துவ அமைப்புகளுக்குமிடையே இப்பல்கலைக் கழகம் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யும் என்று நம்புகிறேன்.

முதுநிலைப் பட்டதாரிகளான உங்களில் பெரும்பாலோர் அரசுப் பணியில் இருக்கின்றீர்கள். சிலர் தனியார் துறை யில் பணி புரிகின்றீர்கள். நீங்கள் எங்கு பணிக்கு அமர்த்தப் பட்டுள்ள போதிலும், உங்களுடைய தலையாய நோக்கம் சமுதாயத்திற்குப் பணிபுரிவதாகவே இருக்க வேண்டும்.

இன்றைய உலகியல் வாழ்வு பணத்தின் மூலம் வரும் மரி யாதையையும் செல்வாக்கையுமே முக்கியமானதாகக் கருதும் பண்பாட்டுச் சூழலைக் கொண்டுள்ளது. மருத்துவர்கள் மட்டும் இத்தகைய பொதுவான போக்கிலிருந்து விலகி, தனித்து இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது பொருத்த மற்றதாக இருக்கும் என நான் கருதுகிறேன். ஆயினும், பணம் சம்பாதிப்பது என்பது தொண்டு புரிவதன் வாயி லாகப் பெயரையும் புகழையும் ஈட்டுவதற்கு எதிரானதல்ல. அறிவை வளர்த்துக் கொள்ளுவதில் நாட்டம், தொண் டாற்றுவதில் ஈடுபாடு, புகழடைய வேண்டும் என்ற குறிக்

கோள், செல்வத்தைச் சேர்ப்பது ஆகியவை ஒன்றுக்கொன்று இணைந்து பிணைந்து செல்லத் தக்கவையாகும். தொண்டாற்றுவதன் மூலமாகவும், நேர்மையாக நடப்பதன் வாயிலாகவும் நல்ல பெயரையும் அதன் பயனாக அதிகமான வாடிக்கையாளர்களையும், வசதியான நிலையான வாழ்க்கையையும் அடையலாம்.

இன்று, நமது பல்கலைக் கழக வேந்தரின் பெருமைக்குரிய சீர்மிகு கைகளிலிருந்து முதுநிலைப் பட்டத்திற்குரிய சான்றிதழைப் பெறவிருக்கும் நீங்கள் அனைவரும், உங்களுடைய தொழிலில் நேர்மையைக் கடைப்பிடித்துத் திறமையை நிலைநாட்ட வேண்டுமென்றும், வாழ்நாள் முழுவதிலும் மென்மேலும் மருத்துவ அறிவை வளர்த்துக் கொள்வதில் நீங்கள் நாட்டம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். நோயென்று வருகின்ற ஒருவருக்கு மருத்துவர் காட்டும் இன்முக வரவேற்பே நோய் தீர்க்கும் முதல் சிகிச்சையாகிறது. மருத்துவரின் நம்பிக்கையூட்டும் பேச்சே அந்த நோயாளியின் இதயத்துக்கு வலிவூட்டுகிறது. என்னதான் சகலகலா வல்லவரான மருத்துவராயிருந்தாலும் கடுமொழி கூறுபவராகவும், காசு ஒன்றிலே மட்டும் குறியானவராகவும், மறந்தும் புன்னகை புரியாதவராகவும் இருப்பாரேயானால், அரிது அரிது அவரிடம் சிக்கியவரின் நோய் தீருவது அரிதேயாகும், என்பதை மருத்துவத்துறை நண்பர்கள் உணர்ந்து, மக்கள்பணியாற்றிட் வேண்டுமென அழைக்கிறேன்.

மருத்துவப் பணியாளர்களுக்குத் தேவையான மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து அளிப்பதற்கான அனைத்து வசதிகளையும் இப்பல்கலைக்கழகம் செய்து கொடுக்க வேண்டும். அத்தகைய முயற்சிகள் அனைத்திற்கும் அரசு அதன் முழு ஆதரவையும் அளிக்கும்.

பல் மருத்துவம், செவிலியர் மருந்தாக்கியல் போன்ற தொடர்புடைய துறைகளில் முதுநிலைப் பட்டங்களைப் பெறுபவர்களும் பன்னலமும் பெற முயன்று உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் அனைத்து நற்பேறுகளையும் பெற

## ஏழை எளிய மக்களிடம் பரிவு

தொழுநோயாளர், பிச்சைக்காரர் ஆகியோருக்கு மறுவாழ்வு இல்லங்கள், ஆதரவற்றோர்களுக்குக் கருணை இல்லங்கள், 3.6.1972 முதல் கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காக இலவசக் கண்சிகிச்சை இயக்கங்கள் ஆகியவற்றிற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏழை எளிய மக்கள்பால் அவர்தம் நலவாழ்வில் முதல்வர் கலைஞர் காட்டும் ஆர்வத்தையும், பரிவையும் எடுத்துக் காட்டுகின்றன.

சென்னைப் பொது மருத்துவமனையில் நா-செவித்திறன் மருத்துவப் பிரிவு, வாய் பேசாத-காது கேளாத சிறுவர்களின் மறுவாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளில் குவிந்த நிதியிலிருந்தே இந்த மருத்துவப் பிரிவு உருவாயிற்று. இருதய நோய் சிகிச்சைப் பிரிவிலும், மாற்று சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவிலும் நவீன சிறப்புக் கருவிகளை நிறுவி, எல்லா வகையான சிகிச்சை முறைகளையும் மேற்கொள்வதற்காக சென்னை பொது மருத்துவமனையில் இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாகவே 2.5 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதியுதவி முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

—டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் ஆற்றிய தகுதியுரையிலிருந்து. (14.10.90)

வேண்டுமென வாழ்த்துகிறேன். நீங்கள் அனைவரும் அயராது உழைத்து, உங்களுக்குக் கிட்டும் அனைத்து வாய்ப்புக்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி, நம்முடைய நாட்டின், நீங்கள் கல்வி பயின்ற பல்கலைக் கழகத்தின், உங்கள் கல்லூரியின், உங்கள் குடும்பத்தினரின் உயர்ந்த நோக்கங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவீர்கள் என நான் நம்புகிறேன். உங்களுடைய நேர்மையான முயற்சிகள் அனைத்திலும் உங்களுக்கு வெற்றி கிட்ட வேண்டுமென்று நான் மனமார வாழ்த்துகிறேன்.

# 'சிடா' சமூகக்காடு திட்டப் பணியில் ஒரு திருப்பு முனை

"என்னதான் அரசு பல திட்டங்களை நிறைவேற்றினாலும் அந்தத் திட்டங்கள் கீழ் மட்டத்திலே இருக்கின்ற மக்களைப் போய்த் தொட வேண்டுமானால் அதனைச் செவ்வனே செய்யக்கூடிய அமைப்புகளாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் இவைகள் தான் இருக்கின்றன என்பதை மறந்து விடக் கூடாது.

—டாக்டர் கலைஞர்

நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், முதல் அரசு நிகழ்ச்சியாகப் பங்கு கொண்டு சிறப்பித்த ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் மாநாட்டில்-சென்னையில் 7.2.1989-இல் நடைபெற்ற போது-கூறிய அறிவுரைதான் மேலே குறிப்பிட்டுள்ள செய்தியாகும்.

அவர்களது அயராத உழைப்பும், ஆதரவும் அரவணைப்பினால் தான் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் பொலிவோடும் வலிவோடும் மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன. பதவிக் காலத்தை மூன்று ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டிற்கு உயர்த்தி உத்திரவிட்டுள்ளார். பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்கி அடித்தள அமைப்புகளான ஊராட்சிகள் ஒன்றியங்கள் ஜனநாயக முறைப்படி செயல்பட செய்தார். பொதுச் சுகாதார பணியாளர்களை மீண்டும் ஒன்றிய நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவர உத்தரவிட்டார். விவசாயத்துறைப் பணியாளர்களையும் ஒன்றியத் தலைவர்கள் கட்டுப்பாட்டில் பணியாற்றிடச் செய்தார். அதுமட்டுமல்ல, சத்துணவுக்கூடம் சம்பந்தமாக அனைத்துப் பணிகளையும் ஒன்றியத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கொண்டுவா அணை பிறப்பித்தார். மைய அரசுத் திட்டங்கள் செயல்படுத்துவதில் குறிப்பாக ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளைத் தாங்களாகவே திட்டமிட்டுச் செயல்படுத்த ஊராட்சிகளுக்கு முழு அதிகாரம் வழங்கி அவர்களைச் சுயமாக இயங்கிட செய்தார்.

ஒவ்வொரு ஊராட்சியும் சுயமாகத் திட்டமிட்டு தங்கள் பகுதிக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிட தேவையான நிதி உதவிகளை அளித்து ஊரக வளர்ச்சித் திட்டங்கள் சிறப்பாக நடைபெற செய்துள்ளார். ஆதிதிராவிடர்களுக்குக் கட்டப்படும் தொகுப்பு வீடுகளில் தற்போது தமிழக அரசு நிதியாக ரூ.4,000 ஒவ்வொரு வீட்டிற்கும் தந்துதவி அதன் மூலம் 'காங்கிரீட்' தளம் போட்ட வீடுகளை 1989-90-இல் 43,000 கட்டி முடித்து சாதனை புரிந்தது தமிழகம் தான்.

இந்த ஆண்டும் 45,000 வீடுகள் கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தற்போது பணிகள் முனைப்புடன் நடந்து வருகின்றன. மீனவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிட வழிவகை கண்டவர் நமது தமிழக முதல்வர் தான்.

**ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப.**
**ஊரக வளர்ச்சி இயக்குநர்**

மண்சாலைகளைச் சரளைக்கல் பரப்பிய சாலையாகவும், சரளைக்கல் சாலைகளைத் தார்ச் சாலையாகவும் மாற்றி அமைத்திட சிறப்பு நிதி உதவி அளித்துள்ளார். ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டு திண்ணையில் இருந்த ஊராட்சி மன்ற அலுவலகத்தை, சிறப்பாகச் செயலாற்றிட ஒவ்வொரு ஊராட்சிக்கும் சொந்தக் கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய பள்ளிக் கட்டடம் கட்ட திட்டம் தீட்டிச் செயலாக்கி வருகிறோம்.

தொலைதூர கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட - 2000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட ஆணை பிறப்பித்து தற்போது வழங்கப்பட்டு வருகிறது. கிராமக் குடிநீர்த் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்திட ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் கூடுதல் இயக்குநர் (குடிநீர் விநியோகம்) என்ற பதவி தோற்றுவிக்கப்பட்டு அதன்மூலம் சிறப்பு கவனம் செலுத்தி குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளித்து வருகிறோம்.

நல்வாழ்வுத் திட்டங்களை முதல் அமைச்சர் அறிவித்துள்ள டாக்டர் முத்துலட்சுமி மகளிர் உதவித் திட்டம், இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் போன்றவைகளை மிகச் சிறப்பாக ஒன்றியப் பகுதியில் நிறைவேற்றி வருகிறோம்.

அடுக்கடுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை நாளும் அறிவித்து அதனை ஊர்ப் புறங்களில் நிறைவேற்றிட உற்சாகம் ஊட்டிச் செயல்படுத்தி வரும் நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிதி ஆதாரங்களை வகைபடுத்தி தொகைபடுத்தி விரிவாக்கவும், அதன் மூலம் ஊர்ப்புற மக்களுக்கு உதவிடும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை விரைவுப்படுத்தி நடத்திடவும் "ஊராட்சி நிதி ஆய்வுக்குழு" ஒன்றினை ஏற்படுத்தினார். திருவாளர் ஏ.ஆர். தாமோதரன் அவர்களைக் கொண்ட அந்தக் குழு பல்வேறு மாவட்டங்களில் சென்று ஊராட்சி, ஒன்றியத் தலைவர்கள் கருத்துக்களைக் கேட்டுப் பதிவு செய்துள்ளது. மேலும் அரசின்

பல்வேறு துறைத் தலைவர்களையும் கண்டு கலந்துரையாடியுள்ளார். இதன் அறிக்கை விரைவில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இவ்வாறு ஊரக வளர்ச்சியில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்தி, பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் மேலும் ஒருபடி முன்னேறி ஊராட்சிகளுக்கு நிரந்தரமாக வருவாய் தரும் ''சிடா'' சமூகக் காடுகள் திட்டம் மூலம் ஏற்படுத்தப் பட்ட காடுகளைச் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடம் ஒப்படைத்து, அதன் மூலம் அவர்கள் அந்த காடுகளைக் காத்து அதன் மூலம் நல்ல வருவாய் பெற வழிவகை செய்தும் உத்தர விட்டுள்ளார் என்பது, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். நல்ல உள்ளம் கொண்ட நாட்டிலுள்ளோர் நாளெல்லாம் பாராட்டிப் போற்றிடுவர். இது உண்மை. இதனால் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் சுமார் ரூ.50,000 முதல் ரூ.1 இலட்சம் வரை வருவாய் வர வாய்ப்பு உள்ளது. இதற்கான ஆணை அண்மையில் அரசு வெளியிட்டுள்ளது. (அரசு ஆணை எண்.600 ஊரக வளர்ச்சித்துறை நாள் 23.7.90) முதல் கட்டமாக 360 காடுகளை ஊராட்சிப் பொறுப்பில் தொடர்ப் பராமரிப்புப் பணி செய்திடவும், அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு ஏற்கெனவே தயாரிக்கப் பட்டுள்ள மேலாண்மைச் செயலாக்கத் திட்டத்தின்படி, (Management Plan) திட்டங்களை நிறைவேற்றிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளன. இதற்காக சென்னை கிருஷ்ணமூர்த்தி பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்து ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனியாக 'மேனேஜ்மெண்ட் பிளான்' தயாரிக்கும் பணி முடியும் தருவாயிலுள்ளது. இம்மாதிரியான பணிகளை ஆய்வு செய்ய ஒரு ''செயல்திறன் குழு'' அமைக்கப்பட்டு அது அடிக்கடி கூடி பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தும் வருகிறது.

முதல் கட்டமாக அரசு ஆணையில் அறிவித்த 360 காடுகள் 15.8.90 அன்று சுதந்திரத் திருநாளில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இது நிச்சயமாக நமது நிர்வாகத்தில் ஒரு திருப்புமுனைதான். உண்மையான அதிகார மாற்றம் என்று இதனைக் குறிப்பிடலாம். சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களுக்குச் சமூகக் காடுகள் திட்டம் குறித்து 3 நாட்கள் பயிற்சி எல்லா மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ளது. இதில் வனத்துறை அலுவலர்கள், வளர்ச்சித் துறை அலுவலர்கள், வேளாண்மைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். இவ்வாறு வனத்துறை நிர்வாகத்திலிருந்து 360 காடுகள் பகுதி ஊரக வளர்ச்சி துறையைச் சேர்ந்த ஊராட்சி நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது குறித்து எண்ணும்போது இதன் பின்னணியில் நடந்தவைகளை நினைவு கூர்வது பொருத்தமாகும்.



**இந்திய நாட்டில் தற்போது 1 கோடி வேப்ப மரங்கள் உள்ளன. வேப்ப மரப் பொருள்களிலிருந்து உரங்கள் தயாரிக்க முடியும். வேப்ப எண்ணெய் பல்வேறு தொழில்களில் பயன்படுத்தப் படுகிறது. வேப்ப மரப் பொருள்கள் அனைத்தும் இன்னும் மக்களால் முழுமையாகப் பயன் படுத்தப்படவில்லை. வேப்ப மரங்கள் வளர ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றினை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் மேற்கொள்ளவிருக்கின்றது.**

''சிடா'' சமூகக்காடுகள் திட்டம்'' சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் தமிழகத்தில் 1980 ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. அதன் வளர்ச்சி பற்றிய ஆய்வுக் கூட்டம் ஸ்டாக்ஹோமில் நடைபெற்றது. அதில் இத்துறைச் செயலர் டாக்டர் எஸ்.நாராயண், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு ஊராட்சிகள் பொறுப்பில் தொடர் பராமரிப்பு செய்வது பற்றியும் ஒப்படைப்பது பற்றிய திட்டங்களைச் சம்பந்தப்பட்டவர்களுடன் விவாதித்தார். அதன் பயனாக ஒரு குழு ஸ்வீடன் நாட்டிலிருந்து தமிழகம் வந்து 7.2.90 முதல் 11.2.90 வரை தமிழகக் கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து ஊராட்சிகளின் தலைவர்கள் பொது மக்கள் கருத்துகளைக் கேட்டறிந்தது.

எல்லோரும் ஊராட்சிகளிடம் ஒப்படைத்து தொடர் பராமரிப்பு செய்யலாம் என ஒருமித்து கருத்து தெரிவித்தனர். நானும், திருச்சி மாவட்டம் ''குளக்குடி கிராமத்திற்குச் சென்று அதன் ஊராட்சித் தலைவரைச் சந்தித்து அவரது கருத்து கேட்டேன். அவரது ஆழ்ந்த பற்றும், நம்பிக்கையும், செயல்திறனும் என்னை மேலும் முனைப்புடன் செயல்படத் தூண்டியது.

மரம் வளர்ப்பு மூலம் ஏலம் போட்டு, அரசு நிதி உதவி இல்லாமல் தெருவுக்கு ஒரு தொலைக் காட்சிப் பெட்டி என எல்லாத் தெருக்களிலும் 12 தொலைக்காட்சிப் பெட்டி நிறுவி மக்களின் ஆசையை நிறைவேற்றியுள்ள செயல் என்னைச் சிந்தித்து செயலாற்றத் தூண்டியது. பல்வேறு நிலைக் கூட்டங்கள் – ஆய்வுகள் – கருத்து பரிமாற்றம் – பிறகு தான் இந்த சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த திருப்பு முனையாகச் சாதனை புரிய முடிந்தது.

நிச்சயமாக ஊராட்சிகளின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாக இருக்கும் என திடமாக நம்புகிறேன். பேரறிஞர் அண்ணா அடிக்கடி சொல்வார், 'மக்களிடம் சென்று அவர்களுடன் கலந்து, அவர்களுக்குத் தேவையானவற்றை அவர்களிடம் உள்ளவற்றைக் கொண்டு செயலாற்று. நிச்சயம் வெற்றி கிட்டும்' என்பார். அதைத்தான் தமிழக அரசு செயலாற்றி வருகிறது.



தருவி, புலி அருவி, சிற்றருவி, பழைய குற்றால அருவிப் பகுதிகளில் உடை மாற்றும் அறைகள் புதிதாகக் கட்ட, பெரிய அருவி, ஐந்தருவிப் பகுதிகளில் உள்ள உடைமா[illegible]றும் அறை மற்றும் பொருள் [illegible]காப்பு அறைகள் சீரமைக்க [illegible].41 இலட்சமும் ஆக மொத்தம் [illegible].49 இலட்சம் நிதி ஒதுக்கீடு [illegible]ய்ய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

[illegible] தவிர, குற்றால சீசன் [illegible]தரக் காலங்களில் சுற்றுலாப் [illegible]ணிகளுக்கும் மற்றும் குற்றாலப் [illegible]திகளில் வசிப்பவர்களுக்கும் [illegible] தரத்தக்க வகையில் ராம[illegible]மபுரம் சாலை சீரமைத்து ஒரு [illegible]ப் பாதையாகப் பயன்படுத்தல், குறிஞ்சி இல்லத்திற்கு அருகில் ஒரு திறந்தவெளிக் கிணறு அமைத்து ஏற்கெனவே உள்ள கலைவாணர் அரங்க மேல்நிலைத் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆவன செய்தல் ஆகிய இரு பணிகளுக்கும் முறையே ரூ.1.52 இலட்சம் மற்றும் ரூ.3.38 இலட்சம் மாவட்ட மாநிலத் திட்டக்குழு மூலம் சிறப்புப் பணிகளாக அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் ராமவர்மபுரம் சாலை அமைப்புப்பணி இவ்வாண்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு ஆணை பெறப்பட்டவுடன் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும். இதர மேம்பாட்டுப் பணிகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவை தனி முயற்சிகள் மூலம் செயல்படுத்த வேண்டி, அவற்றின் விளம்பரம் மற்றும் பொதுமக்கள் வசதி நோக்கில் அவர்களை அழைத்துக் கலந்துரையாடி விருப்பத்திற்கேற்ப கீழ்க்கண்ட பணிகள் இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டு முடித்தும், முடிக்கும் தருவாயிலும் உள்ளன.

1. சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்தாரால், பேருந்து நிலையத்திற்குத் தெற்கிலுள்ள மேட்டுப் பூங்காவினை வண்ணமயமாகச் சீரமைத்தல்.

2. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினரால், பெரிய அருவிச் சாலையில் குடில்களின் எதிரில் உள்ள சாலைப்பூங்காவினை விரிவுறச் செய்து சிறப்பு மேம்பாட்டுடன் அழகுறச் செய்தல்.

3. இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தாரால், ஐந்தருவி பேருந்து நிலையப் பகுதிச் சாலையை விரிவாக்கித்தளமிட்டுச்சீரமைத்தல், கழிவறைகள் நவீனப்படுத்துதல்.

4. ஸ்பிக் நிறுவனத்தாரால், ஐந்தருவி ஆலயம் முன் பகுதியில் ஆற்றின் கரையில் நவீன வசதிகளுடன் கூடிய மகளிருக்கான உடை மாற்றும் அறைகள் கட்டுதல், பெண்கள் பகுதி— அருவியினின்றும் தனிப்பாதை அமைத்தல், ஐந்தருவி குளியல் பகுதிச் சீரமைப்பு.

5. மதராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்தாரால், முதன்மைப் பூங்காவினுள் உணவருந்தும் அறைகள்,



தண்ணீர் கழிவுத் தொட்டி வசதிகளுடன் அமைத்தல்.

6. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் உதவியால், சாலைச் சந்திப்புத் தீவுகள் கட்டி அழகுறப் பேணுதல்.

7. ஆர்.எம்.கே.வி.சன்ஸ் நிறுவனத்தாரால், பெரிய அருவிப் பகுதியில் முக்கோண மண்டப இலவச உடைமாற்றும் அறைகள் நவீனமயமாக்கி அமைத்தல்.

8. அண்ணாமலை பைனான்ஸ் நிறுவனத்தாரால், பெரிய அருவிப் பகுதியில் பொருள் பாதுகாப்பு அறைகள் அமைத்துக் கொடுத்தல்.

9. மதுரா கோட்ஸ் நிறுவனத்தாரால், மின் ஒளி பெரிய அருவி ஐந்தருவிப் பகுதிகளில் அமைத்துக் கொடுத்தல்.

10. திருக்குற்றால நாத சுவாமி தேவஸ்தானத்தால், மண்டபங்கள் அழகுறச் செய்து உடைமாற்றும் அறைகள் சீர்படுத்தி ஆற்றங்கரை மண்டபங்களை அசுத்தப்படுத்தாமல் தடுத்து, பாதுகாப்பு அமைப்புகள் செய்தல்.

11. நகரியத்தால் குடில்கள், மற்றும் தங்கும் அறைகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொண்டு ஒதுக்கீடு வரன்முறைப்படுத்திப் பேணுதல், பொதுக் கழிப்பிடங்கள் சீரமைத்து வசதிகளுடன் பேணுதல், தளவாய் கட்டடம் முதல் அண்ணா சிலை வரை சாலை விரிவு படுத்தும் பணி, அருவிக் கரைகள் விரிவாக்கம், மலைவழிப்பாதை வேலிகட்டிப்பாது காத்தல் மற்றும் இதரப் பொது வசதிப் பணிகள்.

மேற்குறித்த பணிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பெரு முயற்சியாலும் மனமுவந்த ஒத்துழைப்பாலும் சிறப்பாக நடப்பு ஆண்டிலேயே பாராட்டத்தக்க வகையில் முடிக்கப்பட்டும், முடியும் தருவாயிலும் உள்ளன.

தொடரும் பணிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம், சாலைப் பராமரிப்பு விரிவாக்கத் திட்டம், மின்விளக்கு மற்றும் சாலைச் சந்திப்புத் தீவுகள் அழகுற அமைத்தல், இலஞ்சி-ஐந்தருவி சாலைச் சீரமைப்பு மற்றும் இதரக் கட்டுமானப் பணிகள், உல்லாசப் படகு நிலையம் ஆழப்படுத்தி கரை பலப்படுத்தி தீவினை அழகு படுத்தும் திட்டம் ஆகியவையாகும்.

குற்றாலத்திற்குச் சீசன் சமயத்தில் மட்டும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். குற்றாலத்தின் மலை மற்றும் இயற்கை எழிலினை ஆண்டு முழுவதும் கண்டு அனுபவிக்க ஏதுவாக, குற்றாலத்தினை மையமாகக் கொண்டு அருகிலுள்ள குண்டாறு அணைக்கட்டுப் பகுதி மற்றும் முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயம், மாஞ்சோலை எஸ்டேட் போன்ற எழிலார்ந்த இடங்களையும் இணைத்து, இப்பகுதியினைச் சிறந்த சுற்றுலா மையமாக உருவாக்கும் தொலைநோக்குத் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

○ எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல; அதுபோலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

— தந்தை பெரியார்





ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல?
தமிழ்நாடு முழுவதும் கிராமப் புறங்களில், ஆதி திராவிடர்களுக்கு 42 ஆயிரம் தீப்பிடிக்காத வீடுகளும், நகரங்களில் 5 ஆயிரம் வீடுகளும் கட்டித் தருவதற்கு அரசு திட்டமிட்டு வருகிறது.
இனி குடிசையில கிடந்து அல்லல் படவேண்டாம். பாதுகாப்பான வீடு அரசே கட்டித் தருது!
நம் நலிவு நீங்க வாரி வழங்கும் கருணை மனம் வாழ்க! வாழ்க!!
ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்
நலிவுற்று வறுமையில் வாடும் தமிழ்நாட்டிலுள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த மாத ஓய்வூதியம் ரூ.250/- லிருந்து ரூ.400/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
தோல் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களை நீக்கி ஆவியாக்கும் நிலையங்கள் ரூ.50 லட்சம் செலவில் தமிழ்நாட்டில் 6 இடங்களில் அமைக்கப்படுகின்றன.
தோல் தொழிற்சாலை




முதலாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ - மாணவியர் அனைவருக்கும் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் சென்றுவர அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச பாஸ் வழங்கப்படுகிறது!
தொழில் வளர்ச்சியில் 3 ஆம் இடத்திலிருந்த தமிழகம் இடைக்காலத்தில் 13 ஆம் இடத்துக்குப் போய்விட்டது. அதனை முதலிடத்துக்குக் கொண்டு வருவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது!
முதலிடம் பெற்றே ஆகவேண்டும்!
தமிழகம் தொழில் வளர்ச்சி நிலை
88-89, 1989-90, 1990-91
அரசுக்கு நன்றி சொல்லணும்! நம் நிலை உணர்ந்து செய்யும் உதவியல்லவா இது!
ஓய்வூதியம் வழங்கும் பிரிவு
அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போலவே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும் மருத்துவப் படியாக மாதந்தோறும் ரூ.15 அவர்களது ஓய்வூதியத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது!

## நூல்நயம்

### நேரமே நமது செல்வம்

**ஆசிரியர்:** டாக்டர் இல. செ. கந்தசாமி
**வெளியீடு:** கலைச்செல்வம் பதிப்பகம்,
16, சாஸ்திரி தெரு,
பி.என். புதூர், கோயமுத்தூர்-641041

பக்கம்: 120 விலை: ரூ.10

'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்று கூறினார் திருவள்ளுவர். நேரமும் அதற்கிணையான சிறப்புக் கொண்டது என்பதை நூலாசிரியர் நன்கு நிறுவியுள்ளார்.

கடந்து போன நேரம் திரும்ப வராது என்பதையும், சில நிமிட தாமதத்தால் தேர்வில் தோல்வியைச் சந்திக்க நேருகிறது- ரயிலைக் கோட்டை விட நேருகிறது என்பதையும் தக்க வகையில் எடுத்துரைத்துள்ளார். வெட்டிப் பேச்சில் நேரத்தை வீணாக்கக் கூடாது என்று கூறியிருப்பது நியாயமானதே. பல்வேறு அறிவுரைகளை இந்நூலில் எடுத்துரைத்து நமது நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு வழி வகுத்துள்ளது பாராட்டுக்குரியது.

— தமிழ்ப்பித்தன்

### பச்சை நிறப் பூக்கள்

**ஆசிரியர்:** பா. அமிழ்தன்
**வெளியீடு:**
மதி வெளியீடு
3/43, பூஞ்சோலைத் தெரு,
கள்ளிக்குளம் 627113.

விலை: ரூ. 12 பக்கம்: 124

மரபுக் கவிதையும், புதுக் கவிதையும் இணைந்த தொகுப்பு இது.

மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. அவர்களைப் பற்றிக் கூறும்போது,

அவர் ஆரவார
அலைகள் இல்லாத
அறிவுக் கடல்;
தென் பாரதத்தின்
ராஜாராம் மோகன்ராய்;
தாடியில்லாத
கார்லெ மகரிஷி.

என்று அழகாய்க் குறிப்பிடுகிறார். நூலில் தென்றலும் தவழ்கிறது; புயலும் வீசுகிறது. கற்பனையும், கருத்துரைகளும் கைகோக்கின்றன.

### வானில் கோடி சூரியன்

**ஆசிரியர்:** ஆனைவாரி ஆனந்தன்
**வெளியீடு:**
பூரம் பதிப்பகம்
59, ராஜு நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம் சென்னை-600 017.

விலை: ரூ.15 பக்கம்: 63

இது அறிவியல் உலகம். இந்த அற்புத உலகத்தைக் குழந்தைகளுக்கும் நாம் காட்ட வேண்டும். அந்த வகையில் எழுந்ததே இந்த நூல். இந்நூலில் 29 குழந்தைப் பாடல்கள் உள்ளன. வானில் கோடி சூரியன், சூரிய மண்டலம், கோள்கள் தோற்றம், உயிர்கள் தோற்றம், உலகத் தோற்றம் என்று அறிவியலை அழகாய்க் கூறுகிறார் ஆசிரியர்.

இதேபோல, நமது இந்தியா, வேற்றுமையில் ஒற்றுமை ஆகிய பாடல்களும் இதயத்தைத் தொடுகின்றன. தமிழகம், தமிழ்மொழி - பாடல்களும் கருத்தாய் அமைந்துள்ளன. பொதுவாகக் குழந்தைகள் ஆடிப்பாடவும், படித்து மகிழவும் இந்தப் பாடல்கள் உதவும். பக்கத்துக்குப் பக்கம் முழுப் பக்க வண்ணப் படங்கள் இருப்பது இந்நூலின் தனிச் சிறப்பு.

-பி.வி.கிரி

### டாக்டர் அம்பேத்கர்

**ஆசிரியர்:** எம். நாராயணன்
**வெளியீடு:**
அன்பு பதிப்பகம்,
8, அம்மையப்பன் தெரு,
சென்னை-600014.

விலை: ரூ.10 பக்கம்: 95

தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கிறது இந்நூல். அத்துடன் அவரின் பொன்மொழிகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

### புரட்சிக் குயில் பாரதிதாசன்

**ஆசிரியர்:** பூவை அமுதன்
**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்
17 கங்கை அம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-600 026.

விலை: ரூ.12 பக்கம்: 128

பாவேந்தரின் வாழ்க்கை வரலாறோடு, அவரது பாவளம், சுவையான சில நிகழ்ச்சிகள், முக்கியக் குறிப்புகள், அவர்தம் புனை பெயர்கள், அவருக்கான நினைவுச் சின்னங்கள் பற்றிய குறிப்புகளும் உண்டு.

ஆனால் நூலின் முகப்பில் யாரோ ஒருவரை ஓவியமாக வரைந்து புரட்சிக் குயில் பாரதிதாசன் என்று எழுதி இருப்பது தான் நன்றாக இல்லை.

-என். குமாரசாமி

### இந்திய நிலமானிய முறை

**ஆசிரியர்:** ராம் சரண் சர்மா
**வெளியீடு:**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)
லிமிடெட், 41-பி, சிட்கோ
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்: 416 விலை ரூ.55/-

கி.பி. 400 முதல் கி.பி. 1200 வரை இடைப்பட்ட காலத்தில் வட இந்தியாவில், வழக்கிலிருந்த நிலமானிய முறை, ஆட்சியமைப்பு, நிலமானியமுறைப் பொருளாதாரம் ஆகியவைபற்றி விளக்குகிறது இந்த நூல். முக்கியமாக - யார் யாருக்கெல்லாம் எவ்வாறெல்லாம் நிலமானியங்கள் அந்நாளில் அளிக்கப்பட்டன; அதைப் பெற்றுக் கொண்ட அவர்கள் அவற்றை எந்த முறைகளிலெல்லாம் அனுபவித்தார்கள் என்பவைகளைப் பற்றியெல்லாம் இதில் மிகத் துல்லியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாட்னா பல்கலைக் கழகப் பேராசிரியரான ராம்சரண் சர்மா ஆற்றிய ஆறு உரைகளின் தொகுப்பான இதனை, திரு. மு.ரா. பெருமாள் முதலியார் அவர்கள் அழகு தமிழாக்கி நமக்கு அளித்திருக்கிறார்.

### கோலார் தங்கவயல் தங்கச் சுரங்கத் தொழில்முறைகளும் ஆரம்பகாலத் தொழிற் சங்க வரலாறும்

**ஆசிரியர்:** திரு. கே. எஸ். சீதாராமன்
**வெளியிட்டோர்:**
இலூஷன் எலக்ட்ரானிக்ஸ் பப்ளிகேஷன்ஸ்,
டாக்டர் ஓடானெல் சாலை,
ஆண்டர்சன்பேட்டை,
கோலார் தங்க வயல்,
கர்நாடக மாநிலம்-563 113.

பக்கம்: 80 விலை ரூ.6/-

இந்தியா 1947ல் சுதந்திரம் பெற்றாலும், 1956ல் தான் கோலார் தங்கவயல் தேசியமயமாக்கப்பட்டு, கடைசி வெள்ளையன் வெளியேறினான். அப்படிப்பட்ட கோலார் தங்க வயலில் காலூன்றி வளர்ந்த தொழிற் சங்க வரலாறை இந்நூல் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

சுரங்கத் தொழில் முறைகள், பழங்கால உலக வரலாற்றில் தங்கம், தங்கத்தின் சிறப்பு, தொழிற்சங்க இயக்கம், கோலார் தங்கவயல் வரைபடம்-எல்லாம் இதில் இருக்கின்றன. இதில் காணப்படும் விஷயங்களைச் சேகரிக்க ஆசிரியர் எவ்வளவு பாடுபட்டிருப்பார் என்பதை நம்மால் உணர முடிகிறது!

—முடிகொண்டான்

---

**கைத்தறித் தொழில் என்றாலே நமக்கு நினைவு வருவது துணி நெசவுதான்; சணல் உற்பத்தியும், அதன் மூலமான பொருட்கள் தயாரிப்பும்கூட கைத்தறிதான்! அந்த வகையில், பெரியார் மாவட்டம் பெற்றுவரும் வளர்ச்சியை விவரிக்கும் கட்டுரை இது!**

# கைத்தறித் தொழிலில் சணல் உற்பத்தி

தமிழகக் கைத்தறித் துறையில் பெரியார் மாவட்டத்திலுள்ள சென்னிமலைக்கு முதன்மைப்பங்கு உண்டு. இங்கு மக்கள் தொகை 13,717. கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை 10,000. இது சுமார் 73 சதவீதமாகும். தற்போது இங்கு 40 கூட்டுறவு நெசவுச் சங்கங்களில் 7,500 உறுப்பினர்கள் உள்ளனர். மொத்த அளவில் உள்ள கைத்தறி நெசவாளர்களில், கூட்டுறவுத் துறையில் உள்ளவர்கள் கணிசமாக 75 சதவீதம் இங்கு உள்ளனர்.

உலகக் கைத்தறி அரங்கில் சென்னிமலை படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் மற்றும் இதர வகைகள் ஒரு உன்னதமான நிலையினை வகிக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. இதை நிரூபிக்கும் வகையில் முதன் முறையாக, கைத்தறியின் வரலாற்றிலேயே சென்னிமலை படுக்கை விரிப்புகள் இந்திய அரசின் ஐ.எஸ்.ஐ. விருது பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மாநில, மத்திய அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்குச் சென்னிமலை நெசவாளர்கள் எப்போதும் முன்னோடியாக இருப்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்த வகையிலேயேதான், மத்திய அரசின் சணல் துணி உற்பத்தித் திட்டத்திலும், தறிகளை இவர்கள் இணைத்துக் கொண்டுள்ளார்கள். சணல் வலையைப் பயன்படுத்தும் திட்டத்திற்கு இங்குள்ள கைத்தறி நெசவாளர்கள் தங்களின் முழு ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள்.

பல அரிய பரிசோதனைக்குப் பின்னர், மாநில கைத்தறித் துறை மற்றும் மத்திய அரசின் சென்னை நெசவாளர் சேவை மையத்தினர் ஆகியோரின் உறுதுணையுடன் ஒரு சில ரகங்களை (Jute Products) உற்பத்தி செய்யும் நோக்குடன் சணல் ஜமக்காளம், தரை விரிப்புகள் மற்றும் குலியல் தரை விரிப்பு (Jute Pile Carpets) முதலானவற்றைத் தயாரித்துள்ளனர்.

பெரியார் மாவட்டம் சென்னிமலையில் சணல் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் கண்காட்சியை, மாண்புமிகு மத்திய துணி நூல் துறை அமைச்சர் திரு.சரத் யாதவ் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் திரு. என்.தங்கவேலு அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்.

அகில இந்திய அளவிலான "கைத்தறித் தொழிலில் சணல்" என்பது குறித்த கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்றது. இக்கருத்தரங்கினைத் தொடக்கிவைத்து மாண்புமிகு மத்திய துணிநூல் துறை அமைச்சர் திரு.சரத் யாதவ் அவர்கள் பேசும்போது, "அகில இந்திய அளவிலான தேசிய கருத்தரங்கம் சென்னிமலையில் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். சென்னிமலையில் இப்படியொரு வியக்கத்தக்க அளவில் கருத்தரங்கம் நடப்பதற்கு, திரு.நாச்சிமுத்து தமிழகக் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள். பருத்தியிலிருந்து அனைத்து வகைத்துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு மாறாக இங்கே சணலையும் அறிமுகப்படுத்தி, அதன் மூலம் பல்வேறு விதமான பொருட்கள் தயாரிக்க நாம் முயற்சி எடுத்துக் கொண்டால், சணலின் பயன் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் நூலுக்கு உள்ள கிராக்கி குறைந்து, நூல் தாராளமாகவும், குறைந்த விலையிலும் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும். இதன் காரணமாக நெசவாளர்கள் நல்ல பயன்பெற முடியும்.

"இங்கு நடைபெறும் இக்கருத்தரங்கம் இன்று ஒருநாள் நடத்தினால் மட்டும் போதாது. இப்படிப்பட்ட கருத்தரங்கினை நிரந்தரமாக நடத்த ஏற்பாடு செய்யப்படும். சென்னிமலையில் சணல் மூலம் பொருட்களை உற்பத்தி செய்ய நிரந்தரப் பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்படும். துணி நூல் உற்பத்தித் தொழில் தொன்மையானது. இதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளது" என்றார்.

கருத்தரங்கத்திற்குத் தலைமை வகித்து மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் காரணமாவார்கள். கைத்தறி மூலம் சென்னிமலையின் பெருமையை உலகறியச் செய்தவர் அவர்.

"வட இந்தியாவில் சணல் மூலம் பலவித பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் சணல் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். சணல் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தென்னிந்திய மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட வேண்டும். நூல் விலையைக் குறைக்க வேண்டும் என்று இங்கு பேசிய

---

**● வாழ்க்கைத் தரம் மட்டமாக இருக்கும் சமூகத்தில் ஓய்வு கிடைத்துப் பயனில்லை; பொருளும் இல்லை. வேகாத பண்டத்தை வெள்ளித் தட்டில் வைத்துத் தருவது வீண் வேலையாகும்!**

— அறிஞர் அண்ணா



## படமும் செய்தியும்



மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் வடசென்னையிலுள்ள நியாயவிலைக் கடைகளில் திடீர் சோதனையிட்டார். (20.10.90)

திரு. எஸ். தங்கவேலு அவர்கள் உரையாற்றும்போது, ''ஈரோட்டில் நெசவாளர்கள் பெரும்பாலும் ஜமக்காள உற்பத்தியாளர்கள்தான் அதிகம் உள்ளனர். எனவே, சணல் மூலம் பொருட்களை உற்பத்தி செய்ய இம்மாவட்டத்தில் சணல் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்கு மத்திய, மாநில அரசுகள் முக்கியப் பங்காற்றும்.

''சணலைக் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு வழங்கப்படும்போது, தரமான சணல் வழங்கப்படும். இதன் மூலம் சுவர் அலங்காரம், தரை விரிப்புகள், திரைச் சீலைகள் முதலியன உற்பத்தி செய்ய முடியும். இந்தச் சணலை மானிய விலையில் வழங்க வேண்டும். நெசவாளர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்த வேண்டும். வடமாநிலங்களுக்கு நெசவாளர்கள் நேரில் சென்று பார்த்து வர ஏற்பாடு செய்வதோடு சலவைச் சாலையையும் அதற்குரிய சாயத்தையும் மானிய விலையில் வழங்கவேண்டும். மானியம் வழங்கினால் பலர் இந்தத் தொழிலை செய்ய ஆர்வத்தோடு முன் வருவார்கள். அத்துடன் பொருட்களை விற்பனை செய்ய உத்தரவாதமும் வழங்க வேண்டும்.

''தமிழகத்தைப் பொறுத்தவரையில் நெசவாளர்களுக்குப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசு வேளாண்மைக் கடனை ரத்து செய்தது போல, நெசவாளர்களுக்கும் அத்திட்டம் பொருந்தும் என்று அரசு அறிவித்துள்ளது. நெசவாளர்களின் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். நூல் விலையைக் கட்டுப்படுத்த மாநில அரசுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு நெசவாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள் செய்யப்பட்டுள்ளன. 2-க்கு 17 நூல் தட்டுப்பாடு இருந்து வருகிறது. முறுக்கு நூல் உற்பத்தி செய்ய ரூ.20 இலட்சம் செலவில் டபுளிங் நூல் மில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. மீண்டும் 90 நாட்கள் கைத்தறி நூலுக்குத் தள்ளுபடி நாட்களாகக் கொடுத்தது தமிழக அரசு தான். நெசவாளர்களுக்கு 2 தறிக்கூடம் உள்ள கான்கிரீட் வீடுகள் 2 ஆயிரம் வீடுகள் கட்டப்படும். 15 ஆயிரம் கைத்தறியாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர உள்ளோம். காப்பீட்டுத் தொகை ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. 58 வயதுடையவர்களும் காப்பீட்டுத் தொகை பெறலாம் என்ற சலுகை வழங்கப்பட்டுள்ளது'' என்று கூறினார்.

பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப., கைத்தறித் துறை இயக்குநர் திரு.எம்.இராமன், இ.ஆ.ப., சணல் ஆராய்ச்சித்துறை இயக்குநர் திரு.சப்தரிஷி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அ.கணேசமூர்த்தி, டாக்டர் டி.சாந்தகுமாரி, திரு.ஜி.ஜி.குருமூர்த்தி, பொன் விஜயராகவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். திரு.எஸ்.ஆர். ரங்கநாதன் நன்றி கூறினார்.

**எஸ். நாகராசன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**



# சிப்காட்டின் சீரிய பணிகள்

**தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறந்து விளங்கிட, அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது. 'மாதம் ஒரு தொழிற்சாலை' என்கிற நோக்கில் தமிழகம் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே வளர்ந்த, வளர்ந்து வரும் தொழிற்சாலைகளை அறிமுகப்படுத்தும் வகையில், 'சிப்காட்' என்னும் சிறுதொழில் முன்னேற்ற நிறுவனம் பற்றிய கட்டுரை இப்பகுதியில் இடம் பெறுகிறது.**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும், இம்மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் விரைந்து தொழில்மயமாக்குவதற்கு உதவியாகவும் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் பல தொடங்குவதற்குப் பல உதவிகளும் மற்றும் நிதி உதவிகளும் செய்வதே சிப்காட்டின் செயலாகும்.

இந்தியத் தொழில் வங்கியின் மறு நிதித் திட்டத்தின்கீழ் நடுத்தர மற்றும் பெருந்தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளித்தல்; தொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு ஊக்கத் திட்டங்களை நிறைவேற்றுதல்; தொழில் வளர்ச்சிக்கு உகந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து, பல அடிப்படை வசதிகளைச் செய்து, தொழிற்சாலைகள் தொடங்க மனைகளைக் குறைந்த விலையில் தொழில் முனைவோர்களுக்கு அளித்தல்; மற்றும் தொழில் முனைவோர்க்குத் தொழிற்சாலை அமைக்கத் தகுந்த ஆலோசனைகளும் துணைப் பணிகளையும் செய்தல் ஆகியவை, இந்நிறுவனத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் ஆகும்.

கடந்த 18 ஆண்டுகளில், 'சிப்காட்' தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப பல திட்டங்களைத் தமிழக அரசு மற்றும் இந்தியத் தொழில் வங்கியின் ஆதரவுடன் ஏற்படுத்திச் செயலாக்கி வருகிறது. 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தியத் தொழில் வங்கியின் மறு உதவித் திட்டத்தின்கீழ் 'சிப்காட்' மறு உதவி வாங்க அனுமதி அளிக்கபட்டது. இந்த உதவி சிப்காட்டின் தவணைக் கடன் உதவித் திட்டத்திற்கு ஒரு பெரிய ஊக்கம் அளித்தது.

சிப்காட்' தொடக்கத்திலிருந்து 1990 ஜூன் மாதம் வரை 710 தொழில் திட்டங்களுக்குமேல் ரூ. 312.82 கோடிக்குத் தவணைக்கடன் அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் அளித்துள்ள ரூ. 312.82 கோடியில் ரூ. 272.93 கோடி தவணைக் கடன்களாக வழங்கியுள்ளது.

தவணைக் கடன் திட்டத்தின்கீழ், 'சிப்காட்' புதிய தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலைகளின் விரிவாக்கும் திட்டம், நவீனமாக்கும் திட்டம், இயந்திரங்களை வாங்குவதற்கும் தவணைக் கடன் அளித்து வருகிறது. பொதுவாக, தொழிற்சாலைகள் குறிப்பாக துணிவகைத்தொழிற்சாலைகள் சிப்காட்டின் தொழில் நவீனமாக்கும் திட்டத்தின்கீழ் தவணைக் கடன் வாங்க பெருவாரியாக வரவேற்பு அளித்துள்ளார்கள். தவணைக் கடன் உதவி தவிர 'சிப்காட்' ஆரம்ப மூலதன நிதி உதவி இந்தியத் தொழில் வங்கியின் ஆரம்ப மூலதனத் திட்டத்தின்கீழ், புதிய தொழில் முனைவோர்களுக்கு அளித்தல் மற்றும் சில தகுந்த திட்டங்களின் பங்குகளில் பொது விநியோகத்திற்கு உத்தரவாதம் அளித்தல் போன்ற உதவிகளைச் செய்து வருகிறது. தொழிற்சாலைகளில் நலிவு பரவி வருவதைத் தடுத்து, மறுமலர்ச்சிக்கு உகந்த பல உதவிகளைச் செய்து கொடுப்பதற்காக 'சிப்காட்', நலிவு பெற்ற தொழிலகங்களின் மறுமலர்ச்சிக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அக்குழு மறுமலர்ச்சிக்கு ஏற்ப பல் உதவிகளையும், நிதி உதவியும் நலிவு பெற்ற தொழிலகங்களுக்கு அளித்து வந்து, இதுவரை 32 நலிவு பெற்ற தொழிற்சாலைகளை மறுமலர்ச்சி பெறச்செய்துள்ளது.

'சிப்காட்' தமிழக அரசின் வட்டியில்லாத விற்பனை வரிக் கடன்/விற்பனை வரி ஒதுக்கி வைத்தல், மாநில அரசின் மானியத் திட்டம் போன்ற பல ஊக்கத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

வட்டியில்லாத விற்பனை வரிக்கடன் திட்டத்தின்கீழ் 'சிப்காட்' இதுவரை (30.6.1990 முடிய) ரூ.70 கோடி கடன் அளிக்க ஒப்புதலும், ரூ.63.06

## முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி

ஏழை, எளிய மக்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இருதய அறுவைச் சிகிச்சைக்காக 1989-ஆம் ஆண்டிலிருந்து 31.8.90 வரை 117 பேருக்கு ரூ.5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்கென 1989-ஆம் ஆண்டிலிருந்து 31.8.90 வரை 27 பேருக்கு ரூ.1 இலட்சத்து 29 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கோடி வழங்கியும் உள்ளது. விற்பனை வரிக்கடன் ஒதுக்கி வைக்கும் திட்டத்தின்கீழ் ரூ.16.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளன. ரூ.15.69 கோடி மாநில மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

'சிப்காட்' மத்திய அரசால் அளிக்கப்பட்ட மத்திய மானியத் திட்டத்தைச் செயல்படுத்தி வந்தது. அத்திட்டம் 30.9.1988க்கு மேல் மத்திய அரசால் நீடிக்கப்படவில்லை. அத் திட்டத்தின்கீழ் 'சிப்காட்' வழங்கிய மானியத் தொகை ரூ.41.86 கோடியாகும்.

தொழிற்சாலைகளைப்பின் தங்கிய இடங்களில் ஏற்படுத்துவதே, இந்தத் தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முக்கிய பணியாகும். இந்நோக்கத்துடன் சிப்காட் பின் தங்கிய இடங்களில் வளர்ச்சிக்கு உகந்த இடங்களைத்தேர்ந்தெடுத்து அவைகளை மேம்பாடு செய்து, வேண்டிய ஊக்கத் தொகைகள் மற்றும் நிதி உதவிகளை அளித்து பின்தங்கிய இடங்களின் முன்னேற்றத்திற்கான திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

இந்தக் கொள்கை வெற்றி அடைந்துள்ளதை ஓசூர், இராணிப்பேட்டை, கும்முடிப்பூண்டி முதலிய இடங்களில் உள்ள தொழில் இணையங்களின் வளர்ச்சி குறிக்கிறது. பல மத்திய மற்றும் பெருந் தொழிற்சாலைகள் இந்த இணையங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள பெருந் தொழில் அதிபர்களும் இந்த இணையங்களில் தொழில் தொடங்க வந்துள்ளார்கள். தொழில் முனைவோர்கள் இந்த இணையங்களில் தொழில் தொடங்க, காட்டிய ஆர்வத்தினால் 'சிப்காட்' மேலும் பின்தங்கிய இடங்களான மானாமதுரை, புதுக்கோட்டை/ மேலும் தொழில் வளர்ச்சிக்கு உகந்த தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழில் இணையங்களைஅமைத்துள்ளது.

பெரும் இரசாயனம், பதப்படுத்தும் தொழில் களை அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கடலூர் தொழில் இணையம் வெற்றியடைந்துள்ளது. இதன் அடிப்படையில் 'சிப்காட்' தற்போது மின் அணுத் தொழிற்சாலைகள் அமைப்பதற்காக ஓசூர் இரண் டாவது இணையத்தை அமைப்பதற்கும், தோல் பொருள்சம்பந்தமான தொழிற்சாலைகளைத்தகுந்த இடத்தில் அமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

'சிப்காட்' தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டங்களைத் தேர்ந்தெடுக்க தேவை யான வசதிகளைச் செய்து வருகிறது. மேலும், 'சிப்காட்' தொழில் திட்டக் குறிப்பேடு தயாரிக் கவும், தொழில் சாத்தியமான திட்டங்கள் ஆய் வறிக்கையைத் தயாரித்துத்தரவும்உதவி செய்கிறது. தொழில் முனைவோர்களின் தொழில் உரிமங் களுக்கான மனுக்களைப் பரிசீலித்துப்பரிந்துரைத் தல் மேலும் தொழில் முனைவோர்கள் தொழில் துவங்குவதற்கு வேண்டிய உள்துறை நகராட்சி மற்றும் பஞ்சாயத்து அலுவலக அனுமதி, மாசுக் கட்டுப்பாட்டுத் துறையின் அனுமதி, சுகாதாரத் துறையின் (தொழிற்சாலைகள் சட்டப்படி) அனுமதி, உயர் மின் அனுமதி போன்ற பல அனுமதிகளை யும், ஊக்கத் தொகை, தவணைக் கடன் முதலிய நிதிஉதவிகளையும் பெற வழிகாட்டுதல் ஆகிய பணிகள் செய்வதற்காக ஒரு பிரத்தியேகக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர் நடுத்தர, பெருந்தொழில் களைத் திட்டமிடுகையில் ஏற்படும் பல பிரச்சினை களைத் தீர்ப்பதற்காக அரசு உடன்பணிமுடிப்பு அமைப்பு ஒன்று உள்ளது. அது தமிழகத் தொழில் துறையின் ஆணையர் மற்றும் செயலாளர் தலை மையில் தேவையானபொழுது, கூடிப் பிரச்சினைகளை விவாதித்து வேண்டிய உதவி களை உடனுக்குடன் செய்து வருகிறது.

அயல்நாடுகளில் உள்ள இந்தியர்களின் முத லீட்டை ஊக்குவிப்பதற்காக, சிப்காட்டில் ஒரு தனி அயல்நாட்டு இந்தியர்க்கான குழு அயல்நாட்டு இந்தியர்கள் தகுந்த தொழில் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் அவைகளைச் செவ்வனே நடத்துவதற்கும் உதவி செய்து வருகிறது. இக்குழு இதுவரை அமெரிக்க ஐரோப்பிய நாடுகள், மேற்கு ஆசிய நாடுகள் மற்றும் பல நாடுகளிலிருந் தும் 1,200-க்கு மேல் வந்துள்ள பொது விசாரணைகளைப் பரிசீலித்து வந்துள்ளது.

தொழில்துறையின் ஆணையாளர் மற்றும் செயலர் தலைமையில் உள்ள ஒரு குழு தமிழ் நாட்டில் அயல்நாட்டு இந்தியர்களின் முதலீட்டின் வளர்ச்சியைப் பரிசீலித்து வருகிறது. 56 தொழில் திட்டங்கள் மொத்த ரூ.88 கோடி செலவில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 20 அயல் நாட்டு இந்தியரின் தொழில் திட்டங்கள் சுமார் ரூ.70 கோடி செலவில் அமுலாக்கப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.





தெரிந்து கொள்ளுங்கள்

# சேலம் ஒரு பார்வை

தி. வெங்கடாசலம்,
உதவி ஆணையர் (பொறுப்பு),
மாவட்ட ஆவணக் காப்பகம்,
சேலம்.

**கி.பி.** 1860 முதல் சேலத்தைத் தலைநகராகக் கொண்டது சேலம் மாவட்டம். ''சேலம்'' என்றால் குன்றுகள் என்று பொருள். நாற்புறமும் குன்றுகளால் சூழப்பட்டிருப்பதால் குன்று சூழ் நகர் எனவும்படும். எனவே, சேலம் என்பது சிறப்புக் காரணப் பெயராகும். இவ்வூர் திருமணி முத்தாற்றங்கரையில் அமைந்துள்ளது. காவிரி இம்மாவட்டத்திற்கும் திருச்சி, பெரியார் மாவட்டங்களுக்கும்எல்லையாகப் பாய்ந்து ஓடுகிறது. இம் மாவட்டத்தில் மேட்டூர் அணை உள்ளது. ஏர்க்காடு சேலத்தின் மலைத்தலம்.

சேலம் என்றாலே அனைவரின் நினைவிற்கும் வருவது மாங்கனியாகும். சுவைமிகுந்த மாங்கனிகள் இம்மாவட்டத்தில் உற்பத்தியாகின்றன. நூல் மற்றும் பட்டு, கைத்தறித் துணிகள், இரும்பு பாக்சைட், ஜவ்வரிசி மற்ற முக்கிய உற்பத்திகளாகும். வில்லேந்தி வீரம் விளைவித்த வல்வில் ஓரி வாழ்ந்த பகுதி கொல்லி மலையாகும். தமிழகத்தின் முதலாவது அரசவைக் கவிஞர் திரு. இராமலிங்கனார் நாமக்கல்லைச் சேர்ந்தவர்.

சிக்கனந்தூரிலிருந்து கரிச்சிபாளையம் செல்லும் வழியில் காந்தி ஆசிரமம் உள்ளது. இவ்வாசிரமம் காந்தியடிகளின் கொள்கைகளைப் பரப்ப ஏற்பட்டதாகும். தொலைக்காட்சி ஒளிபரப்பு மையம் ஏர்க்காட்டில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் சராசரி 860 மி.மி. மழை பெய்கிறது. 10,96,952 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது. அதில் 3,79,769 ஏக்கர் நீர்பாயும் பரப்பாகும். காவிரிக்கரை ஊர்கள் ஜேடர்பாளையம் முதல் மோகனூர் வரை வளம் மிக்க பூமிகள்; இங்கு விளையும் வெற்றிலை தரம் மிக்கவை. 10 நாட்கள் வரை கெடாமலிருக்கும். பம்பாய்க்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றது. ஆத்தூர்ப் பகுதி வெற்றிலை சுமார் 3 நாட்கள் கெடாமலிருக்கும். இவை சென்னைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆத்தூர், கிச்சடி அரிசிக்குப் பெயர் பெற்றதாகும். பனமரத்துப்பட்டியில் மல்லிகை, ரோஜா உற்பத்தி அதிகம். இவ்வூர்ப் பூக்கள், வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. நாள் ஒன்றுக்கு 5,37,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ராசிபுரம் நெய் பெயர் பெற்றது. சந்தன மரம் நல்ல வருவாயைக் கொடுக்கிறது. சேலம் - நாமக்கல் சாலையில் பொய்மான் கரடு உள்ளது.

சேலம் இரும்பாலையில் எவர் சில்வர் தகடுகள் தயாரிக்கிறார்கள். தளவாய்ப்பட்டியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. கைத்தறி (பட்டு நூல்) தயாரிக்க 170 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ஜவ்வரிசி தயாரிக்க 500 சிறு நிறுவனங்கள் உள்ளன. பள்ளிப்பாளையத்தில் உள்ள சேசசாயி காகித ஆலை தமிழக உற்பத்தியில் 70 சதவிகித காகிதத்தைத் தயாரிக்கிறது. குமாரபாளையம் ஜமக்காள உற்பத்திக்குப் பெயர் பெற்றது. மோகனூரில் சர்க்கரை ஆலை உள்ளது. சங்ககிரியில் சிமெண்ட் ஆலை உள்ளது. மேட்டூரில் அனல் மற்றும் புனல் மின் திட்டங்கள் உள்ளன. அலுமினியம் முலாம் பூசும் தொழில் மற்றும் இரசாயனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு கிடைக்கும் கருங்கற்கள், ஜப்பான் நாட்டிற்கு அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன. இங்கு கிடைக்கும் மீன்கள் வங்காளத்துக்கு அனுப்பப்படுகின்றன.

தாரமங்கலத்தில் புகழ் பெற்ற கைலாசநாதர் ஆலயம் உள்ளது. இவ்வாலயத்திலுள்ள கற்சங்கிலி, கற்கிளிகள், யாளி வாயில் உருளும் கற்பந்து ஆகிய சிற்பங்கள் உயர்தரமானவை.




# மருத்துவ விந்தை





இருதயத்திலிருந்து அறுவைச் சிகிச்சை செய்து எடுக்கப்பட்ட பெரிய கட்டி.

டாக்டர் லலிதா அனந்தசுப்பிரமணியம்
மருத்துவக் கல்வித் துறை இயக்குநர், சென்னை

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னை அரசு பொது மருத்துவமனையில், இருதய மாற்று இரத்தக் குழல் அறுவைச் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த ஒரு கோடி ரூபாய் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து வழங்கினார். அதன் பயனாக, ஓர் இளம் பெண்ணின் இருதய மேல் அறையில் இருந்த 700 கிராம் எடையுள்ள கட்டி ஒன்று வெட்டி எடுக்கப்பட்டது. தமிழகத்தில் முதன் முறையாக இப்படிப்பட்ட அபூர்வ கட்டி, அதிசயிக்கத்தக்க வகையில் அகற்றப்பட்டது.**

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சென்னை அரசு பொது மருத்துவமனை இருதய மாற்று இரத்தக் குழல் அறுவைச் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த 1 கோடி ரூபாய் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து அளித்தார். அதன் பயனாக 35 வயதுடைய ஏழைப் பெண்மணியின் இருதய வலது மேல் அறையிலிருந்து ஓர் அபூர்வ கட்டி அதிசயிக்கத் தக்க வகையில் அகற்றப்பட்டது.

ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம், நாயுடுப்பேட்டையைச் சார்ந்த 35 வயதுடைய ராதா என்ற பெண்மணி, உடலின் மேற்பாகம் அனைத்தும் வீங்கி, மூச்சுவிடத் திணறிக் கொண்டு, சிகிச்சைக்காக 2.8.90 அன்று சென்னை அரசினர் பொது மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். நோய் கண்டறிய பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். நோயின் காரணம் தெளிவாகவில்லை. பின் அவர் மருத்துவ இயக்குநர் மற்றும் பேராசிரியர் டாக்டர். ஜி.அனந்தசுப்பிரமணியம் அவர்களிடம் சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். இவர் நோயாளியின் வலது மேல் அறையில் ஓர் கட்டி இருக்கக் கூடுமெனக் கூறினார். இதனைத் தெளிவாக்க சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், உடல் முழுவதும் கதிர் ஊடுருவி நோய் கண்டறியும் கருவியின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார். இந்த ஆய்வு மருத்துவப் பேராசிரியரின் கருத்தை உறுதிப்படுத்தியது.

இருதய அறுவைச் சிகிச்சைக் கூடம் மாற்றியமைப்பு நடந்து கொண்டிருக்கிறது. இதனால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து வாங்கிய கருவிகள் அனைத்தும் பொது அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்குக் கொண்டுவரச் செய்து, அறுவைச் சிகிச்சை தொடங்கப்பட்டது.

18.9.90 அன்று இருதய அறுவைச்சிகிச்சைத் துறைத் தலைவர் டாக்டர். எஸ். வாசுதேவன் அவர்கள் தலைமையிலும், மயக்க மருந்தளிக்கும் பேராசிரியர் எஸ்.கே.இராஜேந்திரன் அவர்கள் தலைமையிலும் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை தொடங்கப்பட்டது.

பேராசிரியர் டாக்டர் எஸ்.வாசுதேவனின் பெருமுயற்சியால் இரத்த

# அடவி நயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டம் மேக்கரை கிராமத்தில் அனுமான் நதியின் குறுக்கே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ரூ.37.69 கோடி செலவில் பொதுப் பணித்துறையினரால் அடவி நயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் அமைக்கப்படுகிறது.

வெள்ளக் காலங்களில் வெள்ளம் அனுமன் நதியின் குறுக்கே உள்ள 14 அணைக்கட்டுகளை யும், குளங்களையும் நிரப்பி சிற்றாற்றில் கலந்து வீணாகிறது. ஆகவே, இந்த இடத்தில் அடவி நயினார் நீர்த்தேக்கத் திட்டம் அவசியமானது என உணரப்பட்டு இத்திட்டத்தைச் செயலாக்க தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. 680 மீட்டர் நீளத்தில் 43.70 மீட்டர் உயரத்தில் 174 மி.கன அடி கொள்ளளவில் இவ்வணை கட்டப்படவுள்ளது.

பொதுமக்களின் நெடுநாளைய கோரிக்கை யினை ஏற்று இத்திட்டம் செயல்படும்பொழுது வடகரை கீழ்பிடாகை, தென்கரை கீழ்பிடாகை, பன்பொழி, இலத்தூர், அச்சம்புதூர், நெடுவயல், கொடிகுறிச்சி, நயினார் நகரம் ஆகிய 8 கிராமங்கள் மிகுந்த பயனை அடைய உள்ளன.

7.9.90 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இத்திட்டத்திற்கு கடையநல்லூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் அடிக்கல் நாட்டி னார்.

எஸ்.எம். பஷீர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

# மூளையின் செல் வளர்ப்பு

முதல் தடவையாக

மனித மூளையின் செல்களை, ஆய்வுக்கூடத்திலே வளர்த்து, விஞ் ஞானிகள் அபார சாதனை படைத் துள்ளனர். வலிப்பு நோய், 'ஆல் ஷைமர் நோய்' எனப்படும் மூப்புநோய் போன்ற நரம்பியல் கோளாறுகளைக் குணப்படுத்துவதற்கு இந்தப் புதிய சாதனை வழி வகுக்கும் என்று நம்பப் படுகிறது. இவ்வாறு மூளையின் செல் வளர்க்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

அமெரிக்க விஞ்ஞானிகள் புரிந் துள்ள இந்தச் சாதனை மனித மூளை பற்றிய ஆராய்ச்சியில் முக்கிய திருப்புமுனை ஆகும்.

''நாம் அறிந்தவரையில், இதுவரை யில் மூளையிலிருந்து 'நியூரான்களை' யாரும் வளர்த்ததே இல்லை. விலங்கு களின் மூளை செல்களே வளர்க்கப் பட்டதில்லை என்னும்போது, மனித மூளை செல் வளர்ப்பு பற்றிக் கேட் கவே வேண்டாம்'' என்று அந்தத் துறையின் இயக்குநரான டாக்டர் சாலமன் சிண்டர் தெரிவித்தார்.

மனித உடலின் முக்கிய நரம்பு மண்டலமான தண்டுவடம், மூளை ஆகியவற்றின் செல்கள் 'நியூரான்கள்' என்று அழைக்கப்படுகின்றன. உடலின் இதர பகுதிகள் எப்படி இயங்க வேண்டும் என்று கட்டளையிடும் இரசாயனச் செய்திகளைப் பரிமாற்றம் செய்து கொள்வது இந்த நியூரான்கள் தாம். எடுத்துக்காட்டாகத் தசைகளின் சுருக்கத்தையும் விரிவையும் கட்டுப் படுத்துபவை ''மோட்டார் நியூரான்கள்'' எனப்படும் செல்களேயாகும். நியூ ரான்கள் உடலின் இதர செல்களி னின்றும் வேறுபட்டவை. அவை பிரிக் கப்பட முடியாதவை.

சுழற்சி இருதய நுரையீரல் தானி யங்கி கருவிக்கு மாற்றப்பட்டது. இருதயக் கட்டியினால் இதைப் பொது வான முறைப்படி அமைக்க முடிய வில்லை. அறுவைச் சிகிச்சை தொட ருமா என்ற நிலையை மாற்றி மிகுந்த எச்சரிக்கையுடன் பல மருத்துவர் களின் உதவியுடன் அறுவைச் சிகிச்சை நடந்தது.

இருதய வலது மேலறையில் சுமார் 700 கிராம் எடையுள்ள கட்டி வலது மேலறையின் பெரும் பகுதியுடன் தொடர்பு கொண்டிருந் தது. இதை வெட்டி எடுக்க வேண் டியதாயிற்று.

சிதைந்து போன இருதய வலது மேலறை மீண்டும் இருதய மேலு றைத் திசுக்களைக் கொண்டு சரி செய்யப்பட்டது. இரத்த சுழற்சி மீண்டும் இருதயத்திற்கு மாற்றப் பட்டது. அறுவைச் சிகிச்சை சிறப் பாக முடிந்து, நோயாளி விரைவாக முன்னேறி வருகிறார்.

இருதயத்திலிருந்து வெட்டி எடுக் கப்பட்ட கட்டியை ஆய்வுக்கு உட் படுத்தியதில், அக்கட்டி ஓர் பயங்கர மான புற்று நோய்க் கட்டி என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நோயா ளிக்கு மருத்துவச் சிகிச்சை அளித்து வரும் பேராசிரியர் டாக்டர் ஜி. அனந்தசுப்பிரமணியம் அவர்கள் நோயாளிக்குத் தீவிரமாகப் புற்று நோய்ச் சிகிச்சையும் அளிக்கப்படும் என கூறியுள்ளார்.

இந்த அற்புத உயிர்க் காப்பு நிகழ்ச்சியின் முக்கிய காரணமாக விளங்குபவர், நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதில் ஐய மில்லை.

தமிழக முதல்வரின் முற் போக்குத் திட்டங்களுக்கு இது ஓர் மகத்தான வெற்றியாகும். மருத்து வர்களும், தமிழக மக்களும், ஏழை எளிய மக்கள் பயன் பெறும் திட்டங் களை ஏற்படுத்தியமைக்கு, நம் முதல் வருக்குத் தங்கள் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறார்கள்.

நான்காம் அட்டை சொல்லும் செய்தி




சென்னை

# உயர்நீதி மன்றக் கட்டடம் உருவான வரலாறு

சென்னை உயர்நீதி மன்றம் முதன்முதலில் துறைமுகத்திற்கு எதிரேயுள்ள ஓர் பழங்கட்டடத்தில் 1862-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி முதல் தொடங்கப்பட்டது. அப்போது தலைமை நீதிபதியாக இருந்தவர் சர்.வால்டர் ஹார்மன் ஸ்காட்லண்ட் என்ற ஆங்கிலேயர். இதற்குப் பின்பு, சுமார் 30 ஆண்டுகள் கழித்து ''பாரீஸ் கார்னர்'' என்ற ழைக்கும் இடத்திற்கு 1892-ஆம் ஆண்டு ஜூலை 12-இல் புதுக்கட்ட டத்திற்குப் புதுமனை புகுந்தது.

சமீபத்தில் சென்னை ஹைகோர்ட் தனது 125-வது ஆண்டினை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது வர லாற்றுச்சிறப்பு மிக்கது! அழகும் அற் புதமுமானசிவப்புச் செங்கற்களால் மிகுந்த வேலைப்பாடுகளுடன் கூடிய இக்கட்டடத்தைக் கட்டியவர் அந் நாளில் பிரபல கட்டடப் பொறி யாளரான திவான் பகதூர், ''தாட்டி கொண்ட'' நம்பெருமாள் செட்டி ஆவார்.

ஆரிய வைஸ்ய மரபில் பிறந்த நம்பெருமாள் செட்டி அந்நாளில்



'கட்டட மேதை'
திவான் பகதூர் தாட்டி கொண்ட நம்பெருமாள் செட்டி

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டமும், சமஸ்கிருதத்தில் பட்டமும் பெற்றவர். பொறியியல் கட்டிடக் கலையில் நிபுணரான இவர் அக்காலத்தில் புகழ்மிக்க கட்ட டங்களைக் கட்டியது இன்றும் அவரது புகழுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன சென்னையிலுள்ள

## ரகமி

''இந்தியன் தேசீய வங்கிக் கட்டடம்''; ''ஜார்ஜ் டவுன் கிறிஸ்துவ இளைஞர் கழகக் கட்டடம், (ஒய்.எம்.சி.ஏ.)- 'எழும்பூர் விக்டோரியா நுண்கலைக் கழகக் கட்டடம்'', ''ஜெனரல் போஸ்டாபீஸ்''; ''மெட்ராஸ் மியூ சியம்''; ''நேஷனல் ஆர்ட் காலரி'', ''ஜெனரல் ஆஸ்பத்திரியின் ஓர் பகுதி'' எர்ணாகுளத்தில் உள்ள மகாராஜா காலேஜ் முதலியன. தென்னிந்தியாவிலேயே முதன் முதலாக, திருச்சூர் தேக்கு மரவாள் பட்டறை ஆலையைத் தோற்றுவித்த பெருமை இவருக்கே உண்டு.

இக்கட்டடங்களில் பெரும்பாலும் வலுவான சிவப்பு நிற செங்கற்

களால் கட்டப்பட்டுள்ளதை எளிதில் அடையாளம் காணலாம். கட்டடப் பூச்சுக்குத் தேவையான சுண்ணாம்புக் காறையில் கடுக்காய்ப் பொடி, முட்டையின் வெள்ளைக் கரு, வெல்லத் தண்ணீர் இவைகளைப் பதமோடு கலந்து அவைகளைச் சன்னமாக கல் உரலில் அரைத்து, சாந்து தயாரானதும், அதில் வேப்பெண்ணெய் கசண்ட்டும், இலுப்ப எண்ணெய் கசண்ட்டும் சிறிதளவு சேர்த்து மூடிவைப்பர். இப்படிப்பட்ட சாந்துவைக் கொண்டும் செங்கற்களைப் பூசுவதனால் உறுதியாக இருக்கும் இவைகள் எத்தனை காலங்களானாலும் பூச்சிகள் சந்துக்களில் அடைய விடுவதில்லையாம்.

நம்பெருமாள் செட்டி எந்த ஒரு கட்டடத்தைக் கட்டுவதானாலும், 'மனை அடி சாஸ்திரம்' நீரோட்டம் கவனித்து அங்கு அதற்கான பூஜைகளைச் செய்த பின்பு, முதலில் வைத்துக் கட்டும் ஓர் சிவப்பு செங்கல்லைத் தன் தாயாரிடம் கொடுத்து அவரை வணங்கி ஆசி பெற்ற பின்பே அதனைக் கொண்டு 'கால் கோள்' வேலையைத் தொடங்குவாராம். நம்பெருமாள் செட்டி அந்நாளிலேயே நூற்றுக்கணக்கான கொத்தனாரைக்கொண்டு சுமார் மூன்றாண்டுகளில் கட்டிமுடித்தாராம். வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் சென்னையில் இவர் கட்டிய கட்டடங்களைக் கண்டு பிரமித்துப் பாராட்டாதவர்களே இல்லை எனலாம்.

நம்பெருமாள் செட்டி புதுக் கட்டடங்கள் கட்டுவதில் மட்டும் திறமைசாலியானவரல்ல. பழைய கட்டடங்கள் எதுவாயினும் அதன் சுவர்கள், மற்றும் அதிலுள்ள மரச்



சென்னை எழும்பூரிலுள்ள தேசிய கலைக்கூடம்

சாமான்களைத் தட்டிப்பார்த்து அக் கட்டடம் எப்போது கட்டப்பட்டது? அதன் ஆயுள் எவ்வளவு? என்பதை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறுவதிலும் அபாரத் திறமைசாலியாகத் திகழ்ந்தாராம்.

மிகுந்த பரோபகாரமான குணமுள்ள நம்பெருமாள் செட்டி, உலகப் புகழ் 'கணித மேதை ராமானுஜன்' உடல் நலமின்றி லண்டனிலிருந்து சென்னை திரும்பியதும் அவரையும் அவரது குடும்பத்தினரையும் தனது சேத்துப்பட்டு ஹாரிங்டன் சாலையிலுள்ள பங்களாக்களில் தங்கச்செய்து ஆதரித்தவர்.

மதராஸ் போர்ட் டிரஸ்ட் அந்நாளைய சேர்மன் ஸர்.பிரான்சிஸ் ஸ்பிரிங் இவரிடம் கட்டட விஷயமாக கலந்தாலோசிப்பார் என்றால், இது நமது நம்பெருமாள் செட்டியின் கட்டடத் திறமைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்! இவருக்கு திவான் பகதூர் பட்டம் 1923 நவம்பரில் அப்போது சென்னையில் கலெக்டராக இருந்த ஏ.ஆர்.காக்ஸ் ஐ.சி.எஸ். என்பவரால் வழங்கப்பட்டது. இது பற்றி பிரபல ஆங்கில நாளேடான ''இந்து''விலும் செய்தி பிரசுரமாகியுள்ளது.

திவான்பகதூர் தாட்டிகொண்ட நம்பெருமாள் செட்டியின் பொதுஞானம், சேவை உணர்ச்சி, திறமையைப் பயன்படுத்தும் வகையில், சென்னையில் முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட சென்னைச் சட்டசபையில் (Legislative Council) அரசினர் அவரை நியமனம் செய்தனர். தவிர பாரத அரசு வங்கியில் ஓர் இயக்குநராகவும் இருந்த முதல் இந்தியர் இவரே!

'கட்டட மேதை' புகழ்கொண்ட 'தாட்டிகொண்ட' நம்பெருமாள் செட்டி 1925-ஆம் ஆண்டு தமது 70-ஆம் வயதில் காலமானார். இவரது குடும்பத்தினர் சென்னையில் வாழ்ந்து வருகின்றனர்.

**மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.**

**— தந்தை பெரியார்**



## தமிழ்நாடு மின்சார வாரியம்
## மேட்டூர் அனல்மின்திட்டம், மேட்டூர் அணை - 1.

1.0) கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண் | ஒப்பந்த பிரதியின் விலை | வைப்புத்தொகை | ஒப்பந்தபுள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி தேதியும் நேரமும், | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் தேதியும் நேரமும். | ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நரிமணம் எரிவாயு மின் நிலையம் கட்டுமான தளத்தைச் சீர்படுத்துதல். (Site grading work in Narimanam Gas Turbine Project in Thanjavur District.) | SEC.II.MTPP 2265 of 1990-91 | தமிழ்நாட்டிற்கு மட்டும், ரூ.300/- வெளிமாநிலங்களுக்கு ரூ.330/- | ரூ.17,500/- | 14.11.'90 நண்பகல் 12.00 மணி (புதன்கிழமை) | 14.11.'90 பிற்பகல் 3.30 மணி (புதன்கிழமை) | ரூ.17,41,300/- |
| 2. | நரிமணம் எரிவாயு மின் நிலையம் முதல் தளத்தில் நிர்வாகப் பிரிவுடன் கூடிய கட்டுப்பாட்டு அறை அடித்தளத்திற்கு மேல் கட்டுதல் | SEC.II/MTPP 2266 of 1990-91. | தமிழ்நாட்டிற்குமட்டும் ரூ.300/- வெளிமாநிலங்களுக்கு ரூ.330/- | ரூ.17,800/- | 21.11.'90 நண்பகல் 12.00 மணி (புதன்கிழமை) | 21.11.'90 பிற்பகல் 3.30 மணி (புதன்கிழமை) | ரூ.17,73,830/- |
| 3. | நரிமணம் எரிவாயு மின் நிலையம்-எரிவாயு அழுத்தி நிலையம் கட்டுதல் (Gas Compressor Station)தளம் அமைத்தல் (Paving) கம்பி வடம் அகழி (Cable Trenches) அமைத்தல், குழாய் அடுக்கு (Pipe Racks) அமைத்தல் பணிமனை (Workshop) நுழைவாயில் கட்டடம் (Gate houses)கட்டுதல் போன்ற இதர வேலைகள். | SEC.II/MTPP 2267 of 1990-91 | தமிழ்நாட்டிற்கு மட்டும் ரூ.300/- வெளிமாநிலங்களுக்கு ரூ.330/- | ரூ.16,700/- | 28.11.'90 நண்பகல் 12.00 மணி (புதன்கிழமை) | 28.11.'90 பிற்பகல் 3.30 மணி (புதன்கிழமை) | ரூ.16,69,900/- |

2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினைப் பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணைக் குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer)

மேட்டூர் அனல்மின்திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்குச் செலுத்திப்பெறப்பட்ட வாரிய இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாகப் பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத்தொகையின்றிப் பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் நுண்கலை உதவியாளர் (Executive Assistant to Superintending Engineer/Civil.II/Mettur Thermal Power Project) அவர்களால் பெறப்படும், ஒப்பந்தங்கள் Russian Erectors' Quarters-இல் திறக்கப்படும்.

3.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப் பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது கால தாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

4.0) ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.

5.0) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

6.0) ஒப்பந்தப் பிரதிகள் 25.10.'90 முதல் விற்பனைக்குக் கிடைக்கும்.

7.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்வதற்கு மின்வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை எனக் கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தகுதி பெற்ற மின்சார வாரிய அலுவலருக்கு உண்டு.

8.0) ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை, ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் நாளின் முதல் நாள் மாலை 5.00 மணிக்கு நிறுத்தப்படும்.

தலைமைப் பொறியாளர்
மேட்டூர் அனல்மின் திட்டம்.

DIPR/293/SLM/90/MCS







# உலகு போற்றும் தமிழகச் சிற்பக் கலை!

மண்ணும் மரமும், கல்லும் காகிதமும் மனிதனின் கைவண்ணத்தால், பல்வேறு உருவங்களை அடைகின்றன.

மானாக, மயிலாக, மனங்கவர் கலை நுணுக்கப் பொருள்களாக அவை வடிவம் பெறுகின்றன.

திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வச் சிலைகளாகவும் அவை உருவாகின்றன; குறிப்பாக, இத்தகைய சிலைகளுக்கு உலோகங்களே பெரிதும் உதவுகின்றன.

அதோ.... அந்த இடத்திலிருந்து சிற்றுளியால் சிலை செதுக்கும் ஒலி காற்றில் மெல்ல மிதந்து வருகிறது. ஒலி வரும் திசை நோக்கிச் செல்கிறோம்.

சிலை செய்யும் சிற்பிகள் தம் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம்.

சிற்றுளிகளின் ஓசை கவிதைகளில் வரும் ஓசை நயம் போலவே இருக்கின்றது.

அந்தச் சிற்றுளிகள் சொல்லும் கதை, சிந்தைக்கு விருந்தூட்டுவனவாகும்.

பாரம்பரிய மிக்க சிற்பக் கலைக்கு உறைவிடமாகத் தமிழகம் விளங்குகின்றது. உலகில் பண்டைய தமிழகச் சிற்பக் கலை, தலைசிறந்த நாகரிகச் சின்னங்களாகப் போற்றப்பட்டு வருகின்றது.

பல கலைகளை உலகிற்கு அளித்த மாவட்டமான தஞ்சையில் உள்ள சுவாமிமலை உலோகச் சிற்பக் கலைக்குத் தாயகமாக விளங்குகின்றது.

உலகில் நாகரிகங்கள் வளர்ந்தது நதியின் கரையில்தான் என்பது வரலாற்று உண்மை. அதைப்போல, சிற்பக் கலையும் காவிரிக் கரையிலே வளர்ந்து வந்திருக்கிறது என்பதும் வரலாற்று உண்மையாகும்.

இந்திய மண்ணில், பாராம்பரிய, உலோகச் சிற்பக்கலை வளர்ந்து வருவது, சுவாமிமலையில்தான் என்பது வெள்ளிடை மலையாகும்!

இத்திருத்தலத்தில்தான், 40 குடும்பங்கள் பாரம்பரியச் சிற்பிகளாக இன்றளவும் இக்கலையை வளர்த்து வருகின்றனர்.

புகழ்பெற்ற இந்தச் சிற்பக் கலைக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, இன்று இந்திய அளவிலே தேசிய விருது பெற்று, சிற்பக் கலைஞராக விளங்கிவரும் திரு எஸ். தேவசேனாபதி ஸ்தபதி அவர்களைச் சந்திக்கிறோம்....

தெய்வச் சிலைகளை வடிக்கும் கலையை தனது தந்தை ஸ்ரீகண்ட ஸ்தபதியிடமிருந்தும், தனது தந்தையின் சகோதரர் அண்ணாசாமி ஸ்தபதியிடமிருந்தும் இளவயதிலேயே இவர் கற்றார். சிற்பம் மற்றும் ஆலயங்கள் அமைப்பது பற்றிய விதிமுறைகளைக் கூறும் ''காஸ்யபசில்ப சாஸ்திரம்'', ''அகஸ்த்ய ஸகலாதிகாரம்'', ''மானஸாரம்'', ''சில்பரத்தினம்'', ஆகிய நாட்டிய முத்திரைகள் விவரிக்கும் நந்திகேஸ்வரரின் ''அபிநய தர்ப்பணம்'' முதலான நூல்களை இவர் கற்றுத் தேர்ந்தார்.

இவரது கைத்திறமையை உள்நாட்டவர் மட்டுமல்ல, வெளிநாட்டவரும் பார்த்து வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இவர் தம் முன்னோர்களை நினைவுகூர்ந்தபோது, கூறியதாவது:

''செங்கியிலிருந்து தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவதற்காக ராஜராஜ சோழனால் அழைத்து வரப்பட்ட ஸ்தபதிகள், தஞ்சைப் பெரியகோவிலின் திருப்பணியை முடித்தபின், 25 கல் தொலைவில் உள்ள, தாராசுரம் கோவிலைக் கட்டுவதற்காக அங்கு சென்றனர். அங்கு அத்திருப்பணி முடிந்ததும் காவிரி வடகரையில் 2½ கல் தொலைவில் உள்ள சுவாமிமலைத் திருக்கோவில் திருப்பணியில் ஈடுபட்டார்கள். பிறகு அவர்கள் அங்கேயே தங்கி விட்டார்களாம்.

''சோழர் காலத்தில் சிற்பிகள் மிகவும் போற்றிப் பாராட்டப்பட்டதாகவும், மன்னர்கள் சிற்பிகளுக்கு மானியம் கொடுத்துச் சிறப்பித்ததாகவும் பல கல்வெட்டுகள் கூறுகின்றன. இன்று விடுதலைக்குப் பின் இந்தச் சிற்பக்கலையை மத்திய, மாநில அரசுகள் ஊக்கம் கொடுத்து வளர்த்து வருகின்றன என்றால் அது மிகையல்ல. குறிப்பாக,



சிலை செதுக்கும் பணியில் திரு தேவசேனாபதி ஸ்தபதி.

மத்திய அரசு அகில இந்தியக் கைவினைப் பொருள்கள் மேம்பாட்டு வாரியம் மூலமாக, சிற்பக் கலைஞர்களுக்கு பல முன்னேற்றத் திட்டங்களை வகுத்து, அவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகின்றார்கள். இந்த வாரியம் பெரிய நகரங்களில் சந்தையை ஏற்படுத்தி, அதற்குண்டான செலவுகளையும் ஏற்றுக் கொள்கின்றது. மேலும், திறமைமிக்க சிற்பிகளுக்கு, குடியரசுத் தலைவர் விருதினையும் வழங்கிச் சிறப்பிக்கின்றது.

தமிழக அரசு 'பூம்புகார்' கைவினைப் பொருள்கள் அங்காடி மூலமாக, கொள்முதல் குழு ஒன்றை ஏற்படுத்தி - சிற்பிகளால் வடிக்கப்பட்ட சிற்பங்கள், இடைத்தரகர் இடையூறின்றி, நேரடிக் கொள்முதல் செய்து - விற்பனை செய்து வருகின்றது. இத்திட்டத்தினால், பல சிற்பிகள் பயன்பெற்று வருகின்றார்கள்.''

சிற்பக் கலைஞர் திரு தேவசேனாபதி ஸ்தபதி அவர்களின் திறமையைப் பாராட்டி தமிழக அரசு, தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் மேம்பாட்டுக் கழக (பூம்புகார்) இயக்குநராக நியமித்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மனுநீதிச் சோழன் ரதத்துடன் உள்ள அழகிய சிலையை இவர் வடித்துத் தந்துள்ளார். இதற்காக, இவர் திறமையைப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1974-இல் மோதிரம் அணிவித்துச் சிறப்பித்தார்.

1984-ஆம் ஆண்டுக்கான தேசிய விருதினை இவர் 1986-இல் அந்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஜெயில்சிங் அவர்களிடம் பெற்றார். இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களிடமிருந்து விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் நூற்றாண்டு விழா விருதினையும் இவர் 1988-இல் பெற்றார்.

சிற்பக்கலைத் துறையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இவர், இதுவரை ஆயிரம் ஆலயங்களுக்கு மேல், சோழர்காலப் பாணியில் சிலைகள் வடித்துக் கொடுத்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

பிரான்ஸ் நாட்டிற்காக, இயேசு கிறிஸ்துவின் சிலைகளை இவர் வடித்துத் தந்துள்ளார். அதனைப்பாராட்டி, அந்நாடு இவருக்கு 'டிப்ளமோ' வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இவர் கைவண்ணத்தைக் காட்டும் கலையெழில் மிக்க சிற்பங்கள் பலப்பல. அவற்றுள் சில - வேலூர் ஜலகண்டேசுவரர் கோவிலில் உள்ள நடராஜர், சிவகாமி சிலைகள்: கங்கை அருங்காட்சியகத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற ரிஷப தேவர், அம்மன் சிலைகளின் மாதிரி வடிவங்கள்; இராமேசுவரம் கோவில் பிச்சாடணர் சிலை; பாண்டிச்சேரி மனக்குள விநாயகர் சிலை; திருச்சி உறையூர் வெக்காளியம்மன் சிலை, புதுடில்லி ஜனகபுரி இராஜ இராஜேசுவரி கோவில் சிலை;

பாரத மாதா சிலைகள்: ஞானரத முருகன் சிலை; நந்தனம் வீட்டு வசதி வாரியக் கட்டடத்தின் முகப்பில் உள்ள 6 அடி உயரமுள்ள நடராசர் சிலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாது சிறப்பாக, வெளிநாடுகளுக்கும் இவர் சிலைகளைச் செய்து தந்துள்ளார். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இலண்டன் முருகன் கோவில் உற்சவர் சிலையும், இலண்டன் லெட்சுமி நாராயணன் கோவில் உற்சவச் சிலையும், இலண்டன் லீவர் பிரதர்ஸ் நிறுவனம் தலைமை அலுவலகத்திற்காக 6 அடி உயரமுள்ள நடராசர் சிலையும், மொரீசியஸ் சொரீ யூனியன், இந்து கோவிலுக்காக அனுப்பப்பட்ட முருகன் சிலையும், அமெரிக்கா, வாஷிங்டன் லெட்சுமி நாராயணன் கோவிலுக்கு அனுப்பிய நடராசர் மற்றும் சிலைகளும், சிங்கப்பூர் வீரமா காளியம்மன் கோவிலுக்கு 4 அடி உயரமுள்ள துர்க்கைச் சிலையும், சிங்கப்பூர் சீனிவாசப் பெருமாள் கோவில் மற்றும் வடபத்திரக் காளியம்மன் கோவில்களுக்கும், மலேசியா படை வெற்றி மாரியம்மன் கோவில், கோலாலம்பூர் ஸ்ரீசக்திவேல் முருகன் கோவில், பிரான்ஸ் நாட்டில் இந்துக்களால் கட்டப்படும் முருகன் கோவில் ஆகியவற்றுக்கான சிலைகளும் குறிப்பிடத் தக்கவை.

தற்போது இவர், அமெரிக்காவிலுள்ள ஹவாய் இந்து தேவாலயத்திற்கு நடராசரின் 108 திருத்தாண்டவச் சிலைகளை



தேசிய விருது பெற்ற,
பஞ்சலோகத்தாலான
மகேஸ்வரி சிலை

உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமன்று, ஆள் உயர மணி ஒன்றையும் அண்மையில் சிங்கப்பூருக்கு அனுப்பியுள்ளார்.

சிலை எவ்வாறு உருவாக்கப்படுகிறது?

முதலில் மெழுகில் சிலை வடிவமைக்கப்படுகிறது. அதன் அளவு உத்தம தச தாளம், மத்திம தச தாளம்- இதுபோன்ற பல தாள பிரமானங்களில் சிற்ப சாஸ்திரப்படி, சிலையின் அளவுகள் தென்னை ஓலையால் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. அதன்படி அளவுகள் வைத்து முகம், மார்பு, கால் அமைத்து மெழுகில் வடிக்கப்படுகிறது. பிறகு ஆற்று வண்டல் மண்ணை அதன்மேல் பூசி 'கரு' (மோல்டு) தயார் செய்யப்படுகிறது. பின்னர் அதனை வெயிலில் காயவைத்து, வறட்டி விறகுகளால் சூடேற்றப்படுகிறது. அப்பொழுது மெழுகு வெளியேற்றப்படுகிறது. பின்பு செம்பு, பித்தளை, ஈயம் ஆகிய உலோகத்தை முறையே 82,15,3 சதவிகிதம் என்ற சதவிகிதத்தில் உருக்கி 'வார்ப்படம்' செய்யப்படுகிறது. அதன் பிறகு பூசிய மண்ணை உடைத்து எடுக்கப்படுகிறது. இப்போது மெழுகில் வடித்த உருவமானது உலோகத்தில் கிடைக்கிறது. அதாவது, உலோகச் சிலை தயார்! இந்த நிலைக்குப் பிறகுதான், அந்தச் சிலைக்கு நிறைய வேலை இருக்கிறது. அதாவது, செதுக்குதல், நகாசு வேலைப்பாடுகள் முதலானவை உள்ளன. பிறகுதான் சிலைகளுக்கு மெருகேற்றப்படுகின்றது. சிலைகள் பழங்காலத்தவை போலக் காட்சியளிக்க, அதற்கேற்றவாறு வண்ணம் பூசப்படுகிறது.

கவிஞன் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் கற்பனை கவிதையாக வெளிப்படுவது போல, ஒரு சிற்பக் கலைஞன் உள்ளத்தில் தோன்றும் கற்பனைகள் சிலைக்குக் கருவாக, உருவாகின்றன.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் கலையெழில் மிக்க அந்தச் சிற்பங்கள், காலத்தைக் காட்டும் கண்ணாடியாக மட்டுமல்ல, காலமெல்லாம் கதை சொல்லும் கருப் பொருளாகவும் திகழ்கின்றன.

அந்தக் கலை, தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் விரல்களிலே கொஞ்சி விளையாடுகின்றது. வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டமாக அந்தச் சிற்பக் கலைஞர்கள் விளங்குகிறார்கள்.

ஆலயங்களிலே, கலைக்கூடங்களிலே, எழில்மிகு மாடமாளிகைகளிலே, கூட கோபுரங்களிலே அவர்களது கைவண்ணம் மிளிர்கிறது.

அந்த வகையில், திரு தேவசேனாபதி ஸ்தபதி அவர்கள் மட்டுமல்ல, அவரது மூன்று மகன்களும், மூன்று சகோதரர்களும் சிற்பக்கலைத் துறையிலே முழுமையாக ஈடுபட்டுள்ளார்கள் என்பதைக் கேள்விப்படும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இவரது மகன்கள் திரு ராதாகிருஷ்ண ஸ்தபதி, கட்டடக் கலையை முறையாகப் பயின்றவர்; திரு ஸ்ரீகண்ட ஸ்தபதி, பி.காம் பட்டதாரி; மூன்றாமவர் திரு சுவாமிநாத ஸ்தபதி ஆகிய மூவருமே தம் தந்தைக்கு உதவியாக மட்டுமல்ல, அந்தப் பரம்பரைத் தொழிலுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இவரது குடும்பமே ஒரு சிற்பக் கலைக் குடும்பமாக விளங்கி வருகிறது என்பது பெருமைப்படத்தக்க செய்தியாகும்.

—பேட்டி: பி.வி.கிரி

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஐ.கே.குஜ்ரால் முதலான பல இந்தியத் தலைவர்களோடும் ஆப்பிரிக்காவின் தற்போதைய நிலைமைகள் குறித்து நெல்சன் மண்டேலா பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திரா காந்தி அரங்கில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலும் அவர் பங்கேற்றார்.

மறுநாள் (16.10.90) பிர்லா மாளிகையில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திற்குச் சென்று மரியாதை செலுத்தினார். மரக்கன்று நட்டார். ராஜ்காட்டில் உள்ள அண்ணல் காந்தி சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்தார். பத்திரிகையாளர்களைச் சந்தித்து மனம் திறந்து பேசினார்; அதன்பிறகு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் அளித்த மரியாதை ரீதியிலான விருந்தில் கலந்து கொண்ட தியாகதீபம் மண்டேலா- பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகளையும் இங்குள்ள ஆப்பிரிக்க நிறுவனங்களின் தலைவர்களையும் கண்டு மகிழ்வோடு உரையாடினார்.

### பாரத ரத்னா மண்டேலா

இந்திய நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது, நமது குடியரசுத் தலைவர் அவர்கள் மாளிகையில் நடந்த விருந்து ஒன்றில் விடுதலை வீரர் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டது- மேதகு இந்தியக்குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் இவ்விருது, வெளிநாட்டுத்தலைவர் ஒருவருக்கு வழங்கப்படுவது இது இரண்டாவது முறை; இவ்விருது இதற்குமுன் (எல்லைக் காந்தி) கான் அப்துல் கபார்கானுக்கு அளிக்கப்பட்டது!

தென்னாப்பிரிக்க அரசு கடைப்பிடித்துவரும் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக இந்திய மக்களிடையே பிரச்சாரம் செய்து தென்னாப்பிரிக்க நாட்டுக் கறுப்பின மக்களுக்கு ஆதரவு திரட்டிய அமைப்புகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட- நிறவெறி நீக்கத்திற்கான நடவடிக்கைக் குழுவும் விடுதலை வீரர் மண்டேலாவுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டன.

''தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கல் ஒழிக்கப்பட்டு, பெரும்பான்மை மக்களின் ஆட்சி ஏற்படுத்தப்படும் வரை அந்த நாட்டின் சிறுபான்மை அரசின் மீது சர்வதேச நாடுகளின் நிர்பந்தம் நீடிக்க வேண்டும். இந்த வகையில், தென்னாப்பிரிக்கா மீது சர்வதேச நாடுகளின் பொருளாதாரத் தடை நீடிக்க வேண்டும் என ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் எடுத்துள்ள நிலையை இந்தியா ஆதரிக்கிறது'' என்று தாம் அளித்த விருந்தின்போது, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தெரிவித்தார்.

'பாரத ரத்னா' விருது முதலாக- பனாரஸ் பல்கலைக் கழகத்தில் கௌரவ விருதும், கல்கத்தாவில் பஜாஜ் விருதும் பெற்ற நெல்சன் மண்டேலா- ''என்னுடைய அகிம்சை அரசியல் எண்ணத்தை முதன் முதலாக 1894-ஆம் ஆண்டு, தென்னாப்பிரிக்காவில்தான் மகாத்மா காந்தி துவக்கினார் என்பதால், அப்போது முதற்கொண்டே அவர்மீது எங்களுக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டுவிட்டது. வரலாறு, அதன் பின்னணி ஆகியவற்றைப் பார்க்கும் போது இந்தியா ஒரு பாரம்பரியம் மிக்க நாடென்பது தெளிவு. அப்படிப்பட்ட இந்த நாட்டைப் பார்க்க நீண்ட நாட்களாகவே ஆவலோடிருந்தேன்; இந்தியாவிற்கும் தென் ஆப்பிரிக்காவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு; இருநாட்டு மக்களுக்கும் பலவிதங்களில் நெருக்கம் இருக்கிறது''... என்றெல்லாம் குறிப்பிட்டார்.

இந்தியாவில்- மண்டல்கமிஷன் பரிந்துரைகளை அமலாக்க மாண்புமிகு பிரதமர் வி.பி.சிங் அவர்கள் எடுத்துள்ள முயற்சிகளையும் போற்றிப் பாராட்டினார். அதுபற்றி அவர் பேசுகையில் ''துணிச்சலான செயல் இது. ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடிவரும் எங்கள் நெஞ்சத்தில் இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங்கின் இந்தச் செயல் நிலைபெற்றுவிட்டது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த அவர் எடுத்துள்ள நடவடிக்கை தென்னாப்பிரிக்க மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இது குறித்த பிரதமரின் நடவடிக்கைகளைத் தென்னாப்பிரிக்க மக்கள் ஆர்வத்தோடு கவனித்து வருகிறார்கள். இந்திய அரசின் முடிவு இன ஒதுக்கலையும் நிறவெறி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் அனைவரது இதயங்களிலும் உடன்பாடான உணர்வைத் தூண்டியுள்ளது. இதை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம்!'' என்று அகமகிழ்வோடும் அழுத்தந் திருத்தமாகவும் குறிப்பிட்டார்.

—பி.எல். ராஜேந்திரன்

## புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க ஆப்பிள் சாப்பிடுங்கள்!



புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை ஆப்பிள் பழம் மிகவும் குறைத்து விடுகிறது என்று அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஆப்பிள், ஸ்ட்ராபெர்ரி ஆகிய பழவகைகளில் இயற்கையாகவே ஒருவித அமிலம் சுரக்கிறது. இது 'எல்லஜிக் அமிலம்' (Ellegic Acid) என்று அழைக்கப்படுகிறது. விலங்குகள் மற்றும் மனிதர்களின் உடலில் சில இராசாயனப் பொருட்களினால் புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயத்தை, இந்த இயற்கை அமிலம் வெகுவாகக் குன்றத்து விடுவதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



★ பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.

★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

—தந்தை பெரியார்

## பெரியார் மாவட்டத்தில்

## தீவிர சுகாதாரத் திட்டப் பணிகள்



குறைந்த செலவிலான நவீன கழிப்பிடம்

**த**மிழகத்திலேயே ''தீவிர சுகாதாரத் திட்டம்'' பெரியார் மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அனைத்து வீடுகளிலும் குறைந்த செலவிலான நவீன கழிப்பிடம் அமைப்பதாகும். இக் கழிப்பிடம் அமைப்பதால் கிராமத்தின் சுற்றுப்புறச் சுகாதாரம் நல்ல முறையில் அமையப்பெறுவதால், மனிதக் கழிவுகள் மூலம் பரவும், காலரா, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் தடுக்கப்படுகின்றன. அநாகரிக முறையில் திறந்த வெளியில் பாதுகாப்பின்றி கழிப்பது தவிர்க்கப்படுகின்றது. மேற்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1988-89 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் மத்திய, மாநில அரசுகள் மற்றும் 'யுனிசெப்' நிறுவன உதவியுடன், கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் ரூ.611.3 இலட்ச மதிப்பீட்டில் முதல் கட்டமாக 35,000 குறைந்த செலவிலான சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. பிறகு இத்திட்டம் பள்ளிகள், சத்துணவு மையங்கள் ஆகியவைகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இதுவரை 13,125 வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டுக்கு 10,000 கழிப்பிடங்கள் ஒவ்வொன்றும் ரூ.1600 மதிப்பீட்டில் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது.

பெரியார் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.1.60 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சிறப்பு அம்சமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆதிதிராவிடர் வாழும் ஒரு கிராமத்தினை எடுத்துக் கொண்டு, அங்குள்ள அனைத்து குடும்பங்களுக்கும் கழிப்பிடங்களின் அவசியத்தை எடுத்து, விளக்கி அவர்களையும் இத்திட்டத்தில் ஈடுபடுத்தி,

**தமிழ்நாட்டிலேயே, 'தீவிர சுகாதாரத் திட்டம்' பெரியார் மாவட்டத்தில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதை விளக்குகிறது இக் கட்டுரை.**

அவர்கள் அனைவருக்கும் வீட்டுக்கு ஒரு கழிப்பிடம் அமைத்துக் கொடுக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

ஒரு கழிப்பிடம் அமைக்க அரசு மானியம் ரூ.1,280 கொடுக்கின்றது. மீதமுள்ள ரூ.320 கழிப்பிடம் கட்டிக் கொள்பவரின் பங்குத் தொகையாகிறது. இத்திட்டத்தில் முதன்முதலாக அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதுப்பாளையத்தில் குடியிருக்கும் அனைத்து ஆதிதிராவிட மக்களுக்கும் கழிப்பிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதே போல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள 300 குடும்பங்களுக்கு ''சக்தி சர்க்கரை ஆலை'', ''அரிமா சங்கம்'' போன்றோர் உதவியுடன் தனியார் வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தைச் சீரிய முறையில் செயல்படுத்தவும், மக்களிடம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும், பல்வேறு நிலைகளில் பயிற்சிகள் ஏற்படுத்தி விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை சிறப்போடு செயல்படுத்திட 1,303 அலுவலர்களுக்கும், 368 பெண்களுக்கும், 87 ஆதிதிராவிடர்களுக்கும், 289 ஒன்றியம், பேரூராட்சி மற்றும் ஊராட்சி உறுப்பினர்களுக்கும், 1,280 பொதுமக்களுக்கும், 428 கொத்தனார்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தினை, பெரியார் மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் செயல்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வி.கே. சுப்புராஜ் இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பெரியார் மாவட்டம்.




# தங்கப்பதக்கம் வென்ற சிறுநீரக நோயியல் துறை



இந்தியச் சிறுநீரகயியல் துறைக் கழக, தென்மண்டலக் குழுவின் பத்தாம் ஆண்டு மாநாடு இவ்வாண்டு அக்டோபர்த் திங்கள் 13,14-ஆம் தேதிகளில் கோவை மாநகரில் நடந்தேறியது. தமிழகம், ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகத்தைச் சேர்ந்த பல்வேறு மருத்துவ நிலையங்கள் அங்கம் வகிக்கும் இத்தென்மண்டலக்குழு ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வோரிடத்தில் கூடுவது வழக்கம். அதுசமயம் தென் மாநிலங்கள் நான்கிலும் உள்ள சிறுநீரக மருத்துவத் துறை நிபுணர்கள் ஒருங்கே கூடி இத்துறை சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், சிறுநீரக மருத்துவத்துறையின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு நடத்துவர். இத்துறை சம்பந்தமான புதிய கண்டுபிடிப்புக்கள், சிறுநீரகநோய்க்கண்டுபிடிப்பில் சில புதிய எளிய வழிகள், மருத்துவ சிகிச்சை முறையில் சில முன்னேற்றமடைந்த மாறுதல்கள் ஆகியவை குறித்து தென்மண்டலக் குழுவின் மாநில மாநாட்டின்போது விவாதிக்கப்படும். அதுபோது இத்துறையைச் சேர்ந்த நிபுணர்கள் தங்களது அயரா உழைப்பின் காரணமாக, தாங்கள் கண்டறிந்த சில விஷயங்களை-தங்களது சொந்தப் படைப்புகளாம ஆய்வுக்கட்டுரைகளைச் (Original Papers) சமர்ப்பிப்பார்கள். இவற்றுள் மிகச் சிறந்ததெனக் கருதப்படும் படைப்பினுக்குத் தங்கப் பதக்கம் வழங்கிச் சிறப்பளிக்கும் திட்டம் 1989 முதல் வழக்கத்தில் உள்ளது.

இவ்வாண்டு (1990) நடைபெற்ற மாநாட்டில், சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து பங்கு பெற்ற, பேராசிரியர் டாக்டர் முத்து சேதிபதியின் மாணாக்கரும்-டாக்டருமான டாக்டர். பத்மநாபன் மற்றும் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் சமர்ப்பித்த படைப்பு மிகச் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு- அதற்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. பேராசிரியர் டாக்டர் முத்துசேதுபதியின் தலைமையின் கீழ் பணிபுரியும் இச்சிறுநீரகத் துறை 1989-ஆம் ஆண்டும் தங்கப் பதக்கம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை மருத்துவக் கல்லூரியின் சிறுநீரகயியல் துறை கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், மருத்துவத் துறை மற்றும் சிறுநீரக மாற்றறுவைச் சிகிச்சை தொடர்பாக சுமார் 10 ஆராய்ச்சிப் படைப்புகளை வெளியிட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இத்துறையைச் சேர்ந்த மருத்துவர்கள் பல அரிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளனர். அவற்றுள் சில- 'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) எனப்படும் நுண்கிருமியால் வரக்கூடிய சிறுநீரகச் செயலிழப்பு (Renal failure), தாமிர சல்பேட்டு (Copper Sulphate) நச்சுத்தன்மையால் ஏற்படும் சிறுநீரகச் செயலிழப்பு, வயிற்றுப் போக்கினால் வரக்கூடிய சிறுநீரகச் செயலிழப்பு (Acute diarrhoeal disease) போன்றவை. இவை குறித்த ஆராய்ச்சிப் படைப்புக்கள் இந்திய அளவிலன்றி உலக நாடுகள் அளவிலும் குறிப்பிட்டுச் சொல்லும்படி இடம்பெற்றுள்ளன. உலக நாடுகளின் மருத்துவக் கழகம் (W.H.O) 'லெப்டோஸ்பைரோஸிஸ்' நோய் சம்பந்தப்பட்ட அகில உலக ஆராய்ச்சிப் பட்டியலில் பேராசிரியர் டாக்டர் முத்துசேதுபதி மற்றும் சக மருத்துவரின் பெயர்களைப் பதிந்து வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

ஆக இத்துறையைச் சார்ந்த மருத்துவர்கள் இரண்டு முறையும் தங்கப்பதக்கம் வென்றது சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மட்டுமின்றி தமிழகத்திற்கே பெருமை சேர்க்கும் சாதனையில் ஒன்றெனக் கருதலாம்.



**புத்தகங்கள் ஞானப் பெட்டகத்தைத் திறக்கும் சாவிகள். இன்பப் பூங்காக்களில் புகும் நுழைவாயில்கள். உங்களை உயிர்த்துவிக்கும் வழிகள்; நம் நண்பர்கள். வாருங்கள் படிப்போம்.**

**—அமிலிபெளல்சன்**

**சில புத்தகங்களை ருசிபார்க்க வேண்டும். சிலவற்றை மெல்லாமல் விழுங்கிவிட வேண்டும். சிலவற்றை நன்றாய் கவைத்து மென்று விழுங்கிச் செரிக்கச் செய்ய வேண்டும்.**

**—பேகன்**

**ஒரு புத்தகம் எழுத நூல் நிலையத்தில் உள்ள நூல்கள் அனைத்துக்கும் மேல் படிக்க வேண்டும்.**

**—ஜான்சன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926 [illegible]





16-11-1990 ரூ.





## இந்த இதழில்...


உடுமலைப்பேட்டையில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ... 2

பாவேந்தரின் மொழியுணர்ச்சி
—*மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன்* ... 4

சென்னையில் மழைவெள்ளம்: பாதிக்கப்பட்டோருக்கு அரசு உதவி ... 8

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
—*மாண்புமிகு முதல்வர் கலைஞர்* ... 9

பதிவுத்துறை அமைப்பும் பணிகளும்
—*மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன்* ... 12

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
—*மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு* ... 15

காஞ்சியில் முப்பெரும் விழா ... 17

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு ... 20

கூட்டுறவு ஒரு கலங்கரை விளக்கு ... 23

இதயத்தை வென்றவர்!
—*அறிஞர் அண்ணா* ... 24

கீழ் பவானி பாசன மேம்பாட்டுத் திட்டம் ... 26

இராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 33

தீரர் மருதிருவருக்குத் திருப்பத்தூரில் நினைவகம்
—*எஸ்.எஸ். தென்னரசு எம்.எல்.ஏ.* ... 34

நீலகிரியில் நிவாரணப் பணிகள் ... 41



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஐப்பசித் திங்கள் - 30

மலர்: 21 இதழ்: 10

16-11-1990


*சென்னை கிண்டி நேரு சாலைச் சந்திப்பில் உள்ள பண்டித நேரு திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்தார்கள். (14.11.90)*



# சென்னையில் மழை வெள்ளம்
## பாதிக்கப்பட்டோருக்கு அரசு உதவி



சென்னை மாநகரம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்தமையால் குடிசை வாசிகளின் அன்றாட வாழ்க்கையும், சாலைப் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட குடிசை வாசிகளையெல்லாம் அரசும், மாநகராட்சியும் ஆங்காங்குப் பள்ளிகள், கல்யாண மண்டபங்கள் முதலான இடங்களில் பாதுகாப்பாகத் தங்க வைத்து அவர்களுக்கு உணவு வழங்கின.

முதல்வர் கலைஞர் அவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். சுவர் இடிந்து விழுந்ததில் உயிர் இழந்தவர்கள் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.27 ஆயிரம் நிதியுதவி வழங்கினார்கள்.

அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஆங்காங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் தேவையான உடனடி நிவாரணப் பணிகளுக்கும் ஆவன செய்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் தலா 5 கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டது. வேட்டி புடவைகளும் கொடுக்கப்பட்டன.

நியாய விலையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வந்த 12 கிலோ அரிசி வெள்ளப்பாதிப்பையொட்டி 20 கிலோவாக உயர்த்தப் பட்டது.

மாநகரெங்கும் பாதிக்கப்பட்ட சாலைகளெல்லாம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் பட்டுச் செப்பனிடப்பட்டு வருகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ.500 வீதமும், வெள்ளம் தேங்கிய குடிசைகளுக்கு தலா ரூ.250 வீதமும் என ரூ.2 கோடி செலவில் குடிசை வாழ் மக்களுக்கு உதவிகள் வழங்கிட முதல்வர் கலைஞர் அவர்கள் உத்திர விட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில், அண்மையில் பத்து நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்து பெரு மழை பெய்தது. ஆறு ஏழு நாட்கள் அடை மழையாக இருந்தது.







# பாவேந்தரின் மொழியுணர்ச்சி


மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்
டாக்டர் மு. தமிழ்க்குடிமகன்


ரசூல் கம்சுதாவ் எனும் உருசிய நாட்டுக் கவிஞனின் தாய்மொழி அவார். அம்மொழியின் மீது அளவு கடந்த காதல் கொண்டவன் அவன். அவன் குறிப்பிட்டான்:

'என்னுடைய அவார் மொழி நாளைக்கு அழிந்துவிடும் என்ற நிலை ஏற்படுமானால், நான் இன்றைக்கே அழிந்து விடுவேன்!' என்று.

அயர்லாந்து நாட்டு விடுதலை வீரனான டிவேலராவுக்கும் இக்கட்டானதொரு சூழல் நேர்ந்தது. மொழியைப் பேசினால் சிறையில் அடைப்போம் என்று ஆட்சியாளர் மிரட்டினர். அந்த நிலையிலும் —

'If I am asked to choose between the language without freedom and freedom without language, I shall certainly choose the former' என்றான்.

'மொழி பேச முடியாத வெட்டி விடுதலையை விட என் மொழியைப் பேச வாய்ப்பளிக்கும் சிறைவாழ்வே மேல்' என்றான்.

மொழியுணர்ச்சியில், இவர்களையெல்லாம் விஞ்சியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழின் தொன்மை உலகத்தாரால் இன்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதை பாரதிதாசன் குறிப்பிடும்போது,

"திங்களொடும் செழும்பரிதி
தன்னோடும், விண்ணோடும்,
உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம்!"

என்கிறார். இயற்கைப் பொருள்கள் இயங்கத் தொடங்கியபோதே தமிழ் மக்கள் மொழியாகி விட்டது எனும் பெருமிதம் இங்கே தொனிக்கிறது.

தமிழின் தன்மையை, ஆற்றலைப் பாவேந்தரை விட வேறு யார் அழகாகச் சொல்லிவிடமுடியும்?

தண்ணொளி தரும் நிலவாக, சமூகத்தின் விளைவுக்கு நீராக, கமழும் மணமாக, வாழ்வுக்கு நாம் நிறுவிய ஊராக, மயக்கும் மதுவாக, உரிமைச் செம்பயிருக்கு வேராகத் தமிழ் திகழ்கின்றது.

இளமைக்குப் பாலாக, புகழ்மிக்க புலவர்க்கு வேலாக, நம் உயர்வுக்கு வானாக, நம் அயர்வினைப் போக்கும் புத்துணர்ச்சி தரும் தேனாக, அறிவுக்குத் தோளாக, விளங்குவது தமிழ் என்று பாவேந்தர் எப்படியெல்லாம் தமிழின் ஆற்றலைப் புகழ்கின்றார்?

போனால் வாராதது உயிர். எனினும் உயிரினும் மேலானதொன்றுமில்லை எனும் உலகியல் உண்மையை மனத்திற்கொன்டுதான் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் வள்ளுவர். பாவேந்தர் இந்தக் கோட்பாட்டில் மிகவும் அழுந்தி நிற்கிறார்.

'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்'

என்று மார்தட்டுகிறார்.

'தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லும்
தரமுண்டு தமிழுக்கு இப்புவி மேலே'

என்கிறார்.

கனியின் சுளையும், கழையின் சாறும், பனிமலர்த் தேனும், காய்ச்சிய பாகின் சுவையும் ஆவின் பாலும், தெங்கின் இளநீரும் இனியன என்பேன், எனினும் தமிழே என்னுயிர் என்பேன் என்றார்.

சோறு, கறி, மிளகின் சாறு, கிழங்கு வகை, தின்பண்டங்கள் எல்லாம் தமிழா! உன்னை வளர்ப்பன எனினும், உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே என்கின்றார்.

தமிழை உயிராகப் போற்றும் பாவேந்தரின் மொழியுணர்ச்சியை யார் குறைத்து மதிப்பிட முடியும்?

தமிழை உயிராகக் கருதியதால்தான் தமிழுக்காக உயிரையும் தரக்கூடிய உணர்ச்சியைப் பாவேந்தர் புலப்படுத்துகிறார்.

'செந்தமிழே உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!

என்று கூறிவிட்டு,

செந்தமிழ்க்கே தீமை வந்த பின்னும்-இந்தத்
தேகம் இருந்தொரு லாப முண்டோ!'

என்று கொதிக்கும் போது தமிழின் வாழ்வுக்காக எதையும் இழக்க முன்வரும் அவரது மொழிப் பற்றை, மொழியுணர்ச்சியைத்தான் காண முடிகிறது.

'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று கூறுகிறார். தமிழுக்குப் பகையாவாரை வீழ்த்துவதில் எதிர்த்துப் போரிடுவதில் பாவேந்தர் காட்டும் வேகம் எல்லையற்றது;

தமிழின் இனிமையைப் பாவேந்தர் அருமை யாகப் புலப்படுத்துகிறார். தென்றல் புறஇன்பம் அளித்தால், தமிழ் அக இன்பம் அளிப்பது என்கிறார்.

'இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்
கின்பம் தரும்படி வாய்த்தநல் லமுது'

என்று கூறி மகிழ்கிறார்.

சாதி மதங்கடந்து கலப்புமணம், காதல்மணம், விதவை மறுமணம் எல்லாம் செய்ய வேண்டு மென்று வற்புறுத்தினாலும், மனைவி தமிழ் அறிந்தவளாக இருக்கவேண்டுமாம்;

'அழகும் இன்பமும் தழையக் கிடப்பினும்
பழகு தமிழறியாப் பாவை தமிழருக்கு
உயிரில்லா உடலன்றோ?'

எத்தனையோபேர் தமிழ் தரும் இன்பத்தைக் கூட வெகுவாகப் பாராட்டித்தான் உள்ளனர்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'
என்பாரும் உண்டு.

ஆனால் உலகோர் அனைவரும் ஒப்புக் கொள்ளும் பெண்ணின்பத்தைக் கூடப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் தமிழின்பத்துக்காகத் தவிப்பார் பாவேந்தர்.

மங்கை ஒருத்திதரும் சுகமும் - எம்
மாந்தமிழ்க் கீடில்லை கண்டீர்'

எனும் வரிகளின் அழுத்தத்தை எந்தக் கவிஞனும் விஞ்ச முடியாது.

அத்தகைய தமிழுக்குத் தொண்டு



செய்வதுதான் முழுவாழ்வு எனக்கருதுபவர் பாவேந்தர்.

'தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் - துடித்தெழுந்தே'

'தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம் நல்ல தொண்டு'

என்று கூறுவதோடு,

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்றும் அடித்துக் கூறுகிறார். சாகாத பாரதியை மேற்கோள் காட்டுகிறார்.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதில் அசைக்க முடியாத அழுத்தம் படைத்தவர் பாவேந்தர்.

கோயிலில் தமிழில் வழிபாடு, நீதிமன்றத்தில் தமிழில் முறையீடு, உயர்கல்வியில் தமிழில் உரைப் பாடு, அலுவலகத்தில் ஆட்சிமொழியாகத் தமிழின் செயற்பாடு ஆகியவற்றை வற்புறுத்தும் வகையில் தான் அவரது 'தமிழியக்கம்' தோன்றுகிறது.

தமிழுணர்ச்சியென்பது தனிமனித உணர்வாக, முக்கல் முனகலாக அவருக்குள்ளேயே எழுந்து அழிந்து விடாமல் இவ்வுணர்ச்சி, இயக்கமாக உருப்பெறவேண்டும் என்று கருதியவர் பாவேந்தர்.

பலரும் இந்த உணர்ச்சியின்றித் செயலாற்று கின்றனரே என்று அவர் அடைகின்ற வருத்தம் பெரியது.

கரும்புதந்த தீஞ்சாறே,
கனிதந்த நறுஞ்சுளையே
கவின்செய் முல்லை

அரும்புதந்த வெண்ணகையே
அணிதந்த செந்தமிழே
அன்பே, கட்டி

இரும்புதந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை
ஈட ழித்து

வரும்புதுமை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சொல்ல
வாய்ப தைக்கும்.'

தமிழ் வாழ்வுதான் தன் வாழ்வு; தமிழுக்கு ஏதாவது நேர்ந்தால் தனக்கும் வாழ்வில்லை என்று தெளிவு படுத்துபவர்,

''நைந்தா யெனில் நைந்து போகும் என்வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!''

என்று நெஞ்சுருகக் கூறுகிறார்.

எழுத்தில், பேச்சில், அலுவலக மடல் பரி மாற்றத்தில், பெயரில், விளம்பரத்தில் தமிழ் கோலோச்ச வேண்டும் எனும் தணியாத வேட்கை அவர்க்குண்டு.

''வாணிகர், தம் முகவரியை
வரைகின்ற பலகையில், ஆங்
கிலமா வேண்டும்?

மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்!''

என்று சொல்லிவிட்டு அதற்கான எடுத்துக் காட்டுகள் சிலவற்றையும் தருகிறார்.

''அறிவிப்புப் பலகையெல்லாம்
அருந்தமிழ்ச்சொல் ஆக்குவதே
அன்றி, அச்சொல்

குறைவற்ற தொடராகக்
குற்றமற்ற சொல்லாக
அமையு மாயின்

மறுவற்றுத் திகழாளோ
செந்தமிழ்த்தாய்? தமிழ்மக்கள்
மகிழ்ந்தி டாரோ?

குறியுற்ற மறவர்களே?
இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்.''

என்று அழைக்கின்றார்.

நல்ல தமிழில் எழுத முன் வாராத சுவடிக்குக் கடும் எச்சரிக்கை விடுகின்றார்.

'தமிழ்தழுவாச் சுவடியினைத்
தணல்தழுவா திராதினிமேல்
தமிழ்நா டெங்கும்'

என்று கொஞ்சம் கடுமையாகவே கூறுகிறார்.

'தமிழ்கல்வி தமிழ்நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம்'

செய்ய வேண்டும் என்கிறார்.

''அரசினரின் மொழியாக,
அரசியலார் மொழியாக,
அரசியல் சார்

வரிசையுறு சட்டமன்றின்
மொழியாக, வையம்அறி
மொழிய தாகத்



திருமலிந்ததமிழ் மொழிதான்
ஆகும்வகை நம்புலவர்
சேர்ந்து தொண்டு

புரிக என வேண்டுகின்றோம்
பொழிக என வேண்டுகின்றோம்
பொன்ம ழைதான்!''

''காற்செருப்பைப் பிறனொருவன்
கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறாத உள்ளம்,

மேற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத் தீயோர்

போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கிவைத்தால்
பொறுப்ப துண்டோ?''

என்று வேகம் காட்டித் தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுத்தே ஆகவேண்டும் என்று வாதிடுகின்றார்.

எழுத்தாளர்கள் செய்யும் தவற்றை இவரைப் போல் யாரும் படம் பிடித்ததில்லை.

''ஆங்கிலத்தில் புலவரெனில்
அரசினரின் அலுவலிலே
அமர்ந்தி ருப்பார்!

பாங்குறு செந் தமிழ்ப்புலமை
படைத்தாரேல் பள்ளியிலே
அமர்ந்தி ருப்பார்!

தீங்குற்ற இசைப்புலமை
சிறிதிருந்தால் படத்தொழிலில்
சேர்ந்தி ருப்பார்!

ஈங்கிவற்றில் ஏதுமிலார்
தமிழினிலே ஏடெழுதிப்
பிழைக்க வந்தார்.''

இவ்வளவு சொல்லியும் தமிழுக்கு ஆக்கம் விளையவில்லையெனில் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்பதுதான் பாவேந்தரின் அணுகுமுறை. அதனால் தான் அவர் புரட்சிக் கவிஞரானார்!

''கடல்போலும் எழுக! கடல்
முழக்கம்போல் கழறிடுக!
தமிழ்வாழ் கென்று?
கெடல்எங்கே தமிழின்நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

விழிப்போரே நிலைகாண்பார்!
விதைப்போரே அறுத்திடுவார்
களைகாண்டோறும்

அழிப்போரே அறஞ்செய்வார்
அறிந்தோரே உயர்ந்திடுவார்!
ஆதல் ஆர்வம்

செழிப்போரே இளைஞர்களே,
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுக! நம் தாய்

மொழிப்போரே வேண்டுவது
தொடக்கஞ்செய் வீர்வெல்வீர்!
மொழிப்போர் வெல்க!''

தமிழின் இனிமையை உணர்ந்து, அதன் வாழ்வோடு தன் வாழ்வையும் இணைத்துக் கொண்டு, தமிழுக்குத் தொண்டு செய்து, தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் தமிழ் மேலோங்கி நிற்கவேண்டும் என்ற செயல்திட்டம் வகுத்து, அதைச் செயல்படுத்தக் கிளர்ச்சி செய்யவும் தயங்காத பாவேந்தர், அதனால் சிறைபுக நேர்ந்தாலும்

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'

என்று நெஞ்சு நிமிர்த்தி நடைபோடும் பாவேந்தர்.

இந்தப் பாவேந்தர்க்கு நூற்றாண்டுவிழா. இவரது சமூக சீர்திருத்தப் படைப்புகள், காதல் பாடல்கள், வருணனைக் கவிதைகள் அனைத்துக்கும் ஊடகமாக, உள்ளொளியாக நிற்பது பாவேந்தரின் மொழியுணர்ச்சிதான். அந்த உணர்ச்சியை நாம் அனைவரும் பெற்றுத் தமிழுக்கு ஏற்றம் விளைவிப்போமாக!

***24.10.1990 அன்று, சென்னை வானொலியில் ஆற்றிய உரை***



மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள், சென்னையில் குழந்தை எழுத்தாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவிற்குத் தலைமை தாங்கி, குழந்தை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். (11.11.1990)



# அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
## முதல்வர் கலைஞர் உரை

"தொழில் வளர வேண்டுமென்பதிலே அக்கறை எடுத்துக்கொண்டுள்ள இந்த அரசு தொழிலை வளர்ப்பதற்காகத் தமிழகத்திலே பின்தங்கிய பகுதிகள் என்று 105 பகுதிகளை அறிவித்தது. ஏற்கனவே மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திலும் பின்தங்கிய பகுதியை அறிவித்து, அதற்கான நிதியுதவியை அளித்து, தொழில் வளரச் செய்து வந்த நிலை இடைக்காலத்திலே மாறிவிட்ட காரணத்தால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன், 105 பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து, அங்கெல்லாம் தொழில் துறையிலே முன்னேற்றம் காண்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன் வந்தது. அந்த 105 பகுதிகளில் மேலும் ஒரு பகுதியாகப் பல்லடத்தைச் சேர்க்க வேண்டும், அதைப் பின்தங்கிய பகுதியாக ஆக்க வேண்டும் என்று அமைச்சர் கண்ணப்பன் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எடுத்துச் சொன்னார் என்றாலும்கூட, அவருடைய கூற்றில் நியாயம் இருக்கிறதென்பதை அறிந்த நான், பல்லடத்தைத் தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிய பகுதி என்று அறிவித்துவிட்டு அதற்கான கோப்பில்கையெழுத்திட்டுவிட்டு இங்கே வந்திருக்கிறேன் என்பதை இப்பொழுதுதான் அமைச்சர் கண்ணப்பனுக்கு இந்தக் கூட்டத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு காலகட்டத்தில் ஐநூறு கோடி ரூபாய் தமிழக அரசின் பட்ஜெட் தொகையாக இருந்தது. பிறகு அது ஆயிரம் கோடி ரூபாயாக வளர்ந்தது. இன்றைய தினம் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை-பட்ஜெட் சமர்ப்பிக்கிறோம் என்றால் அது ஏறத்தாழ நாலாயிரம் கோடி ரூபாயிலிருந்து ஐயாயிரம் கோடி ரூபாய் வரையில் வளர்ந்திருக்கிறது. அப்படி வளர்ந்துள்ள சூழ்நிலையில் ஏன் விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான இலவச மின்சாரம் என்ற கோரிக்கையை நிறைவேற்றக் கூடாதென்ற கேள்வி என்னை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அந்த நாள் முதல் குடைந்து கொண்டே இருந்தது. அதுபற்றி அதிகாரிகள் மட்டத்தில் நான் பேசுகிற நேரத்திலும், பொருளாதார நிபுணர்கள் மட்டத்திலே பேசுகிற நேரத்திலும், தொழில் வல்லுநர்களிடத்தில் நான் பேசுகிற நேரத்திலும் எனக்கு வேறுபாடான கருத்துக்கள், முரண்டபாடான கருத்துக்கள் எடுத்துச் சொல்லப் பட்டன.

எழுபத்தி ஐந்து ரூபாய் என்றிருந்த அந்தக் கட்டணத்தை ஐம்பது ரூபாயாகக் குறைத்து இது ஒரு கட்டம் என்று அறிவித்து, இனிமேல் பம்பு செட் மின் இணைப்புகளுக்குக்கட்டணமே கிடையாதென்று அறிவித்திருக்கிறோம். இந்த பம்புசெட்டுக்கான கட்டணத்தை விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் இரு பகுதிகளாகப் பிரித்து ஆகஸ்ட் மாதத்தில் ஒரு பகுதி கட்டுகிறார்கள். இன்னொரு பகுதியை பிப்ரவரி மாதத்திலே கட்டுகிறார்கள். ஆகஸ்ட் மாதத்திற்குக்கட்ட வேண்டிய பணத்தைக் கட்டி விட்டவர்கள் செப்டம்பர், அக்டோபருக்குக் கூட கட்டத் தேவையில்லை. நான் அறிவித்த நாளிலிருந்து மாத்திரமல்ல, அதற்கு முன்பு இரண்டு மாதங்களுக்கு முன் தேதியிட்டே கூட அவர்கள் கட்ட வேண்டிய கட்டணத்தைக் கட்ட வேண்டிய அவசியமில்லை என்று நான் அறிவித்திருக்கின்றேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, தேசிய முன்னணி அரசு அமையுமேயானால் பத்தாயிரம் ரூபாய் வரையிலே அவர்கள் வாங்கியுள்ள கூட்டுறவுக்கடன், வங்கிக் கடன் பதினைந்தாயிரம் ரூபாய் வாங்கியிருந்தால்கூட அதில் பத்தாயிரம் ரூபாய் வரையில், ஆறாயிரம் ஏழாயிரம் வாங்கியிருந்தால் முழுமையாக என்று தேசிய முன்னணி கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த உறுதி மொழியை நினைவில் கொண்டு பத்தாயிரம் ரூபாய் வரையிலே விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்யலாமென்று மாநிலங்களுக்குத் தாக்கீது பிறப்பிக்கப்பட்டது. அதிலும் இன்றைக்கு இந்தியாவிலே இந்த பத்தாயிரம் ரூபாய் வங்கிக் கடன், கூட்டுறவுக் கடன் இரண்டு கடனையும் தள்ளுபடி செய்து அதற்காக ஐநூறு கோடி ரூபாய் இழப்பை இன்றைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையில் முதல் மாநிலமாக இந்தியாவில் இருக்கிற மாநிலம் தமிழ்நாடு தான்- இந்த ஆட்சிதான் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்வேன்.

ஒரு நாட்டிலே வாழ்கின்ற குடிமக்களுடைய மிக முக்கியமான தேவை - அத்தியாவசியத் தேவை உணவு, உடை, உறையுள். அந்த உறையுள் ஏழைகளுக்குக் கிடைக்கவில்லை. கடந்தகால தி.மு.க. ஆட்சியில்-இந்தியாவிலேயே முதன்முதலாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகின்ற திட்ட த்தை அறிவித்த ஆட்சியும் தி.மு.கழக ஆட்சிதா ன- ஒரு நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் வீடுகளைக்கட்டத் தொடங்கி அவைகள் முற்றுப் பெற்ற அந்த காலக்கட்டத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த முயற்சி தொடரவில்லை. தொடர்ந்தது, அங்கொன்றும் இங்கொன்றுமாக! ஓட்டு வீடுகளாக! நாங்கள் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்ற பிறகு இப்பொழுது அந்த வீடுகள் எல்லாம்

கான்கிரீட் வீடுகளாக இலவசமாகக்கட்டித்தரப்பட வேண்டுமென்று அறிவித்து இந்த மாவட்டத்தில் மாத்திரம் இன்றைக்கு ஒரு ஐநூறு தொகுப்பு வீடுகளைத்திறந்து வைக்கிற நிகழ்ச்சி இந்த விழா விலே இணைக்கப்பட்டிருப்பதை நீங்கள் காணு கின்றீர்கள்.

தமிழ்நாடு முழுவதும், இன்றைய தினம் பல் லாயிரக்கணக்கான வீடுகள் ஆதிதிராவிட மக் களுக்கு கான்கிரீட் வீடுகள் நாற்பத்தி ஐந்தாயிரம் வீடுகள் இதுவரையிலே இந்த இருபது மாத காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த பத் தாண்டுக் காலத்தில் எவ்வளவு என்று எண்ணிப் பாருங்கள், கேட்டுப் பாருங்கள்.

இந்தத்துறையின்- உள்ளாட்சித்துறையின் அமைச்சர் கோ.சி.மணி என்னை இரண்டு நாட் களுக்கு முன்பு சந்தித்து, ஒரே நேரத்தில் நாற்பத்தி ஐந்தாயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டிருக் கின்றன அதற்கு நீங்கள் ஒரு ரதயாத்திரை செய்ய வேண்டும்- வீடுகளைத் திறக்கத்தான்! இடிக்க அல்ல! திறப்பதற்கு நீங்கள் ஒரு யாத்திரை மேற் கொள்ள வேண்டும். ஒருவாரம் அல்லது பத்து நாள் சுற்றுப் பயணம் செய்து அந்த நாற்பத்தை யாயிரம் வீடுகளைப் பல்வேறு கிராமங்களில்

## அம்பேத்கர் நூற்றாண்டு

**சுயமரியாதையில்லாமல் வாழ்வதும் வாழ நினைப் பதும் மிகப்பெரிய அவமானமாகும்; ஒவ்வொருவரது வாழ்க்கைக்கும் மிக முக்கியமான ஓர் அம்சமே சுயமரியாதை! — டாக்டர் அம்பேத்கர்**

திறந்து வைக்க வேண்டுமென்று என்னிடத்திலே கேட்டுக் கொண்டார். வெல்லம் தின்பதற்கு வெறுப்பா எனக்கு? ஒத்துக் கொண்டிருக்கின்றேன். விரைவில் அந்த விழாக்கள் நடைபெறவிருக்கின்றன.

நான் முதலில் குறிப்பிட்டதைப்போல் உறை யுள்-வீடு ஏழை எளியோர்க்குத் தருகிறோம். உடை, அந்த உடையை நெய்கின்ற கைத்தறி நெசவாளர்களுடைய கஷ்டத்தைப்போக்கபல்வேறு திட்டங்களை வகுக்கிறோம். உணவு என்பது அரிசியோ, கோதுமையோ மாத்திரமல்ல. அந்த உணவிலே மிக முக்கியமான இடத்தை வகிப்பது தண்ணீர். அந்தத் தண்ணீரைப்பெறுவதற்குத்தான் இன்றைக்கு இந்த மாவட்டத்தில் பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாக்களை இந்த நிகழ்ச்சியிலே நாம் இணைத்திருக்கின்றோம்.

அதிலே குறிப்பாக உடுமலை நகராட்சியில் நான்கு கோடியே எழுபது இலட்ச ரூபாய் செல வில் குடிநீர்த்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப் பட்டிருக்கிறது.

குடிதண்ணீர்த் திட்டம் மார்ச் மாதம் 92-ஆம் ஆண்டு வேலைகள் எல்லாம் முடிவுற்று, அந்தத் தண்ணீரை உடுமலை மக்கள் பெறலாம். அந்தப் பயனை அனுபவிக்கலாம் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி, நகராட்சி வெளியிலே உள்ள பதினோரு கிராமங்கள் உட்பட ஆறு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்திற்கான திட்டம் 1993-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலே முடி வுறும். அந்தப் பயனை பொள்ளாச்சி நகரமும், வழியிலே உள்ள பதினோரு கிராமங்களும் பெற லாம். உடுமலை, மடத்துக்குளம் ஒன்றியங்களில் ஒன்பது குடியிருப்புக்களுக்கான குடிதண்ணீர்த் திட்டம்- 41.64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உடுமலை, மடத்துக்குளம் ஒன்றியங்களில் ஒன்பது குடியிருப்புகளுக்கான திட்டம்- குடிதண்ணீர்க் திட்டம் 91-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவு பெறும் ரூ. 33.75 இலட்சம் தமிழக அரசின் சார் பிலும், ஊராட்சிஒன்றியங்களின் சார்பில்ரூ.11.12 இலட்சம் மொத்தம். ரூ. 44.87 இலட்சத்தின் கீழ் 157 வேலைகள் நடைபெறும்.

அவ்வப்பொழுது விரைவிலே 91-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலே இந்த 157 வேலைகளும் நிறைவேற்ற முடியும்.

ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் ஐநூறு தொகுப்பு வீடுகள் 91-ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் முடிவடையும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதப்பட்டி, ஜோதிபாளையம் மற்றும் 24 குடியிருப்புகளுக்கு ஒரு கோடியே முப்பத்தி ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடித்தண்ணீர்த் திட்டம் முப்பதோராயிரம் மக்கள் பயனடை வார்கள். அதுவும் விரைவிலே முடிவடையும். தாமரைப்பாறை குடிதண்ணீர்த் திட்டம் இருபத்தி ரெண்டு கிராமங்கள் பயனடையும். ஏறத்தாழ முப்பதாயிரம் பேர் அதன் மூலம் பயன்பெறு வார்கள். ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீடு. அதுவும் விரைவிலே முடிவடையும். பூலாங்கிணறு மற்றும் 25 குடியிருப்புக்கள் ஒரு கோடியே பதினேழு இலட்சம் மதிப்பீட்டில் நிறை வேற்றப்படுகின்ற அந்தத் திட்டமும், நாற்பது ஆயிரம் மக்கள் பயனடையக் கூடியத் திட்டம்;நான் படித்த இத்தனைத் திட்டங்களுக்கும் ஆகக் கூடிய மொத்தச் செலவு 20 கோடியே 36 இலட்சம் ரூபாய். இந்தத் திட்டங்களெல்லாம் விரைவிலே நிறைவேறுவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற் கொள்ளுவோம் என்று உங்களுக்குத் தெரிவித்து, எல்லா வகையிலும் உங்களுக்காக, உங்களோடு, உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு தொடர்ந்து பணியாற்ற உங்கள் ஆதரவை வழங் குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்."

**—கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையில், 30.10.90 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ஆற்றிய சொற்பொழிவிலிருந்து.**



# எடுத்த காரியம் யாவினும் வெற்றி காண்போம்!

## — முதல்வர் கலைஞர்



***மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை. (9.11.1990)***

**மா**ண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, செயலாளர்களே, துறைத் தலைவர்களே, மாவட்ட ஆட்சியாளர்களே, காவல்துறை தலைவர் அவர்களே, காவல்துறை துணைத் தலைவர்களே, காவல்துறை கண்காணிப் பாளர்களே, ஏனைய அதிகாரிகளே,

மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் மாநாடு 1½ ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இன்றும் நாளையும் நடைபெறுகிறது. தமிழக மக்களின் இன்றைய சமூக, பொருளாதார பிரச்சினை களுக்குத் தீர்வு காணவும், நமது மாநிலம் தொழில் மயமாவதை விரைவு படுத்தவும், பல்வேறு திட்டங் களையும், திட்டப் பணிகளையும் நிறைவேற்றி வருகிறோம். சமூக-பொருளாதார அமைப்பில் முழு அளவில் மாற்றத்திற்கான அறைகூவல்களை ஏற்று சாமானிய மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பில் இருக்கின்றோம்.

இலங்கை அரசின் விமானங்கள், ஆயுதப் படைகள் ஈழத் தமிழர்கள்மீது நடத்திய அட்டூழி யங்களின் காரணமாக இந்த ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி இம்மாதத்தின் முன்பாதி வரை யிலும், ஏறத்தாழ 1,20,000 ஈழத் தமிழர்கள் களின் உறைவிட வசதிக்கு அரசு அல்லது அரசு சார்ந்த கட்டடங்களும், தனியார் கட்டடங்களும் போதுமான அளவிற்கு இல்லாமையால் இம் மாநிலம் முழுவதிலும் 20,000 குடும்பங்களுக்கு இடவசதி செய்து கொடுப்பதற்காகக் கொட்டகை, குடில்கள் கட்டுமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கும் பிரச்சினையைத் தீர்க்க இந்த ஏற்பாடு உதவியது.

"கணக்கில் முன் பணமாக" (on account advance) மத்திய அரசிடமிருந்து தொகையைப் பெறுவதற்கு முன்னர் மாநில அரசு இதற்குச் செலவு செய்து செலவு விவரங்களையும் இந்திய அரசிடம் கொடுக்க வேண்டியுள்ளது. நாளுக்கு நாள் வந்து குவியும் அகதிகளுக்காக மாநில அரசு இதுவரையிலும் ரூபாய் பதினோரு கோடி வழங்கி யுள்ளது. மத்திய அரசு "கணக்கில் முன்பண மாக" ரூபாய் ஏழு கோடி வழங்கியுள்ளது.

மாவட்ட ஆட்சியாளர்கள், காலத்தின் தேவை யறிந்து விரைந்து செயல்பட்டு அவர்களுக்கு இட வசதி, குடிநீர் வசதி, துப்புரவு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி ஆகியவற்றைச் செய்து கொடுத் துள்ளனர் என்பது மனதிற்கு ஆறுதல் வழங்கு

சுரண்டக்கூடிய சமூக விரோத சக்திகள், இடைத் தரகர்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்திட விழிப்புடன் கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது.

நமது தமிழகம் பொதுவாக அமைதிப் பூங்கா வாகத் திகழும் மாநிலமாகும். சட்டம்-ஒழுங்கு நிலைமை தொடர்ந்து நேர்த்தியாகவும், கட்டுப் பாட்டுக்குள்ளும் இருந்து வருகிறது. இங்கொன் றும் அங்கொன்றுமாக வன்முறைகள், வகுப்பு மோதல்கள், சமய காழ்ப்புணர்வு தகராறுகள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை உருவாக்குவதை அணையிட்டுத் தடுத்திட அரசு விரைந்து செயல் படுவதை நடுநிலையாளர் பாராட்டவே செய் கின்றனர்.

சட்டம்-ஒழுங்கு-அமைதி குலைவுக்கான பிரச்சினை எதையும் யாரும் தோற்றுவிக்க முடியாமல் தொடர்ந்து விழிப்புடன் இருத்தல் வேண்டும். மாவட்ட நிர்வாகங்கள், ஒரு சமயத்தைச் சார்ந்த மக்கள் அடுத்த சமயத்தைச் சார்ந்த மக்களின் வழிபாட்டு இடங்கள் வழியாக ஊர்வலம் செல்வதற்கு அனுமதி வழங்குவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டும் நோக்குடன், சினமூட்டுகின்ற வகையில் அமைந்த சுவரொட்டிகள், அல்லது சுவரில் எழுதி வைத்தல், அல்லது துண்டுப் பிரசுரங்கள் அல்லது கைப்பிரதிகளை வழங்குதல் போன்றவை உறுதியாகத் தடை செய்யப்பட வேண்டும். வகுப்புவாத வன்முறைகளை உரிய முறையில் விரைந்து தடுக்கவும், கட்டுப்படுத்தவும், கிராம அளவிலும், மாவட்ட அளவிலும் அமைதிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அக்குழுக்களில் கட்சிச் சார்பற்ற முறையில் எல்லாக் கட்சியினரும், வகுப்பினரும் இடம் பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம் உடனடியாகச்செயல்பட வேண்டும்.

இராம ஜென்ம பூமி-பாபர் மசூதி கருத்து வேறுபாடு தமிழ்நாட்டிலும் சிறிய அளவில் பாதிப்பை உருவாக்க முயன்றது. ஆனால் அது முன் எச்சரிக்கையாக தடுக்கப்பட்டு விட்டது. எனினும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறைக் கண்காணிப்பாளர்களும், தத்தம் மாவட்டங்களில் இன்னமும் போதுமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியம்.

கள்ளச்சாராயம் அருந்தி, உயிருக்கே தீங்கைத் தேடிக் கொள்ளல், அரசுக்குச் சேர வேண்டிய வருவாய் சமூக விரோதக் கும்பலிடம் சேருதல் முதலியவற்றை தடுத்திட மலிவு விலை மது கொண்டு வரப்பட்டது.

அரசின் பல்வேறு வளர்ச்சி-நல நடவடிக்கைத் திட்டங்களுக்கு நிதி அளிப்பதற்கு இதன் மூலம் கிடைக்கும் வருவாய் மிகவும் தேவைப்படுகிறது. கள்ளச்சாராயம்/போலி மது வகைகள் தலையெடுக்காமல் அறவே ஒழிக்க தீவிர கண்காணிப்பும், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரிடையே நெருங்கிய ஒத்துழைப்பும், வேலியே பயிரை மேயாத நிலையும் மிக மிகத் தேவை. 1989-90-இல் ரூபாய் 301 கோடியாக இருந்த ஆயத் தீர்வை வருவாய் 1990-91-ஆம் ஆண்டில் ரூபாய் 480 கோடி (ரூபாய் நானூற்று எண்பது கோடி) அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றியமையாப் பொருள்கள் யாவும் சமூகத்தின் நலிந்த பிரிவினரது சக்திக்கேற்ற விலையில், அவர்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு, பொதுப் பங்கீட்டுமுறையை மிகத் திறமையாகவும், தங்கு தடையின்றியும் செயல்படச் செய்வதற்கு இந்த அரசு மிக உயர்ந்த முன்னுரிமை

**இன்றியமையாப் பொருள்கள் யாவும் சமூகத்தின் நலிந்த பிரிவினரது சக்திக்கேற்ற விலையில், அவர்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு, பொதுப் பங்கீட்டு முறையை மிகத் திறமையாகவும், தங்கு தடையின்றியும் செயல்படச் செய்வதற்கு இந்த அரசு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கிறது.**

அளிக்கிறது. பொதுவாக, தமிழ்நாட்டில் பொதுப் பங்கீட்டு முறை மிக நன்றாகச் செயல்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு அதிகபட்சம் 12 கிலோ அரிசியும், விரும்பினால் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் கூடுதலாக 8 கிலோ பச்சரிசியும் வழங்கப்படுகிறது. பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது நமது மாநிலத்தில் மட்டுமே நியாய விலைக் கடைகளில் அரிசி விலை குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்றாலும், பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டில், எடைகள் குறைதல், பொருட்களை உரியவாறு உரிய நேரத்தில் வழங்காமை, தரம் குறைந்த பொருட்கள் போன்ற குறைகள் குறித்து தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அரிசியைப் பொறுத்தவரை, 1990-ஆம் ஆண்டு சம்பா பருவத்தில் எய்திய சாதனைக் கொள்முதல் வாயிலாகவும் மத்திய அரசு இம் மாநிலத்திற்குக்கூடுதல் ஒதுக்கீடு அளித்துள்ளதாலும் அரிசி இருப்பு நிலைமை நிறைவளிப்பதாக உள்ளது. சர்க்கரையைப் பொறுத்தவரையில், இம்மாநிலத்திற்கான ஒதுக்கீட்டை உயர்த்துமாறு, மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசின் தற்போதைய சர்க்கரை ஒதுக்கீட்டில் குடும்ப அட்டை ஒன்றுக்கு இரண்டு கிலோவரை வழங்க முடிகிறது. மாதம் ஒன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் கோதுமை மத்திய அரசு ஒதுக்குகிறது. ஆனால் மாதம் ஒன்றுக்கு 10,000 முதல் 12,000 மெட்ரிக் டன் அளவுக்கே நாம் கோதுமையைப் பயன்படுத்துகிறோம்.

அண்மையில், வழக்கமான அரைவைத் திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்கிற குறைந்த விலையில் மைதா, ரவை வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் இத்திட்டம் சென்னை மாநகரில் செயல்படுத்தப்படும். பின்னர், ஏனையப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படலாம். பாமாயிலைப் பொறுத்தவரையில் நம் மாநிலத்தின் தேவை 13,000 மெட்ரிக் டன்னாக இருக்க, மத்திய அரசு, அக்டோபர் மாதத்திற்காக 10,000 மெட்ரிக் டன் பாமாயில் மட்டுமே ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு வழங்கியுள்ள மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கான தேவையைச் சரிக்கட்டப் போதுமானதாக உள்ளது. பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டைச் செவ்விய முறையில் கண்காணிக்க மாவட்ட, வட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. போலி குடும்ப அட்டைகளை ஒழித்துக் கட்டுவதற்கும், இன்றியமையாப் பொருட்களைப் பதுக்காமல் இருப்பதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முனைப்பாக செயல்பட வேண்டும்.

இன்றியமையாப் பொருட்களின் விலைகளை நியாயமான அளவில் இருக்குமாறு வைத்து வருவது,

**இன்றியமையாப் பொருட்களின் விலைகளை நியாயமான அளவில் இருக்குமாறு வைத்து வருவது, அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாகும்.**

அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாகும். வெளி அங்காடிகளில் இன்றியமையாப் பொருட்களின் விலைகளை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய மாவட்டங்களில், நிலவுகிற விலைகள் பற்றி மிக விழிப்பாகக் கண்காணித்து வருமாறு ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது மன நிறைவு அளிப்பதாக உள்ளது.

முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் மிகவும் குறைவாக உள்ளன. விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துவர, இன்றியமையாப் பொருட்களுக்குரிய பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் தீவிரமாக செயல்படுத்துமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பெட்ரோல், டீசல் ஆகியவற்றுடன் மண்ணெண்ணெய், ஏனைய அந்நியப் பொருட்களைக் கலப்படம் செய்கின்ற பிரச்சினை மத்திய, மாநில அரசுகளின் கவனத்திற்கு வந்துள்ளது. வளைகுடா பிரச்சினையின் காரணமாக இந்தப் பிரச்சினை பெரிதாகியுள்ளது. மத்திய அரசு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது. இந்த ஆணையை உரிய வகையில் செயல்படுத்துவதானது மோட்டார் எரிபொருள்/அதிவேக டீசல் ஆகியவற்றுடன், மண்ணெண்ணையையும் ஏனைய அந்நியப் பொருட்களையும் கலப்படம் செய்கின்ற பிரச்சினையைத் தீவிரமாக தடுத்து நிறுத்த உதவும் என நம்பப்படுகிறது.

வளைகுடாப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடியையும், அதன் விளைவாக எண்ணெய் விலைகளில் உயர்வு ஏற்பட்டதையும் கருதிப் பார்த்து, எரிபொருள் பயன்படுத்துவதில் மிகவும் சிக்கனமாக இருக்க வேண்டியது அவசியம் ஆகும். மாவட்ட ஆட்சியாளர்கள், தங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள வண்டிகளை நியாயமான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் எரிபொருள் ஒதுக்கீட்டளவு (குறைக்கப்பட்ட ஒதுக்கீட்டளவு) அதிகமாகக் கூடாது. எரிபொருளை மிச்சப்படுத்துவதுடன், எல்லா வண்டிகளையும் உரியவாறு பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சிறந்த பம்ப் செட்டுகளை வாங்குவதன் மூலம் டீசல் பயன்படுத்துவதைக் குறைப்பதற்கு உழவர்களுக்கு ஆலோசனை கூறப்பட வேண்டும். அதே போல போக்குவரத்து நிறுவனங்களிலும் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின், குறிப்பாக ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மகளிர் ஆகியோரின் நலனுக்கு அரசு உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இந்த அரசு செயல்படுத்தும் பல்வேறு நல வளர்ச்சித் திட்டங்கள் மூலமாகப் பலர் பயனடைந்துள்ளனர். ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்குக் கல்வி கற்கவும், வேலை வாய்ப்பு அளிக்கவும் உரிய பல்வேறு வசதிகளையும், செயலாக்கங்களையும் அளிப்பதன் மூலம் அவர்களுடைய சமூக அளவிலான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டமிட்டவாறு, இலக்குகள் எய்தப் பெறுகின்றனவா என்பதை இவற்றைச் செயல்படுத்தும் மாவட்ட ஆட்சியாளர்களும், ஏனைய அதிகாரிகளும் உறுதி செய்ய வேண்டும். சிறப்புக் கூறு திட்டத்தின்கீழ், அரசு நடப்பாண்டில் ஏறத்தாழ 232 கோடி ரூபாய் செலவிடும்.

இதேபோல், நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்தவாறு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோரின் மேம்பாட்டிற்காக பல்வேறு நல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோர் அனைவருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மகளிர் நலனுக்காக, இந்த ஆண்டில், பல முக்கியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. வேலைவாய்ப்புகளில் 30 சதவிகித இட ஒதுக்கீடு, 1956-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின்கீழ் பெண்களுக்குச் சம சொத்துரிமை அளித்தல் ஆகியவற்றுடன் மகளிர் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்காக, கடந்த ஆண்டில் 7.40 கோடி ரூபாயும், இந்த ஆண்டில் இதுவரை பத்து கோடி ரூபாயும் ஆக மொத்தம் 17.40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இந்தத் திருமண உதவி தலா ஐயாயிர ரூபாய் பெற்று பயனடைந்த ஏழைப் பெண்களின் எண்ணிக்கை 29,925 ஆகும். இதுவரை ரூ.14.96 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின், குறிப்பாக ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மகளிர் ஆகியோரின் நலனுக்கு அரசு உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது.**

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 4 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 4 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1989-ஆம்

# பதிவுத் துறை அமைப்பும் பணிகளும்



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

## திரு. நாஞ்சில் கி. மனோகரன்

நம் தமிழகத்திலுள்ள பழம்பெரும் துறைகளில் பதிவுத் துறையும் ஒன்றாகும். இத்துறை 1864-ஆம் ஆண்டு துவக்கப்பெற்றது. இத்துறை கடந்த ஆண்டு தனது 125-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி சிறப்புப் பெற்றுள்ளது. தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கியத் துறையான இத்துறை மட்டும் கடந்த ஆண்டு ரூ.261.36 கோடி வருவாயை ஈட்டித் தந்துள்ளது.

மனிதன் தோன்றியது முதல் மறையும் வரை உள்ள பல்வேறு காலகட்டங்களில் மனித வாழ்வில் ஏற்படும் முக்கிய நிகழ்ச்சிகளான திருமணம், பிறப்பு, இறப்பு, சங்கம் அமைத்தல், பொருளாதார முன்னேற்றத்திற்குச் சீட்டுப் போடுதல், நிறுவனங்கள் அமைத்துத் தொழில்கள் தொடங்கப் பதிவுகள் ஆகியவை இத்துறை மூலம் செய்யப்படுகின்றன. சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்களைப் பதிந்து, அவற்றைப் பாதுகாத்து, பொது மக்கள் வேண்டும்பொழுது அதன் நகல்களையும் அதற்கான வில்லங்கச் சான்றுகளையும் வழங்கி, பொது மக்களுக்குத் தங்கள் சொத்துக்களின் மீதுள்ள உரிமையை நிலைநாட்ட உதவுவது இத்துறையின் அடிப்படைப் பணியாகும்.

இத்துறையில் கீழ்க்கண்ட சட்டங்கள் அமல் படுத்தப்படுகின்றன.

1. 1908-ம் ஆண்டு பதிவுச் சட்டம்
2. 18,99-ம் ஆண்டு முத்திரைச் சட்டம்
3. 1961-ம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டம்
4. 1982-ம் ஆண்டு சீட்டுநிதிச் சட்டம் (மத்தியச் சட்டம்)
5. 1975-ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்
6. 1955-ம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்
7. 1954-ம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம்
8. 1886-ம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டங்கள்.
9. 1936-ம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் திருமண முறிவுச் சட்டம்
10. 18,72-ம் ஆண்டு இந்திய கிருஸ்துவ திருமணச் சட்டம்.
11. 1961-ம் ஆண்டு வரதட்சிணை ஒழிப்புச் சட்டம்.
12. 1932-ம் ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டம்
13. 1972-ம் ஆண்டு விற்பனையில்லாத நிறுவனச் சட்டம்.

### நிர்வாக அமைப்பு

இத்துறை இந்திய ஆட்சிப்பணி அலுவலரைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு), கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி), சட்ட அலுவலர், கூடுதல் சீட்டுப் பதிவாளர், நேர்முக உதவியாளர் (பொது), நேர்முக உதவியாளர் (சீட்டு), நேர்முக உதவியாளர் (கணக்கு) மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர் போன்ற அதிகாரிகள் பணிபுரிகிறார்கள்.

இத்துறை சென்னை, வேலூர், மதுரை, திருச்சி, கோவை ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்ட ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு துணைப் பதிவுத் துறைத் தலைவருக்கும் உதவியாக இரு உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் பணி புரிகின்றனர். சென்னை மண்டலம் நடப்பு ஆண்டில் உருவாக்கப்பட்டு, அண்மையில் செயல்படத் துவங்கியுள்ளது. இத்துறை 46 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பதிவு மாவட்டமும் ஒரு மாவட்டப் பதிவாளரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது.



இத்துறையில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நூறு சதவிகிதத் தணிக்கை மேற்கொள்ள, 26 தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள் பணி புரிகின்றனர்.

இத்துறையில் 574 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சார்பதிவாளர்கள் பணிபுரிகின்றனர்.

### சாதனைகள்:

#### வழிகாட்டிப் பிரிவு (Guideline Cell)

ஆவணங்களுக்கு வழிகாட்டி மதிப்பின் மீது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வழிகாட்டி மதிப்பு சரியானதாக, நிலவும் சந்தை மதிப்பு அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டால்தான் அரசின் வருவாய் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆகவே அரசு எண் 387, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 26.5.89-ன் படி "வழிகாட்டிப் பிரிவு" என்ற அமைப்பு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டி மதிப்பு வளர்ச்சி சதவிகிதம், பூகோள ரீதியான இடங்களின் அமைப்பு, ஏற்கெனவே விற்கப்பட்டுள்ள மதிப்புப் புள்ளி விவரங்கள், தெருக்களின் அகலம், இடங்கள் பயன்படும் தன்மை விசாரணை மூலம் பெறப்படும் மதிப்பு விவரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்ய அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால், ஏற்கெனவே 1990-91-ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு "மதிப்பு நிர்ணயக் குழுவால்" ஒப்புதல் வழங்கப்பட்டு 1.4.90 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் கூடுதலாக ரூ.20/- கோடி வருவாய் வர வாய்ப்புள்ளது.

#### புலனாய்வு பிரிவு: (Intelligence Cell)

அரசாணை எண் 390, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை-நாள் 26.5.89-ன் படி பதிவுக்கு வரும் ஆவணங்களில், கட்டடத்தின் உண்மை அளவு மற்றும் விவரங்கள் குறைத்தும் மறைத்தும் காட்டி அரசுக்கு இழப்பை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைமையின் கீழ் நான்கு மாவட்டப் பதிவாளர்களுடன் "புலனாய்வுக் குழு" உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்படி 5 அலுவலர்களைக் கொண்டு நிர்வகிக்க இயலாத காரணத்தால் 26 தணிக்கை மாவட்டப் பதிவாளர்களும், 46 நிர்வாக மாவட்டப் பதிவாளர்களும், துணைப் பதிவுத் துறைத் தலைவர்களும் இரு உதவி செயற்பொறியாளர்களும் இப்பணிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வகை ஆவணங்கள் ஆண்டுக்கு 60,000 பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வருவாய் ஆண்டுக்கு ரூ.5 கோடி கூடுதலாக வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி '90 முதல், ஆகஸ்ட்டு '90 வரை இத்திட்டத்தின் கீழ் கண்டுபிடிக்கப்பட்ட இழப்புத் தொகை ரூ.3.54 கோடி. வசூல் செய்யப்பட்டது ரூ.2.23 கோடி. இக்காலத்தில் பார்வையிட்ட கட்டட ஆவணங்கள் 58,235 ஆகும்.

#### ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள் தேர்வு

1983-ஆம் ஆண்டு முதல் ஆவணங்களை எழுத ஆவண எழுத்தர்கள் உரிமமும் ஆவண நகல்களை எழுத நகல் எழுத்தர்கள் உரிமமும் அளிக்கப்பட்டன. தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்யவும் படித்த இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்திலும் 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 12-ஆம் தேதி புதியதாகத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வில் 4,336 நபர்கள் ஆவண எழுத்தர்களாகவும், 6,866 நபர்கள் நகல் எழுத்தர்களாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.28.23 கோடி விவசாயக் கடன் தள்ளுபடி

கூட்டுறவு வங்கிகள் மூலம் 44 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் வேளாண் கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் ரூ.13.70 கோடி தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

நாட்டுடமையாக்கப்பட்ட வணிக வங்கிகளின் மூலம் 43 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.14.53 கோடி விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 87 ஆயிரம் பேருக்கு ரூ.28.23 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.204.55 இலட்சமும், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.124.22 இலட்சமும், திண்டுக்கல் பகுதிகளில் ரூ.153.32 இலட்சமும், குஜிலியம்பாறை பகுதிகளில் ரூ.203.54 இலட்சமும், கொடைக்கானல் பகுதிகளில் ரூ.250.52 இலட்சமும், நத்தம் பகுதிகளில் ரூ.142.34 இலட்சமும், நிலக்கோட்டைப் பகுதிகளில் ரூ.196.71 இலட்சமும், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் ரூ.360.60 இலட்சமும், பழனி பகுதிகளில் 253.05 இலட்சமும், ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் 206.47 இலட்சமும், சாணார்பட்டி பகுதிகளில் ரூ.88.46 இலட்சமும், தொப்பம்பட்டி பகுதிகளில் ரூ.233.78 இலட்சமும், வடமதுரை பகுதிகளில் ரூ.133.70 இலட்சமும், வேடசந்தூர் பகுதிகளில் ரூ.263.79 இலட்சமும், இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளின் மூலம் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்படவுள்ளது என திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட ஆட்சியர் திரு சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு 10.10.90 முதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு மனுச் செய்பவர்களுக்கு உரிமங்கள் வழங்கப்படும். இதனால் 11,202 நபர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு ஏற்படுகிறது.

**சீட்டு விழிப்புக் குழு:**

பதிவு செய்யப்படாமல் நடைபெறும் சீட்டுகளைக் கண்டுபிடிக்கவும், சீட்டுச் சந்தாதாரர்கள் தெரிவிக்கும் புகார்களை விசாரிக்கவும், சீட்டுத் தொகை சரியான முறையில் பட்டுவாடா செய்வதைக் கண்காணிக்கவும் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் சீட்டு விழிப்புக்குழ அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு திடீர் சோதனைகள் மூலம் 80 துணைவிதிகள் பதிவு செய்யப்படாததைக் கண்டுபிடித்து அரசுக்குப் பதிவுக் கட்டண இழப்பு ரூ.63,120/- கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிணையமாக ரூ.50 இலட்சம் அரசுக்குச் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**வருவாய்:**

அரசுக்கு, கடந்த 5 ஆண்டுகளில் இத்துறையின் மூலம் பதியப்படும் சுமார் 10 இலட்சம் ஆவணங்கள் மற்றும் இதர நடவடிக்கைகள் மூலம் கீழ்க்கண்டவாறு வருவாய் ஈட்டித்தந்துள்ளது.

| வ.எண் | ஆண்டு | அடைந்த வருவாய் (கோடியில்) |
|---|---|---|
| 1. | 85-86 | ரூ.122.15 |
| 2. | 86-87 | " 142.17 |
| 3. | 87-88 | " 164.12 |
| 4. | 88-89 | " 199.24 |
| 5. | 89-90 | " 261.36 |
| 6. | 90-91 | |
| | 31.8.90 முடிய | " 114.46 |

கடந்த 5 ஆண்டுகளில் இரு மடங்காக இத்துறையின் வருவாய் உயர்ந்துள்ளது. இத்துறையில் பணிபுரியும் அலுவலர்களின் விடாமுயற்சியினால் இவ்வாண்டு ரூ.339 கோடி வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்திய முத்திரைச் சட்ட பிரிவு 47(ஏ)-ன்** கீழ் வருவாய் வழிகாட்டி கண்ட மதிப்பினை ஏற்றுக் கொள்ளாத கட்சிக்காரர்கள் சந்தை மதிப்பினை நிர்ணயிக்க தனித்துணை ஆட்சியரை (முத்திரை) அணுகுகின்றனர். தமிழ்நாட்டில் 11 தனித்துணை ஆட்சியர்கள் 44 வட்டாட்சியர்கள் மூலம் சந்தை மதிப்பு நிர்ணயப்பணி நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் 31.8.90 வரைரூ.183.46 இலட்சம் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

பதிவுத் துறையின் 125-ஆவது ஆண்டின் நினைவினை ஒட்டி, துறையின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் சாந்தோம் நெடுஞ்சாலையில் கட்ட, தமிழக அரசு அரசாணை எண் 558, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 27.9.90 மூலம் அனுமதி வழங்கியுள்ளது. இது பதிவுத் துறையின் வரலாற்றில் பெருமைக்குரிய சாதனையாகக் கருதப்படுகிறது.

**ஊர்திகள்**

இவ்வாண்டு சீட்டு விழிப்புக் குழுவிற்காக ஒரு புதிய ஜீப் தமிழக அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பதிவுறாச் சீட்டுகளை அதிக அளவில் கண்டிபிடிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

வரும் நிதி ஆண்டில் திருநெல்வேலி பதிவு மண்டலத்தை ஏற்படுத்தும் திட்டமும், அரியலூர் சேலம் பதிவு மாவட்டங்களைப் பிரித்து பெரம்பலூர் ஆத்தூர் பதிவு மாவட்டங்களாகத் தோற்றுவிக்கும் திட்டமும், வழிகாட்டிப் பதிவேடுகள் தயாரிப்பதற்குக் கள அலுவலர்களை நியமிக்கும் திட்டமும், சார்பதிவகங்களில் உள்ள வேலைப் பளுவினைக் கருத்திற்கொண்டு கூடுதல் எழுத்தர்களை நியமிக்கும் திட்டமும், நகராட்சிகளில் பணிபுரியும் சார்பதிவாளர்களை மாவட்டப் பதிவாளர்களாக மாவட்டப் பதிவாளர்கள் நிலைக்கு மேம்படுத்தும் திட்டமும் அரசு பரிசீலனையில் இருந்து வருகின்றன. இத்திட்டங்கள் செயல்படுத்துவதன் மூலம் பதிவுத் துறை நிர்வாகம் சீர்படுவதுடன் அரசிற்குக் கூடுதலாக வருவாய் ஈட்டித்தர வாய்ப்புள்ளதென எதிர்பார்க்கப்படுகிறது.

## கூட்டுறவுப் பணியில் தமிழகமே முன்னோடி

கூட்டுறவு ஒன்றியம் என்பது-கூட்டுறவுக் கல்வியையும், கூட்டுறவுப் பிரச்சாரத்தையும் பரப்பி, மக்களின் சிந்தனையைத் தூண்டுவதுதான்.

இந்தியாவிலேயே ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை ரத்து செய்வதில் தமிழகம்தான் முன்னோடியாகச் செயல்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நவீன முறையில் இந்தக் கூட்டுறவுக் கல்வியை எப்படிச் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் மேலும் எளிதில் எடுத்துச் சொல்வது என அரசு ஆலோசனை செய்துவருகிறது.

மாண்புமிகு உணவு/கூட்டுறவுத்துறை அமைச்சர்

— திரு. பொன். முத்துராமலிங்கம்



# பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**திரு. கே.என். நேரு**

**1988-89**-இல் 5,425 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 989-90-இல் ,726 பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களாக அதிகரித்துள்ளன. இதனால் 1990-இல் 7.4 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

**பால் உற்பத்தி**

1988-89-இல் நாளொன்றுக்கு 10.1 இலட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி, 1989-90 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 12.8 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் அதிகமாக நாளொன்றுக்கு 2.7 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி பெருக்கப்பட்டுள்ளது.

**பால் விற்பனை**

1988-89-இல், பால் விற்பனை சென்னையில் நாளொன்றுக்கு 5.3 இலட்சம் லிட்டராக இருந்தது. இது தற்சமயம் நாளொன்றுக்கு 7.0 இலட்சம் லிட்டராக உச்சகட்ட விற்பனையை அடைந்துள்ளது இதுபோல,, மாவட்டங்களில் பால்விற்பனை 988 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 4.4 இலட்சம் லிட்டராக இருந்தது, உச்சகட்டமாக 5.3 இலட்சம் லிட்டராக நாளொன்றுக்கு உயர்ந்துள்ளது.

**பால் பொருட்கள் உற்பத்தி**

1988-89-இல் பால் பவுடர் உற்பத்தி 4,849 டன்களாக இருந்தது. இதற்கு மாறாக தற்போது 989-90-இல் 8,643 டன் பால் பவுடர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதைப்போல வெண்ணெய் உற்பத்தி முந்தின ஆண்டு 4,140 டன்களாக இருந்து, 6,832 டன்னாக உற்பத்தி உயர்ந்துள்ளது.

முந்தின ஆண்டில் 4,610 டன்னாக இருந்த பால்பவுடர் விற்பனை 1989-90-இல் 6,518 டன்னாக உயர்த்தப்பட்டு உள்ளது. இதைப்போ 1988-89-இல் 1,761 டன்னாக இருந்த வெண்ணெ விற்பனை 1989-90-இல் 3,089 டன்னாக அ கரித்துள்ளது.

**பால் பதனிடும் கொள்திறன்**

1988-89-இல் நாளொன்றுக்கு 13.13 இலட்ச லிட்டராக இருந்த பால் பதனிடும் கொள்திற



## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ வேளாண்மைக் கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ரூ.478 கோடி நிவாரணம் அளிக்கப்பட்டு 17 இலட்சம் பேர்கள் பயனடைந்துள்ளனர் என்று தமிழக அரசு அறிவித்தது. (4.9.90)

★ மனோன்மணீயம் சுந்தரனார் பெயரில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டியில் புதிய பல்கலைக் கழகத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அவ்வமயம் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை 14,719 பேர்களுக்கு வழங்கினார். (7.9.90)

★ சங்கரன் கோவில் வட்டாரத்தில் 88 கிராமங்களுக்கு ரூ.10 கோடியே 28 இலட்சத்து 51 ஆயிரம் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். (8.9.90)

★ சென்னை மாநகரில் பொதுமக்கள் வாங்க வசதியாக மண்ணெண்ணெய் கைவண்டிகளைத் தெருக்கள் வாரியாக நிறுத்தி வைக்கச் செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் தெரிவித்தார். (9.9.90)

★ இந்தியாவிலேயே முதல் முறையாக விவசாயிகளின் ரூ.10 ஆயிரம் வரையிலான கடனை ரத்து செய்த மாநிலம் தமிழகம்தான் என்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் அறிவித்தார். (12.9.90)

★ சென்னை மாநகரில் மேலும் 10 இடங்களில் தானியங்கி சிக்னல் அமைக்கப்படும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. (13.9.90)

★ சென்னையில் 21.25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.4 கோடி செலவில் நவீன காட்சிக் கூடங்களுடன் அமைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத்தை, தந்தை பெரியாரின் 112-ஆவது பிறந்த தினத்தன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். (17.9.90)

நாளொன்றுக்கு 2.74 இலட்சம் லிட்டர் அதிகரித்து, நாளொன்றுக்கு 15.87 இலட்சம் லிட்டராக முன்னேறியுள்ளது.

### கால்நடை தீவனம்

1988-89-இல் நாளொன்றுக்கு 27,000 டன் விற்பனை செய்யப்பட்ட சத்துள்ள கால்நடை தீவனம், 1989-90-இல் 33,000 டன்னாக உயர்ந்துள்ளது.

### கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல்

1988-89-ஐ விட 1989-90-இல் 1,10,000 கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல்கள் அதிகமாகச் செய்யப்பட்டுள்ளன 1988-89-இல் 5,50,000 ஆக இருந்த செயற்கை முறைக் கருவூட்டல்கள், 1989-90-ஆம் ஆண்டில் 6,61,000 ஆக உயர்ந்துள்ளன.

### பால்பெருக்குத் திட்டம்

நடப்பு ஆண்டில், தேசிய பால்வள வாரியம் ரூ.53 கோடி மதிப்பீட்டில் 8 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் இணையமும் பயனடையத்தக்க வகையில் சில திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. அத்திட்டங்களின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ★ நாளொன்றுக்கு 4.00 இலட்சம் பால் பதனிடும் கொள்திறன் கொண்ட ஒரு நவீன பால் பண்ணை, சோளிங்கநல்லூரில் அமைக்கப்படும்.
- ★ நாளொன்றுக்கு 30 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு பால்தூள் ஆலை, ஈரோட்டில் அமைக்கப்படும்.
- ★ நாளொன்றுக்கு 1.5 இலட்சம் பால் பதனிடும் திறன் கொண்ட ஒரு புதிய பால் பண்ணை திருச்சியில் அமைக்கப்படும்.
- ★ ஈரோடு மற்றும் சேலம் பால்பதனிடும் ஆலைகளின் தற்போதைய கொள்திறன் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டரிலிருந்து 3.0 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்படும்.
- ★ நாளொன்றுக்கு 1.0 இலட்சம் லிட்டர் பால்பதனிடும் கொள்திறன் கொண்ட ஒரு புதிய பால்பண்ணை விழுப்புரத்தில் அமைக்கப்படும்.
- ★ கோயம்புத்தூர் மற்றும் தர்மபுரி பால் பதனிடும் ஆலைகளின் கொள்திறன் நாளொன்றுக்கு 1.0 இலட்சம் லிட்டரிலிருந்து, நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்படும். மற்றும் மதுரை பால்பதனிடும் ஆலையின் கொள்திறன் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக நாளொன்றுக்கு விரிவாக்கம் செய்யப்படும்.
- ★ நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தித்திறன் கொண்ட புதிய கால்நடை தீவன் ஆலை மதுரையில் அமைக்கப்படும். இது இவ்வாண்டு இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்கும்.

### அம்பேத்கர் நூற்றாண்டு...

★ ஆயிரமாயிரம் ஆண்டுகள் அடிமைகளாகத் தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரைநிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து இறந்து போவதே மிகச் சிறந்ததாகும்.

—டாக்டர் அம்பேத்கர்

நான்காம் அட்டை சொலலும் செயதி

**"நாங்கள் எல்லோருக்குமாகத்தான் அரசு நடத்துகிறோம்; எல்லாத் தரப்பு மக்களுக்கும், எல்லாக் கருத்து உடையவர்களுக்கும்தான் அரசு நடத்துகிறோம்; ஆதரித்தோருக்கும் ஆதரிக்காதோருக்கும் சேர்த்தே அரசு நடத்துகிறோம் என்ற வகையில், எங்களுக்கு ஒரு கொள்கையில் நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்தக் கொள்கையை மற்றவர்கள் மீது திணிக்க நாங்கள் விரும்பவில்லை!"**

**— முதல்வர் கலைஞர்**

# காஞ்சியில் முப்பெரும் விழா

**மா**ண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 25.10.90 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் கலந்து கொண்டார்.

ரூ.176 கோடி மதிப்பீட்டில் ஆயுதப்படைக் காவலர்கள் குடியிருப்பு மற்றும் சமுதாயக்கூடம் திறப்பு விழா, ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பயணியர் விடுதித் திறப்பு விழா - ரூ.11.46 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்ட அடிக்கல் நாட்டுவிழா என நடைபெற்ற அந்த முப்பெரும் விழாவிற்கு, மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க. சுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. மு. கண்ணப்பன், திரு. எஸ். துரைமுருகன், திரு. கே.பி. கந்தசாமி, திரு. க. பொன்முடி, முன்னாள் அமைச்சர் திரு. சி.வி.எம். அண்ணாமலை, மதுராந்தகம் திரு. எஸ். ஆறுமுகம், காவல்துறை உயர் அதிகாரி திரு. பி. துரை ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது: "இந்த அரசு பொறுப்பேற்றால் ஆலயங்கள் பழுதுபார்க்கப்பட மாட்டா. ஆலயங்கள் க்ஷீணித்துப் போய்விடும். ஆலயங்களில் இருக்கின்ற ஆண்டவன்கள் ஆபத்திற்கு ஆளாவார்கள் என்றெல்லாம் 67-க்கு முன்பு சொல்லப்பட்டது. எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற அந்தக் காலந்தொட்டும், அவருடைய மறைவிற்குப் பிறகு, அவருடைய அடியொற்றிப் பணியாற்றிய கழக ஆட்சிக் காலத்திலும், மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலும் நாங்கள் எல்லோருக்குமாகத் தான் அரசு நடத்துகிறோம். எல்லாத்தரப்பு மக்களுக்கும், எல்லாக் கருத்து உடையவர்களுக்கும் தான் அரசு நடத்துகிறோம். ஆதரித்தோருக்கும் ஆதரிக்காதோருக்கும் சேர்த்தே அரசு நடத்துகிறோம் என்ற வகையில், எங்களுக்கு ஒரு கொள்கையில் நம்பிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்தக் கொள்கையை மற்றவர்கள் மீது திணிக்க நாங்கள் விரும்பவில்லை. அதைப் போலவே மற்றவர்களும் அவர்களுடைய கொள்கையை எங்கள் மீது திணிக்க அவர்களுக்கு உரிமையில்லை என்ற அந்த உணர்வோடு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம்.

எனவேதான், காலையிலே ஏகாம்பரநாதர் ஆலயத்தின் திருப்பணி தொடக்க விழா நடைபெற்று - ஏகாம்பரநாதர் ஆலயத்தைப் போன்ற பல ஆலயங்களை மற்றும் சிற்பங்களை, காஞ்சி நகரத்தின் சிறப்புகளைக் காண வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியான ஒரு விடுதியையும் மாலையிலே திறந்து வைத்து, வருகிற பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற - சட்டம் ஒழுங்கு அமைதி காத்திடப் பணியாற்றும் காவல்துறையினரும் வசதியாக வாழவேண்டும் என்பதற்காக அவர்களுக்கான குடியிருப்புக்களையும் திறந்து வைத்து-வருகின்ற மக்கள் மாத்திரமல்ல; இங்கே வாழ்கிற மக்களும் தாகத்தால் தவிக்கக் கூடாது என்பதற்காகக் குடிநீர்த்திட்டத்தையும் தொடங்கி வைக்க, அடிக்கல் நாட்டு விழாவினையும் இங்கே ஏற்பாடு செய்து, அதை நடத்துகின்ற விழாவும் இணைக்கப்பட்டு இந்த விழாக்களில் உங்களையெல்லாம் தொடர்ந்து சந்திக்கின்ற வாய்ப்பினை நான் பெ றிருக்கிறேன்.

நான் ண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு ெ ாறுப்பேற்றுக்கொண்டு 1971-ஆம் ஆண்டு மீ டும் முதலமைச்சராக வெற்றிபெற்று வந்தநேரத் ல், வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பினே . திரும்பியபோது இந்தியப் பிரதமர் அன்னை திரா காந்தி அவர்களைச் சந்தித்து வெளிநாட் சுற்றுப்பயண விவரங்களைக் கூறினேன்.

அப்போது அவர்களிடத்திலே சொன்னேன் - வெளிநாடுகளிலே வளர்ந்திருக்கின்ற அளவிற்கு இந்தியாவிலே இந்தச் சுற்றுலா கலை ரீதியாக மாத்திரமல்ல; கலாச்சார ரீதியாக மாத்திரமல்ல; தொழில் ரீதியாகக்கூட வளரவில்லை என்று.

வெளி டுகளிலே, மேல்நாடுகளிலே இந்தச் சுற்றுலா, தொழில் ரீதியாக இன்றைக்கு வளர்ந்து

அவர்கள் மிகுந்த கவனமாகக் கேட்டார்கள்.

வெளிநாடுகளிலே - அங்கே வழங்கப்படுகின்ற அஞ்சல் அட்டைகளில்கூட அந்த நாட்டிலே உள்ள சிற்பங்கள், இயற்கைக் காட்சிகள், அதிசயங்கள். இவைகள் இடம் பெற்றுள்ளன. அதைப்போல் நாமும் இந்தியாவில், இங்கே உள்ள பல்வேறு மாநிலங்களிலே இருக்கின்ற இயற்கைக் காட்சிகள், சிற்பங்கள், வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளைக் கவரக்கூடிய காட்சிகள் - இவைகளையெல்லாம் அஞ்சல் அட்டைகளிலே, அஞ்சல் உறைகளிலே அச்சிட்டு, அவைகளைக் கடைகளிலே விற்பனைக்கு வைத்தால், அவைகளை வாங்குகின்ற மக்கள் அதை வாங்கி, வெளிநாட்டிலே இருந்து இங்கே வந்து தங்களுடைய நாட்டுக்குக் கடிதம் எழுதுவதற்கு அதை வாங்கிப் பயன்படுத்துவார்களேயானால், அந்த நாட்டிலே உள்ளவர்களை அந்தப் படங்கள் கவரும். அவர்கள் இப்படிப்பட்ட இடங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற உணர்வு-ஆர்வம் அவர்களுக்கு ஏற்படும். எனவே அந்தக் காரியங்களையெல்லாம் செய்யலாம் என்று சொன்னபொழுது, அன்னை இந்திரா காந்தி அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

நான், தமிழ்நாட்டிலே சுற்றுலா வாரியம் ஒன்று அமைக்கப் போகிறேன். அதற்கு மத்திய அரசினுடைய உதவி தேவை' என்று கேட்டுக் கொண்டேன். அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்தார்கள். அதை ஒட்டித்தான் அருமை நண்பர், மறைந்த நமது இயக்கத்தின் தளபதி - ஏ.வி.பி. ஆசைத்தம்பியைத் தலைவராகக் கொண்டு 71-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சுற்றுலா வாரியம் தமிழகத்திலே தொடங்கப்பட்டது முதன் முதலாக.

சுற்றுலா மூலம் ஒரு நாட்டினுடைய வருமானம் பெருகுகிறது. பொருளாதாரம் பெருகுகிறது. நான் மேல்நாடுகளுக்குச் சென்றபோது அந்தக் காலத்தில் 1970 என்றால் 20 ஆண்டுகளுக்கு முன்பே, நான் கேள்விப் பட்டது, இத்தாலியிலே இருந்து அவர்கள் வேறு நாடுகளுக்கு இறைச்சியை அனுப்பி அவர்களுக்குக் கிடைக்கின்ற பொருளாதார வருமானத்தை விட, வெளிநாடுகளிலே இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இத்தாலிக்குள்ளே நுழைந்து ரோமாபுரி போன்ற பல்வேறு இடங்களைப் பார்த்து, சிதைந்த சிற்பங்களை, அங்கே ரோமானியர்கள் வாழ்ந்த இடங்களைக் காணுகின்ற அந்த வகையிலே மாத்திரம் கிடைக்கின்ற தொகை அதைவிட அதிகம் என்று கணக்கிட்டுச் சொன்னார்கள்.

இவைகளையெல்லாம் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியோடு நடத்திய விவாதத்திலே நான் எடுத்துரைத்த காரணத்தால், மாநில அரசு சுற்றுலா வாரியத்தை நடத்தினால் மத்திய அரசின் உதவி உண்டு - ஒத்துழைப்பு உண்டு' என்று அவர்கள் அறிவித்தார்கள். அதை ஏற்று இங்கு 71-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சுற்றுலா வாரியம்



o பகுத்தறிவு என்னும் ஒரே மருந்தால்தான் மூட நம்பிக்கை என்னும் நோயைப் போக்க முடியுமே தவிர, வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது!

— அறிஞர் அண்ணா

இன்றைக்கு நல்ல முறையிலே பயன்பட்டு வருகின்றது. பெருகிக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவேதான் தமிழகத்திலே பலவேறு நலத்திட்டங்கள் ஏழை எளிய மக்கள் பயனடையக் கூடிய திட்டங்களை அரசின் சார்பில் இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

கடந்த 76-ஆம் ஆண்டுக்கு முன்புகூட நாம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கண்ணொளித் திட்டம் என்றும், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் என்றும், தொழுநோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம் என்றும்- இப்படி ஏராளமான திட்டங்களை நலிந்தோர் நல்வாழ்வுக்காகத் தீட்டிச் செயல் படுத்தி இருக்கிறோம். இந்த ஒன்றரை ஆண்டுக்காலத்தில் நாம் அதைப்போன்ற பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைத் தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களிலே மிகச் சிறப்புற நலிந்தோர் மனம் மகிழ நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாத்திரம் இந்த 1990-91 ஆகிய இந்த ஆண்டில் இதுவரை - இந்த ஆண்டு இன்னும் முழுமையாக நிதியாண்டு முடிவுறவில்லை. நிறைவு பெறவில்லை. இருந்தாலும் 90-91-இல் செங்கை-அண்ணா மாவட்டத்திலே மாத்திரம் 24 ஆயிரத்து 800 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிய ஆட்சி இன்றைய ஆட்சி என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைப்போல முதியோர் உதவித் தொகை பெற்றவர்கள் 34 ஆயிரத்து 630 பேர்.

மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் அவர்களுடைய பெயரால் ஒரு அரிய திட்டத்தை, புதிய திட்டத்தை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டத்தைச் சென்ற ஆண்டு நான் அறிவித்தேன். அந்தத் திட்டப்படி எட்டாவது வரையிலே படித்த ஒரு ஏழைப் பெண் திருமணம் ஆகாமல் இருந்தால் அந்த பெண்ணின் திருமணத்திற்கு 5,000 ரூபாய் உதவி வழங்கப்படும் என்று அறிவித்து, இந்த



கிறார்கள். இந்த 90-91 ஆம ஆண்டு மாத்திரம் செங்கை-அண்ணா மாவட்டத்தில் 1,445 பேர் இந்தப் பயனைப் பெற்றிருக்கிறார்கள்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவாக நலத்திட்டம். கருவுற்ற மகளிர் பேறு காலத்திற்கு முன்பு இரண்டு மாதம், குழந்தை பிறந்தபிறகு இரண்டு மாதம், சத்துணவு அவர்கள் பெற்று அந்தக் குழந்தையைச் சத்தோடுவளர்ப்பதற்காக 200 ரூபாய் என்று தரப்படுகின்ற வகையிலே இந்த '90-91-இல் மாத்திரம் இதுவரையில் 15,786 பெண்கள் செங்கை-அண்ணா மாவட்டத்திலே பயன் பெற்றிருக்கின்றார்கள்.

எனவே நலிந்தோர்கள் நான் சொன்ன கணக்கின்படி 81 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், கிட்டதட்ட 21 கோடி ரூபாய் செலவில் இத்தகைய சிறிய சிறிய திட்டங்கள் - ஆனால் அவர்களுடைய வாழ்வுக்குத் தேவையான பெரிய திட்டங்களாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் 1991-இல் அல்லது 92-இல் நிச்சயமாகக் காஞ்சிபுரம் மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய அளவிற்கு 11 கோடி ரூபாய் திட்டம் நிறைவேறும் என்ற நம்பிக்கையையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்களுடைய குடியிருப்பை நான் இன்றைக்குத் திறந்து வைத்திருக்கின்றேன். காவலர் வேண்டும் என்பதற்கு இந்தியாவிலே முதன்முதலாக ஒரு குழு அமைத்து அவர்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்ததும், அதற்காக ஒரு போலீஸ் கமிஷனை அமைத்ததும் இந்த அரசுதான். இந்தியாவிலே வேறு எந்த ஒரு அரசும் போலீஸ் கமிஷனை அமைத்தது இல்லை. 1970-ஆம் ஆண்டிலேயே போலீஸ் கமிஷன் அமைத்து அதனுடைய பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்திய அரசு இந்த அரசு.

20 ஆண்டுக் காலமாக யாரும் இதற்காக முயற்சி செய்யவில்லை. மீண்டும் நாம் வந்துதான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று இருந்திருக்கிறது. அதைச் செய்திருக்கிறோம். அந்த ஆய்வின் அடிப்படையில், இன்னும் ஏராளமான வசதிகளைக் காவலர்களுக்குச் செய்து தரக் காத்திருக்கிறோம்.

அந்த வசதிகளைப் பெறுகின்ற காவலர்களும் தங்களுடைய கடமையை உணர்ந்து கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்றுரைத்த தலைவன் பிறந்த திருநகரிலிருந்து அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்- அதைக் காத்திட உதவுங்கள். இந்த அரசுக்கு ஒத்துழைப்புத்தாருங்கள் என்று அவர்களையும் கேட்டுக்கொண்டு அந்தக் காவலர்களை நண்பர்களாக மக்கள் மதித்து நடக்கவேண்டும்; நல்ல காரியங்களுக்கு நண்பர்களாக மதித்து நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

## படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், டாக்டர் கலாநிதி அவர்கள் எழுதிய ''எய்ட்ஸ்'' பற்றிய நூலினை வெளியிட்டார். திரைப்பட இயக்குநர் திரு. கே. பாலச்சந்தர் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (28.10.90)




# தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு

**மா. தேவராஜ், இ.ஆ.ப.,**
**கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்.**

சமுதாயத்தில் தேவைகளை உணர்ந்து, தனிமனித ஆதிக்கத்தைத் தகர்த்து, சுரண்டுபவர்களின் பிடியிலிருந்து விடுபட சமுதாயத்திலுள்ளஒவ்வொருவரும் ஒன்று சேர்ந்து கூடி முடிவெடுத்து தங்களின் பொருளாதாரத் தேவைகளை தங்கள் அமைப்பின் மூலமே நிறைவேற்றிக் கொள்ள உதயமெடுத்ததுதான் கூட்டுறவுப் பேரியக்கம். இக் கூட்டுறவுப் பேரியக்கம் உலகின் அனைத்து நாடுகளிலும், அனைத்துத் துறைகளிலும் படிப்படியாகப் பரவி வளர்ந்து இன்று உலகம் முழுமையும் பரந்து உயர்ந்துள்ளது.

## நுகர்வோர் கூட்டுறவு

இவ்வரிய கூட்டுறவுப் பேரியக்கத்தின் ஒரு கிளையாகத் தோன்றியதுதான் 'நுகர்வோர் கூட்டுறவு'. இதன்கீழ் மக்கள் ஒருங்கிணைந்து ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை அமைத்து தங்களின் தேவைகளை அப்பண்டகசாலையிடமிருந்து பெறுகின்றனர். இந்த அமைப்பின் மூலம் வாணிகம் செய்யும் வியாபாரிகள் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு விலையை ஏற்றி பொருள்களைப் பதுக்கி, செயற்கைத் தட்டுபாட்டை உருவாக்கி, கறுப்புச் சந்தை கள்ள வாணிகத்தில் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த முடியும்.

## தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு

கூட்டுறவு இயக்கத்திற்கு இந்தியத் திருநாட்டில் தாய்த் தமிழ்நாடே முன்னோடியாக இருப்பதுபோல் நுகர்வோர் கூட்டுறவுக்கும் தமிழ்நாடே முன்னோடியாக விளங்குகிறது. 1904 ஆம் ஆண்டே திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், சென்னை வாழ் பெருங்குடி மக்களுக்கு, இல்லத் தேவைகளை வழங்கி சேவை செய்ய, சென்னை மாநகரில் அந்நாளிலே வாழ்ந்த பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் 'டியுசிஎஸ்' என்று எல்லாப்பிரிவு மக்களுக்கும் நன்கு அறிமுகமாகியுள்ளது. இந்தியாவிலேயே முதலிலே தோற்றுவிக்கப்பட்ட இக்கூட்டுறவுச் சங்கத்தின் முத்திரையான ஆலமரத்திற்கு ஏற்ப நுகர்வோர் கூட்டுறவு இன்று ஆல்போல் தழைத்து இந்தியாமுழுமையும் வேர்விட்டு உயர்ந்து வளர்ந்துள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில், நுகர்வோர் கூட்டுறவு மூன்று அடுக்குக் கொண்ட அமைப்பாக உள்ளது. மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும், மாவட்ட அளவில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், நகர, பேரூர் அளவில் பிரதமக் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளும் உள்ளன.

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாநில அளவிலும், 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மாவட்ட அளவிலும், 684 பிரதமக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் அவற்றில் 909 கிளைகளும் நகர, பேரூர் அளவிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 2,096 பணியாளர் கூட்டுறவுப்பண்டகச்சாலைகளும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும்தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

மகளிரால் நடத்தப்படும் கூட்டுறவுப் பண்டகச்சாலைகளும் இவற்றுள் அடங்கும். இவையன்றி 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகச்சாலைகள் 32 சிறப்பங்காடிகளையும், 223 சிறிய சிறப்பங்காடிகளையும், 3,400 கிளைகளையும் நடத்தி வருகின்றன. பிரதமக் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் பொது மக்களுக்கும், பணியாளர் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் அந்தந்த நிறுவனத்தின் பணியாளர்களுக்கும், மாணவர் கூட்டுறவுப் பண்டகச்சாலைகள் மாணவ சமுதாயத்திற்கும் அருந்தொண்டாற்றி வருகின்றன.

## தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் ஊரக நுகர்வோர் திட்டம்

தேசீயக்கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் கிராமப் பகுதிகளில், மக்களுக்குத் தேவையான நுகர்பொருள்களைக் கிடைக்கச் செய்ய 'ஊரக நுகர்வோர் திட்டம்' என்ற பெயரில் ஒரு நிதியுதவித் திட்டத்தை 1976-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. தமிழ்நாட்டில்தான் இந்தத் திட்டம் முதன் முதலில் அமல்படுத்தப்பட்டது என்பது ஒரு சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ் தேசீயக்கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பங்குத்தொகை, கடன் மற்றும் மான்யமாக ரூ.17.06 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தமிழக அரசு 1978 ஆம் ஆண்டு ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக்கடை திறந்து கிராமத்தில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களும் பிற நுகர்பொருள்களும் கிடைக்கச் செய்ய 'ஒரு கிராமம் - ஒரு கடை' திட்டத்தைச் செயல்பாட்டுக்கு ஏற்றது. இத்திட்டத்தின் கீழும் கூட்டுறவுகளே தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சாவூர், தென்னார்க்காடு, தர்மபுரி மற்றும் திருநெல்வேலி நீங்கலாக இதர எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கடை திறக்கும் பொறுப்பு கூட்டுறவுகளுக்கு அளிக்கப்பட்டது. அதற்கிணங்க கூட்டுறவுகள், ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் கடைகளைத் திறந்து திறம்பட நடத்தி வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் மக்கட்தொகை 100 உள்ள வருவாய்க்கிராமங்களில்கூட, ஒரு பகுதி நேரக் கடை திறக்கப்பட்டு





மலைப்பகுதிகளில் அரசு நிலம் ஆக்கிரமிக்கப்படுவது சம்பந்தமான பிரச்சினைகளை ஆய்வதற்காக அரசால் திரு. சி. தங்கராஜ், இ.ஆ.ப. தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்களிடம் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். (22-10-1990)

நடத்தப்பட்டு வருகிறது. மேலும் 1984 ஆம் ஆண்டு 1000 குடும்ப அட்டைகளுக்கு மேற்பட்ட நியாய விலைக்கடை என்ற அடிப்படையில் 1000 குடும்ப அட்டைகளுக்கு மேற்பட்ட நியாயவிலைக் கடைகளைப்பிரித்து புதிய நியாய விலைக் கடைகளை எல்லா மாவட்டங்களிலும் திறக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

தற்போது 800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற அரசின் புதிய கொள்கையின்படி, முதற்கட்டமாக 1,200 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரித்து 1,202 புதிய கடைகளைத் திறக்கும் பணி நடைபெற்று வருகின்றது, இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு ரூ.26.10 கோடி ரூபாய் மான்யமாக வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 21,134 நியாயவிலைக் கடைகளில், 20,198 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 128 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில் 118 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவுக் கடைகள் மூலமே அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. ஏறக்குறைய 1.85 இலட்சம் மெட்ரிக் டன் எடை கொண்ட அத்தியாவசியப் பொருட்கள் ரூ.60 கோடி பெறுமானத்திற்கு மாதம் ஒன்றுக்குத் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் கூட்டுறவுகளால் விநியோகம் செய்யப்படுகின்றன எனச் சொன்னால் கூட்டுறவுகள் ஆற்றும் மகத்தான தொண்டு மக்களுக்கு நன்கு விளங்கும். இத்தகைய மிகப் பெரும் செயலைத் தொடர்ந்து சீராகச் செயல்படுத்திட தேவையான நிதியுதவியினைக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு வங்கியிலிருந்து காசுக் கடனாகப் பெற்று நிறைவேற்றி வருகின்றன.

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதில் முன்னின்று நடத்துவது மட்டுமல்லாமல், பிற நுகர்பொருட்கள் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யவும் முனைப்புடன் செயல்படுகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நுகர்பொருட்களை வழங்க இரண்டு மண்டல விநியோக மையங்கள் சென்னையிலும் கோயம்புத்தூரிலும், மத்திய அரசு நிதியுதவி பெற்று நிறுவப்பட்டுள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுகள் விநியோகிக்காத நுகர்பொருளே இல்லை எனலாம். நுகர்வோர் கூட்டுறவுகள் மளிகைச் சாமான்கள், மருந்துப் பொருட்கள், துணி வகைகள், எழுது பொருட்கள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், இல்லத்துக்குத் தேவையான நெடுங்காலம் பயன்படும்தொலைக்காட்சி,குளிர்சாதனப் பெட்டி, அரவை இயந்திரம், தையல் இயந்திரம் மற்றும் எரிவாயு உருளைகள் போன்றஅனைத்துநுகர்பொருள்களையும் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் மக்களுக்குக் கிடைக்கச் செய்கின்றன. மேலும், விற்கப்படும் பொருள்களின் தரத்தைப்பரிசோதனை செய்து, திருப்தியடைய தரப் பரிசோதனைக் கூடங்களை அரசு உதவியுடன் நிறுவியுள்ளன.



நுகர்வோர் நலன் காக்கும் குழுக்கள் அமைத்து, அக்குழுக்களின் கூட்டங்களைக் கூட்டி, நுகர்வோர் குறைகளை அறிந்து அவைகளை நிவர்த்திக்க உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆக, எல்லா வகையிலும் நுகர்வோர் நலன் பேணிக்காக்க முனைப்பான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்கின்றன, நுகர்வோர் கூட்டுறவுகள்.

இத்தகைய நுகர்வோர் கூட்டுறவுகள் தமிழக மக்களுக்கு, வேலை வாய்ப்பு வசதிகளைப் பெரும் அளவுக்கு அளிக்கின்றன. பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தை அளித்து அவர்கள் நலன் பேண பல்வகை வசதிகளைச் செய்து தருகின்றன. முறையான கணக்குகளைப் பராமரித்து அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளையும் கட்டணங்களையும் முறையாகச் செலுத்துகின்றன.

இவ்வாறு, தமிழகத்தில் செயல்படும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், மக்களுக்கு அருந்தொண்டாற்றி வருகின்றன. அவைகளைப் போற்றிவளர்த்துக் காத்தல் தமிழ்ப் பெருங்குடி மக்களின் தலையாய கடமை.

# நூல் நயம்

### ஜய்ஹிந்த் செண்பகராமன்

**ஆசிரியர் : ரகமி**

**வெளியீடு:**
பூரம் பதிப்பகம்
59, ராஜூ நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம்
சென்னை-600 033.

விலை: ரூ.40 பக்கம்: 360

இந்திய நாட்டைச் சேர்ந்த கேரள மாநிலத்தில் பிறந்து, ஜெர்மனி நாட்டுக்குச் சென்று, கல்வி கற்றுத் தேர்ந்து, டாக்டர் பட்டம் பெற்று, ஜெய் ஹிந்த் என்ற வீர முழக்கமிட்டு, இட்லரையே மன்னிப்புக் கேட்க வைத்த இணையற்ற வீரர், மாவீரர் செண்பகராமனின் வாழ்க்கை வரலாற்று நூல் இது.

நூலில் அவர் அறிமுகம் செய்யப் படுவதே, ஒரு சிறப்பு மிக்க நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளது. நாடகக் காட்சி போல அந்நிகழ்ச்சி நமது மனத்தைக் கவருகிறது.

வெளிநாட்டுக்குச் சென்று கல்வி, அல்லது தொழிலில் ஈடுபடும் பற்பல இந்தியர்கள் வெளிநாட்டுப் பெண் களையே திருமணம் செய்து கொண்டு திரும்புவது என்ற மரபு உருவாகியிருந்த நாட்களில், ''இந்தியப் பெண்ணையே மணம் புரிவேன்'' என்று சூளுரைத்து அவ்வாறே செயலாற்றிய பெருமை செண்பகராமனுக்கு உண்டு என்பதை நூலாசிரியர் சுவையுற எழுதியுள்ளார்.

ஜெர்மனி நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கி, ஆங்கில ஏகாதிபத்தியத்தையே அச்சுறுத்திய அடால்ஃப் ஹிட்லரின் அன்பைப் பெற்ற செண்பகராமன், பின்னர், இந்தியரைக் குறித்து ஹிட்லர் தவறாகச் சொல்லிய ஒரு கருத்தைத் திரும்பப் பெற வைத்த நிகழ்ச்சியைப் படிக்கும் போது நமக்கு வியப்பு மேலிடுகிறது.

இனிய எளிய நடை அருமையான நிகழ்ச்சி அமைப்பு, இவ்வாறு சுவை ததும்பும் வகையில் இந்நூல் திகழ்கிறது. செண்பகராமன் தொடர்பான புகைப் படங்களையும் பலரின் புகைப்படங்களை யும் வெளியிட்டு, அவர்களையும் நினைவு கூரும் நூலாசிரியரின் நெஞ்சம் போற்று தலுக்குரியது. பல்வேறு ஆவணங்களின் பிரதிகளை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

— தமிழ்ப்பித்தன்

### காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் (பாகம்-3)

**ஆசிரியர்:விஷ்ணு பிரபாகர்**

**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-20

விலை:ரூ.4 பக்கம்:88

அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கை யில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

இத்தொகுப்பு அண்ணலின் தியாக உள்ளத்தைச் சித்திரிக்கிறது.

### காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் (பாகம்-4)

திரு விஷ்ணு பிரபாகர் எழுதிய இந்நூலையும் காந்திய இலக்கியச் சங்கமே வெளியிட்டுள்ளது. 110 பக்கங்கள் உள்ள இந்நூலின் விலையும் ரூ.4 தான்.

அண்ணல் காந்தியடிகளின் வாழ்வும் வாக்கும் இந்நூலில் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பு.

— மறைமலை

## வரப்பெற்றோம்

### எனது பூமியில்:

**ஆசிரியர் : மா.வே. இரவிச்சந்திரன்,**
**வெளியீடு:** மைதிலி பதிப்பகம்,
54, மெயின் ரோடு,
தென்பாதி-609 111.

விலை:ரூ.4

### ஒரு நூறு தத்துவங்கள்:

**தொகுப்பாசிரியர்: பகம்பொற்கிழார்,**
**வெளியீடு:** பாவலர் பதிப்பகம்,
பாளையம்பட்டி-626 112.

விலை:ரூ.5 பக்கம்:46

### ஆழ்வார்கள்:

**ஆசிரியர் : விஜயம் சரசுவதி,**
**வெளியீடு:** கமலவேணி பதிப்பகம்,
135, சாந்தி நகர்,
குரோம்பேட்டை,
சென்னை-500 044.

விலை:ரூ.5 பக்கம்:64

### மெல்ல வரும் தென்றல்

**ஆசிரியர்: தேவிபாலா**

**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்,
17, கங்கை அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-26.

பக்கம்: 132 விலை ரூ.13/-

பொருத்தமற்றவனைக் கணவனாக அடைந்த ஒரு பெண்ணின் கதை. எதிர் பாராத திருப்பங்கள் பல உண்டு. கதை சஸ்பென்ஸாகச் சொல்லப்பட்டிருக்கும் முறை நன்றாக இருக்கிறது.

இந்நூலில் இரண்டாவதாக உள்ள சிறுகதை நாவலை விடச் சிறப்பாக உள்ளது.

— குமாரசாமி

### உழைப்பால் முன்னேறுவது எப்படி?

**ஆசிரியர்: மயிலைத் தொண்டன்**

**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு),
(100 அடி ரோடு அருகில்), சூளைமேடு,
சென்னை-600 094.

பக்கம்: 80 விலை ரூ.7.50

உழைப்பே உயர்வைத் தரும் என்ற உண்மையை இந்நூலில் கலீலியோவி லிருந்து இன்றைய சென்னை நகர வர்த் தகர் வரை மேற்கோள் காட்டி விவரிக்கப் பட்டிருக்கிறது.

சுவையான உண்மைச் சம்பவங்கள், சாதனைகள் கூறப்பட்டிருக்கும் விதம் நன்றாக இருக்கிறது.

### பழமொழிகளில் விலங்கினம்

**ஆசிரியர்: ரமா வேல்சாமி**

**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

விலை:ரூ.5 பக்கம்:42

'அக்கரை மாட்டுக்கு இக்கரைப் பச்சை' என்று துவங்கி 'வௌவால் அடைகிற வீட்டில் குடியிருப்பது எப்படி?' என்பதோடு முடிகிறது. இந்நூல் 445 பழமொழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

மிகுந்த ஆர்வத்தோடு பழமொழிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நாம் அறிந்தவை, அறியாதவை உண்டு.

ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 'உங்களுக்காக...' என்ற அறிவுரை அழகாகவுள்ளது.

---

**அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா:**

# கூட்டுறவு ஒரு கலங்கரை விளக்கு

**ஏ.ஜே. சீனிவாஸ், தனி அலுவலர்,**
**தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை.**

கூட்டுறவு என்பது சமூகத்தில் நலி வுற்றவர்களுக்கும் பின்னடைந்தவர் களுக்கும் பாதுகாப்பு அளிப்பதால் ஒரு சமூக இயல தத்துவம் ஆகிறது. கூட்டுறவு என்பது பண்டகசாலை, விற்பனை, விநியோகம் ஆகிய துறைகளில் ஈடுபடு வதால் ஒரு பொருளாதாரத் தத்துவம் எனலாம். ஏற்கெனவே மனிதனால் மேற் கொள்ளப்பட்ட முதலாளித்துவம், பொது உடைமைச் சமதர்மம் போன்ற தத்துவங் களில் நல்ல அம்சங்களை மட்டும் எடுத்துக் கொள்வதால் கூட்டுறவு என்பது தத்துவங் களிலிருந்து பிறந்த தத்துவமாகும்.

**'தனி உடைமைக்கும், பொது உடைமைக்கும் இடையே அமைக்கப்பட்ட பாலம் தான் கூட்டுறவு' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.**

**தற்போது கூட்டுறவின் கொள்கை களாக (1) அனைவரும் உறுப்பினராகலாம் (2) மக்கள் ஆட்சி நிர்வாகம் (3) முதலீட்டுக்கு அளவான பலன் (4) உபரித் தொகையில் நியாயமான பங்கு (5) கூட்டுறவுக் கல்வி மற்றும் (6) கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு ஆகிய 6 கொள்கைகளையும் கூறலாம்.**

ஒரு கூட்டுறவு அமைப்பில் சேரவும், தொடர்ந்து நிற்கவும், விலகவும் ஒரு வருக்கு முழு சுதந்திரம் எண்டு, என்ப தாகும். சாதி, சமயம், அரசியல் கோட் பாடுகளுக்கு அப்பாற்பட்டு பொதுமை யான மக்கள் நிறுவனமாகக் கூட்டுறவு அமைப்பு விளங்குவதற்கு இந்த முதற் கொள்கை துணை செய்கிறது. சாதி சமய இன வேறுபாடற்ற ஒரு ஒருமை உணர்வை இந்தக் கொள்கை உருவாக்குகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக அமைப்புகள். அதனுடைய விவகாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவராலோ அல்லது அவர்களது ஒப்புதலைப் பெறக்கூடிய வகையில் நியமிக்கப்பட்டவர்களாலோ நிர்வகிக்கப்பட வேண்டும். 'ஒரு உறுப்பினர் ஒரு வாக்கு' என்கிற சம உரிமைப் பண்பு, பிற வணிகக் குழுக்களில் உள்ள 'ஒரு பங்கு ஒரு வாக்கு' என்கிற நிலைமைக்கு மாறுபட்டது. எனவே, கூட்டுறவு மனிதத் தன்மைக்கு முதலிடம் அளிக்கிறது. செல்வத்துக்கு அல்ல. இதனால் சமத்துவம் உறுதி செய்யப்பட்டு ஜனநாயகத்துக்கு நிலையான இடம் அளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் முழு அதி காரமும் சங்க உறுப்பினரைக்கொண்ட பேரவைக்கு அளிக்கப்படுகிறது. பேரவை நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை அதனிடம் ஒப்படைக்கிறது. கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர் கூட்டத்துக்கு வராமலேயே வாக்களிக்கும் முறை இல்லை. கூட்டுறவுச் சங்கத்தின் பேரவைதான் மக்களாட்சி மாண்பு மலரும் தொட்டில் என்று கூறலாம்.

'உபரியில் பங்கு' என்கிற கொள்கை ராக்டேல் முன்னோடிகளின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இக்கொள்கை கூட்டுறவுச் சங்கங்கள் வணிக ரீதியில் இயக்கப்படவேண்டும் என்பதை வலியிறுத்துகிறது.

கூட்டுறவு இயக்கத்தில் முதலீட்டின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்க இயலாது. பொதுவாக, கூட்டுறவுச் சங்கங்களில் வசதி குறைந்த மக்கள் அங்கத்தினர் களாகச் சேருகிறார்கள். அவர்கள் சேமித்து வைத்த சிறு தொகையைப் பங்கு முதலீடு செய்யும்போது அவர்கள் பெரும் தியாகத்தைச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, உறுப்பினர்கள் செய்யும் முதலீட்டுக்கு அளவாக வட்டிஅளிப்பது அவசியமாகும்.

கூட்டுறவுக் கல்வி என்பது கூட்டுறவு இயக்கத் தத்துவங்களில் முக்கியமான ஒன்றாகும். பொருளாதாரம், ஜனநாயகம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கை களிலும், தொழில் நுணுக்கங்களிலும், மக்களுக்கும், பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் கல்வி புகட்ட கூட்டுறவு அமைப்பு முன் வரவேண்டும். கூட்டுறவு இயக்கம் தன்னிச்சையான அடிப்படையில் இயங்கு வதால் உறுப்பினர்கள் சங்கங்களின் தீர்மானங்களையும், செயல்களையும் உரிய முறையில் தெரிந்துகொள்ளத் தொடர்ச்சியாகக் கல்வி அளிப்பது அவசிய மாகும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் தாங்கள் சார்ந்துள்ள சங்கத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் சங்கத்தின் மூலம் தாங்கள் பெறவேண்டிய உரிமை களையும் நன்கறிந்து செயல்பட கூட்டுறவுக் கல்வி உதவுகிறது. கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றிய தெளிவான கல்வி பெற்ற உறுப்பினர் அச்சங்கத்தில் அழியாத செல்வம் என்றே சொல்லலாம்.

**கூட்டுறவு என்பது ஒருங்கிணைந்த ஒரு கல்வி முறையாகும்**

இறுதியாகக் கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு என்பது பரஸ்பர உதவியாகும். எல்லாக் கூட்டுறவு அமைப்புகளும் தங்களுடைய உறுப்பினர்கள், நிர்வாகக் குழுக்கள், இவர்களின் நலனைச் சீரிய முறையில் பாதுகாக்க மாநில, தேசிய, அனைத்துலக நிறுவனங்களோடு பயனுள்ள வகையில் உறவாட வேண்டும். வலிமை யற்றவர்கள் எவ்வாறு கூட்டுறவின் மூலம் வலிமை பெறுகிறார்களோ அவ்வாறே நலிவுற்ற சங்கங்கள் உயர்மட்டக் கூட்டுறவு நிறுவனங்களோடு இணைந்து செயலாற்று வதன் மூலம் வலுவான அமைப்புகளாக மாற வாய்ப்புகள் ஏற்படும். இதனால், மக்களுக்குக் கூட்டுறவின் பணிகள் வலிவும் பொலிவும் பெறுகின்றன.

**எனவே, கூட்டுறவு என்பது தத்துவம் மட்டும் அல்ல, வாழ்க்கை நெறியாகவும் திகழ்ந்து மக்களுக்கு வழிகாட்டும் கலங் கரை விளக்கமாகும்.** வெற்றி முழக்க மாகவோ, கருத்துக் கோவையாகவோ, காற்றில் கரையும் கீதமாகவோ இல்லாமல், சமூகப் பொருளாதாரப் பிரச்சினை களைத் தீர்க்க உதவும் மாமருந்தாக இந்தத் தத்துவம் உதவுகிறது.

**''எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்ப தான இடம் நோக்கிச் செல்கின்றதிந்த வையம்''.**

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைக்கும் பணி யில் இன்று மனித இனம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. **''எல்லோரும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரும் எல்லோருக்கும்'' என்ற சமதர்ம தத்துவ விளக்கமாக அமைந்தது கூட்டுறவாகும். அந்த நெறியில் சமதர்மச் சமுதாயம் அமைய மனித மனத்தை ஆள்கின்ற சக்தியாக, இணைப்புச் சங்கிலியாக இருப்பது கூட்டுறவுச் சங்கமாகும்.**

''எங்கெங்கு காணினும் கூட்டுறவு'' என்ற சூழ்நிலை நாடெங்கும் உருவாக வருகிறது. அதற்குக் கூட்டுறவுத் தத்துவ என்ற வாழ்க்கை நெறிதான் அடித் தளமாக இருந்து வளர்க்கிறது; வழி காட்டுகிறது; கூட்டுறவுடன் இணைந்து வாழும்போதுதான் கூட்டுறவுத் தத்துவ எப்படியெல்லாம் மனித சமுதாய மே பாட்டுக்கு உதவுகிறது என்பது புரியும்.

சிந்தித்துப் பார்த்தால், கூட்டுற என்பது ஏறத்தாழ ஒரு விரிந்த குடும் வாழ்க்கை என்பது புலனாகும். மனி நேயத்தின் காரணமாகத் தங்களது குடும் எல்லையைக் கொஞ்சம் விரிவுபடுத் விசாலப்படுத்தி உறவாடுவது என்ப வாழ்க்கையின் உயர்ந்த தத்துவத்தி விளக்கமாகும்.

# இதயத்தை வென்றவர்

— பேரறிஞர் அண்ணா

நேரு நல்ல இதயம் படைத்தவர்; அவரிடமிருந்த அறிவாற்றல் வேறு பலரிடம் இருந்திருக்கிறது. இனியும் இருந்திடலாம்.

ஆனால், அறிவாற்றலுடன் அவருக்கு இதயம் இருந்தது. பாலைவனத்தைச் சோலைவனமாக்க, மனிதனின் கடினமான உழைப்பைக் குறைத்திட உதவும் கருவிகளைத் தொழிற்சாலைகளில் அமைக்க, நாட்டிலே புதுக்கோலம் எழுந்திடச் செய்திட அறிவாற்றல் வேண்டும். அதனைப் பெற்றிருந்த அப்பெருமகன் குழந்தையின் மழலை கேட்டதும் தானும் குழந்தையாகிவிடும் இயல்பினை, ஏழை வதைபடுவதைக் காணும்போது அவன் நிலை எண்ணிக் கண்ணீர் சிந்திடும் இரக்கத்தினை, நல்லிதயத்தைப் பெற்றிருந்தார்.

ஆட்சியிலே அவர் கையாண்ட செயல்முறைகள் குறித்துக் கருத்து மாறுபாடு கொண்டோருங்கூட அவரிடமிருந்த அந்தப் பண்பினுக்குப் பாராட்டுத் தெரிவித்திடத் தயங்கியதில்லை.

நிலை உயர-உயர- நெரித்த புருவத்தினராகி விடுவதும், அதிகாரம் குவியக்குவிய 'ஆள் மிரட்டி' ஆகிவிடுவதும் உண்டு. அரசியல் உலகில் இத்தகையோர் பலர் உளர். ஆனால் நேருவின் நிலையும், புகழும் அதிகாரமும், ஓங்க, ஓங்க அவருடைய இதயத்திலே கனிவு மிகுதியும் இடம் பெற்றது. கண்கள் கவிபாடலாயின.

என்னிடம் இத்தனை அன்பு காட்டிடும் மக்களுக்கு நான் நிரம்பச் செய்திட வேண்டுமே; முடியவில்லையே, செய்தளித்திருப்பது போதாதே என்ற கவலை கப்பிக் கொள்ளும் நிலை, அவருக்கு அடிக்கடி ஏழ்மையின் கொடுமைகளைக் காணும் போதெல்லாம்.

நிலை உயர, உயர, தலைவர்களுக்கும்மக்களுக்கும் இடையில் ஒரு பயங்கரமான இடைவெளி அமைந்துவிடுவதுண்டு. பண்டித நேரு இதற்கு இடம் கொடுக்கவே இல்லை.

மக்களுடன் கலந்து உலவிட- உரையாட- அவர் உள்ளம் அறிந்திட அவர் எப்போதும் துடித்து வந்தார். மக்களும் அவரைக் காண்பதிலே தனிக்கவர்ச்சி கண்டனர்.



பாராளுமன்றத்திலே முதியவர் நேரு அமர்ந்திருந்தார். திடல்களிலேயோ, இளைஞர் நேரு உலவினார்; உற்சாகமளித்தபடி, உறுதி அளித்தபடி நம்பிக்கையூட்டியபடி.

சிறந்த ஜனநாயகப் பண்பாடு பூத்திட வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறைகாட்டி வந்தார். அவர் ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ள அந்தப்பண்பு, பாழ்படாமல் இருந்திடச் செய்திடல் வேண்டும். அனைவருக்கும் அதிலே பொறுப்பும் பங்கும் நிச்சயமாக உண்டு.

நிலை உயர, உயர, தலைவர்கள் எனக்கு இதற்கெல்லாம் நேரம் இல்லை என்று கூறிக்கொள்வதைப் பெருமைக்கு அடையாளமாக்கிக் கொள்வர். பண்டித நேரு அவ்விதம் இருந்ததில்லை. பார் புகழ் நிலை பெற்ற பிறகும், அவருக்கு நல்ல கவிதைகளைப் படிக்க, கேட்க, இசை நுகர, நாடகம் கண்டுகளித்திட, மலைவளம் காண்பதிலே மகிழ்ச்சி பெற, மலர் மணம் நுகர, மழலைகளைக் கேட்டு இன்புற, ஓவியம் கண்டு வியந்திட, நேரம் கிடைத்தது; நினைவு இருந்தது; காரணம், அவர் மூளை பலத்தை மட்டும் காட்டி, மக்களை வியப்படையச் செய்திட்ட தலைவர் அல்ல; தமது இதயத்தைக் காட்டி மக்களின் இதயம் வென்றவர். அதன் காரணமாகவே பல்வேறு அரசியல் கட்சியினரும் அவருடைய நினைவைப் பசுமையாகக் கொண்டுள்ளனர். அவருடைய நோக்கம் நிறைவேற தத்தமக்குச் சரியென்று தோன்றிடும் முறையில் பணியாற்ற விழைகின்றனர்.

★ மனித இனம் பல தோல்விகளைக் கண்டிருக்கிறது என்றாலும், வரலாற்றில் அது பெற்ற வெற்றிகளும் சாதனைகளும் மகத்தானவை. அரசியல் சுதந்திரம் மட்டும் உண்மையான சுதந்திரம் ஆகி விடுவதில்லை. பொருளாதாரச் சுதந்திரமும், ஆன்மீக விடுதலையும் அவனுக்கு அவசியம் வேண்டும். அப்போது தான் மனிதன் முழு வளர்ச்சி பெறுகிறான். பிறவி எடுத்த பயனை அடைகிறான். உலகில் அமைதியும் ஒழுங்கும் நிலவ வேண்டுமானால், உலக நாடுகள் எல்லாம் விடுதலை பெற்றுத் தன்னாட்சி செலுத்த வேண்டும்.

— நேரு





# மங்காத ஜோதி



அடிமையாய் இருந்த நாடு
ஆங்கிலர் பிடியைப் போக்க,
துடித்திட்ட உணர்வி னாலே
தொண்டரின் அணியைத் தேர்ந்து
கொடியதோர் தொல்லை ஏற்று
கொடுஞ்சிறை துணிந்தே நாடி
நெடியதோர் சுதந்தி ரப்போர்
நெறியினில் சேர்ந்தார் நேரு.

விடுதலை வேட்கை கொண்டே
விளங்கிய வல்லோர் எல்லாம்
படுகளம் கண்ட போதும்
பதறிடா நெஞ்சம் கொண்டார்
கடுகள வேனும் வீரம்
குன்றிடா நிலையைப் பெற்றார்;
கெடுதலே கோடி வந்தும்
கேட்டனர் சுதந்தி ரத்தை!

கல்வியிற் சிறந்த நேரு
கனலெனக் களத்தில் நின்று
வல்லதோர் போரைச் செய்தார்
வணக்கத்திற் குரியர் ஆனார்
செல்வத்தைக் கொள்ளை கொள்ளும்
தீயரை விரட்டும் போரில்
சொல்லொணாத் துயரம் உற்றும்
தொய்வினை உற்றா ரில்லை!

பூத்திட்ட சுதந்தி ரத்தால்,
புதுமைசேர் அழகு விஞ்ச
மாத்திறம் கொண்ட மேதை
மாணிக்க நேரு, ஆட்சிச்
சாத்திரத் தலைமை ஏற்று,
சட்டங்கள் பலவே ஆற்றி
நேத்திரம் போன்றே நன்மை
நித்தமும் விளைத்தார் அன்பாய்!

திட்டங்கள் பலவும் தந்தார்;
திங்களாய்க் குளிர்ச்சி தந்தார்;
பட்டமே படித்துப் பெற்ற
பண்பினால் உயர்வு பெற்றார்;
'கட்டிய கோபுரம்' ஆனார்;
கவிதைக்குத் தலைவ ரானார்;
மட்டிலாத் தொண்டி னாலே
மங்காத ஜோதி ஆனார்!



-புலவர் சி. துரைசுவாமி



# கீழ்பவானி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**த**மிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், கீழ்பவானி பாசனப் பகுதிகளில் 1982-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பாசனப் பகுதி யின் வாய்க்கால்களில் அமைந்துள்ள மதகுகளில் இருந்து செல்லும் மண்வாய்க்கால்களில் நீர் விரயத்தைத் தடுப்பதற்காக அவைகள் காரை வாய்க்காலாக மாற்றி அமைக்கப்படுகின்றன. இதில் பாசன நீரை எளிதாகக் கையாள்வதற்கு நீர் பிரிக்கும் தொட்டிகள், நீர் திருப்புத் தொட்டிகள், வண்டிப் பாதை அமைப்புகள், கால்நடைக் கடப்புகள் ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. பூமிக்கடியில் குழாய் பதித்தும், பாசன நீர் எடுத்துச் செல்லப் படுகிறது.

**ச. சவடமுத்து**
**தலைமைப் பொறியாளர்**
**வேளாண்மைப் பொறியியல் துறை**



கீழ்பவானிப் பாசனப் பகுதியில் பாசன நீரை எளிதாகவும், சிக்கனமாகவும் கையாள்வதற்கு ஒரு மதகின் பாசனப் பரப்பு சுமார் 40 ஏக்கருக்கு மேலாகவும், 80 ஏக்கருக்குள்ளாகவும் (விநாடிக்கு 0.70 கன அடி முதல் 1.40 கன அடி வரையிலான நீர்வரத்து) இருந்தால் நீர்

**பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், நீர் விரயம் தடுக்கப்படுகிறது. அனைத்து விவசாயிகளும் ஒரே காலத்தில் பயிரிட முடிகிறது. தண்ணீர் சம்பந்தமான சச்சரவுகள் தீர்க்கப்படுகின்றன.**

உபயோகம் சிறப்பாக இருக்கும் என்பது கீழ்க்கண்ட காரணங்களினால் தெரிய வந்துள்ளது:

1. நிலத்தின் வாட்டம்.
2. நிலத்தில் நீர் உட்புகும் தன்மை
3. பயிரின் வேர்ப்பரப்பின் ஆழம்
4. நிலத்தின் மேற்பரப்பின் தன்மை
5. நீரின் அளவு.

ஆனால், கீழ்பவானி பாசனப் பகுதிகளில் உள்ள மதகுகளின் பாசனப் பரப்பு சுமார் 10 ஏக்கரில் இருந்து 200 ஏக்கர் வரை உள்ளது. 40 ஏக்கர் பாசனப் பரப்பை விடக் குறைவான மதகில் விடப்படும் நீரின் பெரும் பகுதி நிலத்தில் உறிஞ்சப்பட்டு வீணாவதால் தேவையான அளவில் பாசன நீர் கிடைப்பதில்லை. பாசனப் பரப்பு 80 ஏக்கருக்கு மேலாக உள்ள மதகுகளில் விடப்படும் நீர் எளிதாக ஒரு விவசாயியினால் கையாள முடிவதில்லை.

மேலும், நிலத்தில் வாட்டம் அதிகமாக இருப்பதால், மேல் மண் அரித்தும் செல்லப்படுகிறது. இம்மதகுகளில் மேற்பகுதி விவசாயிகள் தேவைக்கு அதிகமான பாசன நீரை எடுத்துக் கொண்டு கீழ்ப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையை விடக் குறைவான நீரை விடுவதால் மதகில் எல்லாப் பாசனப் பரப்பிலும் ஒரே காலத்தில் பயிர்ச் சாகுபடி செய்ய முடிவதில்லை. இதனால், பாசனக் காலத்தினை நீட்டித்துத் தேவையான நீரை விட அதிகமாகச் செலவு செய்ய வேண்டியுள்ளது.



எனவே, பாசன நீரைச் சிக்கனமாகவும், எளிதாகவும் கையாண்டு மதகின் மேற்பகுதி விவசாயிகளும், கீழ்ப்பகுதி விவசாயிகளும் ஒரே நேரத்தில் சமமாகப் பாசன நீரைப் பெறுவதற்கு மதகின் பாசனப் பகுதிகள் 80 ஏக்கருக்கு மேல் உள்ள பாசனப் பகுதிகளை 40 ஏக்கரில் இருந்து 80 ஏக்கருக்குள்ளாக உள்ள பகுதிகளாகப் பிரித்து பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே காரை வாய்க்கால் அமைக்கப்படுகிறது.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம்: 1. நீர் விரயம் தடுக்கப்படுகிறது. 2. நீரை எளிதாகக் கையாள முடிகிறது. 3. அனைத்து விவசாயிகளுக்கும் நீர் சமமாகப் பங்கிட்டுத் தரப்படுகிறது. 4. கடைகோடி வயல்களுக்கும் பாசன நீர் கிடைப்பதால் பயிர் செய்யும் நிலத்தின் பரப்பு அதிகரிக்கிறது. 5. அனைத்து விவசாயிகளும் ஒரே காலத்தில் பயிரிட முடிகிறது. 6. பாசன நீரின் சமமான பங்கீட்டினால் விவசாயிகளிடையே பாசன நீர் சம்பந்தமான சச்சரவுகள் தீர்க்கப்படுகின்றன. 7. மதகில் மேற்பகுதி நிலங்களில் நீர்க்கசிவு காரை வாய்க்காலினால் தடுக்கப்படுவதால் விளைச்சல் அதிகரிக்கிறது.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பாசன விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டு விவசாயிகளும், இத்திட்டத்தில்முழுப் பங்கு கொள்கின்றனர். திட்டப் பணிகள் சங்கம் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் எக்டேர் ஒன்றுக்கு ரூ.3,200 வீதம் செலவு செய்யப்படுகிறது.

### பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு அரசு அளிக்கும் சலுகைகள்

கீழ்பவானிப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மதகுத் துவக்கத்திலிருந்து 5-8 எக்டேர் பிளாக்குகள் வரை செய்யப்படும் கால்வாய்க் கட்டுமானப் பணிகள் மற்றும் இதரப் பண்ணை மேம்பாட்டுப் பணிகளுக்கான செலவுத் தொகை முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுக்கு அத்தொகை முழு மானியமாக வழங்கப்படுகிறது. 5-8 எக்டேர் பிளாக்குகளுக்குள் செய்யப்படும் பண்ணை மேம்பாட்டுப் பணிகளுக்கான செலவுத் தொகையில் 50% விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. மீதி 50 சதவிகிதம் கடனாக அனுமதிக்கப்படுகிறது.

மேற்படி கடன் தொகை வட்டியுடன், வேலை செய்து முடித்த மூன்றாம் ஆண்டில் இருந்து எட்டாம் ஆண்டு வரை, 5 தவணைகளில் நிலவரியுடன் வசூலிக்கப்படும். முதல் இரண்டு ஆண்டுகளில் பணம் ஏதும் கட்டத் தேவையில்லை.

அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா:

# கால்நடைப் பராமரிப்பு



தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழாக வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற லட்சியத்துடன் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், சுயமாகவே வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் மத்திய மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்றவும், கால்நடைகளை அபிவிருத்தி செய்யவும் இத்துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப் பட்டுச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன.

வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு, அரிய பல ஆக்கபூர்வமான திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மானிய விலையில் கறவைப் பசுக்கள், கோழிகள், வாத்து, பன்றி இனங்கள் விநியோகிக்கப் படுவதுடன், அரசின் அங்கமான மகளிர் மேம்பாட்டுக் கழகம், பிற்பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம், ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதி வசதி பெறவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. கால்நடைத் தீவனப் பயிர் வளர்ப்பு, கன்றுகள் வளர்ப்பு


டாக்டர்
**தி.க. கோவிந்தராசன்**
**இயக்குநர்,**
**கால்நடைப் பராமரிப்புத்துறை**


போன்ற இதர பணிகளுக்கும் அரசு மானியங்கள் வழங்கி வருகின்றது. இத்திட்டங்களின் மூலமாக பழங்குடியினர், மலைவாழ் மக்கள் மற்றும் வரட்சிப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் தனிக் கவனம் செலுத்தப்பட்டு நன்கு பயன் அடைந்துள்ளனர்.

பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு, சிறந்த கால்நடைப் பராமரிப்பு வசதிகளை அளிப்பதற்குக் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் மற்றும் கேந்திர கிராமத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் 30.6.90 முடிய 158 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 21 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் செயல்படுகின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் 2 கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் கோழியின விரிவாக்க நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும் கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மாநில உதவியுடன் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு முதல் கோழிகளுக்கான நோய்கள் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் செயல்பட்டு வருகின்றது.

1989-90-இல் (28.2.90) புள்ளி விவர அறிக்கைகள் மூலம் தமிழகத்தில் கோழி முட்டை உற்பத்தி 2461.5 மில்லியன் ஆக உயர்ந்துள்ளது.



30.6.90 முடிய கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தமிழகத்தில் 10,981 உறுப்பினர்களும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 1,72,366 உறுப்பினர்களும் பயன்பெற்று வருகின்றனர். 1971-72 முதல் தமிழகத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த வளர்ச்சி பெற்று வருகின்றன. 30.6.90 முடிய உள்ள காலத்தில் 1,666 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மூலம் சங்க உறுப்பினர்கள் கடனுதவி பெற்று தரமான ஆடுகளை வாங்கி, பராமரித்துப் பயன் அடைந்து வருகின்றனர். உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி குடற்புழு நீக்கம், உண்ணி நீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு ஊசிகள் போன்ற பணிகளைக்



கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்கள் கவனித்து வருகின்றனர்.

ஆடுகளுக்கு இறப்பின் மூலம் அதிக நஷ்டம் அடையா வண்ணம் காப்பீடு செய்வதற்கும் வழிவகைகள் செய்யப் பட்டுள்ளன. இது தவிர ஆடுகள் மரண நிதி என்ற நிதியினையும் ஒவ்வொரு சங்கமும் பராமரித்து வருகின்றது. சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டு முடிய 3,570 ஆடு அலகுகள் விநியோகிக்கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது. மேற்கூறிய காலம் முடிய 106.83 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின் கீழ், 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென ரூ.83 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் ரூ.38.21 இலட்சம் இக்கழகம் வழங்கியுள்ளது.• தமிழ்நாடு அரசின் மூலம் ரூ.12.7 இலட்சம் அரசுப் பங்குத் தொகையாக முதலீடு செய்யப்பட்டுள்ளது

சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டு 1976-77 முதல் 1988-89 முடிய 21,975 யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு யூனிட்டுக்கு (அலகு) 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் ஆகும். 1988-89-இல் யூனிட் ஒன்றுக்கு ரூ.7,000 வழங்கப்படுகிறது. அதில் சிறு விவசாயிக்கு 25% நடுத்தர விவசாயிகளுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்கட்கும் $33\frac{1}{3}$% மானியமாக வழங்கப்படுகிறது.

மீதி உள்ள தொகை அரசுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. 1988-89 முடிய ரூ.276.23 இலட்சம் மானியமாக வழங்கப் படுகிறது. 1989-90 ஆம் ஆண்டிற்கு 1,224 யூனிட்டுகள் வழங்கப் பெற்று ரூ.33.84 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

வடார்க்காடு, தென்னார்க்காடு, தர்மபுரி, சேலம், திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் வாழும் 16,738 பழங்குடி மக்கள் ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தால் பயன் அடைந்துள்ளனர். 1976-77 முதல் 1989-90 வரை இத் திட்டத்தின் கீழ் அரசு மானியமாக 263.15 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு வைக்கோல் தீவனம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான போக்குவரத்துச் செலவினம் அரசு மானியமாக வழங்கப்படுகின்றது.

மேச்சேரி இன ஆடுகள் சின்னசேலம் ஆட்டுப்பண்ணையிலும் ராமநாதபுரம் மற்றும் வேம்பூர் இனம் சாத்தூர் ஆட்டுப் பண்ணையிலும் வளர்க்கப்படுகின்றன. ஒசூர் பண்ணையில் மான்டியா மற்றும் கொரிடல் இன ஆடுகள் வளர்க்கப் படுகின்றன.

செட்டிநாடு மற்றும் திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் 'கீழக்கரைசல்' இன ஆடுகள் வளர்க்கப் பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடுகளும், சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையில் ஜமுனா பாரி இன வெள்ளாடுகளும் வளர்க்கப் படுகின்றன.

ஐரோப்பிய சமூகப் பொருளாதாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம், செங்கை அண்ணா, வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.13.67 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் 60 உயரின டார்செட் பெட்டை ஆடுகளும், 10 கிடாக்களும் வெளிநாட்டிலிருந்து (இங்கிலாந்து அல்லது ஆஸ்திரேலியா) இறக்குமதி செய்து ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் வைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த ஆடுகள் வாங்குவதற்கு ரூ.3.50 இலட்சம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மேற்படி உயரின டார்செட் செம்மறிக் கிடாக்களை உள்ளூர் இன ஆடுகளுடன் இனச் சேர்க்கை செய்து, 50 விழுக்காடு கலப்பினக் கிடாக்களை உற்பத்தி செய்து, இக்கிடாக்களை விவசாயிகளுக்கு விநியோகித்து அவர்களுடைய உள்ளூர் இன ஆடுகளின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதனால் உள்ளூர் இன ஆடுகளின் உடல் எடை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பாவேந்தர் நூற்றாண்டு:



எளியநடையில் தமிழ்நூல்
எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக
இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில்
புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும்
பெயர்களெலாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு
சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச்
செய்வதுவும் வேண்டும்!
எளிமையினால் ஒருதமிழன்
படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும்
நாணிடவும் வேண்டும்!

124058.

## மாணவர் பக்கம்

# கூட்டுறவு

—நீரை. அத்திப்பூ



நாருபல கூட்டுசேர
நல்லகூடு அமையுது!
நாளும்சிறு குருவிகூட
நன்மைஇதை உணருது!

நூறுபேரு கூட்டுறவில்
சங்கபலம் கூடுது!
நூறில் ஒன்று குறை என்றாலும்
நொடிஞ்சு போயி வாடுது!



கடன்கிடைத்தால் வீடுகட்டிக்
கழனிவெட்டி வாழலாம்!
கண்டிப்பாக வீட்டுநலம்
நாட்டுநலம் கூட்டலாம்!

இடம் கொடுத்தால் ஏமாற்றுகிற
எண்ணம் நம்மை அழித்திடும்!
இதை உணர்ந்து கடன் அடைத்தால்
இதயவாழ்வு செழித்திடும்!



## பறக்கும் ரயில்!

பறக்கும் ரயில் ஒன்று விரைவில் வர இருக்கின்றது. இந்தப் பறக்கும் ரயிலுக்குச் சக்கரங்கள் கிடையாது. ஒற்றைத் தண்ட வாளத்தின் மீது, எலக்ரானிக் முறையிலே காந்த மண்டலம் ஒன்று உருவாக்கப்படும். காந்த மண்டலத்தின் மீது மிதந்தவாறு இந்தத் தண்டவாளத்தின் மேலாக இந்த ரயில் பறந்து செல்லும். இது மணிக்கு 480 கிலோ மீட்டர்களுக்கும் அதிகமான வேகத்தில் பறக்கக் கூடியதாகும். இந்த ரயில் தடம் புரளும் வாய்ப்புகள் மிகவும் குறைவாகும். அதற்கேற்ற விதத்தில் இந்த ரயிலின் பெட்டிகள் வடிவமைக்கப்படும்.

சக்திமிக்க காந்த மண்டலத்தின் மீது இந்த ரயில் பறப்பதால், உராய்வினால் ஏற்படும் விரிசல்களோ, சேதமோ ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. சாதாரண ரயில்களுக்குத் தேவைப்படுவதைக் காட்டிலும் குறைவான மின்விசையே இதற்குத் தேவைப்படும். இந்த ரயிலுக்கு ''மாக்லெவ்'' (Maglev) என்று பெயர்.

'மாக்லெவ்' ரயிலின் மாதிரி அமைப்புகள் ஜப்பானிலும், மேற்கு ஜெர்மனியிலும் உருவாக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் ஆர்லண்டோ சர்வதேச விமான நிலையத்திலிருந்து 'டிஸ்னி வோர்ல்ட்' வரையில் 30 கிலோ மீட்டர் தூரத்திற்குப் ''பறக்கும் ரயில்'' திட்டமொன்றைச் செயல்படுத்தும் பணியை மேற்கொள்ள சில ஜப்பானிய நிறுவனங்கள் உத்தேசித்துள்ளன.

—அமெரிக்கத் தகவல் நிலையம்



# கேள்வியும் பதிலும்...

கே: நாய்கடிக்குப் போடப்படும் 'ராபியூர் வாக்சின்' வேறு எந்த மிருகங்கள் கடித்தால் போடப்படுகிறது?

ப: பூனை, குரங்கு, ஒட்டகம், குதிரை ஆகிய மிருகங்கள் கடித்தால் 'ராபியூர் வாக்சின்' போடப்படும்.

கே: பதநீரில் உள்ள சத்துக்கள் எவை?

ப: வெடியுப்பு, புரதச்சத்து, சர்க்கரைச் சத்து, உலோகம்-சாம்பல் சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து, இரும்புச் சத்து, வைட்டமின் 'சி' சத்து, PH ஆகியவைகள் பதநீரில் உள்ளன.

கே: கோபர் நிக்கஸ் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தது என்ன?

ப: எல்லாக் கோள்களும் சூரியனைச் சுற்றிச் சுழன்று வருகின்றன என்பதைக் கண்டுபிடித்துக் கூறினார்.

கே: பெட்ரோலியத்தைச் சுத்திகரிக்கப் பயன்படும் அமிலம் எது?

ப: கந்தக அமிலம் பெட்ரோலியத்தைச் சுத்திகரிக்கப் பயன்படுகிறது.

கே: சைக்கிளைக் கண்டு பிடித்தவர் யார்? அவர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?

ப: மாக்மில்லன் என்பவர் சைக்கிளைக் கண்டுபிடித்தார். இவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

கே: அதிசய மண்புழுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ப: சாதாரண மண்புழுக்கள் ஓரங்குலம் முதல் ஐந்து அல்லது ஆறு அங்குலம்வரை இருக்கும். தென் அமெரிக்காவில் உள்ள ஓர் இடத்தில் 7 அடி நீளமும் ஓரங்குலகனமும் உள்ளவை.

கே: பல்நோய் எதனால் வருகிறது?

ப: சாப்பிட்டபின் வாய்ப்பாகத்தைச் சரியாகச் சுத்தம் செய்யாமல் இருப்பது; வைட்டமின்கள், தாது உப்புகள் ஆகியவைகள் அடங்கிய உணவுகள் சாப்பிடாமல் இருப்பது; இனிப்பான பண்டங்களையோ, அல்லது பானங்களையோ அதிகம் சாப்பிடுவதால் பல்நோய் வரும்; சாக்லெட், ஐஸ்கிரீம் ஆகியவைகள் சாப்பிடுவதால் பல்நோய் வரும்; அதிக குளிர்ச்சியான பானம் அல்லது அதிக சூடான பானங்களை உட்கொள்வதால் பல்நோய் வரும்.

புலவர் க. அண்ணாமலை

## மாணவர் பக்கம்

# 'தூய மகன்' நேரு!



—கவிஞர் தமிழ்முடி

காந்தி யெனும்
கங்கைநதி
சாந்தியெனும்
தலைவாசல்

காலமெனும்
சரித்திரம்தான்
சீல'மெனும்
மாமலைதான்

உறவென்னும்
ஆலமரம்
வரவென்னும்
கலங்கரைதான்

சுதந்தரப் போர்
ஏவுகணை
மதயானை
மாவுத்தன்

குழந்தையெனும்
கொடிமரந்தான்
தொழுதுநின்று
தூயமகன்

இமயத்தில்
நேரு!-உலகச்
கோயிலுக்குத்
நேரு!

இலக்கியத்தில்
நேரு!-'பஞ்ச
நதி உதித்த
நேரு!

மரங்களிலே
நேரு!-நட்பு
கப்பலுக்குக்
நேரு!

வானுக்கு
நேரு!-ஆதிக்க
வெறியடக்கும்
நேரு!

கோட்டைக்கு
நேரு!-நாடு
போற்றுகின்ற
நேரு!

## புத்தகங்கள்

ஒரு நல்ல புத்தகத்தைப்
படிக்கும்பொழுது, நீங்கள்
பலசாலிகளாகவும்,
அறிவாளிகளாகவும்,
தூயவர்களாகவும் இருப்பதாக
உணர்வீர்கள்.

-ஜானிஸ் சுத்ராப்

எண்ணற்ற புத்தகங்களைப்
படித்த ஒருவர், பல பெரிய
மனிதர்களின்
வாழ்க்கையைவிட மேலாக
வாழ்ந்து விட்டவராவார்.

-பாவ்லென்கோவ்

புத்தகங்கள் இல்லாத வீடு
இன்பமில்லாமல்
வெறிச்சோடிக் காணப்படும்.

-மாக்ஸிம் டாங்க்

புத்தகங்களுக்கு முன்னால்,
தீயன ஒவ்வொன்றும்
வெளிறியாகிப் போகும்.

-ஆண்ட்டோன் செக்கோவ்

ஒரு நல்ல புத்தகம் ஒரு
உண்மையான விருந்து ஆகும்.

-மாக்ஸிம் கார்க்கி

# குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும்!

"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகின்றார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில் குழந்தைகளேஇந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

"உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பலவிதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும் மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள்தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன்.

'குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால், குழந்தைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக — அறிவாளிகளாக — விளங்குவார்கள்.

'உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள நாம் வசதி வாய்ப்புகள் செய்து தர வேண்டும். நாமாக நமது மனப்போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக்கூடாது.

'குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சியின் இலட்சியமாகத் திகழவேண்டும். சொல்லப் போனால் இதுதான் முழு முதற் கொள்கையாக இருக்க வேண்டும்."

— பண்டித ஜவகர்லால் நேரு







## இராமநாதபுரம் மாவட்டத்தில்...

# வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் 14.10.90 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்தார். அவர், பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களைச் சேர்ந்த ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமையேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேசுகையில்,

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலிந்தோர்க்கான வீடுகளைக் கட்ட அனுமதியளித்து அவற்றைக் குறித்த காலத்தில் கட்டி முடிக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார். ஆகையால் அனைத்துக் கட்டடப்பணிகள், தொகுப்பு வீடுகள், புதிய பள்ளிக் கட்டடங்கள், பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் அனைத்தையும் விரைவில் முழுமையாக முடிக்கவேண்டும் என்றும், சாலை மேம்பாட்டுப் பணிகள், அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களுக்கான பராமரிப்புப் பணிகள் ஆகியவையும் முடிக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் பேசுகையில்-

''மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேற்கண்ட திட்டங்களில் தொகுப்பு வீடுகள் கட்ட மட்டும் ரூ.6,682.64 இலட்சங்களும், புதிய பள்ளிக் கட்டடங்களுக்காக ரூ.600 இலட்சமும், பேரூராட்சி ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்காக ரூ1,333.07இலட்சமும், தார்ச்சாலை அமைக்க ரூ.2,332.65இலட்சமும் கற்சாலைகளுக்காக ரூ.2,106.30 இலட்சமும், பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்ப்பதற்காக ரூ.1,300இலட்சமும் ஒதுக்கியுள்ளார். இவைதவிர குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ.824.23 இலட்சமும் ஒதுக்கீடு செய்துள்ளார். எனவே, அலுவலர்கள், பொதுமக்களுக்குப் பயனளித்திடும் இச்சீரிய பணிகளைச் செவ்வனே செய்திட வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு. ஆர்.ஆறுமுகம் இ.ஆ.ப., பேரூராட்சி இயக்குநர் திரு. மாயாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அர.செல்லமுத்து இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டார்கள்

பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

'கடந்த 43 ஆண்டுகளில் ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமாக 6,160 கட்டடங்கள் மட்டுமே உள்ளன. இந்த ஆண்டில் மட்டும் 2,000 புதிய கட்டடங்கள், 13 கோடியே 33 இலட்ச ரூபாய் செலவீட்டில் கட்டி முடிக்கப்படும். 88 பேரூராட்சிக் கட்டடங்கள் தலா ரூ.1 இலட்சம் செலவில் கட்டப்படும். இன்னும் இரண்டாண்டுகளில் சொந்தக் கட்டடங்கள் இல்லாத ஊராட்சி மன்றங்கள் இல்லை என்கிற நிலையைக் கலைஞர் அரசு உருவாக்கும்.

''மத்திய அரசு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காகத் தமிழ் நாட்டிற்கு ரூபாய் 172.24 கோடி ஒதுக்கி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கிணையாக, மாண்புமிகு கலைஞர் அவர்கள் ''ஊரக அடிப்படை வசதிகளுக்கான சிறப்புத் திட்டம்'' ஒன்றினை அறிமுகப்படுத்தி நடப்பாண்டில் ரூபாய் 27 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள்.''

சாயல்குடியில் ரூபாய் 6.17 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அர.செல்லமுத்து தலைமை வகித்தார். விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி திரு. எ.எம்.ஹமீது இப்ராஹீம், ஒன்றியத் தலைவர்கள் திரு.சுப.தங்கவேலன், திரு. வ.சத்தியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

**மா. அசோகன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்**

அட்டை
சொல்லும்
செய்தி



# தீரர் மருதிருவருக்குத் திருப்பத்தூரில் நினைவகம்

மருதுபாண்டியர் வாரிசு உரிமைத்
தேர்வுக்குழுத் தலைவர்
எஸ்.எஸ். தென்னரசு எம்.எல்.ஏ.

இந்திய விடுதலை வரலாற்றில் மருது பாண்டியர்களுக்குத் தனி இடம் உண்டு. வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீர வரலாறு படைத்த மாவீரர்கள் அவர்கள்.

சிவகங்கைச் சீமையை ஆட்சி செய்துவந்த முத்துவடுகநாதர் ஆர்க்காட்டு நவாபுடன் போரிட்டு வீர மரணம் எய்தியதால் அவரது மனைவி ராணி வேலுநாச்சியார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். நவாப்-ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் இருவரின் கூட்டுப் படையையும் எதிர்த்துப் போரிட்டார் ராணி வேலுநாச்சியார். நாச்சியாருக்கு உறுதுணையாக இருந்து, களத்திலே போரிட்டார்கள் தளபதிகளாகிய மருது சகோதரர்கள். வேலு நாச்சியாரும் களத்திலே வீர மரணம் எய்தியதால் அவரது பிரதிநிதிகளாக இருந்து சிவகங்கைச் சீமையை ஆளும் பொறுப்பை மருது பாண்டியர்கள் மேற்கொண்டார்கள்.

பொறுப்பாளர்கள் மாறிவிட்டார்கள் என்பதால் போர் மேகம் மாறிவிடவில்லை. ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலக் கம்பெனியாருடன் மருதிருவர் கடும்போர் புரிய நேர்ந்தது. வெள்ளை ஏகாதிபத்தியத்தை அவர்கள் அஞ்சி நடுங்க வைத்தனர் என்றாலும் இறுதியில் தோல்வியைத் தழுவ வேண்டிய சூழலுக்கு ஆளானார்கள்.

மாவீரர்களை-மானங்காத்த மறவர்குல மாணிக்கங்களை வெள்ளை அதிகாரிகள் திருப்பத்தூரில் தூக்கிலிட்டனர். அவர்களைக் கொன்றுவிட்டால் இந்த நாட்டின் வீரத்தைக் கொன்றுவிடலாம் என மனப்பால் குடித்த வெள்ளையர்களை வெற்றி கொள்ள-இலட்சக்கணக்கான வீரர்கள் நாடெங்கிலும் உருவானார்கள். விடுதலை வேள்வியில் இறங்கினார்கள். களம் கண்டார்கள். கடமையை நிறைவேற்றினார்கள். நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார்கள். வெள்ளையர்களை அவர்களது இங்கிலாந்துச் சீமைக்கே திரும்பிச் செல்ல வைத்தார்கள்.

மாவீரர் மருது பாண்டியர்கள் நமது தமிழகத்து வீர மரபுக்குச் சான்றாகத் திகழ்பவர்கள் என்பதால் அவர்கள் தூக்கிலிடப்பட்ட திருப்பத்தூரில் அவர்களது திருவுருவச் சிலைகளோடு கூடிய நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட இடம், திருப்பத்தூர் ஸ்வீடிஷ் மிஷின் மருத்துவமனை வளாகத்தில் உள்ளது. அவர்கள் தூக்கிலிடப்பட்ட அதே இடத்திலேயே நினைவகம் அமைப்பதுதான் மெத்தச் சரியானதாகவும், அந்த மாவீரர்களுக்குச் செய்கின்ற மரியாதையாகவும் இருக்கும் என முதல்வர் கலைஞர் அவர்கள் கருதுகிறார்கள். அந்த வட்டாரத்து மக்களும் இதைத்தான் விரும்புகிறார்கள்.

ஏறக்குறைய ரூ.25 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 39 அடி நீளமும் 26 அடி அகலமும் கொண்ட நினைவு மண்டபம் எழுப்புவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நினைவு மண்டபம் அமையும் இடத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் 30.10.'90 அன்று பார்வையிட்டார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள், மருது பாண்டியருக்கு நினைவு மண்டபம் எழுப்பும் பணிகளை விரைவில் துவக்குவதில் ஆர்வம் காட்டி வருகிறார்.

மருது ஆண்ட இடங்களில் ஒன்று காளையார் கோவில். அங்கு அவர் வாழ்ந்த அரண்மனை பாண்டியன் கோட்டை என்று இன்றும் வழங்கப்படுகிறது. பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை அண்மைக்காலத்தில் முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டதுபோல - காளையார் கோவிலில் மருது பாண்டியர் கோட்டை கட்டுவதற்குத் திட்டமிட்டு வருகிறார்.

காளையார் கோவில், கானப்பேர் எயில் என்று இலக்கியங்களில் வழங்கப்படுகிறது. இங்கே உள்ளே காளீஸ்வரர் கோவிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. இவற்றில் சிறிய கோபுரம் உள்ள பகுதியில் தான் மூலஸ்தானம் உள்ளது. பெரிய கோபுரம் உள்ள பகுதியில் மூலஸ்தானம் எதுவும் கிடையாது. இதுபற்றி கர்ண பரம்பரையாக ஒரு செய்தி சொல்லப்படுகிறது.

இந்தப் பெரிய கோபுரத்தை உருவாக்க வேலுநாச்சியாரின் கணவர் முத்து வடுக நாதத் தேவர் திட்டமிட்டிருந்தார் என்றும், அதற்குள் அவர் வீர மரணம் எய்தி விட்டார் என்றும், மருது பாண்டியர் காலத்தில் தான் அந்தத் திட்டம் நிறைவேறியது என்றும் சொல்லப்படுகிறது. இந்த ராஜகோபுரத்தின் மேல் மாடத்திலிருந்து பார்த்தால் மதுரை நகரம் நன்றாகத் தெரியும் என்றும் சொல்லப்படுகிறது. அதுகுறித்து நாட்டுப்புறப் பாடல் ஒன்று வழங்கி வருகிறது. அந்தப் பாடல் இதுதான்:

''சாந்துப் பொட்டு தளதளங்க
சந்தனப் பொட்டு கமகமங்க
மதுரை கோபுரம் தெரியச் செய்த
...''



காளையார் கோயில்

மருது பாண்டியர் எம்மதமும் சம்மதமே என்ற உயர்ந்த நோக்கத்துடன் வாழ்ந்திருக்கிறார்கள். இந்து சமயத்தைச் சேர்ந்த அவர்கள், இந்து சமய ஆலயங்களை அமைத்துடன், மாதா கோவில்களையும், மசூதிகளையும் உருவாக்கியுள்ளார்கள். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள திருவாச்சி மருது பாண்டியர்கள் செய்ததுதான்.

மக்கள் நெஞ்சம் கவர்ந்த மன்னர்களாக விளங்கிய மருது பாண்டியர்களின் உருவச் சிலைகள் காளையார் கோவிலில் காளீஸ்வரர் ஆல

பெரியமருது, வேட்டையில் பெருவிருப்பம் கொண்டவன். ஒரு சமயம் அப்படி அவன் வேட்டைக்குச் சென்றிருந்த போது புலியொன்று அவனை நோக்கிச் சீறிவந்தது; லாவகமாக அதன் வாலைப் பிடித்தான் பெரியமருது. புயல் வேகத்தில்- பொறிகலங்கும்படி அதை இருபதடி தூரம் இழுத்துச்சென்று, வாலோடு அதன் பின்னங்கால்களையும் சேர்த்து, மின்னல் வேகத்தில் தலைக்குமேலே தூக்கிச்சுழற்றித் தரையில் அடித்தான். மூங்கில் பிளப்பது போல அதன் வாயைப் பிளந்தான். அதன் கோரப் பற்களைப்பிடுங்கினான். அவற்றைக் கொண்டு வந்து தன் நண்பர்களிடமெல்லாம் காட்டி மகிழ்ந்தான்! உள்ளபடியே அவன் 'காட்டரசன்' தான்!.

இதை நாம் சொல்லவில்லை; ஆரம்ப காலத்தில் பெரிய மருதுவிடம் நட்போடு பழகி, ...வில், நாடுபிடிக்கும் ஆசையால் அவன்மீது பகைகொண்டாடிய வெல்ஸ் துரையே வியந்து பாராட்டி எழுதியிருக்கிறார்!

சிவகங்கைச் சீமையைச் சுமார் இருபத்தோராண்டுக் காலம் ஆட்சி புரிந்த பெரிய மருதுவும் சின்ன மருதுவும் 1801 அக்டோபரில், திருப்பத்தூரில் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டனர்.



திருப்பத்தூர் திருத்தளிநாதர் ஆலயத்திலும் இடம் பெற்றுள்ளன.

1989 ஜனவரியில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முதல்வர் கலைஞர் அவர்கள் மருது பாண்டியர் வாரிசு உரிமைத் தேர்வுக் குழுவை உருவாக்கினார். திரு. எஸ்.எஸ்.தென்னரசு, எம்.எல்.ஏ., தலைவராகவும், திரு. தா.கிருஷ்ணன், எம்.பி., திரு. மனோகரன், எம்.எல்.ஏ., பேராசிரியர் பாலசுப்பிரமணியம், மலைச்சாமி சேர்வை ஆகியோர் உறுப்பினராகவும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

மருதிருவரின் வழித்தோன்றல்கள் குறித்து இந்தக் குழு தனது ஆய்வைத் தொடங்கியது. ஏறக்குறைய 2000-க்கு மேற்பட்டவர்கள் இந்தக் குழுவினரைச் சந்தித்துத் தங்களது வாரிசுரிமை குறித்துத் தகவல் தெரிவித்தனர். இவர்களில் பலர் ஆவணங்களுடன் வந்து பேட்டி அளித்தனர். ஒரு சிலர் அக்காலத்து - ஆயுதங்களுடன் வந்து தகவல் தந்தனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. இவர்களில் 90 சதவிகிதத்தினர் தங்களைப் பெரிய மருதுவின் வழித்தோன்றல்கள் எனவும், 10 சதவிகிதத்தினர் தங்களைச் சின்ன மருதுவின் வழித்தோன்றல்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.



சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த முத்துவடுகநாதர் ஆட்சிக்குப் பின், அவர் மனைவி வேலு நாச்சியார் மருதிருவர் துணையோடு ஆட்சி செலுத்திவந்தார். அவர், 1800-இல் இறந்து போன பிறகு மருதுபாண்டியர்கள் ஆட்சிக்கு வந்தனர். பெரிய மருது சில காலம் ஆண்டபின், சின்ன மருதுவை அரசாளச் செய்துவிட்டுக் காடு-வேட்டை என்று போய்விடுகிறார் பெரியமருது.

சிறந்த ராஜதந்திரியான சின்னமருது, திறம்பட ஆட்சி செலுத்தலானார். வீரமும்-வள்ளல் தன்மையும் கொண்ட அவர் நாடாளும்போது நடந்ததோர் சம்பவம் குறிப்பிடத்தக்கது.

ஒரு புலவர், தன்மனைவியோடு காட்டு வழியாகச் சிவகங்கைச் சீமைக்கு வந்து கொண்டிருந்தார். வழிப்பறிக் கள்வர்கள் சூழ்ந்து கொண்டு, அந்தப் புலவரிடம் வேறேதும் இன்மையால், அவர் மனைவியாரின் தாலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டனர். இது பற்றி மன்னன் சின்ன மருதுவிடம் போய் முறையிட்டார், புலவர். நடந்தது அறிந்து வருந்தினார், அவன். ஆறுபவுனில் ஒரு தாலி செய்து வரச்செய்து - புலவரிடம் தந்து, அவர் மனைவி கழுத்தில் அணிவிக்கச் செய்து மகிழ்ந்தார்; பரிசு பல வழங்கிப் பாராட்டினார்.

இதற்காகச் சின்ன மருதுவைப் போற்றிப் புகழ்ந்த அந்தப் புலவர்- 'தாலிக்கு வேலி தமிழுக்கு உதவிய தார்மன்னனே' என்று பாப்புனைந்து பாராட்டி வாழ்த்தினார்!

கடந்த 26.10.'90 அன்று அரண்மனை சிறுவயலில் மருது பாண்டியர் நினைவு நாள் தமிழக அரசின் சார்பில் கொண்டாடப் பட்டது. மருது பாண்டியர் வாரிசு உரிமைத் தேர்வுக் குழுத் தலைவர் திரு. எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ, திட்ட அலுவலர் திரு. கதிரேசன், கோட்ட வருவாய் அலுவலர் திரு. செல்லப்பன், கல்லல் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு.கருப்பையா ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. துரை. தாமரைச்செல்வம் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

மருது பாண்டியர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் இந்த விழாவின்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை தேவகோட்டையைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் வசம் உள்ளன என்று சொல்லப்படுகிறது. அந்த ஆயுதங்களை அவர் அரசிடம் சேர்ப்பிப்பதாக இருக்கிறார் என்றும் தெரிய வருகிறது.

மருதிருவருக்கு திருவுருவச்சிலை அமைக்கப்பட உள்ளது என்ற செய்தியை நாளேடுகளின் வாயிலாக அறிந்த சின்னாள பட்டியைச் சேர்ந்த ஓவியர் ஜெகன், தானாகவே முன்வந்து மருதிருவரின் ஓவியங்களை வரைந்து மருது பாண்டியர் வாரிசு உரிமைத் தேர்வுக் குழுத் தலைவர் திரு. எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ., அவர்களின் பார்வைக்கு அனுப்பியுள்ளார்.

ஓவியர் ஜெகன் அனுப்பிய இரு வகை ஓவியங்களில் ஒன்றுதான் இந்த இதழின் முகப்பை அணி செய்கிறது.

பேட்டி: தமிழ்ப்பித்தன்



( 11 – ஆம் பக்கத் தொடர்ச்சி )
ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இத்திட்டத்தின் கீழ் 3,33,156 கருவுற்ற மகளிர் பயன் பெற்றுள்ளனர். இதுவரை ரூ.6.66 கோடி செலவிடப்பட்டுள்ளது.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் கடந்த 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரையில் 952 தம்பதியினருக்கு ரூ.45.80 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 85 இலட்சம் சிறார் பயனடைந்து வருகின்ற ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு, இரு வாரங்களுக்கொரு முறை ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முட்டை வழங்க வகை செய்யப்பட்டது. முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு தற்போது இத்திட்டத்தின் கீழ் சத்துருண்டை வழங்குவதால் 4.43 இலட்சம் சிறார் பயன் பெறுவர். சத்துணவுத் திட்டத்தின் செயல்பாட்டில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் களைந்து சிறந்த முறையில் நிர்வகித்து, மேற்பார்வையிட்டு பராமரிப்பதற்காகப் பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டின்கீழ் வருகிற சத்துணவு மையங்கள் அனைத்தும் ஊரக வளர்ச்சித் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இளம் சிறார்களின் படிப்பார்வத்தைப் பெருக்குவதற்கு சத்துணவுத் திட்டம் மாத்திரமின்றி, மாணவர்களுக்கு 8-வது வகுப்பு வரையில் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் திட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இதன்வாயிலாக பயன்பெறும் இளம் மாணவர்களின் எண்ணிக்கை 7,19,689 ஆகும்.

பொருளாதார ரீதியில் நலிவுற்ற மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, சொந்தமாக வீடில்லாத ஏழைக் குடும்பங்களுக்கு அரசு வீட்டுமனைகளை ஒதுக்குகிறது. இவ்வாறு வீட்டுமனைகள் ஒதுக்கும்போது, ஆதி திராவிடருக்கும், பழங்குடியினருக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் நல மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு வீட்டுமனைகள், பொதுவாக மனைவி, குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர்களின் பெயரிலேயே ஒதுக்கப்படுகின்றன. நடப்பாண்டில் 3.25 இலட்சம் வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1990 செப்டம்பர் வரையில் 1.44 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. சாதபடி நிலங்களும், நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்களும்கூட ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில், 1989-90-ஆம் ஆண்டுக் காலத்தில், 500 நகரங்களில் வீடுகள் கட்டும் நோக்கத்துடன், "ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம்" என்கிற புதிய திட்டம் ஒன்று தொடங்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக, 20 மாவட்டங்களில் 101 நகரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன; இது வரை, நிலங்களை வாங்கியுள்ள 44 சங்கங்கள் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளன. முக்கியமாக, நிலத்தைப் பெறுவதிலும், அதற்குரிய மதிப்பை நிர்ணயிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டதால், இத்திட்டப் பணி மெதுவாக நடந்தேறி வருகின்றது. இது குறித்து மாவட்ட ஆட்சியாளர்கள் விரைந்த நடவடிக்கை எடுத்து, அரசுக்குப் பணி முன்னேற்ற அறிக்கையை குறித்த காலத்திற்கொரு முறை அனுப்பவேண்டும்.

சிறப்பு ஊரக அடிப்படைப் பணித் திட்டத்தின் கீழ், 88 பேரூராட்சிக் கட்டடங்கள் உட்பட 2,000 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 689 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், 3,905 கி.மீ. தொலைவிற்குச் சாலை அமைப்பதற்கும் இலக்கிடப்பட்டுள்ளது; 1990 செப்டம்பர் 30-ஆம் நாள் வரை, 88 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும், 19 பள்ளிக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. 383 கி.மீ. தொலைவிற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நலனுக்கென கடந்த ஆண்டு 42,000 இலவச காங்க்ரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டன. இந்த ஆண்டு 47,000 இலவச காங்க்ரீட் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித் திட்டம் என்கிற சிறப்புத் திட்டம் ஒன்றும் 8 கடலோர மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது.

**வேலைவாய்ப்புகளில் 30 சதவிகித இட ஒதுக்கீடு, பெண்களுக்குச் சம சொத்துரிமை அளித்தல் ஆகியவற்றுடன், மகளிர் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**

வறுமையை அகற்றி வேலை வாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்தும் சரிவர செயலாக்கப்படுகின்றனவா என்று மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்த வேண்டும். மேலும், ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படுகின்றதா என்று கவனிப்பது மட்டுமின்றி, இத்திட்டங்கள் யாருக்காக உருவாக்கப்பட்டதோ அவர்கள் இத் திட்டத்தினால் உண்மையில் பயனடைகின்றார்களா என்றும் கவனிக்க வேண்டும்.

குடும்ப நலத்தின் முக்கியத்துவம் அனைவரும் அறிந்த ஒன்று. மத்திய அரசு தமிழ்நாட்டிற்கென் நிர்ணயித்த மக்கள் தொகைக் கட்டுப்பாடு பற்றி இலக்குகளை 1991-92ஆம் ஆண்டிற்குள் அடை தனி முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இ இலக்கு எய்தப்படாவிட்டால், முன்னேற்றப் பணிக அனைத்தும் பயனற்றதாகிவிடும்.

குடிநீர் வழங்கும் பணிக்கு அரசு முன்னுரிமை அளிக்கின்றது. தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்க முயற்சிக எடுக்கப்பட்டு வருகின்றன. வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் அனுமதிக்கப்பட் 2,000 குழாய்க் கிணறுகளில் 1,914 குழாய் கிணறுகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ள

வறட்சிப்பாங்கான பகுதிகளுக்கும், குறிப்ப

**பொருளாதார ரீதியில் நலிவுற்ற மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு சொந்தமாக வீடில்லாத ஏழைக் குடும்பங்களுக்கு அரசு வீட்டுமனைகளை ஒதுக்குகிறது.**

1991ஆம் ஆண்டின் கோடை மாதங்களில் அனைத்துப் பகுதிகளுக்கும் போதிய குடிதண்ணீர் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். கூடுதல் நிதி ஆதாரம் திரட்டுவதைப் பொறுத்தமட்டில் சிறு சேமிப்புகள் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சிறுசேமிப்புகள் மொத்த மூலதனச் செலவில் 25 சதவீதத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. நடப்பாண்டில் ரூபாய் 450 கோடி சிறுசேமிப்பின் வழி நிதி திரட்ட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை ரூ. 229.66 (மொத்தம்) ரூ 69.99 (நிகரம்) கோடியாகத் திரட்டப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் திட்டத்தை மக்களை சார்க்கும் திட்டமாக ஆக்குவதற்கு பல்வேறு ஊக்க உதவித்

**மாணவர்களுக்கு 8-வது வகுப்பு வரையில் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் திட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இதன் வாயிலாகப் பயன்பெறும் இளம் மாணவர்களின் எண்ணிக்கை 7,19,689 ஆகும்.**

தொகைகள் வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் பணியாளர் அமைப்பு வலுப்படுத்தப்பட்டு உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கும், அதில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சியாளர்களும், பிற அதிகாரிகளும் தனி முயற்சிகள் எடுத்துக்கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் மேம்பாட்டிற்காகவும், நலனுக்காகவும் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இருப்பினும் இது எளிதான பணியல்ல. திட்டத்தின் பயன்கள் உண்மையிலேயே உரிய மக்களுக்குச் சென்றடையும் வகையில் அனைத்துத் திட்டங்களையும் சிறந்த முறையில் செயல்படுத்துமாறு பார்த்துக் கொள்வதே நமது பெருமுயற்சியாக இருக்கவேண்டும்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

என்ற குறளை மறவாமல் ஆட்சிச் சக்கரத்தின் அச்சாணியாக இருப்போர் அனைவரும் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் மாசுமறு இல்லாதவகையில் செயல்படின் நாடும் நாமும் சமுதாயமும் செம்மையுறும், சீர்பெறும். நமக்கு நாமே வகுத்துக் கொண்டுள்ள தூய்மையான இலட்சியப் பயணத்தில் வரையறுத்துக் கொண்டுள்ள இலக்குகளை எய்தவும், இது குறித்து கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நாம் எய்தியுள்ள சாதனைகளில் தொய்வின்றித் தொடர்ந்து நிறைவேற்றவும் வேண்டும்.

நமது பணியின் பயன்கள் நாட்டு மக்களுக்குக் விரைந்து கிடைக்கிட செயல்படுங்கள். கண் துஞ்சாது நீங்கள் ஆற்றும் கடமையினால் எந்தக் காரியம் யாவிலும் வெற்றி காண்போம்!

●● **பூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ், 1989ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல், 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இந்தத் திருமண நிதி, தலா ஐயாயிர ரூபாய் பெற்று பயனடைந்த ஏழைப் பெண்களின் எண்ணிக்கை 29,925 ஆகும். இதுவரை ரூ.14.96 கோடி செலவிடப்பட்டுள்ளது.**

●● **டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து, 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரை இத்திட்டத்தின் கீழ் 3,33,156 கருவுற்ற மகளிர் பயன் பெற்றுள்ளனர். இதுவரை ரூ.6.66 கோடி செலவிடப்பட்டுள்ளது.**



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். (9.11.90)




"குறைந்த வருவாயாக இருந்தாலும் நாள்தோறும் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்தால் செல்வம் வளர்ந்து பெரு(கும்). விண்மீன்கள் ஒன்று கூடிநின்றால் இருள்நீங்கி உலகம் ஒளிபெறும். மழைத்துளிகளும் இடைவிடாது ஒன்று சேர்ந்தால் கடலைப் போல் மிகுந்த நீரைத்தரும். அதுபோல ஒருவனுக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் நாள்தோறும் சோர்வில்லாமல் சிறிதளவு சேர்த்தால் செல்வம் பெருகும்."

- ★ தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு
- ★ தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு 1987
- ★ பொது சேமநலநிதி
- ★ மாதாந்திர வருமானத் திட்டம்
- ★ விவசாயிகள் சேமிப்புப் பத்திரம்
  இந்திரா சேமிப்புப் பத்திரம்
- ★ அஞ்சலகக் குறித்தகால வெளியீடு
  அஞ்சலகத் தொடர்வைப்புத்திட்டம்/
  வளரும் மாத சேமிப்புத் திட்டம்

**மாவட்டச் சிறுசேமிப்பு பரிசுக்கூப்பன் திட்டம் - 90**

ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு பரிசுக்கூப்பன் (அரசு ஆணை எண்: 683, நிதித்துறை நாள் 19.6.90)

- 1.6.90 முதல் 31.12.90 வரை முதலீடு செய்து மாருதி கார் முதல் 262 பரிசுகளில் ஒன்றை வென்றிடுங்கள்.
- ஒவ்வொரு ஒரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்
- சென்னை நகரில் ஒவ்வொரு லட்சம் பரிசுக்கூப்பன்களுக்குச் சிறுசேமிப்பு இயக்குநர் முன்னிலையில் குலுக்க நடைபெறும்.

**சம்பளப்பட்டியல் திட்டத்தில் ரூ. 100/- சேமிப்பீர். 5 மாதம் சேமித்தபின் ஒரு பரிசுக்கூப்பன் பெற்றிடலாம். ரூ. 200/- சேமிப்பு. இரண்டு பரிசுக்கூப்பன்கள்! - வருமான வரிவிலக்குடன்!**

- ● மத்திய அரசுக்கு இணையாகச் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை
- ● ரூ. 1000/-ம் அதற்கு மேலும் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு ★ இக்குறியிட்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் 1% ஊக்கத் தொகை

| | | |
|---|---|---|
| சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும். | பரிசுக்கூப்பன்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் கிடைக்கும். | இயக்குநர் **சிறுசேமிப்புத்துறை,** 143, அண்ணா சாலை, சென்னை-600 002. தொலைபேசி: 840223/846209 |


# ஓய்வில்லாமல் மக்களுக்காக உழைக்க வேண்டும்

## முதல்வர் கலைஞர்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, அதிகாரிகளே, நண்பர்களே,

நேற்றும் இன்றும் நம்முடைய மாநிலத்தில் நடைபெற வேண்டிய பல்வேறு பணிகள் குறித்தும் அவ்வப்போது உருவாகின்றபிரச்சினைகளைஎப்படிச் சந்திப்பது என்பது குறித்தும் - வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் - நலிந்த பிரிவு மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பது குறித்தும் - மிக முக்கியமாக இன்றைய தினம் உணவுப் பிரச்சினை, விநியோகப் பிரச்சினை ஆகியவை குறித்தும் நீங்கள் அனைவரும் அரிய - ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறீர்கள்.

இந்த அரசு மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள ஏறத்தாழ இந்த இரண்டாண்டு காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பல்வேறு துறைகளின் தலைமை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் அனைவருடைய ஒத்துழைப்போடு தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி, வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத அளவிற்குக் காப்பாற்றப்படுவது மாத்திரமல்ல - வளர்ச்சித் திட்டங்களும், மற்ற மாநில அரசுகள் பார்த்து வியப்புறுகின்ற அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகள் நாம் கருதியபடி தங்குதடையில்லாமல் நடைபெறுவதற்கு மத்தியிலே நேற்றுவரையிலே ஒரு ஆட்சி இருந்தது. ஆனால், இன்றையதினம் அங்கு தொடங்கியுள்ள புதிய ஆட்சி நம்முடைய மாநிலப் பிரச்சினைகளை எப்படி அணுகும் என்று இப்போதே அறுதியிட்டுச் சொல்ல இயலாது. இருந்தாலும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய கட்டத்தில் இந்த மாநிலத்தின் முன்னேற்றத்தை மனதிலே கொண்டு, ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்ற வேண்டிய ஒரு சூழ்நிலையில் இந்த அரசு மாநிலத்தின் உரிமைகளுக்காக - நன்மைகளுக்காகச் சிந்தித்து செயல்பட்டு வருகின்றது. இப்படிச் சிந்தித்து செயல்படுகின்ற ஒரு அரசுக்குத் துணைவர்களாக - அந்த அரசை மேலும் விறுவிறுப்போடு இயக்குகின்றவர்களாக எதிரே அமர்ந்திருக்கின்ற நீங்களும், என்னோடு அமர்ந்திருக்கின்றவர்களும்தான் முக்கிய காரண கர்த்தாக்களாக இருக்க முடியும் என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே, ஏதோ இரண்டு நாள் சம்பிரதாயப் பூர்வமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் - காவல் துறையினர் மாநாடு ஒன்று நடைபெற்றது; ஒரு சடங்கு போல, அதிலே கலந்து கொள்ள வேண்டியிருந்தது, ஒரு இயந்திரம் போல, கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருந்தது என்றில்லாமல் அனைவருமே உணர்ச்சிப் பூர்வமாக இந்த மாநிலத்தினுடைய மக்களின் எதிர்காலத்தை, அவர்களுடைய நல்வாழ்வை இதயத்திலே நிறுத்தி அரிய யோசனைகளை வழங்கியிருக்கிறீர்கள்.

நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசப்பட்டவைகள் காற்றோடு கலக்கின்ற கருத்துக்களாக இல்லாமல் அவை உங்களுடைய மூச்சோடு, உணர்வோடு கலந்து நம்முடைய மாநிலத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களின் எதிர்கால சீரிய முன்னேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி; காவல் துறையினரிடத்திலும் சரி, ஏனைய அதிகாரிகளிடத்திலும் சரி, முன்பு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும் இந்த ஆட்சிப் பொறுப்பை மீண்டும் இப்போது ஏற்றுக் கொண்ட இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலும் சரி, உங்களிடத்திலே ஒரு தோழனாக - ஒரு சகோதரனாகத் தான் நான் பழகிக் கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல. எனவே, ஒரு முதலமைச்சர்-அதிகாரிகள் என்கின்ற அளவிலே நம்முடைய அணுகுமுறை இல்லாமல் நீங்களும் நானும் இந்த அமைச்சரவையைச் சேர்ந்த அனைவரும் நம்மால் இயன்ற அளவிற்கு அயர்வில்லாமல் ஓய்வில்லாமல் மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற உறுதியைப்பெறவேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு, நீண்ட நேரம் நேற்றும் இன்றும் உங்களிடத்திலே பல கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்ற வாய்ப்பு எனக்கும் மற்றவர்களுக்கும் கிட்டியிருக்கின்ற காரணத்தால் இதற்கு மேலும் எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

இந்த அரசு, பொறுப்பேற்கும்போது சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்கின்ற அந்த உறுதிமொழியோடு பொறுப்பேற்றுக் கொண்ட அரசாகும். எனவே, அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு நீங்கள் அனைவரும் உளத்தூய்மையோடு எங்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முடிவுரை. (10.11.90)**

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## மேட்டூர் அனல் மின் நிலையம்

## மேட்டூர் அணை-636 406

### ஒப்பந்த விவரங்கள்

1.0) கீழ் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்காணும் வேலைக்கு வரவேற்கப் படுகின்றன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண். | ஒப்பந்த பிரதியின் விலை | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளிகள் பெற கடைசி தேதியும் நேரமும் | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்த உத்தேச மதிப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | கொதிகலன் 1 மற்றும் அதை சார்ந்த உபகரணங்களைச் சோதித்துப் பழுது பார்த்தல். | SE/MTPS/Mechanical-I 127/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.200/- வெளிமாநிலங்களுக்கு ரூ.220/- | ரூ.4,800/- | 29.11.90 வியாழக்கிழமை பகல் 12.00 மணி வரை | 29.11.90 வியாழக்கிழமை மாலை 3.30 மணி | ரூ.4,80,000/- |

2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணை குறிப்பிட்டு உதவி கணக்கு அதிகாரி/பணப் பிரிவு (Assistant Accounts Officer/Cash/Mettur Thermal Power Station/Mettur Dam) மேட்டூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அணை-6 அவர்களுக்கு செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை அல்லது பண அஞ்சல் இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாக பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத் தொகையின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும்,
நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் செயலாண்மை உதவியாளர் Executive Assistant to Superintending Engineer/Mech.I/MTPS அவர்களால் பெறப்படும். மேற்பார்வைப் பொறியாளர்/இயந்திரவியல்-1 அலுவலகத்தில் திறக்கப்படும்.

3.0) ஒப்பந்த பிரதிகள் மாற்றத்தக்கதல்ல, ஒப்பந்த பிரதிகள் 5.11.90 முதல் விற்பனைக்கு கிடைக்கும்.

4.0) ஒப்பந்த பிரதிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பதிவு செய்துகொண்டு அனல் மின் நிலைய இயந்திரப் பிரிவு பராமரிப்பு வேலையின் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே விற்கப்படும்.

5.0) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

6.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப் பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

7.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்தவொரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்தவொரு நிபந்தனையும் தேவை எனக் கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தகுதி பெற்ற மின்சார வாரிய அலுவலருக்கு உண்டு.

8.0) ஒப்பந்த புள்ளிகள் விற்பனை ஒப்பந்தம் பெற்றுக் கொள்ள நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளின் முதல் நாள் மாலை 3.30 மணிக்கு நிறுத்தப்படும்.

**மேற்பார்வை பொறியாளர்/**
**இயந்திரவியல்-1**
**மேட்டூர் அனல் மின் நிலையம்,**
**மேட்டூர் அணை-6**

DIPR/308/SLM/90/MCS





செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாநாடு, மாண்புமிகு செய்தி, தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. (3.11.90)

# நீலகிரியில் நிவாரணப்பணிகள்

இயற்கையின் எழிலுக்குப் பெயர் பெற்றது நீலகிரி மாவட்டம். இயற்கையின் இன்னல்களுக்கு அடிக்கடி இலக்காவதும் நீலகிரி மாவட்டம். புயல், மழை, நிலச் சரிவு, பனி, குளிர் போன்ற இயற்கை உபாதைகளால் இம்மாவட்ட மக்கள் அடிக்கடி பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது!

நீலகிரி மாவட்டம் அக்டோபர் 25-ம் நாள் யாரும் எதிர்பாராத அளவுக்கு மழையினாலும், நிலச் சரிவினாலும் பெரிதும் பாதிக்கப் பட்டது.

பலத்த மழையின் காரணமாக, இம்மாவட்டத்தில் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. பல கட்டடங்களும் வீடுகளும் இடிந்து விழுந்தன. பாலங்கள், சாலைகள், பழுதடைந்துள்ளன. 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இம்மழை யினால் பாதிக்கப்பட்டன. 44 பேர்கள் இதனால் உயிரிழந்தனர். 19 பேர்கள் காயமடைந்துள்ளனர். பல வீடுகள் இடிந்து தரைமட்ட மாயின. கட்டடங்கள் இடிந்து தரை மட்டமானதோடு மக்கள், பலரும் மண்ணோடு மண்ணாகப் புதைந்தனர்.

உதகை, குன்னூர், மஞ்சூர், கேத்தி போன்ற பகுதிகள் இக்கொடுமைக்கு ஆளானாலும், கல் நெஞ்சையும் உருக்கும் கொடூர நிகழ்ச்சிக்கு ஆளானது 'கெத்தை' என்ற கிராமம் ஆகும். இக்கிராமம் இரண்டு மலைப் பகுதிக்கும் இடையில் எழில் கொஞ்சும் பகுதியில் அமைந்துள்ளது. துள்ளி யோடும் மான்களும், பாய்ந்தோடும் அருவிகளும் இப்பகுதிக்கு வனப் பூட்டுபவை. மஞ்சூரிலிருந்து 16 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்திற்கு, 45 கொண்டை ஊசி வளைவுகளில் வளைந்து வளைந்து செல்லும்போது ஓர் அலாதி இன்பம் உண்டாகும். இத்தகைய எழில்மிகு கிராமம் இயற்கையின் சீற்றத்தால் உருக்குலைந்து இருந்த இடம் தெரியாமல் அழிந்து விட்டது.

கெத்தையில் உள்ள மின் நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இவ்விபத்தால் பெரிதும் பாதிக்கப் பட்டனர். இக்கிராமத்தில் மட்டும் 35 பேர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமுற்றனர். பலத்த மழை பெய்தது. வெள்ளம் பெருக்கெடுத்தது. பாறாங் கற்கள் உருண்டு வந்தன. பாலம் இடிந்தது. மரங்கள் விழுந்தன. வீடுகள் இடிந்தன. இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் அரைமணி நேரத்திற்குள் நடந்து முடிந்துவிட்டன.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மழையில்லாமல் ஏங்கிக் கொண்டிருந்த விவசாயிகளுக்கு நான்கைந்து நாட்களாகப் பெய்த மழை மகிழ்ச்சியைத் தருவது ஒரு புறம் இருந்தாலும், அடுத்த கணமே உதகை சந்தித்த இக் கோர நிகழ்ச்சியை நினைக்கும் போது உள்ளமெல்லாம் உருகுகிறது. இக்கோர நிகழ்ச்சியைக் கேள்விப் பட்டதும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி.எ. ராஜ்குமார் அவர்கள் மற்றும் அலுவலர்கள் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடு பட்டனர். பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் அல்லும் பகலும் அயராது அப்பகுதியில் முகாமிட்டு மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். சில சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதன் பின்னும் சடலங்களைத் தேடும்பணிகள் தொடர்ந்தன.







மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குச் செய்தி தெரிவிக்கப் பட்டதும் போர்க்கால நடவடிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட பகுதி களில் நிவாரணப்பணிகள் செய்ய உத்தரவிட்டார். அவர் 5 கோடி ரூபாய் நிவாரண உதவித் தொகை யாக வழங்கவும் ஆணையிட்டார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்களையும், மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்களையும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதி களுக்கு அனுப்பி வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள் உதகைக்கு வந்து சேர்ந்தனர். இறந்தவர்களின் சடலங்களைக் கண்டு கண்ணீர் வடித்தனர். இறந்தவர் களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி னர். நிவாரணப்பணிகள் துரித மாக நடைபெற அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தனர். இறந்த அரசு ஊழி யர்கள் குடும்பத்திற்கு ரூ.40,000/- வழங்கப்படும் என்று கூறினர். ஈமச்சடங்கிற்கு ரூ.500 - வழங்கப்பட் டது. மேலும், இத்துயரச் சம்பவத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்கள் தகுதியின் அடிப்படையில் அரசில் வேலைக்கு அமர்த்தப் படுவர் என் றும், வீடு இழந்தவர்களுக்குப் புதியதாக குடியிருப்புக்கள் கட்டித் தரப்படும் என்றும் சாலைகள் அதிகமாகப் பழுதடைந்துள்ளதால் இதில் தனிக் கவனம் செலுத்தப்படும்-என்றும் கூறினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு இலவச வேட்டி-சேலை வழங்கினார்கள். ஒவ்வொரு குடும்பத் திற்கும் 5 கிலோ அரிசியும் 5 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டன.

இக்கோர நிகழ்ச்சியைக் காண மாவட்டத்தின் பல்வேறு பகுதி களிலிருந்தும் மக்கள் வந்து உருகிக் கண்ணீர் வடித்த வண்ணம் உள்ளனர்.

இக்கோர நிகழ்ச்சியினால் நீலகிரி மாவட்டமே சோகக் கடலில் ஆழ்ந்துள்ளது.

மு.நா. கிருஷ்ணசாமி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி)
நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.

தமிழரசு
சந்தா விவரம்
தமிழ்
ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12
ஆங்கிலம்
ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# மேட்டூர் அனல் மின் நிலையம்
# மேட்டூர் அணை-636 406

## ஒப்பந்த விவரங்கள்

0.1) கீழ் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்காணும் வேலைக்கு வரவேற்கப் படுகின்தன.

| வரிசை எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த எண். | ஒப்பந்த பிரதியின் விலை | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளிகள் பெற கடைசி தேதியும் நேரமும் | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும் | ஒப்பந்த உத்தேச மதிப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | கரி அரவை இயந்திரம் மற்றும் அதைச் சார்ந்த உபகரணங்களைச் சோதித்துப் பழுது பார்த்தல் - முதல் பிரிவு. | மே.பா.பொ/இ-1/131/ மே.அ.மி.நி. | தமிழ்நாட்டிற்குள் ரூ.200/- வெளிமாநிலங்களுக்கு ரூ.220/- | ரூ.4,000/- | 10.12.90 திங்கட்கிழமை பகல் 12.00 மணி வரை | 10.12.90 திங்கட்கிழமை மாலை 3.30 மணி | ரூ.4,00,000/- |

0.2) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணை குறிப்பிட்டு உதவி கணக்கு அதிகாரி/பணப் பிரிவு (Assistant Accounts Officer/Cash/Mettur Thermal Power Station/Mettur Dam) மேட்டூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அணை-6 அவர்களுக்கு செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை அல்லது பண அஞ்சல் இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாக பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத் தொகையின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும், நிராகரிக்கப்படும், ஒப்பந்தங்கள் செயலாண்மை தவியாளர் Executive Assistant to Superintending Engineer/Mechl.I/MTPS அவர்களால் பெறப்படும். மேற்பார்வைப் பொறியாளர்/இயந்திரவியல்-1 அலுவலகத்தில் திறக்கப்படும்.

0.3) ஒப்பந்த பிரதிகள் மாற்றத்தக்கதல்ல, ஒப்பந்த பிரதிகள் 19.11.90 முதல் விற்பனைக்கு கிடைக்கும்.

0.4) ஒப்பந்த பிரதிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பதிவு செய்துகொண்டு அனல் மின் நிலைய இயந்திரப் பிரிவு பராமரிப்பு வேலையின் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே விற்கப்படும்.

0.5) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

0.6) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப் பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

0.7) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்தவொரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்தவொரு நிபந்தனையும் தேவை எனக் கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தகுதி பெற்ற மின்சார வாரிய அலுவலருக்கு உண்டு.

0.8) ஒப்பந்த புள்ளிகள் விற்பனை ஒப்பந்தம் பெற்றுக் கொள்ள நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளின் முதல் நாள் மாலை 3.30 மணிக்கு நிறுத்தப்படும்.

மேற்பார்வை பொறியாளர்/
இயந்திரவியல்-1
மேட்டூர் அனல் மின் நிலையம்,
மேட்டூர் அணை-6

DIPR/326/SLM/90/MCS



தருமபுரியில்

# புதிய தொழில்கள்

**கா. அலாவுதீன் இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்
தருமபுரி மாவட்டம்

தருமபுரி போன்ற அடிக்கடி வறட்சிக்கு உள்ளாகும் மாவட்டத்தில் விவசாயத்தைப் பெருக்கி வேலை வாய்ப்பை அதிகரிப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இந்நிலையில் புதிய தொழிற்சாலைகள் உருவானால் தான் வேலை வாய்ப்பு பெருகும். நம் வறுமையும் நீங்கும். வளர்ச்சி குன்றிய நம் மாவட்டத்தில் வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்தோடு தமிழக அரசு ஓசூரில் சிப்காட்டின் மூலமாகப் பெரிய தொழிற்பேட்டையை உருவாக்கி, அதில் பெரிய தொழிற்சாலைகள் அமைய உதவி செய்துள்ளது. அதனைத் தொடர்ந்து 2-வது கட்டமாக, மின்னணுவியல் தொழிற்பேட்டையும் (Electronics Complex) அமைய இருக்கிறது. இதன் மூலம் மேலும் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25.9.90 அன்று துவக்கி வைத்தார். தருமபுரியிலும், கிருஷ்ணகிரியிலும் ''சிட்கோ'' மூலம் தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இப்பகுதிகளில் குறிப்பாக-தருமபுரி பகுதியில் தொழில் வளர்ச்சி போதிய அளவு இல்லை. அரசு முயற்சிக்கு ஈடாக, தனியார் நிறுவனங்களும் தொழிற்சாலைகளை அமைத்து வேலை வாய்ப்பை உருவாக்கலாம். இதற்காகப் பல்வேறு சலுகைகளையும் அரசு அறிவித்துள்ளது.

படித்து வேலையில்லாத இளைஞர்கள் தொழில் துவங்குவதற்காகக் கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 400 நபர்களுக்குக் கடனுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 212 நபர்களுக்கு ரூ.37.34 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டது.

புதிய தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன், விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் பென்னாகரம் வட்டத்தில் துவக்கப்படும் புதிய தொழில்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளுபடி போன்ற பல சலுகைகளும், வசதிகளும் உள்ளன. கடந்த ஆண்டில் 9 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.7.64 இலட்சம் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அளிக்கப்பட்டது.

புதிய தொழில்களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30, 20 மற்றும் 10 என்ற சதவிகிதத்தில் மின் கட்டண மானியம் அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இதன்படி, 31 சிறுதொழில் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்பட்டது.

தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குத் தொகை (முதலீடு கடனுதவித் திட்டத்தின்கீழ், தொழில் கூட்டுறவு முறையில் துவங்கப்படும் புதிய சிறு தொழில்களுக்குப் பங்குத் தொகை முதலீடு கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 35 நபர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற சிறுதொழில் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் நலிவுற்ற சிறு தொழில்கள் மீண்டும் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு நடைமுறை மூலதனத்தை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுத்தர ரூ.50,000 வரை நடைமுறை மூலதன விளிம்புத்தொகை அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் பல சிறு தொழில் நிறுவனங்களுக்கு நடைமுறை மூலதன விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இதற்கென ரூ.2 இலட்சம் வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குத் தொழில் துவங்கிட, குறைந்த வட்டியில் கடனுதவி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் 41 நபர்களுக்கு ரூ.2,14,500 கடனுதவி அளிக்கப்பட்டது.

புதிய தொழில்களுக்கு அவற்றின் நிலையான முதலீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் மானியமாக வழங்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் வட்டம் தவிர மற்ற 7 வட்டங்களிலும் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு இச்சலுகை உண்டு. ஆனாலும் ஓசூர் வட்டத்தில் சிட்கோ, சிப்காட் போன்ற அரசு நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்ட தொழில் பேட்டைகளில் துவங்கப்படும் புதிய தொழில்களுக்கு இச்சலுகை உண்டு.

நிதி நிறுவனங்களின் மூலமாகக் கடனுதவி பெற்று புதியதாக ஜெனரேட்டர் வாங்க விரும்புபவர்களுக்கு 15 சதவிகிதம் மானியம் அளிக்கப்படுகிறது. புதியதாகத் தொடங்கப்படும் கயிறுப் பொருட்கள் உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்குக் கயிறு வாரியம் மூலமாக 25 சதவிகிதம் முதலீடு மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் வங்கியின் மூலதனக் கடன் உதவி பெறத் தேவையான விளிம்புத் தொகையாக ரூ.25,000 அல்லது கடன் தொகையில் 20 சதவிகிதத்துக்கு மிகாமல் குறைந்த வட்டியில் மாவட்டத் தொழில் மையம் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 13 நிறுவனங்களுக்கு ரூ.2.50 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில், ஓசூர், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி வட்டங்களைத் தவிர இதரப் பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் மிகக்குறைவாகவே உள்ளன. குறிப்பாக, பென்னாகரம் வட்டத்தில் சுமார் 130 சிறுதொழில் நிறுவனங்களே இருக்கின்றன. மத்திய ரக மற்றும் பெரிய தொழில் நிறுவனங்கள் எதுவுமே இல்லை. இதனால் இப்பகுதியைத் 'தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டம்' என அரசு அறிவித்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மற்ற வட்டங்களில் இல்லாத 5 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி சலுகை இவ்வட்டத்தில் தொழில் தொடங்குவோருக்குக் கிடைக்கும்.

புதிய தொழில்கள் உருவாக்கிட தொழில்முனைவோர் முன் வந்தால்தருமபுரி மாவட்டம் தொழிலில் ஒரு முன்னோடி மாவட்டம் ஆவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறோம்.

**TNPSC**

விளம்பர எண் 10/90

தமிழ்நாடு செயலகத்தின் வெவ்வேறு துறைகளில் (சட்டத் துறை தவிர்) தமிழ்நாடு செயலகப் பணியில் ஏற்பட்டுள்ள 66 உதவியாளர் பதவியின் காலியிடங்களில் நியமனம் செய்வதற்கு தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளராகப் பணியாற்றுவோரிடமிருந்து விண்ணப்பங்கள் 10.12.90 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்துமாகையால் மேற்படி காலியிடங்கள் கீழே குறிப்பிட்டுள்ளபடி இனச்சுழற்சி முறையில் பகிர்ந்தளிக்கப்படும்:-

| | | |
|---|---|---|
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர் | ... 12 | (4 பெண்களுக்கும் 1 உடல் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டது.) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் | ... 13 | (4 பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | ... 19 | (6 பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) |
| பகிரங்கப் போட்டி | ... 22 | (7 பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) |
| | 66 | |

குறிப்பு:-

(1) இந்த காலியிடங்கள் எண்ணிக்கை தோராயமானவையே. தெரிவு செய்யும்போது இதில் மாற்றங்கள் ஏற்படலாம்.

(2) ஒவ்வொரு இனச்சுழற்சியிலும் தேவையான எண்ணிக்கையில் பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கவில்லையெனில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களில் ஆண் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர். அதேபோல உடல் ஊனமுற்றோருக்கான காலியிடத்திற்கு உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர் கிடைக்கவில்லையெனில் அந்த இடத்தில் உடல் ஊனமில்லாதவர் நியமிக்கப்படுவார்.

2. **சம்பளம்:-** ரூ.1100 - 25 - 1150 - 30 - 1660.

**குறிப்பு:-** தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப்பணியின் இளநிலை உதவியாளர் இப்பணிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரது சம்பளம் அடிப்படை விதி 22(2)-ன் படி சரி செய்யப்படும். தேர்வு நிலை இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் தேர்வு நிலை உதவியாளர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது சம்பளம், விகிதத்தின் படியில் (Stage) இருக்குமேயானால் அதேபடி நிலையில் நிர்ணயிக்கப்படும். இல்லையென்றால் கீழ் நிலையில் நிர்ணயிக்கப்பட்டு அதில் ஏற்படும் ஊதிய வித்தியாசத்தினை எதிர்வரும் ஊதிய உயர்வில் சேர்த்துக் கொள்ளும் வகையில் Personal pay ஆக அடிப்படை விதி 22(i) (b) (II) -யின்படி நிர்ணயம் செய்யப்படும்.

3. **வயது:-** 1.7.90 அன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு 35க்குக் குறைவாகவும் மற்றவர்களுக்கு 30-க்கு குறைவாகவும்.

4. **கல்வித் தகுதி:-** பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு இளையர் பட்டம்.

இத்துடன், விண்ணப்பதாரர்கள் 1.8.90 அன்று பணியாற்றும் துறையில் (Parent Department) வகித்த அல்லது அவர்கள் வகிக்கின்ற பதவியில் தகுதிகாண் பருவத்தை முடித்தவராகவும், இளநிலை உதவியாளர் பதவியிலோ அல்லது உதவியாளர் பதவியிலோ அல்லது இவ்விரண்டிலும் சேர்த்தோ 5 ஆண்டுகட்குக் குறையாமல் பணியாற்றியவராகவும் இருக்க வேண்டும்.

குறிப்பு:- தண்டிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட மாட்டார்கள். அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள், சம்மந்தப்பட்ட மேலனுப்பும் அதிகாரிகளால், தேர்வாணைக்குழுவிற்கு அனுப்புதல் கூடாது. விண்ணப்பதாரர் மீது குற்றம் சாட்டப்பட்டு விண்ணப்பம் அனுப்பப்படும் நாள் வரை அக்குற்றச்சாட்டுகள் மீது தீர்ப்பு வழங்கப்படாமல் இருந்தால் அவரது தேர்வு முடிவு நிறுத்தி வைக்கப்படும். இறுதியில் மேற்படி குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவருக்கு ஏதாவது தண்டனை வழங்கப்படுமானால் அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்.

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப்பற்றிய முழு விவரங்களும், செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களிடமிருந்து எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ, அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண், விளம்பர நாள் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுதி, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்கட்கு வழங்கக்கூடிய 1.10.90 அன்றோ அதற்குப் பின்போ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து) சென்னை, அண்ணாசாலை, தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலருக்கு வழங்கக் கூடிய 1.10.90 அன்றோ அதற்குப் பின்போ வாங்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல், செலுத்தத்தக்க ரூ.10/-க்கான கேட்பு காசோலை (Demand Draft) யுடனும் சுயவிலாசமிட்ட உறையுடனும் (26x12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2737/MS/90/MCS

பூசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்

144098



ங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறுங்கள் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA







மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 25.10.90 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பங்கேற்று காவலர் குடியிருப்பு, பயணியர் விடுதி ஆகியவற்றைத் திறந்து வைத்தார்; குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.







குழந்தைகள் தின விழாவையொட்டி, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு.க.அன்பழகன் அவர்கள், சென்னைக் கலைவாணர் அரங்கில் கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார் (16.11.90)


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

கார்த்திகைத் திங்கள் - 15

மலர்:21 இதழ்:11

1-12-1990


# இந்த இதழில்...


இனிய இந்தியாவை உருவாக்குவோம்!
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

சக்தி சோயா தொழிற்சாலை தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் உரை ... 4

மக்கள் தேவைகளை நிறைவு செய்வோம்
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 7

நூலகத் துறையின் குறிக்கோள்களும் சாதனைகளும்
—மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ... 9

செய்தித் துளிகள் ... 12

அரசினர் பொதுமருத்துவமனை: நரம்பியல் நிலையத்திற்கு ரூ. 1 கோடி வழங்கப்படும்
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 13

பாராளுமன்றக் குழுக்களின் பங்கு
—மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ.துரைசாமி ... 17

வெண்மைப் புரட்சியில் வியத்தகு சாதனை! ... 20

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!
—கருத்து விளக்கப் படங்கள் ... 24

பல்லக்கும் காட்டு நாயக்கன்களும் ... 26

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 29

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் ... 33

தமிழகத்தில் தொழில் கூட்டுறவும் வேலை வாய்ப்பும் ... 35

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 40

அனைத்திந்தியக் கூட்டுறவு வார நிறைவு விழா ... 42

நலிவுற்றோர்க்கு வாழ்வுதரும் நலத்திட்டங்கள் ... 44







மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் சென்னையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் ''ஹார்மோனி இந்தியா'' என்ற அமைப்பைத் தொடங்கி வைக்கார் (22-11-90).

# இனிய இந்தியாவை உருவாக்குவோம்!

கலைவாணர் நடத்திய 'கிந்தனார்' என்ற ஒரு கதாகாலட்சேபத்தை முழுமையாகக் கேட்டவன்நான்; கேட்டு ரசித்தவர்களில் பலர் இங்கு இல்லாவிட்டாலும் சிலர் இங்கு இருக்கக்கூடும்.

நந்தனார் என்ற புராணக் கதையில் நந்தனார் தில்லையில் இருக்கிற நடராச பெருமானைச் சென்று வணங்குவதற்குப் பல்வேறு தடைகள். தில்லைக்குச் சென்ற பிறகும்கூட, நந்தி வழி மறித்தது என்று கதை கூறுகிறது. இப்படி தில்லையிலே உள்ள ஆண்டவனைத் தொழுவதற்கே நந்தன் என்ற பக்தனுக்கு இடமில்லை என்பதை அந்தக்கதை மையமாகக் கொண்டு வழங்கப்படுகின்ற ஒரு புராணமாகும்.

அதையே கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் மாற்றி 'கிந்தனார்' என்கின்ற பெயரில் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில், கிராமங்களில், கலை நிகழ்ச்சிகளில் நடத்திக் காட்டினார்.

நந்தன் ஆலயத்திற்குச் செல்ல விரும்பினார். இடம் கிடைக்கவில்லை. கிந்தன் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல விரும்புகிறான், இடம் கிடைக்கவில்லை, சாதியின் காரணமாக, மதத்தின் காரணமாக, பேதங்களின் காரணமாக, உயர்வு தாழ்வு என்ற அடிப்படையில், கிந்தனுக்குப் பள்ளிக்குச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை. எப்படியும் சென்றே தீருவது என்று, சென்னைக்கு ரயிலில் திரும்புகிறான். அந்த ரயிலில் கிந்தன் பயணம் செய்யும்போது அந்த ரயிலைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுகிறான். ''ரயிலே... ரயிலே...'' என்ற அந்தப் பாடல் ஆரம்பமாகும்.

அதிலே சொல்லுகிறான் - ரயில் ஒன்றுதான் முஸ்லிம் என்றும், இந்து என்றும், கிருத்துவர் என்றும், சீக்கியர் என்றும், புத்தர் என்றும், உயர் சாதிக்காரர் என்றும், தாழ்ந்த சாதிக்காரர் என்றும், செட்டியார், முதலியார், பிள்ளை என்றும் பேதம் பாராமல், எல்லோரையும் ஏற்றிச் செல்கின்ற ஒன்றே ஒன்று ரயில்தான் என்று அந்த ரயிலைப் பாராட்டிப் பாடுகிறான்.

எனவே அந்தப் பேதங்களை எல்லாம் ரயில் அகற்றிக் காட்டுகிறது என்பதைத் தன்னுடைய நகைச்சுவை வாயிலாக எடுத்துச் சொன்ன கலைவாணர் அரங்கத்தில் பேதங்களை வீழ்த்துவதற்காக நாமெல்லாம் கூடியிருப்பது மிகமிக பொருத்தமான ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹார்மோனி இந்தியா என்ற இந்த ஆங்கிலச் சொற்றொடருக்கு நண்பர் லத்தீப் அவர்கள் ''சௌசன்ய இந்தியா'' என்று குறிப்பிட்டார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்பது அவருக்குத் தெரியும். இந்தியாவில் வாழ்கிற நாம் சௌசன்யமாக இருக்க வேண்டும் என்று புழங்குகிற மொழியில் அவர் சொன்னார். சௌசன்ய இந்தியா என்றால் சில பேருக்கு வாயிலே நுழையாமல் கூட போய்விடும். எனவே இதற்கு மிகமிக பொருத்தமான பெயர் - எந்த இந்தியாவை நாம் காண விரும்புகிறோம்? ஒன்றுபட்ட இந்தியா என்று நாம் சொல்லுகிறோம்! சரி! ஒன்றுபட்ட இந்தியா என்று நாம் சொல்லும்போதே, அது பல கூறுகளாக இருக்கிறது என்பது உண்மையாகிறது. இந்தியா என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். எனவேதான் ஒன்றுபட வேண்டும் என்று சொல்கிறோம். இரண்டாக - மூன்றாக - நான்காக - ஐந்தாக இருந்தாலும், அந்த வேற்றுமையில் ஒற்றுமைகாண வேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

எனவே ஒன்றுபட்டவர்கள் நாம் என்று சொல்லி, வேறுபட்டு இரு என்பதைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லாமலே, இதை இந்த சொற்றொடரை ''இனிய இந்தியா'' என்று அழைக்கலாம் என நான் கருதுகிறேன்.

இனிய என்பதில் அமைதி அடங்கியிருக்கிறது. இனிய என்பதில் வெறுப்பற்ற தன்மை அடங்கியிருக்கிறது. இனிய என்பதில் கசப்பற்ற உணர்வு அடங்கியிருக்கிறது. இனிய என்பதில் ஒற்றுமை அடங்கி இருக்கிறது. இனிய என்பதில் உறவு அடங்கியிருக்கிறது. எனவே ''இனிய இந்தியா'' என்று இந்த அமைப்பின் பெயர் இருக்கலாம். ஏனென்றால் ஆங்கிலம் படித்தவர்களிடத்திலே மாத்திரம் நாம் ஒற்றுமையை - உறவை-உருவாக்க இந்த அமைப்பைத் தோற்றுவிக்கவில்லை. ஆங்கிலம் தெரியாத, பிற மொழி பயின்ற - அல்லது வேறு மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கிற எல்லா மக்களிடத்திலும் நாம் சொல்லும்போது அந்தந்த மொழியில் இதனுடைய பொருளைக் குறிக்கும்போது தமிழில் இனிய இந்தியா என்று குறித்தால் பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

வள்ளுவரைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற திருமூலரைப் பற்றி அவருடைய அந்த இனிய வாசகத்தைப் பற்றி - பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி நினைவுபடுத்துவார்கள். ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற அந்த சொற்றொடர் திருமூலர் காலத்திலேயே பயன்படுத்தப்பட்டது.

ஒன்றே குலமாக இல்லாத காரணத்தினால், ஒருவனே தேவன் என்று வழங்கப்படாமல் ஆயிரக்கணக்கான தெய்வங்கள் வழங்கப்பட்டு, அதன் காரணமாக மாறுபாடுகள், முரண்பாடுகள், பேதங்கள், கலவரங்கள், அமளிகள் ஏற்பட்ட காரணத்தினால் அன்றைக்கே ஒரு திருமூலர் தேவைப்பட்டிருக்கிறார்.

சாதிப் பிரிவுகளால் சமுதாயம் சீர்குலைவதை காணச் சகிக்காமல் தான் வள்ளுவர் பெருமான் குறிப்பிட்டார்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்**
**சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என்று குறிப்பிட்டார்.

எல்லா உயிர்களும் பிறப்பால் ஒத்தவர்கள்தான், ஒப்பானவர்கள் தான். எப்போது ஒப்பானவர்கள் அல்ல என்றால் ''சிறப்பு ஒவ்வா செய் தொழில் வேற்றுமையால்!'' - பிறப்பு எல்லோருக்கும் ஒன்று போலத் தான் - ஒப்பானதுதான். ஆனால் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையால் - இதைக்கூட நாம் தவறாக இடைக்காலத்திலே எடுத்துக் கொண்டோம். அதற்கு பொருள் கண்டோம்.

'செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வாது' என்று எடுத்துக் கொண்டோம். செய்கின்ற தொழில் ஒருவர் ஆசிரியராக இருந்தால் ஒருவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தால், ஒருவர் மண்வெட்டி கூலி வேலை செய்பவராக இருந்தால், ஒருவர் வேளாண்மைத் தொழிலைச் செய்பவராக இருந்தால் - வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட விவசாயி ஒரு சாதி! அதைப்போலவே பூஜை செய்கின்ற புரோகிதர்கள் ஒரு சாதி! சலவைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளி ஒரு சாதி என்று இப்படி செய்தொழில் வேற்றுமை என்பதற்கு நாம் தவறான பொருள் கொண்டோம். ஆனால் அதற்கு நியாயமான பொருள், செய்கின்ற தொழில் ஒவ்வொன்றிலும் சிறப்பு - சலவைத் தொழிலாளர்களில் யார் சலவையை நன்றாகச் செய்கிறார்களோ அது சிறப்பான தொழில். ஐ.ஏ.எஸ்; அதிகாரிகளில் யார் நல்ல திறமையான ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கிறாரோ அந்தத் தொழிலில் அவர் சிறப்பானவர். இப்படித்தான் செய் தொழில் வேற்றுமை என்பதை எடுத்துக் கொள்ள வேண்டுமேயல்லாமல் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு சாதி என்று எடுத்துக்கொண்டு அது ஆயிரம் சாதிகளாக ஆகி, கவிச்சக்ரவர்த்தி பாரதியார் கேட்டார் - ''ஆயிரம் உண்டிங்கு சாதி, இதில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி!'' என்று கேட்டார். அப்படி கேட்டபோது அந்நியர் வந்து நுழைய அவர்களுக்கு அனுமதி கிடையாது என்று சொன்னாலும், ''ஆயிரம் உண்டு இங்கு சாதி'' என்பதை ஆதங்கத்தோடுதான் அன்றைக்கே பாரதி ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அதைத்தான் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் முப்பது கோடி மக்கள் உண்டென்றாலும், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்!'' என்று வருத்தப்பட்டான்.

அந்த வருத்தத்தை, வேதனையை நீக்கி, சாதிகளால் மதங்களால் நாம் பிளவுபட்டு விடாமல் ஒற்றுமையாக இயங்க, இனிய இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஏழை பணக்காரர் இருக்கலாம். ஆனால் ஏழை பணக்காரன் என்ற நிலை மாறுவதற்கு, பொருளாதாரத் துறையில் நாம் வேகமாக விரைவாக புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு முன்னேற வேண்டும் என்றாலும்கூட, ஏழையாக - பணக்காரனாக - இருக்கிற காரணத்திலேயே, அவன் சமுதாயத்திலே இன்றைக்கு வீழ்த்தப்பட வேண்டும், சமுதாயத்திலே புறக்கணிக்கப்பட வேண்டும் என்று யாரும் கூற முடியாது.

அத்திமரம் பார்த்திருக்கிறோம் நாம். அத்தி மரத்தில் உச்சியிலே இருக்கின்ற தழைக்கு அருகாமையில் உள்ள கொப்பிலும் காய் காய்க்கிறது. அத்தி மரத்தில் கிளையிலும் காய் காய்க்கிறது. அடி மரத்திலும் காய் காய்க்கிறது. வேரிலே காய்த்த காய் புடலங்காய், அடி மரத்திலே காய்த்த காய் வேப்பங்காய், கிளையிலே காய்த்த காய் பரங்கிக்காய், கிளை நுனியிலே - தழையில் - காய்த்த காய் சுண்டைக்காய் என்று யாரும் சொல்வதில்லை. கிளையிலே காய்த்ததும், நுனிமரத்திலே காய்த்ததும், அடி மரத்திலே காய்த்ததும், வேரிலே காய்த்ததும் அத்தனையும் அத்திக்காய் என்பதைப் போல், ஆண்டவன் படைப்பிலே எங்கே மனிதன் பிறந்திருந்தாலும் அனைவரும் மனிதன் தான். அத்திமரத்திலே காய்த்தது அத்தனையும் அத்திக்காய் என்பதைப் போல் - அனைவரும் மனிதர்கள் தான் என்கின்ற அந்த உணர்வை நாம் பெற்றாக வேண்டும்.

அதற்கு இந்த அமைப்புக்களைப் போல - அரசின் சார்பிலே மாத்திரம்தான் இந்த முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று இல்லாமல் ஆன்றோர்களை - சான்றோர்களை, அமைதியிலே நாட்டம் கொண்டவர்களை, இது போன்ற அமைப்புக்கள் பயன்படுத்திக்கொண்டு மக்களிடத்திலே சீரிய செழுமிய அமைதிக்குத் தேவையான பிரச்சாரத்தை நாம் செய்தாக வேண்டும்.''

***(சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 'ஹார்மோனி இந்தியா' அமைப்பின் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)***

**(22.11.90).**

---

**இனிய என்பதில் அமைதி அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் வெறுப்பற்ற தன்மை அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் கசப்பற்ற உணர்வு அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் ஒற்றுமை அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் உறவு அடங்கியிருக்கிறது.**
**எனவே 'இனிய இந்தியா' என்று இந்த அமைப்பின் பெயர் இருக்கலாம்.**

**— முதல்வர் கலைஞர்**



# சக்தி சோயா தொழிற்சாலை தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் உரை

"இங்கு நடைபெறுகின்ற இந்த இனிய விழா நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு அரசுக்கும் உரிமையுடைய கூட்டுத்துறை நிறுவனமான இந்தத் தொழிற்கூடத்தைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நண்பர் மகாலிங்கம் அவர்களுடைய அசோசியேட் என்ற அளவிலே உள்ள இந்த நிறுவனத்தோடு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் - டிட்கோ என்று அழைக்கப்படுகின்ற நிறுவனம் ஒரு கூட்டுத் துறை என்ற அமைப்பில் இன்றைக்கு இந்த சோயா நிறுவனத்தைத் தொடங்கியிருக்கின்ற நிலையை நீங்களெல்லாம் காண்கிறீர்கள்.

1970-ஆம் ஆண்டில் அன்றைக்கு அரசுப் பொறுப்பிலே இருந்த நான், இந்த கூட்டுத் தொழில் துறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று விரும்பி, சட்டமன்றத்திலே 'ஜாயின்ட் செக்டார் - கூட்டுத் துறை என்ற அறிமுகத்தைச் செய்து, அதற்குப் பிறகு தொடர்ந்து இன்றுவரையில் அந்த முயற்சிகளின் காரணமாக 56 தொழில்களில் 'டிட்கோ' நிறுவனம் இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறது.

இந்த 56 தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற இந்த நிறுவனத்தின் சார்பிலும், அந்தக் கூட்டுத் துறையின் சார்பிலும், ஆயிரத்து இருநூற்றி நாற்பது கோடி ரூபாய் முதலீடு செய்யப்படவும், ஏறத்தாழ 22 ஆயிரம் பேர் 'டிட்கோ' கூட்டு வைத்துக் கொண்டிருக்கின்ற நிறுவனங்களின் சார்பில் வேலைவாய்ப்பைப் பெறவும், ஒரு முயற்சி இன்றைக்கு வெற்றிகரமாக தமிழகத்தில் நிகழ்ந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் 70-ஆம் ஆண்டு அன்றைக்கு தி.மு.க. அரசு எடுத்த இந்தத் தொழில் கொள்கைதான்.

இப்போது மீண்டும் ஆட்சிக்கு வந்தபிறகு, அந்த ஜாயிண்ட் செக்டார் என்பதைப்போல இப்போது வேறு ஒரு முயற்சியும் தொழில்களை ஊக்கப் படுத்த இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இது அசோசியேட் செக்டார் என்பதாகும். கூட்டுத் துறையில் அரசின் பங்குத் தொகை 26 சதவிகிதம், மகாலிங்கம் போன்ற தொழில் அதிபர்கள் அல்லது தொழில் நிறவனங்களின் பங்குத் தொகை 27 சதவிகிதம், மீதமுள்ள பங்குத் தொகை பொது மக்களுடைய பங்குத் தொகை என்பது கூட்டுத் துறையின் இலக்கணம்.

இப்போது அசோசியேட் செக்டாரில் அரசின் பங்குத் தொகையாக அதாவது டிட்கோவின் பங்குத் தொகையாக 11 சதவிகிதம் போடப் படுகிறது. அந்தத் தொழில் நல்ல வளர்ச்சி பெற்ற வுடன், அந்த பங்குத் தொகை திரும்பப் பெறப் பட்டு, இன்னொரு தொழிலுக்குத் தரப்படுகிறது. எனவே அசோசியேட் என்கிற முறையிலேதான் இந்தத் தொழில் துறையில் இரண்டாவது ஒரு கட்டத்தை இந்த அரசு இன்றைக்கு நிறைவேற்றி அதன் மூலம் ஒரு நல்ல பலனை, தொழில் துறையில் காணமுடியும் என்று நம்புகிறது.

இங்கே இந்த சோயா நிறுவனத்தைப் பொறுத்த வரையில் டிட்கோ சார்பாக 26 சதவிகிதத்திற்கு ஏறத்தாழ 2 கோடியே 12 இலட்ச ரூபாய் முதலீடும், நண்பர் மகாலிங்கம் அசோசியேட் சார்பாக 25 சதவிகிதத்திற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் முதலீடும் மற்றும் பொது மக்கள் பங்காக 4 கோடி ரூபாய் முதலீடும், இந்திய தொழில் நிறுவனம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி இவை களைப் போன்ற நிறுவனங்களின் சார்பாக ஏறத் தாழ 16 கோடி ரூபாயும் மொத்தம் 24 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த தொழிற்சாலை தொடங்கப் பட்டிருக்கிறது.

இந்த சோயா விதைகளை மூலப் பொருளாகக் கொண்டு இந்தப் பணிகளை இந்தத் தொழிற் சாலை ஆற்ற இருக்கிறது.

**ஊடு பயிர் சோயாவினால் உரச்சத்தும் கிடைக்கிறது!**

நான் நண்பர் மகாலிங்கத்திடம் விசாரித்த போதும், தம்பி மாணிக்கத்திடம் பேசியபோதும், டிட்கோ நிர்வாகிகளோடு கலந்து பேசியபோதும் எனக்குக் கிடைத்துள்ள தகவல்கள் சோயாவிதை களைத் தயாரித்துத் தரக்கூடிய நிலையில் தமிழ்நாட்டு விவசாயிகள் அதிகமாக ஆர்வம் கொள்ளவில்லை. அக்கறை காட்டவில்லை, எனவே இந்தத் தொழிற் சாலைக்குத் தேவையான மூலப்பொருளை மத்தியப் பிரதேசத்திலிருந்துதான் பெற வேண்டியிருக்கிறது, ஏறத்தாழ ஆண்டு ஒன்றிற்கு ஒரு இலட்சம் டன் சோயா தேவைப்படுகின்றது என்றால்கூட அந்த ஒரு இலட்சம் டன்னில் இன்றைக்கு மத்தியப் பிரதேசத்திலிருந்து 40 ஆயிரம் டன் சோயா தருவிக்கப்படுவதாகவும், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு அதில் அதிக அக்கறை ஏற்படாத காரணத்தாலும், அது ஆதாயம் தரக்கூடியது என்று அவர்கள் இன்னும் கருதாத காரணத்தாலும், பத்தாயிரம் டன் மாத்திரம் தான் இங்கே கிடைக்கிறது என்றும், ஆகவே நம்முடைய தேவையில் 1 இலட்சம் டன்னில் 50 ஆயிரம் டன்னை வைத்துக் கொண்டு தான், இன்றைக்கு இந்தத் தொழிற்சாலை நடை பெற இருக்கிறது என்பதையும் நான் புரிந்து கொண்டு இருக்கிறேன். இதற்குத் தனியாக நெற் கழனிகளைப் போலவே அல்லது கரும்புத் தோட்டங் களைப் போலவே கூட தனியாக நிலப்பகுதிகள் தேவை என்று கூட இல்லாமல், நெல், கரும்பு, பருத்தி இவைகளைப் பயிரிடுகின்ற அந்த நிலங்களில் கூட, ஊடு பயிராக இந்த சோயாவைப் பயிரிடுவதன் மூலம் அதன் நிலங்களுக்குத் தேவையான உரமும் கூட கிடைக்கின்றது.

இன்றைக்குப் பயன்படுத்தப்படுகின்ற உரங்களால் எருச் சத்துக்களால் நிலத்தின் தன்மை, நிலத்தின் வலிவு குறைகிறது என்கின்ற ஒரு குறைபாடு கூட சொல்லப்படுகிறது.

சோயாவை ஊடுபயிராகப் பயிரிடுகின்ற காரணத்தால் எந்தக்குறைபாடும் இல்லாத அளவிற்கு நிலங்கள் செழிப்பாக இருக்கவும், வேறு பயிர்கள் சோயாவைத் தவிர, அதனை ஊடுபயிராகப் பயன் படுத்துகிற நிலங்களில் வேறு பயிரை விளை வித்தால் அவைகள் நல்ல முதலீட்டைத் தரவும், இந்த சோயா இன்றைக்கு உபயோகமாகிறது என்கின்ற உண்மையும் கண்டு பிடிக்கப்பட்டிருக் கின்றது. இவைகளை ஆர்வத்தோடு அக்கறையோடு நம்முடைய விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். ஒரு சமுதாய அடிப்படையில் கூட இதனை நோக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ராமன் இங்கே கேட்டுக் கொண்டார்.

இந்த சோயாவில் கொழுப்புச் சத்து அதிகம் இல்லாததும், புரதச் சத்து அதிகம் இருப்பதும் கூட உடல் ஆரோக்கியத்திற்கு மிகமிக தேவையான ஒன்றாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட

**அட்டை சொல்லும் செய்தி**

## தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி

மறைந்த பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர் களின் பிறந்தநாள் விழா, தேசிய ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தவகையில் 19.11.90 அன்று, காலை, சென்னையில், தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர்கள், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் அரசு அலுவலர்கள் தேசிய ஒருமைப் பாடு உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியைப் படித்தார். அங்கு கூடியிருந்தோர் அனைவரும் அதைத் திரும்பச் சொல்லி, உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். உறுதிமொழி வாசகம் வருமாறு:-

"நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்கவும், வலுப்படுத்தவும், என்னை அர்ப்பணித்துச் செயல்படுவேன் என்று மனதார உறுதி கூறுகிறேன்.

"நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபட மாட்டேன் என்றும், மதம், மொழி, வட்டார மற்றும் அரசியல் அல்லது பொருளாதார பேதங்களுக்கு அமைதியான முறையிலும், அரசியல் சட்டத்திற்குட்பட்டும், தீர்வு காணத் தொடர்ந்து பாடுபடுவேன் என்றும் நான் மேலும் உறுதி கூறுகிறேன்".



## வேளாண் மகளிர் பயன் பெற...

தமிழ்நாட்டில் உள்ள 6 உழவர் பயிற்சி நிலையங்களில் 'டான்வா' என்ற 'வேளாண்மையில் தமிழகப் பெண்கள்' திட்டம், டென்மார்க் அரசின் முழு நிதி உதவியுடன் 1980ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி உழவர் பயிற்சி நிலையமும், இந்த ஆறு உழவர் பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும்.

வேளாண்மைத்துறை மூலம் இத்திட்டத்திற்காக 1986ஆம் ஆண்டு ரூ.3,21,45,000/- ஏழு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வேளாண் மகளிருக்கு வேளாண்மை நுட்பங்களைச் செயல்முறை விளக்கம் மூலம் செய்து, காட்டுவதால், எழுதப்படிக்கத் தெரியாத பெண்களும் எளிதில் புரிந்து கொண்டு, அவரவர் களங்களில் திறமையுடன் புதிய தொழில் நுட்பங்களைக் கையாள முடிகிறது.

இத்திட்டம் தமிழகத்தில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கை அண்ணா, தென்னார்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய 6 மாவட்டங்களில் உழவர் பயிற்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

வேளாண்மையில் ஈடுபடும் மகளிருக்கும் புதிய தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொடுத்து நிர்வாகத் திறமை அதிகரித்து, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இத்திட்டம் பெரும் உதவியாக இருக்கிறது. இத்திட்டத்தினைச் செயலாற்றும் வசதியாக டென்மார்க் அரசின் முழு நிதியுதவியில் ரூ.26 இலட்சம் செலவில் உழவர் பயிற்சி நிலைய அலுவலகக் கட்டடமும், உழவர் பயிற்சி நிலையத்தில் பணியாற்றுகின்ற பல்வேறு அலுவலர்களுக்கு 14 குடியிருப்புகளும் தற்போது திருநெல்வேலி இணை வேளாண்மை இயக்குனர் அலுவலக வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

— துரை. ராஜ்குமார்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி கட்டமொம்மன் மாவட்டம்.

கடமைப்பட்டிருக்கின்றேன். அது மாத்திரம் அல்ல. எனக்குத் தரப்பட்ட தகவலில் ஒரு ஐந்து சதவிகிதம் சோயா மாவை நாம் பயன்படுத்துகின்ற உணவுப் பண்டத்தில் கலந்தால் - ஏற்கனவே நம்முடைய உணவு தானியங்களில் சத்து குறைவாக இருக்கிறது. அது பயிரிடுகிறமுறையால் அல்லது அது பெறுகின்ற உரங்களால் எரு சத்துக்களால் உணவு தானியங்களுடைய வலிவுச் சத்து குறைந்திருக்கின்றது. அது மேலும் சமையல் செய்யப்படுகின்ற காரணத்தால் வேக வைப்பதால் அல்லது சுடுவதால் அல்லது வறுப்பதால் மேலும் அதனுடைய சக்தி குறைகிறது. இந்த சத்து குறையாமல் பார்த்துக் கொள்ள அந்தப் பண்டங்களோடு ஓர் ஐந்து சதவிகிதம் சோயா மாவு கலக்கப்படுமேயானால் அந்த சத்துக் குறைவை ஈடு செய்கின்ற பயனையும் இந்த சோயா மாவு அளிக்கின்றது. இவ்வளவையும் சொன்னால்கூட விவசாயிகளுக்குத் திருப்தி ஏற்படாது. சரி ஆதாயம் என்ன? வருமா்னம் என்ன? என்று கேட்கத் தோன்றும். ஏனென்றால் ஆதாயம் இல்லாமல் யாரும் ஆற்றைக் கட்டி இறைக்க மாட்டார்கள் என்று பழமொழியேகூட உண்டு. எனவே நான் அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். நெல்லோ அல்லது பருத்தியோ, கரும்போ பயிரிடுகின்ற அந்த நிலங்களில் இதனை ஊடுபயிராக விளைவிப்பதன் மூலம் ஒரு விவசாயி ஏக்கர் ஒன்றிற்கு இரண்டாயிரம் முதல் மூவாயிரம் ரூபாய் வரை அதிக வருமானம் பெற முடியும். நெல்லின் மூலம் பெறுகின்ற வருமானத்தைவிட, கரும்பின் மூலம் பெறுகின்ற வருமானத்தைவிட, பருத்தியின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை விட , ஊடுபயிராக இவைகளைப் பயிரிட்டால், அதன்காரணமாக மேலும் 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் ஏக்கர் ஒன்றிற்கு அதிக வருமானம் கிடைக்கும் என்பதையும் நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே இந்த சோயாவைப் பயிரிடுவதற்கு விவசாயிகளை எல்லாம் ஊக்கப்படுத்துகின்ற வகையில் இந்த நிறுவனத்தின் சார்பாக இப்போது நான் ஓர் அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகளிடமிருந்து தமிழ்நாட்டில் இன்று சோயா பயிர் முதலுக்கு டன் ஒன்றிற்கு 4 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இன்று முதல் அது 5,000 ரூபாயாக உயர்த்தித் தரப்படும். விவசாயிகளை ஊக்கப்படுத்தவும். சோயா தமிழகத்தில் ஏராளமாக விளையவும், எண்ணெய்ப் பற்றாக்குறையின் காரணமாக ஏழை எளிய நடுத்தர மக்கள் இன்றைக்குப் படுகின்ற அவலங்களைத் தீர்க்கவும் இன்றைக்கு நாம் எடுக்கின்ற முயற்சிகள் ஒரு பத்தாண்டுக் காலத்தில் பெரும் பயனை நிச்சயமாக விளைவிக்கும்.

சமூக நலத்துறை அமைச்சர் என்னிடத்திலே சொன்னார். குழந்தைகளுக்கு வழங்கப்படுகிற சத்துமாவு உருண்டையில் பயன்படுத்த இப்போது சோயா மாவு அரசிற்கு மத்தியப் பிரதேசத்தில் இருந்துதான் வந்து கொண்டு இருக்கிறது. இனிமேல் மாதா மாதம் நூறு டன் மாவு சக்தி சோயா நிறுவனத்திடமிருந்து சமூக நலத்துறையின் மூலமாக அரசு வாங்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

*(30-10-90 அன்று பொள்ளாச்சி அருகே மார்சிநாயக்கன் பாளையம் என்ற ஊரில் நடைபெற்ற சக்தி சோயா தொழிற்சாலை தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)*

நான்காம் அட்டை சொல்லும் செய்தி

# மக்கள் தேவைகளை நிறைவு செய்வோம்

## முதல்வர் கலைஞர்

"ஆசியாவின் ஜோதி, ஜனநாயகக் காவலர் பண்டித ஜவஹர்லால் நேருவின் பெயரால் 75-ஆம் ஆண்டு 11-வது மாதம் 14-ந்தேதி இங்கே இந்த ஆலையைத் தொடங்கி வைத்த எனக்குக்கிடைத்த பரிசு நேருவின் மகள் அன்னை இந்திரா காந்தி அடுத்த இரண்டு மாதத்தில் என்னுடைய ஆட்சியைக் கலைத்ததுதான். அப்போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியெல்லாம், நல்லவேளை, நம் ஆட்சி கலைக்கப்படும் முன் ஒரு ஜனநாயகக் காவலருடைய பெயரை நாம் எண்ணியவாறு வைப்பதற்கு ஒரு அவகாசம் கிடைத்ததே என்ற அக மகிழ்வுதான் எனக்கு ஏற்பட்டது. ஆறுதல் கிடைத்தது.

இது தொடங்கபட்டு எவ்வளவு பெரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது என்பதை தயாப் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் எண்ணிக்கை முப்பது. அவற்றில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பதிமூன்றும், அரசுத் துறையில் மூன்றும், தனியார் துறையில் பதினான்கும் இயங்குகின்றன.

சர்க்கரை ஆலைகளெல்லாம் - கூட்டுறவுத் துறையிலும், பொதுத் துறையிலும் இயங்க வேண்டு மேயல்லாமல் இது தனியார் துறைக்கு உரிமங்களை அளிக்கக் கூடாது என்ற நிலையை முன்பு நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது முடிவெடுத்து, அந்த முடிவினை மிகத் தீவிரமாகப் பின்பற்றினோம். ஆனால் அதற்குப் பிறகு தனியாருக்குச் சர்க்கரை ஆலைக்கான உரிமைகள் வழங்குகின்ற நிலைமை ஏற்பட்டது என்றாலும்கூட, மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முதலில் எடுத்த முடிவில் நாங்கள் உறுதியாக இருந்து பணியாற்றி வருகிறோம்.

ஆனால் ஏற்கனவே தனியாருக்குத் தரப்பட்ட அந்தச் சர்க்கரை ஆலைகள் விரிவடையவோ, இயங்கவோ எந்தத் தடையையும் நாங்கள் விதிக்கவில்லை. இன்றைக்கு அகில உலக அளவில் எடுத்துக் கொண்டால் சர்க்கரைத் தொழிலில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகின்ற சர்க்கரையில் இந்திய அளவில் தமிழ்நாட்டில் எட்டு சதவிகிதம் சர்க்கரை உற்பத்தியாகிறது. இன்னொரு பாராட்டத்தக்க அம்சம் என்னவென்றால், சென்ற ஆண்டுவரையில் இந்தியா

**தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் எண்ணிக்கை முப்பது. அவற்றில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பதின்மூன்றும், அரசுத்துறையில் மூன்றும், தனியார் துறையில் பதினான்கும் இயங்குகின்றன.**

சர்க்கரையை இறக்குமதி செய்து அதன் காரணமாக அன்னியச் செலாவணி இழப்பிற்கு உள்ளானது. ஆனால் இந்த ஆண்டு மத்தியில் இருந்த அரசு எடுத்த முடிவின் காரணமாக விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட்டதன் காரணமாகவும், ஆலைகளின் நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட்டதன் காரணமாகவும் இந்த ஆண்டு 2 இலட்சம் முதல் மூன்று இலட்சம் டன்வரை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு சிறப்பை இந்திய நாடு பெற்றிருக்கிறது.இதன் காரணமாக அன்னியச் செலாவணியை இந்தியா பெறமுடியும் என்ற நம்பிக்கையை நாம் பெற்றிருக்கிறோம்.

இந்த ஆலையைப் பொறுத்தவரையில் 77-ஆம் ஆண்டுதான் இதன் முறையான பணிகள் தொடங்கப்

பட்டன என்றாலும் 1250 டன் கரும்பைப் பிழியக் கூடிய திறன் வாய்ந்ததாக இருக்க இந்த ஆலை இன்றைக்கு இந்த விரிவாக்கத்தின் காரணமாக 3 ஆயிரம் டன் கரும்பைப் பிழியக்கூடிய திறன் கொண்டதாக இன்றைக்கு மாறுகிறது. அதற்குத் தான் இந்த விழா ஏற்பாடு.

77-78 ஆம் ஆண்டில் சுமார் 3,300 ஏக்கர் நிலத்திலேதான் கரும்பு விவசாயம் செய்யப்பட்டது. அதற்கு மாறாக இப்போது விவசாயிகளுடைய ஊக்கம், உற்சாகம், ஆர்வம், அக்கறை ஆகியவை காரணமாக 22 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இந்த 90-91 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடி செய்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஒன்றரை இலட்சம் டன் கரும்பு அரைவை என்கிற நிலைமை மாறி இப்போது 6 இலட்சம் டன் கரும்பு என்ற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது.

சாலை வசதிகளைப் பற்றி இங்கே வரகூர் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். இந்தக் கரும்பு ஆலையினால் கிடைக்கின்ற் வரிகளின் மூலம் ஏறத்தாழ 70 இலட்சம் செலவில் 67 சாலைகளைப் பழுது பார்க்கலாம். அஃதன்னியில் அரசின் சார்பில் புதிய சாலைகளை அமைக்கவும் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டில் 13.5.'90-இல் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தினேன். அந்த ஆலையின் திட்ட மதிப்படு 30 கோடி ரூபாய். மறைந்த நண்பர்,எங்கள் கழகச் சுடர் கந்தப்பன் பெயரால் ''கந்தப்பன் கூட்டுறவு ஆலை'' என்று அந்த ஆலை அழைக்கப்படும் என்று நான் அன்றைக்குப்பெயர் சூட்டினேன்.

அடுத்து 1.7.'90 அன்று வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் விரிவாக்கம் 1250 டன்னிலிருந்து, 2,500 டன்னாக உயரக்கூடிய அளவிற்குச் செய்யப்பட்டு 10 கோடி ரூபாய் செலவில் அந்த விரிவாக்கத் திட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் சேத்தியா தோப்புப் பகுதியில் 2,500 டன் பிழிதிறன் கொண்ட ஆலை 30 கோடி ரூபாய் செலவில் தொடங்கி வைக்கப்பட்டது. அண்மையில் 9.8.'90 அன்று அந்த ஆலைக்கு, மறைந்த கழக மறவர் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தியின் பெயரில் ''எம்.ஆர். சர்க்கரை ஆலை'' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

கட்சி அளவில் மாத்திரம் அல்லாமல், நாட்டு அளவில் உலக அளவில் புகழ்பெற்ற பண்டித ஜவஹர்லால் நேருவின் பெயரால் அமைந்துள்ள இந்தச் சர்க்கரை ஆலை விழாவில் தலைமை உரை ஆற்றிய அமைச்சர் தம்பி நேரு, நலிந்த மக்களுக்காக இந்த அரசு நிறைவேற்றி வருகிற தற்காலிகப் பாது காப்புத் திட்டங்கள் குறித்துப் பேசினார்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் ஏழை-எளிய மக்களுக்கு, இயலாதவர்களுக்கு, நலிவுற்றோர் களுக்கு, உடனடி நிவாரணப் பணிகளைச் செய்வது மாத்திரம் அல்ல, தொடர்ந்து எதிர்காலத்தில் ஒரு மாநிலத்தின் நீண்ட கால நல்வாழ்விற்கு வளர்ச்சித்

**''இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்களுக்கு, இயலாதவர்களுக்கு, நலிவுற்றவர்களுக்கு உடனடி நிவாரணப் பணிகளைச் செய்வது மாத்திரம் அல்ல, தொடர்ந்து எதிர்காலத்தில் ஒரு மாநிலத்தின் நீண்டகால நல்வாழ்விற்கு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்!''**

**— முதல்வர் கலைஞர்**

திட்டங்களை நிறைவேற்றுவதிலும் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

எத்தனை சர்க்கரை ஆலைகள் தொடங்கப் பட்டன, அடிக்கல் நாட்டப்பட்டன என்பதையெல்லாம் இங்கே விளக்கினேன்

ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நான் ஏற்றுக்கொண்ட சபதம்-மாதம் ஒரு தொழிற்சாலை வீதம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட வேண்டும் என்பதாகும்.

அந்த சபதம் வீணாகாமல் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

விவசாயத் துறையில் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது பற்றி இங்கே பலரும் பாராட்டிப் பேசினார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் சில பெரிய திட்டங்கள் அறிவிக்கிற காரணத்தால் -பெரும் இழப்பிற்கு இடையே ஒரு அரசு இது போன்ற திட்டங்களை அறிவித்து விடுகிற காரணத்தால் - நாட்டு மக்களுடைய தேவைகள் அனைத்தும் முற்றுப்பெற்றதாக நான் கருதவில்லை.

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம்அளித்து விட்டோம். எனவே விவசாயிகள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது என்று எண்ணுகிற மனப்பான்மை எனக்குக் கிடையாது. வைக்கப்பட்டிருப்பது முற்றுப்புள்ளி அல்ல. 'கமா' தான் என்பதை உணர்ந்திருக்கிறேன். ஏனென்றால் தேவைகளுக்கு முடிவே கிடையாது.

மக்கள் பெருகப் பெருக அந்தப் பெருக்கத்திற்கு ஏற்ப தேவைகள் வளர்ந்து கொண்டே இருக்கும். எனவே ஒரு அரசு என்றைக்கும் அந்தத் தேவைகளை எல்லாம் நிறைவு செய்யக்கூடிய ஒரு அரசாக இருந்திட வேண்டும். அதைத்தான் இன்றைக்கு நாம் செய்து கொண்டிருக்கிறோம்."

**— திருச்சி மாவட்டம் பெரம்பலூரில், 11.11.90 அன்று ஜவகர்லால் நேரு சர்க்கரை ஆலை விரிவாக்கம் மற்றும் தொழிலாளர் குடியிருப்புத் திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.**





# நூலகத்துறையின் குறிக்கோள்களும் சாதனைகளும்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்**

''நாடு நலம் பெற வீட்டிற்கு ஒரு நூலகம் தேவை'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ''புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில், புத்தகச்சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்'' என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் கூறியுள்ளார்கள்.

''குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்குச் சிறந்த படிப்பை வழங்குவது நூலாகும்'' என்று எமர்சன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சமுதாய மறுமலர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் நூலகங்கள் தமிழகமெங்கும் வளரவேண்டும் என்பதையும், நூலக இயக்கம் தழைக்க வேண்டும் என்பதையும், கருத்தில் கொண்டு, நூலகத் துறையைப் பொறுப் பேற்றுக் கொண்ட இரண்டாண்டு காலத்தில், பல்வேறு திட்டங்களையும், குறிக்கோள்களையும் வகுத்துக் கொடுத்துள்ளோம்.

### குறிக்கோள்களும் சாதனைகளும்

1. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் இலவச நிலம் பெறுதல்,

2. பொது நூலகங்கள் செயல்படும் ஊர்களில் உள்ள படித்த ஒவ்வொருவரையும் நூலக உறுப்பினராகச் சேர்த்தல்,

3. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக போதிய தளவாடங்களைப் பெறுதல்,

4. பொது நூலகம் ஒவ்வொன்றுக்கும் ஒரு வழங்குமுனை திறந்து செயல்படுத்துதல்,

5. பொதுமக்களிடமிருந்து நூலகங்களுக்கு நன்கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறுதல்,

6. நூலகங்கள்தோறும் புரவலர் சேர்த்து நூலக இயக்கத்தை வளர்த்தல்,

7. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்தக் கட்டடத்தில் செயல்படச் செய்தல்,

ஆகிய குறிக்கோள்கள் அடிப்படையில் நல்ல பல சாதனைகள் படைத்துள்ளோம்.

### இலவச நிலம் பெறுதல்

மாநில அளவில் உள்ள 1558 கிளை நூலகங்களில், 115 நூலகங்கள் மட்டும் 1989-க்கு முன்பு சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. நூலகக் கட்டடங்கள் கட்ட காலி மனைகள் இல்லாத காரணத்தாலும், நிதி வசதியின்மையாலும், நூலகக் கட்டடங்கள் கட்டமுடியாத நிலை இருந்து வந்தது. இந்நிலையை மாற்றி இலவச நிலம் பெறுதல் என்ற குறிக்கோளின்படி சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக இலவசக் காலிமனைகள் பெறப்பட்டன.

காலிமனைகள் குறைந்த அளவு 5 சென்டிலிருந்து அதிக அளவு ஒரு ஏக்கர் வரையும், மதிப்பு ரூ.10,000/- முதல் ரூ.5 இலட்சம் வரையும், 493 காலி மனைகள் தனியாரிடமிருந்து பத்திரப்

**நூலக உறுப்பினர்கள் 1989க்கு முன்பு 15.47 இலட்சம் மட்டுமே இருந்தனர். படித்த அனைவரையும் உறுப்பினராக்கும் குறிக்கோளின் கீழ், தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டு, தற்போது 2.56 இலட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.**



பதிவு செய்யப்பட்டும்,683 காலிமனைகள் உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்டும், மொத்தம் 1,176 காலி மனைகள் ஊரின் மையப் பகுதிகளில் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு இலவசமாகப் பெற்ற காலிமனைகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ.338 இலட்சமாகும்.

### நூலக உறுப்பினர் சேர்க்கை

நூலகங்கள் முழுமையாகப் பயன்பட வேண்டுமானால், படித்த அனைவரும் நூலகத்தில் உறுப்பினராகச் சேரவேண்டும். 1989-க்கு முன்பு 15.47 இலட்சம் உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். இக்குறை போக்கவும், நூலகம் முழுமையாகப் பயன்படவும் படித்த அனைவரையும் உறுப்பினராக்கும் குறிக்கோளின் கீழ் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2.56 இலட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் உறுப்பினர்கள் சேர்க்கைத் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால் பள்ளி மாணவ, மாணவியர்களும், நிறுவன உறுப்பினர்களும், படித்த பொதுமக்களும் உறுப்பினர்களாகச் சேர்ந்த வண்ணம் உள்ளனர்.

**மாநில அளவில் 1,558 நூலகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1989-க்கு முன்பு 115 நூலகங்கள் மட்டுமே சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தன. கடந்த இரண்டாண்டுகளில் நூலகங்களுக்கென கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் 116 ஆகும். 51 நூலகக் கட்டடங்கள் கட்டும்பணி நடைபெற்று வருகிறது. மேலும் 300 கிளை நூலகக் கட்டடங்கள் கட்டும்பணி இவ்வாண்டு துவங்கப்பட உள்ளது.**

### தளவாடங்கள் நன்கொடை

நூலகங்களுக்குத் தேவையான தளவாடங்களை நூலக ஆணைக் குழுக்களில் நிதி வசதியில்லாததால் வாங்க முடியவில்லை. பொது மக்களிடமிருந்து நூலகங்களுக்குத் தேவையான தளவாடங்களை நன்கொடையாகப் பெறும் குறிக்கோளின்படி நூலக வளர்ச்சி மாநாடுகள் இதுவரை 11 மாவட்டங்களில் நடத்தப்பட்டன, மாநாடுகளின் வாயிலாக பொதுமக்களிடமிருந்து சுமார் ரூ.82 இலட்சம் மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களிலும் தளவாடப் பொருட்கள் நன்கொடையாகத் தொடர்ந்து பெறப்படுகின்றன. மேலும் பொதுமக்களிடமிருந்து தளவாடங்கள் வாங்குவதற்கென நிதியாக சுமார் ஒரு இலட்சம் அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளது.

### வழங்குமுனைகள் திறத்தல்

பொது நூலகச் சட்டப்படி 5,000 மக்கள் தொகை உள்ள ஊரில் ஒரு நூலகம் அமைக்கலாம் அதற்குக் குறைவான மக்கள்தொகை உள்ள ஊரில் ஒரு வழங்குமுனை அமைக்கலாம். 1989-க்கு முன்பு 1,543 நூலகங்களே செயல்பட்டு வந்தன. எனவே 5,000 மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள ஊர்களில் வழங்குமுனை ஏற்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டது. அதன்படி ஒரு வழங்குமுனை திறக்க நான்கு நிபந்தனைகள் நிர்ணயிக்கப்பட்டன.

1. 5 முதல் 10 சென்ட் காலிமனை பெறல்.
2. வழங்குமுனை இயங்க இலவசக் கட்டடம்;
3. குறைந்தபட்சம் 100 உறுப்பினர்கள் சேர்க்கை
4. தளவாடங்கள் மற்றும் நிதி ரூ.10,000/-.

மேற்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த வகையில் இதுவரை 497 கிராமங்களில் வழங்குமுனைகள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வழங்குமுனைகளுக்காகக் கட்டடம் கட்ட தனியார் பத்திரப் பதிவு மூலம் 146 காலிமனைகளும், உள்ளாட்சி நிறுவனம் மூலம் 221 காலிமனைகளும் பெறப்பட்டுள்ளன.

### நூல்கள், பருவ ஏடுகள், நாளேடுகள் பெறுதல்

நூலக ஆணைக்குழுக்களில் உள்ள நிதி வசதியைக் கொண்டு, தற்போது வெளிவரும் அனைத்து நூல்கள், பருவ ஏடுகள் மற்றும் நாளேடுகள் எல்லா நூலகங்களுக்கும் வாங்கமுடியாது. இந்நிலையைப் போக்க ஐந்தாவது குறிக்கோளின்படி பொதுமக்களிடமிருந்து 11 மாவட்டங்களில் சுமார் 1.63 இலட்சம் மதிப்புள்ள நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களிலும் இதேபோன்று பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் பெறப்பட்ட வண்ணமுள்ளன. உதாரணமாக செங்கை-அண்ணா மாவட்டம், திருவூர் கிளை நூலகர் திரு. பழனி என்பவர் மேற்படி நூலகத்திற்கு 73 பருவ ஏடுகள் கிராம மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று வருகிறார். இதன் மதிப்பு சுமார் ரூ.4,000/- ஆகும்.

### புரவலர்கள் சேர்க்கை

நூலகங்கள் வளர்ந்திட நிதி மிக முக்கியமானது. போதிய நிதி வசதியில்லாத காரணத்தால், நூலகங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே ''புரவலர் சேர்க்கை'' குறிக்கோளின்படி ஒவ்வொரு புரவலரிடமிருந்தும் ரூ.1,000/- பெற்று, அத்தொகையை நீண்ட கால முதலீட்டில் வைத்து, அதன் மூலம் பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து நூலகத்திற்குத் தேவையான நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கி, அந்த இதழ்களில் புரவலர்களின் பெயருடன் ''நன்கொடை'' என்று முத்திரையிட்டு, நூல்கத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை மாநில அளவில் 210 புரவலர்கள் சேர்ந்துள்ளார்கள். மேலும் ஆர்வத்துடன் புரவலர்கள் சேர்ந்தவண்ணம் உள்ளனர்.

### சொந்தக் கட்டடங்கள்

மாநில அளவில் 1,558 நூலகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1989-க்கு முன்பு 115 நூலகங்கள் மட்டுமே சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தன. 1989-க்குப் பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் நூலகங்களுக்கென கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் 116 ஆகும். மேலும் 51 நூலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் இவ்வாண்டு 300 கிளை நூலகக் கட்டடங்கள், ஒரு நூலகக் கட்டடம் ரூ.1/- இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டு, அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கட்டடப் பணி துவங்க உள்ளது. இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் 467 கட்டடங்களைப் பெற்று நூலகத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது.

**மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல அறிவை வளர்த்துக் கொண்டு பயன்பெற வேண்டும்.**



### நூல்கள் வாங்குதல்

நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்கள் தரம் வாய்ந்தவைகளாக அமையவேண்டும் என்ற நோக்கில் சில நிபந்தனைகளை வகுத்துத் தந்துள்ளேன். அதன்படி முதல் கட்டமாக வாங்கப்படும் நூல்களைப் படித்துப் பார்த்து, பரிந்துரை செய்ய ஒரு குழுவும் அடுத்த கட்டமாக வரையறுக்கப்பட்ட நிபந்தனையின்படி தரமான நூல்கள் தேர்வு செய்ய ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இதனால் நூலக இயக்ககத்தில் தரமான நூல்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு நூலின் 300 படிகள் வாங்குகின்ற நிலையை மாற்றி 500 படிகளாக உயர்த்தி வாங்கும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பதிப்பாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பெரிதும் உதவும்.

### பணியாளர்கள் - ஒரு அலகு முறை

1.4.82 முதல் நூலக ஆணைக்குழுப் பணியாளர்கள் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டனர். ஆனால் மாவட்ட அளவில் தனித்தனி அலகில் செயல்பட்டு வந்தனர். அனைத்து நூலகப் பணியாளர்களையும் ஓர் அலகின் கீழ் பணிபுரிய வழிவகை வகுத்து, நூலகப் பணியாளர்களது பதவி உயர்வு தேக்கநிலையை மாற்றி, மாநில அளவில் ஒரு அலகின் கீழ் கொண்டு வந்து, அதிகமான பதவி உயர்வுக்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### இரண்டாம் பகுதித் திட்டப் பணிகள்

மாவட்ட நூலக ஆணைக்குழு அலுவலகம் அமைக்கப்படாத சிதம்பரனார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு நூலக ஆணைக்குழு அலுவலகம் அமைக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் பொது நூலகச் சட்டப்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் நூலக ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தும் நிலை உண்டாக்கப்பட்டுள்ளது. மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட பதவிகளில் பதவி உயர்வு மூலம் பணியாளர்கள் பயன்பெற வழி செய்யப்பட்டுள்ளது.

1990-91-ஆம் நிதியாண்டில் மேலும் 15 கிளை நூலகங்கள் திறக்கவும், கன்னிமாரா நூலகத்திற்கு கம்ப்யூட்டர் வாங்கி அமைக்கவும், நலிந்த மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுக்கு ரூ.12/- இலட்சத்தில் புதிய நூல்கள் வாங்கவும் அரசு நிதி வழங்க இசைவு பெறப்பட்டுள்ளது.

# செய்தித் துளிகள்

### இலவசப் பட்டா வழங்கல்

**மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்கள், பொன்னேரி-திருத்தணி ஆகிய சட்ட மன்றத் தொகுதிகளில் மக்கள் குறைகளைக் கேட்டதோடு, மீஞ்சூர் பகுதிகளில் பலத்த மழையால் ஏற்பட்ட சாலை அரிப்புகளைப் பார்வையிட்டு அவற்றைச் செப்பனிடுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொண்டார். அத்துடன், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் 107 பேருக்கு இலவசப் பட்டாக்களையும் வழங்கினார்.**

### மதுரை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் பணிகள்:

மதுரை மாவட்டத்தில் ரூ.19.5 கோடி கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், கூட்டுறவு நகர வங்கிகள் மூலம் ரூ.1 இலட்சம் வரை வீடு கட்ட கடன் உதவி வழங்கப்பட்டு வருவதாகவும், மதுரை மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் செய்தியாளரிடம் பேசும்போது தெரிவித்தார்.

### கோவை மாவட்டத்தில் அரசின் பணிகள்:

கோவை மாவட்டத்தில், குறிப்பாக கோவை மா்நகரில் மட்டும் நடப்பு நிதியாண்டில் 2,500 பேருக்குத் தொழில் துவங்குவதற்காகக் கடன் உதவி வழங்கப்பட இருக்கிறது என்றும், முதல் கட்டமாகத் தொழில் தொடங்குவதற்காக, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.10,000 கடனும், இதில் ரூ.5,000 மானியத்துடன் 171 பேருக்கு உடனடியாக வழங்கப்பட இருக்கிறதென்றும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டத்தின் கீழ் 100 பெண்களுக்கு ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.5 இலட்சம் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறதென்றும், கோவை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களில் 95,750 பேருக்கு எழுத்தறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. நா.இராமன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்:

மதுரை மாவட்டத்தில் 300 ஆட்டோக்கள் வாங்குவதற்காக ரூ.106.5 இலட்சமும், 15 டாக்சிக்கள் வாங்குவதற்காக ரூ.26.25 இலட்சமும், 150 சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்குவதற்காக ரூ.7.50 இலட்சமும், மேலும் சிறுதொழில்கள் போக்குவரத்துகள், ஜெனரேட்டர்கள், பதிவுபெற்ற மருந்துக் கடைகள் வைப்பதற்காக ரூ.230 இலட்சமும் சிறுதொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

பெரியார் அணையில் 3 கட்டப் பணிகள் முடிவடைந்து விட்டன. இதனால் அதிக நீர் பெரியார் அணையில் சேமிப்பதற்கு வழிபிறக்கும்; ரூ.300 இலட்சம் செலவில் பெரியார்-வைகைத் திட்டத்தின் கீழ் 18.56 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன. இதனால் 39 எக்டேர் நிலம் கூடுதலாகப் பாசன வசதி கிடைக்கும்.

வைகை அணைக்கும் பேரணைக்கும் இடையே இணைப்புக் கால்வாய் ரூ.25 கோடி செலவில் அமைக்கும் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் கிடைத்து விட்டது. உலக வங்கி மற்றும் மத்திய நீர்க்குழுவின் ஒப்புதல் கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப் படும். மத்திய-மாநில அரசுகளின் உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்திற்காக ரூ.34.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.261.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் இதுகாறும் 1,675 பெண்கள் உள்பட 4,160 பேருக்கு ரூ.130.57 இலட்சம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 2,012 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.56.15 இலட்சம் மா்னியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் ரூ.590.2 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக 3,600 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் ஆதி திராவிடர்களுக்கு 465 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. கிராமச்சாலைகள் திட்டத்தின் கீழ் சேடப்பட்டி, திருமங்கலம், மேலூர், கள்ளிக்குடி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள 7 கிராமங்களில் சாலைகள் அமைப்பதற்காக ரூ.37.7 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பேருந்துச் சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ.60 இலட்சம் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**இவ்வாறு, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மணிமாறன் இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

### விவசாயிகளின் மேம்பாட்டிற்கு

காமராஜர், பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டங்களில் 1,67,000 விவசாயிகளுக்கு 41 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தொடக்க கூட்டுறவு வங்கியின் மூலம் ரூ.13 கோடி 70 இலட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட இருப்பதாகவும், சிறு மற்றும் குறுநில நில விவசாயிகளுக்கு மத்திய காலக் கடனாக ரூ.3 கோடி மற்றும் 5 இலட்சம் ரூபாயும், நகைக் கடனாக ரூ.28 கோடியும், நலிந்த பிரிவினருக்கு ரூ.12.85 கோடியும், சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில் செய்வதற்கு ரூ.25 இலட்சமும் கடனாக வழங்கப்பட இருப்பதாகவும், கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு.சாகுல் அமீது அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திருச்சி-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை

திருச்சி-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. திருப்பத்தூரில் 110 கிலோவாட் கொண்ட மின்நிலையம் ரூ.1 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கிறது. அதேபோல, இளையான்குடி தொகுதியில் சாலைக் கிராமத்தில் 60 கிலோவாட் சக்தி கொண்ட துணைமின் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. இத்தகவலை, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் மின்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காரைக்குடியில் நடைபெற்ற ஒரு அரசு விழாவில் தெரிவித்தார்.

### மீன் வளர்ப்பினை மேம்படுத்த

**தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை தனியாகத் துவக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதென்றும், மீனவர்களுக்குக் கடந்த ஆண்டு 30,000 வீடுகளும், நடப்பு நிதியாண்டில் 3,000 வீடுகளும் கட்டப்பட்டிருப்பதாகவும், தமிழ்நாட்டில் இரால் மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் 3 உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை புதிதாகத் துவக்குவதற்கு அரசு ரூ.45.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் மாண்புமிகு கால்நடைப்பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.சந்திரசேகரன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் கலந்து கொண்டபோது தெரிவித்தார்.**






அரசினர் பொது மருத்துவமனை

# நரம்பியல் நிலையத்திற்கு ரூ.1 கோடி வழங்கப்படும்

### - முதல்வர் கலைஞ

**பொ**துவாகப் பொன் விழா, வைர விழா, நூற்றாண்டு விழா, வெள்ளி விழா இவைகள்தான் கொண்டாடப்படுவது வழக்கம். ஆனால் சென்னைப் பொதுமருத்துவமனை நரம்பியல் துறைக்கு நாற்பதாம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படுவது புதுமையானது. ஒருவேளை அடுக்குச் சொல்லில் வரவேண்டும் என்பதற்காக "நரம்பியல் துறையின் நாற்பதாம் ஆண்டு விழா" என்று தலைப்புத் தந்திருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இருந்தபோதிலும்கூட ஏதாவது ஒரு விழாவின் பெயரால் என்னை அழைத்து கோரிக்கைகளை வைக்க வேண்டும் என்று தந்திரமாகக்கூட இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம்.

இந்தத் துறையின் தோற்றத்திற்கு - குறிப்பாகத் தமிழ்நாட்டில், இந்தியாவிலேயே முதல் தடவையாகத் தோற்றுவிப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் டாக்டர் ராமமூர்த்தியாவார். அவரை இங்கே அறிமுகப்படுத்தியபோது 68 வயது இளைஞர் என்று சொன்னார்கள். 68 வயதுக்கே அவர் இளைஞர் என்றால் 67 வயதுடைய நான் அவரைவிட இளைஞன் என்று மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கும் எனக்கும் உள்ள நட்பு ஆழமானது. சூழ்நிலையைப் பொறுத்து ஏற்பட்ட நட்பு அல்ல இது. 1967 ஆம் ஆண்டுக்கு முன்பே அவரை நான் நன்கு அறிவேன். 67 ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்த மருத்துவமனையிலே அவருடைய துறையைச் சார்ந்த சில வசதிகளைச் செய்யவேண்டும் என்று பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த என்னை

அவர்கள் அணுகிய நேரத்தில், 67 ஆம் ஆண்டிலே
தலையில் ஏற்படும் காயங்களுக்கான சிகிச்சை
பிரிவு ஒன்று உருவாக்குவதற்கு அவருக்கு அரசி
சார்பில் எல்லா வகையான ஒத்துழைப்பும் தந்தே

அதற்குப் பிறகு நரம்பியல் துறைக்கான
தனி மனைக் கட்டடம் எழுப்பப்பட வேண்
என்கின்ற ஆவலை அவர் தெரிவித்தார். அதற்கா
கோப்பு முதலமைச்சராக இருந்த அண்ணா அ
களுக்குச் செல்லவேண்டும் என்றாலும்கூட, பொ
வாகவே அரசுத் துறையில் கோப்பு என்பது ச
மெதுவாகத்தான் நகரும். கேட்டால் அவசர முடிவு
எடுக்கக்கூடாது. நிதானமாக முடிவுகளை எடு
வேண்டும் என்று கூறுவார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் அவ
முடிவுகள் எடுப்பதில்லை. ஆனால் விரைவா
முடிவு எடுப்பவன். அவசரத்திற்கும், வி
விற்கும் வேறுபாடு உண்டு. அவசர முடி
என்பது Hasty decision, விரைவான மு
என்பது Quick decision, அப்படி விரைவா
முடிவு எடுக்க வேண்டும் என்பதில் என்றைக்கு
நான் ஆர்வம் - படைத்தவன் என்ற காரணத்தா
இது எவ்வளவு விரைவிலே இந்த மருத்துவமனை
இங்கு அமைகிறதோ அவ்வளவு மக்களுக்கு நல்
என்ற எண்ணத்தோடு, கோப்பினை வழக்கம
சம்பிரதாய ரீதியில் முதலமைச்சர் அண்ண
அவர்களுக்குப் போய்ச் சேரட்டும் என்று விட
விடாமல், என்னுடைய துறை பொதுப்பணித்து
மருத்துவத்துறை அல்ல என்றாலும்கூட, அந்
கோப்பினை நானே அறிஞர் அண்ணா அ
களிடத்திலே எடுத்துச்சென்று அவரிடத்தி

அதறகான ஒபபுதல கையெழுததினைப பெறறு, அந்த மருத்துவமனையின் அடிக்கல் நாட்டு விழா, எனது தலைமையில், அறிஞர் அண்ணா அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அண்ணா அவர்கள் மறைந்த பின்னர் அந்தக் கட்டடம் என்னுடைய தலைமையில், இந்தியக் குடியரசுத் தலைவர் கிரி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட ஒரு மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கட்டடங்கள் பெரிதாக ஆடம்பரமாக இருப்பது மாத்திரம் அல்ல. அதிலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் திறமையானவர்களாக இருக்க வேண்டும் என்பதும், ஆர்வம் படைத்தவர்களாக இருக்கவேண்டும் என்பதும், அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதும், மக்கள் பணியைத் தலையாய பணியாகக் கொண்டு இருக்கவேண்டும் என்பதும் மிக முக்கியமாகும்.

அத்தகைய பணியினை டாக்டர் ராமமூர்த்தி ஆற்றினார்; தொடர்ந்து அந்தப் பணியினை நண்பர் டாக்டர் கல்யாணராமன் ஆற்றி வருகிறார். கல்யாணராமன் ஆர்வம் படைத்தவர், அக்கறை கொண்டவர் மாத்திரம் அல்ல. மாணவனாக இருக்கும்போதே அவர் எம்.பி.பி.எஸ். வகுப்பில் முதல் தரமாகத் தேறிய மாணவர் என்கின்ற புகழுக்கும் உரியவர். அப்படிப்பட்ட கல்யாணராமன் தலைமையில் இன்றைக்கு இந்த நரம்பியல் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது.

**கட்டடங்கள் பெரிதாக ஆடம்பரமாக இருப்பது மாத்திரமல்ல, அதிலே பணியாற்றுகிற மருத்துவர்கள் திறமையானவர்களாக இருக்க வேண்டும் என்பதும், ஆர்வம் படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதும், அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதும், மக்கள் பணியைத் தலையாய பணியாகக் கொண்டு இருக்க வேண்டும் என்பதும் மிக முக்கியமாகும்.**

டாக்டர் ராமமூர்த்தி என்னை நண்பர் என்று அழைத்தார். தமிழினத் தலைவர் என்றார். முதலமைச்சர் என்றார். கடைசியாக நண்பர் என்றார். இந்த மூன்றிலே எனக்கு மிகவும் பிடித்தமான சொல், 'நண்பர்' என்பதுதான். தமிழினத் தலைவர் என்பது ஒரு இயக்கத்தை -ஒரு சமுதாயத்தைக் குறிப்பிடுவதாக ஆகிவிடும். முதலமைச்சர் என்பது வரும் போகும்; நிலையானதல்ல. நண்பர் என்பதுதான் என்றைக்கும் நிலையாக இருக்கக் கூடியது. எல்லா நண்பரும் நண்பர் அல்ல. வள்ளுவர் குறிப்பிட்டதைப் போல, கேடு வருகிற நேரத்திலே எவன் ஓடாமல் இருக்கிறானோ, அவன் தான் நண்பன். இது வள்ளுவர் வாக்கு. அப்படிப்பட்ட நண்பராக டாக்டர் ராமமூர்த்தி திகழக் கூடியவர்.

இவைகள் எல்லாம் அவர் என்மீது கொண்டுள்ள ஆழ்ந்த பற்றுக்கு மாத்திரம் அல்ல. அவருக்கென்று ஒரு உறுதியான கொள்கை உண்டு. அதிலிருந்து அவரை யாரும் அசைக்க முடியாது. அப்படிப்பட்ட உறுதியான கொள்கை மனப்பான்மை உள்ளவர்களால்தான் இந்த நரம்பியல் துறையிலும் சிறந்து விளங்க முடியும்.

நரம்பியல் துறைதான் ஒரு மனிதனுடைய உறுதிக்கும் உறுதியற்ற தன்மைக்கும் காரணமாக விளங்குகிறது. நாடி நரம்பெல்லாம் நடுங்குகிறது அவனுக்கு என்று சொன்னால், அவனைக் கோழை என்று குறிப்பிடுகிறோம். நாடி நரம்பு முறுக்கேறியிருந்தால், அவன் உறுதி வாய்ந்தவன் என்று குறிப்பிடுகின்றோம். எனவேதான், உறுதி வாய்ந்தவர்களின் நாடி நரம்புகள் முறுக்கேறியிருக்கும். அப்படி முறுக்கேறியிருக்கின்ற காரணத்தால்தான் ராமமூர்த்தி போன்றவர்களால் நரம்பியல் துறையிலே சிறந்து விளங்க முடிகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

டாக்டர் கல்யாணராமன் ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார். இங்கே இருக்கிற இந்த ஸ்கேன் பல்லாண்டுக்காலம் உழைத்துவிட்டது. 20 ஆயிரம் படங்களை எடுக்கவேண்டிய இந்த ஸ்கேனில், நாற்பதாயிரம் படங்களை எடுத்துவிட்டு வந்திருக்கிறார். அந்த ஸ்கேன் என்னைப்போல என்று கருதுகிறேன். அப்படி உழைத்திருக்கிறது. பாவம் அதற்கு மாற்றாக இன்னொரு ஸ்கேன் வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

கடந்த ஆண்டு இந்த அரசுப் பொது மருத்துவமனையின் இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கு என்று எல்லா வசதிகளோடு அதை ஏற்படுத்திச் செயல்படுத்த முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

அந்தப் பிரிவில் 20 அல்லது 25-க்கு மேற்பட்டவர்கள் அந்த அறுவைச் சிகிச்சையினைச் செய்துகொண்டு நல்லமுறையில் நலமுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றைச்சொல்ல நான் விரும்புகின்றேன். நாள்தோறும் எனக்கு நான்கு அல்லது ஐந்து கோரிக்கைக் கடிதங்கள் வந்து, அவைகள் கோப்புகளாக மாறி எனக்கு வருகின்றன. கோவை, பெரியார், நீலகிரி, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் இத்தகைய இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட மருத்துவமனையை அவர்கள் தேர்ந்தெடுத்து அந்த மருத்துவமனையின் சான்றிதழ்களை வாங்கி அனுப்புகிறார்கள். பலரிடத்திலே நன்கொடை வசூலிக்கிறார்கள். நான் தவறாமல் முதல்வர் நிதியிலிருந்து அந்தச் சிகிச்சைக்காக ஐந்தாயிரம் ரூபாயைத் தொடர்ந்து அனுப்பி வருகிறேன். நாள்தோறும் 5 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்குக் கூட கணக்குச் சொல்லலாம், அப்படி அனுப்பிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால், அவர்களுக்கெல்லாம் இங்கு இலவசமாக அந்தச் சிகிச்சை செய்யப்படுகிறது என்பதை நாம் மேலும் தெரிவித்து; அந்தச் சிகிச்சை பலனளிக்கிறது, நலமுடன் அவர்கள் வீடு திரும்ப முடிகிறது என்ற உறுதியையும் அவர்களுக்கு அளித்தால் இலவசமாக அளிக்கப்படுகிற இந்தச் சிகிச்சையை அவர்கள் பெற்றுப் பயன்பெறமுடியும் என்று நான் நம்புகிறேன். இந்த அமைச்சர், தம்பி பொன்முடி கவனத்தில் வைத்துக் கொள்வதோடு, இங்கிருக்கின்ற மருத்துவத் துறை நண்பர்களும், அதனுடைய அதிகாரிகளும் கவனத்தில் வைத்துக் கொண்டு நல்லமுறையில் மக்களுக்குத் தெரிவிக்கின்ற அந்தப் பணியிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மருத்துவமனையில் சிறுநீரக அறுவைச் சிகிச்சைப் பிரிவை நவீனப்படுத்தும் நோக்கத்தில் சிறுநீரகத்தில் உள்ள கற்களை உடைக்கும் ஒரு கருவியை நிறுவுவதற்காக நடப்பாண்டில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மேலும் ஒரு இரண்டு கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது.

16.10.'90 தேதியிட்ட கடிதத்தில் டாக்டர் ராமமூர்த்தி தெரிவித்திருப்பதாவது:

''பேரன்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, தலையடி 'பட்டோர் மருத்துவம் பற்றி ஒரு வேண்டுகோள்.''

''தாங்கள்தான் 1967 ஆம் ஆண்டு சென்னை ஜி.எச்.சில் முதன் முதலாக இந்தியாவிலேயே தலையடிபட்டோருக்குத் தனி மருத்துவப் பிரிவைத் தொடங்கி வைத்தீர்கள். இப்போது இந்த மருத்துவம் நரம்பியல் நிலையத்தில் வசதியில்லாத காரணத்தால் மிகவும் பின்தங்கியிருக்கிறது. மூளைக் காயம்பட்ட எளியோருக்கு நவீன மருத்துவம் கிடைக்காமல் இறந்து விடுகிறார்கள். அல்லது தீராத ஊனமடைகிறார்கள். இதைத் தவிர்க்க இந்த நாற்பதாம் ஆண்டு விழாவில் நரம்பியல் நிலையத்திற்குப் பெரிய நன்கொடை கொடுத்து, மூளை அடிபட்டோர் மருத்துவத்தை மறுபடியும் நவீனம் ஆக்கச் செய்ய வேண்டிக்கொள்கிறேன்''.

''புதுக் கருவிகளும், சாதனங்களும் வாங்க நாற்பது இலட்சம் ரூபாய் குறைந்த பட்சம் ஆகும். தயவுசெய்து இதை நவம்பர் 15-ந்தேதி மேடையில் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.''

நான் அவருக்கும் உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஸ்கேன் வாங்குவதற்கும் மற்றும் நவீனப்படுத்துவதற்கும் உடனடியாக முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரை ஆற்றினார்கள்.

***15.11.90 அன்று சென்னைப் பொது மருத்துவமனை நரம்பியல் துறையின் நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.***

# நூல் நயம்

## நாடி சாஸ்திரம்

**ஆசிரியர்: துர்காதாஸ் எஸ்.கே. சுவாமி,**

**வெளியிட்டோர்:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்: 484 விலை:ரூ. 50

சித்த வைத்தியத்திலுள்ள எண்வகைத் தேர்வுகளில் நாடித் தேர்வு எனபது மிக முக்கியமானதாகும். மனிதனுக்கு ஏற்படுகின்ற நோய்கள் 4,448 என்றும், அதனைக் கண்டறிவதற்கு மணிகட்டுப் பகுதியில் உள்ள ஒரு சிறிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, நாடியின் இயக்கத்தை அறிந்து, நோயின் தன்மை, நிலை, இவற்றைத் தெளிந்து, அதற்குரிய வகையில் சிகிச்சை அளிப்பது என்பது ஒரு மாபெரும் அறிவியல் அருங்கலை ஆகும்.

பதினெண் சித்தர்களில் அகத்திய மாமுனிவர் நாடி நிதானம் என்ற முதல் பகுதியை 32 செய்யுள்களில் இயற்றி வைத்திருக்கிறார். இவற்றையெல்லாம் ஆய்ந்து தெளிந்த இந்நூலாசிரியர், இந்நூலில் மிகப் பெரும் பழமை மிக்கதும், அனைவரும் போற்றி ஏற்கக் கூடியதுமாகிய மருத்துவச் சிறப்பை விளக்கியுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

— பொன். சுப்பையா

## நிறைமதி

**ஆசிரியர்: கவிஞர் முரளிதரன்**

**வெளியிட்டோர்:**

வி.சி.ஸ்ரீராம்,
3, தெற்கு மாடவீதி,
மயிலாப்பூர், சென்னை 600 004.

பக்கம்:120 விலை:ரூ.12

எந்த ஒரு பெண்மணியாவது தன்னுடைய கணவனைப் பற்றித் தனிநூல் எழுதி, அது நம் பார்வையில் பட்டதில்லை. இந்த நூல், தனது அன்பு மனையாளின் குணநலன்களைப் புகழ்ந்து பாராட்டி ஒரு கணவன் எழுதியுள்ள கரும்புநிகர் கவிதை நூல்.

'மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்' என்றான் மகாகவி பாரதி; நூற்றாண்டு விழாக்காணும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ், தமது 'குடும்ப விளக்கில் 'இடும்பை தீர்ப்பவள் என் மனை; அவள் என் குடும்ப விளக்கு' என்றார். அவர்களெல்லாம், பல்வேறு கவிதைகளிலே பெண்மையைப் போற்றிப் பாடியிருக்கிறார்கள். இவரோ தனது இரண்டாவது நூலான இந்நூல் முழுமையையும் தூசுபடிந்த தனது நெஞ்சின் மாசு துடைக்கத் துணை நிற்கும் தன் மனைவியைப் பற்றியே இயற்றியிருக்கிறார்; அது மட்டுமல்ல; அவருக்கே இந்த நூலைக் காணிக்கையும் ஆக்கியிருக்கிறார். 'தாயும், மகளும், தாரமும்' ஆகிய பெண்மை நலன்களும் ஆங்காங்கே தெளிக்கப் பட்டுள்ளன.

மூவசைச் சீர் நான்கும், ஈரசை சீர் இரண்டும் கொண்டும் எழுதப்பட்டுள்ள அறுசீர் விருத்தங்களின் கடைசி அடிகளில் தன் மனைவியின் அன்பிற்கீடாக ''எதைக் கொடுப்பேன்?'' எனத் தொடர்ந்து எழுதிவந்து- கடைசி விருத்தத்தின் கடைசி அடியை 'எனைக் கொடுத்தேன்!'' என்று முடித்திருப்பது அருமையாக இருக்கிறது. நிறைமதி என்பது ஒருவேளை நூலாசிரியர் மனைவியின் பெயராகவே இருக்கக்கூடும் போலிருக்கிறது. அட்டையில் தன் அன்பு மனையாளின் படத்தைப் போட்டிருந்தாலும் தவறாகியிருக்காது!

நமக்குள்ள ஒரே திருப்தி- இது ஒரு மரபுக்கவிதை நூல்!

—'ராஜு'




# பாராளுமன்றக் குழுக்களின் பங்கு

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
**திரு. வீ.பெ. துரைசாமி**

அரசு நடவடிக்கையை ஆய்வு செய்தல், விசாரித்து அரசுக்குத் தேவையான பரிந்துரைகளைச் செய்தல், அரசு அலுவலர், அதிகாரக் குழு ஆகியோரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் பாராளுமன்றக் குழுக்களின் பங்கு, குடியரசு அமைப்பிற்கு மிகவும் இன்றியமையாததாகும். இங்கிலாந்தில் பாராளுமன்ற முறையில் சீர்த்திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமென்று வாதாடும் பெர்னார்ட் கிரிக் ''நிர்வாக ஆட்சி முறையில் அரசுத் துறைகளின் வளர்ச்சிக்கும் திறனுக்கும் ஈடுகொடுக்கும் வகையில், பாராளுமன்றம் அதன் கட்டுப்பாடு, ஆய்வு விமர்சனம், ஆலோசனை ஆகிய' வழிமுறைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று கூறுகிறார். பாராளுமன்ற நடைமுறை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்ற இன்றைய நாளில் அதன் செயல் திறனிலும் மாற்றம் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

சட்டமன்றத்தின் அதிகாரமின்றி, அரசு நிர்வாகி பணம் திரட்டவோ அல்லது செலவிடவோ கூடாது என்பது பாராளுமன்ற அரசு நிர்வாகத்தில் தொன்றுதொட்டு நிலவி வரும் மரபாகவும் உள்ளது. நீதி, நிர்வாகம் ஆகிய துறைகள் தொடர்பாகச் சட்டமியற்றல், திட்டமிடல், நிதிக் கட்டுப்பாடு செய்தல் ஆகியன சட்டமன்றத்தின் நடவடிக்கைகளாகும். ஆனால் சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றக் குழுக்கள் செயல் முறையில் அரசு அலுவலர் அதிகாரக் குழு ஆகியோர் மீது கட்டுப்பாடு செலுத்துவதில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன.

ஒரு பொருளின் விவரங்களை அல்லது தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகளைச் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றம் விளக்கமாகவும் நுணுக்கமாகவும் விவாதிக்க முடியாத சூழல்களில்



சட்டமன்றம் அல்லது பாராளுமன்றக் குழுக்கள் துல்லியமாக ஆராய்வதற்காக அமைக்கப்படுகின்றன. இவ்வாறு குழு அமைக்கப்படுவதால் விரிவாகச் செய்ய முடிவதோடு அவையின் நேரமும் மீதமாகிறது. குழுக்கள் அவையின் அமைப்பைப் பிரதிபலிப்பவைகளாக இருக்கின்றன. அதே சமயம் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்தில் கட்சிக் கண்ணோட்டம் காரணமாக ஏற்பட வாய்ப்புள்ள சூடான வாக்குவாதங்கள், கொந்தளிப்பு ஆகியவை தவிர்க்கப்பட்டு அவை சுமூகமாக நெகிழ்வுத் தன்மையுடன் நடைபெற வழி வகுக்கின்றன.

இதன் காரணமாகத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிரச்சினைகளைக் குழு விருப்பு வெறுப்பின்றி, முழுமையாக, நியாயமான முறையில் பரிசீலித்துச் சட்ட சம்மதமானதாக ஆக்குகிறது. அரசியல் அனுபவத்திலிருந்து, பல நாட்கள் விவாதித்த பின்னரே அவ்விவாதம் நல்லதொரு விவாதமாக அமைகிறது என்பதும், அரசு பெரும்பான்மை பலத்தில் இருப்பதால். சட்டமன்றத்தில் வைக்கப்படுபவை நி[illegible] வேற்றப்படுகின்றன என்பதும் அரசி[illegible] அனுபவத்தில் பெறப்படும் உண்[illegible] களாகும். பாராளுமன்ற அரசு முறை[illegible] ஏற்றுக் கொண்ட பல நாடுகள் [illegible] அமைப்பு முறையில் குறிப்பிடத்தக்க [illegible] றங்கள் கடந்த சில ஆண்டுகளில் [illegible] பட்டுள்ளன.

இந்தியாவில், பாராளுமன்றம், ச[illegible] மன்றம் சிறப்பாக வகுக்கப்பெற்ற [illegible] அமைப்பு முறையைக் கொண்டுள்ள[illegible] நிதிக் குழுக்களிடையே பொதுக் கண[illegible] குழு, மதிப்பீட்டுக் குழு, பொது [illegible] வனங்கள் குழு ஆகியவை தனித்தன்[illegible] வாய்ந்த குழுக்களாகும். இவை அர[illegible] தொகை செலவிடுவதையும் செய்[illegible] வதையும் இடைவிடாது கண்காணிக்[illegible] றன. நாடாளுமன்றமோ, சட்டமன்ற[illegible] இறையாண்மைமிக்க அமைப்பாக ஏட்[illegible] வில் இருந்தபோதிலும் நடைமுறை[illegible] தற்கால அரசியல் செயல்பாட்டில் [illegible] பிரதிபலிக்கவில்லை. எனவே, நாடா[illegible] மன்றத்தின் அல்லது சட்டமன்றத்[illegible] அதிகாரமும் செல்வாக்கும் மெல[illegible] மெல்லக் குறைந்துவரும் அதே நேரத்தி[illegible] நிர்வாகப் பிரிவின் அதிகாரம் ([illegible] காரிகளின்) கணிசமாக அதிகரி[illegible] வருகிறது என்பதே தற்போது பரவல[illegible] உள்ள ஒரு கருத்தாகும். இது ச[illegible] மிகையாக இருக்கலாம். ஆனால், இ[illegible] சிறிது உண்மை இருக்கிறது என்பதை[illegible] மறுக்க இயலாது.

கடந்த முப்பது அல்லது நாற்ப[illegible] ஆண்டுகளாக அரசின் பணிகள் க[illegible] மாக அதிகரித்துள்ளன. எனவே, [illegible] வாகம் நல்லமுறையில் நடைபெறுகி[illegible] என உறுதி செய்து கொள்வதற்[illegible] அரசியல் சட்டப்படிக்கானதும், தார்[illegible] உரிமை உடையதுமான பணியைச் செ[illegible] வதில் சட்டமன்றம், நாடாளுமன்[illegible] களுக்கு மேலும் மேலும் இடர்ப்பா[illegible] மிகுந்து வருகிறது. நாடாளுமன்[illegible]

> ★ **போற்ற வேண்டியவை உண்மை-உழைப்பு-உயர்வு; பின்பற்ற வேண்டியவை கனிவு-பணிவு-துணிவு; பேணப்பட வேண்டியவை கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு!**
>
> —அறிஞர் அண்ணா

அல்லது சட்டமன்றம் அலுவலர் அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் ஆற்றும் அரசியல் நிர்வாகச் செயல்பாடுகளைக் கூர்ந்தாய்வதைப் பொறுத்தே அதன் வலிமை புலப்படும்.

மைக்கேல் ருஷ் என்பவர், ''நாடாளுமன்றமும் பொது மக்களும்'' என்ற நூலில் ''நாடாளுமன்றத்தின் அடிப்படை அரசியல் பணி, அரசின் கொள்கைகளையும், செயல் முறைகளையும் துருவி ஆராய்ந்து, விவாதிப்பதே! என்று கூறியுள்ளார்.

'நாடாளுமன்றக் கட்டுப்பாடு என்பது செல்வாக்கே, நேரடி அதிகாரமல்ல; ஆலோசனை கூறுவதே, ஆணையிடுவதன்று; விமர்சனம் செய்வதே, தடங்கல்கள் செய்வதன்று; மேற்பார்வையிட்டு ஆய்வு செய்வதே அன்றித் தாமே செயலைத் தொடங்குவதல்ல; பலர் அறிய எடுத்துரைப்பதே அன்றி இரகசியங் காப்பது அல்ல எனப் பொருள்படும்' என்று ஹௌஸ் ஆப் காமன்ஸ் நடைமுறை பற்றிய தேர்வுக்குழு சுட்டிக்காட்டி உள்ளது.

நிர்வாகச் செலவினங்களுக்குக் கணக்குக் காட்டல், நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான மிகவும் பயனுள்ள கருவிகளில் ஒன்றாக நாடாளுமன்ற, சட்டமன்ற வினாக்கள் அமைகின்றன. இத்தகைய வினாக்கள்தான் அரசுக்கு அதிகமான தொல்லைகள் கொடுக்கின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. அளிக்கப்படுகின்ற பதில்கள், தட்டிக் கழிப்பதாகவும் தெளிவற்றதாகவும் இருந்தால் அது நாம் விரும்பும் நோக்கத்தை எய்த உதவாது. ஆனால்- வினாக்கள், விவாதங்கள், தீர்மானங்கள் போன்ற ஏற்றுக் கொண்ட நடைமுறைகளின் மூலம், நிர்வாகச் செலவினங்களுக்குக் கணக்குக் காட்டல், நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றல் ஆகிய வாலாயமான நடைமுறைகளுடன் அரசின் நடைமுறைகளைப் பற்றி உன்னிப்பான விரிவான ஆய்வு ஒன்று நாடாளுமன்ற, சட்டமன்றக் குழுக்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது.

அரசு அலுவலர் மற்றும் அதிகார வர்க்கம் மீது திறமையான முறையில் நாடாளுமன்ற, சட்டமன்றக் கட்டுப்பாடு செலுத்துவதற்கு தற்போதுள்ள முறைகளையும் நடைமுறைகளையும் சீரமைத்து மேம்படுத்துவதற்கான அவசியம் பற்றிப் பல நாடுகளில் சிறிது காலமாகவே ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அரசுத் துறைகள எந்தப் பொருள் பற்றிக் கவனிக்கின்றனவோ அதை அடிப்படையாகக் கொண்டு, வெவ்வேறு பொருள்களைக் கவனிக்கும் குழுக்களை ஏற்படுத்துவதற்கான ஒரு முறையைக் கொண்டு வந்ததன் மூலம், கேரள அரசு 1980-ஆம் ஆண்டில் சட்டமன்ற நடைமுறையில் ஒரு சீர்திருத்தத்தைச் சோதனை ஏற்பாடாகக் கொண்டு வந்தது. அக்குழுக்களில் எல்லா உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். இக்குழுக்கள் அமைச்சர்களைத் தலைவர்களாகக் கொண்டுள்ளன.

''மானியக் கோரிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்தல், சட்டத்தை ஆய்வு செய்தல், அரசால் அல்லது பிற அதிகார மன்றங்களால் வகுக்கப்படும் வரைவு விதிகளைப் பரிசீலித்தல் ஆகியவற்றிற்கு இக்குழுக்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டு உள்ளது.

சட்டமன்றத்தின் நிதி குறித்த விவாதத்திற்காகக் கிடைக்கின்ற கால அளவு வரையறுக்கப்பட்டதேயாகும். அது பயனுள்ள கட்டுப்பாட்டை இயன்ற அளவு குறைக்கிறது. இந்த அடிப்படையில் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

பொதுக் கணக்குக் குழுவின் ஆய்வுகள், முன்னரே செய்த செலவு தொடர்பானதால், சாதாரணமாக அது கடந்த கால நிகழ்வுகளையே ஆய்வு செய்கிறது. பொதுக் கணக்குக் குழு மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கையைச் சார்ந்து, ஆய்வு செய்கிறது. செலவு செய்த நீண்ட காலத்திற்குப் பிறகே அந்த அறிக்கை அவையில் சமர்ப்பிக்கப்படுகிறது. இது பொறுப்பை வரையறுக்கும் பணியை இடர்ப்பாடானதாக ஆக்குகிறது. அறிக்கையில் குறித்த இனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த நீண்ட கால தாமதத்திற்குப் பொறுப்பானவர் மீது நடவடிக்கை எடுக்க உதவி செய்யாது.

மதிப்பீட்டுக் குழுவும், பொது நிறுவனங்கள் குழுவும் தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளில் மட்டுமே செயல்படுகின்றன. எனவே, அவற்றின் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மதிப்பீட்டுக் குழு மதிப்பீடுகளை முன்னரே ஆய்வு செய்யவேண்டும் என்ற போதிலும், மானியக் கோரிக்கைகள் வடிவில் மதிப்பீடுகளை அவை அனுமதித்த பின்னரே உண்மையில் மதிப்பீட்டுக்குழு ஆய்வு செய்கிறது. அதுவும் கூட மிகவும் இன்றியமையாததாக அல்லது முக்கியமானதாகக் கருதப்படும் சில துறைகளின் மதிப்பீடுகளை மட்டுமே ஆய்வு செய்கிறது.

பொது நிறுவனங்களின் செயற்பாட்டினை ஆராய்வதுடன், அவற்றின் தணிக்கை அறிக்கைகளையும் பொது நிறுவனங்கள் குழு ஆராய்கிறது. துறை அதிகாரிகளிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்குரிய இக்குழுக்களின் பரந்துபட்ட அதிகாரம், சட்டமன்றத்தின் கண்களாகவும் காதுகளாகவும் அவற்றைச் செயல்படச் செய்கின்றது. மேலும் அதிகார வர்க்கத்தை விழிப்புடன் பணிபுரியச் செய்கின்றது. இக்குழு 1964-இல் மத்திய அரசால் அமைக்கப்பட்டது. பின்னர், மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் நிர்வாகத்திலும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் விரைந்து வளர்ந்ததாலும், அவற்றுக்கு மாநிலத் தொகு நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டதாலும் அக்குழுவை மாநிலங்களிலும் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1972 ஜூன் 23-ஆம் நாள் நடைபெற்ற நாடாளுமன்ற நிதி விவகாரக் குழுக்கள் மூன்றின் தொடக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில், அப்போதைய நாடாளுமன்ற மக்களவைத் தலைவர், அரசுத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை 1951-இல் 5-ஆக இருந்தது 1970-இல் 90-ஆக அதிகரித்துள்ளது என்றும், இந்த நிறுவனங்களில் செய்யப்பட்ட மொத்த முதலீடு 1951-இல் 29 கோடியாக இருந்தது.1970-இல் 4,500 கோடியாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இதே போன்று மாநில அளவிலும் இந்த நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; இதனால் அதிகாரிகள் இவற்றில் முக்கியமாக இடம் வகிக்கின்றனர்.

இந்திய அதிகார வர்க்கம், இந்தியாவில் ஆங்கில மரபு வழி வந்த ''ஆங்கில ஆட்சி'' விட்டுச் சென்ற நிர்வாக முறையாகும். வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் அதிகாரிகளின் திறமை, அவர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே நிலவும் நல்லுறவின் தன்மைகளைப் பொறுத்தே பெரிதும் அமைகிறது.

நமது அதிகார வர்க்க அமைப்பின் விளைவாக, அதிகார ஆதிக்க உணர்வும் முரட்டுப் பிடிவாதமும் நிலவுகின்றன. எனவே, இந்த அதிகார வர்க்கத்தின் தன்மையைக் குறைக்க, அல்லது மாற்ற- பயிற்சிகள் மூலமும், வேறு பல நடவடிக்கைகள் மூலமும் அரசு மேற்கொண்ட முயற்சிகள் ஓரளவே வெற்றி பெற்றுள்ளன.

கீழ்நிலையிலிருந்து தொடங்கி வளர்ச்சியை ஏற்படுத்தவும், இவ்வாறு வளர்ச்சியை ஏற்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அதிகார வர்க்கத்தை மிகுந்த ஒத்துழைப்பு அளிக்கச் செய்யவும், வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டதாக ஆக்குவதற்கும் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கான எடுத்துக்காட்டுகள் தான் சமுதாய வளர்ச்சித் திட்டமும் ஊராட்சி முறையும் ஆகும்.

இருப்பினும், நடைமுறையில் நாடாளுமன்றத்தில் அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் பல்வேறு குழுக்கள் கண்டிப்பான கட்டுப்பாட்டைப் பராமரிக்கும் நோக்கில் தங்கள் முன் விளக்கமளிக்க வருமாறு அல்லது விசாரணைக்கு வருமாறு உயரதிகாரிகளை அழைக்க அதிகாரம் பெற்றுள்ளன.

இந்தியாவில், அதிகார வர்க்கத்தில் மேல் நிலையில் உள்ளவர்கள் முக்கியமான சமூக, பண்பாட்டுத் துறைகள் அனைத்திலும் அதிகாரம் செலுத்துகின்றனர். இந்த அதிகார வர்க்கத்தினர் சிறப்பாக உருவாக்கப்பட்ட தேர்வின் மூலம் நியமிக்கப்படுகின்றனர். இதனால், அவர்கள் ஒத்த பண்பாட்டுப் பின்னணியும் வாழ்க்கை நாகரிகப் பாங்கும், விசுவாசமும் உடையவர்களாகத் திகழ்வர். இவ்வர்க்கத்தினர், ஆளும் உயரதிகாரிகள், அமைப்பு ரீதியிலான சக்திகள் முதலியோர் இந்தியாவின் அரசியல் குறித்த முடிவெடுக்கும் உயர்நிலையில் ஒத்த உணர்வுகளையும் ஒருங்கிணைந்து செயல்படும் தன்மையையும் கொண்டு இயங்குகின்றனர். எனவே, நமது அதிகார வர்க்கத்தில் இவர்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றனர்.

பல்வேறு வழிகளில் நிர்வாகிகள் மீது கட்டுப்பாடு செலுத்தும் அதிகாரம், நாடாளுமன்றத்திற்கு அல்லது மாநிலச் சட்டமன்றத்திற்கு உண்டு. இது, பல்வேறு குழுக்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு துறைகளையும் அதிகார வர்க்கத்தினரையும் கட்டுப்படுத்துகிறது. குழுக்கள் அரசிடமிருந்து வரப்பெறும் பதில்களை ஆய்வு செய்வதன் மூலமும் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் தமது பரிந்துரைகள் செயல்படுத்தப்படுவதை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றன. இந்தப் பதில்கள் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன. இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட பிறகு குழுக்கள் தொடர் நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை. இது குறித்து நடவடிக்கை எடுப்பது அவசியமாயின், அது அவையிடம் விட்டுவிடப்படுகிறது.

குழுக்கள் தெரிவிக்கும் பரிந்துரைகளைத் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டு- பிறகு, வெகு சீக்கிரத்திலே அவற்றை மறந்துவிடும் போக்கு நிர்வாகத்திடம் காணப்படுகிறது. குழுக்கள் செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அரசைக் கட்டாயப் படுத்துவதற்கான அதிகாரம், தற்போதைய விதிகளின்படி குழுக்களுக்கு இல்லை; அவ்வாறிருக்க இந்தப் பரிந்துரைகளின்பால் அரசு அக்கறை காட்டாவிட்டாலோ அல்லது அவை குறித்துக் காலந்தாழ்த்தி நடவடிக்கை எடுத்தாலோ, குழுக்களின் செயல்திறன் மற்றும் உழைப்பு ஆகியவை வீணாகும் அல்லது குறைந்துவிடும்.

இந்தக் குழு அமைப்பு முறையானது, செவ்வனே செயல்பட்டு வந்தாலும் அம்முறை இன்னும் செம்மை பெறவில்லை. அது, பரிந்துரைக்கும் அமைப்பாகவே இருந்து வருகிறது. இந்திய சமூக-பொருளாதார அமைப்பிற்கு ஏற்ற பொருத்தமான முறைகள் பற்றிப் பரிந்துரைக்கவும், அதன் வாயிலாக, நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள தடைகள் மற்றும் சமன்பாடுகளுக்குப் பாதகமின்றிப் போதிய கட்டுப்பாடு செலுத்தவும் ஆழமான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

**—19.9.1990 அன்று ஹராரேயில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் ஆற்றிய உரை.**

## பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில்..

**வா**ழும் வகையற்று வறுமையில் சிக்குண்டு, நாளும் நல்லவற்றை எதிர் நோக்கி, அல்லல் அகற்றிட ஆதரவு கிடைக்காதா என ஏங்கித்தவிக்கின்ற ஏழை எளியவர்கள், பிற்படுத்தப்பட்டோர், வாழ்க்கைச் சுமைதனைத்தாங்கும் வலிமையின்றி, மெலிந்தோர், நலிந்தோர், இவர்களுக்காக, பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைப் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் தனிக்கவனம் எடுத்து, தகுதியுடையோர்க்கு நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் போய்ச் சேருவதில் கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

### ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டம்

வாழ்க்கை சுமைதனை தாங்கும் வலிமையற்றோர்களுக்குக் கடன் வழங்கி, அவர்களின் வாழ்வை மேம்படுத்த அரசு ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5597 நபர்களுக்குக் கடன் வழங்க நிர்ணயம் செய்தது. அரசு நிர்ணயம் செய்த இலக்கினை அடைந்து 5597 நபர்களுக்குச் சுயதொழில் செய்யக்கடன் வழங்கப்பட்டது. ரூ239இலட்சம் கடனாகவும் ரூ.119.50 இலட்சம் மானியமாகவும் இவர்களுக்கு வழங்கப்பட்டது.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 21,67,100 மனித வேலை நாட்கள் உருவாக்கி ஏழை, எளியவர்கள் நலம் பெறச்செய்ய அரசு குறியீடு நிர்ணயம் செய்தது. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், மக்களின் நலனே தன் நலம் எனக் கருதி அரசு நிர்ணயம் செய்த இலக்கினை மிஞ்சி 31,10,000 மனித வேலை நாட்கள் உருவாக்கி செயல்படுத்தி, மாநிலத்திலேயே வறுமை ஒழிப்புத் திட்டத்தில் முதலிடத்தை பெற்றது.

### வேளாண்மை உற்பத்தி பெருக்குத் திட்டம்

வேளாண்மை உற்பத்தி பெருக்குத் திட்டத்தின்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் புதிதாகக் கிணறு வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் பழுதடைந்த கிணற்றைப் புதுப்பிக்கவும் மோட்டார் அறைக் கட்டடம் மற்றும் நடைபாதை கட்டவும், பைப்லைன் ஆயில் இஞ்சின் மற்றும் மின்மோட்டார் வழங்கவும் கடன் உதவி அளித்து நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், மேடு, பள்ளம் உள்ள சீர்திருத்தமற்ற நிலங்களைச் சீர்திருத்தம் செய்து நன் முறையில் விவசாயம் செய்ய நிலச் சீர்திருத்தத்தின் மூலம் கடன்கள் வழங்கி விவசாயிகளுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சிறப்பாக ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் இலவசமாகக் கட்டப்படும் கிணறுகளுக்கு ஆயில் இஞ்சின் மற்றும் மின்மோட்டார், மோட்டார் அறைக்கட்டவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கடன் உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**ந. பாலையா**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன் தேவர்**
**திருமகன் மாவட்டம் சிவகங்கை.**

# வெண்மைப் புரட்சியில் வியத்தகு சாதனை!

**நிர்மல்சிங் இ.ஆ.ப.,**
ஆணையர்,
பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை
மேம்பாட்டுத்துறை,
சென்னை.

**பால் உற்பத்தி, பால் விநியோகம் மற்றும் அது தொடர்பான செயற்கை முறைக் கருவூட்டல், மருத்துவ வசதி முதலான இன்றியமையாப் பணிகளில் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை செவ்வனே செயலாற்றி வருகின்றது.**

**பொதுமக்களுக்குத் தேவையான அளவில் காலையிலும், மாலையிலும் பால் விநியோகிக்க, 24 மணி நேர சுழற்சியில், திட்டமிட்ட வகையில் இத்துறை இயங்கி வருகிறது.**

**மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், இத்துறைப்பணிகள் சீராகவும், விரைவாகவும் நடைபெற உறுதுணையாக இருக்கின்றது.**

**வெண்மைப் புரட்சியில் வியத்தகு சாதனைகள் படைத்துவரும் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறையின் அங்கங்களாக விளங்கும் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் சிறப்பான பணிகளைச் சித்திரிக்கிறது இக் கட்டுரை.**

## வட ஆர்க்காடு மாவட்டம்

வட ஆர்க்காடு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், பால் உற்பத்தியைச் சீராகவும், தொடர்ந்து அதிகரிக்கச் செய்யவும் தேவையான பல்வேறு அடிப்படை இனவிருத்தி மருத்துவ வசதிகளை ஒருங்கிணைத்து வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் செயல்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் பால் வள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ள இவ்வொன்றியம் தேசிய பால் வள வாரியத்தின் நிதி உதவியுடன் முதல், இரண்டாம் பால் பெருக்குத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடித்திருப்பதுடன், மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தையும் இங்கு துவக்கிச்செயல்படுத்தி வருகிறது.

உற்பத்தி செய்யும் பாலுக்கு உரிய விற்பனை வசதி இருந்தால் தான், உற்பத்தியாளர்கள் கறவைத் தொழிலை மேற்கொள்வர். எனவே, கிராமம்தோறும் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஒன்றியத்தின் மூலம் துவக்கப்படுகின்றன. தேவையான அனைத்துச் சாதனங்களையும் ஒன்றியம் சங்கத்திற்கு இலவசமாக வழங்குகிறது. அங்கத்தினர்களிடமிருந்து தரமான பால் சரியான அளவுகளில் பெறப்பட்டு, பாலின் தரத்திற்கேற்ப விலையும் நிர்ணயிக்கப்படுகிறது. பால் பணம் வாரத்திற்கொருமுறை பட்டுவாடா செய்யப்படுகிறது.

தமிழகத்திலேயே அதிக அளவாக, 1000-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பெற்றுள்ளது இவ்வொன்றியம். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளும், விவசாயத்தொழிலாளர்களும் பால் உற்பத்தியாளர்களாக இச்சங்கங்களில் பங்கேற்று பலன்மிக கண்டு வருகின்றனர். பால் பணமாக மட்டும் நாளொன்றுக்கு ஒன்பது இலட்ச ரூபாயைச் சங்கங்களின் மூலம் ஒன்றியம் வழங்கி வருகின்றது.

கிராமங்களில் பால் சங்கங்களைத் துவக்கி, தொடர்ந்து மேற்பார்வை செய்யும் பணியை ஆர்க்காடு, ஆம்பூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள பால் சேகரிப்புக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன.

பால் சங்கங்களிலிருந்து தினமும் இரு வேளைகளில் சேகரிக்கப்படும் பாலை, ஆம்பூர், திருவண்ணாமலை, அனக்காவூர் ஆகிய இடங்களில் குளிரூட்டவும், வேலூரில் பதப்படுத்தவும் வசதிகள் உள்ளன. அவ்வசதிகள் முழுமையாகவும் சொல்லப்போனால் அதற்கு மேலும் பயன்படுத்தப்படுகின்றன. நாளொன்றுக்கு 1,70,000 லிட்டர் பாலைப்பதப்படுத்தும் வசதியே இங்கு இருந்தபோதிலும் 2,60,000 லிட்டர் வரை பால் சேகரித்துக்கையாளப்பட்டிருப்பது சாதனையாகும்.

இவ்வொன்றியத்தில் செயல்பாட்டிலுள்ள நகரங்களில், தரமான பதப்படுத்தப்பட்ட பால், 250 மி.லிட். மற்றும் 500 மி.லிட். அளவுகளில் பாலித்தீன் பைகளில் கிடைக்க பால் நுகர்வோருக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது நாளொன்றுக்கு விற்பனையாகும் பாலின் அளவை 23,000 லிட். அளவிலிருந்து 35,000 லிட்டருக்கு உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



### அம்பேத்கர் நூற்றாண்டு

★ நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும்; நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும்; தன்மானம் உடையவர்களாக வாழ்தல் வேண்டும்; நாமாக முயற்சித்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; இவ்வாறு செய்தால் நாம் உயர்வது உறுதி.

—டாக்டர் அம்பேத்கர்

ஒருபுறம் கிராமங்களின் மறுமலர்ச்சியையும், மற்றொருபுறம் மக்களின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத பாலின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ள 'வட ஆர்க்காடு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், வெண்மைப்புரட்சியின் வேராக இருந்து, பால் வளம் தழைக்க, தொடர்ந்து, தொய்வில்லாது வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

## மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் இயங்கி வரும், மதுரை ஆவின் பால்பண்ணை 'உலக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் கல்வி நிதி' உதவியுடன் 1967-ஆம் ஆண்டு தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது.

மதுரை பால் பதனிடும் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 15,00,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது.

கலப்பின கிடாரிக்கன்றுகள் வளர்ப்புத் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1977-78-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கலப்பினக் கன்றுகளை நன்கு வளர்த்து பால் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து சிறு விவசாயி, மிகச் சிறு விவசாயி, விவசாயக் கூலிகளுக்கு மானியத் தொகையுடன் கடன் உதவி அளித்து, மானியமும் கன்றும் தீவனமாக மாதந்தோறும் வழங்கப்பட்டு கடன் பகுதியை மாடு ஈன்ற உடன் பெறப்படும் பாலில் இருந்து திரும்பச் செலுத்த வழிவகை செய்துள்ளது.

கிராமங்களில் வாழும் ஆதிதிராவிடப் பழங்குடி மக்களுக்கு வங்கிகள் மூலம் கறவை மாடுகள் வழங்கப்பட்டு அதில் மூன்றில் ஒரு பகுதி மானியமாக அளிக்கப்படுகிறது. 1989-ஆம் ஆண்டு 4,596 கறவை மாடுகள் வழங்கப்பட்டு ரூ.45.67 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

மதுரை மற்றும் இதர மாவட்டப் பால் உற்பத்தியாளர் சங்கங்களில் படித்த ஊழியர்களுக்குப் பயிற்சி மையங்கள் மூலம் கால்நடைப் பராமரிப்பு, செயற்கை இனவிருத்தி, முதலுதவிச் சிகிச்சை மற்றும் பால் பரிசோதனைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தற்போதைய சராசரி பால் உற்பத்தியின் அளவு நாளொன்றுக்கு 95,000 லிட்டர் ஆகும். தற்சமயம் 536 பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் பால் பெறப்பட்டு வருகிறது. தற்போது இவ்வொன்றியம் மதுரை மாவட்டத்தில் 20 பால் வழித்தடங்கள் மூலம் பால் சேகரம் செய்து வருகிறது.

தற்போது பாலின் தரத்தை அடிப்படையாகக் கொண்டு பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களின் பசும்பாலுக்கு 1 கிலோ கொழுப்பு மற்றும் இதர சத்துக்களுக்கு ரூ.28 வீதமும், எருமைப்பாலுக்கு 1 கிலோ கொழுப்பு சத்துக்கு ரூ.58வீதமும்வழங்கப்படுகின்றது.

மதுரை மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்குக் கால்நடைக் கலப்புத் தீவனம் தடையின்றிக் கிடைக்க, இப்பால்வள ஒன்றியம் மதுரைக்கு அருகாமையில் உள்ள கப்பலூரில் மாட்டுத் தீவன உற்பத்தி ஆலை ஒன்றினை நிறுவி வருகின்றது.

மதுரை பால் பண்ணையில் உற்பத்தியாகும் பதப்படுத்தப்பட்ட 4.5 சதவிகிதம் கொழுப்புச் சத்தும், 8.5 சதவிகிதம் இதரச் சத்துக்களும் அடங்கிய நிலைப்படுத்திய பால் நாளொன்றுக்கு 78,000 லிட்டர் 220 பால் விற்பனை நிலையங்களை மூலமாகவும், பால் உப பொருட்களான வெண்ணெய், நெய், நறுமணப் பால், பால்பவுடர் 25 பாலகங்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மதுரை மாநகரில் தானியங்கிப் பால் விநியோகம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## காமராஜர் மாவட்டம்

ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து காமராஜர் மாவட்டம் உருவானதை ஒட்டி காமராஜர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 26.12.'85 அன்று பதிவு செய்யப்பட்டு 24.3.'86 அன்று பணி துவக்கப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு பால்வளத் திட்டங்கள் இவ்வொன்றியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வொன்றியத்தில் 31.3.90-ஆம் நாளன்று 203 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்உறுப்பினர்களாக உள்ளனர். ஒன்றியத்தின் மொத்த பங்கு மூலதனம் ரூ.5,95,300 ஆகும். இதில் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பங்குத் தொகையாக ரூ.2,45,300 தமிழ்நாடு அரசு பங்குத்தொகையாக ரூ.3,50,000 பெறப்பட்டுள்ளன.

இம்மாவட்ட ஒன்றியம் பிரதம சங்கங்களிடமிருந்து, ஆறு பால் வழித்தடங்கள் மூலம் பால் சேகரம் செய்து திருவில்லிபுத்தூர், விருதுநகர் ஆகிய இரு பால் குளிர்விக்கும் நிலையங்களில் குளிர வைத்து இம்மாவட்டத்திற்குத் தேவையான பாலை விற்பனை செய்துவிட்டு உபரிப் பால் முழுவதையும் மதுரை மாவட்டப் பால் ஒன்றியத்திற்கு அனுப்பி வருகிறது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காரியாபட்டி, நதிக்குடி, சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 24 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு உயரின பசும்பால் வளர்ப்பதற்காக 10 செண்ட் நிலத்திற்கு ரூ.100 வீதம் ரூ.50,000 மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

இம்மாவட்டத்தில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுடைய 'கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், இவ்வொன்றியம் மற்றும் பால்வளத் துறையால் நான்கு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றனதற்போது 85 சங்கங்களுக்கு இவ்வசதிகள் வழங்கப்பட்டு மாதந்தோறும் சுமார் 800 கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

காமராஜர் மாவட்டத்தில் உள்ள நுகர்வோர்களுக்குத் தரமான பதப்படுத்தப்பட்ட பாலைச் சுகாதார முறைப்படி, பிளாஸ்டிக் பைகளில் விநியோகம் செய்ய, தற்பொழுது இயங்கி வரும் திருவில்லிபுத்தூர் பால் குளிர்விக்கும் நிலையம் மேம்படுத்தப்பட்டு, சிறு பால் பதனிடும் ஆலையாக மாற்றத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1987-88-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடான ரூ.16 இலட்சத்தில் ரூ.5.65 இலட்சம்

மானியமாக தமிழக அரசு வழங்கி உள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணி முடிவுற்று இயந்திரங்கள் நிறுவும் வேலை நடைபெற உள்ளது. இத்திட்டம் டிசம்பர் 1990-இல் முடிவுறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

காமராஜர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்புத் திட்டம் பெரிய அளவில் செயல்படுத்த தேசிய பால்வள வாரியத்தால் மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.85 இலட்சம் ஒதுக்கப்பட்டு இம்மாவட்ட ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு 40,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலினைக் குளிரவைக்க வசதி கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று தருமபுரியிலும், ஒரு நாளைக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலினைக் குளிரவைக்க வசதி கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று தேன்கனிக்கோட்டையிலும் அமைந்துள்ளது. மற்றும் ஒரு நாளைக்கு 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலினைப் பதப்படுத்தும் நிலையம் ஒன்று கிருட்டிணகிரியில் அமைந்துள்ளது.

அத்தோடு, ரூ.3.50 கோடி செலவில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் அரசு மானியத்தால் கட்டப்பட்டுள்ள பால் சமப்படுத்தும் பண்ணையானது கிருட்டிணகிரியில் அமைக்கப்பட்டுள்ளது.

நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.34.24 இலட்சங்களில் சுமார் 120 சங்கங்களுக்கு சொந்தமாக கட்டடங்கள் கட்டிக்கொள்ள வேண்டி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பயிரிடப்படாத தரிசு நிலங்களில் மரம் மற்றும் தீவனப் பயிர்களைப் பயிரிட்டு அதன் மூலம் கிடைக்கும் பசுந் தீவனங்களைக்கறவை இனங்கட்கு அளித்து பால் உற்பத்தியைப் பெருக்க இத்திட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் சிறந்த முறையில் மாவட்டப் பால்வள ஒன்றியங்கள் மூலம் தேசிய பால்வள நிறுவனம் நிறைவேற்றி வருகிறது. இதற்கான நிதியினை மைய அரசின் மூலம் பெற்று கொடுக்கப் பட்டுள்ளது.

## 1991-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்கள்

1991-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்களாகக் கீழ்க் காணும் நாட்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய விடுமுறை நாட்களுடன், கீழ்க்காணும் நாட்களும் பொது விடுமுறை நாட்களாகும்.

1991-ஆம் ஆண்டின் அரசு விடுமுறை நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 1 | செவ்வாய் | ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| சனவரி | 14 | திங்கள் | பொங்கல் திருநாள் |
| சனவரி | 15 | செவ்வாய் | திருவள்ளுவர் திருநாள் |
| சனவரி | 16 | புதன் | உழவர் திருநாள் |
| சனவரி | 26 | சனி | குடியரசு நாள் |
| மார்ச் | 17 | ஞாயிறு | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| மார்ச் | 29 | வெள்ளி | நல்ல வெள்ளி |
| ஏப்ரல் | 1 | திங்கள் | வங்கிக் கணக்குகள் ஆண்டு முடிப்பு |
| ஏப்ரல் | 14 | ஞாயிறு | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 17 | புதன் | ரம்சான் |
| மே | 1 | புதன் | மே தினம் |
| ஜூன் | 23 | ஞாயிறு | பக்ரித் |
| ஜூலை | 23 | செவ்வாய் | மொகரம் |
| ஆகஸ்டு | 15 | வியாழன் | விடுதலை நாள் |
| செப்டம்பர் | 12 | வியாழன் | விநாயக சதுர்த்தி |
| செப்டம்பர் | 21 | சனி | மீலாடி நபி |
| செப்டம்பர் | 30 | திங்கள் | வங்கிக் கணக்குகள் அரையாண்டு முடிப்பு |
| அக்டோபர் | 2 | புதன் | காந்தி ஜெயந்தி |
| அக்டோபர் | 17 | வியாழன் | ஆயுத பூஜை |
| அக்டோபர் | 18 | வெள்ளி | ஆயுத பூஜை |
| நவம்பர் | 5 | செவ்வாய் | தீபாவளி |
| டிசம்பர் | 25 | புதன் | கிருஸ்துமஸ் |

ஏப்ரல் 1 திங்கட்கிழமை, செப்டம்பர் 30 திங்கட்கிழமை ஆகிய விடுமுறை நாட்கள் அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.

கீழ்க்காணும் நாளும் அரசு விடுமுறை நாளாகும்.

மார்ச் 28 வியாழக்கிழமை மகாவீரர் ஜெயந்தி.



# உதகையில் பட்டு வளர்ச்சி



'மலைகளின் அரசி' என அழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் இயற்கைச் சூழலில் அமையப்பெற்ற கிராமம் தெங்குமரஹாடா. இப்பகுதியானது மலையும் சோலையும் நதியும் சூழ்ந்த இயற்கை வனப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் நிலப் பகுதியாகும்.

மாவட்டத்தின் அடிவாரத்தில் அமையப்பெற்ற இப்பகுதியில் நெல், கடலை, வாழை, பாக்கு, மல்பரி செடிகள் போன்றவை பயிராகின்றன. நீர்வளமும், நிலவளமும் உள்ள இப்பகுதியில் பட்டுத் தொழில் மிகவும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

இங்கு 1980-81 ஆம் ஆண்டில் முதன் முதலாக 13.00 ஏக்கரில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மல்பெரி நடவு செய்யப்பட்டது. தற்சமயம் இந்த ஒரே ஒரு கிராமத்தில் மட்டும் 116 ஏக்கரில் 116 விவசாயிகள் முசுக்கொட்டை நடவு செய்து நன்முறையில் புழு வளர்ப்பு செய்து வருகிறார்கள்.

இங்கு ஒரு இளம்புழு வளர்ப்பு மையம் அமைத்து, அதன் பணிகளைச் செய்யவும், விரிவாக்கப் பணிகளைச் செய்யவும், ஒரு உதவி ஆய்வாளர் பணியிடமும், நான்கு இளநிலை ஆய்வாளர்கள் பணியிடமும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இங்கு 82-83 ஆம் ஆண்டு முதல் தெங்குமரஹாடா கூட்டுறவுப் பண்ணைச் சங்கத்தின் நிலம் 4.00 ஏக்கர் குத்தகைக்கு எடுத்து முசுக்கொட்டை நடவு செய்யப்பட்டு நவீன தொழில் நுட்பங்களுடன் இளம்புழு வளர்ப்பு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இளம்புழு வளர்ப்புப் பணிக்கெனக் கட்டிடம் கட்ட ரூ.2.0 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 1.94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

1989-90 ஆம் ஆண்டில் ரூ.12 இலட்சம் மதிப்புள்ள பட்டுக்கூடுகள் இந்தக் கிராம விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் நாள்தோறும் பட்டு வளர்ப்புத் தொழிலால் சராசரி 150 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது. தொடர்ந்து 90-91 ஆம் ஆண்டில் 190 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் ரூ.16 இலட்சம் மதிப்புள்ள பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்யவும் பட்டுவளர்ச்சித்துறை முனைந்து செயல்படுகின்றது.

இவ்விவசாயிகள் பட்டுக் கூடுகளுக்கு அதிக விலை கிடைக்கக் கூடிய தரமான கூடுகளை உற்பத்தி செய்யும் வகையிலும், பட்டு உற்பத்தியைப் பெருக்கவும் விஞ்ஞான முறையில் இளம்புழு வளர்ப்பு நிலையம் மலைப்பகுதிமேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, ஆண்டிற்கு 16,000 முட்டைகள் வளர்க்கப் பட்டவை, இன்று ஆண்டிற்கு 70,000 முட்டைத் தொகுதிகள் வரை வளர்க்கப்பட்டு இளம்புழுக்களாக விநியோகம் செய்யப்படுகின்றன. இதனால் இக்கிராமத்தில் உள்ள 116 விவசாயிகளும் பயனடைவர்.

பட்டு வளர்ச்சித் தொழிலில் நீலகிரி மாவட்டத்திற்கு மைல்கல்லாக உள்ள பகுதி தெங்குமரஹாடாப் பகுதியாகும். இங்கு பட்டு வளர்ப்பு சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்கு இதன் சீதோஷ்ண நிலையே முழு முதல் காரணம் ஆகும். இத்தொழிலில் நீலகிரி மாவட்டம் முன்னேற்றம் கண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

— செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

# ஒன்றா!! இரண்டா எடுத்துச் சொல்ல!

ஆதி திராவிடர்களுக்காக இந்த ஆண்டு 47,000 இலவச காங்க்ரீட் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.







வேலையில்லாத பட்டதாரிகளுக்குப் பத்திரப் பதிவு எழுத்தர் வேலை கொடுக்கப்பட உள்ளது என்றும், இதனால் ஏற்கெனவே இத் தொழிலைச் செய்கிறவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் அவர்கள் கன்னியாகுமரியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பணிக்காலத்தில் உயிரிழக்கும் அரசு ஊழியர் குடும்பத்திற்கு ரூ.40 ஆயிரம் வழங்கும் குடும்பநலத் திட்டம், சத்துணவுத் திட்டத்திலும் தொகுப்பு ஊதியம் பெறும் இதர துறைகளிலும் உள்ள 2.34 இலட்சம் ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.









சென்னை மாநகரின் சீரமைப்புப் பணிகளுக்கு, வருட ஆண்டில் ரூ.41 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே 1 இலட்சம் சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப் பட்டுவருகிறது. இப்பொழுது மேலும் 11.5 இலட்சம் சிறிய பெரிய விவசாயிகள் அனைவருக்கும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் பம்ப்செட்டுகளுக்கான மின்சாரத்தைத் தமிழக அரசு இலவசமாக வழங்கும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.







அனாதை இல்லங்களில் சேர்க்கப்படும் குழந்தைகள், கல்வி, வேலைவாய்ப்பை பொறுத்தவரையில் பொதுத் தொகுப்பி ராகக் கருதப்பட்டு வந்தனர். அந்த நிலையை மாற்றி கல்வி, வேலை வாய்ப்புகளில் உரிய சலுகைகளைப் பெற்றிடும் வகையில் அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும்படி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.



# பல்லக்கும் காட்டுநாய்க்கன்களும்

வடார்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் அரக்கோணம், சேண்பாக்கம், தொரப்பாடி, வேலூர், கலசபாக்கம், மேல்சிறுபாக்கம், மேல்செட்டிப் பாக்கம், பவுத்திரம், பனியூர், வள்ளுவாகை, குங்கிலிய நத்தம், காட்டு சித்தாமூர், காட்டு மலையனூர், வயலூர், வேலையாம்பாக்கம், ஆனைமங்கலம், துரிஞ்சிப்பட்டு, பட்டா குறிச்சி, கண்டாச்சிபுரம், பொறவடை, சித்தமலை, கடலூர், சோமஸ்பாடி, பாக்கம், வடபொன்பரப்பி, புதூர், சந்தப்பேட்டை, குச்சிக்காடு, வீரமூர், போன்ற இடங்களில் காட்டு நாய்க்கன் எனப்படும் ஒரு குறிப்பிட்ட இன மக்கள் சிறு சிறு கூட்டமாக வாழ்ந்து வருகின்றனர். குறைந்த பட்சம் மூன்று குடும்பங்கள் முதல் அதிக பட்சம் 50 குடும்பங்கள் வரை கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங் களிலும் தனியாகவே வாழ்ந்து வருகின்றனர். முற்காலத்தில் ஒதுக்குப் புறத்தில் காட்டுப்புல்லால் வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்தனர். இன்று கிராமங்கள் வளர்ச்சி அடைவதால் இவர்களது இருப்பிடம் கிராமங்களோடு இணைந்துள்ளது.

### வந்தோடிகள்

இவர்கள் காடுகளில் நாய்களுடன் வேட்டையாடி வந்துள்ளனர். இவர்களின் முன்னோர் பெல்லாரி துங்கபத்திரா நதிக்கரையிலுள்ள கம்பலி என்ற ஊரிலிருந்து தமிழ் நாட்டிற்குக் குடியேறினர் என்று கூறப்படுகிறது. காட்டு நாய்க்கன்-களை அவர்கள் வாழும் கிராமத்தைச் சார்ந்த மற்ற மக்கள் ''வந்தோடிகள்'' என்று கூறுகின்றனர். இவர்கள் தங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப தங்கள் தொழிலையும் மாற்றி வாழ்கின்றனர்.

> **காட்டில் நாய்கள் மூலம் வேட்டையாடியதால், காட்டு நாய் நாய்க்கன் என்றும், காட்டில் வேட்டைத் தொழில் செய்து வந்ததால், காட்டு நாய்க்கன் என்றும் அழைக்கப்பட்டனர்.**

பொதுவாக கூடை பின்னும் தொழிலில் இருபாலரும் ஈடுபட்டுள்ளனர். கூடை என்று சொல்லாமல் ''புட்டு'' என்று கூறுகின்றனர். ஈச்சங் கசங்குகளை மலைப் பகுதிகளிலிருந்தும், காடுகளிலிருந்தும் வெட்டிக் கொண்டு வருகின்றனர். அதனை வெட்ட வளைந்த கத்தியை நீண்ட மூங்கில் குச்சிகளில் பொருத்திப் பயன்படுத்துகின்றனர். கசங்குகளைக் கிழிக்க தனி கத்திகளை மரப்பிடி போட்டுப் பயன்படுத்துகின்றனர். ஈச்சமரக் கசங்குகளால் தானியக்கூடை, கோழிக்கூண்டு, போன் கூடை, போஜனக்கூடை, பாம்புக்கூடு போன்றவை செய்கின்றனர்.

இவர்கள் வேட்டையாடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். காட்டுப்பகுதிகளில் ஆமை, அணில் போன்றவற்றை வலைகொண்டு பிடிக்கிறார்கள். குளம், குட்டைகளில் மூங்கில் கொம்புகளைக்கொண்டு தலையில் குத்திக் கொண்டே செல்கின்றனர். ஆமையிருந்தால் ஆமை ஓட்டில் படும். உடனே வலைகளைக்கொண்டு இரண்டு பேர் முதல் பலர் சேர்ந்து ஆமையைப் பிடிக்கின்றனர். அணில் வாழும் பகுதிகளில் அணில் பிடிக்கும் வலைகளைக்கட்டி பலர் அணில்கள் வாழும் பகுதியிலிருந்து அவற்றைக் கலைத்து வலைக்கு நேராக ஓட வைக்கின்றனர். வலையில் சிக்கிக் கொண்டதும் தடியால் அடிக்கின்றனர். இவைகளின் மாம்சத்தை இவர்கள் உண்கின்றனர். காலையில் புளித்த கம்புக் கூழை நீரில் கரைத்துச் சாப்பிடுகின்றனர்.

இம்மக்கள் விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர். சிலர் தங்களது வருமானத்தால் நிலங்கள் வாங்கி அதில் கம்பு பயிரிடுகின்றனர். மழையையே நம்பியுள்ள பகுதியில் விளையும் கம்பைத் தங்களது உணவுக்குப் பயன்படுத்துகின்றனர். தனியாக கிணறுவெட்டி, மாடுகள் வைத்து விவசாயம் செய்யும் அளவுக்கு வசதியில்லை.

### நாட்டு வைத்தியத்தில் சிறந்தவர்கள்

இவர்கள் நாட்டு வைத்தியத்திலும் சிறந்தவர்களாயுள்ளனர். குறிப்பாக கிராமப்புறங்களில் சிலர் பாம்பு பிடித்தும், பாம்புக்கடி விஷம் இறக்கும் வைத்தியம் செய்தும், பாம்புகளைத் தோளில் போட்டுக்கொண்டு பிச்சை எடுத்தும் வாழ்கின்றனர். குறிப்பாக போளூர் வட்டம் கலசபாக்கத்தைச் சார்ந்த திரு. ஈ. வெங்கடாசலம் என்பவர் பரம்பரை பரம்பரையாக பாம்பு விஷக்கடிக்கு பத்துவித காட்டு மூலிகைகளைக் கொண்டு வைத்தியம் செய்து வருவதாகவும், இவரிடம் பாம்பு கடித்து விஷத்துடன் வந்தவர் அனைவருமே சுகமாகிச் சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இவர் பாம்பு விஷக்கடி மருந்தைக் கூடு போல் தயாரிக்கப்பட்ட தேங்காய் ஓட்டுக்குள் வைத்துப் பாதுகாக்கிறார். பாம்பு கடித்து வருபவர்களின் வயதுக்கேற்ப முடியால் செய்யப் பட்ட கயிறுகளால் கட்டி விஷத்தைக் கால்பாதத்தில் கொண்டு வந்து கண்ணாடித்துண்டினால் காலைக் கீறி விஷத்தை இறக்குகின்றார்.



பாம்பு விஷக்கடி வைத்தியர் மிராஸ் வெங்கடாசலம் நபிரி என்ற இசைக் கருவி வாசிக்கிறார்.

பாம்பு கடித்தவர்களின் பற்கள் இறுக்கிக் கொள்வதால், திடமான மூங்கில் குச்சிகளைக் கொண்டு வாயை விரித்து மருந்து கொடுப்ப தாகவும் கூறினார்.

மேலும் இவர்களில் சிலர் கோயில் திருவிழா காலங்களில் கோயிலில் வெடிபோட்டும், 'நபரி' என்ற இசைக்கருவி வாசித்தும் இன்றும் ''மிராஸ்'' பெறுவதாகத் தெரிகிறது. இத்தொழிலின் மூலம் போதிய வருமானம் இல்லாததால் தகரங்களைக் கொண்டு 'டிங்கரிங்' வேலையும் செய்கிறார்கள்.

மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள காட்டு நாய்க்கன்களில் பலர் பாத்திரங்கள், கிழங்கு, காய்கறிகள் விற்றல், கூலிவேலை செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

பல்லக்கு தூக்கும் பணியில் இவர்களின் முன்னோர்கள் அதிக அளவில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. திருமண வைபவமாகிய மணமக்கள் ஊர்வலத்தின்போது மணமக்களைப் பல்லக்கில் வைத்து நான்குபேர் தூக்கிச் செல்வர். இப்பணிக்கு நான்கு மரக்கால் அரிசி, 1 மூடி தேங்காய், ஒரு துண்டு, வேட்டி கூலியாகப்பெறுவர். மேலும் காஞ்சிபுரம் மடம், திருவண்ணாமலை மடம், பூண்டி மடம் ஆகிய இடங்களில் இவர்களின் முன்னோர் பல்லக்கு தூக்கியதாகவும், இன்றும் காஞ்சிபுரம் சங்கரர் மடத்தில் காட்டு நாய்க்கன்கள் இப்படிப்பட்ட பணி செய்து வருவதாகவும் கூறுகின்றனர்.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முந்தைய பல்லக்கு ஒன்று திருக்கோயிலூரை அடுத்த கரையான் பாளையம் கிராமத்திலிருந்து திரு. மாரிமுத்து காட்டு நாய்க்கனிடமிருந்து வெகுமதியாகப் பெறப்பட்டு, வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த பல்லக்கு மரத்தினால் ஆனது. இரண்டுபேர் வசதியாக உட்கார, கயிற்றால் பின்னப் பட்ட தொட்டிலும் இதில் இணைக்கப் பட்டுள்ளது. பல்லக்கில் அழகான வேலைப்பாடுகளுள்ள தொங்கட்டான் களைத் தயாரித்துத் தொங்க விடுவதிலிருந்து இவர்கள் கலையுணர்வு உள்ளவர்கள் என்பது புலனாகிறது. இது 19-ஆம் நூற்றாண்டைச் சார்நத தாக உள்ளது என்று தெரியவருகிறது.

காட்டு நாய்க்கன்கள் பலர் இன்று உடுக்கை அடித்து பிச்சை வாங்கி பிழைக்கின்றனர். பலர் மாறுவேடம் (பகல் வேஷம்) பூண்டு தெருக்கூத்து ஆடி பிச்சை பெறுகின்றனர். சிலர் இசைக்கருவிகள் வாசித்து கூலி பெறுகின்றனர். விழாக்காலங்களில் 'நபிரி' என்னும் இசைக்கருவி வாசித்து கூலி பெறுகின்றனர். சிலர் கிராமங்களில் உள்ள மாடுகளை மேய்த்தும், வீடுகள் தோறும் சென்று உணவைச் சேகரித்தும் வருகின்றனர்.

கிராமப்புறங்களில் வாழும் காட்டு நாய்க்கன்கள் கல்வி அறிவு அற்றவர்களாகவே உள்ளனர். கள்ளக்குரிச்சி வட்டம் கரையான் பாளையம் என்ற கிராமத்தில் ஒருவர் ஒன்பதாம் வகுப்புவரை படித்து விட்டு கூடை

**வே. ஜெயராஜ்,**
**காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**வேலூர்.**



கலசப்பாக்கம் வெ. மண்ணுக் காட்டு நாய்க்கன் என்பவர், வெடி போடும் குழாய்களுடனும், நபிரி என்ற இசைக்கருவியுடனும் இருக்கிறார்.

பின்னுகிறார். ஒரு சில சிறுவர்கள் பள்ளியில் பயில்கின்றனர். படிக்க விருப்பம் கொண்டுள்ளனர். நகர்ப் புறங்களில் வாழும் சிலர் தங்களது பிள்ளைகளைப் படிக்க வைத்துள்ளனர். ஒரு சிலர் ரயில்வே துறை, காவல் துறை, தபால்துறை ஆகியவற்றில் பணி புரிகின்றனர்.

### இசை

உடுக்கை, பம்பை, சலங்கை, நபிரி போன்ற இசைக்கருவிகளை அவ்வப்போது பயன்படுத்துகின்றனர். நபிரி என்ற இசைக்கருவியைக் கோயில் விழாக்காலங்களில் ஊர்வலத்தின் போது இசைக்கின்றனர். கூலியும் பெறுகின்றனர்.

தமிழ்நாடு கிராமியக்கலையாகிய தெருக்கூத்து நாடகத்தில் அதிக ஈடுபாடு இவர்களிடம் உண்டு. மாறு வேடம் பூண்டு இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை இரவு 10 மணிமுதல் மறுநாள் காலை 5 மணிவரை தெருக்கூத்தாக நடத்து கின்றனர்.

### திருமணம்

இவர்களின் திருமணம் எளிமையாக நடைபெறுகிறது. ஒரு பெண்ணை திருமணத்திற்கு நிச்சயம் செய்து கருமணித்தாலி கட்டி விடுகின்றனர். நிச்சயம் ஆன பின் திருமணம் நடக்குமுன்னே குடும்ப வாழ்க்கை நடத்துகின்றனர். திருமணத்தில் 'பொட்டுத்தாலி' அணிந்து கொள் கின்றனர். இது அரைத்தேங்காய்மூடி போன்று வெள்ளியில் இருக்கும். பிழைக்கச் சென்ற இடத்தில் 'ஜாதிப் பணம்' என்று பெரியவர்களுக்குப் பணம் கொடுத்தும், குடிவகைகளை வாங்கிக் கொடுத்தும் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

மணமகன் பெண்ணுக்கு 'பரியம்' கொடுத்தே திருமணம் செய்து கொள்கிறான். எரமுட்டையில் (வரட்டி) காலணா வைத்து, ஏழு வராகன் (1 வராகன் = 3½ ரூபாய்) பரியம் கொடுப்பார்கள். இதனை ''முலைப்பால் காசு'' என்றும் கூறு கின்றனர். இதனைப் பெண்ணின் தாய்க்குத் கொடுக்கின்றனர். பொது வாக தங்கள் இனத்தவர்களுக்கிடையே தான் திருமணம் நடக்கிறது.

மனைவிக்கும், கணவனுக்கும் இடையில் வெறுப்பு வந்து ஒருவரை ஒருவர் விரும்பவில்லை எனில், எரமுட்டையில் காலணா வைத்து ''கள்'' ஊற்றுவார்கள். அப்போது அவர்களது உறவு அற்றுப்போகும். மறுமணம் செய்து கொள்ளலாம். திருமணம் ஆனதும் பெண்ணுக்கோ, ஆணுக்கோ ஒருவரை ஒருவருக்குப் பிடிக்கவில்லை எனில், திருமணச் செலவுத் தொகையைக் கொடுத்துத் தீர்க்க வேண்டும். தங்களது இனத்தவர் உயர்ந்த இனத்தவரிடம் பெண் எடுத்தால் சேர்த்துக்கொள்கிறார்கள். விதவை மறுமணமும் உண்டு.

இவர்கள் தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கொண்டவர்கள். முனீஸ்வரன் இவர்களது குலதெய்வமாகும். நான்கு கற்களை, மூன்று ஒரு பக்கமும், மற்றொன்று ஒரு பக்கமும் வைத்து வணங்குகின்றனர். காது ஓலை, கருகமணி, கருவாடு, சாராயம், சுருட்டு, கள் போன்றவற்றைத் தங்கள் தெய்வத்திற்குப் படைக் கின்றனர். மேலும் கோயில்களில் கோழி, பலி செலுத்துகின்றனர். 'பெரியாயி' என்ற கிராம தேவதையை யும் வணங்குகின்றனர். இவர்கள் மற்ற இனமக்களுடன் கிராமக் கோயில்களில் வணங்குவது கிடையாது. இவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்த வர்கள்.

இறந்தவர்களைப் பாடை கட்டித் தூக்கிச் செல்கின்றனர். இறந்த தலைப்பிள்ளையை எரித்து விடு கின்றனர். மற்றவர்களைப் புதைக் கின்றனர். கருமாதியும் உண்டு.

இவர்கள் பொதுவாக தமிழ் மொழி பேசுகின்றனர். சிலர் தமிழும் தெலுங்கும் கலந்து பேசுகின்றனர். அந்நியர் இருக்கும் போது 'பைல்' என்ற எழுத்தற்ற மொழிபேசு கின்றனர்.

இவர்கள் தங்களுக்குள் சில சமூக மேம்பாட்டுச் சங்கங்களை அமைத்து முன்னேற்றப் பாதையில் நடை போடுகின்றனர். இவர்களில் பலர் அரசின் சலுகை பெற்று வீடுகளில் சாண எரிவாயுக் கலன்கள் போன்றவை அமைத்தும் விவசாயம் செய்தும் முன்னேறியுள்ளனர். இவர்கள் வாழும் தெருக்களில் தெருவிளக்குகள், குடிநீர்க் குழாய்கள் அமைக்கப் பட்டுள்ளன.

# பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்



பெரியார் மாவட்டத்தில், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடப்பாண்டிற்கு ரூ.614.86 இலட்சம் ஒதுக்கீடாகியுள்ளது. 2823 வேலைகள் எடுத்து செய்யப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் நடப்பாண்டில் 1900 வீடுகள் ரூ.193.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின் றன. இதில் பேரூராட்சிப் பகுதி களில் 285 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 591 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

சொந்தக் கட்டடமில்லாத 80 ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக் குச் சொந்தக் கட்டடம் ரூ.54.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, வருகின்றன. இதுவரை 40 கட்ட டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் பள்ளிக் கட்டடமே இல்லாத 21 இடங்களில் புதிய பள்ளிக் கட்டடங்கள் ரூ.26.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 7 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட் டுள்ளன.

கப்பிச் சாலைகள் 155.8 கி.மீ. தொலைவு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தார்ச் சாலை 122.7 கி.மீ. தொலைவு ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டிலும் போடப் பட்டு வருகின்றன. இதுவரை 53 சாலைப் பணிகள் முடிக்கப்பட் டுள்ளன.

ஊராட்சி, பேரூராட்சிகள் 552 பணிகள் ரூ.94.115 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து செய்யப்பட்டு வருகின்றன. இதில் 212 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை இத்திட்டத்தில் ரூ.337.632 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 11.635 இலட்ச மனித சக்தி நாட்கள் உரு வாக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வ தற்காக, மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இது வரை 24 நபர்களுக்கு ரூ.1.17 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. செப்டம்பர் '90 திங்களில் 10 நபர் களுக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதம் இருதய அறுவைச் சிகிச்சை செய்வ தற்காக ரூ.50 ஆயிரமும், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வ தற்காக ஒரு நபருக்கு ரூ.5 ஆயிரமும் ஆக மொத்தம் ரூ.55 ஆயிரம் வழங் கப்பட்டது. 31.9.90 முடிய 35 நபர்களுக்கு ரூ.1.2 இலட்சம் வழங் கப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில், 1990-91-ஆம் ஆண்டில் பழுது பட்ட பள்ளிக் கட்டடங்களில் 1768 பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்க்க எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 1078 பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்க்கும் பணி முடிக்கப்பட்டுள் ளது. இப்பணிக்கு ரூ.29.00 இலட்சம் அரசு மானியமாகப் பெறப்பட்டு, ரூ.25.82 இலட்சம் மான்யமும், ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகை யாக ரூ.16.32 இலட்சமும், ஆக ரூ.42.14 இலட்சம் இதுவரையில் செலவிடப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் செயல் படும் 6 கூட்டுறவு நகர வங்கிகள் 1990-91-ஆம் நிதியாண்டுக்கு, செப்டம்பர் '90 திங்கள் முடிய ரூ.69.71 இலட்சமும், பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.12.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.82.01 இலட்சம் சிறுதொழிற்கடன் வழங்கி உள்ளன.

இம்மாவட்டத்தில், மொடக் குறிச்சி மற்றும் 10 குடியிருப்புகளுக் கான கூட்டுக் குடிநீர்த் திட்ட அனைத்து வேலைகளும் முடிவுற்று, பயன்பாட்டில் இத்திட்டம் இருந்து வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடி கால் வாரியத்தால் தற்போது பரா மரிக்கப்பட்டு வருகிறது. புரவி பாளையம் மற்றும் 31 குடியிருப்பு

களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப் பெற்று, சோதனை நீர் ஏற்றும் பணி நடைபெற்று வருகிறது. பொன்னிவாடி மற்றும் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், மேல்நிலைத் தொட்டிகள் கட்டுதல், பகிர்மானக் குழாய்கள் பதித்தல், அரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் ஆகிய பணிகள் முடிவுற்றுள்ளன. குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. சேர்வைக்காரன்பாளையம் மற்றும் 5 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தலைமையிடப் பணிகள், நீரேற்றுக் குழாய் பதிக்கும் வேலைகள், மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் பணிகள் ஆகியவை முடிவுற்றுள்ளன. மற்றும் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. அக்கரைப்பாளையம் மற்றும் 12 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் (மூலனூர் ஊராட்சி ஒன்றியம்) நீர் ஊற்றுக் கிணறு, மேல்நிலைத் தொட்டிகள் கட்டுமானப் பணிகள், பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிகள், நீரேற்றுக் குழாயகள பதுக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, குழாய் இணைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சுண்ணாம்புக்காடு மற்றும் 9 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், நீரேற்றுக் குழாய்கள் பதிக்கும் பணியும் பொதுக் குழாய்களில் குழாய் இணைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தாமரைப்பாடி மற்றும் 9 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. காட்டூர் மற்றும் 12 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், (அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம்) நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் தவிர மற்றும் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. காசிபாளையம், மாக்கினாம்கோம்பை, அக்கரைக் கொடிவேரி ஆகியவற்றிற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், மேல்நிலைத் தொட்டிகள், நீரேற்றுக் குழாய்கள் பம்புசெட் நிறுத்தும் பணிகள் ஆகியவை முன்னேற்ற நிலையில் உள்ளன. பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் வேலைகளுக்கான ஒப்பந்தம் முடிவு செய்யப்படவுள்ளது.

கோபி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தில் சுத்திகரிக்கப்படாத நீரேற்று இயந்திரம் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. மற்றைய பணிகள் முடிவுற்றுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ்; இம்மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள 8309 குடும்பங்களுக்கு ரூ.261.406 இலட்சம் மான்யமும், மற்றும் கடனுதவிகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை ரூ.87.24 இலட்சம் மானியம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டு, இதன் மூலம் 2890 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**இரா.பா.கார்மேகம்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**

# விஞ்ஞான விந்தை

**தாயின் வயிற்றுக்குள் இருந்த 24 வாரக் குழந்தையை வெளியே எடுத்து, அதற்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்து அமெரிக்க மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அந்தக் குழந்தை, மீண்டும் தாயின் வயிற்றுக்கு உள்ளேயே வைக்கப்பட்டது. இதற்கு ஏழு வாரங்கள் கழித்து, அந்தக் குழந்தை நலமுடன் பிறந்தது. இப்போது கை கால்களை உதைத்துக் கொண்டு துள்ளி விளையாடிக் கொண்டிருக்கிறது.**

**கருப்பைக்குள் இருக்கும் குழந்தைகளுக்கு இதற்கு முன்பு கூட சிகிச்சைகள் செய்யப்பட்டதுண்டு. சோகை பிடித்துள்ள குழந்தைகளுக்குப் புதிய இரத்தம் அளித்தல், நுரையீரல் சரியாக வளர்ச்சி பெறாத குழந்தைகளுக்கு வீரிய மருந்துகளைக் கொடுத்தல் போன்ற சிகிச்சைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. தாயின் வயிற்றில் சிறு துளையிட்டு, ஊசிகள் மூலம் மருந்துப் பொருட்கள் வயிற்றுச் சிசுக்களுக்குச் செலுத்தப்பட்டதுண்டு. ஆனால், தாயின் வயிற்றிலிருந்து குழந்தை வெளியே அகற்றப்பட்டு, அதற்குப் பெரிய அளவிலான வெற்றிகரமான அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.**

**இந்த அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்ட குழந்தையின் மார்புக்கூட்டையும், இரைப்பையையும் பிரிக்கும் தடுப்புச் சுவரில்(உதரவிதானத்தில்) பெரிய துளை இருந்தது. இதனால் அதன் குடல், மண்ணீரல் ஆகியவை இந்தத் துளை வழியாக மார்புக் கூட்டுக்குள் துருத்திக் கொண்டிருந்தன. இதனால் அதன் நுரையீரல்கள் வளர்ச்சியடைவதற்கு அதன் மார்புக்கூட்டில் இடம் போதவில்லை.**

**பல குழந்தைகளுக்கு இதுபோல உதர விதானத்தில் துளை ஏற்படுவதுண்டு. ஆனால், கருவானது எட்டு வாரங்கள் வளர்ச்சியடைந்த நிலையில், இந்தத் துளையும் தானாகவே மூடிக்கொள்ளும். எனினும், சில குழந்தைகளுக்கு, ஏதோ கோளாறினால், இந்தத் துளையானது மூடிக்கொள்ளாமல் அப்படியே இருந்து விடுவதுண்டு. 2,500 பேரில் ஒருவருக்கு இதுபோல நேரிடுகின்றது. இந்தக் குழந்தைக்கும் அந்தக் கோளாறு ஏற்பட்டிருந்தது. 54 நிமிடங்களில் அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்.**

**இத்தகைய குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்து, அவற்றின் மார்புக் கூட்டிற்குள் துருத்திக் கொண்டிருக்கும் குடல்களை இரைப்பைக்குள் தள்ளிவிட்டுச் சரியாகப் பொருத்தாமல் போனால், இக்குழந்தைகள் செத்துப் பிறக்கும் அபாயம் உண்டு. இத்தகைய குழந்தைகளில் 75 சதவீதம் செத்துத்தான் பிறக்கின்றன.**

**— அமெரிக்கத் தகவல் நிலையம்**



மாணவர் பக்கம்

## உழைக்க வேண்டும்

— பி.வி. கிரி



தெரு என்றால் சுத்தம் வேண்டும்
தீபம் என்றால் வெளிச்சம் வேண்டும்
குரு என்றால் அடக்கம் வேண்டும்
கோலம் என்றால் ஒழுங்கு வேண்டும்.

கொடி என்றால் படர வேண்டும்
கொலு என்றால் வரிசை வேண்டும்
செடி என்றால் வளர வேண்டும்
சேவை என்றால் தூய்மை வேண்டும்.

இடி என்றால் முழங்க வேண்டும்
இசை என்றால் கவர வேண்டும்
படி என்றால் உயர வேண்டும்
பசு என்றால் கறக்க வேண்டும்.

மலை என்றால் வளமை வேண்டும்
மதி என்றால் ஒளிர வேண்டும்
சிலை என்றால் அழகு வேண்டும்
சுளை என்றால் இனிக்க வேண்டும்.

மண் என்றால் விளைய வேண்டும்
மனம் என்றால் உண்மை வேண்டும்
கண் என்றால் கனிவு வேண்டும்
கை என்றால் உழைக்க வேண்டும்.

## வைட்டமின் வரலாறு

**'வைட்டமின்' என்ற சொ[ல்] 'வைட்ட' என்னும் இலத்தீன் மொழி[ச்] சொல்லின் அடியொற்றிப் பிறந்தது. 'வைட்ட' என்ற இலத்தீன் மொழி[ச்] சொல்லுக்கு 'உயிர்' என்று பொருள். 'அமின்' என்ற சொல் அம்மோனியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள் என்பதை உணர்த்துகிறது. எனவே, வைட்டமின் (Vitamine) என்பது அம்மோனியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட உயிர் போன்[ற] முக்கியமான பொருளாகும். வைட்டமின் என்ற பெயரைச் சூட்டியவர், ஃபங்க் (Funk) என்னும் விஞ்ஞானியாவார். அவர் பெயர் சூட்டிய ஆண்டு 1912.**

**1912-ஆம் ஆண்டிற்குப்பின் புது[ப்] புது வைட்டமின்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின் தன்மை, பண்புகள் ஆகியவை குறித்து அலசி ஆராயப்பட்டன. அம்மோனியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட உபபொருள்கள் எல்லா வைட்டமின்களிலும் இல்லை என்று அந்த ஆராய்ச்சிகளில் தெரியவந்தது. எனவே, அமின் (Amine) என்ற பிரிவில் உள்ள 'E' என்னும் எழுத்து கைவிடப்பட்டது. அதுமுதல் 'Vitamine' என்ற பெயர் Vitamin என்று குறுக்கப்பட்டது.**

**1912-ஆம் ஆண்டு வைட்டமின் என்ற பெயர் சூட்டப்பட்ட போதிலும், அதற்கு முன்னரே வைட்டமின்களைப் பற்றி விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர்.**

**ஊட்டச் சத்துக் குறைவினால் தவிட்டான் எனப்படும் பெரி-பெரி (Beriberi) நோய் உண்டாகிறது. ஊட்டக் குறைவினால் சொறி, கரப்பான், பல் ஈறு வீக்க நோய் ஏற்படுகிறது. உணவில் சில குறிப்பிட்ட பொருள்கள் இல்லாததால் இந்த நோய்கள் ஏற்படுகின்றன என்று விஞ்ஞானிகள் தெளிவாகத் தெரிவித்தனர்.**

**— திரு வி.என்.சாமி எழுதிய 'உயிர் காக்கும் வைட்டமின்கள்' என்னும் நூலிலிருந்து.**

## பழமொழிகள்

**அக்கரைக்கு இக்கரை பச்சை.**
**அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**
**அகம் குளிர முகம் குளிரும்.**
**அதிக ஆசை அதிக நஷ்டம்.**
**ஆசை ஒழிந்தால் அல்லல் தீரும்.**
**ஆபத்துக்கு உதவினவனே நண்பன்.**
**ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.**
**ஆனைக்கும் அடி சறுக்கும்.**
**இருக்கிறதை விட்டுப் பறக்கிறதைப் பிடிக்கலாமோ?.**
**இளமையில் கல்வி சிலையில் எழுத்து.**
**இறைக்கிற கிணறு சுரக்கும்.**
**ஈரம் இருக்கிற இடத்தில் ஈ மொய்க்கும்.**
**உப்பு இட்டவரை உள்ளளவும் நினை.**
**உபகாரம் செய்தவருக்கு அபகாரம் செய்யலாமா?.**
**ஊதுகிற சங்கை ஊதினால் விடிகிறபோது விடியட்டும்.**
**எட்டி பழுத்தால் என்ன? ஈயாதார் வாழ்ந்தால் என்ன?.**
**எரிகிற விளக்கு ஆனாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.**

**TNPSC**

விளம்பர எண் 41/90.

தமிழ்நாடு நீதிப் பணியில் (Tamil Nadu State Judicial Service) 83 மாவட்ட முன்சீப் மற்றும் - குற்றவியல் நீதிபதி பதவிகளுக்கு (District Munsif cum Judicial Magistrate) நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 5.12.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு: நேரடித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படும்போது பெண்களுக்கான 30 சதவிகித ஒதுக்கீடு பின்பற்றப்படும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2500-75-3100-100-4200.

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது).

**Qualifications:-** 1. B.A., or B.Sc., or B.Com., or an Honours degree;
2. Must have been enrolled as an Advocate of a High Court or of any State Bar Council of the Indian Union;

And

3. Experience at the bar for a period of not less than three years.

**Note:** Destitute Widows who possess the prescribed qualifications and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**Explanation:** "Destitute Widows" means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கிற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்"/அறிவிக்கையில் தரப்பட்டுள்ளது. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.11.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்துரூபாய்க்கான (ரூ.10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.11.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை 600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியின் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூ.10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26×12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2751/MS/90




# காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்!

**பின்னலூர் மு. விவேகானந்தன்**

**க**விஞன் மக்களின் தேவையை முன்னிட்டு தோன்றுகிறான். தனது கவிதைகள் மூலம் தன்னை உலகுக்கு அடையாளம் காட்டிக் கொள்கிறான். அடிமைத் தளையில் உழன்று கொண்டிருக்கும் மக்களின் அவலங்களை உணர்த்தி அவர்களுக்கு உணர்ச்சியூட்டி செயலுக்கு உந்துகிறான். உந்துவதோடு மட்டும் நில்லாமல் தானோ செயலிலும் இறங்கி விடுகின்றான். நாட்டின் இழிநிலை அவனைக் கவிஞனாகவும் கர்ம வீரனாகவும் ஆக்கிவிடுகிறது.

அயர்லாந்தில் போராடிய டிவேலரா, மாக்ஸ் வெய்னி, டக்ளஸ் ஹைட் போன்ற கவிஞர்களும், இத்தாலியில் போராடிய லியோ பார்டி, மாஜினி போன்று இப்படி பலரை நாம் உதாரணம் காட்டலாம். அந்தவகையில்.

"நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை எய்தவும்
பாட்டி லேதனி இன்பத்தை நாட்டவும்
பண்ணி லேகளி கூட்டவும் வேண்டி

கவிதைகளைப் பாடியவர் பாவேந்தர் பாரதிதாசனாவார்.

"தொழிற்புரட்சி யுகமாம்" இவ்விருபதாம் நூற்றாண்டினைச் சமைத்த தொழிலாளர் வர்க்கத்தின் மேன்மைகளையும், உழைப்பின் பெருமையையும், அன்றாட வாழ்வில் அவர்களின் அவல நிலைமைகளையும் தம் பாடல்கள் மூலம் படம் பிடித்துக் காட்டியவர் பாவேந்தர்.

செல்வத்தின் பிறப்பிடம் தொழில் தான். அதனால்,

"தொழிலே வாழிநீ!... தொழிலே வாழி நீ!
எழிலை உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழி நீ!"

என்று தொழிலைப் போற்றினார்.

புரட்சிக் கவிஞர் தொழிலாளியை உலகுக்கு அறிமுகப்படுத்தும் அழகே அலாதியானது, கம்பீரமானது. "தொழிலாளி" என்பவர் யார்? என்ற கேள்விக்குத் தம்பாடல் மூலம் பதில் தருகின்றார் பாவேந்தர்.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம்
எவரின் தோள்கள்?..."

என்று இப்படி வினாக்களை அடுக்கியே தொழிலாளர்களின் மேன்மையை, பெருமைகளைப் பாருக்குப் பறைசாற்றினார்.

"அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடுமணக்கும் நாடு"

எனத்தாயகத்தைப் பாடிய பாவேந்தர் இந்நாட்டில், தான் காணும் காட்சிகளிலெல்லாம், பொருள்களிலெல்லாம் தொழிலாளர்களின் கைவண்ணம் தன் நுட்பத்தைப் பதித்திருப்பதாகவே கண்டார்.

நாட்டுணர்வு மிக்க தொழிலாளர்களால்தான் நாடு முன்னேற முடியும். தொழிலாளர்களால்தான் உலகம் இயங்குகிறது. அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது. அணுவைப் பிளந்து ஏழு கடலைப் புகட்டுகின்ற ஆற்றல் மிக்கவனும் தொழிலாளியே! சித்திரச் சோலைகள், நெல்விளையும் நன்னிலங்கள், தாமரை பூத்த தடாகங்கள், மாமிகு பாதைகள், ஆர்த்திடும் எந்திரக் கூட்டங்கள் அனைத்தும் ஊர்த்தொழிலாளர்கள் உழைத்த உழைப்பின் பயனே என்று கண்ட அவர்,

"கீர்த்திகொள் போகப் பொருட்புவி யே!உன்
கீழ்நிற்கும் கனைக் கால் - எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்து உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்"

என்று ஆவேசத்தோடும் பாடினார்.

இயற்கையின் "அழகின் சிரிப்பில்" இதயத்தைப் பறிகொடுத்த பாவலன் வானத்தையும், அழகு நிலவையும் பற்றிப் பாடும் போதுகூட உழைக்கும் மக்களின் நினைவை மறந்தாரில்லை.

"முழுமைநிலா அழகுநிலா,
முளைத்தது விண்மேலே-அது
பழமையிலே புது நினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே."
என்று புதிய சிந்தனையைத் தெளித்து,

''மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம் இதைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!''
என்று ஆதங்கப்பட்டார்.

உழைக்கும் மக்களை இவ்வுலகம் வஞ்சிப்பதால் அவர்கள் நிரந்தர வறுமையில் கிடந்து உழல்கின்றனர். வறுமை தனி மனிதப் பிரச்சினை அல்ல; ஒரு நாட்டின் பிரச்சினை கூட அல்ல; உலகம் முழுவதும் பரவியுள்ள ஒரு சமூகப்பிரச்சினை. அதிலும் ப்ாடுபட்டு, இந்தப் பாரை உயர்த்தும் பாட்டாளி, கால்வயிற்றுக் கூழுக்கும் அல்லற்படும் கொடுமையை, வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு நசியும் அவனது குடும்பநிலையை எண்ணி வேதனைப் பட்டார்.

''காண்பதெலாம் தொழிலாளி செய்தான்
அவன்
காணத்தகுந்தது. வறுமையாம் - அவன்
பூணத் தகுந்ததும் பொறுமையாம்!''என்று
அனுதாபத்தோடு பாடினார்.

இந்த இழிநிலை மாறும் நாள் எந்நாளோ என்று வேதனைப் பட்டு, தானே ஒரு தொழிலாளியாக மாறி, ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றார்:

காடுக்ளைந்து, நாடு செய்து, வீடு கண்டு பாடுபட்ட தோழர்கள் மலை பிளந்தோம், அலைகடல் மீது சென்றோம், ஆடைநெய்தோம், கூடை கலங்கள் முதல் கோபுரம் நற்சுதை வேலை செய்தவர்கள் நாங்கள், கந்தையணிந்தோம், இரு கைகளை விரித்து எங்கள் மெய்யினைப் போர்த்தினோம், சந்தையில் மாடாய் உழைத்து, தங்க இடம் இன்றித் தவித்தே சிந்தை, மெலிந்தோம்... எங்கள் உடலில் குருதி கொதிப்பேறுமுன் உங்கள் வசம் உள்ள சொத்தையும், நிலத்தையும், நிதியையும் எங்களுக்கு ஒப்படைத்து விடுங்கள். இல்லையேல்...?

''எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?
கிலியை விடுத்துக் கிளர்ந் தெழுவார் இனித்
கெஞ்சும் உத் தேசமில்லை - சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை''

என்று ஆளும் வர்க்கத்தை எச்சரித்து, தொழிலாளர்களுக்கு நம்பிக்கையினையும் ஊட்டியுள்ளார்.

தொழிலாளர்கள்கடலையொத்தவர்கள், முதலாளிகளோ ஓடம் போன்றவர்கள்.



சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச்
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்;
கோரிக்கை பணம் ஒன்றே என்று சொன்னால்
கொடுமைஇதை விடவேறே என்ன வேண்டும்!
— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

தொழிலாளி உரிமை கேட்டு வெகுண்டெழுந்தால், புரட்சி வெடித்தால்,சூறைக் காற்றினால் திசைதடுமாறி, மோதி முழ்கிப் போகும் தோணியைப் போல, முதலாளிகள் மூழ்கிப்போவார்கள் என்பதை, ''தளை அறு'' என்னும் பாடலில் பாவேந்தர் ஆணையிட்டுப் பாடுகிறார்.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம். வேலைப்பளு மறுபுறம். தொழிலாளர் போர்ாட்டம், பொருளாதார நெருக்கடி, கதவடைப்பு இப்படி நில்லாது நடந்துகொண்டிருக்கின்ற இந்தப் போராட்டம் ஒவ்வொரு திக்கில், ஒவ்வொரு மாதிரி தோன்றி வளர்ந்து விஷம்போல் ஏறிக்கொண்டு போகிறது. இன்று நடப்பதென்ன? இனிவரப் போவதென்ன? என்று சராசரி மனிதனுடைய மூளையைக் கலக்கி ''பீதி'' வாழ்வையே வேரொடு அசைத்துப் பார்க்கிறது. இந்த பீதி'யைப் போக்கும் வழிமுறைகளைப் பாவேந்தர் எளியதம் பாடல் மூலம் கூறியுள்ளார்.

**கூடித்தொழில் செய்க:**

ஒற்றைக் கை தட்டினால் ஓசை பெருகிடுமா? தனிமரம் தோப்பாகுமா?... உணர்ந்து பாருங்கள் தோழர்களே! நாடிய ஓர் தொழில், நாட்டார் பலர் சேர்ந்தால், கேடில்லை நன்மை கிடைக்கும் என்று கூட்டுறவின் இன்றியமையாமையை. வலியுறுத்தி,

''வாடித் தொழிலின்றி வறுமையாற்
சாவதெல்லாம் தோழர்களே!
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்
இன்றுவரை தோழர்களே!
மூடிய தொழிற்சாலை முக்கோடி!
கூடைமுறம் கட்டுநரும் கூடித் தொழில்
செய்யின் தோழர்களே!
தேடிவரும் லாபம் சிறப்புவரும்!''

என்று ஆலைத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி, கிராமப்புறங்களிலே சிறு கைத் தொழில்கள் செய்து பிழைக்கும் கிராமத் தொழிலாளர்களுக்கும் நாட்டின் மேம்பாட்டைக் கூட்டுறவின் மூலமே உயர்த்த முடியும் என்று உறுதியாகக் கூறுகின்றார்.

**அயர்வினை எரிப்போம்:**

''எல்லோருக்கும் எல்லாம் என்றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்''

அதனால், ''தொல்லுலக மக்கள் எலாம் ஒன்றே'' என்ற புரட்சிக்கவி, உழைக்கும் தொழிலாளர்கள் நலம்பெற வேண்டுமானால், அதற்குப் புரட்சி ஒன்றே சரியான வழி என்று தேர்ந்து துணிந்து ''உலகப்பன்'' பாட்டின் மூலம்,

''ஓடப்பராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகி விட்டால் ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ!''

என்று அறைகூவல் விடுத்தார்.

**உலகம் உழைப்பவர்க்கே:**

மறையக் கண்டேன் கதிர்தான்; போய் மாயக் கண்டேன் சோர்வே; நிறையக் கண்டேன் விண்மீன்; என் நினைவிற் கண்டேன் புதுமை; என்ற புதுவைக் கவிஞர், நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் வர்க்கத்தின் ஒவ்வொரு துளி வியர்வையிலும் இவ்வுலகம் உழைப்பவர்க்கு உரியதாகக் காணுகின்றார்.

''உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுல குழைப்பவர்க்குரிய தென்பதையே!''

உழைப்புத் தோள்களின் மேம்பாடு உடைய நாடே தொழிற்சாலைகள் மிகுந்த நாடாக மிளிரும் என்பது பாவேந்தரின் அசைக்க முடியாத கருத்தாகும்.

''தொழில் மலிந்த நாடு- உழைப்புத் தோள்களின் மேம்பாடு'' என்கிறார்.

பாவேந்தரின் கனவுகள் நனவாக தொழில்துறையில் மேலும் முன்னேறி தன்னிறைவு எய்த, நமது தமிழக அரசு நாளும் பாடுபட்டு வருகிறது; அதன் முயற்சி வெற்றி பெறுவது உறுதி.





# தமிழகத்தில் தொழில் கூட்டுறவும் வேலைவாய்ப்பும்

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சமுதாயத்தில் நலிந்த பகுதியினரது பொருளாதார நிலையை உயர்த்தவும், கிராமியத் தொழிலாளர்கள், உழைப்பாளர்கள் ஆகியோரது பொருளாதார நிலையை உயர்த்தவும், தேயிலை, மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவோருக்கு உதவி செய்து அவர்கள் தரம் மிக்க பொருள்கள் மற்றும் மூலப் பொருள்கள் உற்பத்தி செய்யவும், சிறு தொழில் செய்வோருக்கு உதவி செய்யவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளாகும்.

இயற்கையாகவே சிறு தொழிற் கூடங்கள் போதிய மூலதனம் இல்லாமல் உள்ளன. மூலப் பொருட்களைப் பெரிய அளவில் கொள்முதல் செய்ய இயலாமை, முடிவடைந்த பொருள்களை நியாய விலைக்கு விற்க இயலாமை, போதிய மூலதனம் பெற இயலாமை ஆகிய குறைபாடுகளை நீக்கத் தொழில் கூட்டுறவு சிறந்த வழியாகும்.

குறிப்பாகச் சொல்லப் போனால், தொழில் கூட்டுறவின் நோக்கங்கள் தொழிலாளர், கைவினைஞர் மற்றும் தொழில் நுன்னியர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளித்தல், சிறிய உற்பத்தியாளர், தொழிலதிபர் விவசாயி ஆகியோருக்கு நிதி வசதி செய்தல், தொழில் நுட்பம், விற்பனை மற்றும் நிர்வாகத்தில் உதவி செய்தல், நுகர்வோருக்குப் பயன்படும் வகையில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகியவையாகும்.

தொழில் கூட்டுறவினால் பயனடைந்த சில முக்கிய தொழில்களாவன:-

## தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் இதுவரை 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்குச் சேவை செய்து வருகின்றன. இந்த 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சங்கங்களுக்குச் சேவை செய்ய நீலகிரி மாவட்டச் சிறு தேயிலை வளர்ப்போர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் என்கிற தொழிற் கூட்டுறவு நிறுவனமும் அமைக்கப் பட்டுள்ளது.

## மரவள்ளிக்கிழங்கு மாவு

சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு பெருமளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சிறு பதனிடும் தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தையில் சரியான விலை பெறுவதில்லை. இந்த மரவள்ளிக் கிழங்குச் சாகுபடியாளர்களுக்கும். ஸ்டார்ச் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலை அதிபர்களுக்கும் தங்கள் பொருட்கள் சந்தையில் சரியான விலை பெற உதவி செய்யும் நோக்குடன் இரண்டு சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் சேலத்திலும், தர்மபுரியிலும் முறையே 'சேகோசெர்வி' மற்றும் 'ஸ்டார்ச்செர்வ்' என்கிற பெயரில் நிறுவப்பட்டு 1982 முதல் செயல்பட்டு வருகின்றன.

## தீப்பெட்டித் தொழில்

சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், பெரிய தீப்பெட்டி உற்பத்தியாளர்களால் பெரிதும் சுரண்டப்பட்டார்கள். சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பண்டங்களுக்குச் சரியான விலை கொடுக்கப்படாமல் இருந்து வந்தது. இச்சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பண்டங்கள் மத்திய நாட்டுச் சந்தையில் சரியான விலைக்கு விற்றுத்தரத் தீப் பெட்டிச்சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இச்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்குத் தரமான மூலப் பொருட்களை நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து தருகின்றன. மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்வதுடன் பொட்டாசியம் குளோரேட், குச்சிகள், அட்டைகள் இவற்றையும் இச்சேவைச் சங்கங்கள் உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன. லேபில்கள் அச்சிடுதல் மற்றும் அட்டை போர்டுகள் தயாரித்தல், அச்சிடுதல் ஆகியவற்றையும் இச்சேவை சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

அனைத்து தீப்பெட்டிச் சங்கங்கள் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தவும் தேவைகளைச் சீரமைக்கவும் மாநில அளவில் செயல்படும் தமிழ்நாடு தீப்பெட்டி சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் . என்கிற அமைப்பும் நிறுவப்பட்டுள்ளது.

## கயிறு

தென்னை நார் உற்பத்தியில் அகில இந்திய அளவில் கேரளம் முதலிடமும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. பழுப்பு நார் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தென்னை மட்டை சரியானபடி பயன்படுத்தாவிட்டால் வீணாகும். இப்பொருளைச் செல்வ மாக்கவும், வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கவும் தமிழ்நாடு அரசும், கயிறு வாரியமும் முயன்று வருகின்றன.

தற்பொழுது தமிழ்நாட்டில் 400 தனியார் நிறுவனங்களும் 74 கயிறு கூட்டுறவுச் சங்கங்களும், தென்னை நார்க் கயிறுத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தென்னை நார் எடுத்தல், கயிறு திரித்தல், சுருள் நார் உற்பத்தி, கயிற்றுப் பாய் மற்றும் மிதியடி செய்தல் மற்றும் ரப்பர் கலந்த கயிற்றுப் பொருட்கள் உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் சிறந்த கவனம் செலுத்தி வருகின்றன.

## கைவினைப் பொருட்கள்

தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்குப் பெயர் பெற்றது. இக்கைவினைத்

திறன் தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும் சில குடும்பங்களில் மட்டும் காணப்படுகிறது. இக்கைவினைத் திறனைப் பாதுகாக்கவும் இக்கைவினைஞர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் கைவினைத் தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன.

'கைவினை' என்ற பதம் இசைக் கருவிகள் உற்பத்தி, காகிதம் மற்றும் களிமண் பொம்மைகள் செய்தல், கற் சிலைகள் வடித்தல், பஞ்சலோகச் சிலைகள் செய்தல், வெண்கலம் மற்றும் உலோகங்களால்செய்யப்படும்பொருட்கள் மரச்சிற்பங்கள செய்தல், அலங்காரத் தட்டுக்கள் செய்தல், மற்றும் செயற்கை வைரம் தீட்டுதல் ஆகியவை அடங்கும்.

## தையல் தொழில்

கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்டிர்க்கும், காவல்துறை அலுவலர்களின் பெண்டிர்க்கும் கூடுதல் வருமானம் தரும் வகையில் தையல் தொழில் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. காவல்துறையின் காவலர் பணியாளர்களுக்குத் தேவைப்படும் சீருடைகள் தைப்பதற்கு இச்சங்கங்களுக்கு ஆர்டர்கள் ஆண்டு தோறும் கிடைக்கின்றன. மேலும் நகராட்சி, துறைமுகப் பணியாளர்கள் மற்றும் தீயணைப்புப் பிரிவினர்களுக்குச் சீருடை தைப்பதற்கான ஆர்டர்களும் இச் சங்கங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப் படுகின்றன.

## பொறியியல் தொழில்

கிராமப்புறங்களில் வசிக்கும் திறன் மிக்க தொழிலாளர்கள், ஐ.டி.ஐ. கல்வித் தகுதி பெற்றோர், கருமான் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்குடன், பொறியியல் தொழிற் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அலுமினிய அண்டாக்கள் செய்தல், பூட்டுகள் செய் தல், நெசவுத்தொழிலுக்குத் தேவையான பாபின்கள் செய்தல், எஃகு மேஜை, நாற்காலிகள் பீரோக்கள் செய்தல் ஆகியவை இத் தொழிலில் அடங்கும்.

## தோல் பதனிடும் தொழில்

பதனிடப்பட்ட தோலுக்கு மேல் நாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. தோல் பதனிடும் சிறு தொழில் நிறு வனங்களுக்கு உதவும் நோக்குடன் தோல் பதனிடும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வாணியம்பாடி, ராணிப்பேட்டை, பேராணம்பேட்டை மற்றும் திண்டுக்கல்லில் நிறுவப்பட்டுள்ளன.

## நிலக்கரி, கரி மற்றும் சிமெண்ட் விநியோகம்

இரயில் வாகனங்கள் தட்டுப் பாட்டினால் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரக்கூடிய நிலக்கரியின் அளவு போது மான அளவாக இல்லை. ஆகவே சிறு தொழில் நிறுவனங்கள் வேறு பல வகைகளில் அதிக விலை கொடுத்து நிலக்கரியை வாங்குகின்றன. இச் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான விலையில் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தே வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கின்றன. இச்சங்கங்கள் நிலக்கரி யார்டுகள் மற்றும் எடை பாலம் ஆகிய வசதிகளைக் கொண்டவை.


தமிழரசு
சந்தா விவரம்
தமிழ்
ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12
ஆங்கிலம்
ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.


### கூட்டுறவு தொழிற்பேட்டைகள்

சிறு மற்றும் மிகச் சிறு தொழில் நிறுவனங்களும் உதவி செய்யும் நோக்குடன் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் நிறுவப் பட்டுள்ளன. தொழில் கூடங்கள் மற்றும் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்தல் மின்விசை வழங்குதல், தண்ணீர் வழங்குதல், மற்றும் சிறு தொழில் கூடங்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவை இத்தொழிற்பேட்டைகளின் நோக்கமாகும். இந்த ஒதுக்கீட்டிற்கான இத்தொழிற்பேட்டைகள் மிகவும் குறைவான வட்டி அதாவது 3% முதல் 6½% வரை வசூலிக்கின்றன. சென்னை, பொள்ளாச்சி, சிவகாசி, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் செயல்படுகின்றன.

### கூலி ஒப்பந்தச் சங்கங்கள்

தொழில்களில் ஒப்பந்தம் என்பது சட்டப்படி கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும், தமிழ்நாட்டில் இது சீரிய முறையில் தொழிற் கூட்டுறவுச் சங்கங் களால் அமுல்படுத்தப்படுகின்றன. இச்சங்கங்கள் மூலம் தற்காலிகப் பாட்டாளி கள் நிரந்தரமாக வேலை பெறவும், முன் சம்பளம் பெறவும் ஏதுவாகிறது. இடைத் தரகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் சுரண்டல் தவிர்க்கப்படுகிறது. இவ் வகையில் முதன் முதலில் பதிவு செய்யப் பட்ட சங்கம், எம்.ஆர்.எஸ். கூலி ஒப்பந்த சங்கமாகும். இது 1983-இல் பதிவு செய்யப்பட்டது. நியாயமான கூலி, மொத்த இன்சியூரன்ஸ் பிராவிடெண்ட் நிதி, மருத்துவக்கட்டணம் வழங்குதல், குறைந்த விலையில் உணவுப் பண்டங்கள் வழங்குதல் இன்னும் பலவும் இச்சங்க செயல்பாடுகளில் அடங்கும்.

### தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி

தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள் 1956-இல் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இச்சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல் மிகக்கடினமாகியது. ஏற்கனவே செயல் பட்டுக்கொண்டிருந்த கூட்டுறவு வங்கிகள் விவசாயம் மற்றும் நுகர்வோர் கடன் ஆகியவற்றில் மட்டும் கவனம் செலுத்தி வந்தன. மத்திய அரசின் செயற்குழு ஒன்றின் பரிந்துரையின் பேரில் தொழிற் கூட்டுறவுகளுக்கென பிரத்தியேகக்கடனாக ஒரு கூட்டுறவு வங்கி ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிற்று. ஆகவே, 1961-ஆம் ஆண்டில் இவ்வங்கி சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கத் தொடங்கியது. அநேகமாக எல்லாத் தொழிற் கூட்டுறவுச் சங்கமும் இதில் உறுப்பினர்களாகி இவ்வங்கிகளின் மூலம் நிதிவசதி பெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 397 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மொத்த உற்பத்தி ரூ.10,871.90 இலட்சமாகும். இச் சங்கங்களில் சுமார் 95,000 பேர் பணிபுரிகின்றனர். இச்சங்கங்களுக்குத் தமிழக அரசு பெருமளவில் கூட்டுறவு வங்கிகளின் மூலமும் மூலதனத்தில் பங்கு கொள்வது மூலமும் நிதியுதவி செய்து வருகிறது.

### தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்





# நாயக்கர் கால ஓவியம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி மாவட்டம் திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கம்) அரிய பண்டைய ஓவியங்களைக் கண்டு பிடித்துள்ளது. இவ்வோவியங்கள் இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை ஆகும்.

திருவரங்கத்திலுள்ள திருவரங்க நாதரின் கோயில் ஏழு திருச்சுற்று களைக் கொண்டது. அத்தகைய திருச்சுற்று உத்தர வீதி என்று அழைக்கப்படுகிறது.

இவ்வீதியில் உத்தம நம்பி திரு மாளிகை புத்தங்கோட்டகம் சுவாமி திருமாளிகை, ஸ்ரீரங்க ஜீயர் மடம். அகோபில மடம், கோயில் கந்தாடை அண்ணன் சுவாமி திருமாளிகை, மணவாள மாமுனிகள் சன்னதி, வியாசராசர் மடம் ஆகியவை அமைந்துள்ளன. அவற்றில் வியாச ராசர் மடம் உத்தரவீதியின் கிழக்குப் பக்கம் உள்ளது. இம்மடத்தில் குழலூதும் கண்ணன் (வேணு கோபாலன்) கோயில் உள்ளது. அக்கோயிலுக்கு முன்பாக நாலு கால் மண்டபத்தின் விதானத்தில் நாயக்கர் கால ஓவியங்கள் காணப் படுகின்றன. இத்துறையைச் சார்ந்த திருச்சி பதிவு அலுவலர் திரு. சி. ஸ்ரீதரன் கண்டுபிடித்து, தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர், நடன. காசிநாதன் அவர்களுக்குத் தெரிவித்தார். இவ்வோவியங்களைக் கண்டுபிடிப்பதற்கு, திருவரங்கத்தின் பண்டைய நகர அமைப்பு பற்றி ஆய்வு செய்யும் திரு.ஸ்ரீவத்சன் உதவியுள்ளார்.

வைணவ மதத்தில் சுயம்புத் தலங் களாக எட்டுத் தலங்கள் போற்றப் படுகின்றன. அவை 'சுவயம்வ்யக்த சேத்திரங்கள்' எனப்படும்.

அவையாவன:

1) ஸ்ரீமுஷ்ணம், 2) ஸ்ரீரங்கம் 3) திருப்பதி 4) சாலிகிராமம் 5) னநமிசாரண்யம் 6) தோதாத்தி 7) புஷ்கரம் 8) பத்ரி (நரநாராயண ஆச்ரமம்)

மேற்காணும் தலங்களில் எழுந் தருளியிருக்கும் இறைவனின் திருக் கோலங்கள் மேற்காணும் மண்டபத் தின் விதானத்தில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலத்தின் பெயரும் அவ்வோவியத் தின் மேற்பகுதியில் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. 'ஸ்ரீமுஷ்ணம்' ஆதிவராக சந்நதி, ரங்கனாதசுவாமி, நரநாராயண ஆச்ரமம் என சில தலங்களின் பெயர்களைப் படிக்க முடிகிறது.

ஓவியத்தின் கீழ்ப்பகுதியில் இம் மடத்தில் எழுந்தருளியுள்ள கண்ணன் வலப்புறத்தில் மாத்வ பெரியார்களும், இடப்புறத்தில் நாயக்க மன்னரும் மற்றும் அமைச்சரும் கண்ணனை வழிபடும் நிலையில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளனர். இவ்வோவியங்களுக்கு மேற்பக்கத் தில் திருமாலின் 24 வடிவங்களும் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களின் மேற்பகுதியில் அவ்வுருவங்களின் பெயர்களும் முறையே அவிருத்த, புருஷோத்தம அதோக்ரஜ, நரசிம்ம, அச்சுத, ஜனார்த்தன, உபேந்திர, ஹரி, ஸ்ரீகிருஷ்ண என மூர்த்திகளின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் விளிம்புகளில் மத்வர் வழியினரின் உருவங்களும் பெயர்களும் காணப்படுகின்றன.

இவ்வோவியங்கள் காணப்பெறும் வியாசராசர் மடம் ஸ்ரீவியாசராசர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவர் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இம்மடத்தைச் சேர்ந்த மூலபிருந்தாவனம் திருமஞ்சன காவேரி என்னும் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீலட்சுமிநாத தீர்த்தர் ஸ்ரீலட்சுமிபதி தீர்த்தர் ஆகியோர் அடக்கமாகி உள்ளனர். அவர்களது அடக்க இடங்கள் பொது மக்களால் இன்றும் வழிபட்டு வரு கின்றன. மேற்காணும் இருவரும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்.

ஸ்ரீரங்கம் திருவரங்கநாதர் கோயிலில் இதற்கு முன்பாகப் போசலர் கால ஓவியங்களும், நாயக்கர் கால ஓவியங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. தற்பொழுது விசய ராசர் மடத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஓவியம் புதிய கண்டு பிடிப்பு ஆகும்.



மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் வது தேசிய நூலக வார விழாவினைத் தொடங்கி வைத்து புத்தகம் மற்றும் யக் கண்காட்சியைப் பார்வையிட்டார். (14.11.90)



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள ஆதரவற்ற ஏழைத் தாய்மார்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (15.11.90)

சென்னை மாநகராட்சி, ரூ.180 இலட்சம் செலவில் துப்புரவுப் பணிக்காகப் புதிதாக வாங்கியுள்ள 42 வாகனங்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் இயக்கி வைத்தார். (10.11.90)








சென்னையில் பெருமழையில் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரண உதவியாக, குடிசை இழந்தவர்களுக்கு ரூ.500 வீதமும், மழை நீர் தேங்கியதால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.250 வீதமும் மொத்தம் இரண்டு கோடிக்கும் அதிகமாக உதவி அளிக்கும் திட்டத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி, மயிலை-திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் நிவாரண உதவிகளை வழங்கினார். (18.11.90)

எழுதுபொருள் அச்சுத்துறை தொழிலாளர்கள் கோரிக்கைகள் அடிப்படையிலான பரிந்துரைகள் அறிக்கையை மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்களிடம் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப அவர்கள் சமர்ப்பித்தார். செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப. அவர்கள் உடன் உள்ளார். (14.11.90)

# படமும் செய்தியும்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்

# வளர்ச்சிப்பணிகள்

**தி**ருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், பல்வேறு துறைகள் பாங்காய் வளர்ந்து வருகின்றன. மருத்துவத்துறையைப்பொருத்தவரை, நாங்குனேரி அரசு மருத்துவமனையில் தொழுநோய் சிகிச்சைக்கு 20 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடம் ரூ.10.92 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தொழு நோயாளிகளுக்கென தனியாக உள் நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு அமைக்கப் பட்டுள்ளது. இதேபோன்று இம் மாவட்டத்தில் சங்கரன்கோவில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளது. எனவே, இம் மாவட்டத்தின் தென்பகுதி வட்டாரங்கள் ஆகிய இராதாபுரம், நாங்குனேரி மற்றும் கடலோரப் பகுதி வாழ் மக்கள் தொழுநோயில் உள்நோய்ச் சிகிச்சை, பெற்றிட, தற்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இப் புதிய கட்டடம் மிகுந்த அளவில் பொதுமக்களுக்குப் பயன்தரும்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ரூ.40 இலட்சம் செலவில் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போது நோயாளிகள் மதுரை, சென்னை போன்ற தொலை இடங்களுக்குச் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இதனைத் தவிர்த்து அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் பொருட்டு இப்பிரிவு அரசால் ஏற்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினால் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மற்றும் காமராஜர் போன்ற தென் மாவட்டங்களிலுள்ள நலிவுற்ற மக்கள் பெரிதும் பயன்பெற முடியும். ஆண்டுதோறும் சுமார் 3,000 நோயாளிகள் பயன் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

இம்மாவட்டத்தில் கோவிலூத்து, கூடங்குளம், தெற்குகள்ளிகுளம், அரியப்பபுரம், மருதமுத்தூர், தலைவன் கோட்டை, சங்கனபுரம், சுந்தர பாண்டியபுரம், கரிசல்பட்டி, மூலக் கரைப்பட்டி ஆகிய 11 கிராமங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் மருத்துவர் குடியிருப்புகள் ரூ.74.25 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் மருத்துவர் குடியிருப்புகளுக்கு ரூ.6.74 இலட்சம் செலவிடப்படவுள்ளது. மேலும்திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 35 படுக்கைகள் கொண்ட கூடுதல் மகப்பேறு மருத்துவச்சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ரூ.25 இலட்சம் செலவில் கட்டி முடிக்கபட்டதன் மூலம் இட நெருக்கடி தீர்ந்து தாய்மார்களுக்குச்சிறந்த சிகிச்சையினை அளிக்க இயலும்.

தென்காசி மருத்துவமனையில் அறுவை அரங்கம் 6 படுக்கைகளுடன் கூடிய உள்நோயாளிகள் பிரிவுக் கட்டடம் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டு ரூ.8.80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தாய்மார்களும் மகப்பேற்றிற்குப் பின் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்வதற்காகத் தனியாகப் படுக்கை வசதி மற்றும் குளிரூட்டப்பட்ட அறுவை அரங்க வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனால் பேறு காலத்திற்குப் பின் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**★ திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி அரசு மருத்துவமனையில் தொழுநோய்ச் சிகிச்சைக்கு 20 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடம் ரூ.10.92 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.**

**★ வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், காவலர்களுக்கு 140 இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.**

**★ சங்கரன்கோவிலில் மகளிருக்காக, அன்னை அஞ்சுகம் மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ரூ.10 இலட்சம் முதலீட்டில் தொடங்கப்படவுள்ளது.**

### காவலர் குடியிருப்பு

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் திம்மராஜபுரம் கிராமத்தில், காவலர்களுக்கென வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 140 இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. தகுதியுள்ள காவலர்களுக்கு அரசு மூலம் கடன் வழங்கப்பட்டு இந்த இல்லங்கள் ஒதுக்கப்படும். இந்தக் கடன் தொகை காவலர்களின் ஊதியத்திலிருந்து



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ தமிழ்நாட்டில் அனல்மின் நிலையங்களுக்கு நிலக்கரி ஏற்றிவர அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ரூ.100 கோடி செலவில் 2 கப்பல்கள் வாங்கத் திட்டமிட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (18.9.90)

★ செங்கை-அண்ணா மாவட்டம் திருமழிசை பேரூராட்சியில் ரூ.57 இலட்சம் செலவிலான புதிய குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். (18.9.90)

★ தமிழ்நாட்டில் பள்ளிகளில் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கு இலவச பஸ் பாஸ் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, நகரப் பேருந்துகள் இயங்காத இடங்களில் சிறப்பு அனுமதியின் பேரில் புறநகர்ப் பகுதிகளிலிருந்து வரும் மாணவ மாணவியர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தவிர மற்றெல்லாப் பேருந்துகளிலும் பயணம் செய்ய பயண அட்டைகள் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (20.9.90)

★ தஞ்சை மாவட்டத்தில் கிராமப்புறக் கடன் நிவாரணத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு சுமார் ... இதில் சுமார் ரூ.25 கோடி இம்மாவட்டத்... கூட்டுறவு வங்கிகள் மூலம் தள்ளுபடி செ... பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகை... தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மற்... கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி ஆகிய... கூட்டுறவு வங்கிகளுக்கு முதல் தவணையாக ரூ... கோடி வழங்கப்பட்டுள்ளது என்று தமிழக ... அறிவித்துள்ளது. (25.9.90)

★ கோவை மதுக்கரை ஊராட்சி ஒன்றியம் நா... பாளையத்தில் மரம் நடும் விழாவில் மாண்பு... சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்... ஜெகதீசன் அவர்கள் சமூகக் காடுகள் வளர்ப்... திட்டத்தின் கீழ் 2,200 மரக்கன்றுகள் நடுவ... தொடங்கி வைத்தார். (23.9.90)

★ தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களு... தேர்வு நிலை—சிறப்பு நிலை ஊதியம் ரூ.8 கோ... செலவில் வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ள... மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவ... அறிவித்தார். (29.9.90)

★ தமிழகத்தில் 9 மாவட்டங்களில் உ... விவசாயிகள் பயன்பெறும் வகையில் 8 ஆ... குழாய்க் கிணறுகள் வெட்ட ரூ.4 கோடி செல... படும் என்று அரசு அறிவித்துள்ளது. (29.9...

★ செங்கை அண்ணா மாவட்டத்திலு... எர்ணாவூரில் டாமின் கிரானைட் ஓடுகள் தயாரி... தொழிற்சாலைக்கும், டாமின் கிரானைட்ஸ் தொ... சாலையின் விரிவாக்கத்திற்கும் மாண்புமிகு மு... கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். (1.1...

★ ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பா... கழகச் சார்பில் சிறு தொழில்கள் தொடங்... மோட்டார் வாகனங்கள் வாங்கவும் ரூ.25 கோ... கடன் உதவிகள் வழங்கப்படும் என்று மாண்பு... ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க. சு... அவர்கள் அறிவித்தார். (8.10.90)

தவணை முறையில் பிடித்தம் செய்யப் படும். குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ஒவ்வொரு இல்லமும் ரூ.75,500 வீதம் 126 இல்லங்களும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ஒவ்வொரு இல்லமும் ரூ.1.18 இலட்சம் செலவில் 14 இல்லங்களும் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.83.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### சாலை மேம்பாடு

ஸ்ரீபுரம்-தச்சநல்லூர் சாலையினை (வழி சிவசக்தி திரையரங்கு) ரூ.20 இலட்சம் செலவில் மேம்பாடு செய்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. திருநெல்வேலி சந்திப்பு ... இப்பகுதியிலிருந்து வரும் ... வகையான போக்குவரத்திற்கும் தச்சநல்லூர் ரயில் பாதையைக் கடந்து திருநெல்வேலி நகர்மைய பேருந்து நிலையத்தினைச் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் பயணதூரம் 2 கி.மீ. குறைக்கப் படும். மேலும் எரிபொருள் சேமிப்பு மற்றும் பயண நேரமும் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம்

சங்கரன்கோவிலில் மகளிருக்காக அன்னை அஞ்சுகம் மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ரூ.10 இலட்சம் முதலீட்டில் தொடங்கப்படவுள்ளது. சொந்த மாகத் தறியில்லாத குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தைச் சார்ந்த 100 பெண்களுக்காக இச்சங்கம் ... பிக்கப்பட்டுள்ளது.

6 மாதக்கால ஊதியத்... கூடிய பயிற்சிக்குப்பின் ... உறுப்பினர்கள் மாதம் ஒன்... ரூ.500-க்கு குறையாமல் வரும... பெறத்தகுதி பெறுகின்றனர். சங்... கோவில் நகராட்சிக்குச் ... மான 50 சென்ட் நிலம் இதற்... தேர்வு செய்யப்பட்டுள்ளது. ... நாடு மகளிர் வளர்ச்சிக் கழக... மூலம் முதல் கட்டமாக ம... உறுப்பினர்களின் பயிற்சிக்கு ரூ.... நிலம் வாங்கிட ரூ.50,000 ... உதவி பெற உரிய நடவடிக்... எடுக்கப்பட்டுள்ளன.

எஸ்.எம். பஷீர்
செய்தி மக்கள் தொடர்பு அ...
திருநெல்வேலி-கட்டபொம்மன்
மாவட்டம்.



# அனைத்திந்தியக் கூட்டுறவு வார நிறைவு விழா

**த**மிழ்நாடு முழுவதும் 37-வது இந்தியக் கூட்டுறவு வார விழா நவம்பர் 14-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரை சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. 21.11.90 அன்று கூட்டுறவு வார விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவில் பங்கேற்று, சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பாராட்டுக் கேடயங்கள், பரிசுகள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு உதவிப் பொருட்கள் வழங்கி, நிறைவு விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன், அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தம் தலைமையுரையில்,

''மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், முன்பு தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போதுதான் கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்தப்பட்டது. அதன்பிறகு பதினைந்தாண்டுக் காலம், இருந்த எந்த ஒரு அரசாலும் அத்தேர்தல் நடத்தப் பட முடியாத நிலையிருந்தது. இந்த முறை, தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சரான பிறகு தான் கூட்டுறவு அமைப்புகளுக்கெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; இந்த மகத்தான ஜனநாயக அமைப்பினை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையே சேரும்.'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:

''கூட்டுறவுத் துறை என்பது ஒரு உன்னதமான துறையாகும். இந்தத் துறை ஒரு காலத்தில் சில குட்டி ராஜாக்களின் கையிலேதான் இருந்தது. அத்தகைய ஜமீன் ஆதிக்கத்திலிருந்து, கூட்டுறவுத் துறைத் தலைவர் பதவிக்குச் சாமான்யர்களும் வரலாம் என்பதை நிரூபித்த சிறப்புக்குரியவர் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே யாவார். கூட்டுறவுத் துறை வளரவும், வாழவும் பாடுபட வேண்டியது நமது கடமையாகும்!''

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

கூட்டுறவு வாரவிழா பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளையொட்டி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகின்ற விழா. கூட்டுறவில் மிகுந்த நாட்டம் கொண்டவர் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஆவார்கள். கூட்டுறவில் அவருக்கு அக்கறையும் ஆர்வமும் இருந்த காரணத்தால்தான் இந்திய நாடு கூட்டுறவால் கட்டப்பட்டு இயங்க வேண்டுமென்று அவர் கருதினார். நேரு காலத்தில், அவரால் கூட்டுறவு போற்றப்பட்டது.

இன்றைக்குக் கூட்டுறவு ஏற்படுத்துகின்ற கயிறுகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அவைகளை அறுத்து விடும் முயற்சிகள் நாட்டில் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைத் தீர்க்கதரிசனமாக எதிர்பார்த்துத்தான்- இந்தியாவை வாழவைக்கக் கூடிய், வளப்படுத்தக் கூடிய, வலுப்படுத்தக்கூடிய அமைப்பாகக் கூட்டுறவு அமைப்பு இருக்க வேண்டும்- இருக்கும் என்கிற ஆசையையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்.

எனவேதான், அவருடைய பிறந்த நாளான 14-ஆம் தேதிமுதல் ஒரு வார காலம் கூட்டுறவு வாரமாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

முதல்நாள் மனித வள மேம்பாட்டு நாளாகவும், இரண்டாம் நாள் கூட்டுறவு மூலம் ஜனநாயகம் மற்றும் சமூகநீதி பாதுகாக்கிற நாளாகவும் கொண்டாடுகிறோம். சமூக நீதியைப் பாதுகாக்கின்ற நாளாக இந்த நேரத்தில் கொண்டாட வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியது அவசியமில்லை. 'மண்டல்' என்ற ஒரு வார்த்தையே உங்களுக்கு அதை மிக விளக்கமாக எடுத்துச் சொல்லும்.

அதற்கு அடுத்த நாள் கூட்டுறவு மூலம் சுற்றுப்புறச் சூழல்-பாதுகாப்பு-வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நாள்.

அடுத்து, விற்பனை மற்றும் நுகர்வோர் நாள். அடுத்து கூட்டுறவு மூலம் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நுட்ப நாள். அடுத்து மகளிர் மற்றும் நலிவுற்றோர் நாள். இறுதியாக கூட்டுறவு மூலம் வீட்டு வசதி நாள்.

இந்த நாட்களில் அடங்கியுள்ள தலைப்புக்களைக் காணும் பொழுதும், அந்தத் தலைப்புகள் பெற்றிருக்கின்ற தகவல்களை நோக்கும் பொழுதும், இவைகளுக்குள்ளேயே, ஒரு நாட்டினுடைய வாழ்வு, சமுதாயத்தினுடைய முன்னேற்றம், அந்த சமூகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீதி, சமுதாயத்திலே வலுவாக இருப்பவர்கள், வலுவற்று இருப்பவர்கள், பலமாக இருப்பவர்கள், பலவீனமாக இருப்பவர்கள் - இவர்களுக்கு இடையே நடைபெற வேண்டிய சமத்துவம், சமதர்மம், இவை அனைத்தும் இந்தத் தலைப்புகளுக்கிடையே அடங்கி இருக்கின்ற காட்சியை நாம் காண முடிந்தது.

அப்படி ஒரு வாரத்தைக் கொண்டாடி விட்டு, நிறைவு நாளையும் கொண்டாடி விட்டு நாம் கலைந்து செல்கிறோம் என்றால், ஏதோ ஆண்டுக்கு ஒரு வாரம் இதைக் கொண்டாடினோம்; அப்போது மாத்திரம் இதை நினைத்துக் கொண்டோம் என்றில்லாமல், தொடர்ந்து இந்தப் பணிகளில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இங்கே பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் - கட்சி சார்பற்றவர்களும் இந்த விழாவுக்கு வந்திருக்கிறீர்கள். இங்கே - எல்லோரும் ஒரு கட்சி; கூட்டுறவுக் கட்சி என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

''சீமான் எவ்வளவு தவறு செய்தாலும், அது வெளியே வராது. சீமான் போட்டிருக்கிற பட்டுச் சட்டை அதைப் பாதுகாத்துவிடும். ஏழை அவன் ஒரு இயக்கத்திற்கு வந்தால், அது கூட்டுறவு அமைப்பாக இருந்தாலும்சரி, சட்டமன்றமாக இருந்தாலும்சரி- ஏழை தவறே செய்ய மாட்டான் என்று சொல்லவில்லை- ஆனாலும் ஏழை செய்தால், அது உடனடியாக அம்பலத்திற்கு வரும். பணக்காரன் செய்தால், அதை மறைப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆதாரங்கள் அவனிடத்தில் உண்டு.

ஏனென்றால், கறுப்புத் துணியில் ஒரு துளி மையை உதறினால், அது தெரியப் போவதில்லை. தூய்மையான வெள்ளைத் துணியில் ஒரு துளி மை படுமானால், அது பளிச்சென்று தெரியும்.

எனவே, கூட்டுறவுத் துறையில் அங்கம் வகிக்கும் உங்களையெல்லாம் நான் தூய்மையான வெள்ளைத் துணியாகவே கருதுகிறேன்; ஒரு துளி மையும் சிந்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பார்த்துக் கொண்டால், இந்தச் சமுதாயத்தைச் சிந்தாமல் சிதறாமல் காப்பாற்றினோம் என்ற பெருமை நமக்கெல்லாம் வாய்க்கும்! என்று கூறி உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் உரையாற்றினார்.

முன்னாள் அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம், திரு டி.ஆர் பாலு எம்.பி., மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், கூட்டுறவு இயக்கப் பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

விழா நிகழ்ச்சிகள் முடிந்தபின், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலர் திரு. ஏ.ஜே. சீனிவாஸ் நன்றி கூறினார்.

இந்த விழாவை முன்னிட்டு, சென்னையில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் பங்கேற்ற சிறியதோர் கண்காட்சியும் வள்ளுவர் கோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழா முடிவில் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதிய 'தென்பாண்டிச் சிங்கம்' வரலாற்று நாடகம், கலைமாமணி ஹெரான் ராமசாமி குழுவினரால் நடத்தப் பட்டது.

**— நமது செய்தியாளர்**

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ இளநிலை, இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள் நியமனத்திற்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள தகுதியுள்ளோரைப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்ந்தெடுக்க முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்தது. இதன் காரணமாக ஏற்கனவே நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது. (3.10.90)

★ தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர் 81 ஆயிரம் பேர்களுக்கு மொத்தம் 20 கோடி ரூபாய் போனஸாக வழங்கப்படுகிறது. ஒருமாத சம்பளம் (8.33 விழுக்காடு) போனஸாகவும், 4.92 விழுக்காடு கருணைத் தொகையாகவும் வழங்கப்படுகிறது என்று மின்சார வாரியம் அறிவித்துள்ளது. (6.10.90)

# நலிவுற்றோர்க்கு வாழ்வு தரும் நலத் திட்டங்கள்

## தென்னார்க்காடு மாவட்டம்

**மூ**வலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள மாவட்டந்தோறும் இருக்கின்ற ஏராளமான ஏழைப் பெண்கள் பயன் பெற்று வருகின்றனர்.

இந்த உதவித் திட்டத்தின்படி 1989-90-ஆம் ஆண்டிற்கு, தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 1072 நபர்கள் குறியீடாகக் கொண்டு, ரூ.53,60,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, முழுமையாகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

1990-91-ஆம் ஆண்டில் 1200 நபர்களுக்குத் திருமண நிதியுதவி வழங்க, ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் இதுவரை 1140 ஏழைப் பெண் களுக்கு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் ரூ.5,000 வீதம் 57 இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில், இத்திட்டத் தினால் பயனடைந்த, தென்னார்க்காடு மாவட்டம் பண்ருட்டி வட்டம் ஆவினியூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி வரலட்சுமி கூறுகிறார்:

''நான் பிளஸ் டூ வரையில் படித்துள்ளேன். என்னுடைய தந்தையார் பெயர் இராமச்சந்திரன்; தற்போது அவர் இறந்துவிட்டார். எனக்கு மூன்று தங்கைகளும், இரண்டு தம்பிகளும் உள்ளனர். எனது தாயார் விவசாயக் கூலிவேலை செய்து எங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். எனது தாயார் நான்கு பெண்களையும் எப்படிக் கரை



திருமதி வரலட்சுமி

சேர்ப்பேன் என்று தினமும் மனம் சோர்ந்து புலம்பிக் கொண்டே இருப் பார். இந்தச் சூழ்நிலையில் அண்ணா கிராமப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கிராம சேவிகாவாகப் பணியாற்றி வரும் திருமதி பூஷணத்தைச் சந்தித்து, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் திருமண உதவி பெறுவது பற்றி விசாரித்து, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு மனுச் செய் தேன். மனுச் செய்த 15 நாட்களில் இந்த உதவித் தொகையைப் பெற்றேன். இத்தொகையைக் கொண்டு எனது கல்யாணத்திற்கு வாங்கிய கடன் களை அடைத்தோம். தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டம் கொண்டு வந்ததனால், நான் மட்டும் பயன் பெற்றது மட்டுமின்றி, புதுப்பேட்டை ஆகிய கிராமங்களில் உள்ள 40 பேர் பயன் பெற்று உள்ளோம். எங்களுடைய வாழ்வில் ஒளியேற்றிய தீபமாகத் திகழ்கிறார் தமிழக முதல்வர் என்று ஆனந்தக் கண்ணீர் மல்கக் கூறினார்.

**— வை. புண்ணியமூர்த்தி,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்னார்க்காடு மாவட்டம்.**

## கோயம்புத்தூர் மாவட்டம்

**கோ**யம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பெரியநாய்க்கன்பளையம், சர்க்கார் சாமகுளம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் மூலமும், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டத்தின் மூலமும் பலர் பயன் பெற்றிருக் கிறார்கள்.

பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் 4 வீரபாண்டிபுதூர் கிராமத்தைச் சார்ந்த கலாமணி-காளிச்சாமி தம்பதிகளைச் சந்தித்து திருமண உதவித் தொகை பெற்றதைப் பற்றிக் கேட்டபோது திருமதி கலாமணி (வயது 20) என்பவர் கூறியதாவது:

''சின்ன வயதிலேயே அப்பாவை இழந்து பாட்டியாருடன் தங்கி அரசு உதவியால் பிளஸ் 2 வரை படித்து முடித்தேன். வசதியில்லாததால் மேற் கொண்டு படிக்கவும் முடியாமல், தக்க வயதடைந்தும் கல்யாணம் செய்யவும் முடியாமல் வறுமையில் வாடினேன். பலமுறை கல்யாண ஏற்பாடு செய்தும் பொருளாதார நெருக்கடியால் தடைப்பட்டது. ஏற் கெனவே அரசாங்கத்தில் உதவி பெற்று கல்யாணம் செய்து கொண்ட உறவினர் ஒருவர் மூலம் இத்திட்டத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு, முக்கிய சேவிகா மூலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத் தேன். பயன்பெற்றேன். கல்யாணம் முடிந்த ஒரு வாரத்தில் இந்த உதவித் தொகை ரூ.5,000 எனக்குக் கிடைத் தது. இது மட்டும் எனக்குக் கிடைத்திரா விட்டால் என் கல்யாணமே நடந் திருக்காது'' என்றார்.

திரு. வி. காளிச்சாமியிடம் இது





திருமதி கலாமணி
திரு காளிச்சாமி

பற்றிக் கேட்டபொழுது ''நானும் வசதி இல்லாத குடும்பத்தில் பிறந்து தினக் கூலியாகத் தனியார் ஒர்க் ஷாப்பில் வேலை செய்கிறேன். அரசின் இத்திட்டத்தால் கிடைத்த இவ்வுதவித் தொகையின் மூலம், துணிமணிகள் எடுத்து கோவிலில் சிக்கனமாக எங்கள் கல்யாணத்தைச் செய்து கொண்டோம்'' என்றார்.

கலாமணி தாய் பூவாத்தாள் ஓர் விதவை. அவர் கூறும்பொழுது, ''கல்யாண வயதில் உள்ள பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு மனச்சுமையோடு வாழ்ந்தேன். நல்ல நேரத்திற்குத் தமிழக முதல்வர் இந்தத் திட்டத்தை அறிவித்தார். பிறகு நான் மாப்பிள்ளை வீடு பார்த்து 6.6.90-இல் திருமண உதவி கேட்டு மனுச் செய்தேன். 15.6.90-இல் ரூ.5,000 கொடுத் தார்கள். திருமணத்தை முடித்தேன். எனது பொறுப்பைத் தமிழக அரசே ஏற்றுக் கொண்டு முடித்து வைத்தது.'' என்று பெருமகிழ்ச்சியோடு தெரி வித்தார்.

கலாமணியின் பாட்டி தங்கம்மாளும்(70) இதுபற்றிப் பூரிப்போடு கூறி அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மை யார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற்றுத் திருமணமாகி ஆண் குழந்தை ஈன் றெடுத்தவர் நாயக்கனுரைச் சேர்ந்த திருமதி சத்தியவாணி. முன்பு அவர் திருமணம் நிச்சயிக்கப்படுவதற்கு முன்பு - மூன்று ஆண்டுகள் ஆகியும் வசதியில்லாததால் நின்றுவிட்டது. அப்பெண்ணின் தந்தை கோவை மாவட்ட ஆ[illegible] களிடம் முறையிட்டு மனுக் கொடுத் தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மா.இராமன், இ.ஆ.ப. அவர் களின் உடனடி நடவடிக்கையால், திருமண உதவித் தொகை வழங்கப் பட்டு, இத்திருமணம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கடந்த ஆண்டு நவம்பரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே நடத்தி வைக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த அப்பெண்ணின் தாயார் திருமதி பானுவிடம் கேட்டபொழுது, ''எங்க வீட்டுக்காரரர் காலணி தைக்கும் தொழிலாளி, எங்களுடைய பெண் திருமணத்திற்கு உதவி கிடைத்து, கலெக்டர் உதவியுடன் திருமணமும் நடந்தது. ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த இந்தக் குடியிருப்பில்,படிக்காமல் நின்றுவிட்ட பெண்கள் கூட, இப் பொழுது பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்கிறார்கள். 8-வது படிச்சிட்டா அரசாங்கத்தில் 5,000 ரூபாய் கல்யாணத்திற்குத் தருவதால் படிக்க ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் பணம் கொடுக்கிற இந்தத் திட்டம் ரொம்பவும் நல்ல திட்டம்'' என்று கூறினார்.

வீரபாண்டிபுதூரில் 2 ஆண்டு களுக்கு முன்பு திருமணமாகி தற் பொழுது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் உதவி பெற்ற சின்னதுரை மனைவி திருமதி லட்சுமி யைச் சந்தித்து - இத்திட்டத்தின் பயனைப் பற்றிக் கேட்டபொழுது அவர் சொன்னார்—

பிறந்துள்ளது. கூலி வேலை செய்து பிழைப்பு நடத்திவரும் நான், அரசாங்கத்துல கர்ப்பிணிப் பெண் களுக்கு 200 ரூபாய் உதவியாகக் கொடுக்கிறார்கள் என்பதை நர்ஸ் அம்மா மூலம் அறிந்து, அவர் மூலமே மனுக் கொடுத்தேன். அந்த உதவித் தொகை மூலம் மருந்து, மாத்திரை, காய்கறி எல்லாம் வாங்கிப் பஞ்சம் பசி தெரியாமல் இருந்து பயன்பெற்றேன். இந்தத் தொகை பேறுகாலத்தில் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது'' என்றார்.

அதே கிராமத்தைச் சார்ந்த பழனிச்சாமியின் மனைவி சாவித்திரி என்பவர் மகப்பேறு உதவி பெற்றுப் பயனடைந்தவர். இத்திட்டத்தின் பயன் பற்றி அப்பெண்ணிடம் கேட்கும்பொழுது—

''குடியிருக்க அரசாங்கம் இந்த வீடு கட்டிக் கொடுத்தாங்க. இப்ப எனக்கு இந்தப் பெண் குழந்தை பிறந்த 7 நாளில் 200 ரூபாய் உதவியாகக் கொடுத்தாங்க. நர்ஸ் அம்மா மூலமாகக் கிடைச்ச இந்தப் பணத்தைக் குழந்தைக்கும் எனக்கும் வைத்தியத்துக்குச் செலவழிச்சேன், இப்ப நாங்க நல்லாயிருக்கோம்'' என்றார்.

சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம் சாமநாய்க்கன் பாளையத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் பயன் பெற்ற தம்பதிகள் சாந்தாமணி (வயது 20) - நடராஜன் ஆகியோர்

திருமதி ராஜேஸ்வரி



பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயக் கூலிகள். சத்துணவு அமைப்பாளர் மூலம் 'இத்திட்டம் பற்றி அறிந்த சாந்தாமணி முக்கிய சேவிகா மூலம் ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பித்து திருமணத்திற்கு 2 நாள் முன்னதாகவே உதவித் தொகையைப் பெற்று, திருமணத்தை நடத்தியுள்ளார்.

அதே கிராமத்தில் மகப்பேறு உதவி பெற்ற வேலுச்சாமியின் மனைவி ராஜேஸ்வரி என்பவர் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தவர். இவருக்கும் கர்ப்பிணி உதவி தொகை ரூ.200 வழங்கப் பட்டது. அதுபற்றி இருவரும் பெருமையோடு சொல்லி, அரசையும் முதலமைச்சரையும் பாராட்டினர்.

சாமநாய்க்கன் பாளையத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் மனைவி நாகம்மா என்பவர் மகப்பேறு உதவித் தொகை சமூக நலத்துறை மூலமாக வழங்கப்பட்டு அதனால் பயன் பெற்றவர். பிள்ளைப் பேறுக்கு முன்பே உதவித் தொகை பெற்றுக் கொண்ட இவர் - ''மந்திரி அம்மா கொடுத்த 200 ரூபாயை என் குழந்தை பிறக்கிறதுக்கு முன்னாடியும், பிறந்த பின்னாடியும் மாத்திரை, மருந்து, காய்கறி எல்லாம் வாங்கி சாப்பிட்டு நல்ல பயனைப் பெற்றேன்'' என்று நன்றியுடன் கூறினார்.

**கோ.த. மோகன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

ஏழைப் பெண்களின் வாழ்வு ஏற்றம் பெற, ஏணியாக உதவும் திட்டம்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு முதல் கட்டமாக, 1990-91-ஆம் ஆண்டுக்கு 1,500 ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் திருமண நிதியுதவி வழங்க ரூ.75 இலட்சம் பெறப்பட்டது. பின்பு இரண்டாம் கட்டமாக 200 பெண்களுக்கு ரூ.10 இலட்சம் பெறப்பட்டது. இதில் அக்டோபர் மாதம் வரை 1,338 மகளிருக்கு 66 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், திருச்சி மாவட்டத்தில்- நலிவுற்ற கர்ப்பிணிப் பெண்களுக்குத் தாய்மை அடைந்த 8-வது மாதத்தில் மகப்பேறு நிதியுதவி வழங்க 1990-91-ஆம் ஆண்டுக்கு 13,500 நபர்களுக்குத் தலா ரூ.200 வீதம் வழங்க ரூ.27 இலட்சங்கள் பெறப்பட்டு, தற்போது 11,489 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.22 இலட்சத்து 97 ஆயிரத்து 800 வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின்கீழ், இவ்வாண்டுக்கு 5 விதவை மகளிருக்குத் தலா ரூ.5,000 வீதம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 5 விதவை மகளிர் மறுமணம் புரிய ரூ.25,000 வழங்கப்பட்டுள்ளது.

விதவைப் பெண்மணியின் மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், திருச்சி மாவட்டத்தில்- 1990-91-ஆம் ஆண்டுக்கு 100 விதவைகளின் மகள் திருமணத்திற்காகத் தலா ரூ.2,000 வீதம் வழங்க ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு 100 பேருக்கு வழங்கப்பட்டு விட்டது.

இந்த ஆண்டில் விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 220 குழந்தைகளுக்குப் புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டத்தின் கீழ்- சாதிபேதமற்ற சமத்துவச் சமுதாயம் அமைய உதவ வழிகோலும் வகையில்- நடப்பாண்டில் 34 கலப்புமணத் தம்பதியர்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் வழங்க ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

கண் பார்வையற்றவர்களுக்குக் கருப்புக் கண்ணாடி வழங்கும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் திருச்சி மாவட்டத்தில் 469 கருப்புக் கண்ணாடிகள் வழங்க ஒதுக்கீடு பெறப்பட்டு, இதுவரை 320 கண் பார்வை இழந்தவர்களுக்குக் கருப்புக் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளன.

அரசு அறிவித்துள்ள இலவச மின்சாரத் திட்டத்தின் மூலம் மட்டும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 97 ஆயிரத்து 70 விவசாயிகள் பயன் அடைகிறார்கள். இதன் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஆண்டுக்கு இரண்டு கோடியே 21 இலட்சத்து 56 ஆயிரத்து 740 ரூபாய் வருமான இழப்பு ஏற்படுகிறது.

**உள்ளம் வளர்கிறது - சிந்தனையால் - உலகில் உலவும் எண்ண அலைகளால் - வாழ்க்கை எனும் ஆசிரியன் புகட்டும் பாடங்களால்! இலட்சியங்கள் புதிது புதிதாகப் பிறக்கின்றன. இவைகளுக்கேற்ற வண்ணம் அறிவுத் தாகம் ஏற்படுகிறது. அந்தத் தாகத்தைத் தீர்க்கும் ஏடுகளை நாடுகிறோம்.**

**—பேரறிஞர் அண்ணா**

எஸ். சுதாகர்,
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்:

தமிழக அரசின் சமூக நலத் திட்டங்களை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைகள் மறுமண நிதி உதவித் திட்டம், விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம் ஆகியவற்றில்- ஆண்டிற்கு அரசு நிர்ணயித்த குறியீட்டைத் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் எய்தியுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில், 8-ஆம் வகுப்புப் படித்துத் தேறிய 600 பெண்களுக்குத் திருமண உதவியாகத் தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கியது. நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கிய தொகை அனைத்தும் இந்தத் திருமண உதவிக்கு வழங்கப்பட்டுவிட்டது.

டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைகள் மறுமண நிதி உதவித் திட்டத்திற்கு ரூ.20 ஆயிரமும், விதவைகள் மகளின் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ரூ.80 ஆயிரமும், இம்மாவட்டத்திற்கு நிதியாக ஒதுக்கியது. இத்திட்டங்களுக்கு ஒதுக்கப் பட்ட தொகைகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டது.





திருமதி தனபாக்கியம்

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்கு ரூ.17 இலட்சம் நிதியாக அரசு ஒதுக்கியது. அதில் இதுவரை ரூ.6 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில் ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.5 ஆயிரம், மகளிர் திருமண உதவித் திட்டத்தால் திருமணம் செய்து கொண்ட சாணார்ப்பட்டி ஊராட்சி ஒன்றியம் கம்பிளியம்பட்டியைச் சேர்ந்த வெள்ளைச்சாமியின் மகள் தனபாக்கியம் கூறியதாவது:

''எனது பெற்றோர்கள் கூலி வேலை செய்து வருகிறார்கள். தற்போது எனது தந்தைக்கு 67 வயதாகிறது. என்னுடன் பிறந்தவர்கள் 3 அண்ணன்மார்கள், ஒரு அக்காள், ஒரு தங்கச்சி. என் தங்கை பள்ளியில் படித்து வருகிறாள். அண்ணன், அக்காள் படிக்கவில்லை. திருமணமாகித் தனித்தனியே வாழ்ந்து வருகிறார்கள். நான் 8-வது படித்து 7 ஆண்டுகள் ஆகிவிட்டது. திருமண வயதையெட்டியும், கூலி வேலை செய்துவரும் எனது பெற்றோரால் திருமணம் செய்துவைக்க இயலவில்லை. தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் திண்டுக்கல் மாவட்டக் கலெக்டர் அலுவலகத் திறப்பு விழாவில், படித்த பெண்களுக்குத் திருமண உதவி வழங்குவது பற்றிச் சிலர் பேசிக் கொண்டதை அறிந்தேன். விவரம் தெரிந்தபின் யூனியன் ஆபீசுக்கு மனுச் செய்து, ரூ.5 ஆயிரம் பெற்றேன். எனது திருமணமும் நடைபெற்றது'' எனக் கூறினார்.

''இந்த ஐந்தாயிரம் ரூபாய் கிடைக்கவில்லையென்றால் எனது திருமணம் எப்போது நடந்திருக்குமோ?'' இத்திட்டத்தால் ஒரு புது வாழ்வு எனக்குக் கிடைத்தது'' என்று பெருமகிழ்வோடு கூறினார்.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் கோபால்பட்டியில் வசித்து வரும் குழந்தைவேலுவின் மகள் முத்துப்பாப்பா கூறியதாவது:

''எனது குடும்பத்தில் என் தாய், தந்தையரைச் சேர்த்து 5 நபர்கள். எனது மூத்த அக்காள் இருவரும் படிக்காதவர்கள். எங்களது உறவுக்காரப் பையன்களுக்கு எனது தந்தை எப்படியோ திருமணத்தை நடத்தி வைத்துவிட்டார். நான் கடைசி மகள். எனக்குத் திருமணம் செய்வது பற்றி யோசித்துக் கொண்டே வந்தார். எனது தகப்பனார் நெருங்கிய உறவுப் பையனுக்கு என்னைக் கட்டிவைக்க நினைத்தால் கூட, கல்யாணச் செலவு மற்றும் தோடு, மூக்குத்தி வாங்குவதற்கும், தட்டு முட்டுச் சாமான்கள் வாங்குவது போன்ற சராசரிச் செலவிற்கே ரூ.3 ஆயிரம் தேவைப்படும். இரண்டு அக்காளைக் கரை சேர்த்த எனது தந்தை, எனது திருமணத்தை முடித்து வைக்கக் கையில் பணமில்லாமல் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில், அரசின் சார்பில் படித்த பெண்களான என் போன்றவர்களுக்குத் திருமண உதவி செய்த அரசாங்கத்தை என் வாழ்நாளில் மறக்க முடியாது'' எனக் கூறினார்.

8-ஆம் வகுப்புவரை படித்த பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் மணம் முடித்துக் கொண்ட காவேரிசெட்டிபட்டியைச் சேர்ந்த-மறைந்த- திரு ரெங்கசாமியின் மகள் நாகரத்தினம் கூறியதாவது:

''எனது தந்தை உயிருடன் இருக்கும்போது என் அண்ணனுக்குத் திருமணம் செய்துவைத்துவிட்டார். எனது தாய் கூலி வேலை பார்க்கிறார். எனக்குக் கீழ் இரண்டு தம்பிகள் உள்ளனர். எனது தாய் சம்பாதிக்கும் கூலிப் பணத்தில் எனது திருமணச் செலவிற்கு வழி இல்லை. எனது ஊருக்காரப் பெண், 9-ஆவது வகுப்பு படித்திருந்தாள். அவளுக்கு அரசாங்கப் பணம் பெற்றுத் திருமணம் முடிந்ததை அறிந்து, வழிமுறைகளைத் தெரிந்து, எனது திருமணத்திற்கும் அரசாங்கம் கொடுக்கும் பணத்தால் திருமணம் செய்யலாம் என்று திட்டமிட்டு, அரசாங்கப் பணத்தைப் பெற்று எனக்குத் திருமணம் நடந்தது'' என்று மகிழ்வோடும் நன்றிப் பெருக்கோடும் கூறினார்.

**—மு. அண்ணாமலை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்**

திருமதி முத்துப்பாப்பா



# சிறு சேமிப்புத் துறை

## அறுபது வயது முடிந்ததும் அறுபது மாத சேமிப்பின் மூலம் மனநிறைவோடு வாழுங்கள்



**ரூ. 125/- வீதம்**
அறுபது மாதம் சேமியுங்கள்.
**உங்களின் அறுபதாவது வயதில் ரூ. 6,40,000/- பெறுங்கள்!**
**பென்ஷன் வசதியும் உண்டு!!**

| வயது வரம்பு | 60 மாதத்திற்கு மாதந்தோறும் 5 வருட R.D. கணக்கில் செலுத்தும் தொகை | 5 வருட R.D. கணக்கில் முதிர்வு பெறும் தொகை | R.D.-ல் முதிர்வு பெற்ற தொகையை IVP-ல் மறு முதலீடு | IVP-ல் செய்த முதலீடு 58-ம் வயதில் முதிர்வு பெறும் தொகை | 58-ம் வயதில் MIS மற்றும் இதர பொருத்தமான திட்டங்களில் முதலீடு செய்யும் தொகை | மாதாந்திர பென்ஷன் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 18-23 | 125* | 10,003.75 | 10,000 | 6,40,000 | 6,40,000 | 6,400 |
| 23-28 | 125* | 10,003.75 | 10,000 | 3,20,000 | 3,20,000 | 3,200 |
| 28-33 | 125* | 10,003.75 | 10,000 | 1,60,000 | 1,60,000 | 1,600 |
| 33-38 | 250* | 20,007.50 | 20,000 | 1,60,000 | 1,60,000 | 1,600 |
| 38-43 | 250* | 20,007.50 | 20,000 | 80,000 | 80,000 | 800 |
| 43-48 | 500* | 40,015.00 | 40,000 | 80,000 | 80,000 | 800 |
| 48-53 | 500* | 40,015.00 | 40,000 | 40,000 | 40,000 | 400 |

* ரூ. 50/-க்கு ஒரு கணக்கும், மீதத் தொகைக்கு மற்றொரு கணக்கும் தொடங்க வேண்டும்.

** 6-வது கட்டத்தில் காணப்படும் தொகை, மாதாந்திர பென்ஷனுக்காக, மாதாந்திர வருமானத் திட்டத்தில் (MIS) முதலீடு செய்யப்படுகிறது (அதிகபட்சம் ரூ. 4 லட்சம். மீதத் தொகை பொருத்தமான இதர திட்டங்களில் முதலீடு செய்யப்படும்) 6-வது கட்டத்தில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு, 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை 10% போனஸ் உங்களுக்குக் கிடைக்கும்.

5 ஆண்டுகளுக்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட தொகையில் டெபாசிட் செய்தாலே போதும். மேலே குறிப்பிட்டுள்ளபடி உங்களுக்கு ரூ. 400/- முதல் ரூ. 6400/- வரை மாதாந்திர பென்ஷன் கிடைக்கும். 13.3% அளவில் அதிக வட்டி வழங்குகிறது.

- மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வரை R.D.-யில் இலவச இன்ஷூரன்ஸ் கிடைக்கும்
- சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தின் மூலம் மாத ஊதியம் பெறுவோர் சேமிக்க R.D. திட்டம் பயனுள்ளது.
- உங்கள் வீட்டுக்கே வந்து தொகையைப் பெற்று, தபால் நிலையத்தில் டெபாசிட் செய்ய M.P.K.B.Y. ஏஜெண்டுகள் வசதி உண்டு.
- 1.6.90 முதல் 31.12.90 வரை தமிழ்நாட்டில் R.D.-ல் டெபாசிட் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் தமிழ்நாடு அரசு ஒரு இலவச பரிசுக்கூப்பனை வழங்குகிறது. இதன்மூலம் மாருதி கார், ஸ்கூட்டர், கலர் டி.வி., ரெப்ரிஜிரேட்டர், மோஃபா, தையல் எந்திரம், சைக்கிள், கைக்கடிகாரம், குவார்ட்ஸ் சுவர்க்கடிகாரம் முதலிய 262 பரிசுகளைப் பெற வாய்ப்பு உண்டு.
- 1.6.90 முதல் 31.12.90 வரை NSS, NSC VIII Issue, KVP போன்ற திட்டங்களில் ரூ. 1,000/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

### பரிசுக்கூப்பன்கள் கிடைக்குமிடம்:

**சென்னையில்:**
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், சென்னை-5 மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள்,
மாநகராட்சி அலுவலகம், சென்னை-3 மற்றும் அனைத்து மாநகராட்சி வட்ட அலுவலகங்கள்,
சமூக பாதுகாப்பு துணை இயக்குநர் அலுவலகம், குறளகம், சென்னை-108.

**மாவட்டங்களில்:**
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்
வட்டாட்சியர் அலுவலகங்கள்
வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்

மேலும் விவரங்களுக்கு:
இயக்குநர்,
**சிறு சேமிப்புத்துறை,**
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

ிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926. 568927

/ அதி / நவீன / பருத்தி / வகைகள்



உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.









மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் எறையூரில் உள்ள பெரம்பலூர் ஜவகர்லால் நேரு சர்க்கரை ஆலை விரிவாக்கம் - தொழிலாளர் குடியிருப்பு ஆகியவற்றைத் திறந்து வைத்தார். (11.11.90)



தோற்றம்: 10.12.1878
மறைவு: 25.12.1972



தோற்றம்: 17.9.1879
மறைவு: 24.12.1973



## மனித நேயம் வளர்ப்போம்

### முதல்வர் கலைஞர்

நமது நாட்டின் தியாக சீலர்களான பெருந் தலைவர்களும், அந்தத் தலைவர்களின் மதிப்புக் குரிய ஆன்றோர்களும், சான்றோர்களும், சமூக நீதியும், சமூகங்களுக்கிடையே ஒற்றுமையும், உடன் பிறந்தோர் என்ற ஒருமித்த உளமார்ந்த உணர்வும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து தொண்டாற்றி வந்துள்ளனர்.

அவர்களின் அரும்பணிக்கு மாறாகவும், அந்தப் பணியையே எதிர்த்து அறைகூவல் விடுவதைப் போலவும், சில ஆண்டுக்காலமாக நாட்டில் நடை பெறும் நிகழ்ச்சிகள் நமது நெஞ்சைக் குலுக்கு வதாக இருக்கின்றன.

மதச்சார்பற்ற நிலையும், மனித நேயப்பண்பாடும் மங்கித் தேய்ந்து, பஞ்சாப், காஷ்மீர், அசாம் என்ற பட்டியல் போதாதென்று, உத்திரப் பிரதேசத்தில் அயோத்தி, அலிகார், கான்பூர் போன்ற இடங் களில் அமளியும் - குஜராத்தில் கலவரங்களும், ஆந்திர மாநிலம் - ஐதராபாத்தில் இரத்தக் களரியும் என்று பட்டியல் நீளும்போது இதயம் பதைக்கிறது.

இமயம் முதல் குமரிவரையில் எல்லா மக்களிடமும் ஒற்றுமை, ஒருமைப்பாடு, அன்பு வழி, அமைதி வழி, திகழ வேண்டுமென்று விரும்புவோர் விழிகள் எல்லாம் குளமாக ஆகிடத் தக்க வன்முறைக் களமாக இந்த நாடு மாறுவதைத் தடுப்போம் என்று ஒவ்வொருவரும் சூளுரை மேற்கொள்ளவேண்டிய தருணம் இது!

பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை வாள் வீசித் தீர்த்துக் கொள்ள முனைவதும், நினைப்பதும் - இந்த நாட்டுக்குச் செய்யும் தீங்காகும். துரோக மாகும்.

அத்தகைய தீங்குகளுக்கு அணுவளவும் இடம் தரமாட்டோம் என்று பாரதி பிறந்த இந்த நாளில் சபதம் எடுத்துக் கொள்வோம்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்!''

என்று அந்த மகாகவி பாடிய கவிதையை மனத்தில் பதித்து மனித நேயம் வளர்ப்போம்!''

*(11.12.90 அன்று மகாகவி பாரதியார் பிறந்த நாளையொட்டி வெளியிட்ட செய்தி)*

## இந்த இதழில்...


மதுரை-அரசினர் இராஜாஜி மருத்துவமனைக்கு ரூ.40 இலட்சம் நிதி —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

நாட்டுப் பற்றும் நன்றிக் கடனும்! —மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் ... 4

ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை திறப்பு விழா ... 9

அகதிகள் மறுவாழ்வு —மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு ... 11

குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் —மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு — குடிநீர் வழங்குதுறை அமைச்சர் திரு. க. பொன்முடி ... 17

திரைப்பட விருதுகள் வழங்கு விழா ... 24

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன் காக்கும் அரசு —மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.க.சுந்தரம் ... 29

தொழில் தொடங்க முனைவோருக்குத் தனிச்சலுகைகள்! —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 41

மலரும் நினைவுகள் (உவமைக் கவிஞர் சுரதா பேட்டி) ... 45



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021 • மார்கழித் திங்கள் 1 • மலர்:21 16-12-1990 இதழ்:12



## துரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனைக்கு

# ரூ 40 இலட்சம் நிதி

## — முதல்வர் கலைஞர் —

"இன்று மதுரை மருத்துவக் கல்லூரி இராஜாஜி மருத்துவமனையில் இதய நோய்ப் பிரிவில் இதயத் தமனிகள் ஆய்வகத்தையும், சுவாச நோய்ப் பிரிவில் புதிதாக 25 படுக்கை வசதி கொண்ட கட்டடத்தையும் திறந்து வைக்கிற இந்த அரும் பணியில் ஈடுபட்டிருக்கிற நாம் அனைவரும் மகிழ்ச்சியோடு இங்கே கூடியிருக்கிறோம்.

"இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்று இருப்பதை 20 ஆயிரம் மக்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்று ஆக்கிட வேண்டும் என்று தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்பதையும், விரைவில் அந்தக் குறிக்கோள் எய்தப்படும், என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இருதய சிகிச்சைக்காகத்தான் இன்றைய விழா இங்கே நடைபெறுகிறது. அத்துடன் காசநோய் - அதனை அகற்றுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்கான ஒரு கட்டடத்தின் திறப்பு விழாவும் இன்றைக்கு நடைபெறுகிறது.

இராஜாஜி மருத்துவமனையிலே இருதய சிகிச்சைக்கான சோதனைகளைச் செய்வதற்காக வாய்க்கப் பட்ட கருவி கோடிக்கணக்கான ரூபாய் பெறக் கூடிய அந்தக் கருவி பெட்டிக்குள்ளேயே பத்திரமாக இருந்து, மீண்டும் கழக ஆட்சி வந்த பிறகு தான், அந்தப் பெட்டியே திறக்கப்பட்டு, - ஒரு வேளை பெட்டியிலே என்ன இருக்குமோ என்று பயந்து யாரும் திறக்காமல் இருந்த காரணத்தால், துணிந்து நமது பொன்முடி இராஜாஜி மருத்துவ மனைக்கு வந்து பெட்டியைத் திறக்கச் சொல்லிப் பார்த்தால், அதிலே அந்த உயர்ந்த ரகக் கருவி பதுங்கிக் கொண்டிருக்கிற ரகசியம் குறித்து அந்தக் கருவியை இயக்குவதற்குத் தேவையான கட்டடத்தை அமைக்க வேண்டும் என்று முடிவு எடுத்து பொதுப்பணித்துறையின் மூலமாகத் தம்பி துரைமுருகன் மூலமாக விரைவாக அந்தப் பணி நடைபெற வேண்டும் என்று ஊக்கப்படுத்திய அமைச்சர் பொன். முத்துராமலிங்கத்தினுடைய அந்தத் தூண்டுதலோடு, அந்தப்பணி முடிவுற்றது. இன்றைக்கு இந்த விழா இங்கே இனிது நிறைவேறி இருக்கிறது.

"மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய் மருத்துவச் சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு ஆணை ஒன்று வெளியிடப் பட்டுள்ளது என்பதை அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தில் இருக்கின்ற அரசு பொது மருத்துவமனையில் முதலமைச்சர் நிதியிலிருந்து அங்கே இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக ஒரு கோடி ரூபாய் தரப்பட்டது என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்குப்பிறகு சிறுநீரகச் சிகிச்சைக்காக இரண்டு கோடி ரூபாய் பெறப்பட்டு அதற்கான கருவிகள் வாங்கப்படுவதையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

அண்மையில் நடைபெற்ற நரம்பியல் துறை 40-வது ஆண்டு விழாவில் சென்னைப் பொது மருத்துவமனையில் நடைபெற்ற விழாவில் நரம்பியல் நிலையத்துக்கு மேலும் சில வசதிகளைச் செய்ய முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன். வசதி படைத்தவர்கள் பெரிய பெரிய மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைகளைச் செய்து கொள்ள முடியும். ஏழைகள் எங்கே போவார்கள்? எனவே தான் அவர்களுக்காக இந்த ஏற்பாடு.

இந்த நிகழ்ச்சியில் பொன். முத்துராமலிங்கம் மூன்று கோரிக்கைகள் வைத்தார். மூன்றில் இரண்டை உடனடியாக நிறைவேற்ற முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் கோரிக்கை Mobile Canary Care Unit for Government Rajaji Hospital என்பதாகும். அதற்கு இரண்டு வேன்கள் தேவை என்று சொன்னார். அந்தக் கோரிக்கை ஏற்கப்படுகிறது. விரைவில் அந்த வேன்கள் இந்த மருத்துவமனைக்கு அளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றொன்று, அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று சொன்னார். அங்கீகாரம் அளிக்கச் செலவு எதுவும் இல்லை. எனவே G.O FOR RECOGNITION OF CARDIOLOGY UNIT IN GOVERNMENT RAJAJI HOSPITAL OF INSTITUTE OF CARDIOLOGY AND PERMISSION TO START D.M. CARDIOLOGY COURSE என்ற அந்தக் கோரிக்கையும் ஏற்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

"கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்" கேட்டவைகளைக் கொடுத்திருக்கிறேன். எங்களுடைய ஆட்சி கழக ஆட்சி, தேர்தல் நேரத்திலே நாங்கள் சொன்னது-

"சொல்வதைச் செய்வோம்;
செய்வதைச் சொல்வோம்"

என்பதுதான். சில நேரங்களில் சொல்லாததையும் நல்லவைகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

அதைப் போல, இங்கே கேட்காத ஒன்றையும் நான் தர இருக்கிறேன் இப்போது. சென்னை மாநகரத்திலே இருக்கிற பொது மருத்துவமனைக்கு ஏழைகள் இலவசமாக இருதய சிகிச்சை பெற ஒரு கோடி ரூபாய்க்குக் கருவிகள் வாங்க முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கியிருக்கிறேன்.



இங்கே இப்பொழுது தொடங்கி வைக்கப் படுகின்ற இந்தக் கருவி இருதயத்திலே என்ன நோய் என்பதைக் கண்டறிகின்ற கருவியாகும். கண்டறிந்தவுடன் அதற்கு 'பை-பாஸ் சர்ஜரி' போன்ற சிகிச்சைகள் செய்யக் கருவிகள் தேவைப்படும். நான் இங்கே உள்ள மருத்துவ மனை உயர் அதிகாரிகளை அழைத்துக் கேட்டேன். அப்படிப்பட்ட கருவி வாங்க எவ்வளவு தேவைப் படும் என்று கேட்டேன். 40 இலட்ச ரூபாய் தேவைப்படும் என்று சொன்னார்கள்.

முதலமைச்சர் நிதியிலிருந்து 40 இலட்ச ரூபாய் இராஜாஜி மருத்துவமனைக்கு அந்தக் கருவி வாங்குவதற்கு வழங்கப்படும் என்பதை எடுத்துக்கூறி, இந்த இனிய விழாவில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ந்து விடை பெறுகிறேன்.

***— மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் 28.11.90-இல் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதிலிருந்து.***



# நாட்டுப் பற்றும் நன்றிக் கடனும்

*மாண்புமிகு கல்வியமைச்சர்*

**பேராசிரியர் க. அன்பழகன்**

**நமது தாய்த் திருநாட்டின் உரிமை காக்கப் போரில் உயிர் நீத்த வீரர்கள், விழுப்புண் எய்தி வீடு திரும்பிய வீரர்கள், நீண்டகால சேவையாற்றி வீடு திரும்பிய வீரர்கள், அல்லும் பகலும் அயராது தங்கள் இன்னுயிரையும் பணயம் வைத்துப் பணிபுரியும் படை வீரர்கள் ஆகிய அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து போற்றி, அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நன்றிக் கடன் ஆற்றும் நாளாகக் கொடி நாளினை டிசம்பர் திங்கள் 7-ஆம் நாளன்று ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம்.**

**தமிழ்நாடு கொடிநாள் அமைப்புக்குழு நிர்ணயித்திடும் இலக்கிற்கும் மேலாக தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்துபெருநிதியை வாரிவழங்கிடும் நற்செயல் நன்றிக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது.**

நமது பரந்த நாட்டின் விரிந்த எல்லைகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி, இயற்கையின் சீற்றத்தால் மக்கள் அவதியுறும்போது அவர்களின் துயர்துடைக்கும் பணியிலும் நமது முப்படை வீரர்கள் அரும்பணியாற்றி வருவதை மறுக்க இயலாது. நாட்டினுள் கலவரங்கள் ஏற்பட்ட போது அரசுக்கு உதவி, மக்கள் நல்வாழ்வுக்கும் அமைதிக்கும் துணையாகி உள்ளனர்.

இவ்வாறு நாடுகாக்கும் பணியில் ஈடுபட்டு, உயிர்த் தியாகம் செய்தவர்களின் குடும்பத்திற்கும், விழுப்புண் பெற்று வீடு திரும்பிய வீரர்களுக்கும், நிகரில்லாச் சேவை செய்து திரும்பிய முன்னாள் படைவீரர்களுக்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும் நல்வாழ்வினை அளித்திடுவது நமது தலையாய கடமையாகுறது. இக்கொடி நாளில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைத் தொகை,



**படையினர் முதியோர் ஓய்வு இல்லம் ஒன்று வேலூரில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலையத்தினை முதலில் ஏற்படுத்திய மாநிலம் தமிழ்நாடு.**

அவர்கட்குப் பலவகைகளில் உதவி அளித்திடப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மத்திய அரசும்; மாநில அரசும் பல்வேறு சலுகைகளை இம் மாவீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கி வருகின்றன.

மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கொடி நாள் அமைப்புக் குழு நிர்ணயித்திடும் இலக்கிற்கும் மேலாக, தமிழ்நாடு மக்கள் தொடர்ந்து பெரு நிதியை வாரி வழங்கிடும் நற்செயல், நன்றிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இதனை மத்திய அரசு கண்ணுற்று 1985-ஆம் ஆண்டிற்கு அதிக அளவு நன்கொடை பெற்ற மாநிலமாகிய தமிழ் நாட்டிற்கு அகில இந்தியக் கோப்பையை வழங்கினர். 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்கும் இக்கோப்பையைத் தமிழ்நாட்டு மக்கள் தம்வசம் தக்க வைத்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது மட்டுமின்றி, மக்கள் தொகையையும், வருவாயையும் கணக்கில் கொண்டு அதிக அளவில் நன்கொடை பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு, அதற்குரிய பாராட்டுக் கோப்பையையும் தமிழ்நாட்டு மக்கள் தம்வசம் தக்க வைத்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது மட்டுமின்றி, மக்கள் தொகையையும், வருவாயையும் கணக்கில் கொண்டு அதிக அளவில் நன்கொடை பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு, அதற்குரிய பாராட்டுக் கோப்பையையும் 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. ரூபாய் 102 இலட்சம் அளவு நிதி வழங்கி இப்பெருமையைப் பெற்றது தமிழ்நாடு. 1988-ஆம் ஆண்டிலும் இக்கோப்பைகளைத் தமிழகமே தக்க வைத்துக் கொண்டுள்ளது பெருமிதம் அளிக்கிறது.

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகத் திரட்டப்படும் இந்நிதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியில் சேர்க்கப்பட்டு, அவர்தம் மேம்பாடு குறித்த பல்வேறு நலப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை இவ்வாறு திரட்டப்படும் நிதியைக் காத்து, அதைச் செலவிடுவதற்குக் கொள்கை வகுத்து, திட்டங்கள் தீட்டி, அவற்றைச் செயல்படுத்தி, முன்னாள் படைவீரர்களும், அவரைச் சார்ந்தோரும் பயனடைய வழிகோலுகிறது.

தமிழகத்தில் முன்னாள் படைவீரர் நலன் பேணுவதற்காக முன்னாள் படைவீரர் நலத்துறை ஒன்று செயல்பட்டு வருகிறது. முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மூலமாகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அகில இந்திய அளவில் பாராட்டுப் பெற்றுள்ளன. கொடிநாள் நிதி மற்றும் முன்னாள் படைவீரர் நலநிதி இவைகள் அன்றி, மேதகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒருங்கிணைந்த தொகுப்பு நிதி என்ற நிதியும் அவர் தம் நலனுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

படையினர் முதியோர் ஓய்வு இல்லம் ஒன்று வேலூரில் அமைக்கப்பட்டுள்ளது, இத்தகைய நிலையத்தினை முதலில் ஏற்படுத்திய மாநிலம் தமிழ்நாடு. 1964-ஆம் ஆண்டிற்கு முன் படைப் பணியிலிருந்து ஓய்வு பெற்று இறந்த படைவீரர்களின் மனைவியருக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மாதாந்திர நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்தது தமிழ்நாடு. முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு மட்டுமின்றித் தொழிற்சாலைகள் அமைத்து வேலை வாய்ப்பு உருவாக்க வழி செய்வதற்காகத் "தமிழ்நாடு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம்" ஒன்றினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு. சுயதொழில் தொடங்குவதற்காக வங்கிகளிலிருந்து முன்னாள் படைவீரர் பெறும் கடன்களுக்குரிய வட்டிக்காக மான்யத் தொகை வழங்கும் திட்டத்தினை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடே. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலனுக்காகப் பல ஒதுக்கீடுகளை மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் நிர்ணயித்திருப்பினும், இவற்றின் பயன்பாட்டினைக் கண்காணிப்பதற்காக ஒரு உயர்மட்டக் குழுவினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு.

பெற்ற சுதந்திரத்தினைக் காத்திட்ட முன்னாள் படைவீரர்களை மதித்துச் சிறப்பிக்கும் வகையில், சென்னையில் மேதகு ஆளுநர் அவர்களாலும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், கொடி நாள் அன்று, முன்னாள் படைவீரர்களைத் தேநீர் விருந்திற்கு அழைத்துப் பாராட்டுவதை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடு. முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர் தம் குறைகளை மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில், மாவட்ட ஆட்சியர்கள் நேரில் கேட்டு, அவர்களின் குறைகளை விரைவில் தீர்த்திடும் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளதும் தமிழ்நாடே ஆகும். சிறுநீரக மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றிற்கு முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி அளித்திடும் திட்டத்தினை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடாகும். இவ்வாறு நலத் திட்டங்கள் பலவற்றை நடைமுறையில் செயல்படுத்தியது தமிழ்நாடு என்று பெருமைப்படலாம்.

1989-இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலிலும், பின்னர் நடந்த பாராளுமன்றத்

காவலர்களாக நன்முறையில் பணியாற்றியுள்ளனர். அவாதம் சேவை அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

ஆதரவற்ற நிலையில் உள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவைகள், வேலை ஏதும் செய்ய இயலாத முன்னாள் படைவீரர்கள், கண்பார்வையற்றவர்கள், தொழுநோயால் மற்றும் புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் இவர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கப்படுகிறது. தற்போது 325 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் ஆண்டு ஒன்றிற்கு ரூ.3.77 இலட்சம் அளவு உதவி பெற்று வருகின்றனர்.

சிறுதொழில் செய்து வருமானம் பெற்றுக் குடும்பத்தினைக் காக்கும் முன்னாள் படைவீரர்களுக்கும், விதவைகளுக்கும் தொழில் தொடங்க மானியமாக ரூ.4.03 இலட்சம் உதவி செய்யப்பட்டு, 581 பேர் பயன் பெற்றுள்ளனர்.

முன்னாள் படைவீரர்களைச் சுயவேலை வாய்ப்பிற்குத் தயார்ப்படுத்தும் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்குச் சிறுதொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரசு வேலை வாய்ப்புத் துறையில் முன்னாள் படைவீரர்களுக்கு என ஒதுக்கீடுகள் இருப்பினும் பாவருக்கும் அரசு வேலை வாய்ப்பு அளிப்பது, நடைமுறையில் சாத்தியமல்ல என்பதைக் கருத்தில் கொண்டு, சுயவேலை வாய்ப்புக்குப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வங்கி மூலம் கடன் பெறுவோருக்கு வட்டிக்காக மானியத் தொகை வழங்குதல்; தமிழ்நாடு பொருள் முதலீட்டுக் கழகம் மூலமாகச் செயல்படுத்தப்படும் "செம்பெக்ஸ்" திட்டத்தின் கீழ் ரூ.12/- இலட்சம் வரை தொழில் தொடங்கக் கடன் உதவி பெற உதவுதல்; கடன்பெற இயலாத முதியோருக்கும், கைம்பெண்களுக்கும் மொத்த மானிய உதவித் தொகை வழங்குதல்; பெட்டிக் கடைகள் அமைத்துக் கொடுத்தல்; தையற் பயிற்சி அளித்து மானிய விலையில் தையல் இயந்திரம் அளித்து அதன் மூலம் வருவாய் ஈட்டிட வழி செய்தல் போன்ற திட்டங்களும் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்பான தொழில்களுக்குக் கடன் உதவி அளித்திடும் புதிய திட்டம் செயற்பாட்டு நிலையில் உள்ளது. இதுவன்றி- கோழி வளர்ப்பு, பால்பண்ணை வைத்தல், சைக்கிள் பழுதுபார்த்தல், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல், வெல்டிங் போன்ற சிறு தொழில்கள் செய்வதற்குப் பயிற்சியும் தொழில் தொடங்க மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.3000/- வரை உதவித் தொகையும் அளிக்கும் திட்டம் வடார்க்காடு-அம்பேத்கர், தருமபுரி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் செயல்பட்டு வருவதுடன், நடப்பு நிதியாண்டில் மதுரை மாவட்டத்திற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.



**முன்னாள் படைவீரர்களுக்கான நலத் திட்டங்கள் பலவற்றை முதலில் செயல்படுத்திய மாநிலம் என்ற பெருமையைப் பெற்றது தமிழ்நாடு.**

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 305 ஜெய் ஜவான்ஸ் கடைகள் அமைக்கப்பட்டு தகுதியுள்ள விதவைகள்/ஊனமுற்றோர் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் இராணுவத்தினரின் விதவைகள் மனைவி மகளிருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மாவட்டந்தோறும் 30 பேர் பயிலும்படியான தையற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை இப்பயிற்சி நிலையங்கள் மூலமாக 6,206 மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர். 553 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சி பெறுவோருக்கு உதவிப் பணமும், பயிற்சிப் பொருள்களும் வழங்கிய வகையில் ரூ.4.31 இலட்சம் இவ்வாண்டில் செலவிடப்பட்டது. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் துறையில் பயிற்சி அளிப்பதற்காக இரண்டு பயிற்சிப் பள்ளிகள், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவிலில் செயல்பட்டு வருகின்றன. இதுவரை 1,445 பேர் பயிற்சி பெற்றதோடு இப்பொழுது 170 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு உதவிப்பணம், எழுது பொருட்கள் வழங்கிய வகையில் ரூ.25,000/- அளவு இவ்வாண்டில் செலவிடப்பட்டது.

கொடி நாள் நிதியிலிருந்து 47 விழுக்காடும், அரசு நிதியில் இருந்து 53 விழுக்காடும் அளித்து, தாலுக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கென 12 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காக ரூ.10 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியில் இருந்து பங்களிப்பாகச் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர் நல நிதியின் வருமானத்தைப் பெருக்கவும், அதன் மூலம் அளிக்கப்பட்டு வரும் நல உதவிகள் பெருகிட வழி செய்யவும், ஜவான்ஸ் பவன்கள்-படைவீரர் மாளிகை கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், வடார்க்காடு-அம்பேத்கர், கோவை, மதுரை மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் ரூ. 73 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகை கட்டப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தென்னார்க்காடு மாவட்டம் கடலூரிலும், செங்கை-அண்ணா மாவட்டம்-சைதையிலும், பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டம்- சிவகங்கையிலும், முன்னாள் படைவீரர் மையங்கள் இவ்வாண்டு கட்டி முடிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. முன்னாள் படைவீரர்களின் தேவையினைக் கருத்திற்கொண்டு, திருச்சி முன்னாள் படைவீரர் மையத்தில் 6 அறைகள் கட்டப்பட்டன. மதுரை மாவட்ட மையத்தில் விருந்தினர் அறையும் கட்டப்பட்டுள்ளது. கொடைக்கானலில் முன்னாள் படைவீரர்கள் குறைந்த வாடகையில் தங்கும் பொருட்டு ரூ.5.70 இலட்சம் செலவில் ஒரு கட்டிடம் கட்டி முடிக்கும் நிலையில் உள்ளது. திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ.27 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகை கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ரூ.37 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகை கட்டுமானப் பணி துவங்கப்படஇருக்கிறது. பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் விரைவில் துவங்கப்பட உள்ளதுடன் ஏனைய மாவட்டங்களிலும் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முன்னாள் படைவீரர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்களை வேலையில் அமர்த்திட ஏதுவாகப் பெயர்ப் பட்டியல் தேர்ந்து அனுப்பிட முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் "சிறப்பு வேலை வாய்ப்புப் பிரிவு" அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சென்ற ஆண்டில் மட்டும் 892 முன்னாள் படைவீரர்கள் மத்திய மற்றும் மாநில அரசுப் பணிகளில் இடம் பெற்றுள்ளனர். இதுவரை 8467 முன்னாள் படைவீரர்கள் இத்துறையின் மூலம் பணியமாத்தப்பட்டுள்ளனர்.

**முன்னாள் படைவீரர் நலநிதியின் வருமானத்தைப் பெருக்கவும், அதன்மூலம் அளிக்கப்பட்டு வரும் நல உதவிகள் பெருகிட வழி செய்யவும், படைவீரர் மாளிகைகள் கட்டப்படுகின்றன.**

வங்கித் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் வெற்றி வாய்ப்பு பெருகிட முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் திட்டமும் நடத்தப்படுகிறது. சென்ற ஆண்டு 200 முன்னாள் படைவீரர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி உதவித் தொகையாக ரூ.14,077/- வழங்கப்பட்டது. முன்னாள் படைவீரர்களைச் சார்ந்த பெண்டிருக்குத் தோல் ஆடைகள் தைக்கும் பயிற்சியும், தொலைக்காட்சி மற்றும் வானொலி பழுதுபார்க்கும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சுயதொழில் துவங்க முனைவோருக்குத் தொழிற்பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் 26 முன்னாள் படைவீரர்களுக்கு ஆறு வார காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. கம்ப்யூட்டர் பயிற்சி 50 நபர்களுக்கு, சென்னை, கோவை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் அளிக்கப்பட்டு வருகிறது.

ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்குக் கீழ் உள்ள முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்குப் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வருமான வரம்பிற்குள் வரும்



## அணையா விளக்கு

பைந்தமிழ்த் தேர்ப் பாகன் அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை;
குவிக்கும் கவிதைக் குயில்; இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு;
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை யூற்றாம் கதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்!

— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

முன்னாள் படைவீரர்களுக்கு நல நிதிகளிலிருந்தும், தொகுப்பு நிதிகளிலிருந்தும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகின்றது. இவ்வாண்டு 1877 முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் ரூ 3.27 இலட்சம் அளவிற்கு உதவி நிதி பெற்றுள்ளனர்.

முன்னாள் படைவீரர்களுக்கும், விதவையருக்கும் தமது ஒரு மகளின் திருமணச் செலவிற்கு நல நிதியிலிருந்து ரூ.1000/- வழங்கப்படுகிறது. இதன் மூலம் இவ்வாண்டு 964 முன்னாள் படைவீரர் குடும்பத்தார் பயனடைந்துள்ளனர்.

நல நிதியிலிருந்தும், தொகுப்பு நிதியிலிருந்தும் இவ்வாண்டு பல்வேறு உதவித் திட்டங்கட்கும், கட்டுமானப் பணிகளுக்கும் ரூ.86.23 இலட்சம் செலவிடப்பட்டது. இதன் மூலம் 11,011 பேர் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் என்ற நிறுவனம் ரூ.25 இலட்சம் முதலீட்டில் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் அதிக அளவில் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச்

சார்ந்தோருக்கும் சீருந்துகள் மற்றும் சைக்கிள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் திட்டம், பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டு விற்பனை செய்யும் திட்டம், மின்னணு/தொலைத் தொடர்பு நிர்வகிக்கும் திட்டம், ஆகிய திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகின்றது.

சுயதொழில் துவங்க முனைவோருக்கு, இடத்தின் விலையில் 25 விழுக்காடு அல்லது ரூ. 25000/- உதவித்தொகை அளித்தல், இந்திய அமைதிப்படை மற்றும் மெகதூத் சண்டைகளின்போது இறந்த படைவீரர்களின் குடும்பங்களுக்கும், போரில் உயிரிழந்தோரின் விதவைகளுக்கான அனைத்துச் சலுகைகளையும் வழங்குதல்; இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்து ஆதரவற்ற நிலையில் இருக்கும் முன்னாள் படைவீரர்கள் விதவைகளுக்கு ஆயுட்கால உதவிப் பணமாக மாதம் ரூ.150/- வழங்குதல், வட்டி மான்யம் பெறுவதற்கான வரம்புத் தொகை ரூ.50,000/- என்பதை, ரூ. 75,000/- என உயர்த்துதல்; வணிகவியல் துறைகளில் பயிற்சி பெறுவோருக்கு வழங்கும் உதவித் தொகையை ரூ.120/- லிருந்து ரூ.240/- என உயர்த்துதல்; முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்குக் கலைத்தொழில் கல்லூரிகளில் 4 இடங்கள் ஒதுக்கியதுடன், பொறியியல் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டு இருந்த 11 இடங்களை. 18 இடங்களாக உயர்த்தி வழங்கல் முதலான புதிய சலுகைகள் இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்ககத்தின் மூலம் வயது வந்தோருக்கு எழுத்தறிவு புகட்டும் பணியில் முன்னாள் படைவீரரும், அவர்களைச் சார்ந்தோருமான 1543 பேர் ஈடுபடுத்தப் பட்டனர். அவர்களது பணி தேசீய அளவில் பாராட்டப்பட்டது.

பொதுமக்கள் வாரி வழங்கும் கொடி நாள் நிதி மூலம் இவ்வாறு நலத் திட்டங்கள் பல செயல்படுத்தப்படுகின்றன. படைவீரர்களின் ஒப்புயர்வற்ற சேவையை நாம் கொடுக்கும் பணத்தால் மட்டுமே ஈடுகட்டிவிட முடியாதென்றாலும், இந்தக் கொடி நாள் மக்கள் நன்றி செலுத்த ஒரு பொன்னான வாய்ப்பு ஆவதை எண்ணி, நம்மால் இயன்றளவு பொருளை வாரி வழங்கி நமது நாட்டுப் பற்றினைப் புலப்படுத்துவதோடு நமது நன்றிக் கடனையும் தவறாது செலுத்திட வேண்டுகிறேன். நன்றி உணர்வில் தமிழகத்தின் வரலாற்றுப் பெருமையை அனைவரும் ஒன்று சேர்ந்து நிலைநாட்டுவோமாக.

*வாழ்க நம் படைவீரர்! வெல்க அவர்தம் வீரம்!*

*(7.12.90 அன்று கொடிநாள் விழாவையொட்டி சென்னை வானொலியில் ஆற்றிய உரை)*

## விருதுகள் பெறும் இராணுவ வீரர்களுக்கு தமிழக அரசு வழங்கும் ரொக்கப்பரிசு

'தீரச்செயல் புரிந்ததற்காக விருதுகள் பெறும் இராணுவ வீரர்களுக்கு, தமிழக அரசு வழங்குகிற ரொக்கப் பரிசை உயர்த்திட உத்தரவிட்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் செயல், மற்ற மாநிலங்களுக்கு - வழிகாட்டுவதாகும்' என இந்திய இராணுவத் தலைமைத் தளபதி திரு. எஸ்.எப். ரோட்ரிகோஸ் அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கூறியுள்ளார்.

வீரச் செயல்களுக்காக இராணுவத்தில் பணியாற்றுபவர்களுக்கு - பரமவீரசக்ரா, அசோக் சக்ரா, மகாவீர்சக்ரா, கீர்த்திசக்ரா, வீரசக்ரா, சௌரிய சக்ரா, சேனா, நவசேனா, வாயு சேனா போன்ற விருதுகள் வழங்கப்படுகின்றன.

இத்தகைய விருதுகள் பெற்றவர்களுக்குத் தமிழ்நாடு அரசு ரொக்கப்பரிசு வழங்கிப் பாராட்டி உற்சாகப்படுத்தி வந்தது. இவ்வாறு வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகையைத் தமிழக அரசு இப்பொழுது உயர்த்தியுள்ளது. மேலும் விஜிஸ்ட் சேவா பதக்கம், யுதசேவா பதக்கம் பெற்றோருக்கும் இத்தகைய ரொக்கப் பரிசுகளை வழங்குவது என அறிவித்துள்ளது.

தமிழக அரசின் இந்த நடவடிக்கையைப் பாராட்டி, இராணுவத் தலைமைத் தளபதி திரு. எஸ்.எப். ரோட்ரிகோஸ் அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''தீரச் செயல்களுக்கான விருது பெறுவோருக்கு மாநில அரசு வழங்கும் ரொக்கப் பரிசுக்கான தொகையை உயர்த்த வேண்டும் என்ற எங்களுடைய வேண்டுகோளை ஏற்று உடன்பாடான முடிவினை அறிவித்த உங்களுக்கு நான் நன்றி உடையவனாக இருக்கிறேன்.

''மற்ற விருது பெற்றோருக்கு ரொக்கப் பரிசு வழங்குவது போல, விஜிஸ்ட் சேவா, யுத சேவா பதக்கம் பெற்றோருக்கும் நீங்கள் இப்பொழுது ரொக்கப் பரிசு வழங்குவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

''தங்களுடைய இந்தச் செயல் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. உங்களுடைய இந்த நடவடிக்கை, இராணுவத்தில் அனைத்து மட்டங்களிலும் பணிபுரிகின்ற தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களிடையே தார்மீகமான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.''





# ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை திறப்பு விழா

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள 'ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை'யை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னையில், 23.11.90 அன்று திறந்துவைத்தார்.

சென்னையில் - காமராசர் சாலை, சாந்தோமில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு கைத்தறி மற்றும் குடிசைப் பகுதி மாற்று வாரியத் துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் தலைமை தாங்கினார்.

வாரியத் தலைவர் திரு. பி.சி. சிரியாக் வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவில்- ஜெய்பிரகாஷ் நாராயண் அவர்களின் நண்பர் திரு. ஷோபாகாந்த் தாஸ், திரு. டி.ஆர்.பாலு எம்.பி., திரு.என். கணபதி எம்.எல்.ஏ., திரு.எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ., திரு. திரிபாதி இ.ஆ.ப., ஆகியோர் பேசினர். மாசுக்கட்டுப்பாடு வாரியத் தலைவர் திரு. பி.எம். பெல்லியப்பாவும் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

'ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகையைத்' திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''குடிசை மாற்று வாரிய வீடுகளைச் சென்னை மாநகரத்தில் அமைக்கின்ற பணியை 1970-ஆம் ஆண்டில் தொடங்கியபோது, அதன் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அருமைச் சகோதரர் அரங்கண்ணல் அவர்கள் தம் இடைவிடாத முயற்சியின் காரணமாகச் சென்னை மாநகரத்தில் ஆயிரக் கணக்கான குடிசைவாசிகளுக்கு அடுக்கு மாடி வீடுகளைக் கட்டுகின்ற பணியிலே வெற்றி பெற்றார்.

அப்படிக் கட்டப்பட்ட பகுதிகளிலே ஒன்றுதான் கோட்டூர்புரம். அந்த கோட்டூர்புரத்திலே உள்ள புதிய குடிசை மாற்று வாரிய வீடுகளைத் திறந்து வைக்கின்ற பெரும் வைபவத்திற்கு அன்றைய தினம் லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் வரவேண்டும் என்று விரும்பினோம். அவரும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அந்த நிகழ்ச்சிக்கு வந்து சிறப்பித்தார். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற கழக அரசின் -. அறிஞர் அண்ணாவின் தாரக மந்திரத்தை நாங்கள் எந்த அளவிற்கு நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த ஜெயப்பிரகாஷ் அவர்கள், பெரிதும் பாராட்டி 'இந்த முயற்சிகள் தமிழகத்திலே தொடரட்டும்' என்று குறிப்பிட்டார்.

### 50,000 குடியிருப்புகள்

குடிசைப் பகுதிகளுக்கு முதன் முதலாக அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித்தந்து, 'குடிசை மேம்பாட்டுத் திட்டம்' வேறு, குடிசைகளை அகற்றி அதற்குப் பதிலாக மாற்றுத் திட்டமாக மாடி வீடுகளைக் கட்டித்தருகின்ற திட்டம் வேறு, என்பதை உணர்த்திய பெருமை இந்தியாவிலேயே தமிழ்நாட்டு அரசுக்குத்தான் உண்டு.

'Slum Improvement Scheme - இதுதான் முன்பெல்லாம் இருந்தது. குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவது. குடிசைகள் இருக்கும்; அங்கே பாதைகள் அமைக்கப்படும்; கழிப்பிடங்கள் அமைக்கப்படும்; விளக்கு வசதிகள் செய்து தரப்படும்; சுகாதார நலம் பேணப்படும். இதுதான் 'Slum Improvement Scheme'. குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டம். இது போதாது. இதற்கு மாறாகக் குடிசைகளையே அகற்றிவிட்டு, குடிசைகள் இருந்த இடத்தில்- அதுவும் அந்தக் குடிசைவாசிகள் விரும்புகிற இடத்தில், அவர்களை ஒப்பவைத்து, அவர்களுக்கு வசதியான இடத்தில் குடிசைமாற்று வாரிய வீடுகளை அமைப்பதென்றும், அதற்கொரு குறைந்த வாடகையை நிர்ணயிப்பதென்றும் திட்டமிட்டு, 1970-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட

அந்த முயற்சியின் காரணமாக ஏறத்தாழ ஐம்பதாயிரம் குடியிருப்புகள் இன்றைக்குக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

மூன்று ஆண்டுக்காலத்திலே பனிரெண்டாயிரம் குடியிருப்புகளைக் கட்ட வேண்டுமென்று கடந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நான் குறிப்பிட்டு, அதிலே முதற்கட்டமாக இந்த நடப்பாண்டில் மூவாயிரம் வீடுகள் கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு அவைகள் முடிவடையும் தறுவாயிலே இருக்கின்றன.

இடையிலே ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுக் காலம் ஏற்கெனவே கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதடைந்து, இடையிலே இருந்த ஆட்சியில் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

மீண்டும் 1989-இல் ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டபிறகு, இந்தப் பழுதடைந்த வீடுகளையெல்லாம் பழுது பார்க்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தை வகுத்து, அதற்காகக் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த வீடுகள் எல்லாம் இன்றைக்குப்பழுது பார்க்கப்பட்டு வருகின்றன.

அப்படிப் பழுது பார்க்கப்பட்டு வருகின்ற வீடுகள் மாத்திரமல்லாமல், புதிதாகக் கட்டப்படுகின்ற வீடுகளையும் குடியிருக்கின்றவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்கின்ற ஒரு திட்டத்தை நாங்கள் பரிசீலித்து அதுபற்றி விளம்பரங்கள் செய்து மக்களுக்கு அறிவித்திருக்கிறோம். ஆங்காங்கு இருக்கின்ற குடிசைவாழ் மக்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவாக எடுத்துச் சொல்லி வருகின்றோம்.

71-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மாதம் ஐம்பது ரூபாய் வீதம் பத்தாண்டுக்காலம் பணம் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

71-முதல் மார்ச் 75-ஆம் ஆண்டு முடிய கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மாதம் எழுபத்தி ஐந்து ரூபாய் பத்தாண்டுகளுக்குப் பணம் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

75-முதல் மார்ச் 80 முடிய கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மாதம் நூறு ரூபாய் செலுத்தினால் அப்படி பதினைந்தாண்டுகளுக்குச் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

80-ஆம் ஆண்டு முதல் மார்ச் 90 முடிய கட்டப்பட்ட வீடுகளுக்கு மாதம் நூற்றி இருபத்தைந்து ரூபாய் வீதம் பதினைந்தாண்டுகள் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றது. ஏப்ரல் 90 முதல் கட்டப்பட்ட அல்லது கட்டப்படுகின்ற வீடுகளுக்கு மாதம் நூற்றி ஐம்பது ரூபாய் வீதம் இருபதாண்டுகளுக்குச் செலுத்தினால், அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

நகர்ப்புறத்திலே மாத்திரம் அல்லாமல் கிராமங்களிலே இந்த அரசு ஒரு புதிய திட்டத்தை அறிவித்து, கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்கள் வீட்டு வசதியைப் பெற வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே இருந்த திட்டத்தின்படி ஆயிரத்து ஐநூறு ரூபாய் அவர்களுக்கு மானியம் வழங்கப்படுமென்று இருந்தது. அதுதவிர அவர்களுக்கு ஏழாயிரம் ரூபாய் கடன் தரப்படும் என்று இருந்தது. அதைத் தவணை முறையிலே செலுத்த வேண்டும் என்று இருந்தது. ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் பணத்தையோ அல்லது தங்களுடைய உழைப்பையோ தரவேண்டும் என்று இருந்தது.



★ ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாகத் தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரராவது சாலச் சிறந்ததாகும்!

அதை இப்பொழுது கடந்த சில மாதங்களுக்கு முன்பு நாங்கள் தீர சிந்தித்து இவைகளைப் பற்றியெல்லாம் மெத்தவும் அதிகமாகப் பரிசீலித்து, புள்ளி விவரங்களை ஆராய்ந்து, அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கலந்து பேசி, கிராமப் புறங்களிலே வீடு கட்டிக் கொள்ள அரசு மானியமாக இனிமேல் ஆயிரத்து ஐநூறு ரூபாய் அல்ல; ஐயாயிரம் ரூபாய் அரசு மானியமாக வழங்குவதென்றும், மூவாயிரத்து ஐநூறு ரூபாய் கடன் தருவது என்றும், அந்த மூவாயிரத்து ஐநூறு ரூபாயை மாதம் முப்பது ரூபாய் வீதம் கட்டினால் போதுமென்றும், அவர்கள் சொந்தப் பணமாக ஒரு ஆயிரத்து ஐநூறு ரூபாய் முதலீடு செய்ய வேண்டும்; அல்லது அதற்கான உழைப்பு வழங்க வேண்டுமென்றும், இப்படிப் பத்தாயிரம் ரூபாயில் கிராமங்களில் வீடுகளைக் கட்டிக் கொள்ள ஒரு திட்டத்தை அரசு அறிவித்து, அந்த முப்பது ரூபாயை மாதா மாதம் வசூலிப்பதற்காக ஏற்கெனவே ஒரு நாள் இரவு திடீரென்று விரட்டப்பட்ட, கிராமங்களிலே உள்ள கிராம அதிகாரிகளையெல்லாம் அந்தப் பணியை ஆற்றுவதற்குப் புதிதாக அவர்களுக்கு வேலையையும் தந்து, வேலை இழந்தவர்களுக்கு வேலை, வீடு இல்லாதவர்களுக்கு வீடு என்கின்ற ஒரு புதிய சிறந்த திட்டத்தைக் கிராமப்புறங்களுக்காக இந்த அரசு அறிவித்திருக்கிறது.

எனவே, இந்த அரசு மேட்டுக்குடி மக்களுக்காக அல்ல; குடிசைவாழ் மக்களுக்காக, கிராமப்புறத்து மக்களுக்காக - சாதாரண, சாமான்ய மக்களுக்காக ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடுகின்ற, சிந்திக்கின்ற, செயல்படுகின்ற அரசாக விளங்குகிறதென்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

அந்தக் காரணத்தினாலேதான் ஏழைகளுக்காகவே சிந்தித்த ஏந்தல் ஜெயப்பிரகாஷ் நாராயண் பெயரை இந்த மாளிகைக்கு நாங்கள் வைத்திருக்கின்றோம்".

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினார்.



# அகதிகள் மறுவாழ்வு

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## திரு. கே.என். நேரு



இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களாக வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலோருக்கு 1948-ஆம் ஆண்டின் இலங்கை குடியுரிமைச் சட்டப்படி வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவர்களில் சிலரின் முன்னோர் 200 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை மலைத் தோட்டங்களில் பணியாற்றச் சென்று அங்கேயே நிரந்தரமாகத் தங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்படி இருந்தும், இலங்கைத் தமிழர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதன் விளைவாக, அவர்கள் இலங்கையில் நாடற்றவர்களாக ஆனார்கள்.

### தாயகம் திரும்பியோர்

31.10.1964-ஆம் தேதிய நிலவரப்படி இலங்கையில் மொத்தம் 9.75 இலட்சம் நபர்கள் நாடற்றவர்களாக இருந்தார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தங்களின்படி 5.06 இலட்சம் இந்திய வம்சாவளியினரை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 1983 வரை 1.16 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 3.34 இலட்சம் நபர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த 1.26 இலட்சம் நபர்கள் ஆக மொத்தம் 4.60 இலட்சம் நபர்கள் இந்தியாவுக்குத் திருப்பி' அனுப்பப்பட்டனர். இவ்வாறு தாயகம் திரும்பியவர்களுக்கு, மத்திய அரசு அதன் அமைப்புகள் மூலமாகவும், பெருமளவில் தமிழக அரசின் மூலமாகவும் மறுவாழ்வளிக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரை 96,476 தாயகம் திரும்பிய குடும்பங்கள், தொழிற் கடன், தோட்டத் தொழில்களில் வேலை வாய்ப்பு, நிலக்குடியேற்றத் திட்டங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றால் பயன் அடைந்துள்ளனர்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க ஆகஸ்டு 15 விடுதலை நாளன்று முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் அனைவருக்கும் மாநில அரசு ரூ.34.32 இலட்சம் செலவில் துணிமணிகள் வழங்கியுள்ளது.**

### அகதிகள் வருகை

இலங்கையில் 1983-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஏற்பட்டு வந்த இனக்கலவரங்களினால், இந்திய வம்சாவளியினரைத் திருப்பி அனுப்புவது நிறுத்தப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் 24.7.83 முதல் அகதிகளாக இந்தியா வரத்தொடங்கினர். 15.8.89 வரை 1,34,053 நபர்கள் இந்தியா வந்துள்ளனர். அவர்களில் 39,918 ஆதரவற்ற அகதிகள் தமிழ் நாட்டில் முகாம்களில் அனுமதிக்கப்பட்டனர். எஞ்சியவர்கள் வெளியே நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களில் தங்கினர். இலங்கையில் நிலைமை சீரடைந்த போது, 24.12.87 முதல் 31.12.89 முடிய உள்ள காலத்தில், கப்பல் மூலம் 25,585 அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எஞ்சியவர்கள் சிலர் முகாம்களை விட்டுத் தன்னிச்சையாக வெளியேறினர். சிலர் அரசு உதவி இல்லாமல் இலங்கைக்கே திரும்பிச் சென்றனர். இன்னும் சிலர் இந்தியாவிலுள்ள நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களில் தங்கினர்.

### அகதிகள் மீண்டும் வருகை:

இலங்கையில் மீண்டும் இனக் கலவரம் ஏற்பட்டதால், 25.8.89

**இலங்கை அகதிகளைக் கண்ணியத் துடனும் மனிதாபிமானத்துடனும் நடத்திட அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.**

முதல அகதிகள் புதிதாக வரத் துவங்கினர். 30.6.90 முடிய அகதிகளாக வந்தவர்களின் எண்ணிக்கை மொத்தம் 4,575 மட்டுமே இருந்தது. ஆனால் 1.7.90 முதல் அகதிகள் பெருமளவில் வரத் துவங்கினர். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 6.7.90 அன்று தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், காவல்துறைச் செயலர், மறுவாழ்வு ஆணையர் ஆகியோருடன் ஆய்வு செய்து, மாவட்டங்களிலும் அகதிகளைக் குடியமர்த்த உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து இந்தத் திட்டம் புது உத்வேகம் பெற்றது. 31.10.90 முடிய 1,20,511 நபர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்து சேர்ந்தனர். அவர்களில் 1,16,228 நபர்கள் தமிழ் நாட்டில் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப் பட்டனர்.

### இலங்கை அகதிகளுக்கு உதவி

இலங்கையிலிருந்து கள்ளத் தோணிகள் மூலம் வரும் அகதிகள் பெரும்பாலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரத்திலும், சில சமயங்களில் தனுஷ்கோடியிலும் வந்திறங்கினார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம் மற்றும் வேதாரணியத்திற்கும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் சிறு சிறு குழுவினராக வந்து சேருகிறார்கள். இராமேஸ்வரம் வந்து சேரும் அகதிகள் பதிவு செய்யப்படுவதற்காக இராமேஸ்வரத்திலுள்ள வரவேற்பு மையங்களுக்குக் கொண்டு வரப் படுகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம், நாகப்பட்டினம் வரும் அகதிகள் பதிவு செய்யப்பட்டு, அம்மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அகதிகள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தவுடன் அகதிகள் முகாம்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவதற்கு முன், இராமேஸ்வரத்திலுள்ள வரவேற்பு மையத்தில் அவர்களுக்குச் சிற்றுண்டியும் உணவும் வழங்கப் படுகின்றன. வரவேற்பு மையத்தில் மறுவாழ்வுத்துறை, துறைமுகக் குடியுரிமைத்துறை, சுங்கம் மற்றும் பொது சுகாதாரத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அகதிகள் கொண்டு வந்த பொருட்களைச் சோதனை செய்கிறார்கள். இது முடிந்தவுடன், துறைமுகப் பதிவு அதிகாரி அகதிகள் வைத்திருக்கும் சான்றிதழ்களைச் சரிபார்ப்பதன் மூலமும், நேரடி விசாரணை மூலமும் அகதிகளைச் சோதனை செய்கிறார்கள். இதில் அவர்கள் ஆதரவற்ற அகதிகள்தான் என்று தெரிந்தவுடன், மறுவாழ்வுத் துறை அதிகாரிகளால் அகதிகளாகப் பதிவு செய்யப்படுகிறார்கள்.

அகதிகள் வரவேற்பு மையத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு, பல்வேறு முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இவை அனைத்தும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்பார்வையில் நடைபெறுகின்றன.

**இதுவரை 96,476 தாயகம் திரும்பிய குடும்பங்கள் தொழிற் கடன், தோட்டத் தொழில்களில் வேலைவாய்ப்பு, நிலக் குடியேற்றத் திட்டங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றால் பயன் அடைந்துள்ளனர்.**

### அகதிகளைத் தங்க வைக்கத் தகுந்த இடமின்மையைச் சமாளித்தல்

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு ஆகிய இரண்டு நிரந்தர முகாம்களைத் தவிர, கூடுதலாக 336 அகதிகள் முகாம்கள் அகதிகளைத் தங்க வைக்கும் பொருட்டு அமைக்கப் பட்டன. மதுரை மாவட்டத்தில் விளாங்குடி என்ற இடத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து வாங்கப்பட்ட 792 வீடுகள் பழுது பார்க்கப்பட்டு, அவற்றில் அகதிகள் தங்க வைக்கப்பட்டனர். ஆவடியிலுள்ள இராணுவத் தளவாடக் கிடங்கிலிருந்து 530 இராணுவக் கூடார சாதனங்கள் பெறப்பட்டு, மதுரை மாவட்டத்தில் தோப்பூர் என்ற இடத்திலும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் கும்மிடிப் பூண்டி மற்றும் புழல் ஆகிய இடங்களிலும் தற்காலிகத் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டு, அங்கு அகதிகள் தங்க வைக்கப்பட்டனர்.

அகதிகளைத் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்காகப் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள பொதுக் கட்டடங்கள், புயல் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் சேவை நிறுவனங்களைச் சேர்ந்த கட்டடங்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. அகதி முகாம்கள் அமைப்பதற்குத் தகுந்த தனியார் கட்டடங்களும் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அகதிகள் வருகை இடைவிடாமல் தொடர்ந்து இருப்பதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,000 குடிசைகள் வீதம் மொத்தம் 20,000 தற்காலிகக் குடிசைகள் அமைக்க அரசு உத்திரவிட்டுள்ளது. அவசியம் ஏற்படும் போது குடிசையைக் கட்டும் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு வசதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலும் 500 குடிசைகள் அமைக்கத் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்குமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறுகியகால முன்னறிவிப்பிலும் சில நேரங்களில் முன்னறிவிப்பே இல்லாத நேரத்திலும் அகதிகளை வரவேற்று, அவர்களைப் பல்வேறு முகாம்களில் தங்க வைப்பதில் சிறப்பான பணியாற்றினர். இது மிக மிக பாராட்டத்தக்கது.

### தேவையான உதவிகள்

அகதிகள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டவுடன் அவர்களுக்கு கீழ்க்கண்டவாறு மாதாந்திர ரொக்கப் பணம் வழங்கப்படுகிறது:

1. ஒரு நபர் குடும்பம் ரூ.150/-
2. இருவர் அடங்கிய குடும்பம் (இரு வயது வந்தோர்) ரூ.270/-
3. மூவர் அடங்கிய குடும்பம்(இரண்டு வயதுவந்தோர் மற்றும் ஒரு குழந்தை) ரூ.345/-
4. நான்கு நபர்கள் அடங்கிய குடும்பம் (இரு வயது வந்தவர் மற்றும் இரண்டு குழந்தைகள்) ரூ.382.50
5. ஐந்து நபர்கள் அடங்கிய குடும்பம் (மூன்று வயது வந்தோர் மற்றும் இரண்டு குழந்தைகள்) ரூ.502.50

முகாம்களில் அனுமதிக்கப்பட்டதும், அவர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வாங்கிக் கொள்ளக் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. மலிவு விலையில் அரிசி கிலோ 57 பைசா வீதம் நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு 400 கிராம் அளவிலும், சிறுவர்களுக்கு 200 கிராம் அளவிலும் வழங்கப்படுகின்றன. இதர அத்தியாவசியப் பொருட்களான சர்க்கரை, மண்ணெண்ணை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இவை தவிர இரண்டு ஜோடி உடைகளும், சமையல் செய்வதற்குத் தேவையான பாத்திரங்களும் மற்றும் பாய், படுக்கை விரிப்புகள் முதலியவையும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

எல்லா முகாம்களிலும் குடிநீர், மின்சாரம், மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் முடிந்தவரை செய்துதரப்பட்டுள்ளன. அவர்களுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் போடப் படுகின்றன. குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன.

### கல்வி வசதி

அகதிகளுக்குக் கல்வி வசதி அளிப்பதில் தமிழக அரசு மிகுந்த பெருந்தன்மையுடன் செயல்படுகிறது. அகதிகளுக்குக் கல்வி வசதி அளிப்பதில் இயன்ற அளவு அனைத்து உதவிகளையும் செய்வதில் மாண்புமிகு கல்வி அமைச்சர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். அகதிகள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டவுடன் பள்ளி செல்லக்கூடிய சிறுவர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்கள் அருகாமையில் உள்ள பள்ளிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அகதிச் சிறுவர்களை இலங்கை அரசின் பள்ளி மாற்றச் சான்றிதழ்கள் இல்லாமலேயே பள்ளிகளில் அனுமதிக்கவும் அரசு உத்திரவிட்டுள்ளது. சுமார் 19,000 இலங்கை அகதிக் குழந்தைகள் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்குத் தமிழ்நாட்டில் தொழில் கல்லூரிகளில் கீழ்க்கண்டவாறு இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன:



## அகதிகளுக்குக் கல்வி வசதி அளிப்பதில் தமிழக அரசு மிகுந்த பெருந்தன்மையுடன் செயல்படுகிறது.

| | | |
|---|---|---|
| மருத்துவம் (எம்.பி.பி.எஸ்.) | 20 | இடங்கள் |
| பொறியியல் | 40 | இடங்கள் |
| பாலிடெக்னிக். | 40 | இடங்கள் |
| பி.எஸ்சி (விவசாயம்) | 10 | இடங்கள் |

அகதிச் சிறுவர்களைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு கல்லூரிகள் இடங்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. அகதிகளின் சிறு குழந்தைகளைப் பால்வாடிகளில் சேர்ப்பதற்கும் குழந்தைக் காப்பகங்களில் சேர்த்து அவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**இந்தியப் பணமாக மாற்றிக்கொள்ள வசதி**

இலங்கை அகதிகள் கொண்டு வரும் இலங்கை நாட்டுப் பணத்தை இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்திலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் இந்தியன் பாங்க் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பணமாக மாற்றித் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட இலங்கை அகதிகள் தங்கள் இலங்கைப் பணத்தை இந்தியப் பணமாக மாற்றிக்கொள்ள வசதியாக இந்திய ரிசர்வ் வங்கி ஒவ்வொரு மாவட்டத் தலைமை இடத்திலும் உள்ள ஒரு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளைக்கும் அனுமதி அளித்துள்ளது. இலங்கை அகதிகள் தங்களிடமுள்ள இலங்கை நாட்டுப் பணத்தை ஒவ்வொரு வயது வந்த நபருக்கும் ரூ.2,000/- அளவு வீதம் இந்தியப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். இந்த ஏற்பாட்டினால் அகதிகள் இடைத்தரகர்களிடம் சிக்கி குறைந்த அளவு மாற்றல் பணம் பெறுவது தடுக்கப்படுகிறது.

**நகைக் கடன்**

தமிழ் நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் பயனடையும் வகையில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி நகைக்கடன் வழங்கும் திட்டத்தினைத் துவக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தங்கள் நகைகளைத் தற்காலிகமாக அடகு வைத்துக் கடன்பெற விரும்பும் அகதிகள் மண்டபம் முகாம், இராமேஸ்வரம், விளாங்குடி மற்றும் கொட்டப்பட்டு முகாம்களில் துவக்கப்பட்டுள்ள தற்காலிக வங்கிக் கிளைகளை அணுகலாம். இவ்வங்கியின் பணியாளர்கள் மற்ற முகாம்களிலும் செயலாற்றுவர். இத்திட்டத்தின் மூலம் பல்வேறு முகாம்களில் இதுவரை 151 அகதிகள் ரூ.92,500/- வரை நகைக் கடன் பெற்றுள்ளனர்.

**பிரிந்த குடும்பத்தினர் ஒன்று சேர்க்கப்பட்டனர்.**

இலங்கை அகதிகளின் திடீர் வருகை காரணமாக, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேறு வேறு முகாம்களுக்கு அனுப்பப்படும் நிலையும், யார் யார் எந்தெந்த முகாம்களில் உள்ளனர் என்பதைக் குடும்பத்தினர் அறியாத நிலையும் ஏற்பட்டன. இவ்வாறு பிரிந்த குடும்பங்களை ஒருங்கிணைக்க அரசு மனிதாபிமான முறையில் பெரும் முயற்சியுடன் ஏற்பாடு செய்துள்ளது. இப்பணியில் சேவை நிறுவனங்கள், மாநில காவல் துறையைச் சார்ந்த 'க்யு' பிராஞ்ச் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இந்த கடினமான முயற்சியில், இதுவரை 314 குடும்பங்கள் பிரிந்த தங்கள் உறவினருடன் ஒன்று சேர்க்கப்பட்டனர்

**சேவை நிறுவனங்களுக்கு நிதிஉதவி**

மாண்புமிகு முதலமைச்சரின் கருத்திற்கிணங்க, அகதிகளின் நிவாரணப் பணிகளில் மாநில அரசின் முயற்சிகளோடு, சேவை நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இச்சேவை நிறுவனங்களின் பணிகள் தமிழ்நாடு சமூகநல வாரியத்தினால் மேற்பார்வையிடப்படுகின்றன. மண்டபம், கொட்டப்பட்டு முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் பயிற்சி வசதிகளையும், பொழுதுபோக்கு வசதிகளையும் சேவை நிறுவனங்கள் மூலம் அளிக்க அரசு தமிழ்நாடு சமூக நல வாரியத்திற்கு இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து ரூ.5.50 இலட்சத்தை அளித்துள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் விடுப்புக் காலப் பயிற்சிக் கூடம் (CTVT) என்ற கல்வி நிறுவனம் மண்டபத்தில் தையல் மற்றும் எம்பிராய்டரி, தச்சுவேலை, எலெக்ரிகல் மோட்டார் ரீவைண்டிங், சைக்கிள் பழுது பார்த்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுது பார்த்தல், ஆகிய பயிற்சிகளையும், செங்கல்பட்டு முகாமில் தச்சு வேலை, வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுதுபார்த்தல் ஆகிய பயிற்சிகளையும் துவக்கி உள்ளன.

கொட்டப்பட்டு முகாமிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள புத்தூர் நற்செய்தி பயிற்சி நிறுவனம் தையல் வேலை, இரு சக்கர ஊர்தி பழுது பார்த்தல் ஆகிய பயிற்சிகளையும், சென்னையில் தங்கியுள்ள அகதிகள் பயன்பெறும் வகையில் CTVT நிறுவனம் கிண்டியில் உள்ள அதன் தொழில் நுட்ப மையம் வாயிலாக தையல் வேலை, இரு சக்கர ஊர்தி பழுது பார்த்தல், வீடுகளுக்கு மின்சார வொயரிங் செய்தல், மோட்டார் ரீவைண்டிங், வாகனங்கள் பழுது பார்த்தல் ஆகிய பயிற்சிகளையும் அளிக்கின்றன. மேலும் பால்வாடிகள், நியாய விலைக் கடைகள் துவங்கவும், பல்வேறு முகாம்களில் அகதிகளுக்குப் பொழுதுபோக்கு வசதிகள் அளிக்கவும் திட்டமிட்டுள்ளன.

சென்னையில் உள்ள பஞ்சாபிக் கழகம் முகாம்களில் இல்லாமல் வெளியே தங்கியுள்ள அகதிகள் மற்றும் தாயகம் திரும்பிய அகதிப் பெண்களுக்கு எலெக்ட்ரானிக் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுது பார்த்தல், புத்தகங்களைப் பைண்டிங் செய்தல், அச்சுக் கோர்த்தல் மற்றும் நகல் சரி பார்த்தல், தையல் கலை - 2 பிரிவுகள், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பணியில் பயிற்சி அளித்தல், புகைப்படக்கலை ஆகிய பயிற்சிகளையும் அளிக்க முன்வந்துள்ளது.

இலங்கைத் தமிழர் நிவாரண நிதியிலிருந்து ரூ.19,200/- மேற்கண்ட பயிற்சி பெறும் பெண்களுக்கு உதவித் தொகை அளிப்பதற்காக அரசு அனுமதி அளித்துள்ளது.

டிவோஷன் ஆர்டினரி பள்ளி, மகளிர் வளர்ச்சி நிறுவனம், ஸ்த்ரீ சேவா மந்திர் ஆகிய நிறுவனங்கள் ரொட்டி தயாரித்தல், செவிலியர் உதவி, கைத்தறி நெசவு, தையல் கலை மற்றும், அச்சக வேலை ஆகிய தொழில்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய் பெண்களுக்குப் பயிற்சி அளிக்க முன்வந்துள்ளன.

கிறிஸ்தவ இளைஞர் மன்றம் பல்வேறு அகதி முகாம்களில் வாசக சாலை மற்றும் உள் விளையாட்டு அரங்கம், குழந்தைக் காப்பகங்கள், தையல் கலைப் பயிற்சி வகுப்புகள் மற்றும் கல்வி போதனை வகுப்புகள் ஆகியவற்றை அமைத்துள்ளன. பிரதி மாதமும் தமிழ்த் திரைப் படங்களை வெளியிடுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் நடத்துகின்றது.

சிவகங்கை பல்முனைத்திட்ட சமூக நல சங்கம் என்ற அமைப்பு மண்டபம் முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்காக, நியாயவிலைக் கடை நடத்துதல், தையல் கலை மற்றும் எம்பிராய்டரி ஆகிய பயிற்சி வகுப்புகள், தட்டச்சுப் பயிற்சி வகுப்புகள், இருசக்கர ஊர்திகள் பழுது பார்க்கும் பயிற்சி, வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுது பார்த்தல் ஆகிய பயிற்சிகளை அளிக்கிறது.

தாயகம் திரும்பியோர் மற்றும் அகதிகள் ஒருங்கிணைப்புக் குழு மண்டபம் மற்றும் கொட்டப்பட்டு முகாம்கள், இராமேஸ்வரம் துறை முகம் ஆகிய இடங்களில் இலங்கை அகதிகளுக்காக மருத்துவ சிகிச்சை வசதியை அளிக்கும் பணியைத் துவக்கியுள்ளது.

திருச்சி மாவட்டத்திலுள்ள காஜாமலை மாதர் சங்கம் கொட்டப்பட்டு முகாமில் அகதிப் பெண்களுக்காக தையல் கலை வகுப்புகள் துவக்கியுள்ளது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டுக் கிளை, அகதிகளுக்காக பெருமளவு துணிமணிகள், படுக்கை விரிப்புகள், பால்பவுடர் மற்றும் பிஸ்கட்டுகள் ஆகியவைகளை வழங்கியது.

மேலும் இச்சங்கம் மண்டபம் முகாமிலுள்ள அகதிகளின் உபயோகத்திற்காக ஒரு ஆம்புலன்ஸ் வண்டியைத் தற்காலிகமாக வழங்கியுள்ளது. இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளைத் தலைவர் திருமதி சரோஜினி வரதப்பன் சங்கத்தில் உள்ள அனைத்து இருப்பையும் தாராளமாக இவ்வியக்ககத்திற்கு அளிக்க முன்வந்துள்ளார். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அந்தந்த மாவட்டங்களில் செயல்பட்டுவரும் ரோட்டரி மற்றும் அரிமா சங்கங்கள், ஜேசீஸ், வட்ட மேஜைக் குழுவினர், வணிகர் சங்கங்கள் மற்றும் பல்வேறு சேவை நிறுவனங்கள் ஆகியவற்றை அணுகி, இலவச துணிமணிகள், சமையல் பாத்திரங்கள், வாளிகள், மண்ணெண்ணெய் அடுப்புகள், பால், பால்ப்வுடர், படுக்கை விரிப்புகள், உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் முதலியவற்றை இலவசமாகப் பெற்றுத் தந்துள்ளனர்.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி இலங்கை அகதிக் குழந்தைகளின் மேற்படிப்பிற்காக உதவிப்பணம் வழங்கும் பொருட்டு ஒரு நிதி துவக்கியுள்ளது.

சென்னையிலுள்ள விளையாட்டுத் துறை இயக்குநர் மண்டபம் மற்றும் கொட்டப்பட்டு முகாமிலுள்ள அகதிகளுக்காக கைப்பந்து, வலை மற்றும் கால்பந்துகள் ஆகிய விளையாட்டுச் சாதனங்களை வழங்கியுள்ளார்.

**ஈழம் ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்**

இக்கழகம் செங்கை அண்ணா, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், கோவை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 59 முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்காக துணை நிவாரண உதவிகள் வழங்குகிறது. இக்கழகம் 18 முகாம்களில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளைச் செய்து தந்துள்ளது. 16 முகாம்களில் சுகாதாரப் பணி, சிகிச்சை, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தை ஈன்றெடுத்த பெண்களுக்கு சத்துணவு அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. மேலும் மண்டபம், கொட்டப்பட்டு முகாம்களில் குழந்தைகளுக்குப் பால் வழங்குகிறது; 5 முகாம்களில் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது. இக்கழகம் 56 முகாம்களில் தினசரி நாளிதழ்களையும் சஞ்சிகைகளையும் இலவசமாக வழங்குகிறது. இக்கழகம் 32 அகதி மாணவர்களுக்கு மாதாந்திர உபகாரச் சம்பளம் வழங்குகிறது. 18 முகாம்களில் 127 அகதி மாணவர்களுக்காகக்கல்விக் கட்டணம் மற்று நிதி உதவிகளையும் செய்து வருகிறது. மண்டபம் முகாமில் வாசக சாலை மற்றும் விளையாட்டுச் சங்கம் அமைப்பதற்காக, அரசு இச்சங்கத்திற்கு இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 அளித்துள்ளது.

**துறையின் பல்வேறு பிரிவுகளைக் கணிப்பொறி மயமாக்குதல்**

எழிலகம் வளாகத்தில் அமைந்துள்ள கணிப்பொறிகள் உதவியுடனும், மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய தகவல் மையங்களின் உதவியுடனும் இத்துறையின் பணிகளைக் கணிப்பொறி மயமாக்குவது துவக்கப்பட்டுள்ளது. இதுவரையில் அரசின் பல்வேறு துறைகளுக்கு அகதிகள் வருகை குறித்து தினசரி அறிக்கைகள், மற்றும் முகாம்கள் வாரியான இருவார அறிக்கை ஆகியவை கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. விரைவில் அகதிகள் குடும்பவாரியான விவரங்கள் மற்றும் முகாம் கையேடு கணிப்பொறி மூலம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் அகதிக் குடும்பங்களில் பிரிந்த நபர்களைக் கண்டுபிடித்து ஒருங்கிணைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க ஆகஸ்டு 15 விடுதலை நாளன்று முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் அனைவருக்கும் மாநில அரசு ரூ.34.32 இலட்சம் செலவில் துணிமணிகள் வழங்கியுள்ளது.

இலங்கை அகதிகளைக் கண்ணியத்துடனும் மனிதாபிமானத்துடனும் நடத்திட அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. இலங்கை இனக்கலவரம் தீர்ந்து நிலைமை சீரானவுடன் இவர்கள் அனைவரும் திரும்பச் செல்வர் என எதிர் பார்க்கப்படுகிறது.



# தமிழகத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

டாக்டர். எஸ். இராம ராகவன்,
ஆரம்பச் சுகாதார நிலையங்களின் இயக்குநர்

'கி.பி 2000-க்குள் எல்லோருக்கும் நல்வாழ்வு' என்ற இலக்கினை அடைந்திட, 1057 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்திட வேண்டும் எனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. கிராமப்புற மக்கட் தொகைப்பெருக்கத்தில் குறைவு ஏற்பட்டதன் காரணமாக மேற்கண்ட குறியீடு 950 ஆகக் குறைக்கப்பட்டது. 31.3.90-இல் உள்ளபடி இம்மாநிலத்தில் 1386 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாரம்பச் சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களுக்கு நோய்த்தடுப்பு, நல மேம்பாடு, மற்றும் நோய்ச்சிகிச்சை போன்ற வசதிகளை அளித்து வருகின்றன.

### சமுதாய நல நிலையங்கள்

மொத்தம் உள்ள 1386 ஆரம்பச் தார நிலையங்களில், 72 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களாக அல்லது சமுதாய நல நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஏற்கெனவே உள்ள 6 படுக்கை வசதிகளுடன், மேலும் 24 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு அமைக்கப்படும். கூடுதல் உபகரணங்களுடன் ஊடுகதிர்ப் பிரிவும் அமைக்கப்படும். நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கொண்ட தொகுதிக்கு ஒரு சிறப்புச் சிகிச்சை மையம் என்ற அளவில், இவை செயல்படும். விரைவில் இந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சிகிச்சை மற்றும் மருத்துவப் பரிசோதனை, ஆய்வக வசதி, இரத்த சேமிப்பு வங்கி வசதிகள் ஏற்படுத்தப்படும். 30 சமுதாயநல நிலையங்களில் ஒரு உதவி சர்ஜன் பதவி சிவில் சர்ஜன் பதவியாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

### சிறு சுகாதார நிலையங்கள்

இதுவரையில் 209 சிறு சுகாதார நிலையங்கள் கிராமப்புற மக்களுக்குக் கூட்டுறவு அடிப்படையில் தொண்டு நிறுவனங்களின் பொறுப்பில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை அளித்து வந்தன. தற்போது இச்சிறு சுகாதார நிலையங்கள் இயக்குநர், பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து, சென்னை-600 006 அவர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன.

### மருத்துவ நல நிலையங்கள்

சென்னை மாநகர அபிவிருத்தித் திட்டப் பிரிவு 2-இன் கீழ் சென்னையிலும், சுற்றுப்புறப்பகுதிகளிலும் ஏழைகளுக்கு மருத்துவ வசதி செய்யும் பொருட்டு 22 மருத்துவ நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 1386 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 562 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்கள் உள்ளன. மற்றும் 293 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் உள்ளன. 96 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் உள்ளது. 864 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்களும், 1,093 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பணியாளர் குடியிருப்புகளும் கட்டப்படவேண்டும்.

### பழங்குடியினர் நலத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 9 ஒன்றியப் பகுதிகள் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. அதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு முன்பே இவ்வொன்றியப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வந்துள்ளது. அவைகளில் ஒன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக்கப்பட்டுள்ளது.

1987-88-இல் வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், ஜவ்வாது மலையில் உள்ள நம்மியம்பட்டு கிராமத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்திட அரசு ஆணை வழங்கியது. 1987-88-இல் மேலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் தென்னார்க்காடு மாவட்டம் கல்வராயன் மலையில் உள்ள கீழ்க்காட்டில் ஏற்படுத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. இது தவிர 1.6.87-இல் இருந்து மருந்துத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 12 மருந்தகங்கள் இத்துறைக்கு மாற்றப்பட்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. சிதறுண்ட பழங்குடி மக்களுக்காகக் கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் 1988-89-இல் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

தேசீய கண்பார்வைக் குறைவுத் தடுப்புத் திட்டத்தின் கீழ் சாதாரணக் கண்நோய்களுக்குச் சிகிச்சை அளித்திடவும், கண்ணாடி வழங்கவும், பள்ளிக் குழந்தைகளுக்குக் கண்பாதுகாப்பு முறைகளை விளக்கவும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

தற்போது கண் சிகிச்சை உதவியாளர்கள் 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு கண் சிகிச்சை உதவியாளர் வீதம் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இது ஒரு 100% மத்திய உதவி பெறும் திட்டமாகும். இதற்காக மத்திய அரசு ரூ.3,000/- மதிப்புள்ள உபகரணங்களை வழங்குகின்றது. மாநில அரசு ரூ.2,000/- மதிப்புள்ள உபகரணங்களை வாங்குகிறது. இந்த 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கண் சிகிச்சை உதவியாளரும், பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலர்களும், சாதாரண கண்நோய்களுக்குச் சிகிச்சை அளித்து, கண் பரிசோதனை செய்து, மூக்குக் கண்ணாடிக்குக் குறிப்பளிக்கின்றனர். இது தவிர கண் புரை கேஸ்கள் பார்க்கப்பட்டு, அறுவைச் சிகிச்சைக்காக அருகில் உள்ள தலைமை மருத்துவமனைக்கு அல்லது நடமாடும் கண்சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்படுகின்றனர். இது தவிர பள்ளி செல்லும் குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு வைட்டமின் 'ஏ' மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது இத்திட்டத்தை மேலும் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு 1989-90-ஆம் ஆண்டிற்கு விரிவு படுத்திட அரசுக்கு கருத்துகள் அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளன.

### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படாவிட்டாலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தேவையான வசதிகள் செய்யத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதற்காக 1989-90-ஆம் ஆண்டில் அரசு ரூ.2.89 இலட்சம் செலவில் இரண்டு மகேந்திரா ஊர்திகள் வாங்கிட அரசு ஆணை வழங்கியது.





# குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடிநீர் வழங்குதுறை அமைச்சர்
டாக்டர் க. பொன்முடி

'நீரின்றி அமையாது உலகம்' என்ற முதுமொழிக்கிணங்க, தமிழகத்தில் வாழுகின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை எப்படியேனும் எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்கிற மகத்தான பணியில் தமிழக அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

'தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வாழுகின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டும்' என்கிற செயல் திட்டத்தைத் தனது பிறந்தநாளின் போது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் இத்தகைய அறிவிப்பினையொட்டி, பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பொதுமக்களுக்கு எப்படியேனும் வழங்க வேண்டும் என்கிற முயற்சியினை உடனடியாக மேற்கொள்ளவும், குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிப் பொதுமக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தங்கு தடையின்றி வழங்கவும், குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

அந்தந்தப் பகுதிகளில் உள்ள குடிநீர்ப் பிரச்னையை அறிவதற்காகச்சட்டமன்ற உறுப்பினர்கள், குடிநீர் வடிகால் வாரியத்தின் அதிகாரிகள் ஆகியோரை அழைத்துக் கலந்துரையாடி கருத்துக்கள் பெறப்பட்டன. அக்கருத்துக்களின் அடிப்படையில், குடிநீர்த் திட்டங்களாக மலர்ந்து, அத்திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்குரிய காலக்கெடுவும் நிர்ணயிக்கப்பட்டது. குழுக் கூட்டங்களில் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள், திட்டவடிவம் பெற்றுச் செயலாக்கம் பெற்றதா என்கிற வகையில் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் விரைந்து நிறைவேறத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1971-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சட்டத்தின் உறுதியோடு வடிவமைத்து, தமிழக மக்களுக்குச் சமர்ப்பணம் செய்தார்கள். இவ்வாறு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, கிராமப்புற மக்களின் வா
வோடு இணைந்த ஒரு மாபெரும் அமைப்பாக
திகழ்கிறது. 1980 முதல் 1990 வரை இந்த
பத்தாண்டுக் காலத்தில், உலகத்தின் குடிநீ
பொது சுகாதாரத் தேவைகளை நிறைவு செ
கின்ற பத்தாண்டுகளாக ஐக்கியநாடு சபையி
வளர்ச்சிப் பிரிவு உலக முழுதும் கொண்டாடியது
ஆயினும் முழுமையான ஒரு நிறைவினை உ
வாக்கிவிட்டதாக நிறைவு கொள்ள முடியவில்லை

மக்களின் பெரும் எதிர்பார்ப்புகள் ஒருபுறம்
இயற்கை மாறுபாட்டால் எழுந்த குடிநீர்ப் பிரச்னை
மறுபுறம் என்கின்ற நிலைமை தமிழகத்தில் இரு
பதை நினைவுகூர்ந்த மாண்புமிகு முதல்வ
அவர்கள், குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கவும்
குடிநீர்ப் பற்றாக்குறையை அகற்றவும், அனைத்து
மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும்
உறுதிபூண்டு, செயல் திட்டங்களாக வரலாற்று
பொன்னேட்டில் இடம் பெறத்தக்க திட்ட
களையும், அறிவுரைகளையும் வழங்கினார்கள்.

---

**மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞ
அவர்கள்தான் 1971-ஆம் ஆண்டில், தமிழ்
புத்தாண்டுப் பரிசாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகா
வாரியத்தைச் சட்டத்தின் உறுதியோடு வடி
வமைத்துத் தமிழக மக்களுக்குச் சமர்ப்பண
செய்தார்கள்.**

---

அவர்கள் எடுத்துரைத்த கருத்தின் அடிப
படையில் ஊரகக் குடிநீர்த் திட்டம் ஆதிதிராவிட
மற்றும் பழங்குடியினர் மேம்பாடு சிறப்புப் பகுதி
திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், வறட்சி
நிவாரணப் பகுதியின் அடிப்படையில் குடிநீ
வழங்கும் திட்டங்கள், இலங்கை வாழ் அகதி
களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள்,
3,000 அல்லது அதற்கு மேலும் மக்கள் தொகை
கொண்ட குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்
தேக்கத் தொட்டிகளைக் கட்டும் திட்டம், நகர

குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள், உலக வங்கியின் உதவியின் மூலம் என்கிற வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, தமிழகத்தில் செயல் படுத்தப்படுகின்றன.

**ஊரகக் குடிநீர்த் திட்டம்:**

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஜனவரி 89 முதல் மார்ச் 90 வரை ரூ.9,975.81 இலட்சம் செலவில் 10,626 குடியிருப்புகள் பயனடைகின்ற வகையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் 9.97 இலட்சம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் உட்பட 42.44 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெற்றிருக்கிறார்கள். ஏப்ரல் திங்கள் 90 முதல் அக்டோபர் 90 வரை ரூ.4,024.98 இலட்சம் செலவில் 2,246 குடியிருப்புகள் பயனடையும் விதத்தில் குடிநீர்த்திட்டம் நிறை வேற்றப்பட்டது. இதன் மூலம் 2.97 இலட்சம்

---

**1990-91-வது நிதியாண்டில், நகராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.1,077 இலட்சமும், பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.421.30 இலட்சமும், பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு ரூ.229.94 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

---

ஆதிதிராவிடர் - பழங்குடியினர் உட்பட 10.99 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெற்றிருக்கிறார்கள்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கான சிறப்புப் பணித்திட்டம்:**

இத்திட்டம் ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ஊரகக் குடிநீர்த் திட்ட ஒதுக் கீட்டிலிருந்து 20 விழுக்காடு ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஜனவரி 89 முதல் அக்டோபர் 90 வரை ரூ.2,017.72 இலட்சம் செலவில் 4,008 குடியிருப்புகள் பயனடைகின்ற வகையில் குடிநீர்த் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக் கின்றன. 6-வது, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், 1980-லிருந்து 90-ஆம் ஆண்டு வரை கடந்த பத்தாண்டுகளில் ரூ.5,827.73 இலட்சம் செலவில் 8,006 ஆதிதிராவிடர் பழங்குடியினர் குடி யிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இதில் 1989-90-ஆம் ஆண்டில் மட்டும் ரூ.1,070.86 இலட்சம் செலவில் 2,466 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருப்பது என்பது நினைவுகூர வேண்டிய அம்சமாகும். அதாவது, கடந்த ஓராண்டில் மட்டும், பத்தாண்டுகளில் நிறைவேற்றி முடிக்க வேண்டிய மூன்றில் ஒரு பங்குப் பணி முடிக்கப்பட்டிருப்பதென்பது நினைந்து போற்றக்கூடிய ஒன்றாகும்.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்:**

உள்ளூரில் அமைந்துள்ள நீர் ஆதாரங்களைக் கொண்டு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலைமையில், அதிக தூரத்தில் அமைந் துள்ள நீர் ஆதாரங்களைக் கொண்டு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்தான் பொதுமக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க முடியும் என்கிற வகையில், தமிழக அரசு திட்டச் செலவு அதிகமாகுமென்பதைக் கருத்தில் கொள்ளாமல், குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முடிவு செய்து பணிகளைத் தொடங்கியிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டில் ரூ.1,146.99 இலட்சம் செலவில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங் களுக்கும், 90-91-இல் ரூ.2,148.93 இலட்சம் செலவில் 17 கூட்டுக்குடிநீர்த் திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீண்டகாலமாகக் குடிநீர்ப் பிரச்னையில் உழன்ற செஞ்சி, திண்டிவனம், அனந்தபுரம், ஒடுகத்தூர், கும்பராயூர், மணப்பாறை திருவண்ணாமலை போன்ற பகுதிகள் பயனடையும்.

**வறட்சி நிவாரணப் பணி:**

1989-90-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 6,500 ஆழ்துளைக் கிணறுகள் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டதோடு, மதுரை மாநகராட்சியில்-59, கோயம்புத்தூர் மாநகராட்சியில்-40, திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டத்தில்-50 என்கிற வகையில், ஆழ்துளைக் கிணறுகள் அமைக் கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ அந்த ஆண்டில் 6,649 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.1,659.99 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. 1990-91-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 3,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்காக அரசு ஒப்புதல் அளித்துப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.




## பால்வளப் பெருக்கம்

**மா**ண்புமிகு செய்தி மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் 27-11-90 அன்று சென்னைக் கோட்டையில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள், சென்னை நகரில் 130 தானியங்கிப் பால் விற்பனை நிலையங்கள் இருப்பதாகவும், நடப்பாண்டில் மேலும் 25 தரமான பால் விற்பனை நிலையங்கள் புதிதாகத் தொடங்கப் பட இருப்பதாகவும், இது தவிர பிளாஸ்டிக் டேங்குகளில் 200 முதல் 400 லிட்டர் பால் வைத்து விற்பனை செய்யும் நிலையங்கள் சென்னையில் 80 இருப்பதாகவும், மேலும் இத்தகைய நிலையங்கள் 100 இடங்களில் தொடங்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

பால் விற்பனை நிலையத்தில், தண்ணீர் கலந்து விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படு மென்றும், சென்னை நகரில் தற் போது பால் தட்டுப்பாடு ஏதுவு மில்லை என்றும் அவர் அப்போது கூறினார்.

6 இலட்சத்து 70 ஆயிரம் லிட்டர் பால், சென்னையில் நாள்தோறும் விநியோகிக்கப்படுவதாகவும், 7 மாநிலத் தலை நகரங்களில் ஆவின் உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ள தாகவும், ரூ 68 கோடி செலவில் மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவ தாகவும், ஈரோட்டில் நாள்தோறும் 30 டன் பால்பவுடர் தயாரிக்கு தொழிற்சாலை அமைப்பதற்கா வேலை தொடங்கி விட்டதாக சொன்ன மாண்புமிகு அமைச் அவர்கள் 100 டன் கால்நடை தீவனம் தயாரிப்பதற்கான தொழி சாலை அடுத்த மாதம் உற்பத்தியை தொடங்க இருப்பதாகவும் கூறின நாள்தோறும் 4 இலட்சம் லிட் பால் பவுடர் பதப்படுத்தும் தொழி சாலை சோளிங்க நல்லூரில், இலட்சம் லிட்டர் பால் பதப்படுத் தொழிற்சாலை திருச்சியில் தாகத் தொடங்கப்படவிருக்கிற

பால் நுகர்வோர் கூட்டுற சங்கங்கள் தொடங்க, தேவைப்படு இடங்களில் தாராளமாக அனும வழங்கப்படும்

---

1989-90-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணியில் 6,649 ஆழ்துளைக் கிணறுகளும், 1,800 மாற்று ஆழ்துளைக் கிணறுகளும், இது வரை குடிநீர் வழங்கப்படாத குடியிருப்புகளுக்கு 7,286 ஆழ்துளைக் கிணறுகளும், ஆக மொத்தம் 15,735 ஆழ்துளைக் கிணறுகள் ஒரே ஆண்டில் அமைத்துத் தரப்பட்டிருக்கின்றன.

1989-90-ஆம் ஆண்டில் விரைவு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு, 10,323 குடியிருப்பு களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை யென்பது கண்டறியப்பட்டு, 89-90 நிதியாண்டில் 6,000 குடியிருப்புகளுக்கு எப்படியேனும் குடிநீர் வசதி செய்துதரப்பட்ட வேண்டுமென்கிற வகையில் பணிகள் துவக்கப்பட்டு விரைந்து செயலாற்றி யதன் மூலம், 8,786 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 1,537 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை மேற்கொண்டு, 1,437 குடி யிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்துதரப்பட்டிருக் கிறது. மேலும் 100 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டிற்குள்ளாகக் குடிநீர் வசதி செய்து தரு வதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

---

**குறைந்த செலவு சுகாதாரத் துப்புரவுத் திட்டத் தின் கீழ் 14 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப் பட்டு இதன்மூலம் 6.25 இலட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.**

**இலங்கைத் தமிழர்களுக்குக் குடிநீர் வழங்கும் பணி:**

இலங்கையிலிருந்து தமிழகத்தில் தஞ்சம் அடைந்த 1 இலட்சத்து 21 ஆயிரத்து 361 இலங்கை வாழ் தமிழர்கள், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருப்பதையொட்டி அவர்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்காக ரூ.60.12 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டுக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

1989-90-இல் மத்திய அரசு நிதியுதவியுடன் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் நடைமுறை யிலுள்ள 39 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மேம் பாடு செய்வதற்காகக் கிராம மற்றும் நகரங்களுக்கு ரூ.225 இலட்சம் செலவில் 7 இலட்சத்து 28 ஆயிரம் பேர் பயனடைகின்ற வகையில் திட்டங்கள் முடிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 3,000 மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டித் தரப்படும் என அறிவித்ததற்கிணங்க, 764 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு, 1990-91-ஆம் ஆண்டு நிதியாண்டில் ரூ.1,264.375 இலட்சங்கள் மதிப்பீட்டில் 268 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி களும், 91-92-ஆம் நிதியாண்டில் ரூ.3,105.250 இலட்சம் மதிப்பீட்டில் 486 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும் கட்டி முடிக்கப்பட இருக்கின்றன.

**நகரகக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள்:**

89-90 நிதியாண்டில் நகரகக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்காக ரூ.2,717 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 12 குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 4.17 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெற்றிருக்கிறார்கள். நாமக்கல், மணலூர்ப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நீண்டகாலமாக நடைபெற்று வரும் குடிநீர்த்திட்ட அபிவிருத்தித் திட்டங்களும், திருச்சி- பாதாளச் சாக்கடைத் திட்டமும் விரைவுபடுத்தப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றன.

89-90, 90-91-ஆம் ஆண்டுகளில் 15 நகரங்களில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூ.45 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக ஆய்வில் இருக்கிற பத்மநாபபுரம் குடிநீர்த் திட்டம், திண்டிவனம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், ஒதூர்-சிப்காட், மத்தகரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், செஞ்சி, அனந்தபுரம், கூட்டுக் குடிநீர்த் திட்டம், காட்டு மன்னார் கோயில் கூட்டு அபிவிருத்தித் திட்டம், கரூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், விருத்தாசலம் உட்பகுதி குடிநீர்த் திட்டம், திருமழிசை, உடுமலை அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன

கடலோரப் பகுதிகளில் குறைவான ஆழத்தில் நல்லநீர் கிடைப்பதால், 'யூனிசெப்' உதவியுடன் 71 'தாரா' கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு, குடிநீர் வழங்குகின்ற பணி நடந்து கொண்டிருக்கிறது.

90-91-வது நிதியாண்டில் நகராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.1,077இலட்சமும், பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.421.30 இலட்சங்களும், பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு ரூ 229.94 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. வறட்சி நிவாரணப் பணியின் கீழ் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் நிவாரணப் பணிகளுக்காக ரூ.200 இலட்சமும், பேரூராட்சிகளில் குடிநீர் நிவாரணத் திட்டங்களுக்காக ரூ.100 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 27 நகராட்சி, 33 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உதவியுடன், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சிகளுக்கும், சேலம் நகராட்சிக்கும் குடிநீர் விரிவாக்கத் திட்டங்கள், 75 சிறிய மற்றும் நகராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள், 14 நகரங்களுக்குக் குறைந்த செலவு துப்புரவுத் திட்டங்கள் ஆகியவைகளை நிறைவேற்றத் தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

இதன் மூலம் 740 வழியோரக் கிராமங்களுக்கு மொத்த விநியோக முறையில் குடிநீர் வழங்கப்படும். இதற்காக ரூ.192.81 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.



மூன்று ஆண்டு காலக் கெடுவிற்குள் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கத் தகுந்த கூடுதலான துணைத் திட்டங்களைச் சேர்த்து, உலக வங்கித் திட்டத்தை மாற்றியமைக்க உலக வங்கி ஒப்புதலை வழங்கியிருக்கிறது. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட உலக வங்கித் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.299.83 கோடியாகும். இத்திட்டத்தில் மணலூர்ப்பேட்டை, புதுக்கோட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, பொள்ளாச்சி, சங்கரன்கோவில் ஆகிய நகராட்சிகளின் குடிநீர்த் துணைத் திட்டங்களும், கோவை-சேலம் ஆகிய நகரங்களின் வழிகளில் 740 கிராமங்களும் குடிநீர் வசதி பெற வழி செய்யும் திட்டமும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்புதிய கூடுதல் திட்டத்தின் மூலம் 11,39 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். ஜனவரி 89 முதல் அக்டோபர் 90 வரை ரூ.42 கோடி செலவிடப்பட்டு 27 குடிநீர் துணைத் திட்டங்கள் முடிக்கப்பட்டதன் மூலம் 2.5 இலட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள். குறைந்த செலவு சுகாதாரத் துப்புரவுத் திட்டத்தின் கீழ் 14 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு இதன் மூலம் 6.25 இலட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

குடிநீர்த் திட்டங்களை உருவாக்குவதற்கும் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவும், குடிநீர் வாரியம் தற்போது தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக ஒரு தனிப் பிரிவு அமைக்கப்பட்டு அதற்கென்று ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தமிழகத்திலுள்ள கடினமான பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கும், திட்டங்களை உருவாக்குவதற்கும் ஒரு தனிக் கோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

நீராதாரங்கள் இல்லாத கடினப்பகுதிகளுக்குத் தேவையான நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மத்திய நிலநீர் வாரியம், மாநில நிலநீர்த்துறை ஆகியவற்றின் வல்லுநர்களைக் கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழு இராமநாதபுரம், கீழ்க்கரை போன்ற நகரங்களுக்குத் தேவைப்படுகின்ற குடிநீரைத் தரக்கூடிய நீர் ஆதாரத்தைக் கண்டறிந்து பரிந்துரைத்துள்ளது. கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய நகரங்களுக்கான நீர் ஆதாரங்களைக் கண்டறிவதில் முன்னேற்றம் கண்டு இருக்கின்றது. இக்குழு சாத்தான்குளம், ஒட்டப்பிடாரம் விளாத்திகுளம் ஆகிய பகுதிகளிலும் பணிகளை மேற்கொள்ள இருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் இருந்து நீர்மட்டத்தைக் கண்காணிக்கின்ற பணியினை மேற்கொண்டிருக்கிறது.

பெரும்பாலும் குடிநீர் வழங்கும் திட்டங்கள் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அதன் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் சுகாதாரக்கிணறு வழிமுறைக்கிணறு, குளம், ஊருணி போன்ற இயற்கை நீர் நிலையங்கள், ஆகியவற்றைச் செம்மைப் படுத்துகின்ற பணியைக் குடிநீர் வாரியம் மேற்கொள்ள இருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நில-நீர்ப் பிரிவு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. நீர் ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதற்கு 87 உதவி நில நீர் வல்லுநர்கள் கோட்ட அலுவலகங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 14 துணை நில-நீர் வல்லுநர்கள் வட்ட அலுவலகங்களில் நியமிக்கப்பட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

செங்கை-அண்ணா, தென்னார்க்காடு, தஞ்சை, இராமநாதபுரம் ஆகிய கடலோரப் பகுதிகளில் குறைவான ஆழத்தில் நல்ல நீர் கிடைப்பதால், யூனிசெப் உதவியுடன் 71 தாரா கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு, குடிநீர் வழங்குகின்ற பணி நடந்துகொண்டிருக்கிறது.

மணற்பாங்கான பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதற்காக ஒரு தனி இயந்திரவியல் கோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதிலும், பொது மக்களின் கருத்தை அறிந்து குடிநீர் வாரியம் பணிகளை மேற்கொள்ளுகின்ற வகையிலும் வட்ட அலுவலகங்களில் மாதந்தோறும் இரண்டாம் சனிக்கிழமையன்று வாரியப் பொறியாளர்கள், சட்டப்பேரவை உறுப்பினர், மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டத்தில் பெறப்பட்ட கருத்தின் அடிப்படையில் வழங்கப்படும் நடவடிக்கை தொடர்புடைய அனைவருக்கும் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தமிழக மக்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றவும், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும், பாதுகாக்கப்பட்ட குடிநீரை-குறிப்பாக நன்னீரை அவர்கட்கு வழங்கவும், புதிய நீர்-ஆதாரங்களைக் கண்டறிந்து குடிநீர்ப் பெருக்கத்தை உருவாக்கவும், திட்டப் பணிகள் மக்களின் மனமகிழ நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகப் பணிகள்!

'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்' செயல்படுத்திவரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றத்தைத், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் 22.11.90 அன்று திட்ட ஒருங்கிணைப்புக் குழு ஆய்வு செய்தது

இம்மகளிர் மேம்பாட்டுக் கழகம், இத்திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடனும் விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவியுடனும் தர்மபுரி மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது. 1991-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இத்திட்டம் சேலம், தென்னார்க்காடு ஆகிய இரு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படும். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு 1989-90 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஏழாண்டுக் காலத்தில் ரூ.45.92 கோடி நிதியுதவியுடன் சுமார் 40,000 பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு வழிவகை செய்யும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சம் கிராமப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பெண்களைத் தெரிந்தெடுத்து, அவர்களைக் குழு அடிப்படையில் ஒன்று சேர்த்து விவசாயம், தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு, எண்ணெய் விதைகள், கால்நடைப் பராமரிப்பு, சிறு மற்றும் கிராமக் குடிசைத் தொழில், நிலம் அபிவிருத்தி ஆகியதுறைகளைச் சார்ந்த பலவிதப் பொருளாதாரத் தொழில் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான நிதியுதவிகளை வழங்கி வருவதாகும். இத்திட்டத்திற்கு அரசு சாராத ''மைராதா'' என்னும் நிறுவனம் இப்பெண்களைத் தெரிந்தெடுப்பது முதல், அவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களை ஆர்வத்துடன் பொருளாதாரப் பணிகளில் ஈடுபடுத்துவது வரை கழகத்துக்கு உதவி புரிந்து வருகிறது.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், மகளிர் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கிறது; வங்கிக் கணக்கு வைத்துக் கொள்ளத் தூண்டுகிறது; மகளிர் முன்னேற்றத்திற்கு வகைசெய்கிறது.**

சென்ற ஆண்டு முதல்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், சுமார் 7,500 பெண்கள் 312 குழுக்களாக அமைக்கப்பட்டு, இது வரை இத்திட்டத்தில் அவர்களில் 2,100 பெண்கள் பயன்படுகின்ற வகையில் ரூ.1.15 கோடி செலவில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால், மகளிர் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, அதன் மூலம் அவர்கள் தாங்களாகவே வங்கிகளில் கணக்கு வைத்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்கள் முன்னேற்றம் அடைய வழிவகை செய்துள்ளது என்பது ஆகும். இதுவரை இப்பெண்களின் குழுக்கள் ரூ.10 இலட்சம் சேமித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் பல்வேறு பிரிவுகளில் எதிர்பார்ப்புக்கு மேலான முன்னேற்றத்தை அடைந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் மேற்பார்வைக் குழு 1990-ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் வாரத்தில் இத்திட்டத்தின் செயலாக்கத்தை நேரில் பார்வையிட்டுப் பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளது.

இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்படுவதற்கான செயல்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

— இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது




| ஒரு முறை சேமிப்பாக முதலீடு செய்யும் மாதச் சம்பளம் | 58-ம் வயதிலிருந்து மாதாந்திர பென்ஷன் ஆயுள் காலம் வரை பெறும் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 18-23 வயதில் சேமிப்பவர்களுக்கு | 23-28 வயதில் சேமிப்பவர்களுக்கு | 28-33 வயதில் சேமிப்பவர்களுக்கு | 33-38 வயதில் சேமிப்பவர்களுக்கு | 38-43 வயதில் சேமிப்பவர்களுக்கு | 43-48 வயதில் சேமிப்பவர்களுக்கு |
| ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1,500 | 1,920 | 960 | 480 | 240 | 120 | 60 |
| 2,000 | 2,560 | 1,280 | 640 | 320 | 160 | 80 |
| 2,500 | 3,200 | 1,600 | 800 | 400 | 200 | 100 |
| 3,000 | 3,840 | 1,920 | 960 | 480 | 240 | 120 |
| 3,500 | 4,480 | 2,240 | 1,120 | 560 | 280 | 140 |
| 4,000 | 5,120 | 2,560 | 1,280 | 640 | 320 | 160 |
| 4,500 | 5,760 | 2,880 | 1,440 | 720 | 360 | 180 |
| 5,000 | 6,400 | 3,200 | 1,600 | 800 | 400 | 200 |
| 5,500 | 6,880 | 3,440 | 1,720 | 880 | 440 | 220 |
| 6,000 | 7,680 | 3,840 | 1,920 | 960 | 480 | 240 |

இந்த விசேஷ திட்டத்தில் உங்களுடைய ஒரு மாத சம்பளத்தை ஒரே ஒரு முறை முதலீடு செய்து ஆயுள் கால பென்ஷன் பெறுங்கள். அதன் பிறகு, உங்களால் நியமிக்கப்பட்டவருக்கு இது கிடைக்கும். வெவ்வேறு வயதுப் பிரிவினருக்கு உரிய மாதாந்திர பென்ஷன் தொகையை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். எனவே...

★ உங்கள் வயதுப் பிரிவை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

★★ 58 ஆண்டுகளுக்குப் பிறகு தேவையான மாதாந்திர பென்ஷனைத் தேர்ந்தெடுங்கள்

★★★ வயதுப் பிரிவுக்குத் தகுந்தாற்போல் முதலீடு செய்யத் தொடங்குங்கள்

★★★★ உங்களுடைய அசல் தொகை அப்படியே இருக்கும்.

★★★★★ உங்கள் மாதாந்திர பென்ஷனுக்கு 10 மடங்குக்குச் சமமான தொகையை போனஸாக ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெறுங்கள்.

**தமிழக அரசின் சிறப்புச் சலுகை:**

1.6.1990 முதல் 31.12.1990 வரை கணக்குகளில் தமிழ்நாட்டில் டெபாசிட் செய்யப்படும் ரூ. 500/- முதலீட்டிற்கு இலவசப் பரிசுக் கூப்பன் வழங்கப்படும்.
மாருதி கார், ஸ்கூட்டர், கலர் டி.வி., ரெப்ரிஜிரேட்டர், மோஃபா, தையல் எந்திரம், சைக்கிள், கைக்கடிகாரம் மற்றும் சுவர்க் கடிகாரம் (262 பரிசுகள்) முதலிய மகத்தான பரிசுகளைப் பெறும் வாய்ப்பு.

**ஆயுள் கால பென்ஷன் பெற உங்கள் முதலீடு வளர்வது எப்படி...**

ஒரு மாத சம்பளத்தை ஐ.வி.பி.-யில் முதலீடு செய்யுங்கள். 5 ஆண்டுகளில் இந்த முதலீடு இரு மடங்காகும். உங்கள் வயது முதிர்வடையும் வரை இதன் முதிர்வடைந்த தொகை ஐ.வி.பி.-யில் மீண்டும் மீண்டும் மறு முதலீடு செய்யப்படுகிறது. 58-ஆம் வயதில், முதிர்வடைந்த தொகை மாத வருமானத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட வேண்டும். (அதிக பட்சம் ரூ. 4 லட்சம், மீதத் தொகை, 12% மாத வருமானம் வழங்கும் இதர பொருத்தமான திட்டங்களில் முதலீடு செய்யப்படும்). ஆயுள் கால பென்ஷன் பெறும் விந்தை இதுதான்:

**பாதுகாப்பான எதிர்காலத்திற்கு சேமியுங்கள்**

**பரிசுக் கூப்பன்கள் கிடைக்குமிடம்**

**சென்னையில்**

- மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை-5 மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- சென்னை மாநகராட்சி அலுவலகம், சென்னை-3 மற்றும் அனைத்து மாநகராட்சி வட்ட அலுவலகங்கள்
- சமூகப்பாதுகாப்பு துணை இயக்குநர் அலுவலகம், சென்னை-600 108.

**மாவட்டங்களில்**

- மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்,
- வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு:
இயக்குநர்
சிறுசேமிப்புத் துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

DIPR/2844/MS/90/ARIES


# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ சென்னையில் நடைபாதையில் வசிக்கும் 35 ஆயிரம் பேருக்கு வீடுகள் கட்டித்தர தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் அறிவித்தார் (11.10.90).

★ காட்பாடி அருகில் ரூ.100 கோடி செலவில் 20 ஆயிரம் பேர் வசிக்கும் அளவில் புதிய நகரம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார். (15.10.90).

★ தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாசன வாய்க்கால்களிலும் இரண்டாண்டிற்கு ஒரு முறை குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று கும்பகோணத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார். (10.10.90).

★ திண்டுக்கல்லில் பட்டாசுக்கடையொன்றில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக இறந்த 20 பேர்களின் குடும்பங்களுக்கும் தென்னார்க்காடு மாவட்டத்தில் வெடி விபத்தில் உயிரிழந்த 3 பேர்களின் குடும்பங்களுக்கும் ரூ.2,30,000 நிதி வழங்கிட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார். இதன்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.10,000 வழங்கப்படுகிறது. (16.10.90).

★ தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தோருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசு ரூ.14 இலட்சம் ஒதுக்கியுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. (15.10.90).

★ காமராசர் மாவட்டத்தில் ரூ.1.56 கோடி செலவில் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார். (16.10.90).

★ இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பஸ் கட்டணம் குறைவு என்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்க்கு அதிக போனஸ் என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வேலூரில் தெரிவித்தார். (19.10.90).

★ கோவை மாவட்டத்தில் வசதியற்ற பெரியோர்களும் தாய்மார்களும் பார்வை இழந்து கண்தெரியாமல் அவதிப்படுவதை அறவே நீக்க மாதம் இருமுறை இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்படும் என்று அரசு அறிவிக்கை. (15.10.90).

★ தமிழகத்தில் 500 நகரப் பகுதிகளில் ஒரே ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்கள் காஞ்சிபுரத்தில் தெரிவித்தார். (28.10.90).

★ நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப் படுவதை எதிர்த்து முறையீடு செய்யப்படும் மனுக்களை விசாரிக்க நீதிபதி சேதுராமன் தலைமையில் தனி கோர்ட் அமைக்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (2.11.90).

★ மூன்றாண்டுக்காலத்தில் 100 ஏக்கர்வரை பாசன அணைக்கட்டுகளைக் கொண்ட 6 ஆயிரம் சிறுபாசன ஏரிகள் நவீனப்படுத்தப்படும் என்றும் கிராம ஊராட்சிகள் அனைத்திற்கும் வண்ணத் தொலைக்

**விவசாயிகள் கடன் தள்ளுபடி - வீடு கட்ட கடன்**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும், கிராமத் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் 330-இல் வாங்கிய கடன் தொகை 24.30 கோடி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 97,818 விவசாயிகள் பயன் பெற்றிருக்கின்றனர். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 8 நிலவள வங்கிகளில் 8,031 விவசாயிகள் வாங்கிய கடன் தொகைகள் ரூ.4.72 கோடியும், சிதம்பரனார் மாவட்டத்தில் 3 நிலவள வங்கிகள் மூலம் 4,215 விவசாயிகள் வாங்கிய கடன் ரூ.2.17 கோடியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் நகர்ப்புறச் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.100 இலட்சம் வீடுகட்ட க்டன் வழங்க இருக்கிறது. 1989-90-ஆம் ஆண்டில் வீடுகள் கட்டுவதற்காக ரூ.440.60 இலட்சம் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகவலை திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களின் கூட்டுறவு இணைப்பதிவாளர் திரு. கிருஷ்ணன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார். (29.10.90).

★ சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் மற்றும் தொகுப்பு ஊதியம் பெறுவோர் அனைவருக்கும் ஏற்கெனவே அறிவித்தபடி குடும்பநலத்திட்டம் விரிவுபடுத்தப் படும். இதற்கான உத்திரவினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பிறப்பித்தார். (6.11.90).

★ அடுத்த ஆண்டு துறையூரில் ரூ.25 இலட்சம் செலவில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பால் குளிரூட்டும் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் அறிவித்தார். (7.11.90).



# திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

தமிழ்நாடு அரசின் 1989-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 1.12.90 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற அவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிக-நடிகையர், தொழில் நுட்ப வினைஞர்கள், கலைத்துறை வித்தகர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம்.ராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திரைப்பட விருதுகள் தேர்வுக்குழுத் தலைவர் நீதிபதி திரு. பி.பாஸ்கரன் வாழ்த்துரை கூறினார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் முன்னிலை உரை நிகழ்த்தினார்.

''கலைஞர்கள் நல்வாழ்வில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ள அரசு இது என்பதற்கு இந்த விழாவே ஏற்ற உதாரணமாகும். இப்படிப்பட்ட கலைவிழா தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று எப்படி நீங்கள் கருதுகிறீர்களோ, அதே போல், தலைவர் கலைஞர் அவர்கள் உங்களுக்காகத் தொடர்ந்து உழைக்க நீங்களெல்லாம் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''. என்று குறிப்பிட்டார்.

கலைத்துறையைச் சேர்ந்தவர்களான திரு.ஜெமினி கணேசன், திரு.கே.பாலச்சந்தர், திருமதி. சௌகார் ஜானகி, திரு. கே.ஏ.தங்கவேலு, கவிஞர் வைரமுத்து, திரு. கமலஹாசன் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர். செய்தித்துறை இயக்குநர் திரு. க.முத்துசாமி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். விழா முடிவில் செய்தி-சுற்றுலாத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

மேதகு ஆளுநர் அவர்கள் தம் தலைமை உரையில், ''இந்தியாவில் சிறந்த திரைப்படத் தயாரிப்பு நிலையங்களைக் கொண்டது தமிழகம்; பெருமளவில் திரைப்படங்களைத் தயாரிப்பதில் சிறந்து விளங்குவதும் தமிழகம்; இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட இம்மாநிலத்தில், அனைத்து நாட்டுத் திரைப்படங்களுக்கு நிகரான தரத்துடன், திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இந்தியாவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் விருதுகள் பெறும் வகையில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும்'' என்றார்.

> ''சிறந்த நடிகர் நடிகைகள் இயக்குநர்கள் ,ஆகியவர்களுக்குப் பரிசுகள் வழங்குவது மாத்திரமல்ல; சில படங்களுக்குச் சலுகை அளிக்கின்ற வகையில்-தரமான, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்களுக்கும் அரசு மானிய உதவி வழங்கி வருகிறது!''
>
> —மாண்புமிகு முதல்வர்



திரைப்படக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழக 'அரசின் 1989-ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள் மற்றும் திரையுலகக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா, கடந்த ஆண்டு ஒரு நீண்டகாலத் தொய்விற்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு இரண்டாவது ஆண்டாக நடைபெறுகின்ற விழாவாகும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் - 1988 - அதற்கு முன்பே கூட பரிசு பெற வேண்டிய படங்கள், கலைஞர்கள் ஆகியோருக்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே ராஜா சாண்டோ பெயரால் ஒரே ஒரு விருது கலையுலக வித்தகருக்கான விருது வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை கடந்த ஆண்டுகளில் விரிவுபடுத்தி, ராஜா சாண்டோ விருது, கலைவாணர் விருது, அருமை நண்பர் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பெயரால் எம்.ஜி.ஆர். விருது என்ற மூன்று விருதுகள் கடந்த ஆண்டு வழங்கப்பட்டன.

மேலும் இந்தத் திட்டம் விரிவடைகிறது என்பதற்கு அடையாளமாகவும், இன்னும் கூட விரிவடையும் என்ற நம்பிக்கையினை ஊட்டுகின்ற வகையிலும்,இந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் அண்ணா விருதும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் பார்வேந்தர் விருதும் இணைக்கப்பட்டு - ஐந்து வித்தகர் விருதுகள் இந்த ஆண்டு வழங்கப்படுகின்றன.

சிறந்த படங்கள் என்ற வகையில் முதல் பரிசு 'புதியபாதை'யும் இரண்டாவது பரிசு 'புதுப் புது அர்த்தங்களும்', மூன்றாவது பரிசு 'நியாயத்தராசும்', சிறப்புப் பரிசைக் 'கரகாட்டக்காரன்' படமும் பெறுகின்றன.

சிறந்த இயக்குனராக - ஏற்கெனவே சிறந்த இயக்குனராக உள்ள என்னுடைய அருமை நண்பர் பாலச்சந்தர் 'புதுப்புது அர்த்தங்கள்' என்ற படத்திற்கான பரிசினைப் பெறுகிறார்.

சிறந்த நடிகருக்கான விருதினை - ஏற்கெனவே சிறந்து விளங்குகின்ற நடிகரான தம்பி கமலஹாசன் பெறுகிறார், என்க்கு ஒரு சந்தேகம். நீதிபதி பாஸ்கரன் தலைமையிலே அந்தப் படத்தைப் பார்த்து சிறந் நடிகர் என்று கமலஹாசனை தேர்ந்தெடுத்த போது, அதிே எந்தப் பாத்திரத்திற்காகப் பரி கொடுக்கிறார்கள் என்பதுதான் அப்புவுக்காகவா, ராஜாவுக்காகவா என்று எனக்குத் தெரியவில்லை இருந்தாலும் நான் அவர்கள் இரண் பேரையும் இணைத்து, அப்பு ராஜ வுக்காக, தம்பி கமல்ஹாசன் சிறந் நடிகருக்கான பரிசைப் பெறுகிறா என்று கருதிக் கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்ற பரிசினை 'நினைவுச் சின்னம்' படத்தி நடித்த ராதிகா - இன்று வெ நாட்டிலே இருக்கிற காரணத்தா அவர் சார்பாக அவருடைய தாயா பெற்றுக் கொள்கிறார்.

சிறந்த கதை ஆசிரியர் - தம் பார்த்திபன். அவருடைய பட தயாரிக்கப்பட்டு வெளியிடுவதற் முன்பு, என்னை அழைத்து அந் படத்தைப் பார்த்து அது பற்றி கருத்தையும், வாழ்த்தையும் வழா வேண்டும் என்று கேட்டு கொண்டார். என்னுடைய கருத்து வாழ்த்தும், வீண்போகாமல் அந் படம் மிக வெற்றிகரமாக அவருடை கதை ஆக்கத்தால் மற்றும் அந் படத்தினுடைய சிறப்பு அம்சங்களா



> ★ கலை என்பது- நெறிமுறை, வீரம், ஒழுக்க கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடி தாக இருத்தல் வேண்டும்.
>
> —அறிஞர் அண்ண



அது இன்றைக்கு முதல் பரிசைப் பெறுகிறது. அந்தப் படத்திற்கு கதை அமைத்த வகையிலே பார்த்திபன் சிறந்த கதை ஆசிரியருக்கான பரிசைப் பெறுகிறார்.

சிறந்த உரையாடல் ஆசிரியர் தம்பி கலைமணி 'எம் புருசன்தான் எனக்கு மட்டுந்தான்' என்ற படத்தின் வாயிலாக இந்தப் பரிசினைப் பெறுகிறார்.

இளையராஜா சிறந்த இசையமைப்பாளருக்கான விருதினை - 'கரகாட்டக்காரன்', 'வருஷம் 16' ஆகிய படங்களுக்காகப் பெறுகிறார்.

சிறந்த பாடலாசிரியருக்கான விருதை 'அபூர்வ சகோதரர்கள்', 'வருஷம் 16' ஆகியபடங்களுக்குப் பாடல் எழுதியதற்காக நண்பர் வாலி பெறுகிறார்.

'நியாயத்தராசு' படத்தில் 'வானம்' என்ற பாடலை இசைத்த ஜேசுதாஸ் சிறந்த பின்னணிப் பாடகருக்கான விருதினைப் பெறுகிறார்..

''மகனே மகனே கண்ணுறங்கு'' என்ற பாடலை 'வரம்' என்ற படத்தில் பாடியதற்காக பி.சுசீலா சிறந்த பின்னணிப் பாடகிக்கான பரிசினைப் பெறுகிறார்.

''அன்று பெய்த மழையில்'' என்ற படத்திற்காக ஒளிப்பதிவாளர் அசோக்குமார் பரிசு பெறுகிறார். 'வருஷம் 16', 'கரகாட்டக்காரன்' படத்திற்காக ஒலிப்பதிவாளருக்கான பரிசை பாண்டுரங்கன் பெறுகிறார்.

ராம்போ ராஜ்குமார் - 'ஒரு சிறந்த சண்டைப் பயிற்றுனருக்கான பரிசைட் பெறுகிறார். புதியபாதை படத்தின் மூலம் சிறந்த கலை இயக்குனருக்கான பரிசைத் திருமதி மோகனா பெறுகிறார். 'கரகாட்டக்காரன்' படத்தில் நடன ஆசிரியருக்கான பரிசை டி.கே.எஸ். பாபு பெறுகிறார். சிறந்த திரைப்படத் தொகுப்பாளருக்கான பரிசை 'வருஷம் 16' படத்திற்காக டி.ஆர். சேகர் பெறுகிறார்.

'சோலைக்குயில்' படத்தில் சிறந்த நடிகராக நடித்துப் பெயர் பெற்ற தம்பி இளையவேள் ராதாரவி சிறப்புப் பரிசைப் பெறுகிறார்.

'ஆராரோ ஆரிரரோ' படத்தில் நடித்துப் புகழ்பெற்ற பானுப்ரியா சிறந்த நடிகைக்கான சிறப்புப் பரிசைப் பெறுகிறார்ர்.

அறிஞர் அண்ணா விருது பெறுகிற மணிவண்ணன், இயக்குனர் மாத்திரம் அல்ல. கதாசிரியரும்கூட, நடிகரும் கூட, இவைகளெல்லாவற்றையும்விட, அண்ணா அவர்களுடைய கொள்கைகளை அழுத்தம் திருத்தமாக நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டிருக்கிற, அதை கலைத்துறை மூலமாகவும் வெளியிட ஆர்வம் கொண்டுள்ள ஒரு சகோதரர்.

அதைப் போலவே கே.எஸ். கோபாலகிருஷ்ணன் திரைப்படத் துறையில் மிகத் துணிவாக பல சாதனைகளைப் புரிந்தவர். எனக்கு நீண்ட கால நண்பர் என்பது மாத்திரம் அல்ல. திரையுலகத்தில் பல புதிய நட்சத்திரங்களை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவர். அவருடைய

லும், இயக்குகின்ற திறன் ஆனாலும் அனைவராலும் பாராட்டப்படுகின்ற ஒன்றாகும்.

பாவேந்தர் பாரதிதாசன் விருது, என்னுடைய நண்பர் - நீண்ட காலந்தொட்டு என் நண்பராக விளங்கி வருகின்ற சுரதா. அவருடைய பெயர் சுரதா என்று ஏன் இருக்கிறது என்பதற்கு விளக்கம். அவர் சுப்புரத்தின தாசன். சுப்புரத்தினம் என்பது பாரதிதாசனுடைய இயற்பெயர். பாரதிதாசனுக்குத் தன்னை தாசன் என்று அழைத்துக் கொள்வதற்காக சுப்புரத்தினதாசன் என்று தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டார். பெற்றோர் இட்ட பெயர் ராஜகோபால். நான் வாழ்ந்த திருவாரூருக்கு அருகாமையிலே 'சிக்கல்' என்ற ஊரில் பிறந்தவர். அவர் வாழ்க்கையிலும் பல சிக்கல்கள் உண்டு. சிக்கல் என்ற ஊரில் பிறந்த காரணத்தால்! பாரதிதாசனுடைய அடுத்த வழித் தோன்றல் என்ற அளவிற்கு உவமைக் கவிஞராக, புரட்சிகளை - புதுமைகளை - உருவாக்கக்கூடிய இனிய நண்பராக சுரதா விளங்குகின்றார். அவர் பாவேந்தர் விருதை இன்றைக்குப் பெறுகிறார்.

தம்பி கவிஞர் வைரமுத்து கலையுலகிலே மாத்திரம் அல்ல, கவிதைத் துறையிலும், தமிழ்த் துறையிலும் தமிழ் ஆர்வம் ஒலிக்கின்ற துறையிலும் வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பவர். அவருடைய கவிதைகள் நம்முடைய உள்ளத்திலிருந்து அகலாத அளவிற்கு





அழுத்தந்திருத்தமானவை. அவர் பாவேந்தருடைய விருதைப் பெறுவது மிகமிகப் பொருத்தம்.

கலைவாணர் விருது - நண்பர் கே.ஏ. தங்கவேலு பெறுகிறார். நான் தங்கவேலுவைக் கலைவாணர் இல்லத்தில் ஆரம்ப காலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தவன். கலைவாணர் தயாரித்த 'மணமகள்', 'பணம்' என்ற திரைப் படங்களுக்கு நான் உரையாடல் தீட்டிய, திரைக் கதை தீட்டிய அந்தக் காலம் தொட்டு நான் நண்பர் தங்கவேலை அறிவேன். கலைவாணருடைய நேரடி மாணவராக- அவரால் தட்டிக் கொடுத்து வளர்க்கப்பட்டவராக வளர்ந்து அனைவரையும் அரவணைத்துப் போகின்ற அந்தப் பண்பாட்டையும் பெற்றுத் திகழக்கூடிய நண்பர். திரையுலகத்தில் நீண்ட நெடிய புகழைப் பெற்றவர். எனவே கலைவாணர் பெயரால் விருது பெற மிகவும் பொருத்தமானவர்.

நகைச்சுவைச் செல்வர் எஸ்.எஸ். சந்திரனும் கலைவாணர் விருது பெறுகிறார். கலைவாணரைப் போன்று அங்க அசைவுகளும் கலைவாணரைப் போன்று நகைச் சுவையோடு நல்ல கருத்துக்களைப் படத்தின் மூலம் தருகின்ற அந்தப் பக்குவம் பெற்ற எஸ்.எஸ். சந்திரன் இந்த விருதைப் பெறுவது மிக மிகப் பொருத்தம்.

எம்.ஜி.ஆர். விருது பெறுகின்ற அருமை நண்பர் ஜெமினி கணேசனைப் பற்றி ஒன்றை நான் குறிப்பாகச் சொல்ல வேண்டும். நான் 1969-இல் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்று 76-ஆம் ஆண்டு வரையில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், பிறகு ஆட்சிப் பொறுப்பில் இல்லாத 13 ஆண்டுக் காலத்திலும் ஒவ்வொரு பிறந்த நாள் விழாவுக்கும் என்னை வந்து சந்திக்கத் தவறாத ஒரே ஒரு கலைஞர் ஜெமினி கணேசன் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு நன்றிக் கடனாக அல்ல; அவருடைய திறமைக்கு, எம்.ஜி.ஆர். விருதைப் பெறுவது சாலப் பொருத்தமுடையது.

சௌக்கார் ஜானகி நீண்ட நெடுங் காலமாகத் தன்னுடைய இளம் வயது முதல் ஒரு குணச்சித்திர நடிகையாகத் தமிழ்த்திரைப் படங்களிலும், வேறு மொழிப் படங்களிலும் நடித்து அழியாத புகழைப் பெற்றிருப்பவர். அவர் அமெரிக்க நாட்டில் இருந்தாலும் கூட, இந்தப் பரிசைப் பெறுகின்ற முனைப்புடன் தமிழகத்திற்கு வந்திருப்பதும், கலையுலகத்திலே அவர் கொண்டுள்ள அந்த நல்ல தொடர்பும், அவர் படங்களில் எந்தப் பாத்திரம் ஏற்றாலும் அந்தப் பாத்திரமாகவே மாறி நடிக்கின்ற அந்தத் திறமையின் காரணமாகவும் எம்.ஜி.ஆர். விருதினைப் பெறுகிறார். திரைப்படத் துறையின் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்தவர் எம்.ஜி.ஆர். என்பதில் இருவேறு கருத்திற்கு இடமே இல்லை. எனவே அவருடைய பெயரால் விருதைப் பெறுகின்ற அவரை நான் வாழ்த்துகிறேன்.

ராஜா சாண்டோ விருது பழம் பெரும் இயக்குனர் பிரசாத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவர் உடல் நலமில்லாத காரணத்தால் அவருக்குப் பதிலாக அவருடைய செல்வன் அந்த விருதை இங்கே பெற இருக்கிறார். பிரசாத் பல தெலுங்கு - கன்னடம், இந்தி, தமிழ்ப் படங்கள் மூலம் அறிமுகமானவர். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் நான் எழுதிய 'இருவர் உள்ளம்' 'மனோகரா' போன்ற படங்களை இயக்கியவர். 'தாயில்லாப்பிள்ளை' என்ற படத்திற்கும் அவர்தான் இயக்குனர். நான் மாத்திரம் அல்ல. பல எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியவர். பல நடிகர்களை உருவாக்கியவர். அவர் இந்தப் பரிசைப் பெறுகிறார்.

ராஜா சாண்டோ விருதைப் பெறுகின்ற அன்பிற்குரிய ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களைப் பற்றி நான் சொல்லியே ஆக வேண்டும். நான் திரைப்படத் துறைக்கு அடியெடுத்து வைக்கக் காரணமாக இருந்தவரே ஏ.எஸ்.ஏ.சாமி தான். 1944-45-ஆம் ஆண்டுகளில் நான் ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் தந்தை பெரியாரின் மாணவனாகக் 'குடியரசு' அலுவலகத்திலேயே தங்கி, பெரியாரின் ஆணைப்படி 'குடியரசுப்' பத்திரிகையின் துணை ஆசிரியனாகப் பணியாற்றிக் கொண்டிருந்த அந்தக் கால கட்டத்தில் ஏ.எஸ்.ஏ.சாமி என்னைக் கோவைக்கு வருமாறு அழைத்தார். கோவை ஜூப்பிடர் நிறுவனத்தில் நான் வந்து அவருக்கு உதவியாகப் பணியாற்ற என்னை அழைத்தார்.

அவருக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். திருச்சி வானொலி நிலையத்தில் மிருதங்க வித்வானாகப் பணியாற்றிக் கொண்டிருந்த முத்துக் கிருஷ்ணன் மூலமாக எனக்குச் செய்தி அனுப்பினார். நான் கோவை சென்று அவரைச் சந்தித்தேன். படங்களுக்கு எப்படி வசனம் எழுத வேண்டும்

என்பதற்குத் தான் எழுதி வைத்திருந்த பகுதிகளையெல்லாம் என்னிடம் படித்துக்காட்டி 'ராஜகுமாரி' என்ற படத்திற்கு உதவி ஆசிரியராக - வசனம் எழுதுகின்ற பொறுப்பை என்னிடத்திலே ஒப்படைத்தார். அந்தப் படத்திலேதான் முதன் முதலாக எம்.ஜி.ஆர். கதாநாயக னாக அறிமுகமானார் என்பதைத் தமிழ்ப்பட வரலாற்றை உணர்ந்த வர்கள் தெரிந்திருப்பார்கள்.

அன்று நான் ஏற்றுக் கொண்ட அந்தப் பொறுப்பைத் திறம்பட முடிப்பதாக அவர்கள் எல்லாம் கருதிய காரணத்தால் அதற்குப் பிறகு பல திரைப்படங்களுக்கு உரையாடல், திரைக்கதை, கதை எழுதுகின்ற அந்த வாய்ப்புக்களை நான் பெற்றேன். உடன்பிறவாச் சகோதரரைப்போல அவரும் அவருடைய குடும்பத்தாரும் என்னை நேசித்தார்கள். இப்போது அவர் சென்னையிலேயே இல்லை. திருப்பத்தூரிலே இருக்கிறார் என்றாலும் கூட, அடிக்கடி கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டு என்னை வாழ்த்துவதும், என்னுடைய முயற்சியில் நான் இன்னமும் முன்னேற வேண்டும் என்று ஊக்கப் படுத்துவதும் அவருடைய பண்பான உள்ளத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'வேலைக்காரி' என்ற அந்த அருமையான புரட்சிச் சித்திரத்தைத் திரைப்படமாக இயக்கிய பெருமை ஏ.எஸ்.ஏ.சாமிக்கு உரிய ஒன்றாகும். எனவே அத்தகைய புகழ்பெற்ற ஏ.எஸ்.ஏ.சாமி ராஜாசாண்டோ விருதினைப் பெறுகின்றார்.

குறிப்பாகத் தமிழ்ப்பட உலகத் திற்கு மீண்டும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு எத்தகைய உதவிகளை எல்லாம் செய்திருக் கிறோம் என்பதை இங்கே கோடிட்டுக்காட்டிய இயக்குனர் பாலசந்தர், இன்னும் பல இருக் கின்றன; அவைகளை எல்லாம் நிறைவேற்ற உங்களை நாடி வரு வோம் என்று குறிப்பிட்டார். நீங்கள் எங்களை நாடி வருகிற நேரத்தில் நானும் உங்களை நாடி வருவேன் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

கழக ஆட்சி இப்போது நடை பெற்றாலும் கூட, கழக ஆட்சியின் சார்பாக அரசு வருமானத்தைக் கொண்டு பல நல்ல காரியங்கள் செய்யப்படுகின்றன

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கூட மதுரை ராஜாஜி மருத்துவமனையிலே பேசும்போது அங்கேயும் ஏழைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்காக இருதய அறுவைச் சிகிச்சைக்காக ஒரு கருவி வாங்க முதலமைச்சர் நிதியிலிருந்து 40 இலட்ச ரூபாய் தந்திருக்கிறேன்.

நான் திரையுலக நண்பர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்து 'நீங்கள் எவ்வளவு பேர் இந்த முதலமைச்சர் நிவாரண நிதிக்கு உங்களால் இயன்ற தொகையை வழங்கியிருக்கிறீர்கள்? என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டு கிறேன். யார் யார் தந்தீர்கள், யார். யார் தரவில்லை என்ற பட்டியலை எல்லாம் நான் போட்டுக் காட்டப் போவதில்லை. தந்தவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். தராத வர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

எனவே ஒன்றை எதிர்பார்க்கிற நேரத்தில், நல்ல காரியம் செய்கிற ஒரு அரசுக்கு உதவியாக நீங்களும் இருந்திட வேண்டும் என்பதற்காகத் தான் இதனைக் குறிப்பிட்டேனே யல்லாமல் வேறல்ல.

சிறந்த நடிகர் நடிகைகள் இயக்குனர்கள் இவர்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுவது மாத்திரம் அல்ல. சில படங்களுக்குச் சலுகை அளிக்கின்ற வகையில் தரமான - குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்களுக்கு நாம் மானிய உதவியை வழங்கி வருகிறோம். கடந்த ஆண்டும் வழங்கினோம். இந்த ஆண்டும் அதற்கான தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மற்றொன்று, தமிழ்நாட்டில் மீண்டும் வருகிற ஜனவரித் திங்கள் சர்வதேசத் திரைப்பட விழாவைச் சென்னை நகரத்திலே நடத்திட வேண்டும் என்று மத்தியிலே இருந்த தேசிய முன்னணி அரசை நாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித் தார்கள். இப்போது மத்தியிலே அரசு மாறியிருந்தாலும் கூட, ஜனவரி 10-ந் தேதி முதல் 20-ந் தேதி வரை அந்த விழா சென்னை மாநகரத்திலே நடைபெற முடிவு செய்யப்பட்டிருக் கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவித்து, விருது பெற்ற - பரிசு பெற்ற கலைஞர் களுக்கும், வித்தகர் விருதுபெற்ற பெருமக்களுக்கும், என்னுடைய நன்றியை வாழ்த்தை பாராட்டுக்களைக் காணிக்கையாக்கு கிறேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.





# ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன் காக்கும் அரசு

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

**திரு. க. சுந்தரம்**

**இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக 1974 ஆம் ஆண்டில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத் திற்காக ஒரு பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் கல்வியிலும், பொருளா தாரத்திலும் மேம்பாடு அடை வதற்குப் பல புதிய திட்டங்களைத் தீட்டி, அவர்கள் முன்னேற்றத்தை முதற்குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமை யிலான தமிழக அரசு.

தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகை 484 இலட்சங்களில் தாழ்த்தப்பட்டோர் 88.81 இலட்ச மாகவும், பழங்குடியினர் 5.20 இலட்சமாகவும் உள்ளனர். தமிழ் நாட்டில் மொத்த மக்கட்தொகையில் மொத்த விழுக்காட்டில் ஆதிதிரா விடர் 18.35 விழுக்காடாகவும், பழங்குடியினர் 1.07 விழுக்காடாக வும் உள்ளனர். கிராமங்களில் வாழும் ஆதிதிராவிடர் 70.91 இலட்சமாகவும், நகர்ப்புறங்களில் வாழும் ஆதிதிராவிடர் 17.91 இலட்சமாகவும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை முறையே 79.84 விழுக்காடாகவும், 20.16 விழுக்காடாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

ஆறு இலட்சத்திற்கு மேல் ஆதி திராவிடர்கள் வாழும் மாவட்டங்கள் தென்னார்க்காடு, தஞ்சாவூர், செங்கை-அண்ணா, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகியவையாகும். குறைந்த் ஆதி திராவிட மக்கட்தொகை உள்ள மாவட்டங்கள் நீலகிரி, கன்னியா குமரி, பசும்பொன் தேவர் திருமகன். ஆகியவை ஆகும்.

தமிழ்நாட்டில் மொத்தம் படித்த வர்கள் எண்ணிக்கை 2,26,36,059 ஆகும். (46.76%), இதில் ஆதி திராவிடர் எண்ணிக்கை 26,35,149 (29.67 %), பழங்குடியினர் எண்ணிக்கை 1,64,021 (20.46%) ஆகும்.

நலப்பணிகளைச் செயல்படுத்து வதில் முன்னிலையில் உள்ள மாநிலம் நமது தமிழ்நாடே ஆகும். அனை வரும் பயனடையும் வகையில் நலத்திட்டங்கள் இவ்வரசினால் நமது மாநிலத்தில்தான் நன்கு விரிவான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் மிகவும் முன்னேற வேண்டிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகத் தலைவர் கலைஞர் அவர்களின் திறமையான நிர்வாகத்தின்கீழ் இயங்கும் இவ்வரசு பற்பல நலத்திட்டங்களைச் செயல் படுத்தி இம்மக்களின் ஒரு பாது காவலராக இயங்கி வருகிறது.

**அரசு ஆணைகள்**

இந்த அரசின் குறிக்கோளான 'சொன்னதைச் செய்வோம்; செய் வதைச் சொல்வோம்' என்ற கருத் திற்கிணங்க - ஆட்சிப் பொறுப் பேற்பதற்கு முன்பே தேர்தல் அறிக்கை யில் வெளியிட்ட திட்டங்களை இளங்கலை வரை இலவசப் பட்டப் படிப்பு, வீட்டு மனை இல்லாத அனைத்துக் கிராமப்புற மக்கள் குடும்பத்திற்கு நிலப்பட்டா, ஆகியவை அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

1989-ஆம் ஆண்டில் இவ்வரசு பதவிக்கு வந்தபின், கொடுத்த அனைத்து வாக்குறுதிகளும் அரசு ஆணைகளாக வெளியிடப்பட்டுள்ளன,

உதாரணமாக, 45 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுத்தல் பற்றிய திட்டத்தைச் சொல்லலாம். அதைச் செயல்படுத்திய அரசாணை எண். 298, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 26.5.89 ஆகும். ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு 25 புதிய விடுதிகள் திறப்பதற்காகப் போடப்பட்ட அரசாணை எண்.826, ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 24.5.89-இல் ஆகும்.



இதுபோன்ற பல நலத் திட்டங்கள் இவ்வரசு பதவி ஏற்ற காலந்தொட்டே அரசு ஆணையாக வெளிவந்து செம்மையுறச் செயல்படுத்தப்படுகின்றன.

ஆதிதிராவிடர்களின் நலனை மேம்படுத்தும் திட்டங்களை நிறைவேற்றவும், சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி மற்றும் இதர மேம்பாட்டுத் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தவும், சட்டமன்ற, நாடாளுமன்ற, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் இதர மாவட்ட அரசு உயர் அலுவலர்களின் கருத்தை அறியும் பொருட்டு, இத்துறையின் அமைச்சர் என்ற முறையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி, அம்மாநாடுகளில் தெரிவிக்கப்பட்ட நல்ல கருத்துக்களை ஏற்று - மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி இத்துறை செவ்வனே செயல்பட தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இத்துறையானது இம்மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை மூன்று பிரிவாகப் பிரித்து, அவற்றைச் செவ்வனே செயற்படுத்தி வருகிறது. இவை முறையே கல்வி, பொருளாதார மேம்பாடு, வீட்டுவசதி மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவைகளாகும்.

நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த வரை இவ்வரசு இத்துறைக்கு அதிகமாகவே ஒதுக்கி உள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். 1988-89-இல், ரூ.66.54 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீட்டை 1989-90-இல் இவ்வரசு ரூ.79.06 கோடி என்ற அளவில் உயர்த்தியது. இருந்தாலும் செலவிடப்பட்ட தொகை ரூ.98.15 கோடியேயாகும். இத்துறையின் தேவையை முன்னிட்டு 1990-91-ஆம் ஆண்டில் ரூ.87 கோடியாக நிதி உயர்த்தப்பட்டது. மேற்கூறிய நிதி ஒதுக்கீடுகளே இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பணி ஆற்றி வருகிறது என்பதைத் தெளிவாக்கும்.

### எல்லோரும் ஓரினம்

ஆதிதிராவிடர் மக்கள் ஏனைய சமூகத்தினருக்கு இணையாகக் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மென்மேலும் முன்னேற்றம் அடைந்தால் தான் நன்கு வாழமுடியும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இதனை நன்கு உணர்ந்து, நிதி ஒதுக்கீட்டில் சுமார் 60 விழுக்காட்டைக் கல்விக்காக ஒதுக்கி உள்ளது தமிழக அரசு. 1988-89-இல் ரூ.36 கோடியாக இருந்ததை 1990-91-இல் 50 கோடியாக உயர்த்தியது. பெரும்பாலும் கிராமங்களில் வாழ்ந்துவரும் இம்மக்களுக்குக் கல்வி வசதி சரியாகக் கிடைக்க வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டுதான் இத்துறை சுமார் 1214 பள்ளிகளை இவர்களுக்கென்று பல்வேறு நிலைகளில் நடத்தி வருகிறது.

இப்படிப்பட்ட பள்ளிக்கூட வசதிகள் இருந்தால் மட்டுமே போதாதல்லவா? இவர்கள் தங்கிப் பயில சுமார் 883 மாணவ மாணவியர் விடுதிகளையும் இத்துறை நடத்தி வருகிறது. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும், கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமல்ல; தொழிற்கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவை எதிர்நோக்கி இவர்களுக்குக் கல்விக் கடன் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. இவ்வினத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு, மாவட்டத்தில் முதல் மதிப்பெண்களைப் பெற்றால் அவர்கள் ஊக்கத்தொகையாக ரூ.300 முதல் ரூ.1000 வரையும், கல்லூரிப் பட்டப்படிப்பு தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி போன்ற பட்டப் படிப்புகளில் 60 விழுக்காட்டிற்கு

**"கல்வி, பொருளாதார மேம்பாடு, வீட்டு வசதி மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை ஆதிதிராவிடர் நலத்துறை செவ்வனே செயல்படுத்தி வருகிறது."**

அவர்களுக்கு ரூ.500 - 1000 வரை ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

இவை தவிர அவர்களில் 10-வது வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் போன்ற பொருட்களும் கொடுக்கப்படுகின்றன. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குப் பாய், சோப்பு, எண்ணெய் போன்ற பொருட்களும் வழங்கப்படுகின்றன. பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குப் புத்தக வங்கிகள் மூலம் புத்தகங்கள் அளிக்கப்படுகின்றன.

### உயர் பதவிகளில் அங்கம்

இவ்வினத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணிகளில் உயர் பதவிகளில் மிகவும் குறைவாகவே அங்கம் வகிக்கிறார்கள். இவர்களும் இப்பணிகளில் சரிசமமான இடத்தை வகிக்க ஏற்றவகையில் இவர்களுக்கு என்று ஒரு முன்னோடித் தேர்வுப் பயிற்சி மையம் செயல்படுத்தப்பட்டு, அப்பயிற்சிமையம் மூலம் மாணவ மாணவியருக்கு முன் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதும் இங்கே பெருமையுடன் குறிப்பிடத் தக்கதாகும். கடந்த ஆண்டு மட்டும் இப்பயிற்சி மையத்தில் இருந்து 10 மாணவர்கள் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

படித்த இளைஞர்களுக்கு விமானப் பராமரிப்புப் பயிற்சி, கப்பல், வானொலி, அலுவலர் பயிற்சி, செவிலியர் பயிற்சி போன்ற பயிற்சிகளைத் தமிழ்நாடு தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பயிற்சிகள் இம்மாணவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பை நல்கும் என்பது திண்ணம்.

இம்மக்களின் சமூக முன்னேற்றம் அவரவர்கள் வாழும் பகுதியைப் பொறுத்தே அமைகிறது. பெரும்பான்மையான மக்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் சரிவர அமையவில்லை. உதாரணமாகக் குடிநீர் வசதி, இணைப்புச் சாலை வசதி, மயானம், மயானத்திற்குச் செல்லும் பாதை வசதி இல்லாத கிராமங்கள் இன்னும் கணிசமான தொகையில் இருக்கின்றன. இப்பகுதி மக்களுக்குத் தேவையான



"கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது; சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது".

— மூதறிஞர் ராஜாஜி

அடிப்படை வசதிகளை வழங்குவதற்காகக்கருணை உள்ளம்கொண்ட நமது மாண்புமிகு தமிழக முதல்வர் நடப்பு ஆண்டில் அமைக்கப்படும் மேல்நிலைத் தொட்டிகளில் 1000 தொட்டிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் தான் அமைக்க வேண்டுமென்றும், இதுபோல் 92-93 ஆண்டுகளிலும் அமைக்க வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளார்கள்.

### வீட்டுமனை வழங்கும் திட்டம்

மனிதனுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிடம் போன்ற வசதிகள் இன்னும் சரியான முறையில் கிடைக்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு தமிழகமெங்கும் இம்மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆண்டொன்றிற்கு முதற்கட்டமாக ரூ.2.50 கோடி அரசு மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் அதிகம் உள்ள பகுதியில் அவர்கள் முன்னேற்றத்திற்காகப் பல துறைகள் மூலம் தனித் திட்டங்கள் தீட்டி அவர்கள் வாழ்வு மேம்பாடடைய இவ்வரசு சீரிய முயற்சி பல எடுத்து வருகின்றது. இதற்காகக் கடந்த ஆண்டு 203.23 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 232.17 கோடி ரூபாய் செலவிட ஆணையிடப்பட்டுள்ளது.

### இட ஒதுக்கீடு

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் - அரசு மற்றும் அரசுத் துறைகளின் உயர் பதவிகளிலும் மற்ற பதவிகளிலும் இன்னும் சரியானபடி அங்கம் வகிக்கவில்லை என்பதை அறிந்து, இவர்களுக்கு எல்லாப் பதவிகளிலும் முன்னுரிமை கொடுக்கும்முகத்தான் தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலி இடங்களில் பிற இனத்தவரைக் கொண்டு பூர்த்தி செய்யும் முறைக்கு நேரடி நியமனத்திற்கு 1.4.89 முதல் தடை விதித்தும், பணிகளில் அவர்களின் பிரதிநிதித்துவம் 18 சதவிகிதம் எய்துவதற்குச் சிறப்பு நியமனம் செய்யும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சிறப்பு நியமனம் செய்வது குறித்துக் கண்காணிக்க அனைத்து அரசுத்துறைகள், நகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் கலந்து ஆலோசித்துக் காலியிடங்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு, சிறப்பு நியமனத்தின் மூலம் அக்காலியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு ஆணை வெளியிடப்பட்டது.

இவை தவிர, பழங்குடியினருக்கென்று தனியாக ஒரு சதவிகித இட ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமைக் கொடுமை பிற மாநிலத்தை ஒப்பிட்டு நோக்கும் பொழுது தமிழகத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது. இருந்தாலும், அக்கொடுமையை அகற்றத் தனிக் காவல்படைப் பிரிவு ஒன்று, ஒரு துணைக்காவல் தளபதியை உயர் அதிகாரியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

இதற்காகத் தனித் தடுப்புச் சட்டமும் அகில இந்திய அளவில் வகுக்கப்பட்டுள்ளது. அதனை இவ்வரசு செவ்வனே செயல்படுத்தி வருகின்றது. இத்தடுப்புச் சட்டத்தைச் செயல்படுத்த நடமாடும் காவல் படைப் பிரிவுகள் 25 செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தினை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தவும் மேலும் வலுப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மீது மைய அரசு வழங்கும் தொகை ஆதிதிராவிடர் நலப் பொருளாதாரத்திற்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றிற்காக மைய அரசு சிறப்பு மைய நிதி உதவியை 1980-ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. இதுவரை ரூ.126 கோடி

செய்திக் கூடை

## செங்கை-அண்ணா மாவட்டத்தில் மேம்பாட்டுப் பணிகள்

**செ**ங்கை-அண்ணா மாவட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 1,580 ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.79 இலட்சமும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் தலா ரூ.200 வீதம், 16,000 பேருக்கு ரூ.32, இலட்சமும் வழங்கப் பட்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 8,060 பேருக்கு இதுகாறும் ரூ.216 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கடன் தள்ளுபடித் திட்டத்தில் ரூ.32 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 40,030 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சி மன்றக் கட்டடங்கள், சாலைகள், பிற வளர்ச்சிப் பணிகள் ரூ.2.16 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்தகவலை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர் வியாஸ் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சிறப்பு மைய நிதி உதவியாக மைய அரசு இம்மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

**தாட்கோ**

இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே தான் முதன்முதலாக 1974-ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஆதி திராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒரு பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம், இம்மக்களுக்கு வீடுகள் கட்டவும், சிறு தொழில் புரிய கடன் வழங்கியும், சிறு விவசாயிகளுக்கு உதவியும், சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தும், தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இம்மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்யவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் சுமார் 127.70 கோடி ரூபாய் இம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இதுவரை செலவு செய்துள்ளது. இவை தவிர, வங்கியிலிருந்து 153.94 கோடி ரூபாய் கடனாகப் பெற்றும் கொடுத்துள்ளது. இக்கழகம் 1974-ஆம் ஆண்டு முதல் 1989-ஆம் ஆண்டு வரை ரூ.139 கோடி செலவில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளது. இவை தவிர, என்.ஆர்.இ.பி. மூலம் 951 வீடுகளும், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலம் 1,10,515 வீடுகளும், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 42 ஆயிரம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 47 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க முனைப்புடன் திட்டமிடப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் குடும்பங்களில் ஏற்படும் விழாக்களைக் கொண்டாட ஏற்ற வகையில் அவர்களுக்கென்று சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை சுமார் ரூ.90.80 இலட்சம் செலவில் 153 சமுதாயக் கூடங்கள் கட்டப் பட்டுள்ளன.

**பழங்குடியினர் துணைத் திட்டம்**

பழங்குடியினர் துணைத் திட்டம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக இவ்வரசினால் பல துறைகள் மூலம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பழங்குடியினர் மக்கள் தொகை 5.20 இலட்சமாகும். இதில் 2.10 இலட்சம் மக்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தும் இடங்களில் வாழ்கிறார்கள்.

மீதம் உள்ள 3.10 இலட்சம் மக்கள் தமிழ்நாட்டிலுள்ள பிற மாவட்டங்களில் பரவலாகச் சிதறி வாழ்கிறார்கள். மொத்தம் 9 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட வட்டங்கள் ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இவை முறையே தென்னார்க்காடு, வட ஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், திருச்சி, சேலம், தர்மபுரி மாவட்டங்கள் ஆகும். கடந்த 15 ஆண்டுகளாக இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 40,738 பழங்குடியினர் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் உயர வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இவை தவிர பரவலாக நாடெங்கும் சிதறி வாழும் பழங்குடி மக்களுக்கு என்று தனித் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குத் தனியொரு திட்டத்தின் கீழ்-மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் - பல முன்னேற்றத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

எல்லா மாநிலங்களிலும் பழங்குடி மக்களது நிலத்தை மற்றவர்கள் ஆக்கிரமிப்புச் செய்வதற்கும், அவர்களது நிலத்தை வாங்கவும் விற்பதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் இச்சட்டம் இவ்வரசால் இப்போது நிறைவேற்றப் பட்டுள்ளது. மேலும், பழங்குடியினர் தங்கள் விவசாய விளை பொருட்களை விற்கவும் விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கவும் பல கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்குக் குறுகிய, நீண்ட மற்றும் இதர கடன்களை எளிதில் வழங்குகின்றன.

இதனால் தங்கள் பொருளாதார நிலையைத் திடப்படுத்தியுள்ளார்கள் அவர்கள். கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் திட்டங்களின் கீழ் உள்ள இடத்தில் பதினாறும், ஒருங்கிணைந்த திட்டத்தில் சேராத பழங்குடியினர் வாழும் பகுதியில் இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு தமிழக அரசு., ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனை மேம்படுத்த மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரிய ஆலோசனைப்படி, இதுபோன்ற பல திட்டங்கள் தீட்டி, இம்மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாகவே செயல்பட்டு வருகிறது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.



# வாழவைக்கும் வங்கி

**த**மிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, 1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு தனது 84 ஆண்டு காலப் பயனுள்ள சேவையை நிறைவு செய்துள்ளது.

குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண்மைக் கடன்கள் வழங்குவதில் இந்த வங்கி மிக முக்கியமான பணியைச் செய்து மாநிலத்தின் பசுமைப் புரட்சிக்கு குறைவில்லாத சேவை புரிந்து வருகின்றது. மேலும் மாநிலத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை, நூற்பு ஆலைகளின் முன்னேற்றம், கோ-ஆப்டெக்ஸ் உள்ளிட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம், ஆகியவற்றுக்கும் இது, தனது பங்கான நிதியுதவி அளித்து வருகிறது.

பருவகால வேளாண்மை நடவடிக்கைகள், மத்தியகால வேளாண்மைக் கடன்கள், மத்தியகால மாற்றல் கடன்கள், நெசவாளர் கடன்கள், மகசூல் கொதுவைக் கடன்கள் ஆகியவற்றிற்கு, தேசிய வங்கி வழங்கும் நிதியுதவியை வழிமுறைபடுத்துவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உர வாணிபம், பொது வாணிபம், அத்தியாவசியப் பண்ட விநியோகம், மொத்த விலைக்கடைகள், ஊழியர் சங்கங்கள் ஆகிய நோக்கங்களுக்கு ஈடு செய்யக் கூடிய பொருளீட்டுக் கடன் வரம்புகளையும், சர்க்கரை மற்றும் நூற்பு ஆலைகள், பிரதம விவசாயக் கூட்டுறவு வங்கிகள், பிரதம நிலவள வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் மூலம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் சொந்த நிதியிலிருந்து வழங்கும் கடன்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்களையும் வழங்கி வருகிறது.

தேசிய வங்கியின் தானியங்கி மறுநிதியுதவித் திட்டத்தின்கீழ், பல்வேறு தேசியத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான பெருமளவிலான நிதியுதவித் திட்டம், சாண எரிவாயு உற்பத்தித் திட்டம் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் வடிவமைக்கும் வேளாண்மை தொடர்பான திட்டங்களுக்கும் வங்கி மறுநிதியுதவி வசதியை நீட்டித்து வருகிறது. அது மட்டுமல்லாமல், மத்தியக் கூட்டுறவு வங்கியின் பொது வங்கியியல் தேவைகளுக்காக, அரசு, நம்பகப் பிணையங்கள் மற்றும் நிலை வைப்பீடுகள் ஆகியவற்றின் பேரில், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நடப்புக் கணக்கில் மிகைப் பற்று வரம்புகளையும் அனுமதித்து வருகிறது.

நகர மத்திய கூட்டுறவு வங்கிகள் சிறுதொழில் நிறுவனங்கள், சிறு சாலைப் போக்குவரத்து இயக்குபவர்களுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவியின் கீழ், மத்திய நகரக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மறுநிதியுதவி வழங்கி வருகிறது.

இந்திய ரிசர்வ் வங்கியின் மறுநிதியுதவியின் கீழ், நகரக் கூட்டுறவு வங்கிகள் சிறுதொழில் நிறுவனங்களின் நடைமுறை மூலதனத்திற்கு உதவ, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மறுநிதியுதவி அளித்து வருகிறது.

தேசிய வங்கியின் மறுநிதியுதவியுடன் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, பண்ணையற்ற பிரிவின்கீழ் கிராமக் கைவினைஞர்கள், சிறு, கிராம, குடிசை மற்றும் சிறிய அளவிலான தொழில்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவியளிக்க தேசிய வங்கியின் மறுநிதியுதவியைப் பயன்படுத்தி, தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிதியுதவி அளித்து வருகிறது.

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் ஆகிய தலைமை நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியுதவியளிப்பதற்கென, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நேரடியாக நிதி உதவி அளித்து வருகிறது.

மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை நூற்பு ஆலைகளுக்கு, இவ்வங்கி, தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்து, நேரடித் தவணைக் கடன் வசதிகளை அளித்து வருகிறது.

கனரா வங்கியைத் தலைமையாகக் கொண்டு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தேசிய வங்கியின் கடன் அங்கீகாரமும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் முன் அனுமதியும் பெற்று, கூட்டிணைப்பு அடிப்படையில் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கு ரூ.2.50 கோடி பொருளீட்டுக் கடன் வழங்கியுள்ளது. குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் மீதான வட்டி குறைக்கப்பட்டதன் காரணமாக ஏற்படும் இழப்பை ஈடு செய்ய, பாரத ஸ்டேட் வங்கியைத் தலைமையாகக் கொண்ட மாநிலக் கூட்டுறவு வங்கியின் உணவுக் கடன் கூட்டிணைப்பு ஒன்றைத் தேசிய வங்கி அமைத்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் ஒப்புதலுடன் ரூ.5.00 கோடி வரையிலான உணவுக் கடன் கூட்டிணைப்பில் அக்டோபர் 1988-இல் வங்கி இணைந்துள்ளது.

நுகர்வோர் பொருட்களான தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி

## படித்தோம்

[illegible] 1.11.90 இதழின் குற்றாலத்தில் [illegible] வளர்ச்சிப் பணிகள் பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. [illegible] மன்றக் கட்டடம் உருவான [illegible] கட்டுரையும் சிறப்பாக [illegible].

—மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

[illegible] சிற்பி திரு. தேவ [illegible] அவர்களின் பேட்டிக் கட்டுரை சிறப்பாக இருந்தது. ஒரு [illegible] சிற்பக் கலைஞரின் கைத் [illegible] இந்தக் கட்டுரை விளக்கியது.

[illegible]

[illegible] இரண்டா [illegible] பட [illegible]

[illegible]

'மருத்துவ விந்தை' கட்டுரை படித்தேன். அசுர வேகத்தில் வளர்ந்து வரும் இன்றைய மருத்துவ உலகத்தைக் கண்முன் கொண்டு வந்தது. இதுபோன்ற மருத்துவக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டால் நல்லது.

—எஸ்.விவேகானந்தன்,
கும்பகோணம்.

மாணவர்களுக்கு நல்லறிவு புகட்டும் 'மாணவர் பக்கம்' அருமையாக உள்ளது. பொது அறிவுத் தகவல்களை நிறையத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—[illegible],
பேரணாம்பட்டு.

[illegible] டேலா [illegible] தொகுப்பு [illegible]

—[illegible],
[illegible].

[illegible]

நகர், அண்ணா நகர், கிள்ளியூர் இராயபுரம், திருவான்மியூர் கிளைகளில் புறக்குடியிருப்பாளர் கணக்கு வசதி அளிப்பதற்கான உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுள்ளது. 22.9.1990 முதல் வாடிக்கையாளர்களுக்கு இந்த வசதி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், "மூன்றாவது உலக வங்கி சேமிப்புக் கிடங்கு" திட்டத்தைச் செயல்படுத்தும் முகமையாக, இவ்வங்கி விளங்குகிறது. இதனால் பயனடையும் நிறுவனங்களின் எண்ணிக்கை 25. இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட, கட்டப்பட உள்ள சேமிப்புக் கிடங்குகளின் எண்ணிக்கை 58. இந்த திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.1275.05 இலட்சமாகும். இதில் கடன் பகுதி ரூ.637.05 இலட்சமாகும். சேமிப்புக் கிடங்கு வசதிகளுடன் கூடிய பிரதம வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் வேளாண்மைக் கூட்டுறவு ஊழியர் பயிற்சி நிறுவனம் ஒன்றை இவ்வங்கி துவக்கியுள்ளது.

வேளாண்மைக் கூட்டுறவு ஊழியர் பயிற்சி நிறுவனம் தற்பொழுது தற்காலிகமாக, அடையாறில் உள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தப் பயிற்சி மையத்திற்கென சென்னை மாதவரத்தில் அடிமனை அண்மையில் வாங்கப்பட்டுள்ளது.

1988-89-இல் ரூ.5.44 கோடி இலாபம் ஈட்டிய வங்கி, 1989-90-ஆம் ஆண்டில் ரூ.10.48 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. நடைமுறை மூலதனத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும், நிதியாதாரங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தியதுமே இந்த இலாபம் அதிகரித்ததற்கான காரணங்களாகும்.

1988-89 ஆம் ஆண்டில் வங்கி 14% ஈவுத் தொகை வழங்கியது. அதே அளவு ஈவுத் தொகையை 1989-90 ஆம் ஆண்டிற்கும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் வங்கி ஈட்டிய இலாபமானது நாட்டிலுள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஈட்டிய இலாபத்தில் மிக உயர்ந்ததாகும். மிக அதிகபட்சமான ஈவுத் தொகையும் இந்த வங்கி வழங்கியதே ஆகும்.

குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றை வாங்குவதற்கான கடன் வழங்கும் நுகர்வோர் கடன் திட்டத்தை, இவ்வங்கி, 1980-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் அறிமுகப்படுத்தியது. இக்கடன் வசதி வாடிக்கையாளர்களின் நீண்டகாலத் தேவையை நிறைவு செய்வதாக உள்ளது. மேலும், வணிக வங்கிகளுடன் வைப்பீடுகள் சேகரிப்பதில் ஏற்படும் கடும் போட்டியினைச் சந்திக்கவும் இக்கடன் வசதி உதவி புரிகிறது. இக்கடன் மீதான நிலுவை 30.6.1990 அன்றுள்ளபடி ரூ.0.60 கோடியாகும்.

மாநில, மத்திய அரசு நிறுவனங்கள் பள்ளிகள், கல்லூரிகள், தனியார், பொதுத்துறை நிறுவனங்களில் பணி புரியும் மாதாந்தரச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை 1979-ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவக்கியது. ஒரு ஊழியருக்கு வழங்கப்படும் அதிகபட்சக் கடன் தொகை ரூ.2,000 ஆகும். இந்தக் கடன் 24 தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

நகர கூட்டுறவு வங்கிகள், மாநில வரைவோலைத் திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் வசதி முதன் முதலில் 1979-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அளிக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள 133 நகரக் கூட்டுறவு வங்கிகளில், 100 பெரிய நகரக் கூட்டுறவு வங்கிகள் இத்திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றன.

சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் வங்கியியல் வசதிகளை அளிப்பதற்கென சென்னை நகரில் மொத்தம் 38 கிளைகளைத் துவக்கி சேவை புரிந்து வருகிறது. 30.6.1990 அன்றுள்ளபடி கிளைகள் மூலம் 2,59,761 வாடிக்கையாளர்களுக்குச் சேவை புரிந்து வருகிறது.

வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் தங்களது சேமிப்புகளை இந்தியாவில் முதலீடு செய்வதற்கு வசதியாக. இவ்வங்கி, தனது அடையாறு, அசோக்



# கோவை மாவட்டத்தில் பால் வளம்

**அ.மா. இராமன் இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர்
கோயம்புத்தூர் மாவட்டம்

கோவை மாவட்டத்தில் 1937-ஆம் ஆண்டு கூட்டுறவுப்பால் வழங்கும் ஒன்றியம் தொடங்கப்பட்டது. பின்னர் 1976ஆம் ஆண்டு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஒன்று பதிவு செய்யப்பட்டு செயல்படத் தொடங்கியது. பின் 1979ஆம் ஆண்டு பால் உற்பத்தியாளர் ஒன்றியமும், பால் வழங்கும் ஒன்றியமும் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டு, கோவை மாவட்டக் கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர் ஒன்றியமாகச் செயலாற்றி வருகிறது.

1982ஆம் ஆண்டு தேசியப் பால் வள வாரியம், கோவை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தைப் 'பால் பெருக்குத் திட்டத்திற்குள்' சேர்த்துக்கொண்டு சலுகைகளை வழங்கியது. அதாவது, 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் பால் பண்ணைக்குப் புதிய கட்டிடங்கள் கட்டவும், கருவிகள், பால் குளிர்வு நிலையங்களிலிருந்து பிரதானப் பால் பண்ணைக்குக் குளிர்விக்கப்பட்ட பாலை எடுத்து வரவும், வேறு மாவட்டங்களிலுள்ள உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் கூட்டுறவு இணையத்திற்கு உபரிப் பாலை அனுப்பப் பயன்படும் பால் டேங்கர்கள் மற்றும் நகர வினியோகத்திற்குப் பயன்படும் பால் வேன்கள் மற்றும் இதரத் தளவாடங்கள் ஆகியவற்றைப் பொருட்களாக தேசியப் பால்வள வாரியம் வாங்கி, ஒன்றியத்திற்கு வழங்கியது.

**மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம்-கிராமக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் வழி, பால் உற்பத்தியாளர்களுக்கு ஆற்றும் பணிகளாவன:**

- கிராமங்களில் அமைந்துள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேகரிக்கும் பாலை ஒன்றியம் பால் தடங்கள் அமைத்து லாரி, வேன்களின் மூலம் கோவை பிரதான பால் பண்ணைக்கும், சண்முகபுரம், சுல்தான்பேட்டை, திருப்பூர், அன்னூர் ஆகிய பால் குளிரூட்டும் நிலையங்களுக்கும் கொணர்கின்றது.
- நல்ல தரமுள்ள பாலைக் கொள்முதல் செய்யவும், சங்கங்களின் நிர்வாகம், தேவையான பதிவேடுகளைப் பராமரிக்க சங்கப் பணியாளர்களுக்குப் பயிற்சியும், அவ்வப் போது சங்க நடைமுறைகளைச் செம்மைப்படுத்த, மேற்பார்வை செய்ய விரிவாக்க உதவியாளர்களை ஒன்றியம் பணியில் அமர்த்தி சங்கங்களுக்கு உதவி செய்கின்றது.
- மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் அமைக்கபட்டு தொடங்கப்படும் கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கட்கு முதலாண்டு ரூ.2,000 நிர்வாக உதவித் தொகையாகவும், இரண்டாம் ஆண்டு ரூ.1,000 நிர்வாக உதவித் தொகையாகவும் வழங்கப்படுகின்றது.
- புதிய கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கட்கு இலவசமாகப் பால் பரிசோதனைப் பொருட்கள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை ரூ.1,500 மதிப்பிற்கு வழங்கப்படுகின்றன.
- கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கட்கு அங்கத்தினர் கறவையினங்கள் பயனடையும் பொருட்டு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி தகுதி பெற்ற ஒன்றியம் கால்நடை மருத்துவர்களால் 4 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் 231 சங்கங்கட்கு அளிக்கப்படுகிறது. கால்நடைகளுக்கு அவசரச் சிகிச்சை வசதியும் ஒன்றியம் அளிக்கின்றது.
- கிராமப் பால் கூட்டுறவுச் சங்கங்களில் செயற்கை முறைக் கருவூட்டல் திறம்பட நடைபெற, கிராமச் சங்கச் செயலர்களுக்குப் பயிற்சி நிலையங்கள் வழி 35 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மேற்படி செயற்கைக் கருவூட்டல் செய்ய தேவையான திரவ நைட்ரஜன் கடுவை, உறைவிந்து ஆகியவை ஒன்றியத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.
- கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கால்நடைகளுக்கு வரும் கால் கட்டு வாய்சப்பை நோயைத் தடுக்கத் தடுப்பூசி போடும் திட்டம் அனைத்துக் கிராமங்களிலும் நடத்தப்பெறுகிறது.
- கிராமக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் வைத்துள்ள தரிசு நிலங்கள் பயன்படுத்தப்பட 'கிசான் வனங்கள்' திட்டம் அமல்படுத்தப்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,000 மூன்று ஆண்டுகளுக்குப் பிரித்து முறையே ரூ.500, ரூ.250, ரூ.250 ஆக வழங்கப்படுகிறது.
- பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர்கள் மற்றும் முன்னோடி பால் உற்பத்தியாளர்கள் ஆகியோர் குஜராத் மாநிலம் 'ஆனந்தில்' கெய்ரா மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை - 'அமுல் பால் பண்ணை'-பார்வையிட்டு அங்குள்ள பல்வேறு பிரிவுகள், சங்கங்கள், சங்க நடைமுறைகள் ஆகியவற்றை அறிந்து வர அனுப்பப்படுகின்றனர்.
- எருமையின அபிவிருத்திக்கெனப்

## மண்டபம் அகதிகள் முகாமில்...

மண்டபம் முகாமில் தங்கியுள்ள அகதிகளின் மருத்துவ வசதிக்காக 20 படுக்கை கொண்ட ஒரு மருத்துவ மனை, இரண்டு மருத்துவ அதிகாரி களின் மேற்பார்வையில் தேவையான செவிலியர்களுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. பெண் மருத்துவ அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுப் பணிபுரிந்து வருகிறார்.

மண்டபம் முகாமில் செயல்பட்டு வரும் தொடக்கப் பள்ளியில் 320 குழந்தைகளே பயின்று வந்தனர். ஆனால் தற்போது கூடுதலாக ஆயிரத் திற்கும் அதிகமாகக் குழந்தைகள் அப்பள்ளியில் பயின்று வருகின் றனர். இக்குழந்தைகளின் கல்வி வசதிக்கென, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையின் படி, இம்மாவட்டத்திலுள்ள மற்ற பள்ளிகளிலிருந்து 10 ஆசிரியர்கள் இம் முகாமிலுள்ள பள்ளிக்கு மாறுதல் செய்யப்பட்டுப் பணி புரிந்து வருகின்றனர். இக்குழந்தைகள் அனை வருக்கும் பாடப் புத்தகங்களும், நோட்டுகளும் அரசின் செலவில் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது போலவே மேல் நிலைப்பள்ளியில் பயிலும் குழந்தைகள் இங்குள்ள பள்ளியில் அனுமதி வேண்டினால், உடனடியாகச் சேர்த்துக்கொள்ள கல்வித்துறை அலுவலர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

15.8.90 அன்று இரமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு அர. செல்லமுத்து, இ.ஆ.ப. அவர்கள் மண்டபம் முகாமிற்குச் சென்று அங்குள்ள 2,800 ஆண்களுக்கு வேட்டியும், 2,300 பெண்களுக்குச் சேலைகளும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த 1,190 ஆண் குழந்தை களுக்கும், 1,100 பெண் குழந்தை களுக்கும் துணிமணிகளையும் வழங்கினார். இதற்காக அரசு செல விட்ட தொகை ரூ.2 இலட்சத்து 40 ஆயிரம் ஆகும்.

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**இராமநாதபுரம் மாவட்டம்**



பாரம்பரியப் பரிசோதனைத் திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட 12 கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

★ கறவையினங்களுக்கு நியாயமான விலையில் தரம் வாய்ந்த கால் நடை கெட்டித் தீவனம் வழங்கப் படுகின்றது. பசும்புல் வளர்க்க, பசும்புல் கரணைகள் மற்றும் தீவன விதைகள் சங்க உறுப்பினர் களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுகின்றது.

**ஒன்றியத்தின் சாதனைகள்**

1. அமைக்கப்பட்டுள்ள சங்கங்கள் 448.
2. பால் கொள்முதல் (தினசரி) சராசரி (1989-90) 1,06,042 லிட்டர்.
3. பால் கொள்முதல் வழித் தடங்கள் 29.
4. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் 4.
5. கால்நடை மருத்துவ வசதி பெறும் சங்கங்கள் 231.
6. செயற்கை முறைக் கருவூட்டல் வசதி உள்ள சங்கங்கள் 153.
7. மின்னியல் பால் பரிசோதனைக் கருவி வழங்கப்பட்ட சங்கங்கள் 95.
8. ஒன்றியம் பராமரிக்கும் பால் குளிர்வு நிலையங்கள் 4.
9. உள்ளூர் விற்பனை தரப்படுத்தப் பட்ட பால் 72,000 லிட்டர்.
10. ஒன்றியப் பால பதனிடும் ஆலையின் தினசரி கையாளும் திறன் 1,00,000 லிட்டர்.
11. பசும்புல் பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 650 ஏக்கர்கள்.
12. மாதிரிப் பால் விளக்கப் பண்ணை 18.
13. மாதிரிப் புல் பண்ணைகள் 3.
14. ஒன்றியத்தில் பணியாற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை 356.
15. கடந்த ஆண்டில் ஒன்றியம் ஈட்டிய லாபம் (தோராயமாக) 2.82 இலட்சம்.

**ஒன்றியத்தின் வருங்காலச் சிறப்புத் திட்டங்கள்:**

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் மூலம் 1993-94-க்குள் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள்:

1. பால் கொள்முதல் (தினசரி) சராசரி 1,50,000 லிட்டர், 2. பால் விற்பனை (தினசரி) சராசரி 1,00,000 லிட்டர், 3. மொத்தப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் 550, 4. பயனடைய உள்ள மொத்த உறுப்பினர்கள் 85,000, 5. நட மாடும் கால்நடை மருத்துவப் பிரி வுகள் அவசர காலச் சிகிச்சைப் பணிகள் 8, 6. கால்நடை மருத்துவ வசதி பெற உள்ள சங்கங்கள் 325, 7. செயற்கை முறைக் கருவூட்டல் வசதி பெற உள்ள சங்கங்கள் 300, 8. விரிவுபடுத்தப்படவுள்ள பால் குளிர்வு நிலையங்கள் (அ) ஒன் றியத்தின் கீழ் இயங்கும் சண்முக புரம் பால் குளிர்வு நிலையம் தற் போதுள்ள தினசரி 10,000 லிட். கையாளும் திறனிலிருந்து 50,000 லிட். கையாளும் திறனுள்ளதாகவும், (ஆ) சுல்தான்பேட்டையில் அமைந் துள்ள தினசரி 10,000 லிட். கையாளும் திறனுள்ள பால் குளிர்வு நிலையம் 50,000 லிட். கையாளும் திறனுள்ளதாக விரிவுபடுத்தப் படும். 9. திட்ட முடிவுக் காலத்தில் வேலை வாய்ப்புப் பெறும் மொத்த ஊழியர்கள் சுமார் 500 பேர்.

மேற்கண்ட திட்டங்களுக்காக ரூ.2,75,66,000 செலவிடத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப் பிடப்பட்டுள்ள செலவினங்கள் தேசிய பால்வள வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்திலேயே மிக நல்ல முறையில் சேவை புரியும் கோவை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற் பத்தியாளர்கள் ஒன்றியம், கடந்த 1989-90-ஆம் ஆண்டுக்கான பாராட்டுக் கேடயம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



# விழியற்றோர் வாழ்வில் ஒளியேற்றும் முதல்வர்

"தமிழக முதல்வர் கலைஞரை, ாங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் றக்கவே மாட்டோம்" என்று ார்வையற்ற இளைஞரை மணந்து புதற்காக ரூ.6 ஆயிரம் நிதி உதவி பெற்ற இளம் பெண் கூறினார்.

இராமநாதபுரம் மாவட்டம் முது ளத்தூர் தாலுகா புளிகால் கிரா த்தைச் சேர்ந்த இளம்பெண் முத்தம்மா 28); இவர் அதே ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் (30) என்ற பார்வையற்ற இளைஞரைத் திருமணம் செய்து கொண்டார்.

இத்தம்பதிகளுக்கு ஒரு குழந்தை யும் உள்ளது.

ஆறுமுகமும் முத்தம்மாவும் தமிழ் நாட்டின் ஒரு மூலையான முது குளத்தூர் வட்டத்தில், மிகமிகச் சாதாரண நிலையில் வாழ்ந்து வரு கின்றனர். விழியற்றோர் வாழ் விலும் ஏதாவதொரு வழியில் ஒளி யேற்ற வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த விழியுள்ளோர் விழியற்றோரை மணந்தால் ரூ.6 ஆயிரம் என்ற அரசு உதவித்திட்டத்தின் கீழ் இவர் களுக்கு ரூ.6 ஆயிரம் நிதி உதவி யினை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அர.செல்லமுத்து அவர்கள் வழங்கினார்.

இத்தம்பதியினர் கூறும்போது- "முதல்வர் கலைஞர் அவர்களின் கருணை உள்ளத்தினால் எங்களைப் போன்றவர்களுக்கு இத்தகைய உதவி கிடைத்துள்ளது. கலைஞர் அவர்களை எங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டோம். இத்திட்டத்தின் மூலம் எங்களைப்போல் இன்னும் பலர் பயனடையப்போகிறார்கள் என்பதை எண்ணும்போது அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறோம். மேலும் இத்திட்டத் தினால் எத்தனையோ பார்வை யிழந்த ஆண்களுக்கும், பார்வை யிழந்த பெண்களுக்கும் நிச்சயம் அவர்கள் வாழ்வு இருண்டுவிடாது மற்றவர்களைப்போல் உலகில் வாழ்ந் திட ஒரு சந்தர்ப்பம்-ஒளி கிடைத் திடும் என்பதும் உண்மை" என்றார்.

இதுகுறித்து திரு. ஆறுமுகம் கூறும் போது "மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் எனக்குக் கொடுக்கப்பட்ட சேமிப்புப் பத்திரம் 5 ஆண்டுகளில் 11 ஆயிரம் ஆகும்; அதை மீண்டும் சிறுசேமிப்பில் முதலீடு செய்தால், 22 ஆயிரம் ஆகும். ஆக நானும் சமூகத்தில் எனக்கென்று ஒரு தகுதியை இதன் மூலம் பெற்றிட முடியும். இது போன்ற திட்டங்களை அறிவித்த தன்மூலம்— பார்வையற்றோர் பார்வை யுள்ளோரை மணந்திட ஊக்குவிப்ப தோடு, அவர்களுக்கும் சமூகத்தில் ஒரு இடத்தினைப் பெற்றுத்தந்திட தொலை நோக்குடன் செயல்படும் நமது தமிழக முதல்வர் அவர்களை எங்களைப்போல் எத்தனையோ உள்ளங்கள் வாழ்த்தும்".

"இந்த நிதியினை இவ்வளவு விரைவில் கிடைத்திட உதவிய மாவட்ட ஆட்சித்தலைவர்க்கும் மற்றும் உள்ள அதிகாரிகளுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று நெகிழ்வுடன் கூறினார்.

**வி.ஜி. பிரசாத்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்.**



மாணவர் பக்கம்

# சுற்றுச் சூழல்

அழகு பழனிச்சாமி

சுரங்கள் குவித்தே நில மகளின்
மண்ணைத் தொழுதிடுவோம்! —விரிந்த
காடு, கழனி, நிலத்தை யெல்லாம்
கடிதே உழுதிடுவோம்!
உரங்க ளோடு ஊட்டச் சத்தும்
உவந்தே வைத்திடுவோம்-பயிர்கள்
ஓங்கி உயர்ந்தே தழைத்துச் செழிக்கத்
தண்ணீர் பாய்ச்சிடுவோம்!

மரங்க ளோடு செடிகள் வளர
நாளும் உழைத்திடுவோம்-மணக்கும்
மலர்கள் பறித்துக் கனிகள் கொய்தே
மகிழ்ந்து திளைத்திடுவோம்!
தரணி எங்கும் சுற்றுச் சூழல்
தழைக்கச் செய்திடுவோம்-உழைப்பைத்
தருமச் செயலாய் மனத்தில் எண்ணித்
தானம் செய்திடுவோம்!

பச்சை மரங்கள், பசுமைத் தழைகள்
பரந்தே செழித்திடிலோ-உலகில்
பசியின் கொடுமை; நோயின் தீமை
பஞ்சாய்ப் பறந்திடுமே!
சுச்சித மாகச் சுற்றுச் சூழல்
தூய்மை பெற்றிடுமே-நாமும்
காலம் எல்லாம் நலமாய் வாழும்
பேறும் பெறுவோமே!

# 'பைபிள்' பிறந்தது!

பண்டைக் காலத்திலே நாகரிகம் பெற்று வாழ்ந்த மக்கள் எகிப்தியர்கள். பேபரஸை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள் அவர்களே. பேபரைஸ் (Papyrus) என்ற சொல்தான் இப்போது 'பேப்பர்' என்று வழங்கப்படுகிறது. பேபரைஸ் என்பது எகிப்து தேசத்துச் சதுப்பு நிலங்களிலும், தண்ணீர்த் தேக்கமுள்ள இடங்களிலும் வளர்ந்து வந்த ஒருவகைக் கோரைச் செடி. இந்தக் கோரை பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வளரும். இக்கோரைப் புற்களை அறுத்து, பட்டையை உரித்து ஒரே அளவாக நறுக்கிப் பதப்படுத்தி, வெயிலில் வைத்து உலர்த்திப் பயன்படுத்தினர். பின்னர்ப் பேபரைஸ் என்னும் அக்கோரையின் பெயரே நிலைத்து நின்றது.

கிரேக்க தேசத்தார் பேபரைஸ் சுருள்களைப் பிப்லியன் (Biblion) என்று கிரேக்க மொழியில் வழங்கினர். இச்சொல்லுக்குச் சுவடி (புத்தகம்) என்பது பொருள். உரோமர்கள் தமது இலத்தீன் மொழியில் பைபிள் (Bible) என்று வழங்கினர். பைபிள் என்றாலும் சுவடி என்பது தான் பொருள். எனவே, நூல் அல்லது சுவடி என்னும் பொருள் உடைய பைபிள் என்னும் சொல், முற்காலத்தில் பொதுவாக - வழங்கப்பட்டு, பின்னர் கிறிஸ்துவ வேத நூலுக்குச் சிறப்புப் பெயராயிற்று.

—டாக்டர் இராம. சுப்பிரமணியன், எழுதிய 'நூலகம்' என்னும் நூலிலிருந்து

## கரப்பான் பூச்சிகளால் அலர்ஜி ஏற்படும்

கரப்பான் பூச்சிகள். இவை பார்த்தாலே அருவருப்பை உண்டாக்குவது மட்டுமல்ல; 'அலர்ஜி' எனப்படும் ஒவ்வாமை நோயையும் ஏற்படுத்தக் கூடியவை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அமெரிக்காவில் மட்டும் சுமார் ஒன்றரை கோடிப் பேருக்குக் கரப்பான் பூச்சிகளால் ஒவ்வாமை ஏற்படுகிறது என்று அமெரிக்கத் தேசிய மருத்துவக் கழகத்தில் நடத்தப்பட்டுள்ள பல்வேறு ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கரப்பான் பூச்சி 'அலர்ஜி' உள்ளவர்களுக்கு அவர்களது உணர்வுத்திறன்களுக்குத் தக்கபடி பாதிப்புகள் உண்டாகின்றன. மூக்கடைப்பு, ஜலதோஷம், தோலில் அரிப்பு போன்ற சாதாரண விளைவுகள் பலருக்கு ஏற்படலாம். மிகவும் நுட்பமான உணர்வுகள் உள்ளவர்களுக்கு மூச்சடைப்பு கூடத் தோன்றக்கூடும். அதனால் ஏற்படும் அதிர்ச்சியின் விளைவாகவே சிலர் இறந்துபோகவும் நேரிடலாம்.

தாய்லாந்து, தாய்வான் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட இதுபோன்ற ஆய்வுகளிலும் இதே போன்ற முடிவுகளே தெரியவந்துள்ளன.

முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கரப்பான் அலர்ஜி அதிகமாக இருப்பதாக மற்றோர் ஆய்வு கூறுகிறது. நீண்டகாலம் கரப்பான்களுடன் உறவாடியதன் விளைவாக இது இருக்கலாம் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. வீட்டிலேயே அதிக நேரத்தைக் கழிக்கும் பெண்களுக்கு, இந்த அலர்ஜி இன்னும் அதிகமாக இருக்குமாம்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்



# அறிவியல் மேதை எடிசன்



—சி. பிரகாஷ்

ஆயிரத்து முன்னூறுக்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளுக்கு உரிமம் பெற்றவர் உலகப் புகழ்பெற்ற தாமஸ் ஆல்வா எடிசன். அவர் அமெரிக்காவிலுள்ள ஓஹியோ மாநிலத்தில், மிலன் என்னும் கிராமத்தில் 1847-ஆம் ஆண்டில் பிறந்தார்.

பள்ளியில் அதிகக் கல்வியறிவு பெறவில்லையென்றாலும், தன் தாயாரிடம் நிறையக் கற்றுத் தேர்ந்தார். சிறுவயது முதல், கருவிகள் சம்பந்தப்பட்ட பொருள்களின் மீதே அதிக கவனமும், ஈடுபாடும் கொண்டிருந்தார்.

தன்னுடைய பன்னிரெண்டாம், வயதில் அப்பாவின் தோட்டத்தில் காய் கறித் தோட்டங்கள் அமைத்து, அவற்றிலிருந்து கிடைப்பதை விற்பனையும் செய்து வந்தார். இந்த வருவாயில்,தன் பெற்றோர்களைக் கவனித்துக் கொண்டதுடன் பள்ளிப் படிப்பிற்குத் தேவையான பாடப் புத்தகங்களையும், மற்றும் தன் ஆய்வுக்கு மிகவும் இன்றியமையாத கருவிகளையும் வாங்கி வந்தார். தன்னுடைய வியாபாரத்தை மேலும்விரிவாக்கம்செய்ய விரும்பினார். எனவே அருகிலுள்ள டெட்ராய்டிற்கும் சென்று வாடிக்கை பிடித்தார். ரொம்பத் தொலைவில் இல்லாவிட்டாலும், புகை வண்டியில் சிறிது தூரம் பயணம் செய்ய வேண்டும். பயணம் செய்யும் நேரத்தை வீணாக்காமல் எடிசன் தான் செல்லும் வண்டியில் சிறிய சோதனைகளையும், மேலும் செய்தித்தாள்கள் விற்பனையையும் செய்து வந்தார்.

செய்தித்தாள் விற்பனையில் வெற்றி ஏற்படவே தானாகவே ஒரு பத்திரிகை தொடங்க வேண்டும் என்று எண்ணினார். "வீக்லி ஹெரால்ட்" என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அதன்- ஆசிரியர், செய்தியாளர், பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர் போன்ற எல்லாப் பொறுப்புக்களையும் அவரே ஏற்றார்.

பின்பு 1869-ஆம் ஆண்டு நியூயார்க் நகரத்திற்குக் குடிபெயர்ந்தார். அங்குள்ள ஒரு "கோல்ட் மற்றும் ஸ்டாக்" தந்தி நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கிருந்து கொண்டே தந்தி முறைக்குத் தேவையான சில புதிய கண்டுபிடிப்புகளையும் செய்தார். மேலும் தன் கண்டுபிடிப்புகளில் ஒன்றை நாற்பது ஆயிரம் பவுண்டிற்கும் விற்றார்.

ஒரு சிறிய கருவிகள் ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவினார். அதாவது இன்றைய நிலையில் அதை ஓர் ஆராய்ச்சிக்கூடம் என்றே சொல்லலாம். இந்த ஆய்வுக் கூடத்திலும் தந்தி தொடர்பான கண்டு பிடிப்பு முயற்சிகள் தொடர்ந்து செய்யப்பட்டன. அதன் விளைவாக 1875-ஆம் ஆண்டு, ஒரே கம்பியில் ஒரே நேரத்தில் நான்கு தந்திச் செய்திகள் அனுப்பும் நுட்பங்களைக் கண்டுபிடித்தார்.

தன்னுடைய கூடத்தை ஒரு மத்திய ஆராய்ச்சிக் கூடமாக ஆக்க வேண்டி, 1876-ஆம் ஆண்டு நியூஜெர்சியிலுள்ள மென்லோ தோட்டத்திற்கு இடம் பெயர்ந்தார். மேலும் இந்த ஆண்டில்தான் தொலைபேசியில் சில புதிய மாறுதல்களையும் கண்டுபிடித்து அதை மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்பட ஆக்கினார்.

எடிசனின் எண்ணம் எப்போதும் ஏதாவதொரு புதிய கருவியைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஒரு தூண்டுதலாகவே இருந்தது. ஆகவே அவர் சிறு வயது முதல் தான் கண்டுபிடிக்கும் கருவிகளின் மீதே கவனம் செலுத்தினாரே யன்றி, அந்தக் கருவியில் என்ன விதிகள், கொள்கைகள் அடங்கியிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்யவில்லை. இது அவரிடத்திலிருந்த ஒரு குறையென்றே கூறலாம். எடிசன் தன்னுடைய கண்டுபிடிப்புகளை மக்களின் கவனத்திற்கும், பார்வைக்கும் முதலில் கொண்டுவர வேண்டுமென்று எண்ணினார். அதில் ஒன்றுதான் மின்சார விளக்கு. ஆனால் எடிசனின் விதியைக் கொண்டு மின்சார விளக்கு தயாரிப்பது என்பது இயலாது என்று விஞ்ஞானிகள் கருதினர். ஆயினும் எடிசன் தன்னுடைய விடா முயற்சியின் காரணமாக - சுமார் 1600 வெவ்வேறு வகையான பொருட்களை விளக்கிலுள்ள மின்சார "இழை"க்குப் பயன்படுத்தி ஒரு வழியாக விளக்கை வடிவமைத்தார்.

1879-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி அவர் வடிவமைத்த மின்சார் விளக்கு 40 மணிநேரம் எரிந்தது. பின்பு 1880-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி மெனிலோ பூங்காவில் பொதுமக்களின் பார்வைக்கெனப் பெரியதொரு ஏற்பாடும் செய்திருந்தார். இதன் விளைவாகத் தான் "எடிசன் மின்சார விளக்கு நிறுவனம்" பிறந்தது.

இன்று நாம் காணும் திரைப்படக் கருவிக்கும் வித்திட்டவரும் எடிசன்தான். 1887-ஆம் ஆண்டு "கைனெடோஸ்கோப்" என்ற திரைப்படக் கருவியைக் கண்டுபிடித்தார்.

எடிசனின் கண்டுபிடிப்புகளை வரிசைப் படுத்துவதென்றால், அவ்வளவு எளிதான பணி அல்ல. தாதுப் பொருள்களின் மின் காந்தப் பிரிப்பகத்திலிருந்து வாடகைக்குக் கார் அளவுமானி (Taximeter) வரை அவருடைய கண்டு பிடிப்புகள் நீண்டு கொண்டே போகும். இவரது கண்டு பிடிப்புகளின் காரணமாக நியூஜெர்சியில் கருவிகள் தயாரிக்கும் ஒரு பெரிய தொழிற்சாலை அரங்கமே உருவாயிற்று.

### புத்தகசாலை வீட்டிலும் வேண்டும்

நமது வீடுகளில் கூடம், பாதுகாப்பான அறை - படுக்கை அறை - சமையலறை - பூஜை அறை - இவை எல்லாம் இருக்கும். புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஒரு அறை - தேடிப் பாருங்கள், மிகமிகக் கஷ்டம். பல வீடுகளிலே தூண்களின் மீது, சாளரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில் சில புத்தகங்கள் இருக்கும். ஆனால் புத்தக சாலை உண்டா?

—பேரறிஞர் அண்ணா

# நூல்நயம்

## தென்குமரி தந்த திருவள்ளுவர்

**ஆசிரியர்:** டாக்டர் எஸ். பத்மநாபன்,
**வெளியீட்டோர்:**
குமரன் பதிப்பகம்,
20, ஸ்டேட் பாங்க் காலனி,
நாகர்கோவில்-629 001.

விலை:ரூ.10 பக்கம்: 80

இந்நூல் ஒரு அரிய ஆய்வுப் படைப்பு. திருவள்ளுவப் பெருந்தகையின் அருமை பெருமைகளை நூல் முழுவதும் அறிந்து மகிழ்சியடைகிறோம். தக்க மேற்கோள்களும் கூறப்பட்டுள்ளன. ஆராய்ச்சி மாணவர் மட்டுமல்ல, மற்றவர்களும் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

## ஊரெங்கும் மனிதர்கள்

**ஆசிரியர்:** பா. இராமமூர்த்தி
**வெளியீட்டோர்:**
திலகம் வெளியீடுகள்
5-ஏ, வெங்கடேச சௌத்ரி தெரு,
தாம்பரம், சென்னை-600 045.

பக்கம்:158 விலை:ரூ.20

ஒரு படைப்பு வெற்றி பெற கருப்பொருள், தெளிந்த நோக்கு, சொல்லும் இயல்பு, உண்மை நிகழ்ச்சி, வாழ்க்கைக்குத் தேவைப்படும் அனுபவ முத்திரைகள் மிகத் தேவை என்பதை உணர்ந்து நூலாசிரியர் இந்த அரிய நூலைப் படைத்துள்ளார். இந்நூலில் மனித-வாழ்வு என்னும் நாடக மேடையை மிக அற்புதமாக அமைத்து, அந்த மேடையில் ஆடுகின்ற மனிதர்களாகப் படிப்போரை ஆக்கி உள்ளது பாராட்டுக்குரியதாகும்.

— பொன். சுப்பையா

**ஒரு புத்தகம் என்பது மாய விளக்காகும். மனிதனுக்கு அவனது வாழ்க்கையின் மிக நெடிய மற்றும் இருண்ட பாதை ஊடே வெளிச்சத்தைக் கொடுப்பதாகும்.**

**-அன்ட்ரேஜ் உபிட்ஜ்**

## டாக்டர் தயாவின் சிறுகதைகள்

**ஆசிரியர்:** அருள்திரு டாக்டர்
தி. தயானந்தன் பிரான்சிஸ்
**வெளியீட்டோர்:**
கிறிஸ்தவ இலக்கியச்சங்கம்,
பூங்கா நகர்,
சென்னை-600 003.

விலை:ரூ.25 பக்கம்:266

"சமுதாயத்தில் தாம் கண்ட அபூர்வக் காட்சிகளையும், செவியேற்ற அதிசயச் செய்திகளையும் கருவாக வைத்து இக் கதைகளை வடித்திருக்கிறார்'' என்று இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய முது பெரும் எழுத்தாளர் நாரண. துரைக் கண்ணன் அவர்கள் கூறியிருப்பது முற்றிலும் பொருந்தும்.

இந்நூலில் 31 சிறுகதைகள் உள்ளன. நூலாசிரியர் பல்வேறு புனைபெயர்களில் கடந்த 40 ஆண்டுகளாக எழுதிய சிறு கதைகளின் தொகுப்பே இந்நூல். பொன்னி, சிரஞ்சீவி, இமயம், காதல், பிரசண்ட விகடன், முல்லை முதலான அக்கால இதழ்களில் வெளிவந்த அரிய படைப்புகள் இவை.

முதல் கதை 'மஞ்சள் கயிறு' முகத்துக்குப் பொட்டு வைத்தாற்போன்று முத்தாய்ப்பாக விளங்குகிறது. புனிதமான காதலில் இரு உள்ளங்களைப் பிரதிபலிப்பதுதான் 'மனித தெய்வம்' என்னும் சிறுகதை. ஏழையின் எளிமையான, இனிமையான, உண்மைக்காதலை வெளிப்படுத்துகிறது 'ஏழையின் காதல்' என்னும் கிராமத்துக் கதை.

நகைச்சுவை இழைந்தோடும் இவரது சிறுகதைகளில் மனிதர்களின் மனப் போக்கு வெகு தத்ரூபமாகச் சித்திரிக்கப் படுகிறது. நாளும் நாம் சந்திக்கும் பல மனிதர்கள் இவரது கதைகளிலே நடமாடுகிறார்கள். குடிகார மனிதர், சமூக நாடகம், அவருக்கு வந்த வாழ்வு ஆகிய கதைகள். நல்லாசிரியர் ஒருவரின் வாழ்வைப் பல கோணங்களில் படம் பிடிக்கின்றது 'சில பார்வைகளும் ஒரு நோக்கும்' என்னும் சிறுகதை.

சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதி வேற்றுமைகளைச் சாடுகிறது 'இன்ப ரோஜா'. இதேபோல, பெண் உள்ளத்தைச் சித்திரிக்கும் கதைதான் 'இக்கரைப் பச்சை'. இப்படி இந்நூலில் இடம் பெற்றுள்ள பல கதைகள் சமுதாயப் பிரச்சினைகளை அலசுகின்றன.

தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு, ஆசிரியர் கதையை நடத்திச் செல்லும் பாங்கு பாராட்டுக்குரியது. ஆழமான கருத்து, அழகிய உவமை, வார்த்தை ஜாலங்கள் இல்லாத வளமான நடை கதைகளுக்கு வலுவூட்டுகின்றன.

காலத்தின் கண்ணாடியாக விளங்கும் இக்கதைகள், சமூக நீதியைப் போதிக்கின்றன. சிறுகதை உலகில் சிறப்பிடம் பெற்றுள்ள இந்நூலாசிரியரின் சிறுகதைகள் எல்லாமே சிந்தனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

— பி.வி. கிரி

## ஆற்றல்மிகு அணுசக்தி

**ஆசிரியர்:** டாக்டர் சோ. சேசாசலம்
**வெளியீட்டோர்:**
ராஜேஸ்வரி புத்தக நிலையம்,
22, 6வது தெரு, பக்தவத்சலம் நகர்,
பழவந்தாங்கல், சென்னை-600 114.

பக்கம்:88 விலை:ரூ.10

அணுசக்தி என்பது என்ன? அணுமின் நிலையங்களில் மின்சாரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது. அணுமின் நிலையங்களால் விபத்துகள் எப்படியெல்லாம் நேரக்கூடும்? அவற்றைத் தவிர்ப்பது எப்படி? அமெரிக்காவிலிருந்து செர்நோபிள் வரை ஆபத்துகள் நேர அடிப்படைக் காரணங்கள் யாவை?... என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் ஆன விடைகளின் தொகுப்பாக விளங்குகிறது இந்த நூல்.

சுவீடன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் அணுமின் நிலையங்கள் அடியோடு மூடப்பட்டு விட்டாலும் மின் தட்டுப்பாடில்லை; ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளில் அணுமின் திட்டம் கைவிடப்பட்டிருந்தும் மின்சாரத் தன்னிறைவு உள்ளது. கல்பாக்கம் அணுமின் நிலையம் எப்படி அமைந்திருக்கிறது? கூடங்குளம் நிலையம் எவ்வாறு அமையவிருக்கிறது என்றெல்லாம் மிகத் தெளிவான புள்ளி விவரங்களோடு எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

மின் அணுவியலில் 200-க்கும் குறைவான தொழிற்சாலைகளே 1976 வரை ஈடுபட்டிருந்தன என்ற விவரம் தரப்படுகிறது. அதன் பின் உருவான அவ்வகைத் தொழில்களின் விவரங்களையும் தொகுத்தளித்திருக்கலாம்.

அறிவியலில் ஆர்வமுள்ளோருக்கு இந்த நூல் மிகவும் உதவக் கூடும்.

—பி.எல்.ஆர்.

**மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை, ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன், நமது மனதை உருவாக்க உதவுகின்றன.**

**—பேரறிஞர் அண்ணா**



# தொழில் தொடங்கும் முனைவோருக்குத் தனிச் சலுகைகள்

## முதல்வர் கலைஞர்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 107 இடங்கள் பின்தங்கிய பகுதிகளாகத் தமிழகத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளை மத்திய அரசு தங்களுடைய பொறுப்பிலே ஏற்றுக்கொண்டு, அங்கே தொழில்கள் வளர உதவி செய்வதுண்டு. ஆனால், நாங்கள் 1989-லே பொறுப்பேற்றுக் கொண்டபோது, அப்படிப்பட்ட நிலை எடுக்க இயலாது என்று மத்திய அரசு அறிவித்துவிடவே, நாங்கள் உடனடியாக 107 பகுதிகளைத் தமிழகம் முழுதும் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித்தோம். அப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகச் சேர்ந்திருந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனைப் பகுதிகள் அறிவிக்கப்பட்டன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 19 பகுதிகள்–ஏனென்றால் தஞ்சை மாவட்டம் தொழில் வளத்தைக் காணாத மாவட்டம்–அங்கே வேளாண்மைத் தொழில்தான் முக்கியத் தொழில், சிறந்த தொழில் - அனைவரும் ஆர்வத்தொடு ஈடுபடுகின்ற தொழில், ஓர் ஆறுமாதம் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுவிட்டு, ஆறுமாத காலம் ஓய்வெடுத்துக் கொள்கிறவர்கள் தஞ்சை மாவட்டத்திலே நிரம்ப உண்டு. எனவேதான், அந்த ஆறுமாத காலம் தொழில்துறையிலே ஈடுபட வேண்டும் என்ற காரணத்துக்காகத் தஞ்சை மாவட்டத்திலே 19 இடங்களைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்தோம்; அதே நேரத்திலே, தமிழ் நாட்டிலேயே தஞ்சைக்கு அடுத்தபடி இராமநாதபுரம் மாவட்டத்திலேதான் 12 இடங்கள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

**''தொழில்துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகள், பிற்படுத்தப்பட்ட பகுதிகள் என்று இருகூறாகப் பிரித்து, அங்கெல்லாம் தொழில் தொடங்குகிறவர்களுக்கு உரிய சலுகைகளை அளிக்க இந்த அரசு முன்வந்தது.''**

**— முதல்வர் கலைஞர்**

காமராசர் மாவட்டம் ஏற்கனவே ஓரளவு தொழில்துறையிலே வளர்ந்திருக்கின்ற காரணத்தால்- அங்கே 'திருச்சுழி' என்கின்ற ஒரு பகுதியும், பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்தில் திருப்பத்தூர், தேவகோட்டை, இளையான்குடி, சிவகங்கை, காரைக்குடி, ஆகிய இடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், இராமநாதபுரம், கமுதி, திருவாடானை, பரமக்குடி, இராமேசுவரம் ஆகிய இந்தப்பன்னிரண்டு பகுதிகள் இந்த மொத்த முகவை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 107 பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டும்கூட நான் எதிர்பார்த்த அளவிற்குத் தொழில் முனைவர்கள் தொழில்களைத் தொடங்க முன்வராத காரணத்தால், அதையும் ஓர் ஆய்வு செய்தோம்.

ஆய்வு செய்து, ஏன் இந்த இடங்களிலெல்லாம் தொழில் முனைவோர்கள் ஊக்கத்தோடு வரவில்லை என்பதைக் கண்டறிந்து அந்த 107 இடங்களில் 31 இடத்தை மிகவும் பின்தங்கிய இடமாகத் தேர்ந்தெடுத்தோம். எப்படிப் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற இரண்டு பிரிவுகள் தமிழ்நாட்டிலே மாத்திரம்தான் இருக்கின்றனவோ, அதைப்போலத் தொழில்துறையிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகள், பிற்படுத்தப்பட்ட பகுதிகள் என்று இருகூறாகப் பிரித்து அங்கெல்லாம் தொழில் தொடங்குகிறவர்களுக்கு உரிய சலுகைகளை அளிக்க இந்த அரசு முன்வந்தது. அந்தச் சலுகைகளை நான் உங்களுக்குச் சொல்லும்போது, இங்கே தொழில் தொடங்க முயற்சிக்கின்றவர்களுக்கு - விருப்பமுள்ளவர்களுக்கு அது தேவையாக இருக்கும் என்ற காரணத்தால் ஒன்று இரண்டு மாத்திரம் உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக அறிவிக்கப்பட்டுள்ள 107 வட்டங்களில் தொடங்கப்படும் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு மாநில முதலீட்டு மானியமாகப் பத்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.15

# நூல் நயம்

### தென்குமரி தந்த திருவள்ளுவர்

**ஆசிரியர்:** டாக்டர் எஸ். பத்மநாபன்,
**வெளியிட்டோர்:**
குமரன் பதிப்பகம்,
20, ஸ்டேட் பாங்க் காலனி,
நாகர்கோவில்-629 001.

விலை:ரூ.10 பக்கம்: 80

இந்நூல் ஒரு அரிய ஆய்வுப் படைப்பு. திருவள்ளுவப் பெருந்தகையின் அருமை பெருமைகளை நூல் முழுவதும் அறிந்து மகிழ்சியடைகிறோம். தக்க மேற்கோள்களும் கூறப்பட்டுள்ளன. ஆராய்ச்சி மாணவர் மட்டுமல்ல, மற்றவர்களும் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

### ஊரெங்கும் மனிதர்கள்

**ஆசிரியர்:** பா. இராமமூர்த்தி
**வெளியிட்டோர்:**
திலகம் வெளியீடுகள்
5-ஏ, வெங்கடேச சௌத்ரி தெரு,
தாம்பரம், சென்னை-600 045.

பக்கம்:158 விலை:ரூ.20

ஒரு படைப்பு வெற்றி பெற கருப்பொருள், தெளிந்த நோக்கு, சொல்லும் இயல்பு, உண்மை நிகழ்ச்சி, வாழ்க்கைக்குத் தேவைப்படும் அனுபவ முத்திரைகள் மிகத் தேவை என்பதை உணர்ந்து நூலாசிரியர் இந்த அரிய நூலைப்படைத்துள்ளார். இந்நூலில் மனித-வாழ்வு என்னும் நாடக மேடையை மிக அற்புதமாக அமைத்து, அந்த மேடையில் ஆடுகின்ற மனிதர்களாகப் படிப்போரை ஆக்கி உள்ளது பாராட்டுக்குரியதாகும்.

— பொன். சுப்பையா

**ஒரு புத்தகம் என்பது மாய விளக்காகும். மனிதனுக்கு அவனது வாழ்க்கையின் மிக நெடிய மற்றும் இருண்ட பாதை ஊடே வெளிச்சத்தைக் கொடுப்பதாகும்.**

**-அன்ட்ரேஜ் உபிட்ஜ்**

### டாக்டர் தயாவின் சிறுகதைகள்

**ஆசிரியர்:** அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
**வெளியிட்டோர்:**
கிறிஸ்தவ இலக்கியச்சங்கம்,
பூங்கா நகர்,
சென்னை-600 003.

விலை:ரூ.25 பக்கம்:266

"சமுதாயத்தில் தாம் கண்ட அபூர்வக் காட்சிகளையும், செவியேற்ற அதிசயச் செய்திகளையும் கருவாக வைத்து இக் கதைகளை வடித்திருக்கிறார்" என்று இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய முது பெரும் எழுத்தாளர் நாரண. துரைக் கண்ணன் அவர்கள் கூறியிருப்பது முற்றிலும் பொருந்தும்.

இந்நூலில் 31 சிறுகதைகள் உள்ளன. நூலாசிரியர் பல்வேறு புனைபெயர்களில் கடந்த 40 ஆண்டுகளாக எழுதிய சிறுகதைகளின் தொகுப்பே இந்நூல். பொன்னி, சிரஞ்சீவி, இமயம், காதல், பிரசண்ட விகடன், முல்லை முதலான அக்கால இதழ்களில் வெளிவந்த அரிய படைப்புகள் இவை.

முதல் கதை 'மஞ்சள் கயிறு' முகத்துக்குப் பொட்டு வைத்தாற்போன்று முத்தாய்ப்பாக விளங்குகிறது. புனிதமான காதலில் இரு உள்ளங்களைப் பிரதிபலிப்பதுதான் 'மனித தெய்வம்' என்னும் சிறுகதை. ஏழையின் எளிமையான, இனிமையான, உண்மைக்காதலை வெளிப்படுத்துகிறது 'ஏழையின் காதல்' என்னும் கிராமத்துக் கதை.

நகைச்சுவை இழைந்தோடும் இவரது சிறுகதைகளில் மனிதர்களின் மனப்போக்கு வெகு தத்ரூபமாகச் சித்திரிக்கப்படுகிறது. நாளும் நாம் சந்திக்கும் பல மனிதர்கள் இவரது கதைகளிலே நடமாடுகிறார்கள். கடிகார மனிதர், சமூக நாடகம், அவருக்கு வந்த வாழ்வு ஆகிய கதைகள். நல்லாசிரியர் ஒருவரின் வாழ்வைப் பல கோணங்களில் படம் பிடிக்கின்றது 'சில பார்வைகளும் ஒரு நோக்கும்' என்னும் சிறுகதை.

சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதி வேற்றுமைகளைச் சாடுகிறது 'இன்ப ரோஜா'. இதேபோல, பெண் உள்ளத்தைச் சித்திரிக்கும் கதைதான் 'இக்கரைப் பச்சை'. இப்படி இந்நூலில் இடம் பெற்றுள்ள பல கதைகள் சமுதாயப் பிரச்சினைகளை அலசுகின்றன.

தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு, ஆசிரியர் கதையை நடத்திச் செல்லும் பாங்கு பாராட்டுக்குரியது. ஆழமான கருத்து, அழகிய உவமை, வார்த்தை ஜாலங்கள் இல்லாத வளமான நடை கதைகளுக்கு வலுவூட்டுகின்றன.

காலத்தின் கண்ணாடியாக விளங்கும் இக்கதைகள், சமூக நீதியைப் போதிக்கின்றன. சிறுகதை உலகில் சிறப்பிடம் பெற்றுள்ள இந்நூலாசிரியரின் சிறுகதைகள் எல்லாமே சிந்தனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

— பி.வி. கிரி

### ஆற்றல்மிகு அணுசக்தி

**ஆசிரியர்:** டாக்டர் சோ. சேசாசலம்
**வெளியிட்டோர்:**
ராஜேஸ்வரி புத்தக நிலையம்,
22, 6வது தெரு, பக்தவத்சலம் நகர்,
பழவந்தாங்கல், சென்னை-600 114.

பக்கம்:88 விலை:ரூ.10

அணுசக்தி என்பது என்ன? அணுமின் நிலையங்களில் மின்சாரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது. அணுமின் நிலையங்களால் விபத்துகள் எப்படியெல்லாம் நேரக்கூடும்? அவற்றைத் தவிர்ப்பது எப்படி? அமெரிக்காவிலிருந்து செர்நோபிள் வரை ஆபத்துகள் நேர அடிப்படைக் காரணங்கள் யாவை?... என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் ஆன விடைகளின் தொகுப்பாக விளங்குகிறது இந்த நூல்.

சுவீடன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் அணுமின் நிலையங்கள் அடியோடு மூடப்பட்டு விட்டாலும் மின் தட்டுப்பாடில்லை; ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளில் அணுமின் திட்டம் கைவிடப்பட்டிருந்தும் மின்சாரத் தன்னிறைவு உள்ளது. கல்பாக்கம் அணுமின் நிலையம் எப்படி அமைந்திருக்கிறது? கூடங்குளம் நிலையம் எவ்வாறு அமையவிருக்கிறது என்றெல்லாம் மிகத் தெளிவான புள்ளி விவரங்களோடு எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

மின் அணுவியலில் 200-க்கும் குறைவான தொழிற்சாலைகளே 1976 வரை ஈடுபட்டிருந்தன என்ற விவரம் தரப்படுகிறது. அதன் பின் உருவான அவ்வகைத் தொழில்களின் விவரங்களையும் தொகுத்தளித்திருக்கலாம்.

அறிவியலில் ஆர்வமுள்ளோருக்கு இந்த நூல் மிகவும் உதவக் கூடும்.

—பி.எல்.ஆர்.

**மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை, ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன், நமது மனதை உருவாக்க உதவுகின்றன.**

**—பேரறிஞர் அண்ணா**



# தொழில் தொடங்க முனைவோருக்குத் தனிச் சலுகைகள்

## முதல்வர் கலைஞர்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 107 இடங்கள் பின்தங்கிய பகுதிகளாகத் தமிழகத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இப்படிப் பட்ட பின்தங்கிய பகுதிகளை மத்திய அரசு தங்களுடைய பொறுப்பிலே ஏற்றுக்கொண்டு, அங்கே தொழில்கள் வளர உதவி செய்வதுண்டு. ஆனால், நாங்கள் 1989-லே பொறுப்பேற்றுக் கொண்டபோது, அப்படிப்பட்ட நிலை எடுக்க இயலாது என்று மத்திய அரசு அறிவித்துவிடவே, நாங்கள் உடனடியாக 107 பகுதிகளைத் தமிழகம் முழுதும் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித்தோம். அப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகச் சேர்ந்திருந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனைப் பகுதிகள் அறிவிக்கப்பட்டன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 19 பகுதிகள் - ஏனென்றால் தஞ்சை மாவட்டம் தொழில் வளத்தைக் காணாத மாவட்டம் - அங்கே வேளாண்மைத் தொழில்தான் முக்கியத் தொழில், சிறந்த தொழில் - அனைவரும் ஆர்வத்தொடு ஈடுபடுகின்ற தொழில், ஓர் ஆறுமாதம் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுவிட்டு, ஆறுமாத காலம் ஓய்வெடுத்துக் கொள்கிறவர்கள் தஞ்சை மாவட்டத்திலே நிரம்ப உண்டு. எனவேதான், அந்த ஆறுமாத காலம் தொழில்துறையிலே ஈடுபட வேண்டும் என்ற காரணத்துக்காகத் தஞ்சை மாவட்டத்திலே 19 இடங்களைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்தோம்; அதே நேரத்திலே, தமிழ் நாட்டிலேயே தஞ்சைக்கு அடுத்தபடி இராமநாதபுரம் மாவட்டத்திலேதான் 12 இடங்கள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

காமராசர் மாவட்டம் ஏற்கனவே ஓரளவு தொழில்துறையிலே வளர்ந்திருக்கின்ற காரணத்தால்-அங்கே 'திருச்சுழி' என்கின்ற ஒரு பகுதியும், பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்தில் திருப்பத்தூர், தேவகோட்டை, இளையான்குடி, சிவகங்கை, காரைக்குடி, ஆகிய இடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், இராமநாதபுரம், கமுதி, திருவாடானை, பரமக்குடி, இராமேசுவரம் ஆகிய இந்தப்பன்னிரண்டு பகுதிகள் இந்த மொத்த முகவை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 107 பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டும்கூட நான் எதிர்பார்த்த அளவிற்குத் தொழில் முனைவர்கள் தொழில்களைத் தொடங்க முன்வராத காரணத்தால், அதையும் ஓர் ஆய்வு செய்தோம்.

ஆய்வு செய்து, ஏன் இந்த இடங்களிலெல்லாம் தொழில் முனைவோர்கள் ஊக்கத்தோடு வரவில்லை என்பதைக் கண்டறிந்து அந்த 107 இடங்களில் 31 இடத்தை மிகவும் பின்தங்கிய இடமாகத் தேர்ந்தெடுத்தோம். எப்படிப் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற இரண்டு பிரிவுகள் தமிழ்நாட்டிலே மாத்திரம்தான் இருக்கின்றனவோ, அதைப்போலத் தொழில்துறையிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகள், பிற்படுத்தப்பட்ட பகுதிகள் என்று இருகூறாகப் பிரித்து அங்கெல்லாம் தொழில் தொடங்குகிறவர்களுக்கு உரிய சலுகைகளை அளிக்க இந்த அரசு முன்வந்தது. அந்தச் சலுகைகளை நான் உங்களுக்குச் சொல்லும்போது, இங்கே தொழில் தொடங்க முயற்சிக்கின்றவர்களுக்கு - விருப்பமுள்ளவர்களுக்கு அது தேவையாக இருக்கும் என்ற காரணத்தால் ஒன்று இரண்டு மாத்திரம் உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக அறிவிக்கப்பட்டுள்ள 107 வட்டங்களில் தொடங்கப்படும் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு மாநில முதலீட்டு மானியமாக பத்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.1

**"தொழில்துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகள், பிற்படுத்தப் பட்ட பகுதிகள் என்று இருகூறாகப் பிரித்து, அங்கெல்லாம் தொழில் தொடங்குகிறவர்களுக்கு உரிய சலுகைகளை அளிக்க இந்த அரசு முன்வந்தது."**

**— முதல்வர் கலைஞர்**

இலட்சம் வழங்கப்படும். 'சிப்காட்' தொழில் வளாகங்களிலும் மற்றும் தொழில் மையங்களிலும் தொடங்கப்படுகிற நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு மாநில முதலீட்டு மானியமாகப் பதினைந்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.20 இலட்சம் வழங்கப்படும்.

நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலே தொடங்கினாலும் சிறப்பு மானியமாகப் பத்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.

மின்னணு மற்றும் தோல் பொருள்களுக்குச் சிறப்பு மானிய உதவி, முன்னோடித் தொழில்களுக்கு மானிய உதவி, வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம், ஜெனரேட்டர்கள் வாங்குவதற்குக் கடனுதவி, ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கு மானிய உதவி, சாத்தியக் கூறு அறிக்கைகள் தயாரிப்பதற்கு மானிய உதவி, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிப்புத் தளவாடங்களுக்கு மானிய

> "நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலே தொடங்கினாலும் சிறப்பு மானியமாகப் பத்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்."
>
> — முதல்வர் கலைஞர்

உதவி, முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்கு, மின்சாரக் கட்டணத்தில் தள்ளுபடி என்பதாகப் பல சலுகைகள் அளிக்கப்பட்டன.

1989' ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நாங்கள் பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் 'டிட்கோ' கூட்டு முயற்சியில் இதுவரை மொத்தம் 11 தொழிற்சாலைகள் 211 கோடி ரூபாய் முதலீட்டிலும், தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் முயற்சியில் 3 தொழிற்சாலைகள் ரூ.8 கோடி முதலீட்டிலும், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் ஊக்கமளிப்புடன் 5 தொழிற்சாலைகள் ரூ.18 கோடி முதலீட்டிலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறையினரால் ஒரு தொழிற்சாலை 5 கோடி ரூபாய் முதலீட்டிலும், சிறு தொழில் துறையினரால் ஒரு தொழிற்சாலை 1.5 கோடி ரூபாய் முதலீட்டிலும் மொத்தம் கழக ஆட்சி வந்த இந்த 22 மாதங்களில் 24 பெரிய தொழிற்சாலைகள் 296 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ளன என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பட்டியலில் இந்தப் பின்தங்கிய பகுதியும் சேர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மிகப் பெருந்தொழில்களாக 'நாப்தா கிராக்கர்' தொழிற்



> "வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும்; உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும்; உடல் உள்ளம் இரண்டிலும் உள்ள நோய்தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும்."
>
> — அறிஞர் அண்ணா

சாலைக்குத் தேசிய முன்னணி அரசு இருந்த காலகட்டத்திலே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

அதுபோலவே 1300 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட ஆரோமேட்டிக் தொழிற்சாலைக்கும் தேசிய முன்னணி அரசு இருந்த காலத்திலே எல்லா விதமான சாங்ஷன்களும் முடிவுற்று அனுமதி வர இருந்த தறுவாயில் அரசு மாறி இருக்கிறது. ஆனால் புதியதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அரசு, இந்தியாவிலே எந்த மாநிலத்திலே தொழில் வளர்ந்தாலும் சரி என்ற நோக்கத்தோடு ஆரோமேட்டிக் தொழிற்சாலை, நாப்தா கிராக்கர் தொழிற்சாலை தமிழகத்திற்குத் தரப்பட்ட தொழிற்சாலைகள் இரண்டும் இணைந்து ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவிலுள்ள தொழிற்சாலைகள் - அவைகளை அனுமதிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்- நம்புகின்றேன்.

அதுமாத்திரமல்ல, பம்பாயிலிருந்து 'காஸ் பைப் லைன்' ஒன்று கர்நாடகம், தமிழகம், கேரளம் ஆகிய இந்த மாநிலங்களுக்கெல்லாம் கூட உதவக்கூடிய அளவிற்கு வரவேண்டும் என்ற ஒரு கருத்தை நான் ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது தெரிவித்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலே அது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, மறுபடியும் ஏற்றுக்கொள்ளப்பட்டு - அது இப்போது ஆய்விலே இருக்கிறது.

அந்தப் பைப் லைன் தென்னகத்திற்கு வரும். குறிப்பாகத் தமிழகத்திற்கு வரும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

(27.11.90 அன்று, கீழக்கரையில் நடைபெற்ற பின்தங்கிய பகுதிகள் தொழிற்கல்வி-தொழில் வளர்ச்சி மாநாட்டில் பேசியது).

### நியாய விலைக்கடைகளில் அரிசி விலை குறைப்பு

★ முன்பு நியாய விலைக்கடைகளில் வழங்கப்பட்டு வந்த அரிசி மோட்டா ரகம் ரூ.2.00-க்கும், சன்னரக அரிசி ரூ.2.75-க்கும், மிகச் சன்னரக அரிசி ரூ.3.75-க்கும் விற்கப்பட்டது. டிசம்பர் 1-ஆம் தேதி முதல் மோட்டா ரகம் ரூ.2.00-க்கும் சன்னரகமும் மிகச் சன்னரகமும் சேர்த்து விலை குறைக்கப்பட்டு, இரண்டு ரகமும் ரூ.2.50-க்கும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



# பாவேந்தர் கவிதைகள் நாட்டுடைமை ஆகின்றன!

## முதல்வர் கலைஞர் அறிவிப்பு

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகிறது.

நூற்றாண்டு விழாத் தொடக்கத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர்-முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது போலவே, புரட்சிக் கவிஞர் அவர்களின் எழுத்தோவியங்கள் நாட்டுடைமையாகின்றன. இதற்காகப் புரட்சிக் கவிஞர் அவர்களின் குடும்பத்தாருக்கு அரசு 8 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்குகிறது.

இதுபற்றித் தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு விவரம் வருமாறு:

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நிகழ்த்தி வரும் தமிழக அரசு, பாவேந்தரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற திட்டத்தையும் மேற்கொண்டுள்ளது. பாவேந்தரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தின் அடிப்படையில் பாவேந்தர் அவர்களின் மகன் திரு மன்னர்மன்னன், மகள்கள் திருமதி. சரசுவதி, திருமதி. வசந்தா ஆகியோரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.2 இலட்சமும், மறைந்த திருமதி. இரமணி அம்மையார் அவர்களின் பிள்ளைகள் அனைவர்க்கும் ரூ.2 இலட்சமும் பரிவுத் தொகையாகத் தந்து சிறப்பிப்பது எனவும் அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. பாவேந்தரின் நூல்களை உரிமை பெற்றுப் பதிப்பித்து வந்த புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் செந்தமிழ் நிலையம், சென்னை பாரி நிலையம் ஆகிய பதிப்பகங்களும், ஒபபந்த அடிப்படையில் நூல்களை வெளியிட்டு வந்த சென்னை பூம்புகார் நிலையமும் வைத்துள்ள பாவேந்தர் நூல்கள் வெளியிடும் உரிமைகளைத் தமிழக அரசு பெறுகிறது.

**5-12-90** முதல் பாவேந்தரின் நூல்கள் அரசிற்கு உரிமையுடையவை ஆகின்றன. 1.11.1991 முதல் இந்நூல்கள் அனைத்தும் நாட்டு மக்கள் அனைவர்க்கும் பொதுவுரிமை ஆகின்றன.'

'இதனை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். பாவேந்தரின் குடும்பத்தார்களுடனும், பதிப்பகங்களுடனும் மாண்புமிகு முதலமைச்சர் கலந்து பேசிய பிறகு இந்த மகிழ்ச்சிகரமான முடிவு எடுக்கப்பட்டது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூல்களைத் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியதற்காகவும், அதற்கென 8 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கியதற்காகவும்-பாவேந்தர் அவர்களின் மகன் திரு. மன்னர்மன்னன், மகள்கள் திருமதி சரசுவதி, திருமதி வசந்தா மற்றும் அவரது குடும்பத்தார்- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்துப் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்துக் கொண்டார்கள் (11.12.90).





மகாகவி பாரதியாரின் 109-வது பிறந்தநாள் விழாவையொட்டி (11.12.90) சென்னை-மெரினா கடற்கரையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு.கண்ணப்பன், மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு மற்றும் அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்தார்கள்.

# படமும் செய்தியும்

மூதறிஞர் இராஜாஜி 112-வது பிறந்த நாளையொட்டி கிண்டியிலுள்ள இராஜாஜி நினைவாலயத்தில் அவரது உருவச்சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாலை அணிவித்தார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கோ.சி. மணி, திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. கே. என். நேரு, திரு. க. சுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சா. கணேசன், திரு. ஆர். எஸ். ஸ்ரீதர், செய்தித்துறை இயக்குநர் திரு. க. முத்துசாமி இ.ஆ.ப. ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். (10.12.90)





பாவேந்தர் நூற்றாண்டு:

# மலரும் நினைவுகள்

## உவமைக் கவிஞர் சுரதா

**உவமைக் கவிஞர் சுரதா அவர்கள், நாடறிந்த நற்கவிஞர். புரட்சிக் கவிஞர் பூஞ்சோலையில் பூத்த நறுமலர். 'சுவரும் சுண்ணாம்பும்' போல் புரட்சிக்கவிஞரோடு இணைந்து, அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டியவர். 'தேன்மழை'யாய் தெள்ளுத்தமிழ்க் கவிதையால், கவிதை உலகின் மகுடமாய் விளங்குபவர். 'வாழையடி வாழையாக' வந்த திருக்கூட்டம் என்பதுபோல, பாரம்பரியம் மிக்க பாவேந்தர் பரம்பரையிலே வந்த பாட்டுப் புலவன்.**

**பாரதிக்கு ஒரு தாசன் - பாரதிதாசன்; அந்தப் பாரதிதாசனுக்கு ஒரு தாசனாக விளங்கும் சுப்புரத்தினதாசனுக்கு - சுரதா - உவமைக் கவிஞர் சுரதாவுக்கு - தமிழக அரசின் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கிச் சிறப்பித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அவரைச் சந்தித்தோம். அந்தச் சந்திப்பில் ஏற்பட்ட சிந்தனைச் சிதறல்களே இவை.....**

தமிழ்ப்பூக்காட்டில், புரட்சி மலர்க்கவிதைகள் பூத்துக் குலுங்கிய புதுவை மண்ணில் தோன்றிய விடிவெள்ளிதான். பாவேந்தர் பாரதிதாசன்.

### எளிமையும் புதுமை நோக்கும்

மகாவித்துவான் பெரியசாமிப் பிள்ளை மாணவர்கள் 19 பேர் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர்தான் நம்முடைய பாவேந்தர்; மகாவித்துவான் பெரியசாமிப் பிள்ளைக்குப் பெரும்புகழ் தந்தவரே பாவேந்தர்தான். பெரியசாமிப் பிள்ளையின் மாணவர்களுள் பங்காரு பத்தர் என்பவரும் ஒருவர். அவரிடமும் பாவேந்தர் பாடங்கேட்டார். பங்காரு பத்தரின் எளிமையும், பாரதியாரின் புதுமை நோக்கும் பாவேந்தரைக் கவர்ந்தன. அவற்றை வாழ்க்கையில் இறுதிவரை கடைப்பிடித்தும் வந்தார்.

பாவேந்தர், தம் கவிதையைப் போலவே எளிமையாக வாழ்ந்தார், வாழ்ந்தும் காட்டினார். 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்' என்ற பாரதியார் வாக்கிற்கிணங்க, அவர் எல்லாரையும் மதித்தார். அந்தஸ்து பார்க்க மாட்டார். தெருவில் போகிறவனையும், 'இவனே....' என்று கூப்பிட்டு, தம் பாட்டைப் பாடிக் காட்டி, 'நல்லா இருக்கா?' என்று கேட்பார். அவன்



'நல்லா இருக்கு' என்று சொன்னதும் மகிழ்ச்சி கொள்வார். இப்படி இவரது பாடல் தெருவிலேயே அரங்கேற்றம் ஆகும்!

பாவேந்தர், யானையைப் போல கம்பீரமாக நடப்பார். நிதானம் தவறமாட்டார். அவசரப்பட மாட்டார்.

அவரது உணர்வு தமிழ் உணர்வு. இறுதிவரை அந்த உணர்வே அவருக்கு உணவாகியது. 'தமிழன்



*அறிஞர்தம் இதய ஓடை*
*ஆழநீர் தன்னை மொண்டு*
*செறிதரும் மக்கள் வெள்ளம்*
*செழித்திட ஊற்றி ஊற்றிக்*
*குறுகிய செயல்கள் தீர்த்துக்*
*குவலயம் ஓங்கச் செய்வாய்!*

நாட்டை ஆளவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். 'எல்லாத் துறைகளிலும் தமிழனே வரவேண்டும்' என்பது அவரது தணியாத தாகம்.

## பாட்டுலகில் ஒரு புரட்சி

அவருக்குப் பேசும் மேடையே வீட்டுத் திண்ணை தான். திண்ணையில் உட்கார்ந்துகொண்டு எல்லாரிடமும் மனம்விட்டுப் பேசுவார். தம் சிந்தனையையும் கூறுவார். பிறகு அதைக் கவிதையாக்குவார்.

ரிக்ஷாக்காரன், விறகுவெட்டி எல்லோரையும் கூப்பிட்டுப் பேசுவார். அவர்களுடைய பெயர் வடமொழியில் இருந்தால், அதைத் தமிழில் வைத்துக்கொள்ளும்படி கூறுவார். தமிழ் உணர்வு அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்துக்கொண்டே இருக்கும்.

அதேபோல, மொழிப் பற்றும் அவரது உயிரில் கலந்திருந்தது. பாரதிதாசன் பரம்பரையை உருவாக்கிய 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கு, அந்தப் பெயரை வைத்தவரே பாவேந்தர்தான்.

எல்லாச் சொல்லும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று கூறுவார். நூல் தலைப்பும்கூட தமிழில் இருக்க வேண்டும் என்பார்.

கீர்த்தனைகள் என்பது இறைவனையும், மன்னனையும் புகழ்ந்து பாடவுமே அன்று இருந்தது. அதை மாற்றியமைத்தவர் பாவேந்தர். அவர் வண்டிக்காரனுக்கும், தபால்காரனுக்கும், பூப்பறிப்பவனுக்கும் கீர்த்தனைகள் பாடி பாட்டுலகில் ஒரு புரட்சியையே உண்டாக்கினார். ஆம். எல்லாத் தொழில் துறைக்கும் கீர்த்தனை - இசைப்பாடல்கள் கொண்டு வந்த பெருமை இவருக்கு உண்டு. இது ஒரு பெரிய திருப்பம். 'இசையமுது' என்னும் நூலில்,

''அதோ பாரடி அவரே என் கணவர்
புதுமாட்டு வண்டி ஓட்டி
போகின்றார் என்னை வாட்டி''

— என்று மாட்டு வண்டிக்காரனைப் பாடுகிறார்.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளுக்குப் பிறகு, கவிதைகளில் தமிழேகோலோச்சவேண்டும் என்று நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்தவர் பாவேந்தர்தான்.

## கவிதையிலேயே நாடகம்!

'எதிர்பாராத முத்தம்' தான் 'பொன்முடி' என்னும் நெடுங்காவியம். இது திரைப்படமாக வெளிவந்தது. இதற்குமுன் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் 'மனோன்மணீயம்' திரைப்படமாகியுள்ளது. ஆனால் அப்போது அவர் இல்லை. ஒரு காவியம், முதன்முதலில் வாழும் காலத்திலேயே - திரைப்படமாகியது பாவேந்தருடையதுதான் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

பாவேந்தர் அவர்கள் தனிப்பாடல்கள் நிறைய எழுதியுள்ளார். பாவேந்தர் உணவகத்திற்குச் செல்வார். அங்கு யாரேனும் இவரைப் பார்த்து, 'ஐயா, ஒரு பாட்டு தாங்க!' என்று கேட்பார்கள். உடனே அங்கேயே ஒரு பாட்டை எழுதித் தருவார். இப்படி ஏராளமான பாடல்கள் சேர்ந்தன.

தமிழ்நாட்டில் உரையாடலின்றி, முழுக்க முழுக்க கவிதையிலேயே நாடகம் எழுதியவர் பாவேந்தர் பாரதிதாசன்தான். அதுதான் 'புரட்சிக் கவி' என்னும் கவிதை நாடகம். 1944-இல் சேலத்திலும், நாமக்கல்லிலும் ஆறு நாட்கள் இந்த நாடகம் நடந்தது. இந்திய வரலாற்றில், இலக்கிய உலகில் கவிதையிலேயே 2 மணி நேரம் நாடகம் நடந்தது, அதுவே முதல் தடவை. இந்த நாடகத்துக்குத் தந்தை பெரியார் அவர்கள் தலைமை வகித்துப் பாராட்டினார். இதேபோல, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், சேலம் அரசினர் கலைக் கல்லூர் முதல்வர் இராமசாமி கவுண்டர் ஆகியோர் இந்த நாடகத்துக்கு ஒவ்வொரு நாளும் தலைமை வகித்து வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள். இந்த நாடகத்தில் நானும் நடித்திருக்கிறேன் என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

இந்நாடகத்தில் வரும் ஒரு உரையாடல்:-

தோழி: கன்னம் சிவக்கக் காரணம் என்ன?
தலைவி: புன்னை மலர்கள் இன்னல் புரிந்தன!
தோழி: ஆடை அவிழக் காரணம் என்ன?
தலைவி: ஓடும் மான் கொம்பால் ஈடழிந்தது.

— இவ்வாறு இந்தக் கவிதை உரையாடல் தொடரும்.

## பன்மொழியில் பாடல்கள்

பாவேந்தர் காலத்திலேயே அவரது படைப்புகள் பன்மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. தெலுங்கு, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்பட்டு இருக்கின்றன. பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களும், எஸ். வேதரத்தினம் அவர்களும் பாவேந்தரின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். கமில்சுவலபில் என்னும் செக்கோஸ்லோவேகியா தமிழறிஞர் தம் மொழியில், பாவேந்தர் கவிதைகளை மொழிபெயர்த்து உலகறியச் செய்துள்ளார்.

தம் நூலுக்கு 'அணிந்துரை' வேண்டும் என்று யார் வந்து கேட்டாலும், அதற்குத் தடை சொல்லாமல் எழுதித் தருவார். 'நிறைய படியுங்கள்' என்று



ஊக்கப்படுத்துவார். கடற்கரைக்கு அழைத்துப் போய், 'நிலவுப் பாட்டு எழுதப் போறேன், நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்பார்.

'பத்திரிகைக்குத் தலைப்பு என்ன வைக்கலாம்?' என்று கேட்பார்: 'இந்தக் கவிதைக்கு என்ன தலைப்பு வைத்தால் நல்லா இருக்கும்?' என்றும் யோசனை கேட்பார். அதற்கு அவர்கள் சொன்ன தலைப்புகள் நன்றாக இருந்தால், அதையே வைத்துவிடுவார். திறமையை, தகுதியை மதிக்கும் பண்பு அவரிடம் மிகுதியாக இருந்தது.

ஒருசமயம், திரு முருகு சுப்பிரமணியம் அவர்களிடம் ஒரு கவிதையைக் கொடுத்து அதற்குத் தலைப்பு வைக்கும்படி கேட்டார். அவர் அதற்கு 'ஒரே குறை' என்ற தலைப்புத் தந்தார். அதையே அவர் அந்தக் கவிதைக்குத் தலைப்பாக வைத்தார்.

## அறிவியல் நோக்கு படைத்தவர்

பாவேந்தர் பாடல்களில் அறிவியல் நோக்கு மிகுதியாக இருந்திருக்கின்றது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. மூடப்பழகக வழக்கங்கள் ஒழிய வேண்டும், புதுமைகள் மலரவேண்டும் என்று கனவு கண்டு, அந்தக் கனவு நனவாகும் வகையிலே கவிதைகள் படைத்திட்ட பாவேந்தர், அறிவியல் கருத்துகளையும் கவிதைகளிலே இழையவிட்டிருக்கிறார்.

சூரியனும், சந்திரனும் தனித்தனி என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், அப்படியல்ல என்பதை.

''காலை வந்த செம்பரிதி-
கடலில் மூழ்கி
கனல் மாறி குளிரடைந்த
ஒளிப் பிழம்போ?''

— என்று அவை இரண்டும் ஒன்று என்று தெளிவுபடுத்துகிறார்.

இந்தியாவிலேயே முதல்தடவையாக 1930-லேயே குடும்பநலம் குறித்த செய்தியை - கவிதையை எழுதியவரும் பாவேந்தரேதான்.

''காதலுக்கு வழி வைத்துக்
கருப்பாதை சாத்த
கதவொன்று கண்டறிவோம்''

- என்று அன்றே சொன்னார். அவர் சொன்னது இன்று நடைமுறைக்கு வந்துள்ளது. என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

## சிந்தனையே எழுப்பிவிடும்!

பாவேந்தர் அவர்கள் நன்றாக உடுத்துவார். அதைப்போல நன்றாகச் சாப்பிடவும் செய்வார். அதுமட்டுமல்ல, தன்னுடன் இருப்பவர்களை, 'நீயும் நன்றாகச் சாப்பிடு' என்பார். சுவையாக இல்லையென்றால், 'அதை வைச்சிடு' என்பார். பாவேந்தர் புலால் உணவைச் சுவைத்து உண்பார்.

ஒருவன் உள்ளத்தை - உணர்வைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்தவர் பாவேந்தர். அவர் புறா



*தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்*
*தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்*
*தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே*
*சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!*

வளர்த்தார். பூவின் அழகை ரசிப்பார். எதையும் கூர்ந்து பார்ப்பார். இவையெல்லாம் அவரது இனிய இயல்புகள்.

இராமலிங்க அடிகள் நள்ளிரவில்தான் படிப்பார்; எழுதுவார். அதைப்போல, பாவேந்தர் நள்ளிரவில்தான் அதிகம் படிப்பார். மக்கள் உறங்கிக் கொண்டிருக்கிற வேளையில், இவர் விழித்திருந்து எழுதுவார்.

படுக்கையில், தலையணையின்கீழ், தாள்கள் வைத்திருப்பார். சிந்தனை வந்ததும் எழுந்து உட்கார்ந்துகொண்டு எழுதுவார். பொழுது விடிந்ததும், 'ஐயா' என்று சத்தம் போட்டு அவரை யாரும் எழுப்ப வேண்டியதில்லை. சிந்தனையே அவரை எழுப்பிவிடும்.

## கடற்கரையில் கவிதை வரும்!

ஒரு கவிஞன், கடற்கரைக்குப் போய் நிலவைப் பார்த்துவிட்டு எழுதுவானாம்.

பாரதியார், கடலைப் பார்த்துவிட்டு, எழுதுவாராம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஓடுகிற தண்ணீரை, வெள்ளத்தைப் பார்த்துவிட்டு எழுதுவாராம்.

பாவேந்தர் பாரதிதாசன் கடற்கரையில், நிழல் சார்ந்த குயில் தோப்பில் எழுதுவார்.

கவிதை வந்ததும், ''இருப்பா, வந்துடுத்து, கவிதை எழுதிக்கோ'' என்பார்.

பாவேந்தர் கையெழுத்து நன்றாக இருக்கும். கையெழுத்து நன்றாக இருந்தால்தான் உதவிக்கு ஆளை வைத்துக்கொள்வார். அவரிடம் இருந்த அத்தனைப் பேருக்கும் கையெழுத்து நன்றாக இருக்கும்.

பாவேந்தர் 200 பக்க அளவில் மூன்று நோட்டுப் புத்தகங்கள் வைத்திருப்பார். ஒன்றில் தம் கைப்பட எழுதுவார். மற்ற இரண்டில் எழுதச் சொல்வார். இந்த முறையை எழுத்தாளர்கள் பின்பற்றலாமே!

**— பேட்டி: பி.வி. கிரி.**



அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் வெள்ளம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!

நாட்டை ஆளவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். 'எல்லாத் துறைகளிலும் தமிழனே வரவேண்டும்' என்பது அவரது தணியாத தாகம்.

## பாட்டுலகில் ஒரு புரட்சி

அவருக்குப் பேசும் மேடையே வீட்டுத் திண்ணை தான். திண்ணையில் உட்கார்ந்துகொண்டு எல்லாரிடமும் மனம்விட்டுப் பேசுவார். தம் சிந்தனையையும் கூறுவார். பிறகு அதைக் கவிதையாக்குவார்.

ரிக்ஷாக்காரன், விறகுவெட்டி எல்லோரையும் கூப்பிட்டுப் பேசுவார். அவர்களுடைய பெயர் வடமொழியில் இருந்தால், அதைத் தமிழில் வைத்துக்கொள்ளும்படி கூறுவார். தமிழ் உணர்வு அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்துக்கொண்டே இருக்கும்.

அதேபோல, மொழிப் பற்றும் அவரது உயிரில் கலந்திருந்தது. பாரதிதாசன் பரம்பரையை உருவாக்கிய 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கு, அந்தப் பெயரை வைத்தவரே பாவேந்தர்தான்.

எல்லாச் சொல்லும் தமிழிலேயே இருக்க 'வேண்டும் என்று கூறுவார். நூல் தலைப்பும்கூட தமிழில் இருக்க வேண்டும் என்பார்.

கீர்த்தனைகள் என்பது இறைவனையும், மன்னனையும் புகழ்ந்து பாடவுமே அன்று இருந்தது. அதை மாற்றியமைத்தவர் பாவேந்தர். அவர் வண்டிக்காரனுக்கும், தபால்காரனுக்கும், பூப்பறிப்பவனுக்கும் கீர்த்தனைகள் பாடி பாட்டுலகில் ஒரு புரட்சியையே உண்டாக்கினார். ஆம். எல்லாத் தொழில் துறைக்கும் கீர்த்தனை - இசைப்பாடல்கள் கொண்டு வந்த பெருமை இவருக்கு உண்டு. இது ஒரு பெரிய திருப்பம். 'இசையமுது' என்னும் நூலில்,

"அதோ பாரடி அவரே என் கணவர்
புதுமாட்டு வண்டி ஓட்டி
போகின்றார் என்னை வாட்டி"

— என்று மாட்டு வண்டிக்காரனைப் பாடுகிறார்.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளுக்குப் பிறகு, கவிதைகளில் தமிழே கோலோச்ச வேண்டும் என்று நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்தவர் பாவேந்தர்தான்.

## கவிதையிலேயே நாடகம்!

'எதிர்பாராத முத்தம்' தான் 'பொன்முடி' என்னும் நெடுங்காவியம். இது திரைப்படமாக வெளிவந்தது. இதற்குமுன் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் 'மனோன்மணீயம்' திரைப் படமாகியுள்ளது. ஆனால் அப்போது அவர் இல்லை. ஒரு காவியம், முதன்முதலில் வாழும் காலத்திலேயே - திரைப்படமாகியது பாவேந்தருடையதுதான் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

பாவேந்தர் அவர்கள் தனிப்பாடல்கள் நிறைய எழுதியுள்ளார். பாவேந்தர் உணவகத்திற்குச் செல்வார். அங்கு யாரேனும் இவரைப் பார்த்து, 'ஐயா, ஒரு பாட்டு தாங்க!' என்று கேட்பார்கள். உடனே அங்கேயே ஒரு பாட்டை எழுதித் தருவார். இப்படி ஏராளமான பாடல்கள் சேர்ந்தன.

தமிழ்நாட்டில் உரையாடலின்றி, முழுக்க முழுக்க கவிதையிலேயே நாடகம் எழுதியவர் பாவேந்தர் பாரதிதாசன்தான். அதுதான் 'புரட்சிக் கவி' என்னும் கவிதை நாடகம். 1944-இல் சேலத்திலும், நாமக்கல்லிலும் ஆறு நாட்கள் இந்த நாடகம் நடந்தது. இந்திய வரலாற்றில், இலக்கிய உலகில் கவிதையிலேயே 2 மணி நேரம் நாடகம் நடந்தது, அதுவே முதல் தடவை. இந்த நாடகத்துக்குத் தந்தை பெரியார் அவர்கள் தலைமை வகித்துப் பாராட்டினார். இதேபோல, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், சேலம் அரசினர் கலைக் கல்லூர் முதல்வர் இராமசாமி கவுண்டர் ஆகியோர் இந்த நாடகத்துக்கு ஒவ்வொரு நாளும் தலைமை வகித்து வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள். இந்த நாடகத்தில் நானும் நடித்திருக்கிறேன் என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

இந்நாடகத்தில் வரும் ஒரு உரையாடல்:-

தோழி: கன்னம் சிவக்கக் காரணம் என்ன?
தலைவி: புன்னை மலர்கள் இன்னல் புரிந்தன!
தோழி: ஆடை அவிழக் காரணம் என்ன?
தலைவி: ஓடும் மான் கொம்பால் ஈடழிந்தது.

— இவ்வாறு இந்தக் கவிதை உரையாடல் தொடரும்.

## பன்மொழியில் பாடல்கள்

பாவேந்தர் காலத்திலேயே அவரது படைப்புகள் பன்மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. தெலுங்கு, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்பட்டு இருக்கின்றன. பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களும், எஸ். வேதரத்தினம் அவர்களும் பாவேந்தரின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். கமில்சுவலபில் என்னும் செக்கோஸ்லோவேகியா தமிழறிஞர் தம் மொழியில், பாவேந்தர் கவிதைகளை மொழிபெயர்த்து உலகறியச் செய்துள்ளார்.

தம் நூலுக்கு 'அணிந்துரை' வேண்டும் என்று யார் வந்து கேட்டாலும், அதற்குத் தடை சொல்லாமல் எழுதித் தருவார். 'நிறைய படியுங்கள்' என்று ஊக்கப்படுத்துவார். கடற்கரைக்கு அழைத்துப் போய், 'நிலவுப் பாட்டு எழுதப் போறேன், நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்பார்.

'பத்திரிகைக்குத் தலைப்பு என்ன வைக்கலாம்?' என்று கேட்பார்: 'இந்தக் கவிதைக்கு என்ன தலைப்பு வைத்தால் நல்லா இருக்கும்?' என்றும் யோசனை கேட்பார். அதற்கு அவர்கள் சொன்ன தலைப்புகள் நன்றாக இருந்தால், அதையே வைத்துவிடுவார். திறமையை, தகுதியை மதிக்கும் பண்பு அவரிடம் மிகுதியாக இருந்தது.

ஒருசமயம், திரு முருகு சுப்பிரமணியம் அவர்களிடம் ஒரு கவிதையைக் கொடுத்து அதற்குத் தலைப்பு வைக்கும்படி கேட்டார். அவர் அதற்கு 'ஒரே குறை' என்ற தலைப்புத் தந்தார். அதையே அவர் அந்தக் கவிதைக்குத் தலைப்பாக வைத்தார்.

## அறிவியல் நோக்கு படைத்தவர்

பாவேந்தர் பாடல்களில் அறிவியல் நோக்கு மிகுதியாக இருந்திருக்கின்றது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. மூடப்பழகக வழக்கங்கள் ஒழிய வேண்டும், புதுமைகள் மலரவேண்டும் என்று கனவு கண்டு, அந்தக் கனவு நனவாகும் வகையிலே கவிதைகள் படைத்திட்ட பாவேந்தர், அறிவியல் கருத்துகளையும் கவிதைகளிலே இழைய விட்டிருக்கிறார்.

சூரியனும், சந்திரனும் தனித்தனி என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், அப்படியல்ல என்பதை.

"காலை வந்த செம்பரிதி-
கடலில் மூழ்கி
கனல் மாறி குளிரடைந்த
ஒளிப் பிழம்போ?"

— என்று அவை இரண்டும் ஒன்று என்று தெளிவுபடுத்துகிறார்.

இந்தியாவிலேயே முதல்தடவையாக 1930-லேயே குடும்பநலம் குறித்த செய்தியை - கவிதையை எழுதியவரும் பாவேந்தரேதான்.

"காதலுக்கு வழி வைத்துக்
கருப்பாதை சாத்த
கதவொன்று கண்டறிவோம்"

- என்று அன்றே சொன்னார். அவர் சொன்னது இன்று நடைமுறைக்கு வந்துள்ளது. என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

## சிந்தனையே எழுப்பிவிடும்!

பாவேந்தர் அவர்கள் நன்றாக உடுத்துவார். அதைப்போல நன்றாகச் சாப்பிடவும் செய்வார். அதுமட்டுமல்ல, தன்னுடன் இருப்பவர்களை, 'நீயும் நன்றாகச் சாப்பிடு' என்பார். சுவையாக இல்லையென்றால், 'அதை வைச்சிடு' என்பார். பாவேந்தர் புலால் உணவைச் சுவைத்து உண்பார்.

ஒருவன் உள்ளத்தை - உணர்வைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்தவர் பாவேந்தர். அவர் புறா



தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!

வளர்த்தார். பூவின் அழகை ரசிப்பார். எதையும் கூர்ந்து பார்ப்பார். இவையெல்லாம் அவரது இனிய இயல்புகள்.

இராமலிங்க அடிகள் நள்ளிரவில்தான் படிப்பார்; எழுதுவார். அதைப்போல, பாவேந்தர் நள்ளிரவில்தான் அதிகம் படிப்பார். மக்கள் உறங்கிக் கொண்டிருக்கிற வேளையில், இவர் விழித்திருந்து எழுதுவார்.

படுக்கையில், தலையணையின்கீழ், தாள்கள் வைத்திருப்பார். சிந்தனை வந்ததும் எழுந்து உட்கார்ந்துகொண்டு எழுதுவார். பொழுது விடிந்ததும், 'ஐயா' என்று சத்தம் போட்டு அவரை யாரும் எழுப்ப வேண்டியதில்லை. சிந்தனையே அவரை எழுப்பிவிடும்.

## கடற்கரையில் கவிதை வரும்!

ஒரு கவிஞன், கடற்கரைக்குப் போய் நிலவைப் பார்த்துவிட்டு எழுதுவானாம்.

பாரதியார், கடலைப் பார்த்துவிட்டு, எழுதுவாராம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஓடுகிற தண்ணீரை, வெள்ளத்தைப் பார்த்துவிட்டு எழுதுவாராம்.

பாவேந்தர் பாரதிதாசன் கடற்கரையில், நிழல் சார்ந்த குயில் தோப்பில் எழுதுவார்.

கவிதை வந்ததும், "இருப்பா, வந்துடுத்து, கவிதை எழுதிக்கோ" என்பார்.

பாவேந்தர் கையெழுத்து நன்றாக இருக்கும். கையெழுத்து நன்றாக இருந்தால்தான் உதவிக்கு ஆளை வைத்துக்கொள்வார். அவரிடம் இருந்த அத்தனைப் பேருக்கும் கையெழுத்து நன்றாக இருக்கும்.

பாவேந்தர் 200 பக்க அளவில் மூன்று நோட்டுப் புத்தகங்கள் வைத்திருப்பார். ஒன்றில் தம் கைப்பட எழுதுவார். மற்ற இரண்டில் எழுதச் சொல்வார். இந்த முறையை எழுத்தாளர்கள் பின்பற்றலாமே!

— பேட்டி: பி.வி. கிரி.

# வளமான வாழ்வுக்கு
# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
# விஜய்
உரங்கள்




HTA 7343

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

எங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது
வண்ணங்கள்... அவைகளின் அழகு
ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க
பட்டு வகைகளில் உங்களுக்குக்
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைக

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங் ● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்